பத்திநெறிப்

பிரவேசம்.

Parish.

✠

கடவுள் துணை.

அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார்

அருளிச்செய்த

பத்திநெறிப் பிரவேசம்.

இஃது

புதுவை அதிமேற்றிராசன சுதேசக்
குருக்களிலொருவராகிய
ஞா. இரத்தினநாத சுவாமியாரவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டது.

3-ம் பதிப்பு.

1923.

CATHOLIC MISSION
PRESS,
PONDICHERRY.


புதுவை
மாதாக்கோயில்
அச்சுக்கூடம்.

IMPRIMATUR :

† ELIAS-JOSEPHUS,

Archiep. Pudich.

Pudicherii, 9 Jun. 1923.



PONDICHERY,

Imprimerie de la Mission Catholique.

பாயிரம்.

ஆத்துமங்களின் ஈடேற்றத்துக்காக அர்ச். பிராஞ்
சிஸ்கு சலேசியார் தமது புத்திப் பிரசங்கங்களாற்
பிரயாசைப்பட்டதன்றி புண்ணிய நெறியில் உத்தம
பிரகாரமாய் ஒழுகுதற்கான அரிய படிப்பினையுள்ள
மகா உச்சிதமும் பிரபலியமுமான அநேகம் புத்தக
ங்களையும் எழுதியிருக்கின்றார். இவைகளில் பத்திநெ
றிப் பிரவேசமென்னுஞ் சிறு புத்தகத்தைப் பல
அந்தஸ்தாருக்கும் உபயோகமாக எழுதியிருக்கின்
றார். இந்த அர்ச்சியசிஷ்டவரது ஆசை கோரிக்கைப்
படியே நமது தேசத்தாருக்கு உபயோகமாக இதனை
மொழிபெயர்க்கலாயிற்று, இவர் பாஷை நடையுங்
கற்பிப்பதற்கு இவருக்கு உரித்தான அரிய திறமை
யும் இவர் புத்தகங்களை ஊடாடினவர்கள் அறியா
விஷயமல்ல. தேவ தோத்திரத்துக்காகவும் பிறர் நன்
மைக்காகவுந் தமிழ்ப்பாஷைக்கு அமைந்தபடி ஆன
மட்டும் அரிய இவர் பாஷை நடையைப் பின்செ
ன்று இப்புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டது. நமது
தேசத்தாருக்கு விசேஷமிராத இரண்டொரு அதிகா
ரங்களை எடுக்கலாயிற்று. இப்புத்தகத்தை ஊடாடி
வருவதால் வரும் விசேஷ பிரயோசனத்தைக்கொண்
டே இதன் கலை நலத்தை அறிந்துகொள்ளலாம்.
ஆனால் இதின் மேன்மையைக் குறித்து இவ்விடத்தில்
யான் பேசுவது அவசரமன்று. கல்வியிலும் பத்தியி
லும் முதிர்ந்த மகாத்துமாக்கள் ஒருவாய்ப்பட இதன்
மேன்மையைக் கூறுகின்றனர். அர்ச். பிராஞ்சீஸ்கு
சலேசியார் எழுதிய இந்தப் புத்தகத்தைக் குறித்
தும் இன்னம் வேறே புத்தகங்களைக் குறித்தும் எ—ம்
அலேக்சாந்தர் என்னும் அர்ச. பாப்பானவருக்
குள்ள எண்ணம் என்னவென்று இவர் தமது உறவி
ன்முறையார் ஒருவருக்கு எழுதிய காகிதத்தில் தெரி
யவருகிறது. அக்கடிதமாவது:

நமது பிரிய குமாரனே, நீ நம்மை விட்டுப் பிரிந்து
துலைவிட்டிருப்பது நமக்கு விதனத்துக்குரியதே.
ஆயினுங் காகித மூலமாகவென்கிலுஞ் சம்பாஷித்துக்
கொள்வோம். ஆனால் என்னத்தைக்குறித்து உன
க்கு எழுதப் போகிறோம். நீ பிரயாணப்படுகையில்
நாம் உன்னோடு சம்பாஷித்த விசேஷத்தைக் குறித்
தே பேசுவது நமக்கு நலமாகத் தோன்றுகிறது. நமக்
கும் உனக்கும் இது எற்ற விஷயமே. ஆதலால் இன்
னம் ஒருவிசை உன்னை நாம் கேட்டுக்கொள்ளுகிறது
என்னவெனில், உன் பிரியமெல்லாம் வைத்துப் பிரா
ஞ்சீஸ்கு சலேசியாரது புத்தகங்களைச் சலியாமல் வா
சித்து அவருக்கு அமைந்த புத்திரனாகவும், அவரைக்
கண்டுபாவிக்கும் பிரமாணிக்கமான சீஷனாகவும் இரு
க்கக்கடவாய். புண்ணிய வழியில் நடக்க இவர்
எழுதிய பத்திநெறிப் பிரவேசமென்னும் புத்தகம்
உத்தம வழிக்காட்டியாம். இருபது வருஷகாலமாய்
நமது நடக்கையில் உண்டான சீர்திருந்த மாற்றமெ
ல்லாஞ் சர்வேசுரன் அநுக்கிரகத்துக்குப் பிறகு இந்
தப் புத்தகத்தை ஊடாடினதினாலேயே உண்டாயிற்
றென வேண்டும். குற்றமற்றது எதாயினும் நம்மிட
த்தில் இருக்குமேயாகில் எல்லாம் இந்தப் புத்தகத்
தினாலேயே வந்ததென்கலாம். அனந்தமுறை இதனை
வாசித்தோம். இன்னம் இதை வாசிக்கிறதை விடோம்.
எப்பொழுதும் நமக்கு இது புதிதாகவே இருக்
கிறது. நாம் இதனை வாசிக்கும்போதெல்லாம்,
நாம் முந்தி வாசித்தபோது கற்றுக்கொண்டதைப்
பார்க்கினும் என்னமோ இன்னம் அதிகமாய் நமக்
குக் கற்பிப்பதாக எப்போதுந் தோன்றுகின்றது.
ஆதலால் நமது பிரிய குமாரனே நமது வார்த்தையை
நம்பு. இந்தப் புத்தகம் உன் சீவியத்துக்கு முகக்கண்
ணாடிபோலும் உன் எல்லாக் கிருத்தியங்களையும்
நினைவுகளையுஞ் சீர்ப்படுத்தவேண்டிய ஒழுங்காகவும்.

இருக்கும். ஓர் வனவாசியைப்போல் தவஞ் செய்து வனாந்தரத்தில் நீ வாசிக்க வேண்டுமென்று இந்தப் புத்தகம் உனக்குக் கற்பிக்கிறதில்லை. பொதுவான வழிபாட்டை விட்டு நூதனமான புதுச் சீவியத்தில் நடக்க வேண்டுமென்று சொல்லுகிறதில்லை. ஒருவன் அந்தஸ்து எவ்வளவுதான் மேலானதும் அல்லது இழிவானதுமாய் இருந்தபோதிலும் எவ்வித வித்தியாசமான அந்தஸ்துக்கும் வெகு நேர்த்தியாய் ஒத்துப் போகுஞ் சுளுவான உத்தம வழியைக் காண்பித்து உன்னைக் கிறீதுவனுக்கடுத்த சாங்கோபாங்கத்திற் கூட்டிக்கொண்டுபோய் ஸ்திரமான பத்தியில் உன்னை வளர்க்க வேண்டுமென்கிற கருத்தேயன்றி இந்தப் புத்தகத்தில் வேறே கருத்து விளங்கா. புண்ணியமானது இன்னதென்று அதற்கேற்ற வேண்டிய வருணிப்பு நயத்துடனே சரியாய் அதனைக் காட்டக்கூடுமானல் எல்லா மனிதரும் மட்டற்ற அவாவோடு அதனை நேசிப்பார்கள் என்று முற்காலத்துப் பெரியதோர் மனிதன் உரைத்தனன். மெய்யாகவே இது விஷயத்தில் அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் வெகு நேர்த்தியாய் அநுகூலப்பட்டாரென்று நமக்குத் தோன்றுகிறது. உண்மையாகவே புண்ணியத்தை முழு காந்தி வடிவோடும் அதின் சுக சௌந்தரிய இன்பத்தோடும் நமக்குக் காண்பித்திருக்கிறார்; ஆனால் இதனை எழுதிய தர்மிஷ்டரிடத்தில் அதிக புகழ்ச்சி பிரியத்துக்குரியது என்னவெனில் நமதாண்டவரையே இவர் பாவனையாகக் கொண்டு மற்றவர்களுக்கு நன்றாய்க் கற்பிப்பதற்கு முன் தாமே முன்னதாய் நன்றாய் அநுசரிக்க ஆரம்பித்து மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டியதைத் தாமே அநுசரித்துக் காட்ட ஏக கவலையாயிருந்ததேயாம். இத்தன்மையாய் இவர் புத்தகங்களை வாசிப்பவர்கள் இவர் சீவியத்தையே நுகர்ந்திருக்கிறார்கள் என்றும் இவர் புத்திமதி

ஆலோசனை திட்டங்களையெல்லாம் இவரே முந்தி ஆராய்ந்து பார்த்துத் தமது மாதிரிகையால் காண்பித்துக் காட்டியிருப்பதால் அவ்வளவுக்கும் அவைகளை அநுசரிப்பது எளிதாயிருக்கிறதென்றும் வெகு நியாயத்தோடு சொல்லலாம். திரவிய சம்பத்துள்ள உயர்ந்த கோத்திரத்திற் பிறந்த இந்த உத்தம மகாத்துமா நல்ல வமிசத்துப் பிள்ளைகளுக்கு விளக்கமாய்ப் படிப்பிக்கிற புண்ணியத்தையுஞ் சாஸ்திரங்களையுங் கற்றுக்கொண்டு இராசாக்கள் அரமனையிலும் மன்னவான்கள் மாளிகளிலுஞ் சாதாரணமான மனுஷர்களது விடுதிகளிலுந் தமது சிநேகிதர்களுடைய கூட்டத்திலும் உலக அலுவற் சந்தடியிலும் பத்திக் கடுத்த ஞானக் கிருத்தியங்களிலுங் கண்டசியாய் மேற்றிராணிமார்களுக்குரிய தமது எல்லா அலுவல்களிலும் ஆச்சரியத்துக்குரிய பரிசுத்தத்தனத்தோடும் மேரை மரியாதையோடும் நடக்கக் கண்டார்கள். பல முறை உலக வழக்கத்தைப்பற்றியும் அல்லது நமக்குள்ள மிகுந்த அலுவல் தொந்தரையைப்பற்றியும் அல்லது நமது மேன்குலத்தைப்பற்றியும் பத்திக்குரிய கிறீஸ்துவன் அநுசரிக்க வேண்டிய கிரம திட்டத்தின்படி நுணுநுணுக்கமாய்ச் சீவிக்கக் கூடாதென்று சாக்குப்போக்குச் சொல்லுகின்றோமல்லோ. இவர் நடத்தையைப் பார்க்கையில் நமது கோழைத்தனத்தின்பேரில் வெட்கி நாண இடமில்லையோ. பத்திநெறிப் பிரவேசமென்னும் இந்தப் புஸ்தகத்தைக் குறித்துச் சொன்னதை இன்னும் இவர் எழுதிய மற்றப் புஸ்தகங்களைக் குறித்துஞ் சொல்லலாம். இவைகளை அடுத்தடுத்து அல்லும் பகலும் வாசித்துவந்தபடியால் [illegible]து புத்தியில் இது ஓர் விதமாய்ப் படிந்து போனதுமன்றி இந்த மகாத்துமாவின் இருதயத்தில் உண்டான உத்தம தோற்றங்களும் இவரது படிப்பினையின் விசேஷங்களும் ஓர் சிறு புத்தகம்

போல் நமக்குள்ளே அடங்கியிருக்கின்றன. நமக்குச் சாவகாசங் கிடைக்கும்போதெல்லாம் இவைகளை அசைவுபோடுமாப்போல் யோசித்து உருசி பார்த்து நம்மிடத்திலுள்ள யாவும் இவைகளுக்கு ஒத்தவை யாகப் பிரயாசப்படுவோம். இந்தப் பரமாத்துமாவின் மட்டில் நமக்குள்ள எண்ணமிதுவே. இவ்வெண்ண த்தைத்தான் பிரியகுமாரனே உனக்குஞ் சொல்லிக் காட்டி அவனை நீ பின்சென்று நடக்கும்படியாய் மிக்க அவாவுடன் உன்னை ஏவுகின்றோம். ஏனெனில் உள்ளபடி உன் நடக்கைக்கு ஊன்றுகோலாகவும் உன் பிசகை எடுத்துக் காட்டும் நல்ல உபாத்தியாய ராகவும் இவனை நீ தெரிந்துகொள். செனேக்கென் னும் ஞானியானவர் நமக்குக் கற்பிப்பதேதெனில் நமது நடத்தைக்கு ஒத்தாசையாகப் பேர்பெற்ற யா தோர் பெரியவருடைய மாதிரியைத் தெரிந்துகொ ண்டு அவருடைய சமூகத்தில் நாம் இருப்பதாக உருபிகரித்துக்கொண்டு எது சமயங்களிலும் நடக்க வேண்டும் என்பதேயாம். இத்தன்மையாகவே இவர் மட்டில் நீ நடந்துகொண்டால் நாம் உனக்குச் சொல் லும் ஆலோசனையின்மட்டில் நாமும் விதனப்பட நியாயமிராது. நீயும் இதனை அநுசரித்து வருவதின் மட்டில் வருத்தப்பட இடமிராது.

நமது பிரிய குமாரனே, ஓராசென்னும் பண்டித னைப்போல் நாமும் இக்காகிதத்தை முடிக்கின்றோம். சிரஞ்சீவியாய் க்ஷேமமாய்ச் சந்தோஷமாயிரு. நாம் உனக்கு இப்போது சொல்லிய புத்திமதிகளைப் பார் க்கிலும் உத்தமமான வேறே எதாயினும் நீ அறிந்தி ருந்தால் கபடற்றதனமாய் நமக்கு அதைச் சொல் லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படி இராத பட்சம் நம்மைப்போலவே இந்தப் படிப்பினைகளை அநுசரித்து உன் பிரயோசனத்தைத தேடக் கடவாய்.

முகவுரை.

இப்புத்தகத்தை வாசிக்கும் பிரிய சகோதரமே, உன் திருத்திக்காகவும் எனது திருத்திக்காகவும் இந்த முகவுரையை வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பல்விதப் புஷ்பங்களைச் சேர்த்து நேத்தியான பூச்செண்டு கட்டுவதிற் பேர்பெற்ற ஒருத்தி இருந்தாள். இவள் எம்மாத்திரம் விசித்திர விநோதத்தோடு அந்தப் புஷ்பங்களையே பலவாறு அருமையாய்த் தொடுத்துக் கட்டுவாளெனில் திறமை சாமார்த்தியமுடைய சித்திரக்காரன் ஒருவன் பலவித வர்ணங்களைக்கொண்டு இப்பூச்செண்டுகளுக்கு ஒப்பாய்ப் பற்பல வகையாய்ச் சித்தரிக்கத் திராணியற்றவனாய் நிற்கலாயினன். இத்தன்மையாகவே இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் தமது பிரிய தாசர்களது புத்திப் பிரசங்கங்களைக் கொண்டும் புத்தகங்களைக்கொண்டும் மெய்யான பத்தியைக் குறித்து நமக்குப் படிப்பிக்கும் பலவிதப் படிப்பினைகளை எவ்வளவு நேத்தியாய் அமைத்துச் சீர்ப்படுத்துகிறாரெனில், இவர்கள் எல்லோரும் இப்போதும் ஓரே போதனையைக் கற்பிக்கினும் இவர்கள் கருத்துக்குந் தாற்பரியத்துக்கும் இசைந்தபடி பலவாறு இதனைத் தொகுத்துப் பேசுவார்கள். மெய்யான பத்தியைக்குறித்து எனக்கு முன் பெரியோர் கற்பித்ததை மாத்திரமே இந்தப் பத்திநெறிப் பிரவேசத்தில் எழுதினேனன்றி வேறல்ல. இவர்கள் உபயோகித்துக்கொண்ட புஷ்பங்களையே நானும் பிரயோகித்துக்கொண்டேன். நான் இதைக்கொண்டு கட்டிய பூச்செண்டோ புது மாதிரியாய் நூதனமாய்க் கட்டப்பட்டபடியால் இவர்கள் பூச்செண்டுக்குக் கொஞ்சம் வித்தியாசமாயிருக்கும்.

மெய்யான பத்தியைக் குறித்து இதுவரையில் எழுதினவர்களெல்லோரும் உலக சந்தடியைவிட்டு இடைந்திருப்பவர்களுக்குப் பிரயோசனமாகவே எழுதினார்கள் என்கலாம். முழுதும் இவர்களுக்கு இந்தக் கருத்து இராவிடினும் இவர்கள் மெய்யான பத்தியைக்குறித்துக் கற்பிக்கும் விதத்தைப் பார்க்கையிற் பத்தியான சீவியத்திற் சீவிக்க விருப்பமுள்ள யாவரும் முழுதும் உலகத்தை விட்டுவிட வேண்டுமென்றாற் போல் அர்த்தமாகும். நானோ பட்டணங்களிலும் இல்லறவாழ்க்கையிலும் அரண்மனையிலும் இன்னந் தங்கள் அந்தஸ்துப் பிரகாரம் வெளிக்கு நாலுபேருக்கு ஒத்தவிதமாய் நடந்துகொள்ள வேண்டியிருப்பவர்களுக்கும் உபயோகமான விதமாய் மெய்யான பத்தியைக்குறித்துப் பேசுகின்றேன். மெய்யாகவே பலமுறை இப்படிப்பட்ட மனிதர்கள் பத்தியாயிருப்பது என்னமோ கூடுமான காரியமல்லவென்றாற்போல் ஆமணக்கின் விதையையும் உருசிபார்க்கத் துணிகரமுள்ள சீவசெந்தும் உண்டோ, இப்பிரபஞ்ச அலுவல் தொல்லைகளில் அகப்பட்டுக்கொண்டுங் கிறீஸ்துவனுக்குரிய மெய்யான பத்தியென்னும் ஞானவிதையை உருசிபார்க்க வலுமோ என்பார், இவர்கள் மெய்யான பத்திக்கடுத்த விதமாய் நடக்க நினைக்கிறதுமுதலாய் இல்லை. ஆனல் இவர்கள் எண்ணஞ் சரியல்லவென்று இப்புத்தகத்தில் தெரியவரும். ஏனெனில் கடலில் உற்பத்தியாகி வளருஞ் சிப்பிகள் ஒரு துளி கடற்றண்ணீரையுங் குடிக்கிறதில்லை. கெலிதோனியா என்னுந் தீவாந்தரங்கள் அருகே பெருஞ் சமுத்திர உப்புத் தண்ணீர் சூழ்ந்திருக்கினும் இச்சமுத்திரத்திலேயே நல்ல தண்ணீர் நீரோடையும் உண்டு. சிறகுகள் பற்றிக்கொள்ளாமல் தீக்கொழுந்திற் பறந்தோடும் பூச்சிகளும் உண்டு. இவைகளுக்கு ஒப்பாகவே மெ

ய்யதனுதிட்டனுள்ள புண்ணியவான் உலக விஷநீர் படாமல் உலகிலிருந்து வாழலாம். இப்பிரபஞ்சத்தின் கசப்பான ஜலங்களிலேயே மெய்யான பத்தியின் நேத்தியான அருவியைக் காணலாம். இன்னமும் மெய்யான பத்திக்கடுத்த ஜீவியத்துக்குச் சிறகுகளைப்போல் இருக்கின்ற பரிசுத்த ஆசைகள் எரிந்து அழிந்துபோகாமல் இலௌகீக ஆசாபாசத் தீக்கொழுந்துக்குட் பறக்கலாம். ஆனால் இது வெகு பிரயாசை என்பது உண்மை. ஆனதைப்பற்றித்தான் இதுவரையிற் பலபேர் இதற்காகப் பிரயாசைப்பட்டதைப்பார்க்கிலும் இன்னம் அதிகமாய்க் கவனித்துப் பிரயாசைப்படவேண்டுமென்கிற ஆசையே எனக்கு மெத்த. ஆதலால் எவ்வளவு நான் பலவீனனுகிலும் இந்த மேலான கருமத்தைத் துடங்கி நடத்தக் கோரிக்கையுள்ள தர்மிஷ்டர்களுக்கு என்னுலான சொற்ப உதவி செய்ய இதனை எழுதப் பிரயாசப்படுகின்றேன்.

ஆயினும் இப்புத்தகத்தை நானே அச்சிடவேண்டுமென்று செய்ததில்லை. சிலகாலத்துக்கு முந்தி உத்தம புண்ணியவதியொருத்தி சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தால் மெய்யான பத்தியுள்ளவளாய்ச் சீவிக்கவேண்டுமென்று ஆசித்து இந்த உத்தம கருத்தில் தனக்கு ஒத்தாசையாயிருக்க வெகு ஆவலுடன் என்னைக் கேட்டுக்கொண்டாள். எவ்விதக் கடமையை முன்னிட்டும் அவளுக்குத் திருப்தி வருவிக்க வேண்டியவனுக இருந்ததுடன் நெடுங்காலமாய்ப் பத்திக்கான வெகு உத்தம புண்ணியங்களை இவ்விடத்திற் கண்டிருந்தேன். இதனால் இவளுக்கு வேண்டியபடி கற்பிக்க ஆன பிரயாசமெல்லாம் படுவது எனக்குப் பிரியமாகவே இருந்தது. இவள் ஆசைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவண்ணம் பலஞானக்கிருத்தியங்களைக்கொண்டு மெய்யான பத்தியில்

அநுகூலமடையும்படி பிரயாசப்பட்டு அவசரமான போதெல்லாம் இவளுக்கு உபயோகமாக இத்விஷயத்தைக் குறித்துப் பல ஆலோசனைகளை எழுதியுங் கொடுத்தேன். இதன்பின் இந்தம்மாள் இவைகளைப் பத்தியிலுங் கல்வியிலுந் தேர்ந்த ஓர் சந்நியாசியாருக்குக் காண்பித்தாள். இவைகள் இன்னம் பலபேருக்கு உபயோகமாயிருக்குமென்று இவர் கருதி இவைகளைப் பிரசித்தப்படுத்தும்படியாய் என்னை மிகவுங் கேட்டுக்கொண்டார். நெடுநாளாய் சிநேகத்தால் இவர் மனதே என் மனதுபோலவும் இவருடைய புத்தி தீட்சை என் புத்திக்கு மேலானதாகவும் இருந்தமையால் இவர் ஆலோசனையை நிறைவேற்ற நான் தத்தளித்தவனல்ல.

ஆனதால் இப்புத்தகம் யாவர்க்கும் உபயோகமாகவும் பிரயோசனமாகவும் இருக்கும்பொருட்டு இதனை மறுபடியும்பார்வையிட்டுக் கொஞ்சஞ் சீர்ப்படுத்தி என் கருத்துக்கு அமைந்த பல புத்திமதிகளைச் சேர்த்தெழுதினேன். ஆனால் இதுகளையெல்லாம் வேண்டிய சாவகாசமின்றி எழுதினேன் எனவேண்டும். ஆனதினிமித்தம் நான் சொல்லும் பலவித இந்தப் புத்திமதிகளில் வெகு குறை காணக்கூடுமாயினும் இதில் என் நல்ல மனது விளங்கும். இவைகளையெல்லாம் என்னால் இயன்றவரையில் வேண்டிய தெளிவோடு விரித்துரைக்கப் பிரயாசப்பிட்டேன்; பாஷை அலங்காரத்தைக் குறித்தோவெனில் இதிலும் அவசியமான வேறே பல காரியங்கள் வேண்டிய வரையில் இருக்கின்றமையால் இதனைக் குறித்து நான் நினைக்கமுதலாயில்லை.

ஒருவருக்காக மாத்திரம் எழுதிய இப்புத்தகம் எல்லோருக்கும் பொதுப் பிரயோசனமாகும்படி பொதுவாய் எழுதுகின்றேன். சுவாமியை நேசிப்பவர்கள் எல்லோரும் அவருக்குப் பிரிய மக்களாகவும்

ஆனதால் அவர்களெல்லோரும் ஒருவருக்கொருவர் மெய்யான சகோதரருமாயிருப்பதால் பிரிய சகோதரமென்னும் பொதுப்பெயர் பிரயோகிக்கலாயிற்று.

மெய்யான பத்தியை ஆவலுடன் ஆசித்துத் தேவசிநேகத்தில் ஏகோபித்திருக்க ஆசிக்கும் புண்ணியாத்துமத்துக்கு உதவியாக இந்தப் பத்திநெறிப்பிரவேசமென்னும் புத்தகம் ஐந்து பாகமாகப் பிரித்திருக்கிறது. முதற் பாகத்தில் பல் யோசனைகளைக் கொண்டுந் தகுந்த பத்திக் கிருத்தியங்களைக் கொண்டுஞ் சுவாமியை நேசிக்க வேண்டுமென்று இந்தப் புண்ணியாத்துமத்துக்கிருக்கும் வெறும் ஆசையை மாற்றி மெய்யான பத்தியை உள்ளபடி அநுசரிக்க வேண்டும் என்கிற ஸ்திரமான பிரதிக்கினைசெய்யும்படி பிரயாசப்படுகின்றேன். இந்தப் பிரதிக்கினையைத்தான் பொதுப் பாவசங்கீர்த்தனத்துக்குப் பின் ஸ்திரமானதாய்ச் செய்து சற்பிரசாதத்தின் வழியாய்த் தன் இரக்ஷகரை உட்கொண்டு தன்னைத்தானே முழுதும் அவருக்கு நைவேத்தியம் பண்ணி அவர் திருநேசத்தில் வீற்று வாழும்படி கற்பிக்கின்றேன். இதன்பின் இரண்டாம் பாகத்தில் மெய்யான பத்தியில் அதிகமாய் விருத்தி அடைந்து சர்வேசுரனோடு மேன்மேலும் ஐக்கியமாவதற்கு இரண்டு பெரிய வழிப்பாடுகளை அதற்குக் காண்பிக்கின்றேன், முதலாவது.— தேவத்திரவிய அநுமானங்களின் உபயோகம். இவைகள் வழியாய் இந்த உத்தம பரம தேவன் நம்மிடத்தில் வருகின்றார். இரண்டாவது.— பரிசுத்த தியானம். இதனாற் சர்வேசுரன் நம்மைத் தம்மிடத்திற் சேர்த்துக்கொள்ளுகிறார். மூன்றும் பாகத்திற் சுவாமியை நேசிக்க விரும்பும் இந்தப் புண்ணியாத்துமம் அவர் நேசத்தில் வர்த்திப்பதற்கு மிகவுந் தகுதியான பல புண்ணியங்களில் எவ்விதமாய்ப் பழகவேண்டும் என்று காண்பிக்கிறேன். இதை மூன்

னிட்டு விசேஷ சில புத்திமதிகளைச் சொல்லிக் காண்பிக்கிறேன். வேறே புத்தகங்களில் இவைகளைத் தானாய்க் கண்டறிந்துகொள்வது அவ்வளவு எளிதாயிராது. நாலாம் பாகத்தில் நமது ஞான சத்துருக்களின் சில உபாய தந்திரங்களை வெளிப்படுத்தி இவைகளுக்கு எவ்விதமாய்த் தப்பித்துக்கொண்டு தொடங்கின பத்திநெறி தவறாமல் நடக்க வேண்டுமென்று காண்பிக்கிறேன். கடைசியாய் ஐந்தாம் பாகத்தில் இப்புண்ணியாத்துமத்தைப் பத்திநெறியிற் கொஞ்சந் தனிமையாய் அழைத்துப்போய் மெத்த எளிதாய் இந்நன்னெறியில் இதுமுன்னிட்டு நடந்து சிந்தாத்திரையாய்ச் செல்வ நாட்டிற் போய்ச் சேரச் சற்றிளைப்பாறிப் பலப்படுத்திக்கொள்ளும்படி செய்கின்றேன்.

நமது காலமோ வெகு விபரீதமானது. ஆதலாற் பத்தியைக்குறித்துப் பலவாறு விகற்பமாய்ப்பேசும் இவ்வித விசேஷ ஒழுங்குகளைச் சந்நியாசிகளுஞ் செபதபங்களைச் செய்பவர்களுமல்லோ படிப்பிக்க வேண்டும். வேண்டியபடி இதைக்குறித்துப் பேசுவதற்குச் சாவகாசமும் நேரமும் வேண்டுமே. பலவேலையுள்ள மேற்றிராசனத்தின் மேற்றிராணியாருக்கு ஓய்வு இளைப்பாற்றி உண்டா. இப்படிப் பத்திக்கடுத்த ஒழுங்குகளைக் கற்பிக்கக் கவனித்திருப்பதில் மேற்றிராசனத்தின் விசேஷ கடமைகளெல்லாம் வேண்டிய கவனித்து நடத்துவது எப்படி என்று பலபேர் சொல்லுவார்களென்பது உண்மை.

இப்புத்தகத்தை வாசிக்கும் பிரிய சகோதரமே, இதற்கு மறுமொழியாக ஆத்துமங்கள் சாங்கோபாங்கத்தில் விருத்தியடையும்படி பார்ப்பது மேற்றிராணிமார்களுக்கு விசேஷமாய்ச் சம்பந்தப்பட்டதென்று மகாத்துமாவான அர்ச்சியசிஷ்ட தெனீசென்பவ

ரோடு நானுஞ் சொல்லலாம். அதேதெனிற் சம்மன சுகளுக்குள் பத்திச்சுவாலகர் எப்படி மேற்பட்டிருக்கிறார்களோ அத்தன்மையாகவே மனிதர்களுக்குள் ஒப்பனையற்ற விதமாய் மேற்றிராணிமார்கள் மேலான பட்டத்திலிருப்பதாற் பிறர் நன்மையைத் தேடுவதைப்பார்க்கிலுந் தங்கள் இளைப்பாற்றி நேரத்தை உத்தமவிதமாய் உதவிக்கொள்ளக்கூடாது. திருச்சபையின் பூர்வீக மேற்றிராணிமார்களும் வேதபாரகர்களும் இக்காலத்து மேற்றிராணிமார்களைப் போலத் தங்கள் கடமைகளை நிறைவேற்ற விருப்பமாய்க் கவனித்திருந்தார்களெனவேண்டும். ஆயினும் அப்போஸ்தலர்கள் நடபடிகளில் நாம் காண்கிறதுபோல் இவர்களை அண்டிவந்த பல புண்ணியாத்துமங்களை விசேஷவிதமாய்ப் புண்ணியவழியில் நடப்பிக்கக் கவனித்திருந்தார்களென்பது உண்மை. உலகத்தின் எத்திசையிலும் முளைத்துவரும் ஞான வெள்ளாண்மையின்மட்டில் இவர்கள் எவ்வளவுதான் கவனித்திருந்தபோதிலும் மற்றெல்லாக் கதிர்களைப் பார்க்கிலும் அதிக சிறந்த சில கதிர்களை விசேஷவிதமாய்ப் பராமரித்து மிக்க விசேஷ பிரியத்தோடு ஞானக் களஞ்சியத்திற் சேர்க்கப் பிரயாசப்பட்டார்கள். திமோத்தே என்பவரும், தீத்தென்பவரும், பிலேமேன் என்பவரும், ஓனேசீம் என்பவரும், அர்ச். தேக்கிள்ா என்பவளும், அப்பியா என்பவளும், அர்ச். சின்னப்பருக்குப் பிரிய மக்களாயிருந்தார்களென்று அறிவோம். அர்ச். மார்க்கென்பவரும், அர்ச். பெத்துரோணியம்மாளும், அர்ச். இராயப்பருக்கு வெகு பிரியமுள்ளவர்களாயிருந்தார்கள். அர்ச். அருளப்பரும் எலெக்தா என்னும் புண்ணியவதிக்கு ஓர் நிருபம் எழுதினாரல்லோ. திருச்சபைக்கு இவரெழுதிய மற்ற நிருபங்களோடு இதையுந் திருச்சபை சேர்த்திருக்கிறது.

இப்படி தனித்தனியாய் ஆத்துமங்களை நடத்து வது பிரயாசை என்பது மெய்தான். ஆனால் இப் பிரயாசை ஆறுதலின்றி இருப்பதில்லை. ஏனெனில், அறுப்பறுப்பது பிரயாசையாயினும் இராப்பகலாய் திரளாய் அறுக்கவேண்டியிருக்கையில்தான் அறுப் பறுப்பவர்கள் மிகுந்த சந்தோஷமாய் இருப்பார் கள். இப்படி திரளாய் அறுப்பதால் வரும் பிரயோ சனத்தை முன்னிட்டு இவர்கள் இதிற் படும் பிரயா சை இவர்களுக்கு ஆறுதல் இளைப்பாற்றியாகும். செ ழித்த அராபிதேசத்தில் யாத்திரைசெய்வது கடின மாயினுங் கருவாப்பட்டை முதலிய வாசனை வர்க்கங் களை வைத்துக்கொண்டு யாத்திரை செய்கையிற் கடி னமாய்த் தோன்றா. வேடன் புலிக்குட்டிகளைப் பிடித் துக்கொண்டு தாய்ப் புலியை ஏமாற்றுவதற்காக வேண்டுமென்று அவைகளில் ஒன்றை வழியில் விட் டுவிட்டுப் போகும்போது இந்தப் புலிக்குட்டி எவ்வ ளவு பெரிதாயினும் இதன் தாய்ப்புலி உடனே ஓடிவ ந்து இதனைத் தூக்கிக்கொண்டு தன் குகையிற் கொண்டுபோம். தாய் நேசத்தை முன்னிட்டு இந்தச் சுமை இதற்குப் பாரமாய்த் தோன்றா. ஆனதால் உத் தம சாங்கோபாங்கத்தை அடைய மெய்யான ஆசை யுள்ள புண்ணியாத்துமத்தைக் கண்டவுடனே மெய் யான ஞான மேய்ப்பர்களுக்குப் பிரயாசை பளுவு ஒன்றுந் தோன்றாமல் எவ்வளவோ பிரியம் உண்டா கிறது. தாயானவள் எந்நேரமுந் தன் பிள்ளையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக்கொண்டிருந்தாலும் இவளுக்குப் பளுவு தோன்றாதல்லோ.

ஆனல் இப்படி பளுவுதோன்றாமலிருப்பதற்குமெய் யான தகப்பனுக்குரிய பட்சமிருக்கவேண்டும். ஆன தால்தான் அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்ப ற்றி நடந்த மகாத்துமாக்களுந் தங்கள் சீஷர்களைத் தங்

கள் பிள்ளைகளென்றும் இன்னம் அதிக உருக்கமாய்த் தங்கள் சிறு குழந்தைகளென்றும் அழைக்கிறார்கள்.

மேலும் பிரிய சகோதரமே! நான் மெய்யாகவே பத்தியுள்ளவனாயிராமல் மெய்யான பத்தி நெறியைக் குறித்து எழுதுகிறேனென்பது உண்மை. ஆனால் பத்தியுள்ளவனாக வேண்டுமென்று எனக்குள்ள ஆசையோ அணைகடந்தது. இதைப்பற்றியே வெகு ஆவலோடு உனக்கு இதனைப் படிப்பிக்க விரும்புகின்றேன். ஏனெனில் பெரியதோர் பண்டிதன் உரைத்த வண்ணம் படிப்பதற்குப் படிப்பதுதான் நல்லவழி. உத்தமமுறையோ உபாத்தியாயர் சொல்வதைக் கேட்பது. ஆனால் இதிலுஞ் சிரேஷ்டமான முறை மற்றவர்களுக்குப் படிப்பிப்பதேயாம். அர்ச். அகுஸ்தினுஸ் என்பவர் புளோராந்தீன் என்னும் புண்ணியவதிக்கு எழுதிய காகிதத்தில்: கொடுக்கும் உரிமை நமக்குண்டாயின் வாங்குகிறதற்குஞ் சுதந்திரம் உண்டாகிறதென்கிறார். நமக்கிருக்குங் கற்பிக்குந் தொழிலே நாமே நன்றாய்ப் படித்துக்கொள்ளுவதற்கு அஸ்திவாரமாகிறதென்கிறார்.

அலேக்சாந்தர் என்பவன் தனக்கு வெகு பிரியமாயிருந்த சௌந்திரவதியான கொம்பாஸ்பே என்பவளைப் படத்திற் சித்திரித்து எழுதிக்காட்டும்படி பேர்பெற்ற சித்திரக்காரனை அப்பெல்லேஸ் என்பவனைக் கேட்டுக்கொள்ள இந்தச் சித்திரக்காரன் இவளை நெடுநேரம் உற்றுப்பார்த்துப் படத்தின்மீது இவள் இலக்ஷணசாயலைச் சித்திரித்து வரவர இவன் இருதயத்தில் இவள் மீது பட்சம் உண்டாயிற்று. அலேக்சாந்தர் என்பவனே இதனை எளிதிற் கண்டுபிடித்து இவன்மட்டில் இவனுக்கிருந்த பற்றுதலைமுன்னிட்டுத் தனக்கு வெகு பிரியமுள்ளவளாயிருந்த இந்தப் பெண்ணை இவனுக்கே மண முடித்துவைத்தான். இந்த அலேக்சாந்தர் போர்க்களத்தில் வீரசூரனாய்ச்

செயமடைந்து யாவர்க்கும்பெரியவனாய்த் தோன்றிய
தற்கொப்பாய் இது விஷயத்தில் அதிகப்பிருந்தன்மை
கௌரவத்தைக் காட்டினனென்று பிளீன் என்னுஞ்
சாஸ்திரி கூறுகின்றான். ஆதலால் என் நேச சகோ
தரமே; நான் மேற்றிராணியாராயிருப்பதாற் பொது
வான புண்ணியங்களையுமல்லாமல் இன்னுஞ் சுவா
மிக்கு வெகு பிரியமான மெய்யான பத்தியையும் எல்
லோர் இருதயங்களின்மீதுஞ் சித்திரித்துக் காட்டச்
சுவாமிக்குச் சித்தம். இத்திருச் சித்தத்தை அநுசரிக்
கவும் என் கடமையை நிறைவேற்றவும் மெய்யான
பத்தியைப் பிறருடைய மனதில் பதிப்பிக்கப் பிரயா
சப்படுவதினால் என் மனதிலும் இது உத்தமவிதமா
ய்ப் படியுமென்கிற நம்பிக்கையில் மனப் பூர்த்தியாய்
இதனைக்குறித்து எழுத ஆரம்பிக்கின்றேன். இவ்
வாறு இதின்மட்டில் என் இருதய பட்சமெல்லாமி
ருக்கச் சுவாமி பார்க்குமிடத்து இதனை எனக்கு நித்
திய மணமுடித்துவைப்பார். கற்புடையாள் றெபெக்
கா என்னும் சௌந்தரியவதி இசாக்கென்பவருடைய
ஒட்டைகளுக்குத் தண்ணீர் காட்டுகையில் இவருக்கு
மணவாளியாகத் தெரிந்துகொள்ளப்பட்டு இவர்
அனுப்பிய சிமிக்கிகளையுந் தங்கக் காப்புகளையுங் கைக்
கொண்டாள். இத்தன்மையாகவே சர்வேசுரனுக்குப்
பிரீதியான ஆட்டுக்குட்டிகளுக்கு மெய்யான பத்தி
யின் இரட்சணியந் தருஞ் சலத்தை நான் ஊட்டுகை
யில் என் ஆத்துமத்தையுஞ் சுவாமி தமக்குப் பிரிய
பத்தினியாய் அங்கரித்துக்கொண்டு என் செவிகளுக்
குத் தமது திருநேசத்தின் அமிர்த வார்த்தைகளைப்
பொழிந்து அவைகளை நன்றாய் அநுசரித்துவர என்
புஜங்களுக்குச் சத்துவத்தையுங் கருணம்பரக் கட
வுள் தந்தருளுவாரென்றும் வெகு எண்ணமுற்றிருக்
கின்றேன். இவ்வநுசரிப்பில்தான் பிரதானமாய்
மெய்யான பத்தி அடங்கியிருக்கிறது. இந்த மெய்

யான பத்தியை எனக்குந் திருச்சபையின் சகல பிள்ளைகளுக்குஞ் சர்வேசுரன் அளித்தருளக் கிருபை புரியும்படி அவரை இரந்து மன்றாடுகிறேன். கத்தோலிக்குத் திருச்சபைக்கு என் புஸ்தகங்களையுங் கிருத்தியங்களையும், மனம், வாக்கு, சிந்தையையும் என்றென்றைக்குங் கீழ்ப்படுத்தி அதின் ஆதீனத்தில் வைக்கிறேன்.

அங்கேசிபட்டணம்

அர்ச். மதலேனம்மாள் திருவிழா

1608-ம் ஆ.

இந்தப் புத்தகத்தைச் சுவாமிக்கு ஒப்புக்கொடுக்குஞ் செபம்.

என் மதுரசேசுவே, என் ஆண்டவரும் இரக்ஷகருந் தேவனுமான கர்த்தாவே, உமது மாட்சிமை மகத்துவத்துக்கு முன்பாகச் சாஷ்டாங்க தெண்டனிட்டு உமது மகிமை தோத்திரத்துக்காக இப்புத்தகத்தை ஒப்புக்கொடுத்து வசீகிருதம்பண்ணுகிறேன். இதில் அடங்கிய வார்த்தைகளை உமது பரிசுத்த ஆசீர்வாதத்தாற் சக்தியுள்ளதாக்கி இதனை வாசிக்கும் ஸ்திரீபூமான்கள் மெய்யான ஞானப்பிரயோசனம் அடையும்படியாகவும் விசேஷமாய் இப்பூவுலகில் எத்திறத்தோருக்கும் மெய்யான பத்தியின் மார்க்கத்தைக் காட்டியபின் மறுலோகத்தில் நான் நித்திய தீர்வைக்குள்ளாகாதபடிக்கும் உமது கருணைசமுத்திரத்தை இரந்து மன்றாடுகிறேன். என் நேச சேசுவே இப்பிரபஞ்ச வாழ்வில் நேரிடுஞ் சஞ்சல துரித ஆபத்திற் பிரமாணிக்கமாய் உம்மைச் சேவிப்பேனென்பதற்கு அத்தாட்சியாய் என் முழு இருதயத்தோடு இப்பொழுது நான் உச்சரிக்கும் வார்த்தையை ஒட்டோலகிதமாக இப்புத்தகத்தை வாசிக்கும் புண்ணியாத்துமாக்களோடு சதாகாலமும் நான் பாடும்படி கிருபைகூர்ந்தருளும். சேசுநாதர் வாழி. என்றும் வாழி. எந்நாளும் என் நேச சேசு வாழி. எங்கள் ஆண்டவராகிய சேசுவே அநவரத சாதாகாலமும் எங்கள் இருதயத்திற் சீவிபராய் இராச்சியபாரம் பண்ணக்கடவீராக.—ஆமென் சேசு.

கடவுள் துணை.

பத்திநெறிப் பிரவேசம்.

முதற்பாகம்

பத்திநெறியில் நடக்க ஆசிக்கத் துவக்கிய ஆத்துமம் அதனை ஸ்திரமான மனதோடு அங்கீகரிக்க ஏவுதற்கான புத்திமதிகள்.

(௧)

1-ம் அதிகாரம்.

மெய்யான பத்தியின் விளக்கம்.

எனதன்புக்குரிய சகோதரமே, நீ கிறீஸ்துவனாயிருப்பதால் உன் ஆண்டவராகிய சர்வேசுரனுக்கு மெய்யானபத்தி எவ்வளவு பிரியமென்றறிந்து அதனை நீ அடையமெய்யாகவே ஆசிக்கின்றாய். ஆனால் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் நேரிடுஞ் சிறிய பிசகுகள் வரவரப் பெரிதாகிறதினாற் கடைசியாய் அதுகள் பரிகாரமாகிறது பிரயாசம். எல்லாத்துக்கு முந்தி

பத்தியென்னும் புண்ணியம் என்னவென்று நீ அறிய வேண்டியிருக்கிறது. ஏனெனில் மெய்யான பத்தி ஒன்றே, பொய்யான பத்தியோ பலதுண்டு. ஆகையால் மெய்யான பத்தி இன்னதென்று நீ பகுத்தறியாவிட்டால் மோசம்போகக் கூடுமாயிருப்பதுமன்றி குருட்டாட்டமான விவேகமற்ற பத்திநெறியிற் சென்று விருதாவில் உன் காலத்தைப் போக்குவாய்.

பலமுறை சித்திரக்காரன் தன்னால் நேசிக்கப்பட்டவர்களின் சாயலுக்கொப்பாய் உருவுகளைச் செய்வதுபோல அவனவன் தன் இச்சை நாட்டத்தின்படி பத்தியை உரூபிகரித்துக்கொள்ளுவான். ஒருபொழுது உபவாசத்திற் பழகியவன் தான் ஒருபொழுது பிடிப்பதால் தன்னை வெகு பத்தியுள்ளவனென்று எண்ணுவான். ஆயினுந் தன்னிருதயத்திற் குடிகொண்டிருக்கும் வர்ம வைராக்கியத்தைப் பாரான். சில விசை ஒரு துளித் தண்ணீர்முதலாய்த் தன்னுவில் விழச் சம்மதியான். ஆனால் அவதூறு கோள் குண்டணியால் தன்னுவை அசுத்தப்படுத்த அஞ்சான். தன்னூழியர் சுற்றத்தார்பேரிற் சினந்து அகங்கார அதைப்பிய வார்த்தைகளைச் சொல்வது ஒருவனுக்கு அப்பியாசமாயிருந்தபோதிலும் நாடோறும் பல செபங்களைச் செபித்து வருவதால் தன்னிலும் உலகில் அதிக பத்தியுள்ளவன் இல்லையென்பான். ஒருவன் ஏழைகள்பேரில் வெகு தர்மசாலியாயிருப்பான். ஆனால் தன் சத்துராதிகளுக்குத் தயையைக் காட்டிப் பொறுத்தல் அளிக்கமாட்டான். வேறொருவன் வெகு சுலுவாய்ப் பொறுத்தல் அளிப்பான், ஆனால் நீதிக்காரர்கள் இவனை வலுவந்தப்படுத்தாவிட்டால் தனக்கு உபகாரமாகக் கொடுத்த கடனைத் தீரான். இவர்கள் எல்லோரும் பத்தியுள்ளவர்களாக எண்ணப்படுகிறார்கள். ஆகிலும் இவர்களில் ஒருவனும் பத்

தியுள்ளவனல்ல. தாவீதென்பவரைப் பிடிக்க இவர் விரோதிக்குச் சவுலரசனின் சேவகர் வந்தபோது தாவீதென்பவருடைய மனைவியாகிய மிக்கோல் என்பவள் தாவீதென்பவருடைய உடுப்புகளை ஓர் சிலைக்கு உடுத்தி அதனை இவருடைய கட்டிலிற் படுக்க வைத்தமையால் தாவீதென்பவரோ வியாதியால் அசந்து நித்திரை செய்வதாகச் சேவகர் நம்பும்படியாயிற்று. இத்தன்மையர்களே அநேகர் பத்திக்கடுத்த வெளிக்கிருத்தியங்களைச் செய்துவருவதால் மெய்யாகவே பத்தியுள்ளவர்களாகவும் ஞானிகளாவும் உலகத்தில் எண்ணப்பட்டுவருகிறார்கள். ஆயினும் உண்மையாகவே இவர்கள் பத்தியின் உயிரற்ற சிலைகளுக்கு ஒப்பானவர்கள்.

எனது நேச சகோதரமே, உயிருள்ள மெய்யான பத்தியில் தேவசிநேகம் அடங்கியிருக்கிறதென்று நீ அறியவேண்டும். இன்னஞ் சொல்லவேண்டுமானால் பத்தியானது மெய்யான தேவசிநேகமேயன்றி வேறல்ல. மெய்யான சிநேகமென்றேன், ஏனெனில் தேவசிநேகமானது நமது ஆத்துமத்தை அலங்கரித்து நம்மைச் சுவாமியுடைய கண்களுக்குப் பிரியமுள்ளவர்களாய் ஆக்குகின்றமையால் அது தேவ அருளென்று அழைக்கப்படும். புண்ணியத்தைச் செய்வதற்கு நமக்கு வேண்டிய பலத்தைக் கொடுப்பதால் சிநேகமென்னும் பெயர் அதற்குப் பொருந்தும், நாம் புண்ணியத்தைச் செய்வதற்கு மாத்திரமல்ல, மேலும் அதனை வழக்கமாய்க் கவனத்தோடுஞ் சுறுசுறுப்போடுஞ் செய்வதற்கு ஏதுவான உத்தம நேசமாயிருந்தால் அப்போதுதான் பத்தியென்று அழைக்கப்படும்.

இதனை ஓர் ஒப்பனையால் விளக்குவோம். தீக்கோழிகளுக்கு இரக்கைகள் இருந்தபோதிலும் நன்றாய்ப் பறக்காது. கோழிகள் பறந்தாலுந் தரையோடு அரு

மையாகப் பறக்கும். இதற்கு விரோதமாய் அண்டரண்ட பட்சிகளும் புருக்களுந் தகைவிலான் குருவிகளுஞ் சலியாமல் உயரமாய் வேகமாய் பறக்கும். இத்தன்மையாய்ப் பாவிகள் சுவாமியை அண்டி உயராமல் உலகத்திலேயே சுற்றி உலகத்திலேயே நாடிச் சகலத்தையும் நடத்திவருவார்கள். இன்னம் மெய்யான பத்தியை அடையாதவர்கள் சுவாமியை நேசித்துக் கொஞ்சம் உயர்ந்துபோனபோதிலுஞ் சுறுசுறுப்பின்றி அருமையாய் மெதுவாய்ச் செல்லுவார்கள். மெய்யான பத்தியுள்ளவர்கள்மாத்திரஞ் சுவாமியிடத்தில் வேகமாய் ஓயாமற் பறந்தாற்போல ஏறுவார்கள். ஓரே வார்த்தையிற் சொல்லவேண்டுமாகில் மெய்யான பத்தியானது ஞான காரியங்களிலுள்ள வேகமுஞ் சுறுசுறுப்புமேயல்லாமல் வேறல்ல. நமது கிருத்தியங்களையெல்லாஞ் சுறுசுறுப்பாய் ஆசையோடு செய்வதற்கு இதுவே காரணமாம். தேவசிநேகம் நாம் சுவாமியுடைய கற்பனைகளையெல்லாஞ் சாதாரணமாய் அனுசரிக்கக் காரணமாயிருப்பதுபோல நாம் அவைகளை வெகு ஆவலோடுஞ் சாக்கிரதையோடுஞ் செய்வதற்கு மெய்யான பத்தியேகாரணமாம். ஆதலாற் சர்வேசுரனுடைய முறைமை எல்லாத்தையும் அனுசரியாதவன் நீதிமானுமல்ல, பத்தியுள்ளவனுமல்ல. ஏனென்றால் நீதிமானாயிருக்கத் தேவசிநேகம் வேண்டும். பத்தியுள்ளவனாயிருக்கத் தேவசிநேகமுமன்றி நற்கிரிகைகளைச் செய்வதற்குப் போராவலுஞ் சுறுசுறுப்புமிருக்கவேண்டும்.

மெய்யான பத்தியானது மேலான தேவசிநேகமாயிருப்பதால் அதினால் நாம் சர்வேசுரனுடைய முறைமைகளையெல்லாம் ஆவல் சாக்கிரதையுடன் அனுசரிப்பதுமன்றி இன்னந் தேவ ஏவுதலுக்கு அமைந்து கடமையில்லாத அநேக நற்கிருத்தியங்களையும் நம்மால் இயன்றவரையில் செய்வோம்: வியாதி நீங்கி

நடக்கத் துவக்குகிறவன் அவசரமானமட்டும் மெதுவாய் மெள்ளமெள்ள நடப்பான். நெடுங்காலம் பாவவியாதியால் மெலிந்தவனும் பாவத்தைவிட்டுப் புண்ணியவழியில் நடக்கத் துவக்கும்போது இப்படியே கடமையானமட்டும் மெதுவாய்ப் பிரயாசத்தோடு நன்னெறியில் நடப்பான். ஆனால் இவனுக்கு மெய்யான பத்தி உண்டானபிறகு நல்ல சவுக்கியமுள்ளவனைப்போல் தைரியமாய் நடந்து சுவாமி கற்பித்த கடமையான புண்ணியவழியிற் சுறுசுறுப்பாய்ச் செல்லுவதுமன்றி கடமையில்லாத புண்ணிய சாங்கோபாங்க நெறியில் வேகமாய் ஓடுவான். கடைசியாய் அக்கினிக்கும் அதின் சுவாலைக்கும் இருக்குஞ் சம்பந்தம் எப்படியோ அப்படியே தேவ நேசத்துக்கும் மெய்யான பத்திக்குமுள்ள சம்பந்தம். ஏனெனில் தேவநேசம் ஆத்துமத்தின் ஞான அக்கினியாயிருப்பதால் அது வெகுவாய் எரிந்தால் பத்தியென்று அழைக்கப்படும். ஆகையால் மெய்யான பத்திக்குந் தேவசிநேகத்துக்கும் உள்ள விசேஷவித வித்தியாசம் ஏதெனில், சிநேக அக்கினி மெய்யான பத்தியால் சுவாலையாகிச் சுவாமியுடைய கற்பனைகளையுமல்லாமல் புண்ணிய சாங்கோபாங்க நெறிக்கடுத்த ஆலோசனை தேவ ஏவுதல்களையும் சுறுசுறுப்பு விருப்பத்தோடு அனுசரிக்கச் செய்யும்.

2-ம் அதிகாரம்.

மெய்யான பத்தியின் குணங்களும் மேன்மையும்.

சர்வேசுரன் இஸ்ருயேலித்தாருக்கு வாக்குத்தத்தஞ்செய்த பூமியைப் பரிசோதித்துப்பார்க்க மோயீ

சன் என்பவரால் அனுப்பப்பட்டவர்களில் யோசு யே காலேப் என்பவர்கள் தவிர மற்றவர்கள் அந்தத் தேசத்துக்கு இஸ்ருயேலித்தார்களைப் போகவொட்டாதபடிக்கு அந்தப் பூமியானது மகா கெட்டதென்றும் அதின் ஆகாயம் விஷம்போல இருப்பதால் மனிதர் அதில் வெகுகாலஞ் சீவிக்கக்கூடாதென்றும் அதில் வசிப்பவர்கள் இராக்ஷதராகையால் மற்ற மனிதர்களை வெட்டுக்கிளிகளைப் போலப் பிடித்து விழுங்குகிறார்களென்றுஞ் சொன்னார்கள். பிரிய சகோதரமே, இத்தன்மையாகவே உலகிலுள்ளவர்கள் மெய்யான பத்தியைக்குறித்துத் தங்களால் இயன்றவரையில் விபரீதமாய்ப் பேசுவார்கள். பத்தியுள்ளவர்களைச் சோர்ந்த முகமாய்க் காட்டிப் பழித்து மெய்யான பத்தியால் மனுஷனுடைய குணங் கெட்டுப் போவதென்றும் எவர்க்குஞ் சகிக்கக்கூடாத கஸ்திகரமுள்ளதாய் மாறிப்போவதென்றுஞ் சொல்லுவார்கள். ஆனால் யோசுயே காலேப் என்ற இருவரும் வாக்குத்தத்தப் பூமி மகா செழுமை சௌக்கியமானது; அதில் வசிப்பது மகா இன்பத்துக்குரியதே என்று உள்ளபடி உறுதியாய்ச் சொன்னார்கள். இத்தன்மையாகவே பத்தியுள்ள சீவியம் பாக்கியமான சீவியம் நேசத்துக்குரிய இன்பமான சீவியமென்று சகல அர்ச்சியசிஷ்டவர்களின் வாக்கால் இஸ்பிரீத்து சாந்துவானவர் நமக்குக் கற்பிக்கிறார். நமது ஆண்டவராகிய சேசுகிறீஸ்துநாதர்தாமே தமது மாதிரிகை படிப்பினையால் இதை எண்பிக்கிறார். நமக்கு நிச்சயமாய்ச் சொல்லுகிறார்.

பத்தியுள்ளவர்கள் உபவாசமாயிருப்பதையும் இராக்கண் விழித்து வேண்டிக்கொள்வதையும் நிந்தனைகளைப் பொறுமையாய்ச் சகித்து வியாதிக்காரருக்குப் பணிவிடைசெய்து ஏழைகளுக்குத் தானதர்மஞ் செய்வதையுங் கோபத்தைத அடக்கி ஆசாபாசங்களை

வென்று இன்பசுகங்களை வெறுத்துச் சுபாவத்துக்குக் கஷ்டமும் வருத்தமுமான இன்னம் பல நற்கிருத்தியங்களைச் செய்வதையும் உலகம் பார்த்துவருகிறது ஆனால் அந்தரங்க பத்தியானது இந்த நற்கிருத்தியங்களையெல்லாம் பிரியமாகவும் இன்பமாகவும் எளிதாகவும் ஆக்கிவிடுகிறதை உலகம் பார்க்கிறதில்லை. தேனீக்கள் மகா கசப்பான சாரமுடைய புஷ்பங்களின்பேரில் மொய்த்து அந்தச் சாரத்தைத் தேனாக மாற்றிவிடும். ஏனெனில் தேனீக்களுக்கு இத்தன்மையான சுபாவம் உண்டு. உலகப் பிரியரோ, பத்தியுள்ள ஆத்துமங்களுக்கு ஒறுத்தல் செய்வதில் வெகு பிரயாசை, வருத்தம் உள்ளதென்பது மெய்தான். ஆனால் மனப்பிரீதியாகச் செய்தால் எப்படிப்பட்ட அகோர ஒறுத்தலும் இவர்களுக்கு இன்பமாய் ஆறுதலாய் மாறிப்போகின்றது. வேதசாட்சிகள் பத்தியுள்ளவர்களாயிருந்தமையால் இவர்களுக்கு அக்கினியுங் கடுஞ்சூளையும் முட்சக்கரங்களுங் கத்தி வாள்களுஞ் சுகந்த மலர்களாயின. பத்தியானது கொடிய உபாதைகளையும் மரணத்தையுந்தானே இன்பமாய் மாற்றினால் புண்ணிய நற்கிருத்தியங்களை அனுசரிப்பதில் இருக்கும் வருத்தத்தை எவ்வளவோ மதுரமாய் மாற்றிவிடும். கனியாத காய்களுக்கு உருசி கொடுப்பதும் இன்னங் கனிந்த பழங்களிலுள்ள கெட்ட குணத்தை அழிப்பதுஞ் சர்க்கரையின் குணமாம். அப்படியே பத்தியானது மெய்யான ஞான சர்க்கரையாய் ஒறுத்தலிலுள்ள கசப்பையும் இன்பத்திலுள்ள ஆபத்தையும் நீக்குகின்றது. இந்தப் பத்திதான் ஏழைகள் குறையை நீக்கி மகராசருடைய பேராசையை அடக்கித் துன்பப்பட்டவருடைய துயரத்தையும் வனவாசிகளுடைய கஸ்தியையும் அகற்றி உலகத்தில் சஞ்சரிப்பவர்களைப் பாவமயக்கத்தில் அகப்படவொட்டாமல் காப்பாற்றுகிறது. இது மாரிகாலக் குளிரைத்

தணிக்கும் உஷ்ணமாம். கோடைகாலத்து வெப்பத்தைக் தணிக்கும் பனியாம். ஐசுவரியம், தரித்திரம், ஸ்துதி, நிந்தை சகலத்தையும் பிரயோசனமுள்ளதாக்கிவிடும். இந்தப் பத்தியானது நம்மிடத்தில் இருக்குமாகில் சுகத்தையுந் துக்கத்தையும் எப்போதும் ஓரே மனமாய் அங்கீகரித்துக்கொண்டு அகமகிழ்ச்சியாயிருப்போம்.

இயாக்கோபு என்பவர் ஒருநாள் கண்ட காட்சியாதெனில் பூமியிலிருந்து வானத்தை அளாவினஓர் ஏணியையும், அதிற் சம்மனசுகள் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருக்கவும் அவ்வேணியின் உச்சியிற் சுவாமி வீற்றிருக்கவுங் கண்டார். அந்த ஏணி பத்தியுள்ள சீவியத்தின் மெய்யான சாயலாம். அவ்வேணியின் இரு கால்களில் ஒன்று தேவசிநேகத்தைக் கேட்கிற செபத்துக்கும் மற்றொன்று அந்தத் தேவசிநேகத்தை அளிக்கிற தேவத்திரவிய அநுமானங்களுக்கும் அடையாளமாம். அதின் படிகள் தேவசிநேகத்தின் பற்பல அந்தஸ்தாம். நாம் பிறருக்கு உதவியாக நற்கிருத்தியங்களைச் செய்வது மேற்சொல்லிய ஏணியினின்று இறங்குவதுபோலவும், நாம் உலக சிந்தனையை விட்டுத் தியானத்தினால் சர்வேசுரனுடைய நேச ஐக்கியத்தைத் தாவிப்போவது மேற்சொல்லிய ஏணியின்பேரில் ஏறுவதுபோலவுமாகும். மேற்கண்ட ஏணியில் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருப்பவர்களைக் கவனித்துப்பார். மனுஷரூபம் உள்ளவர்களாயினுஞ் சிறகுகளை உடையவர்களாம். இதற்குக் காரணம் இவர்கள் தியானமென்னுஞ் சிறகைப் புடைத்துப் பறந்து சுவாமியிடத்தில் நெருங்கியிருந்தபோதிலும் மனிதர்களோடு சஞ்சரித்து அவர்களோடு பிறசிநேகம் நிறைந்தவர்களாய்ப் புழங்கிவருகிறார்கள் என்பதேயாம். இவர்கள் முகங்கள் ஆனந்த அக்களிப்புள்ளவை. அதேனெனில்

உத்தம சமாதான சாந்தகுணத்தோடு சகலத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறார்களென்று அர்த்தமாம். இவர்கள் தலை, கை, கால், வெறுமையாய் இருக்கின்றன. ஏனெனில் இவர்கள் நினைப்பிலும் இச்சையிலுங் கிரியையிலுஞ் சர்வேசுரனுக்குப் பிரியப்படவேண்டுமென்கிற கருத்தேயன்றி வேறில்லை. இவர்களுடைய ஆடை மெல்லிய தூய வஸ்திரமாம். ஏனெனில் இவர்கள் இவ்வுலகிற் சஞ்சரித்து உலக காரியங்களை உதவிக்கொண்டால் மகா பரிசுத்த இருதயத்தோடு தங்கள் அந்தஸ்துக்கு வேண்டியவளவில் மாத்திரம் உதவிக்கொள்ளுகிறார்களென்று அடையாளமாம். மெய்யான பத்தியுள்ளவர்கள் இவர்களுக்கு ஒப்பானவர்கள். பிரிய சகோதரமே, மெய்யாகவே பத்தியானது வற்றாத இன்புச் சுனை, சகல புண்ணியங்களிற் சிரேஷ்ட புண்ணியம், தேவசிநேகத்தின் உத்தம மாட்சிமை மகுடமாம். சிநேகமானது பாலுக்கொப்பாகவும் பத்தியானது பாலேட்டுக்கொப்பாகவும் இருக்கிறது. இன்னஞ் சிநேகமானது ஓர் பூண்டுபோலவும் பத்தியானது அதின் சுகந்த மலர்போலவும் இருக்கிறது. சிநேகமானது ஓர் வைரமணியானால் தேவசிநேகம் அதின் பிரகாசகாந்தியாம். சிநேகத்தைப் பரிமளதைலத்துக்கு இணையிட்டால் பத்தியானது அதின் சுகந்த மணமாம். இந்தச் சுகந்த மணந்தான் மனிதர்களுக்குத் தைரியத்தையுஞ் சம்மனசுகளுக்கு அகமகிழ்ச்சியையும் வருவிக்கின்றது.

3-ம் அதிகாரம்

பத்தி எவ்வித அந்தஸ்திலும் தொழிலிலு
முள்ளவர்களுக்குத் தகுதியேன்
பதின்பேரில்.

சர்வேசுரன் உலகத்தைச் சிஷ்டிக்கையில் ஒவ்வொரு பூண்டுந் தனக்கான அந்தந்த விதப் புஷ்பங்களைப் புஷ்பிக்கச் செய்தார். இத்தன்மையாய்த் தமது திருச்சபையாகிய உத்தியானத்தின் சீவிய பூண்டுகளாகிய கிறீஸ்துவர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துக் கிரமப்படி பத்தியின் ஞானக் கனிகளை விளைவிக்கக் கட்டளையிடுகிறார். ஒரேவிதமாய் எவ்விதமனிதர்களும் பத்தியை அனுசரிக்கக்கூடாது. ஓர் தனவானுடைய பத்தித் தன்மை வேறே, ஓர் தொழிலாளியின் பத்தித் தன்மை வேறே, ஓர் மன்னவானுடைய பத்தித் தன்மை வேறே, ஓர் ஊழியனுடைய பத்தித் தன்மை வேறே. இப்படியே ஓர் விதவை ஸ்திரீ பத்தியுள்ளவளாவதற்கு உதவிக்கொள்ளும் வழி விவாகம் பண்ணின பெண்ணுக்கு உதவாது. இன்னம் அவரவர் பலத்துக்கும் அலுவலுக்குங் கடமைகளுக்குந் தக்காப்போல இருக்கவேண்டும். பிரிய சகோதரமே, இதை நீ நன்றாய் அறியவேண்டும். கிறீஸ்துவர்களைக் கண்காணித்துப் பராமரிக்கவேண்டிய ஓர் மேற்றிராணியார் மடத்தில் ஒடுக்கமாயிருக்கிற சந்நியாசிகளைப்போலே ஒடுக்கமாயிருக்க மனதானால் சரிப்படுமோ. தாரித்திர வார்த்தைப்பாடு கொடுத்திருக்கும் அர்ச். பிரான்சீஸ்கு சபைச் சந்நியாசிகளைப்போலக் கலியாண அந்தஸ்தில் உள்ளவர்கள் காசுபணஞ் சம்பாதிக்கப் பிரயாசப்படாவிட்டால் முடியுமோ. ஓர் தொழிலாளி சந்நியாசியைப்போலே நாளெல்லாங் கோவிலிலிருந்து வேண்டிக்கொ

ண்டால், அவன் ஜீவியம் என்னமாய் நடக்கும். ஓர் மேற்பிராணியானாப்போல் ஓர் சந்நியாசி பிறருக்கு நன்மை உதவி உபகாரஞ் செய்யக்கூடுமோ. இப்படிப்பட்ட கிரமமற்ற பத்தியானது நகைப்புக்குரியது, எவராலுஞ் சகிக்கத்தகாது. ஆயினும் இப்படிப்பட்ட பிசகு நேரிடுவது அபூருவுமல்ல. இதனைப் பகுத்தறியாத அல்லது பகுத்தறிய மனதிராத உலகமானது பத்தியைக் குறித்து விகற்பமாய்ப் பேசிவரும்.

ஆனால் பிரிய சகோதரமே, மெய்யாகவே உண்மையான பத்தியானது கெடுப்பது ஒன்றுமில்லை. இன்னஞ் சரியாய்ச் சொல்லவேணுமானல் இது சீர்ப்படுத்தாத காரியம் ஒன்றுமில்லை. அவருடைய கிரமமான அந்தஸ்துக்காகிலும் இது நஷ்டம் வருவிக்குமேயாகில் இதைக்கொண்டு இது மெய்யான பத்தியல்லவென்று அறிந்துகொள்ளலாம். தேனீக்கள் புஷ்பங்களிலுள்ள தேனைக் குடிக்கையில் அந்தப் புஷ்பங்கள் வாடிப்போவதில்லை. எப்போதும்போலவே குளிர்ந்த மணம் வீசிக்கொண்டிருக்கும். ஆனல் மெய்யான பத்தி இதிலும் உத்தமமானவிதமாய் அவரவர்கள் அந்தஸ்துக்கும் அலுவல்களுக்கும் ஒரு நஷ்டமும் வருவியாமல் அதுகளை அர்ச்சித்துச் சீர்ப்படுத்தி விளங்கச்செய்கின்றது. நவரத்தினங்களைத் தேனிற்போட்டால் அதனால் அவைகளின் நிறம் அதிக காந்தியோடு பிரகாசிக்கும் இத்தன்மையாகவே மெய்யான பத்தியைத் தேடி நடப்பவன் அவனவனுந் தன் தன் அந்தஸ்தில் அதிக நேத்தியானவனாய்க் காணப்படுவான். இதினல் குடும்பத்தில் நல்ல சமாதானமும் புருஷன் பெண்சாதிகளுக்குள் உண்மையான நேசமும் அரசன்மட்டில் குடிகளுக்குப் பிரமாணிக்கமான கீழ்ப்படிதலும் உண்டாக எவ்விதப் பிரயாசை தொழிலும் அதிக எளிதாய்ப் பிரியத்துக்குரியதாகும். போர்ச்சேவகர் பலவகைத் தொழிலாளிகள்

இல்லறத்தோர் அரசர்கள் தங்கள் அந்தஸ்தில் இருந்துகொண்டே மெய்யான பத்தி அடையக்கூடாதென்பது அபத்தமும் பதித போதனையுமாம். மெய்யாகவே, பிரிய சகோதரமே, யோகிகள் முனிகள் முதலிய சந்நியாசிகளுக்குரிய பத்தியானது எவ்வகை அந்தஸ்தராலும் அனுசரிக்கக்கூடாதென்பது உண்மை. இந்த மூன்று விதப் பத்தியுமில்லாமல் உலகத்திற் சஞ்சரித்துச் சீவிப்பவர்களை அர்ச்சிக்க மிகவுந் தகுதியான இன்னம் பலவிதப் பத்தியுண்டு. அபிரகாம், ஈசாக்கு, இயாக்கோபு, தாவீது, யோபு, சாராயி, ரெபெக்கா, யூதித்தம்மாள் இவர்களெல்லோருந் தங்கள் அந்தஸ்துப்பிரகாரம் பத்தியுள்ளவர்களாயிருக்கப் பழைய ஏற்பாட்டிற் கண்டுவருகிறோம். புதிய ஏற்பாட்டிலோ கணக்கில்லாத அத்தாட்சியுண்டு. அர்ச்சியசிஷ்ட சூசையப்பரும், லிதியா என்பவளும் கிரோப்பின் என்பவருந் தங்கள்பட்டடையில்வேலைசெய்துகொண்டே வெகு பத்தியுள்ளவர்களானார்கள். அர்ச். அன்னம்மாளும் மார்த்தம்மாளும் மொனீக்கம்மாளுந் தங்கள் குடும்பத்தைப் பராமரித்துக்கொண்டு வெகு பத்தியுள்ளவர்களானார்கள். படையிற் சேவித்துக்கொண்டிருந்த கொர்னெலியூஸ் என்பவரும் அர்ச் மோரீசென்பவரும் வெகு பத்தியுள்ளவர்களாயிருருந்தார்கள். கோன்ஸ்தாந்தின் என்ற சக்கரவர்த்தியும், அர்ச். எலேனம்மாளும், அர்ச். பிரகாச இராசாவும், முத்திபேறுபெற்ற அமேதே என்பவரும், அர்ச். எதுவார் என்ற அரசனுந் தங்கள் சிங்காசனத்தில் இருந்துகொண்டே வெகு பத்தியுள்ளவர்களானார்கள். பலமுறை பல பேருக்கு வனாந்தர தனிவாசத்தில் தங்கள் பத்தி நெறியை இழந்துபோகும்படியான சந்தர்ப்பம் நேரிட்டும் இருக்கின்றது. ஆகிலும் பத்தி நெறிச் சீவியத்தை அடைய இதிலும் உத்தமமான இடங் கிடையாது. இப்படி இருந்தும் முன்

சொல்லப்பட்டவர்கள் உலக சந்தடியிற் சஞ்ச ரித்துப் பத்திநெறியிற் சீவித்தார்கள். ஆகிலும் பத்தி நெறிக்கு உலகம் எவ்வளவோ பொருந்தாததாய்க் காணப்படுகிறது. இத்தன்மையாய் நாம் எவ்வித அந்தஸ்திலுந் தொழிலும் இருந்தபோதிலும் பத்தியுள்ளவர்களாய் நடப்பது கூடுமான காரியமாயிருப்பதுமன்றி இன்னம் பத்தி நெறியை அடைய விருப்பங்கொண்டு பிரயாசப்படவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

4-ம் அதிகாரம்.

பத்தி நெறியிற் பிரவேசித்து அதில் வர்த்திக்க ஓர் ஆத்தும ஆலோசனை குருவின் அவசியத்தைக் குறித்து.

தோபியாசு வாலன் இராகேஸ் என்னும் பட்டணத்துக்குப் பிரயாணப்பட்டுப் போகவேண்டியிருக்கையில் தன் தகப்பனைப்பார்த்து அந்த ஊருக்குப் போவதற்கு எனக்குப் பரிச்சேதம் வழி தெரியாதென்றார். தகப்பன் மறுமொழியாக மகனே வெளியிற் புறப்பட்டு உன்னைக் கூட்டிக்கொண்டுபோக வழி அறிந்த ஒருவனைத் தேடிப்பாரென்றார். இத்தன்மையாகவே பிரிய சகோதரமே நானும் உனக்குச் சொல்லுகிறேன், பத்தி என்னும் புண்ணியத்தில் மெய்யாகவே வர்த்திக்க மனதாயிருக்கிறாயோ உனக்கு உதவியாயிருந்து உன்னை நடப்பிக்கத் தக்க ஓர் நல்ல மனிதனைத் தேடு. இதற்கு மிஞ்சின உத்தம ஆலோசனை கிடையாது. பத்தியில் மிகுந்த அவிலா என்பவர் சொல்லுமாப்போல நீ என்னதான் செய்தபோதிலும் இந்த உத்தம கீழ்ப்படிதலின் மார்க்கத்தைப் பின்செல்லாவிட்டால் சர்வேசுரனுடைய சித்தத்தை

அவ்வளவு நிச்சயமாய் அறிய உன்னால் முடியாது. அர்ச்சியசிஷ்டவர்கள் எல்லோரும் இதனைக் கனமாய் எண்ணி அனுசரித்துவந்தார்கள். கொர்த்துகத்தரீனம்மாள் வெகு கடின தவங்களைச் செய்வதை அர்ச். தெரேசம்மாள் கண்டு தானும் அப்படிப்பட்ட தவங்களைச் செய்ய விரும்பித் தன் ஆத்தும குருவை உத்தரவு கேட்க இவர் கூடாதென்று விலக்கினார். இது விஷயத்தில் கீழ்ப்படியத் தத்தளித்துக் கடைசியாய் கீழ்ப்படிந்துபோனாள். அப்போது சுவாமி அவளுக்குச் சொன்னது: என் மகளே, நீ நிச்சயமான நல்ல வழியில் நடக்கிறாய். நீ அந்தத் தவத்தைக் கனமாய்க் எண்ணினாய்; நானோவெனில் உன் கீழ்ப்படிதலை அதிக கனமாய் எண்ணுகிறேன் என்றார். அது முதல் இந்தம்மாள் இந்தப் புண்ணியத்தை எவ்வளவு நேசித்தாளென்றால் தன் சிரேஷ்டர் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிவேன் என்கிற கடமையுமன்றி இன்னுந் தனது ஆத்தும ஆலோசனைக் குருவின் ஆலோசனைகளைப் பின்சென்று அவர் சொற்படி நடப்பேன் என்கிற விசேஷ வார்த்தைப்பாட்டையுஞ் செய்தாள். இதினால் இந்தம்மாள் வெகு பெரிய ஆறுதல்களை அடைந்தாள். இந்தம்மாளைபோல் தங்கள் மனதை வெறுத்து உத்தம விதமாய்ச் சுவாமியுடைய சித்தத்தை நிறைவேற்றத் தங்கள் ஆத்தும ஆலோசனைக் குருக்களின் மனதைத் தெய்வசித்தமென்று பிரமாணிக்கமாய் அநுசரித்த எத்தனையோ கணக்கில்லாப் புண்ணியாத்துமாக்கள் இப்படிப்பட்ட வரங்களை அடைந்தார்கள். அர்ச். சியேன் கத்தரீனம்மாள் எழுதிய ஞான சம்பாஷணையில் இதைக்குறித்து வெகுவாய்ப் புகழ்ந்து பேசுகிறாள். பத்தியில் மிகுத்த மன்னவதியாகிய அர்ச். எலிசபேத்தம்மாள் பேர்பெற்ற கோன்ரார்தென்னுங் குருவானவர் சொற்களுக்கு உத்தம கீழ்ப்படிதலோடு நடந்துவந்தாள்.

அர்ச். பிரகாச இராசா தன் மரணத்துக்கு முன் தனது குமாரனைப் பார்த்து என் மகனே அடிக்கடி நீ பாவசங்கீர்த்தனம் பண்ணு. உன் ஆத்தும நன்மைக்கு அவசரமான காரியங்களில் உனக்குத் தகுந்த ஆலோசனைகளைக் கொடுக்கத்தக்க கல்வித்திறமையும் விவேகமுமுள்ள ஓர் ஆத்தும குருவைத் தெரிந்துகொள் என்றார்.

இன்னம் வேத புத்தகத்திற் சொல்லியிருப்பது போலப் பிரமாணிக்கமுள்ள சிநேகிதன் பலத்த ஓர் ஆதரவு. இப்படிப்பட்ட சிநேகிதன் கிடைப்பது பெரியதோர் பொக்கிஷங் கிடைத்தது போலாம். இன்னும் இந்தப் பிரமாணிக்கமுள்ள சிநேகிதன் எதுக்கு ஒத்தவனென்றால் சீவியத்தையுஞ் சாகாத வரத்தையுங் கொடுக்கிற பரம சஞ்சீவிக்கொத்தவனும். சுவாமிக்குப் பயந்து நடப்பவர் இப்படிப்பட்ட சிநேகிதனைக்காண்பார். பிரியசகோதரமே, நீ கண்டு பிடிப்பதுபோலே இந்தத் திவ்விய வார்த்தைகள் நித்திய சீவியத்துக்கு விசேஷமாய்ச் சம்பந்தப்பட்டவை. இந்த நித்திய சீவியத்துக்கு வழிகாட்டியாக எல்லாத்துக்கு முந்தி இந்தப் பிரமாணிக்கமான சினேகிதன் கிடைக்கவேண்டும். இவன்தான் தனது ஆலோசனையால் உனக்கு ஒத்தாசையாயிருந்து பசாசின் கண்ணிகளிலும் மோசத்திலுநின்று உன்னைக் காப்பாற்றுவான். இந்தச் சிநேகிதன் நமது துன்ப துயரங்களிலும் நமக்கு நேரிடுந் தப்பிதங்களிலும் நமக்குப் பொறுமையை உணர்த்தும் உபாத்தியாயர்போலிருப்பான். நமது மனச் சஞ்சல கஸ்திகளிலும் இன்னம் மற்ற ஞான வியாதிகளிலும் நமக்கு ஞான சஞ்சீவியாயிருப்பான். தின்மை அணுகாமல் நம்மைக் காப்பாற்றி நம்மிடத்தில் இருக்கக்கூடுமான நன்மையில் விருத்தி அடையும்படி செய்வான். நமக்கு ஏதாகிலும் இக்கட்டு வியாதி வருகையில் நமக்காக இவன்

எடுத்துக்கொள்ளும் பிரயாசைப் பராமரிப்பால் நல்ல ஒத்தாசையாயிருந்து நமக்கு மரணம் வரவொட்டாமல் விலக்குவான்.

ஆனால் இந்தச் சினேகிதனை எவன் காண்பான். ஞானியானவர் சொல்வதைக் கேள். சர்வேசுரனுக்கு அஞ்சி நடப்பவர்கள்தான், அதாவது, மெய்யான பத்தியில் வர்த்திக்க ஆவல்கொண்ட தாழ்ச்சியுள்ள இருதயமுடையவர்கள்தான். பிரிய சகோதரமே, பத்தி என்னும் இந்தத் திரு யாத்திரையில் ஒரு நல்ல வழிகாட்டிவேண்டும் என்பது இவ்வளவு முக்கியமானதாதலால் சுவாமியைப் பார்த்து அவர்தாமே தமது இருதயத்துக்கொத்த ஒருவனை உனக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள். தப்பாமல் அனுப்புவார். ஏனெனில் பிரமாணிக்கமான ஓர் வழிகாட்டியில்லாமல் இந்தக் கண்ணீர்க் கணவாயில் உன்னை விட்டுவிடார். தோபியாசென்பவருக்கு அவர் செய்ததுபோல பரலோகத்தினின்று ஓர் சம்மனசை அனுப்ப வேண்டியிருந்தபோதிலுந் தப்பாமல் அனுப்பிவைப்பார்.

ஆகையால் இப்படிப்பட்ட சினேகிதன் உனக்குக் கிடைக்கும்போது மெய்யாகவே அவர் உனக்கு ஓர் சம்மனசுதானென்று எண்ணிக்கொள். இவனை வெறுமனிதனாகப் பாவிக்காதே. ஆகிலும் இவருடைய சொந்த சாமர்த்திய திறமையில் உன் நம்பிக்கையை வையாதே. சுவாமியிடத்தில் உன் நம்பிக்கையெல்லாம் வை. சுவாமிதான் உனக்கு அவசரமான காரியங்களையெல்லாம் அவர் வழியாய் உனக்கு அறிவித்து ஒத்தாசையாய் இருப்பார். இத்தன்மையாய் உன் சென்ம தேசமாகிய மோட்சத்துக்கு உன்னைக் கூட்டிக்கொண்டுபோகப் பரலோகத்தினின்று இறங்கிய சம்மனசாக எண்ணி இந்தச் சினேகிதன் சொல்லுக்குச் செவி கொடு. கபடற்ற மனதோடு உன் இருதயத்தைத் திறந்து காட்டு. உன்னிடத்திலுள்ள நன்

மைத் தின்மை ஒன்றையுங் குறைக்காமலும் மறைக்காமலும் அவருக்குப் பரிஷ்காரமாய் வெளிப்படுத்து. இந்த வழியாய் உன்னிடத்தில் இருக்கக்கூடுமான நன்மை அதிக உறுதியாய்க் காப்பாற்றவுந் தின்மை அதிக துரிதமாய்த் திருத்தவும் பரிகரிக்கவும்படும். இதனால் உன் கஸ்தி வருத்தங்களைத் தைரியமாய் அனுபவிக்கப் பலமுண்டாகும். சந்தோஷ ஆறுதல்களை அடக்கமாய்க் கிரமத்தோடு அனுபவிப்பாய். இவர் மட்டில் வெகு சங்கை மரியாதையாயிருந்து உன் நம்பிக்கையெல்லாம் வை. இப்படி இவர்பேரில் உனக்கிருக்கவேண்டிய சங்கையினால் நம்பிக்கை குறையாமலும் நம்பிக்கையினால் சங்கை குறையாமலும் இருக்கவேண்டும். ஒரு குமாரத்தி தன் தகப்பனைச் சங்கிப்பதுபோலவும் ஓர் குமாரன் தன் தாயை நம்புவதுபோலவும் நீ இவர்மட்டில் நடந்துகொள். கடைசியாய் இந்தச் சிநேகம் பலமும் மதுரமும் முழுதும் பரிசுத்தமும் முழுதுந் திவ்வியமும் முழுதும் ஞானமும் ஆனதாயிருக்கவேண்டும்.

இதற்காக ஆயிரத்தில் ஒருவனைத் தெரிந்துகொள்ள அவிலா என்பவர் சொல்லுகிறார். நானோ வென்னில் பதினாயிரத்தில் ஒருவனைத் தெரிந்துகொள்ளச் சொல்லுகிறேன். ஏனெனில் இந்த மேலான அலுவலுக்கான திறமையுள்ளவர்கள் வெகு சொற்பம். ஒரு ஆத்தும குரு பிறர்நேசங் கல்வி விவேகமுள்ளவராயிருக்கவேண்டும். இந்த மூன்றில் ஒன்று குறைந்தால் ஆபத்துக்கிடமாம். ஆனால் நான் உனக்கு இன்னஞ் சொல்வது என்னவெனில், சுவாமிதானே இப்படிப்பட்ட குருவை உனக்குக் கொடுக்கும்படி அவனை மன்றாடிக் கேள். உன் மன்றாட்டை அடைந்தபின் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லு. தேவ ஏவுதலால் நீ ஒருவனைத் தெரிந்துகொண்டவனை விட்டு வேறே பேரைத் தேடாதே.

அவரிடத்தில் கபடற்றவிதமாய்த் தாழ்ச்சியாய் முழு நம்பிக்கையோடு நடந்துகொள். இவ்வழியாய்ச் சிந்தாத்திரையாய் மோட்சராச்சியஞ் சேருவாய் என்பது தப்பாது.

5-ம் அதிகாரம்.

எல்லாத்துக்குமுந்தி ஆத்துமத்தைச் சுத்தப் படுத்த வேண்டியதென்பதின் பேரில்.

புஷ்பங்கள் நமது பூமியிற் புஷ்பிக்கத் துவக்குகின்றன; செடிகளை வெட்டிக் கழிக்குங் காலமாகுதென்று உன்னத கவியில் மணவாளன் சொல்லுகிறான். பிரிய சகோதரமே, நமது இருதயத்திலுள்ள நல்ல ஆசைகளே மேற் சொல்லிய மலர்கள். ஆனால் அதுகள் உண்டான மாத்திரத்தில் அரிவாள் எடுத்து நமது இருதயத்திலுள்ள சாவுக்குரிய வீணான கிரிகைகளை எல்லாம் அறுத்துத் தள்ளவேண்டும். மோயீசனின் முறைமைப்படி ஒரு அந்நிய ஸ்திரீ இஸ்ருயேலித்தான் ஒருவனை விவாகம்பண்ணிக்கொள்ள மனதாயிருந்தால் அடிமையின் வஸ்திரத்தை விட்டு நகங்களை அறுத்தெறிந்து மொட்டையடித்துக் கொள்ளவேண்டியது. இவ்விதமே தேவகுமாரனின் உத்தம பத்தினியாக விரும்பும் ஆத்துமம் பாவத்தை அருவருத்துத் தள்ளிப் பழைய மனிதனை விட்டுப் புது மனிதனாகவேண்டும். தேவசிநேகத்துக்கு இடைஞ்சலாயிருக்கக்கூடுமான வீண் காரியங்களை எல்லாம் விட்டுவிடவேண்டும். இதனால் பாவ வியாதியில் மெலிந்த நமது ஆத்துமம் பாவ இச்

சைகளினின்று நீங்கிச் சவுக்கியம் அடையத் துவக்கும். வேத கல்பனை செய்துவந்த அர்ச். சின்னப்பர் ஒரு நிமிஷத்திற் பூரண சவுக்கியத்தை அடைந்தார். இவரைப்போல மேரி மதலேனம்மாளும் அர்ச். மரியமதலேனம்மாளும் அர்ச். பெலாழியம்மாளும் இன்னஞ் சிலரும் வரம்பெற்றார்கள். ஆனால் மரித்தவனை உயிர்ப்பிப்பது சுபாவ முறையில் அற்புதமாய் இருப்பதுபோல இவ்விதக் குறையற்ற பூரண சௌக்கியம் தேவ அருளின் விசேஷ அற்புதமாம். எல்லோருக்கும் இப்படி சம்பவிப்பதில்லை. சரீரத்திலென்கிலும் ஆத்துமத்திலென்கிலும் சௌக்கியம் கொஞ்சங் கொஞ்சமாய்ப் படிப்படியாய்ப் பிரயாசையோடும் பொறுமையோடும் வரும். இயாக்கோபு என்பவர் கண்ட ஏணியின் பேரில் இருந்த சம்மனசுகளுக்குச் சிறகுகள் இருந்த போதிலும் பறப்பதில்லை. ஆனால் ஒவ்வொரு படியாய்க் கிரமமாய் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருந்தார்கள். இப்படித்தான் பாவத்தை விட்ட ஆத்துமம் பத்தி மார்க்கத்தில் நடக்க வேண்டியிருக்கிறது. விடியற்காலத்தில் திடுக்கென இருள் அகன்று போகாமல் கொஞ்சங் கொஞ்சமாய் மெதுவாய் அகன்றுபோவதுபோல ஆத்துமங் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பாவ இருளை விட்டு ஞானச் சூரியனாகிய சுவாமியை அண்டிப் போகவேண்டும். மேலும் இப்படி மெதுவாய் நடப்பது உத்தமம். ஏனெனில் தேர்ந்த வயித்தியர் சொல்வதுபோல மெதுவாய் ஆகுஞ் சௌக்கியம் எப்போதும் அதிக நிச்சயமானது. பிரிய சகோதரமே, எதாகிலும் ஒரு தின்மை வரும்போது குதிரையைப்போலவேகமாய் வருகிறது வழக்கம். ஆனால் திரும்பிப் போவது அவ்வளவு சுலுவல்ல, ஆமையைப்போல வெகு மெதுவாய்ப்போம். ஆதலால் பத்திக்கடுத்த சீவியத்தில் வர்த்

திக்க வெகு தயிரியம் பொறுமை வேண்டியது. ஆனால் கொஞ்சநாளாய்ப் பத்தியாய்ச் சீவிக்கத் துவக்கினவர்கள் பல குற்றங்களில் விழுவது அதிசயமல்ல, இதினால் இவர்கள் மனங் கலங்கி அவதைரியப்பட்டு எல்லாத்தையும் விட்டுப் பின்வாங்கலாகாது. மெய்யாகவே ஒருவன் மனந்திரும்பினது திரும்பினதற்குள்ளாகத் தன்னிடத்தில் வெகுநாளாய்க் குடிகொண்டிருக்குங் குறைகள் யாவும் போனதுபோலக் குறையற்றவனாக எண்ணிச் சிறகுகளின்றிப் பறக்க ஆசிப்பது எவ்வளவு ஆபத்துக்கேதுவான சோதனை. பிரிய சகோதரமே, வயித்தியனுடைய ஆலோசனைப் பராமரிப்பை விட்டுக் காலத்துக்கு முந்தி நடக்கத் துவக்குகிறவனுக்கு மறுபடி வரக்கூடுமான வியாதி எவ்வளவு அதிக தின்மையாகும். விடியுமுன்னே எழுந்திராதே, சற்று உட்கார்ந்து எழுந்திருவென்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். மேலும் இவர் கற்பிப்பதைத் தாந்தாமே அநுசரித்துக்கொண்டு இவர் பாவத்தினின்று கழுவவுஞ் சுத்தமாக்கவும் பட்டிருந்தபோதிலும் இன்னம் அதிக சுத்தமாக்கப்படவேண்டுமென்று சுவாமியைப்பார்த்துக் கேட்கிறார். நமது மரணபரியந்தம் நமது ஆத்துமத்தை நாளுக்கு நாள் அதிகமாய்ச் சுத்தப்படுத்தவேண்டியிருப்பதால் நமக்கு நேரிடும் பழுது குறைகளைப்பற்றி கலங்கக்கூடாது. ஏனெனில் அதுகளை எதிர்த்துச் சண்டைசெய்வதில் நமது புண்ணியம் அடங்கியிருக்கிறது. அவைகளை அறியாமலும் பாராமலுஞ் சண்டைசெய்து செயம் அடையக்கூடாது. இப்படிப்பட்ட குறைகள் இராமலும் சிலவிசை இவைகள் நமக்கு நேரிடாமலும் இருப்பதில் நமது செயம் அடங்கியில்லை. ஆனால் இதுகளுக்குச் சம்மதியாமலிருப்பதில் அடங்கியிருக்கின்றது.

பலவிதக் குறைசோதனைகளால் அலைக்கழிக்கப்படுவது வேறே அவைகளுக்குச் சம்மதிப்பது வேறே.

நாம் தாழ்ச்சியில் வர்த்திக்க ஞான சண்டையிற் சில விசை காயப்படவேண்டும், ஆனால் நமது ஆத்தும சீவியத்தை என்கிலும் மன தைரியத்தை என்கிலும் இழந்து போகையில்தான் மெய்யான தோர்வைப்படுகிறோம். ஆதலால் சொற்ப குறைகளும் அற்ப பாவங்களும் நமது ஞான சீவியத்தைப் பறிக்க அறியாது ஏனெனிற் சாவானபாவம் ஒன்றே மரணத்தைத் தரும். ஆகையால் நாம் செய்யவேண்டியது: ஒரு நாளுந் தைரியத்தை விடலாகாது. இதனால்தான் தாவீதரசன் சுவாமியைப் பார்த்து ஆண்டவரே அவதைரியத்திலுங் கோழைத்தனத்திலு நின்று என்னை இரட்சியுமென்றார். நாமும் இவரைப்போலச் சொல்லக்கடவோம். இந்தப் போரில் நாம் எந்நாளும் வெற்றியடைய அநுதினஞ் சண்டை செய்யவேண்டுமென்கிற மனதே விசேஷமென்று அறிந்து கொள்வோம்.

6-ம் அதிகாரம்

முதலாவது ஆத்துமஞ் சாவான பாவங்களினின்று விலகியிருக்கவேண்டும் என்பதைக் குறித்து.

எல்லாத்திற்கு முந்தி ஆத்துமம் பாவத்தினின்று சுத்தமாகவேண்டும். இதைப் பச்சாத்தாபம் என்னுந் தேவத்திரவிய அனுமானத்தால் அடைவோம். கூடுமானவரையில் ஓர் உத்தம ஆத்தும குருவைத் தெரிந்துகொள். நல்ல ஆத்துமசோதனைசெய்து பாவசங்கீர்த்தனம் செய்கிறதற்கு உதவியான ஏதாகிலும் ஓர் புத்தகத்தைக் கவனமாய் வாசித்து நீ வினை அறி

ந்தது முதற்கொண்டு இதுவரையில் சுவாமிக்குப் பொருந்தாத என்னென்ன காரியஞ் செய்தாயென்று யோசித்துப்பார். நீ சுளுவாய் மறந்துபோகிறதாயிருந்தால் புத்தியில் வந்ததை ஓர் கடுதாசியிற் குறித்து வைக்கலாம்.

இப்படி உன் மனதிலுள்ள சகல பாவங்களையும் அறிந்தபின் அவைகளையெல்லாம் அருவருத்துத் தள்ளி உன்னால் இயன்ற மாத்திரம் மெய்யான உத்தம மனஸ்தாபப்படக்கடவாய் இதற்கு உதவியாக இந்த நாலு யோசனைகளைச் செய்யலாம். முதலாவது. பாவத்தாற் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தை இழந்தாய். இரண்டாவது. மோட்ச சுதந்தரத்துக்கு அபாத்திரவானானாய். மூன்றாவது. நரக நித்திய ஆக்கினைக்குப் பாத்திரவானானாய். நான்காவது. நித்தியமாய்ச் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்து அவரைச் சிநேகிக்கும் பாக்கியத்தை இழந்தாய்.

பிரிய சகோதரமே, இப்போது பொதுப் பாவசங்கீர்த்தனத்தைக் குறித்துப் பேசுகிறேனென்று கண்டுபிடிக்கிறாய். பொதுப் பாவசங்கீர்த்தனம் எப்போதும் அவசியமென்று நான் சொல்வதில்லை. ஆகிலும் பத்திக்குரிய சீவியத்திற் பிரவேசிப்பவர்களுக்கு இது வெகு பிரயோசனம். நாலு பேரைப்போல உலகத்தில் அசட்டையாய்ச் சீவிப்பவர்கள் செய்யும் பாவசங்கீர்த்தனங்களில் வழக்கமாய்ப் பற்பல பெருங் குறைகளுண்டு. அதற்காக முஸ்திப்பு பண்ணுகிறதில்லை, முஸ்திப்பு செய்தபோதிலும் வேண்டியபடி செய்வதில்லை, வேண்டிய மனஸ்தாபமும் இருப்பதில்லை. பாவத்தை முழுதும் வெறுக்காமலும் பாவத்துக்கடுத்த சமயங்களை விலக்காமலுந் தங்கள் நடக்கையை மாற்றுவதற்கு அவசியமான வழிப்பாடுகளைந் தேடாமலும் பாவசங்கீர்த்தனஞ் செய்வார்கள். இப்பேர்க்கொத்தவர்கள் தங்கள் இரக்ஷ

க்ஷணியத்தை உறுதியாய் அடையப் பொதுப்பாவ சங்கீர்த்தனஞ் செய்வது வெகு அவசியம். இன்னம் இதினால் வெகு நன்மை உண்டாம். நம்மைத்தாமே நாம் நன்றாய் அறிந்துகொள்வோம். நமது பாவங்களின்பேரில் நல்ல மனஸ்தாபப்படுவோம். அத்தியந்த தயை பொறுமையோடு நமக்காகக் காத்துக்கொண்டிருந்த சர்வேசுரனுடைய தயையைக் கண்டு அதிசயப்படுவோம். இதினால் நமது இருதயத்தில் அம்ரிக்கையும் புத்தியில் இளைப்பாற்றியும் உண்டாம். ஸ்திரமான நல்ல பிரதிக்கினைகளைச் செய்வோம். நமது ஆத்தும குருவானவர் நமது அந்தஸ்துக்குத் தக்க ஆலோசனைகளைக் கொடுக்க நல்ல வழியாகும். கடைசியாய் அதிக பிரமாணிக்க நம்பிக்கையோடு பாவசங்கீர்த்தனஞ் செய்கிற வழக்கமும் உண்டாம்.

இதனால் நமது ஆத்துமம் முழுதும் புதிதாகிச் சர்வேசுரனை நோக்கி முழுதுந் திரும்பவேண்டியிருப்பதால், பிரிய சகோதரமே, நீ பொதுப் பாவசங்கீர்த்தனம் பண்ண அகத்தியம் உனக்கு ஆலோசனை கொடுப்பது சரி என்று நினைக்கிறேன்.

7-ம் அதிகாரம்

இரண்டாவது. மெய்யான பத்தியை நாடும் ஆத்துமம் பாவப்பற்றுதலை விட்டு அகன்றிருக்கவேண்டும்.

இஸ்ராயேலித்தார்கள் எல்லோரும் எஜிப்து நாட்டைவிட்டுப் புறப்பட்டார்கள். ஆனால் எல்லோரும் அதின்மட்டில் உண்டான பற்றுதல் பிரியத்தை

விட்டுவிட்டவர்களல்ல. இதினுல்தான் அவர்களுக்குள் அநேகர் வனுந்தரத்தில் எஜிப்து நாட்டு வெங்காயம் இறைச்சியையே நினைத்து விதனப்பட்டார்கள். இவ்விதம் பாவிகளில் அநேகர் மெய்யாகவே பாவத்தை விட்டபோதிலும் பாவப் பற்றுதலே விடுகிறதில்லே. இனி பாவத்தைச் செய்வதில்லே என்கிற கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறுர்கள். ஆனுல் பாவ இச்சைகளே அவ்வளவு மனப் பூர்த்தியாய்த் தள்ளுகிறதில்லே. அவர்களுடைய இருதயம் இவைகளே அருவருத்து எட்டி நின்றபோதிலுஞ் சொதோம் பட்டணத்தைத் திரும்பிப் பார்த்த லோத் என்பவருடைய பெண்சாதியைப்போற் பலமுறை இந்த லௌகீக இன்பத்தை நாடிப்போகும். வெள்ளரிக்காய் முதலிய குளிர்ச்சியான பண்டங்களே வியாதிக்காரர் விலகித் தள்ளுவதுபோல் இவர்கள் பாவத்தை விட்டு விலகி நிற்பார்கள். இவைகளேச் சாப்பட்டால் சாவு வருமென்று வயித்தியன் மிரட்டுகிறபடியினுல்மாத்திரம் இவர்கள் சாப்படுகிறதில்லே. ஆனுல் இவைகளே ஆசித்து எப்போது சாப்படுவோமோ என்று வெகு ஆவலாய்க் காத்துக்கொண்டு வயித்தியன் வெகு கண்டிப்புள்ளவன் என்று முறைப்பாடிட்டுச் சௌக்கியமாயிருந்து அதைச் சாப்பிடுகிறவர்கள் வெகு அதிஷ்டமுள்ளவர்களென்று நினைப்பார்கள். இத்தன்மையாகவே கோழைத்தன்முடைய பலவீனரான இந்தப் பழைய பாவிகள் சிலகாலம் பாவத்தை ஒருவித விசனத்தோடு விட்டிருப்பார்கள். நரகத்துக்குப் போகாமற் பாவத்தைச் செய்யக்கூடுமானுல் நல்லதென்று நினைப்பார்கள். பாவத்தைக் குறித்துப் பிரியத்தோடு பேசிப் பாவத்தைக் கட்டிக்கொள்பவர்களேப் பாக்கியவான்களாக எண்ணுவார்கள். பழிவாங்கத் தீர்மானித்திருப்பவனுடைய மனசு அவன் பாவசங்கீர்த்தனம் பண்ணப்போகும்

போது மாறிப்போம். ஆனால் கொஞ்சத்துக்குப் பிற்கு தன் சிநேகிதரோடு கூடிக்கொண்டு தனக்குச் செய்யப்பட்ட நிந்தனையைக் குறித்து வெகுவாய்ப் பதறிப்பேசிச் சுவாமி ஒருவர் இல்லாவிட்டால் இந்நேரம் அவனை என்ன செய்திடுவேன். சுவாமியுடைய கற்பனை மெய்யாகவே கடினம்; என்னமாய்ப் பொறுக்கிறது; பழிவாங்கச் சுவாமி உத்தரவுகொடுக்கமாட்டாரா என்று சலியாமற் பேசிவருவான்.

ஆ, இந்த மதியீனன் பாவத்தைவிட்டு இடைந்து நின்றபோதிலும் பாவ இச்சையில் முழுதும் அமிழ்ந்திக் கிடக்கிறான். எஜிப்து நாட்டை விட்டுவிட்டு எட்டிப்போய் இருந்தபோதிலும் அதில் சாப்பட்டு வந்த வெங்காயங்களை நினைத்து விதனப்படுவதால் இன்னம் தன்னிச்சையினால் அந்தத் தேசத்தைவிடாமல் அதை எப்போதும் நேசிக்கிறவன்போல் இவன் இருக்கிறானென்று சொல்லவேண்டுமல்லோ. இன்னம் அவன் நடக்கை எதுக்கொத்ததென்றால் ஒரு பெண்பிள்ளை தன் கெட்ட நடத்தையை அருவருத்துவிட்டபின் இன்னம் நாலுபேரால் நேசிக்கவுந் தேடவும்பட ஆசிப்பதற்கு ஒத்ததாம். ஐயையோ, இப்படிப்பட்ட மனிதர்கள் இரட்சண்ணிய வழியை விட்டுச் சேதமாவதற்கு எவ்வளவு ஆபத்தான வழியிலிருக்கிறார்கள்.

ஆ, பிரிய சகோதரமே, நீ பத்தியுள்ளவனாயிருக்க ஆசித்தாற் பாவத்தை விட்டுவிடுவது பற்றாது. ஆனால் இன்னும் உன்னிருதயத்தில் அற்பமென்கிலும் பாவப் பற்றுதல் இருக்கலாகாது. ஏனெனில் இந்த நீசச் சண்டாள பற்றுதல்கள் பாவத்துக்கு வழியாய் இருப்பதுமன்றி இவைகளாற் புத்தி மங்கி மந்தமாய்ப்போம். இதனால் மெய்யான பத்தியின் விசேஷ குணமாகிய சுறுசுறுப்பு நிலைமைப் பற்றுதலோடு நற்கிருத்தியங்களை இனி செய்யத் திராணி யிராது.

பாவத்தை விட்டபோதிலும் இன்னம் அதின் இச்சைகளையும் பிரியங்களையும் விட்டுவிடாதவர்கள் வியாதி தீர்ந்தும் நல்ல இரத்தமிராதவர்களுக்கு ஒத்தவர்களாம். இவர்கள் மெய்யாகவே வியாதியாய் இருக்கிறதில்லை. ஆனால் இவர்கள் கிரிகைகளெல்லாம் வியாதிக் குறியைக் காட்டும். பிரியமின்றிச் சாப்படுவார்கள், அமரிக்கையாய் நித்திரை செய்யார்கள், சிரித்தாலுஞ் சந்தோஷமின்றிச் சிரிப்பார்கள். இவர்கள் எவ்வளவு அசதியாய் நடப்பார்கள் என்றால் நடந்தாலும் நடக்கவில்லை என வேண்டும். இப்படியே மேற்சொல்லிய ஆத்துமங்களின் ஞான பலவீனம் அசமந்தத்தனம் எப்படிப்பட்டதென்றால் இவர்கள் செய்யுஞ் சொற்ப நற்கிருத்தியங்களும் பலனற்றதே.

8-ம் அதிகாரம்.

பாவப்பற்றுதலைச் செயிப்பதற்கான வழிப்பாடு.

பாவப்பற்றுதலைத் தள்ளுவதற்குப் பாவத்தினால் வருங் கேட்டை நன்றாயோசித்து நல்ல மனஸ்தாபப் படவேண்டும். ஏனெனில் நமது மனஸ்தாபம் எவ்வளவு சொற்பமாயிருந்தபோதிலும் உண்மையானதானால் பச்சாத்தாப தேவத்திரவிய அனுமானத்தால் விசேஷமாய் நாம் பாவத்தினின்று பரிசுத்தர்களாகப் போதும். இந்த மனஸ்தாபம் உத்தம மனஸ்தாபமாயிருந்தால் பாவப் பற்றுதல்களையெல்லாம் இருதயத்தினின்று தள்ளச் சத்துவமுள்ளதாயிருக்கும். நமக்குப் பிரியமில்லாதவர்கள்பேரில் நமக்கு அருவருப்பு

வருவிக்கச் சொற்ப முகாந்தரம் போதும். இதினால் இவர்களோடு கலந்து பேசப் புழங்க மனது வராது. இன்னம் ஒருவன்மட்டில் மூர்க்கமான பகை வர்மமிருந்தால் அவனைக் கண்டாலும் பாராமற் பாம்பைப் போல் எட்டிப்போவதுமன்றி அவனுடைய உற்றார் பெற்றார் சிநேகிதர்களையும் அருவருத்து அவனுடைய படத்தையும் அவனுக்குச் சொந்தமான எதுகாரியத்தையும் பிரியமாய்ப் பார்க்கிறதில்லை. இவ்வாறே ஒருவனுக்கும் பாவத்தின் மட்டில் மெய்யான மனஸ்தாபமிருந்தாலும் இந்த மனஸ்தாபம் பலமானதாய் உத்தமமானதாய் இராவிட்டால் இனி பாவஞ் செய்யக் கூடாதென்கிற மனதுமாத்திரம் இருக்கும். இதற்கு விரோதமாய் இவன் இருதயத்திற் பலமான உத்தம மனஸ்தாபம் இருக்குமேயாகில் பாவத்தையும் பாவ இச்சைகளையும் பாவத்துக்கேதுவான சகல காரியங்களையும் வெறுத்துத் தள்ளுவான். ஆதலால் பிரிய சகோதரமே, பாவத்துக்கேதுவான அற்ப சமயத்தின்மட்டில் முதலாய் நமக்கு மெய்யான வெறுப்பு இருக்க நம்மால் இயன்ற மாத்திரம் நமது இருதயத்தில் உறுதியான உத்தம மனஸ்தாபம் உண்டாகப் பிரயாசப்படவேண்டும். மரியமதலேனம்மாள் மனந்திரும்பிய பின் இவளிடத்தில் எப்படிப்பட்ட உத்தம மனஸ்தாபம் இருந்ததென்றால் தன் பாவங்களின் மட்டில் அற்ப பற்றுதலும் அற்றவளாய் இருந்ததன்றி பரிச்சேதம் அதைக்குறித்து நினைத்தவள் முதலாயல்ல. தாவீதென்பவர் பாவத்தையும் பாவத்துக்குக் கூட்டிக்கொண்டு போகும் பெரும் பாதைகளையும் இடுமுடுக்கு வழிகளையும் பகைத்துவந்ததாக வெகு உறுதியாய்ப் பிரசித்தப்படுத்துகிறார். ஆத்துமத்தின் இந்தப் புது பிறப்பை அல்லது புது சீவியத்தைத்தான் மேற்சொல்லிய தீர்க்கதரிசி பழைய சிறகுகளை விட்டுத் தூய மெல்லிய சிறகு

களோடு காணப்படும் அண்டரண்ட பட்சிக்கு இணையிடுகிறார்.

ஆதலால் இந்த உத்தமமனஸ்தாபம் உன்னிடத்தில் உண்டாகப் பின்னால் வருந் தியானங்களைத் தியானி. சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தால் இந்தத் தியானங்கள் வழியாய் உன்னிருதயத்திலுள்ள பாவத்தின் பிரதான பற்றுதல்கள் அகன்றுபோம். இதற்காகவே வேண்டுமென்று இந்தத் தியானங்கள் இங்கே சேர்த்து எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருக்கும் வரிசைப்பிரகாரம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நாள்தோறும் ஒருவிசை காலையில் தியானிக்கக்கடவாய். காலைநேரந்தான் தியானஞ் செய்வதற்கு விசேஷமாய்த் தகுந்த நேரம். இதற்குப் பின் உன் அலுவல்களைப் பார்த்துக்கொண்டு கூடுமானவரையில் காலையில் செய்த தியானத்தின்பேரில் சிந்தையாயிரு. இன்னந் தியானஞ் செய்வதற்கான திறமை உன்னிடத்தில் இல்லாவிட்டால் இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் இதைக்குறித்து விரிவாய்ப் பேசியிருக்கின்றமையால் அதை நன்றாய் வாசித்துப்பார்த்து அறிந்துகொள்.

9-ம் அதிகாரம்.

முதல் தியானம். — சிஷ்டிப்பைக் குறித்து.

ஆயத்த ஆரம்பம்.

1-வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதை நினைத்துக்கொள்.

2-வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1-வது. உலகம் உண்டான இத்தனை வருஷ காலம் நீ எங்கேயிருந்தாய்? என்னமாயிருந்தாய்? உன்னைக்குறித்துப் பேசினவர்கள் நினைத்தவர்களார்? ஆகிலும் உலகம் இருந்தது, நீ இருந்தது எங்கே? ஒன்றுமில்லாமையாயிருந்தாய்.

2-வது. சுவாமி ஒன்றுமில்லாமையினின்று உன்னைச் சிஷ்டித்தார். ஏன் உன்னைச் சிஷ்டித்தார்? உன்னால் அவருக்கு வரவேண்டியதென்ன? உன்னைப் படைத்ததற்கு அவருடைய விசேஷ தயவல்லவோ காரணம்.

3-வது. சர்வேசுரன் உன்னைச் சிஷ்டித்து வைத்திருக்கும் அந்தஸ்தைத் யோசித்துப்பார். காணப்படும் இவ்வுலகில் சர்வேசுரனால் சிஷ்டிக்கப்பட்டிருக்குஞ் சகல வஸ்துகளுக்கெல்லாம் நீ மேலானவனாகவும், நேத்திபானவனாகவும் இருக்கிறாய். நித்தியமாய்ச் ஜீவித்துச் சர்வேசுரனோடே ஏக ஐக்கியமாய்ச் சேருவதற்கு நீ குறிக்கப்பட்டவன்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரகரணங்கள்

1-வது. சுவாமிக்கு முன்பாக உன்னை மிகவுந் தாழ்த்தித் தீர்க்கதரிசியைப்போல உன் முழு இருதயத்

துடன் சொல்லுவாய். ஆ, என்னுண்டவரே, ஒன்று மில்லாத என்னை நீர் நினைத்துச் சிஷ்டித்த காரணம் என்ன? ஆ, என் ஆத்துமமே, சுவாமி உன்னைச் சிஷ்டித்திராவிட்டால் இந்நேரம் எங்கே இருப்பாய்? சுவாமி உன்பேரில் இந்த அளவறுக்கப்படாத தயையைக் கொண்டிராவிட்டால் நீ என்னமாய்ப் போவாய்?

2-வது. சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாயாக.— என் நல்ல சிஷ்டகரான கர்த்தாவே, உமது மட்டற்ற தயவால் ஒன்றுமில்லாமையினின்று என்னைச் சிஷ்டித்ததற்கு நான் எவ்வளவோ உமக்கு நன்றியறிந்தவனாயிருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் உமது திருநாமத்தைத் தகுந்தவிதமாய்க் கொண்டாடி உமது அளவற்ற தயாளத்துக்கு எவ்வித நன்றி காட்டப்போகிறேன்.

3-வது. உன் நீசத்தனத்தைக் கண்டு வெட்கப்படுவாயாக.—ஆனால் என் சிஷ்டகராகிய கர்த்தாவே, என் நற்கிருத்தியங்களால் உம்மோடு ஐக்கியமாயிருப்பதற்குப் பதிலாய் என் ஆகாத இச்சைகளால் உமக்கு எதிர்த்து நின்றேன். பாவத்தைச் செய்வதற்கு உம்மை விட்டு இடைந்துபோனேன். நீர் என் சிஷ்டகர் அல்லாததுபோல் உம்மையும் உமது தயாளத்தையும் அறியாமற் போனேன்.

4-வது. சுவாமிக்குமுன் உன்னைத் தாழ்த்துவாயாக.— ஆ, என் ஆத்துமமே! ஆண்டவர் உன் தேவனென்று நினைத்துக்கொள். இவர்தான் உன்னைச் சிஷ்டித்தவர். நீதானே உன்னைப் படைத்துக்கொண்டதில்லை. ஆ, என் தேவனே! நான் உமது கைத்தொழிலாமே.

5-வது. ஆதலால் ஒன்றுமில்லாமையாகிய நானே என்பேரிற் பிரியங்கொள்வது என்ன அநியாயம்? சாம்பலுந் தூசியுமாகிய நீ உன்னைத்தானே பெருமை

பாராட்டிக்கொள்வதென்ன? ஒன்றுமில்லாமையாகிய நீ அகங்கரிக்கவேண்டியதென்ன? மெய்யாகவே இனி என்னைத்தானே தாழ்த்தி இன்னின்ன காரியத்தைச் செய்து இன்னின்ன நிந்தையை நல்ல மனதோடு சகிப்பேன். என் நடத்தையை மாற்றிப் பிரமாணிக்கமாய் என் சிஷ்டகரைப் பின்சென்று அவர் எனக்கு அளித்திருக்கும்மேலான அந்தஸ்திற்கு ஒத்தபடி நடந்து என் மனதை அவருடைய திருச்சித்தத்துக்கு முழுதும் பலியாக ஒப்புக்கொடுப்பேன். இதற்காக என் ஆத்தும குருவானவரிடத்தில்போய் வேண்டிய காரியங்களை எல்லாங் கேட்டு அவர் சொற்படி நடந்துகொள்வேன்.

தியான முடிவு
1–வது நன்றியறிந்த தோத்திரப் பிரகரணம்.

ஆ, என் ஆத்துமமே! உன் ஆண்டவனைப் புகழ்ந்து உன்னில் உள்ளதெல்லாம் அவருடைய அர்ச்சியசிஷ்ட நாமத்தைத் துதிக்கக்கடவது. ஏனெனில் அவருடைய கிருபையானது உன்னை ஒன்றுமில்லாமையினின்று எடுத்து அவருடைய தயாளம் உன்னைச் சிஷ்டித்தது.

2–வது கர்ணிக்கைப் பிரகரணம்.

ஆ, சுவாமீ, நீர் எனக்குத் தந்த யாவற்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். என் இருதயத்தையும் என்னை முழுதும் உமக்கு வசீகிர்தம்பண்ணுகிறேன்.

3–வது மன்றாட்டுப் பிரகரணம்.

ஆ சுவாமீ, என் ஆசைகளையும் பிரதிக்கினைகளையும் உறுதிப்படுத்தியருளும். அர்ச். கன்னிகையே இந்தப் பிரதிக்கினைகளை உமது திருக்குமாரன் ஆசிர்வதிக்கச்

செய்தருளும். இன்னம் நான் ஆராருக்காக வேண்டிக் கொள்ளவேண்டுமோ அவர்கள்பேரில் இரக்கமாயிரும்.—பரமண்டலமந்திரம் பிரியதத்தமந்திரம் வேண்டிக்கொள்க.

தியானத்துக்குப்பின்.

தியானத்தின்போது மனதில் அதிக பலமாய் உறுத்தின இரண்டொருயோசனையை ஓர் ஞான புஷ்பச் செண்டைப்போல் தெரிந்துகொண்டு அன்றையத் தினத்தில் அடிக்கடி நினைக்கக்கடவாய்.

10-ம் அதிகாரம்.

இரண்டாந் தியானம்,

நாம் எதுக்காகச் சிஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்கிற நமது கதியைக்குறித்து.

ஆயத்த ஆரம்பம்.

1-வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்திலிருப்பதை நினைத்துக்கொள்.

2-வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1வது. சுவாமி உன்னை இவ்வுலகில் வைத்தது நீ அவருக்கு வேண்டியிருந்து அல்ல. ஏனெனில் ஒன்றுங் குறையிராத அவருக்கு நீ எவ்வளவேனும் அவசரமாயிருந்ததில்லை. ஆனால் தமது வரப்பிரசாத மகிமையை உனக்கு அளித்ததினால் தமது தயாளத்தைமாத்திரங் காட்ட மனதானார். ஆதலால் அவனா

நீ அறிவதற்கு அறிவையும் அவர் மட்டில் சிந்தையாயிருப்பதற்கு ஞாபகத்தையும் அவரை நேசிப்பதற்கு மனதையும் அவருடைய உபகார சகாயங்களைக் கண்டு உணர்வதற்குப் புத்தித் தேர்ச்சியையும் அவர் சிஷ்டித்த நவமான காரியங்களைப் பார்ப்பதற்குக் கண்களையும் அவரைப் புகழ்வதற்கு நாவையும் இன்னம் மற்றச் சத்துவங்களையும் உனக்குக்கொடுத்தார்.

2-வது. இந்தக் கருத்தோடு நீ சிஷ்டிக்கப்பட்டு உலகில் வைக்கப்பட்டிருப்பதால் இதற்கு ஒவ்வாத எந்தக் கிரியையும் மகா சாக்கிரதையோடு விலக்கித் தள்ளவேண்டும். இந்தக் கருத்துக்கு உபயோகமாயிராத காரியங்களைப் பிரயோசனமற்ற வீணன காரியங்கள் என்று வெறுத்துத் தள்ளவேண்டும்.

3-வது இதை நினையாமல் அரமனை மாளிகைகளைக் கட்டவுந் தோட்டந் துரவுகளை உண்டாக்கவும் ஆஸ்திபாஸ்திகளைச் சம்பாதித்து வீண் விளையாட்டுகளை விளையாடவும் இவ்வுலகிற் பிறந்திருப்பதுபோல் எண்ணி நடக்கும் இத்தனை ஆயிரம் பேருடைய நிர்ப்பாக்கியத்தின்மேரில் யோசனைசெய்துபார்.

சிநேகப்பிரதிக்கினைப் பிரகரணம்.

1-வது. இதுவரையில் இதை அற்பமாய் எண்ணினாய். சிலவிசை ஒருநாளும் இதை நினைத்ததேயில்லை. ஆகையால் இந்த மதியீனத்தின்மட்டில் வெட்கப்படுவாயாக. ஐயையோ சுவாமீ, நான் உம்மை நினையாமலுஞ் சிநேகியாமலும், இத்தனை காலம் மறந்திருக்கையில் என் புத்தி நினைவு மனது என்னத்துக்கு உதவிற்று. ஐயையோ! நான் உண்மையைப் பொசித்துச் சீவிக்க வேண்டியிருக்கையில் விழலான வீண் கவலைகளில் உழன்று அலைந்தேன். எனக்கு அமைந்து பணிவிடை செய்வதற்காகச் சிஷ்டிக்கப்

பட்ட உலகத்தைச் சேவித்தேன்; ஆ! இதென்ன மதிகேடு.

2-வது. உன் பழைய நடக்கையை அருவருத்துத் தள்ளுவாயாக.— பிரயோசனமற்ற விழலான வீண் எண்ணங்களெல்லாம் என்னை விட்டு அகன்றுபோகக்கடவது. கெட்ட வீண்சிந்தனைகளெல்லாம் அருவருத்துத் தள்ளுகிறேன், சதிமான அபத்தச் சிநேகிதப் பற்றுதல்களெல்லாம் இக்ஷணமே என் இருதயத்தினின்று பிடுங்கி எறிந்துவிடுகிறேன். ஐயையோ நான் இதுவரையில் வீணாய்ப் பட்ட பிரயாசம் எத்தனை. குருட்டாட்டமாய்க் காட்டிய வதிற்பட்ச மூகத்தாட்சணை எத்தனை.

3-வது சுவாமியிடத்தில் திரும்புவாயாக.

ஆ! என் தேவனே, என் இரட்சகரோ, நீரோ இனி என் சிந்தையின் ஏக வஸ்துவாயிருப்பீர். என் புத்தி உமக்கு அருவருப்பான காரியம் ஒன்றையும் நினையாது. என் ஞாபகமோ நீர் இதுவரையில் என் மீது வைத்த அணைகடந்த தயாளப் பெருக்கத்தை அநுதினம் ஞாபகப்படுத்திக்கொள்ளும். நீர் என்னிருதய இன்பமுமாய் என் சீவியத்தின் செல்வபாக்கியமுமாயிருப்பீர்,

நான் இதுவரையில் கவனித்திருந்த இன்னின்ன விளையாட்டுகளையும் வீணில் காலத்தைப் போக்கி நான் செய்துவந்த இன்னின்ன வீண் காரியங்களையும் என் இருதயத்தை மயக்கிப் பிடித்துக்கொண்டிருந்த இன்னின்ன சிநேகப் பற்றுதல்களையும் மெய்யாகவே விட்டுவிடுகிறேன். இனி இவைகளெல்லாம் எனக்கு அருவருப்பாயிருக்கும். இந்தப் பிரதிக்கினையில் உறுதியாயிருக்க இன்னின்ன வழிப்பாடுகளை அநுசரித்து வருவேன்.

தியான முடிவு.

1-வது. நன்றியறிந்த பிரகரணம்.

இவ்வளவு மேலான அந்தஸ்துக்காக என்னைச் சிஷ்டித்த என் பரம கர்த்தரே உமக்கே நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறேன். ஆண்டவரே நித்தியமாய் நான் உமது முட்டற்ற மகிமைப் பாக்கியத்தை அநுபவிக்கும்படி உமக்காகவே நீர் என்னைச் சிஷ்டித்தருளினீரே. இந்தப் பாக்கியத்துக்கு நான் பாத்திரவாளாவது எப்போ? வேண்டியபடி நான் உம்மை ஸ்துதிப்பது எக்காலம்?

2வது. காணிக்கைப் பிரகரணம்.

என் அன்புக்குரிய சிஷ்டகரே, நீர் எனக்கு வருத்துவித்த இந்தச் சிநேக முயற்சிகளையும் நல்ல பிரதிக்கினைகளையுந்தானே உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இன்னம் என் ஆத்துமத்தையும் இருதயத்தையும் முழுதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

3-வது. மன்றாட்டுப் பிரகரணம்.

என் சர்வேசுராசுவாமீ, என் காணிக்கை ஆசைகளைப் பிரியமாய் ஏற்றுக்கொண்டு என் ஆத்துமத்தை ஆசீர்வதித்து உமது திருக்குமாரன் சிலுவையில் சிந்திய இரத்தப் பலன்களைப் பார்த்து எனக்கு வேண்டிய தைரியத்தைக் கொடுக்கும்படி உம்மை இரந்து மன்றாடுகிறேன்.

ஞானச் செண்டு கட்டிக்கொள்வாய்.

—*—

11-ம் அதிகாரம்

மூன்றாந்தியானம்.

சர்வேசுரனுடைய உபகார சகாயங்களின் பேரில்.

—※—

ஆயத்த ஆரம்பம்.

1-வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதை நினைத்துக்கொள்.

2-வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1-வது. சுவாமி உன் சரீரத்துக்குச் செய்த உபகாரங்களை யோசித்துப்பார். உனக்கு எவ்வளவு நேத்தியான சரீரத்தைக் கொடுத்தார். அதின் சவரட்சணைக்கு எவ்வளவு சுளுவான வழி காட்டியிருக்கிறார். அதற்கு எப்படிப்பட்ட சவுக்கியத்தையுஞ் சந்தோஷ ஆறுதல்களையுங் கொடுத்திருக்கிறார். அதற்கு உதவியாகச் சிநேகிதர் துணையாளிகள் எத்தனை? ஆகிலும் உன்னிலும் அதிக நல்லவர்களாகிய அநேகருக்கு இப்படிக்கொத்த சகாயங்களைச் செய்ததில்லை. சிலர் அங்கவிகாரமுள்ளவர்கள், பிணியாளிகள், நொண்டி சப்பாணிகள். சிலர் அபகீர்த்தி அவமான நிந்தைகளுக்குள்ளானவர்கள். வேறு சிலர் தாரித்திர வறுமையினால் வெகு சங்கடப்படுகிறவர்கள். ஆனால் உன்னைச் சுவாமி இப்பேர்க்கொத்த நிர்ப்பந்தத்தில் வைக்கவில்லை.

2-வது. சுவாமி உன் புத்திக்குக் கொடுத்த வரங்களை யோசித்துப்பார். அறிவீனரான பேதை மூடர்கள் உலகில் எத்தனையோபேர் உண்டு; அவர்களில் நீயும் ஒருவனாய் இராமலிருப்பதென்ன? சர்வேசுர

னுடைய விசேஷ தயவல்லவோ? இன்னம் மிருகங்களைப்போல் வளர்ந்து அறியாமையில் அமிழ்ந்தியிருப்பவர்கள் எத்தனையோ பேர். ஆனால் தேவசெயலால் நீ பராமரிக்கப்பட்டுச் சீர்திருத்தப்பட்டு இருக்கிறாய்.

3-வது. சுவாமி உனக்கு அளித்த ஞான வரங்களை யோசித்துப்பார். ஆ! பிரிய சகோதரமே, நீ திருச்சபையின் பிள்ளை. சிறுபத்தில்தானே நீ சுவாமியை அறியும்படி அவருக்குச் சித்தமாயிற்று. சர்வேசுரன் உனக்கு எத்தனையோமுறை தமது தேவத்திரவிய அநுமானங்களையுந் தேவ ஏவுதல்களையும் உன் இருதயத்தில் ஞான வெளிச்சங்களையுங் கொடுத்து நீ மெய்யாகவே மனந் திரும்புதற்கு உன் மனதைத் தட்டிப்பேசினார். எத்தனையோமுறை உன் தப்பிதங்களைப் பொறுத்தார், உன் மனவுச்சாயமாய்ப் பாவச் சமயங்களில் அகப்பட்டுச் சாகக் கிடக்கையில் எத்தனையோவிசை அந்த ஆபத்துகளில் நின்று உன்னைக் காத்திரட்சித்தார். உன் ஆத்தும இரட்சண்ணியத்தை ஸ்திரப்படுத்தவல்லோ சர்வேசுரன் இத்தனை வருஷகாலம் நீ சீவித்துப் பிழைத்திருக்கச் செய்தார். இந்த அநுக்கிரகங்களையெல்லாம் ஒன்றொன்றாய்ச் சிந்தித்துச் சர்வேசுரன் உன்பேரில் எவ்வளவு பேருபகாரியாயிருந்தார் என்று பார்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரக்கரணம்.

1-வது. சர்வேசுரனுடைய தயையைக் கண்டு அதிசயப்படக்கடவோம்.

ஆ என்பேரிற் சர்வேசுரன் எவ்வளவு நன்மை கூர்ந்தவராயிருக்கிறார். ஆ சுவாமி! நீர் எவ்வளவு நல்லவர், உமது இருதயம் எவ்வளவு தயாள இரக்கமுள்ளது. ஆ என் ஆத்துமமே சர்வேசுரன் நமக்கு

அளித்த உபகார சகாயங்களை எந்நாளும் புகழ்ந்து கொண்டாடக்கடவோம்.

2-வது. உன் நன்றிகெட்ட தனத்தின்பேரில் அதிசயப்படுவாயாக. — ஆனால் ஆண்டவரோ, தேவரீர் ஆர், நானார், என்னை நீர் இவ்வளவு நினைத்ததென்ன? ஆ! என் நீசத்தனம் எப்போர்க்கொத்தது. ஐயையோ உமது உபகாரங்களைக் காலால் உதைத்து மிதித்த பாவி நானே. உமது அத்தியந்த தயாளத்தைச் சட்டைபண்ணாமல் உமது வரப்பிரசாதங்களை நிந்தித்துத் தள்ளின துரோகி நானே. உமது அளவற்ற தயாள உபகாரங்களுக்கு மட்டற்ற நன்றிகெட்ட மனங் காண்பித்த பெரும்பாவி நானே.

3-வது. நன்றியறிந்த பிரகாரணஞ் செய்வாயாக. — ஆ என் ஆத்துமமே, உனக்கு இவ்வளவு நன்மை செய்த பரமகர்த்தர்பேரில் இனி அவவிசுவாசியுமாய் நன்றியறியாததுமாயிராதே. என்னிடத்திலும் எனக்காகவும் இவ்வளவு வரப்பிரசாதங்களையும் நவமான காரியங்களையுஞ் செய்த சர்வேசுரனுக்கு இனி என் ஆத்துமங் கீழ்ப்படிந்திராமலிருக்கக் கூடுமோ.

4-வது. ஆ! பிரிய சகோதரமே, தைரியமாயிருந்து இன்னின்ன சரீரவின்பங்களை விலக்கிவிடு. உன் சரீரத்துக்காக இவ்வளவெல்லாஞ் செய்த சர்வேசுரனுடைய ஊழியத்துக்கு உன் சரீரத்தைக் கீழ்ப்படுத்து. உன் ஆத்துமம் அவரை அறிந்தும்மேன்மேலும் அவரைச் சிநேகிக்கப் பிரயாசப்படு. கடைசியாய் நீ இரட்சண்ணியம் அடையவுஞ் சர்வேசுரனை ஸ்துதிக்கவுந் திருச்சபையிலுள்ள தேவத்திரவிய அநுமான முதலிய ஒத்தாசைகளையெல்லாம் ஏராளமாய்ப் பிரயோகித்துக்கொண்டுவா. மெய்யாகவே சுவாமீ! இனி நாடோறுந் தியானஞ்செய்து அடிக்கடி தேவ திரவிய அநுமானங்களைப் பெறுவேன். ஞானபோதகங்களையும் வாசகங்களையுங் கேட்டுத் தேவ ஏவுதல்களை

யும் ஆலோசனைகளையும் பிரமாணிக்கமாய்ப் பின்சென்று நடப்பேன்.

தியானமுடிவு.

1-வது நன்றியறிந்த பிரகாரணம்.

சுவாமி உனக்கு அளித்த உபகார சகாயங்கள் ஏதென்றும் அதனால் உனக்கு உண்டான கடமை ஏதென்றும் நீ அறிந்துகொண்டதற்காகச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வாய்.

2வது காணிக்கைப் பிரகாரணம்.

உன் நல்ல பிரதிக்கினைகளோடு உன் இருதயத்தைச் சுவாமிக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

3-வது மன்றாட்டுப் பிரகாரணம்.

உன் பிரதிக்கினைகளைப் பிரமாணிக்கமாய் நீ அநுசரிப்பதற்குச் சேசுகிறீஸ்து நாதருடைய மரணப் பேறுபலன்களைப் பார்த்து உனக்கு வேண்டிய பலனைக் கொடுக்கும்படி பிரார்த்தித்துக்கொள். தேவமாதாவையும் அர்ச்சியசிஷ்டவர்களையும் மன்றாடிக் கேள். பர-பிரி.

ஞானச்செண்டு கட்டிக்கொள்வாய்.

12-ம் அதிகாரம்.

காலாங் தியானம்.

பாவத்தின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1–வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதை நினைத்துக்கொள்.

2–வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1–வது. நீ பாவத்தைக் கட்டிக்கொள்ளத் துவக்கி எத்தனை காலமானதென்றும் அதுமுதல் உன் இருதயத்தில் விளைந்த பாவங்கள் எத்தனை என்றும் யோசித்துப்பார். சுவாமிக்கு விரோதமாகவும் புறத்தியாருக்கு விரோதமாகவும் உனக்குத்தானே விரோதமாகவுங் கிரிகையினாலும் வார்த்தையினாலும் ஆசையினாலும் நினைவினாலும் நீ கட்டிக்கொண்ட பாவங்கள் நாளுக்கு நாள் எவ்வளவு அதிகரித்துப்போனதென்று பார்.

2–வது. உன் கெட்ட மனச்சார்பு ஏதென்றும் அதை நீ எப்படிப் பின்சென்று நடந்தாய் என்றும் யோசித்துப்பார். இதினால் உன் பாவங்கள் உன் தலைமயிர்களிலுங் கடற்கரை மணற்களிலும் அதிகமாயிருக்கிறதென்று நிச்சயமாய் அறிந்துகொள்வாய்.

3–வது. விசேஷமாய் நீ சர்வேசுரன் மட்டில் கட்டிக்கொண்ட நன்றியறியாமை என்னும் பாவத்தை யோசித்துப்பார். இந்தப் பாவக்கொரேம் மற்ற எல்

லாப் பாவங்களிலும் பொதுவாய் அடங்கியிருப்பது மன்றி மட்டற்றவிதமாய் அதுகளின் கொடுமையை அதிகரிக்கச் செய்கிறது. இவ்வகையாய்ச் சர்வேசுரன் உனக்கு அளித்த உபகார நன்மைகள் எல்லாம் யோசித்துப்பார். இந்த நன்மைகளைக்கொண்டே இந்த நல்ல உபகாரியைப் பரியாசம்பண்ணி நிந்தித்தாய். நீ நிந்தித்துத் தள்ளிய தேவ ஏவுதல்கள் எத்தனை? நீ விருதாவாக்கிக்கொண்ட நல்ல உணர்ச்சி ஆசைகள் எத்தனை? இன்னம் நீ வேண்டிய ஆயத்தமின்றி பெற்ற தேவத்திரவிய அநுமானங்கள் எத்தனை? அதுகளினால் நீ அடைந்த பலனென்ன? அந்தப் பலன் எங்கே? உன் ஆத்தும பிரியப் பத்தாவானவர் அதற்குப் போட்டுச் சோடித்த விலையுயர்ந்த ஆபரணங்களெல்லாம் போனவிதம் என்ன? உன் பாவங்கள் இவைகளை யெல்லாம் அழித்துவிட்டது. சர்வேசுரன் தாமே உன்னை இரட்சிப்பதற்கு வலிய ஓடிவருகையில் மதியீனனாய் நீ எப்பொழுதும் அவரைவிட்டு உன் கேட்டை நாடிப்போனாய். இது எப்படிப்பட்ட நன்றிகெட்டதனம். சற்றே யோசித்துப்பார்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரகரணம்.

1-வது. உன் நிர்ப்பாக்கியத்தைக்கண்டு வெட்கப்படுவாயாக. —ஆ என் சர்வேசுரா சுவாமீ! உமது கண்களுக்கு முன்பாக வர எப்படித் துணிவேன். ஐயோ! என் நிர்ப்பாக்கியம் எப்பேர்க்கொத்தது. உலகில் என்னிலும் இழிவானது ஒன்றுண்டோ. என் இருதயத்தின் நன்றிக்கெட்ட பாவ அக்கிரமத்தை என்னென்று சொல்லுவேன்; என் பஞ்சேந்திரியங்களிலும் என் ஆத்தும தத்துவங்களிலும் பாவத்தால் அசுத்தப்படாதது ஒன்றுமில்லை. என் சீவியகாலத்திற் பாவத்தைக் கட்டிக்கொள்ளாத நாள் ஒன்றுமில்லை.

ஆ, என்னைச் சிஷ்டித்து இரட்சித்த ஆண்டவருடைய உபகார சகாயங்களுக்கு நான் காட்டவேண்டிய நன்றி இதுதானே?

2-வது. ஊதாரிப் பிள்ளையைப்போலவும் மதலெ மரியம்மாளைப்போலவும் ஆண்டவர் பாதத்தில் விழுந்து பொறுத்தலைக் கேள்.— ஆ என் ஆண்டவரே, இந்தப் பாவியின்பேரில் இரக்கமாயிரும். இரக்க தயாளத்தின் வற்றாத ஊற்றாகிய சேசுவின் மதுர இருதயமே இந்த நிற்பாக்கிய பாவியின்மேல் தயையாயிரும்.

3-வது. இனிமேல் உத்தமவிதமாய்ச் சீவிக்கப் பிரதிக்கினை பண்ணுவாயாக.— ஆ என் கர்த்தரே, மெய்யாகவே கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறேன். உமது வரப்பிரசாத ஒத்தாசையைக்கொண்டு இனி பரிச்சேதம் எந்தப் பாவத்தையுஞ் செய்யேன். ஐயோ வெகு நாளாய் உம்மை மறந்து பாவத்தைச் செய்தேன். ஆனால் இப்போதே அதனை அருவத்துத் தள்ளி மனஸ்தாபப்படுகிறேன். இரக்கம் நிறைந்த தந்தையே ஒருக்காலும் உம்மைவிட்டுப் பிரியாமல் உமக்காகச் சீவிக்கவும் மரிக்கவும் ஆசையாயிருக்கிறேன்.

4-வது. நான் கட்டிக்கொண்ட பாவக் கறைகளை நிவிர்த்தி பண்ணுகிறதுக்குப் பாவசங்கீர்த்தனத்தில் ஒன்றையும் விடாமல் தைரியமாய் வெளிப்படுத்திப் பொறுத்தல் கேட்பேன்.

5-வது. பாவத்தையும் அதின் அற்ப பற்றுதல்களையு முதலாய் என் இருதயத்தினின்று பிடுங்கியெறிய என்னாலான பிரயாசையெல்லாம் படுவேன். விசேஷமாய் என் இருதயத்தில் ஆழமாய் வேரூன்றியிருக்கும் இன்னின்ன பாவ இச்சைகளை அறுத்துத் தள்ளுவேன். இதற்காக என் ஆத்தும குருவானவர் சொல்லும் வழிப்பாடுகளையெல்லாந் தைரியமாய்

அநுசரித்து நான் கட்டிக்கொண்ட இத்தனையாயி ரங் கனமான பாவங்களுக்குப் பரிகாரம் பண்ண அநு தினம் பிரயாசைப்படுவேன்.

தியான முடிவு.

1-வது. இதுவரையில் உனக்காகக் காத்துக்கொண் டிருந்து இந்த நல்ல பிரதிக்கினைகளை உனக்கு வரு வித்த சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்.

2-வது. இந்தப் பிரதிக்கினைகளை நிறைவேற்றுகிற தற்கு உன் இருதயத்தைச் சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடு.

3-வது. சர்வேசுரன் உனக்கு வேண்டிய பலத் தைக் கொடுக்கும்படி வேண்டிக்கொள். பர. பிரி.

ஞானச்சேண்டு கட்டிக்கொள்வாய்.

13-ம் அதிகாரம்.

ஐந்தாந் தியானம்.

மரணத்தின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1வது. நீ சர்வேசுரனுடைய சமுகத்தில் இருப் பதை நினைத்துக்கொள்.

2-வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனு டைய உதவியைக் கேள்.

3-வது. சவுக்கியமாகும் என்கிற நம்பிக்கையில் லாமல் கைவிடப்பட்டுப் பாயில் படுகிடையாய்க் கிட

க்கும் ஓர் வியாதிக்காரன் அந்தஸ்தில் நீ இருப்பதாக உத்தேசித்துக்கொள்.

யோசனைகள்.

1-வது. உன் மரண நேரத்தை நிச்சயமாய் அறியக்கூடாதென்பதை யோசித்துப்பார்.—என் ஆத்துமமே, நீ ஒரு நாள் இந்தச் சரீரத்தை விட்டுப் புறப்பட்டுப்போவாய். ஆனால் என்றைக்கு, மாரிகாலத்திலோ, கோடைகாலத்திலோ—ஊரிலேயோ—வீட்டிலேயோ— வெளியிலேயோ—பகலிலோ—இரவிலோ—சடுதிப்போராயோ—வேண்டிய மூஸ்திப்போடோ—நெடுநாள் வியாதியாயிருந்தோ— திடீரென்றோ— பாவசங்கீர்த்தனஞ் செய்யச் சமயங் கிடைக்காமலோ—ஆத்தும குருவானவர் அகப்படாமலோ ஐயோ இவைகளைக்குறித்துப் பரிச்சேதம் நமக்கு ஒன்றுந் தெரியாது. ஆனால் ஒரு காரியம் நிச்சயம். நாம் சாவது தப்பாது. சிலவிசை நாம் நினைக்குங் காலத்துக்கு முந்தியே சாவோம்.

2-வது. நீ சாகையில் உனக்கு உலகம் முடிந்துபோகும். இனி உனக்கு உலகமில்லை, உன் கண்கள் அதைப் பாராது. ஏனெனில் அப்போது இன்ப சுகங்களும் வீண் சிலாக்கியங்களும் இலெளகீக சந்தோஷங்களுங் கிரமமற்ற சிநேகங்களும் புகைபோலவும் வீண் தோற்றங்களாகவும் உனக்குக் காணப்படும். ஆ, என்ன நிர்ப்பாக்கியம் கவைக்குதவாத காரியங்களைப் பிரியமாய்த் தேடிக் கனாகாணும் பரலோக பரம கடவுளை நிந்தித்தேனே. ஒரு துளித் தேனுக்காக வற்றாத செல்வ பாக்கியத்தை இழந்தேனே என்பாய். இதற்கு விரோதமாய் நீ உலகத்தில் ஆசித்துத் தேடவேண்டியது மெய்யான பத்தியும் புண்ணியமும் மாத்திரமே. இதே நீ ஆசிக்கத்தக்க இன்

பம் என்று அந்த மரண சமயத்தில் நீ நன்றாய்க் கண்டுபிடிப்பாய். என் ஆசிக்கத்தக்க இந்த நல்லவழியைப் பின்பற்றி நடவாமற்போனேன் என்று அங்கலாய்ப்பாய். அதுவுமாயில் உனக்கு மகா சொற்பமாய்க் காணப்பட்ட உன் பாவங்கள் மலைகளைப்போல் பெரிதாய் உனக்குத் தோன்றும். உன் பத்தியோ உன் கண்முன் பேறுபலனற்றதாய்க் காணப்படும்.

3-வது. உன் ஆத்துமம் இவ்வுலகத்தை விட்டுப் பிரியவேண்டியிருக்கையில் எப்படிப்பட்ட கொடிய வருத்தத்தை அநுபவிக்கும். ஆவலாய்த் தேடிவைத்த ஆஸ்திபாஸ்திகளையும் பெருமை சிலாக்கியங்களையுஞ் சுக சந்தோஷங்களையும் விளையாட்டு வேடிக்கைகளையுங் கூடிப் பழகின சிநேகிதர் சுற்றத்தார் பந்துக்களையும் அன்போடு நேசித்த புருஷன் பெண்சாதி பிள்ளைகளையுங் கடைசியாய் இத்தனைகாலம் அருமையாய்ப் பேணிக் குளிப்பாட்டின உன் சரீரத்தையும் விட்டுப் பிரியவேண்டும். இப்படி பிரிய வேண்டிய சமயத்தில் உன் சரீரம் இருக்கும் அந்தஸ்தென்ன? வெளுத்து வேறுபட்டுத் தோலும் எலும்புமாக அவலட்சண கோலத்தோடு துர்க்கந்தம் வீசிக்கொண்டிருக்கும்.

4-வது. இக்கோலத்தோடு மரித்தபின் எவ்வளவு சீக்கிரமாய் இந்தச் சடலத்தை எடுத்து மண்ணுக்குள் புதைத்துவிடுவார்கள் பார். ஒரு விசை அடக்கஞ் செய்தபின் இனி உலகில் உன்னைக் குறித்து நினைப்பாரில்லை. சர்வேசுரன் இவனுக்குச் சமாதான இளைப்பாற்றி கொடுக்கக்கடவார் என்பார்கள். இதோடு எல்லாம் முடிந்துபோயிற்று. ஆ மரணமே, நீ எவ்வளவு கொடியதாயிருக்கிறாய். மெய்யாகவே ஓ மரணமே! நீ எவ்வளவு ஈவு இரக்கமற்றதாயிருக்கிறாய்.

5—வது. உன் ஆத்துமஞ் சரீரத்தை விட்டுப் பிரிந்தமாத்திரத்தில் ஒன்றில் வலதுபக்கம் ஒன்றில் இடதுபக்கஞ் செல்லும். ஐயோ உன் ஆத்துமம் எங்கே போம், எந்த வழியைப் பின்செல்லும், இவ்வுலகில் இருக்கையில் எந்த வழியில் நடந்ததோ அந்த வழியைத்தான் பின்செல்லும்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரகரணம்.

1—வது. சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொண்டு அவர் கரங்களில் உன்னை ஒப்பித்துவிடு. ஆ, என் ஆண்டவரே! அந்தப் பயங்கர நாளில் என்னை உமது அடைக்கலத்திற் சேர்த்துக்கொள்ளும். என் மிஞ்சிய நாட்களெல்லாங் கஸ்தி துன்பம் நிறைந்ததாயிருந்தாலுஞ் சரியே அந்தக் கடைசி நேரம் எனக்குப் பாக்கியமான நேரமாயிருக்கச் செய்தருளும்.

2—வது. உலகத்தை அருவருத்துத் தள்ளுவாயாக. ஓ உலகமே நான் உன்னை விட்டுவிடவேண்டிய நேரத்தை அறியாததால் உன்னோடு இனி சேர்ந்திரேன். ஆ எனது பிரிய சகோதரர் பந்துக்களே! நித்தியமாய் நிலிக்கத்தக்க பரிசுத்த சிநேகத்தால் நான் இனி உங்களைச் சிநேகிக்கக்கடவேன். ஏனெனில் ஒரு நாள் கட்டாயமாய் விட்டுவிடவேண்டிய சிநேக பாசத்தால் உங்களோடு ஐக்கியமாயிருப்பதில் வரும் பிரயோசனமென்ன?

அந்தக் கடைசி நேரத்துக்கு முஸ்திப்பு செய்து சிந்தாத்திரை செய்வதற்கு வேண்டிய சாக்கிரதை எச்சரிக்கையாயிருப்பேன், என் ஆத்தும காரியத்தை நிச்சயப்படுத்தி என்னிடத்தில் இருக்கிற இன்னின்ன குறைகளை வேண்டிய சுறுசுறுப்போடு ஒழுங்குபடுத்துவேன்.

தியான முடிவு.

சர்வேசுரன் உனக்கு வருவித்த நல்ல பிரதிக்கினைகளுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து அவருக்கு உன்னை ஒப்புக்கொடுத்து அவருடைய திருக்குமாரனின் மரண பேறுபலன்களால் உன் மரணம் பாக்கியமான மரணமாயிருக்க இன்னம் அவரை வேண்டிக்கொள். தேவமாதாவின் அடைக்கலத்தையும் அர்ச்சியசிஷ்டவர்களுடைய உதவியையுங் கேள். பர—பிரி.

ஞானச்சேண்டு கட்டிக்கொள்வாய்.

14-ம் அதிகாரம்.

ஆறாந் தியானம்.

தீர்வையின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1—வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதாக நினைத்துக்கொள்.

2—வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1—வது. உலக முடிவுக்காகச் சர்வேசுரனால் குறிக்கப்பட்ட காலம் நெருங்கி வரவே மகா பயங்கரமான அநேக அடையாளங்கள் காணப்படும். சகல மனுமக்களுஞ் சொல்லிலடங்காத திகிலடைந்து நிற்பார்கள். வெள்ளம்போல் அக்கினியானது கிளம்பி

உலகிலுள்ள யாவற்றையும் ஒன்றும் விடாமற்கட்டறுத்துத் தகனமாக்கிவிடும்.

2-வது. இந்த அக்கினிப் பிரளயத்துக்குப் பின் மரித்த சகலரையுஞ் சம்மனசானவர் அழைத்து யோசபாத்தென்னுங் கணவாயிற் கணக்கு ஒப்பிக்க நிறுத்துவார். ஆனால் ஐயோ அப்போது எவ்வளவு வித்தியாசங் காணப்படும். ஏனெனில் சிலர் பிரகாசம் வீசும் மகிமையான சரீரத்தோடும் மற்றவர்கள் அவலட்சண பயங்கரத்துக்குரிய சரீரத்தோடும் இருப்பார்கள்.

3-வது. நல்லோருக்கு நித்திய பாக்கியத்தின் அடையாளமாகவுந் தீயோருக்குக் கடின தெண்டனையின் அடையாளமாகவுஞ் சூரியனிலும் அதிக காந்தியோடு சிலுவையானது பிரகாசித்துத் துலங்கத் தேவதூதர்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் புடைசூழச் சர்வத்துக்கும் நீதிக்கர்த்தர் எவ்வளவு மாட்சிமை மகிமையோடு எழுந்தருளிவருவார் என்று யோசித்துப் பார்.

4-வது. சர்வ நீதிக் கர்த்தருடைய கட்டளையால் நல்லோர் அவருடைய வலதுபக்கத்திலுந் தீயோர் அவர் இடதுபக்கத்திலும் நிறுத்தப்படுவார்கள். இந்தப் பிரிவினைக்குப்பின் இவ்விரு பக்கத்தாரும் இனி பரிச்சேதம் எக்காலத்திலும் ஒருமித்துச் சேரார்கள்.

5-வது. இவ்விதமாய் ஒருவிசை பிரிக்கப்பட்ட பின் அவர்களுடைய இருதயங்களில் உள்ளதெல்லாம் வெளியரங்கமாய்க் காணப்படும். ஒரு பக்கத்தில் தீயோருடைய கெட்ட மனதையும் அவர்கள் சர்வேசுரனுக்குச் செய்த நிந்தை தூஷணங்களையும் வேறொருபக்கத்தில் நல்லவர்களுடைய தவவொறுத்தலையும் அவர்கள் தேவ அநுக்கிரகத்தைக்கொண்டு

தந்த ஞானக்கனிகளையும் பார்ப்பார்கள். ஒன்றும் மறைக்கப்பட்டிராது. ஆ சுவாமீ, தீயோருக்கு எவ்வளவு வெட்கமும் நல்லோருக்கு எவ்வளவு சந்தோஷ ஆறுதலும் உண்டாயிருக்கும்.

6—வது. சர்வேசுரன் பாவிகளுக்கு விதிக்குங் கடைசி தீர்வையை யோசித்துப்பார். சபிக்கப்பட்டவர்களே பசாசுக்கும் அதின் கூட்டாளிகளுக்கும் முஸ்திப்பு செய்திருக்கும் நித்திய அக்கினிக்குப் போங்கள் என்பார். இந்தப் பயங்கரத்துக்குரிய வார்த்தைகளை நன்றாய்த் தியானித்துப்பார். சர்வேசுரன் நித்தியத்துக்கும் இந்த நிர்ப்பாக்கிய பாவிகளைக் கைவிடுகிறார். தமது திரு முகத்தைப் பார்க்கவொட்டாமல் என்றென்றைக்குந் துரத்திவிடுகிறார். சபிக்கப்பட்டவர்கள் என்று அழைக்கிறார். ஆ என் ஆத்துமமே எப்படிப்பட்ட சாபம். பொதுவான சாபம் எல்லாத் தின்மைகளும் அடங்கியிருக்குஞ் சாபம், இனி ஏடுபடாத சாபம், சதாகாலத்துக்கும் நிலைத்திருக்குஞ் சாபம், கடைசியாய் நித்திய அக்கினிக்குப் போங்கள் என்கிறார். ஆ, என் ஆத்துமமே அந்த அளவிடக்கூடாத நித்தியத்தை யோசித்துப்பார். நித்தியமாய் எவ்விதத் துயர வருத்தங்களையும் அநுபவிக்கிறது எவ்வளவு பயங்கரத்துக்குரியது.

7—வது. பிற்பாடு நல்லவர்களுக்கு வருந் தீர்வையைச் சிந்தித்துப்பார். என் பிதாவால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலக ஆதிமுதல் உங்களுக்காக முஸ்திப்பு பண்ணப்பட்டிருக்கும் இராச்சியத்தில் வீற்றிருந்து வாழ வாருங்கள் என்கிறார். ஆ எவ்வளவு மதுரமான வாக்கியம், தம்மிடத்தில் வரச்சொல்லி அழைக்கிறார். எவ்வளவு நல்ல செய்தி, தமது பிதாவால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிவிக்கிறார். ஆ பிரிய ஆசீர்வாதமே, உன்னிற் சகல நன்மையுஞ் சம்பூரணமாய் அடங்கியிருக்கிறது. ஆ,

சுவாமி, இது எப்பேர்க்கொத்த பாக்கியம் நித்தியமாய் உம்முடைய இராச்சியத்தில் வீற்றிருப்போம்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரகரணங்கள்.

1-வது. ஆ, என் ஆத்துமமே தீர்வைநாளை நினைத்து நடுநடுங்கக்கடவாய். ஆ, சுவாமீ, வானராச்சியத்தின் ஸ்தம்பங்கள் முதலாய் பயத்தால் நடுநடுங்கி நிற்கும் அந்த நாளில் நான் என்னமாய் நிற்பேன்.

2-வது. இந்தப் பயங்கரத்துக்குரிய நாளுக்குத் தப்பித்துக்கொள்வதற்கு உன் பாவத்தை அருவருத்துத் தள்ளு. இந்தப் பாவங்கள்தான் உன்னை நரகத்தில் தள்ளக்கூடும்.

ஆ, அந்த நாளில் நான் தீர்வைக்குள்ளாகாதபடிக்கு இப்போதே எனக்கு நானே தீர்வையிட்டுக்கொள்வேன். நடுநடுக்கத்துக்குரிய அந்த நாளில் நீதிக்கர்த்தர் என்னைத் தீர்வையிட்டுத் தள்ளாதபடிக்கு என் இருதயத்தைப் பரிசோதித்துப்பார்த்து எனக்குத் தானே தீர்வையிட்டுக்கொண்டு என் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு என் நடக்கையைத் திருத்திக் கொள்வேன். ஆதலால் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து என் ஆத்தும குருவானவர் சொல்லும் புத்திமதியின்படி நடப்பேன்.

தீயான முடிவு.

நடுத்தீர்வை நாளுக்குத் தப்பித்துக்கொள்வதற்கு வேண்டிய வழிப்பாடுகளையுந் தபசுசெய்வதற்குக் காலத்தையுங் கொடுத்த சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய். சர்வேசுரனுக்கு உன் இருதயத்தை ஒப்புக்கொடுத்துத் தைரியமாய் நீ தவக்கிருத்தியங்களைச் செய்து வரவேண்டிய வரப்பிரசாதங்களைக் கொடுக்கும்படி வேண்டிக்கொள். பர-பிரி.

ஞானச் செண்டு கட்டிக்கொள்வாய்.

15-ம் அதிகாரம்.

ஏழாந் தியானம்.

நரகத்தின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1-வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதை நினைத்துக்கொள்.

2-வது. தாழ்ச்சியோடு இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

3-வது. இருண்ட ஓர் பட்டணத்தில் நீ இருப்பதாகவும் அந்தப் பட்டணம் முழுமையுங் கீலுங் கெந்தகமு மண்டி அக்கினிமயமாயிருப்பதாகவும் அதில் அடர்ந்து வாசஞ்செய்யுந் திரளான சனங்களில் ஒருவருந் தப்பித்து வெளியிற் புறப்படக்கூடாமல் இருப்பதாகவும் உத்தேசித்துக்கொள்.

யோசனைகள்.

1-வது. நரகவாசிகள் நித்திய பாதாளத்தில் தங்கள் பஞ்சேந்திரியங்கள் எல்லாத்திலும நாவால் உச்சரிக்கக்கூடாத உபாதைகளை அநுபவிக்கிறார்கள். ஏனெனில் இந்தப் புலன்களைக்கொண்டும் அவயவங்களைக்கொண்டும் பாவஞ் செய்தமையாற் பாவத்துக்கு வரவேண்டிய ஆக்கினையை இவைகள் ஒவ்வொன்றும் அநுபவிப்பதும் நீதியே. ஆகாத பார்வைகளைப் பார்த்ததற்காக இவர்களுடைய கண்கள் பசாசுகளின் பயங்கர உருவங்களையும் நரகத்தின் அவலட்சண கோலத்தையும் பார்க்கவேண்டும். தகாத பேச்சுகளையும் பாட்டுகளையும் பிரியமாய்க் கேட்டதற்கு

ஆக்கினையாக இவர்கள் செவியிரண்டும் அவநம்பிக்கைப் பிரலாப அழுகைக் கூக்குரலாற் கிழிந்துபோவதுபோலே உபாதனைப்படும். இப்படியே மற்ற ஒவ்வோர் அவையவங்களும் உபாதைப்படும்.

2—வது. இந்த உபாதைகளல்லாமல் நரகவாசிகள் சர்வேசுரனை விட்டுப் பிரிந்து என்றென்றைக்கும் அவர் மாட்சிமை மகிமையைக்காணக்கூடாமல் இருப்பதே அவர்களுக்குப் பெரிய உபாதையாயிருக்கும். அப்சலோம் என்பவன் பரதேசத்தில் இருந்தபோது அவன் அநுபவித்த துன்ப வருத்தங்கள் எல்லாத்திலுந் தன் தகப்பன் தாவீதரசனைக் காணக்கூடாமலிருந்ததே அவனுக்கு மகா சகிக்கக்கூடாத துர்ப்பமாயிருந்ததாம். ஆ, சுவாமீ! உமது அழகிய சுபசோபன திருமுகத்தை எந்நாளும் பார்க்கக்கூடாமற் பிரிந்திருப்பது எப்படி?

3—வது. விசேஷமாய் நரக உபாதைகளின் நித்தியத்தை யோசித்துப்பார். நித்தியம், இது ஒன்றே நரகத்தைச் சகிக்கக்கூடாததாய் ஆக்குவதற்குப் போதும். ஒரு விஷப்பூச்சி கடித்து அல்லது அற்ப வியாதி கண்டு தூக்கமற்றிருக்கும்போது ஒரு நிமிஷத்திற் கடந்துபோகும் இரவு மகா பெரிதாகவும் சகிக்கக்கூடாததாகவும் இருந்தால் கணக்கில்லா உபாதனை நிறைந்த நரகத்தின் நித்திய இரவு எவ்வளவு பயங்கரத்துக்குரியதாயிருக்கும். ஒருக்காலும் முடிவைக் காணாத இந்த இரவில் நின்றே நித்திய அவநம்பிக்கையும் முடிவில்லாத தேவதூஷண கோபவெறிகளும் பிறக்கும்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரகரணம்.

ஆ என் ஆத்துமமே, இசயாசென்பவருடைய வார்த்தைகளைப் பய நடுநடுக்கமின்றிக் கேட்கக்கூடுமோ? அவியாத அக்கினியில் நித்தியமாய்ச் சீவித்து உள்ளும் புறமுஞ் சுட்டெரிக்கும் அக்கினிச் சூளை

யில் வசிக்க உன்னாற் கூடுமோ? ஆ உன் தேவனாகிய சர்வேசுரனை நித்தியத்துக்கும் இழந்துவிட மனம் வருமோ?

இந்தத் தெண்டனைக்கு நீ பாத்திரமானாய் என்று அறிந்துகொள். ஆ, சுவாமீ! மெய்யாகவே எத்தனையோ முறை நரகத்துக்குப் பாத்திரவானானேன். இனி நரகப் பாதையை விட்டு மோட்சப் பாதையைப் பின்பற்றி நடப்பேன். வேண்டுமென்று நானே நரகப்பாதாளத்தில் விழுவது என்ன மதியீனம்.

இவ்வகையாய் நித்தியமாய் என்னைச் சாகடிக்க வல்லமையுள்ள கொடிய பாவத்தை விலக்க இன்னின்ன பிரயாசைப்படுவேன்.

நன்றியறிதல் காணிக்கை மன்றாட்டுப் பிரகரணஞ் செய்து தியானத்தை முடிப்பாய்.

16-ம் அதிகாரம்.

எட்டாந் தியானம்.

மோட்சத்தின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1—வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதை நினைத்துக்கொள்.

2—வது. இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1—வது. மாசு மப்பில்லாத குளிர்ந்த இரவிற் பூரணச்சந்திரன் உதித்துத் துலங்கக் கணக்கில்லாப்பல

வித நட்சத்திரங்கள் நவரத்தினங்களிலும் அதிகக்காந்தியோடு பிரகாசிக்கச் சூரியனும் ஒருபக்கத்தில் உதித்துத் தன் பிரகாசக் கிரணங்களை வீச இரவும் பகலும் ஒருமிக்கக் காணப்படுவதாயிருந்தால் இந்தப் பார்வை எவ்வளவு அதிவிநோத அழகாயிருக்கும். ஆனால் மோட்ச விநோத அலங்கிர்தத்துக்குமுன் இவை ஒன்றுமில்லை என்று நிச்சயமாய் எண்ணிக்கொள். ஆ, ஆனந்தமோட்சமே, நீ எவ்வளவு நேசத்துக்கும் ஆசைக்கும் உரித்தாயிருக்கிறாய். ஆ பேர்பெற்ற செல்வம் பொழியும் நாடே, எவ்வளவோ அழகாயிருக்கிறாய்.

2-வது. இந்தப் பாக்கியமான நாட்டில் வசிப்பவர்களுடைய மேன்மையையும் அழகையும் கணக்கையும் யோசித்துப்பார். நவ விலாச சம்மனசுகள் அப்போஸ்தலர்கள் வேதசாட்சிகள் ஸ்துதியர்கள் கன்னியர்கள் பரிசுத்த ஸ்திரீகளையும் பார். இவர்களைக் கணக்கிடக் கூடுமோ. ஆ எவ்வளவு பாக்கியமான சங்கம். இவர்கள் எல்லோரிலுங் கடைசிப்படியில் இருப்பவர் இந்த உலகத்திலும் ஆயிரம்பங்கு அதிக அழகாயிருக்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. இவர்கள் எல்லாரையும் ஒருமிக்கப் பார்ப்பது எவ்வளவு அழகாயிருக்கும். ஆ என் கர்த்தரே சுவாமீ! உமது பேரின்ப விராச்சியத்தில் இருப்பவர்கள் எவ்வளவோ பாக்கியவான்கள். எந்நாளும் நித்திய சிநேகத்தின் இன்பமான கீதத்தைப் பாடுகிறார்கள். எந்நாளும் பூரண சந்தோஷ அக்களிப்பில் மூழ்கியிருக்கிறார்கள். எந்நாளும் பிரியாத பாக்கியமான சிநேகப் பந்தனத்திற் சீவித்து அகமகிழ்கிறார்களே.

3-வது. கடைசியாய் இவர்கள் எல்லோருஞ் சர்வேசுரனை என்றென்றைக்கும் ஓயாமல் தெரிசித்து அவரோடிருப்பது எப்படிப்பட்ட நன்மை என்று பார். சர்வேசுரனை இவர்கள் முகமுகமாய்ப் பார்ப்ப

தால் இவர்கள் இருதயம் பேரின்ப வெள்ளத்தில் அமிழ்ந்தியிருக்கின்றது. மெய்யாகவே எப்போதைக்குந் தன் ஆதிமூலமாகிய சர்வேசுரனோடு சேர்ந்திருப்பது எப்படிப்பட்ட நன்மை. ஆகாயத்திற் பறவைகள் வசிப்பதுபோல் இந்தச் செல்வ நாட்டில்தான் அர்ச்சியசிஷ்டவர்கள் சர்வேசுரனோடு ஐக்கியமாய் மனோவாக்குக்கெட்டாத ஆறுதல் சந்தோஷ இன்பத்தில் மூழ்கியிருக்கின்றார்கள். அங்கே ஒருவருக்கொருவர் போட்டிபோட்டாப்போல் தங்கள் சிருஷ்டிகரது ஸ்துதிகளைப் பாடி எங்கள் சிருஷ்டிகரான கர்த்தாவே என்நாளும் நீர் ஸ்துதிக்கப்படக்கடவீர். உமது அளவற்ற கருணையால் எங்களை உமது மகிமைக்குப் பங்காளிகளாக்கி எங்கள்பேரில் உமது அணைகடந்த நன்மைப் பெருக்கத்தைப் பொழியும்பரம தேவனே, அநவரதகாலமும் வாழ்த்தப்படக்கடவீர் என்று கொண்டாடுகிறார்கள். சர்வேசுரனுந் தமது அர்ச்சியசிஷ்டவர்கள் எல்லோரையும் நித்திய ஆசீர்வாதத்தால் ஆசீர்வதித்து என் பிரிய தாசர்களே, உலகில் என்னை இவ்வளவாய் நேசித்து எனக்கு ஊழியஞ்செய்தீர்களே, என்நாளும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கக்கடவீர்கள். பரிசுத்த அன்போடு என்னை நேசித்து நித்தியமாய் என்னைக் கொண்டாடக்கடவீர்கள் என்று அவர்களுக்கு அமிர்த வசனங்களை உரைக்கின்றார்.

சிநேகப் பிரதிக்கினைப் பிரகரணம்.

1-வது. இந்தப் பரலோக செல்வநாட்டைப் பார்த்து ஆச்சரியப்பட்டுத் துதிக்கக்கடவாய். என் சென்ம நாடாகிய பரிசுத்த ஜெருசலேமா நகரமே நீ எவ்வளவோ அழகாயிருக்கிறாய். உன்னில் வசிப்பவர்கள் எவ்வளவோ பாக்கியவான்கள்.

2-வது. இந்த மகிமை பொருந்திய நாட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோகும் வழியை விட்டு இதுவ

ரயில் நீ அசமந்தமாய் இருந்ததின்மட்டில் வெட்கப்படக்கடவாய்.—என் ஆதியும் அந்தமுமான மெய்யான பாக்கியத்தை விட்டு நான் இவ்வளவு தூரம் அகன்றுபோனதென்ன? ஆ என் நிர்ப்பாக்கியத்தை என்னென்று சொல்வேன். உதவாத ஒரு நொடிநேர வீண் பிரியத்துக்காகச் சர்வேசுரன் எனக்கு நியமித்திருக்கும் முடிவற்ற நித்திய பேரின்பங்களை ஆயிரம் பதினாயிரமுறை வேண்டாம் என்றாற்போல் தள்ளினேனே. என்ன மதிகேடு? இவ்வளவு ஆசைக்குரிய நன்மைகளை நிந்தித்து நிந்தைக்குரிய காரியங்களை விரும்பியது எப்படிப்பட்ட மூடத்தனம்.

3-வது. மகா ஆசையோடு இந்தச் செல்வநாட்டை ஆசிப்பாயாக என் மெய்யான பாக்கியமாகிய பரம கர்த்தாவே, உமது நன்மார்க்கத்தில் நான் வர நீர் தயைசெய்தீரோ. இனி உம்மை விடேன். ஒருக்காலும் உம்மைவிட்டுப் பின்னிடையேன். ஆ என் ஆத்துமமே நித்திய இளைப்பாற்றியில் பிரவேசிப்போம். நமக்கு வார்த்தைப்பாடு கொடுக்கப்பட்டிருக்கும் அர்ச்சிக்கப்பட்ட பூமியை நோக்கி நடப்போம். எஜிப்து தேசத்துக்கு ஒத்ததாகிய இந்தப் பரதேசத்தில் என்னத்துக்கு இருக்கிறோம்.

ஆகையால் இந்தமோக்ஷப்பாதையினின்று என்னை அகற்றும் அல்லது என்னைத் தாமதப்படுத்தும். இன்னின்ன காரியங்களை விட்டுவிடுவேன். இந்த மோக்ஷத்தை அடைவதற்காக இன்னின்ன பற்றுதல் பாசங்களை முழுதும் அறுத்தெறிந்து பத்தி நெறியில் பிரமாணிக்கமாய் நடப்பேன்.

நன்றியறிதல் காணிக்கை மன்றாட்டுப் பிரகரணஞ்செய்து தியானத்தை முடிக்கவும்.

17-ம் அதிகாரம்.

ஒன்பதாந் தியானம்.

மோக்ஷத்தைத் தெரிந்துகொள்வதின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1-வது. நீ சர்வேசுரனுடைய சமூகத்தில் இருப்பதை நினைத்துக்கொள்.

2-வது. தாழ்ச்சியோடு இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

யோசனைகள்.

1-வது. றஜேஸ் என்னும் பட்டணத்துக்குத் தோபியாஸ் போகையிற் சம்மனசானவர் அவரோடு இருந்ததுபோல நீயும் உன் காவலான சம்மனசோடு தனியாய் ஓர் வெட்டாரவெளியில் இருப்பதாக உருபிகரித்துக்கொள். அங்கே உன் காவலான சம்மனசானவர் உன் கண்முன் மோக்ஷவாசலைத் திறந்து அதில் உள்ள சகல சந்தோஷ இன்பங்களையும், உன் கால்களின் கீழ் நரகத்தைத் திறந்து அதின் கொடிய ஆக்கினைகளையும் உனக்குக் காண்பிப்பதாக உருபிகரித்துக்கொள்.

2-வது. உன் புத்தியில் இதனை நிறுத்திக்கொண்டு உன் சம்மனசானவருக்கு முன்பாக முழங்காலில் இருப்பதாக எண்ணி மெய்யாகவே நீ மோக்ஷத்துக்கும் நரகத்துக்கும் மத்தியில் வைக்கப்பட்டிருக்கிறாய் என்றும், மோக்ஷத்தையோ நரகத்தையோ நீ எதைத் தெரிந்துகொள்வாயோ உன் இஷ்டப்படிக்கு அதுகள் உன்னை ஏற்றுக்கொள்ளத் திறக்கப்பட்டிருக்கின்றன என்றும் நினைத்துக்கொள்.

3-வது. இவ்வுலகில் இவ்விரண்டில் எதைத் தெரி

ந்து கொள்வாயோ அதில்தான் நீ மற்று சீவியத்திற் சதாலமும் இருப்பாயென்றும் யோசித்துக்கொள்.

4-வது. உன் இஷ்டப்படி நீ தெரிந்துகொள்ளும் நரகமும் மோக்ஷமும் உனக்குத் திறக்கப்பட்டிருந்த போதிலுந் தமது நீதிக்களவாக நரகத்தை என்கிலும் அல்லது தமது தயாள்த்துக்களவாக மோக்ஷத்தை என்கிலும் உனக்குக் கொடுக்க முஸ்திப்பாயிருக்குஞ் சர்வேசுரன் நீ மோக்ஷத்தைத் தெரிந்து கொள்ளும்படியாய் மேன்மேலும் ஆசிக்கிறுரென்றும், உன் காவலான சம்மனசானவரும் தம்பீ பயப்படாதே சர்வேசுரன் உனக்கு வேண்டிய வரங்களை அளித்து மோட்சப்பாதையில் அவரோ உனக்கு ஒத்தாசையாயிருப்பாரென்று உனக்குத் தைரியம் சொல்வதாகவும் நினைத்துக்கொள்.

5-வது. சேசுகிறீஸ்துநாதரும் வான இராச்சியத்தினின்று உன்னைத் தயவோடு பார்த்து என் பிரிய ஆத்துமமே, என்ன செய்கிறுய். நித்தியமாய் இளைப்பாற வா, தீவிரித்து வா. உன் பரமபிதா தமது சிநேகத்தின் ஏராளத்தில் அழியாத இன்பங்களை உனக்கு முஸ்திப்பு செய்திருக்கின்றுர். அவர் திருக்கரங்களில் ஓடிவா என்கிறுர். அர்ச். கன்னிமரியாயும் தாய் நேசப்பெருக்கத்தோடு உன்னை மோக்ஷத்துக்கு வருந்தி அழைத்து என் மகனே தைரியமாயிரு. என் குமாரனுடைய ஆசைகளை நிந்திக்கப் போகிறுய். நீ நித்திய சீவியம் அடையவேண்டுமென்று அளவற்ற விதமாய் ஆசிக்கிறுர். நானும் அப்படியே ஆசிக்கிறேன். உன் தாயாருடைய ஆவல் ஆசையை நீ அசட்டை செய்யாதே என்கிறுள். மோக்ஷத்தில் வாழும் அர்ச்சியசிஷ்டவர்களும் கோடாகோடி பரிசுத்த ஆத்துமங்களுந் தங்களோடு நீ வந்து சேர்ந்து அநவரதகாலமுஞ் சர்வேசுரனைப் புகழ்ந்து நேசிக்கும்படி உன்னை ஆவலாய் அழைத்து ஆ பிரிய சகோதரனே, எங்கள்

சிநேகிதனே, கொஞ்சந் தைரியமாயிரு. உலகஞ் சொல்லுகிறதுபோல் மோக்ஷப்பாதை அவ்வளவு கடினமல்ல. அந்தப் பாதையில் நுழைந்து பார். நாங்கள் நித்தியமாய் அநுபவிக்கும் பேரின்ப செல்வ பாக்கியங்களை நாங்கள் அடையும்படிச் செய்தது பத்திதான். இந்த மெய்யான பத்தியிலுள்ள மிகவும் மேலான பரிசுத்த இன்பம் இலௌகிக சந்தோஷங்களில் அற்பமாகிலுங் கிடையாதென்று கண்டுகொள்வாய் என்கிறார்கள்.

தெரிந்துகொள்ளுதல்.

1-வது. ஆ நரகமே, கொடிய அக்கினியே, இதோ உன்னை என்றென்றைக்கும் அருவருத்துத் தள்ளுகிறேன். உன் வாதனை நோக்காடுகளைச் சபிக்கிறேன். என் ஆண்டவராகிய சர்வேசுரன்பேரில் நீ ஓயாமற் கக்குகிற தேவதூஷணங்களையுஞ் சாபத்தையும் விசேஷமாய் அருவருத்து உன் முடிவில்லா நிர்ப்பாக்கியத்தை வெறுத்துத் தள்ளுகிறேன். ஆனால் இதற்கு விரோதமாய் ஓ பாக்கியமான மோக்ஷமே உன் மகிமை செல்வம் எந்நாளும் வாழ்த்தப்படக்கடவது. உன்னையே என் இருதயம் நேசிக்கிறது. உன்னை நோக்கியே என் ஆத்துமந் தாவுகிறது. ஆம். என்றென்றைக்கும் உன் பரிசுத்தமாளிகையில் நான் வசிப்பேன். நித்தியமாய் உன் நேச அரண்மனையில் வீற்றிருப்பேன். என் கர்த்தரே சுவாமீ! என்பேரில் நீர் வைத்த தயாளத்தைப் புகழ்ந்து நீர் எனக்கு அளிக்கும் மோட்சத்தையே ஆவலோடு அங்கீகரித்துக்கொள்ளுகிறேன். எனது இரட்சகராகிய சேசுவே, உமது நித்திய சிநேகமே எனக்கு வேண்டும். நீர் உமது திருவிரத்தத்தால் எனக்காக மோட்ச எருசலேம் பட்டணத்தில் வாங்கிய இடத்தைக் கைவிடேன். அங்கேதான் உம்மை நித்தியமாய் நேசித்து ஸ்துதித்து வருவேன்.

2-வது. தேவமாதாவும் அர்ச்சியசிஷ்டவர்களும் உனக்கு அளிக்குஞ் சனுவு சகாயங்களுக்கு நன்றியறிந்திரு. அவர்களோடு சேர்வதற்கு இந்த நன்மைகளை உதவிக்கொள்ளுவாயென்று அவர்களுக்கு வார்த்தைப்பாடு கொடு. உன்னை மோட்சத்திற்குக் கூட்டிக்கொண்டுபோக உன் காவலான சம்மனசு கையில் உன்னை முழுதும் ஒப்புக்கொடு. இத்தன்மையாய் நீ இப்போது தெரிந்துகொண்ட மோக்ஷ வழியில் ஸ்திரமாய் நிற்க மனத்திடனாயிரு.

18-ம் அதிகாரம்.

பத்தாந் தியானம்.

மெய்யான பத்தியின் சீவியத்தைத் தெரிந்துகொள்வதின்பேரில்.

ஆயத்த ஆரம்பம்.

1-வது. சர்வேசுரனுடைய சமூகத்தில் நீ இருக்கிறாயென்று நினைத்துக்கொள்.

2-வது. அவர் சமூகத்துக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி அவர் சனுவைக் கேள்.

யோசனைகள்.

1-வது. உன் காவலான சம்மனசானவரோடு இன்னும் ஒருவிசை விசாலமான வெளியில் நீ இருப்பதாக உரூபிகரித்துக்கொள். உன் இடது பக்கத்தில் உயர்ந்த ஓர் சிங்காசனத்தில் அநேகம் நரகப் பசாசுகள் சுற்றி நிற்க லூசிப்பேய் உட்கார்ந்துகொண்டிருக்கிறதையும் அதைச் சுற்றிலும் உலகத்தை நாடி நடக்கும் அநேக மனிதர்கள் சூழ்ந்துகொண்டு தாங்

கள் கூட்டிக்கொள்ளும் பற்பல பாவங்களால் அந்தப் பசாசை ஸ்துதித்துக் கொண்டாடிச் சங்கிப்பதை யும் பார். இந்தத் துர்ச்சன மன்னவான் அருகில் இந்த நிர்ப்பாக்கிய இச்சகர்கள் நடக்கும் நடக்கை யைப் பார். சிலர் பகை வர்ம காய்மகார கோபத்தால் வெறிகொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் நாய்களைப் போல் ஒருவரொருவரைக் கடித்துக் கொலைசெய்து கொள்ளுகிறார்கள். சிலர் பேய்போல் பறந்து பணங் காசுகளைச் சம்ப்ராதிக்க ஓயாத பேராசைகொண்டு ஓ யாமல்வருந்திப் ப்ரயாசைப்படுகிறார்கள். வேறுசிலர் வீண் சிலாக்கியங்களை நாடி உபயமற்ற பிரியத்தை மாத்திரமே தேடுகிறார்கள். சிலர் தங்கள் நீச இச்சை களால் மிருகங்களிலுங் கடைகெட்டவர்களா யிருக்கி றார்கள். இவர்களுக்குள் ஓய்வு ஒழிவுண்டோ, பார். என்ன அலங்கோலே. ஒருவரொருவரை எவ்விதமாய் நிந்தித்துக்கொள்ளுகிறார்கள். ஒருவருக்கொருவர் சிநேகிதர்களாகத் தோன்றியபோதிலும் வெறிகொ ண்ட நாய்களைப்போற் பகைத்துக்கொள்ளுகிறார்கள். இதுதான் உலகத்தின் நிர்ப்பாக்கியமான குடியரசு என்னத்தகும். இந்தச் சபிக்கப்பட்ட அரசன் பாவி களுக்கு உரித்தான் உலகத்தை ஆண்டு நடத்திவருங் கொடுங்கோன்மைக் கோலம் இதுவே. இதை யோசி த்துப்பார்க்கையில் மெய்யாகவே உன் இருதயத்தில் பரிதாபம் இரக்கம் உண்டாகிறதல்லவா.

2-வது. இப்போது உன் வலதுபக்கத்தில் சேசுகி றீஸ்துநாதர் சிலுவையில் அறையுண்டு மட்டற்ற நே சத்தால் இந்த நிர்ப்பாக்கிய பாவிகளுக்காகத் தமது பிதாவை மன்றாடி இவர்கள் சிக்கிக்கொண்டிருக்கும் பாவவிலங்குகளை முறித்தெறிந்து தம்மிடத்தில் வரும் படியாய் மகா ஆவலோடு அழைக்கிறதைப் பார். இவரைப் புடைசூழ்ந்திருக்கும் புண்ணியவாளர்களை யும் அவர்கள் காவலான சம்மனசுகள் சூழ்ந்திருப்ப

தையும் பார். தேவபத்தி துலங்கும் இந்த இராச்சியத்தின் அழகைச் சிந்தித்துக்கொள். பரிசுத்த கன்னியர்களின் கூட்டத்தைப் பார். அது எவ்வளவோ அழகாயிருக்கிறது. இவர்கள் எல்லோரும் லீலிய புஷ்பத்திலுந் தூய்மையானவர்கள். தவத்திலுந் தாழ்ச்சியிலும் மிகுந்த விதவைகளையும், மேனை மரியாதையோடு அந்நியோந்நிய பிறசிநேகமாய் ஒருமித்து அமரிக்கையாய்ச் சீவிக்கும் ஸ்திரீ பூமான்களையும் பார். இந்தப் புண்ணியவதிகள் தங்கள் ஆத்தும காரியத்துக்கு விக்கினமின்றி வீட்டு வெளிக் கவலைகளை நடத்தித் தங்கள் ஆத்துமபத்தாவாகிய சர்வேசுரனுடைய சிநேகத்துக்குத் தடங்கலின்றித் தங்கள் புருஷர்மட்டில் வைக்கவேண்டிய பக்ஷத்தையும் எவ்வளவு நேர்த்தியாய்ச் சீர்ப்படுத்தி வருகிறார்கள். உனக்கு இஷ்டமானால் இன்னும் நாலாபக்கத்திலுஞ் சுற்றிப்பார். இவர்கள் அனைவரும் வெகுவாய் ஆசிக்கத்தக்க ஓர் விதப் பரிசுத்த கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்கிறார்கள். இவர்கள் இருதயத்தில் நடக்குஞ் சர்வேசுரனுடைய சம்பாஷணைகளுக்கு ஓயாமற் செவிகொடுக்கிறார்கள். சர்வேசுரனைத் தங்கள் இருதயத்திற் பிரியமாய் வீற்றிருக்கச் செய்வதே இவர்கள் ஏக ஆசை. இவர்கள் பலதருவாயிற் சந்தோஷித்து அகமகிழ்வார்கள். ஆனால் இவர்கள் சந்தோஷங் கிரமமுள்ளதும் பிறசிநேகத்துக்கு ஒத்ததுமாயிருக்கும். இவர்கள் ஒருவர்மட்டில் ஒருவர் பக்ஷமாயிருப்பார்கள். ஆனால் இவர்களுடைய பட்சம் மாசற்றதும் பரிசுத்தமானதுமாம். இவர்களுக்குள் சில சமயங்களிற் கஸ்தி துன்பப்படுகிறவர்கள் முதலாய் மிதமிஞ்சின வருத்தங் கொள்ளார்கள். எப்பொழுதும் மன அமரிக்கையாயிருப்பாகள். ஓரே வார்த்தையிற் சொல்லவேண்டுமானாற் சிலுவையில் அறையுண்டிருக்குந் தங்கள் கர்த்தரை ஓயாமல் தரிசித்துவருவதால் இவர்கள்

இருதயங்களில் நாவால் உச்சரிக்கக்கூடாத சந்தோஷ ஆறுதல்கள் உண்டாகிறது.

3-வது. நேற்றைய தியானத்தில் நீ செய்த நல்ல பிரதிக்கினைகளாற் பசாசையும் அதின் அவலக்ஷண கூட்டத்தையும் வெறுத்துத் தள்ளிவிட்டாய். ஆனால் உன் இராசாவாகிய சேசுநாதரையும் அவரைச் சூழ்ந்த பரிசுத்தவான்களையும் நீ அண்டிவரவில்லை. இரு பக்கத்துக்கு மத்தியில் மாத்திரம் நின்றுகொண்டிருந்தாய்.

4-வது. இப்போதுதான் இரண்டிலொன்று முடிவுகட்டவேண்டும். தேவமாதாவுஞ் சூசையப்பரும் அர்ச். ஞானப்பிரகாசியாரும் அர்ச். மோனிக்கம்மாளும் இன்னும் உன்னைப்போல் உலகத்திற் சீவித்த கணக்கற்றபேரும் நீ சேசுநாதரைத் தெரிந்துகொண்டு தங்களோடு ஒன்றாய் வரும்படி வெகுவாய்க் கூப்பிடுகிறார்கள்.

5-வது. சிலுவையில் அறையுண்டிருக்கும் உன் இராசாவாகிய சேசுநாதரும் உன் பேரிட்டு உன்னை அழைத்து என் பிரிய சகோதரனே என்னிடத்தில் வா. உனக்கு நான் முடிசூட்ட இருக்கிறேன். என்னை அண்டித் தீவிரமாய் வா என்கிறார்.

தெரிந்துகொள்ளுதல்.

1-வது. ஆ உலகமே, ஆ அவலக்ஷண கூட்டமே, உன் குடையின்கீழ் என்னை நீ காணமாட்டாய். நான் உனக்கு அடிமைப்பட்டவனல்ல. இனி என்றென்றைக்கும் உன் வீண் சிலர்க்கியங்களையும் மகிமைகளையும் விட்டுவிட்டேன். அகங்கார கொடிய பேய்களின் அரசனே உன்னிலும் நிர்ப்பாக்கியன் இல்லை: நரகப் பசாசே உன்னையும் உன்னைச் சேர்ந்த ஆரவாரங்களையும் உன் கிரியைகளையும் முழுதும் அருவருத்துத் தள்ளுகிறேன்.

2-வது. ஆனால் என் மதுர சேசுவே, நித்திய மகிமைச் செல்வத்தின் இராசாவே, உம்மையே தெரிந்துகொள்ளுகிறேன். உம்மையே அண்டிவருகிறேன். என் ஆத்தும சத்துவங்கள் எல்லாங் கொண்டு உம்மைக் கட்டி அரவணைத்து என் முழு இருதயத்தோடு உம்மை ஆராதித்து இப்போதைக்கும் என்றென்றைக்கும் என் இராசாவாகவும் என் ஏக எசமானாகவும் உம்மைத் தெரிந்துகொள்ளுகிறேன். உமக்கு நான் என்றென்றைக்கும் பிரமாணிக்கமாய் இருந்து மாறாமல் உம்மைச் சேவித்து வருவேன். உமது பரிசுத்த முறைமைகளுக்கும் உமது திவ்விய ஏவுதலுக்கும் நித்திய காலத்துக்குங் கீழ்ப்படிந்து நடந்துவருவேன்.

3-வது. ஓ பரிசுத்த கன்னிகையே, என் நல்ல தாயாரே, என் அடைக்கலமாகவும் ஆதரவாகவும் உம்மைத் தெரிந்துகொள்ளுகிறேன். உமது கொடியின் கீழ் நானிருந்து உம்மைச் சங்கித்து விசேஷவிதமாய் நேசித்து வருவேன். என் நல்ல காவலான சம்மனசானவரே, என்னைக் கைவிடாதேயும். ஆசீர்வதிக்கப்பட்ட புண்ணிய ஆத்துமங்களின் கூட்டத்தில் என்னைச் சேரும். இவர்களோடு நான் சேருமளவும் என்னை விட்டுவிடாதேயும். அப்போதுதான் மெய்யாகவே சேசுநாதர் வாழ்த்தப்படக்கடவார்; என்றென்றைக்கும் வாழ்த்தப்படக்கடவாரென்று அவரைப் புகழ்வேன்.

19-ம் அதிகாரம்.

போதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்யும் வகை.

பிரிய சகோதரமே, நீ கொண்ட கருத்தில் அநுகூலப்பட அவசியமான தியானங்கள் இதுதான். இந்தத் தியானங்களைச் செய்துமுடித்தபின் தைரியமாய்த் தாழ்ச்சியோடு பொதுப்பாவசங்கீர்த்தனஞ் செய்வாயாக. ஆனால் வீண் அச்சத்தால் எந்தக் கலக்கத்துக்கும் இடங்கொடாதே. தேளானது நம்மைக் கொட்டும்போது ஆபத்துக்குரியதாய் இருக்கிறது. ஆனால் அதின் தைலமே அதின் விஷத்துக்கு அவுழ்தமாயிருக்கிறதாம். இப்படியே பாவத்தைக் கட்டிக்கொள்ளும்போது பாவம் வெட்கத்துக்குரியதாய் இருக்கிறது மெய். ஆனால் அதைச் சங்கீர்த்தனஞ் செய்து தவஞ்செய்கையில் நமக்குள்ள துக்கம் இரட்சணியமாகிறது. மனஸ்தாபமும் பாவசங்கீர்த்தனமும் பாவத்தின் அவலக்ஷணத்தை நீக்கி அதின் கெட்ட வாசனையைப் போக்குஞ் சுகந்த புஷ்பங்களாம். மதலேனம்மாள் பெரும் பாவியென்று சிமோன் என்பவன் சேசுநாதரிடத்திற் சொல்ல இவர் அப்படியல்லவென்று இவள் சிந்திய பரிமள தைலத்தைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசினபோது இவள் நேசத்தின் பெருக்கத்தைக் குறித்துமாத்திரமே பேசினார். பிரிய சகோதரமே, நாம் மெய்யாகவே தாழ்ச்சியுள்ளவர்களாய் இருப்போமேயாகில் பாவத்தால் சர்வேசுரனுக்கு நிந்தை வருவதைப்பற்றி அதை நாம் மட்டற்ற விதமாய்ப் பகைப்போம். இன்னமும் நமது பாவத்தின்மட்டில் துக்கித்து அவைகளைச் சங்கீர்த்தனஞ் செய்வது நமக்குப் பிரியமாயிருக்கும். ஏனெனில்

இதனால் சர்வேசுரனுக்கு மகிமை யுண்டாம். மேலும் நம்மை யுபாதிக்கிற வியாதியை வயித்தியனுக்கு நன்றாய்ச் சொல்லிக்காட்டுவதால் நமக்கு ஓர்வித ஆறுதலுண்டு. இப்படியே நீ உன் ஆத்தும குருவானவர் அண்டையில் வந்து முழங்காலில் இருக்கையில் கல்வாரிமலையின்பேரில் சிலுவையில் அறையுண்டு தொங்குஞ் சேசுகிறீஸ்து நாதருடைய பாதங்களின் அடியில் இருப்பதாகவும் அவருடைய விலைமதியாத திருவிரத்தம் உன் பாவங்களினின்று உன்னைக் கழுவி இரக்ஷிக்க உன்பேரில் எப்பக்கத்திலும் ஓடுவதாகவும் நினைத்துக்கொள். ஏனெனில் தங்கள் பாவங்களின்மட்டில் மனஸ்தாபப்பட்டு அதுகளைச் சங்கீர்த்தனஞ் செய்கிறவர்கள்பேரில் ஏராளமாய்ப் பாய்ந்தோடுகிற இரத்தம் இரட்சகருடைய மெய்யான இரத்தமாய் இராவிடாலும் அவர் சிலுவையிற் சிந்திய இரத்தத்தின் பேறுபலன்தான். ஆதலால் உன் இருதயத்தினின்று உன் பாவங்களெல்லாம் புறப்படும்படி அதுகளை நன்றாய்த் திறந்து காட்டு. ஏனெனில் உன் இருதயத்தினின்று பாவங்கள் புறப்படப் புறப்படச் சர்வேசுரனுடைய பாடுகளின் விலைமதியாத பேறுபலன் உன் ஆத்துமத்தை அலங்கரித்து அர்ச்சிக்கும்.

விசேஷமாய் உன் பாவங்களை எல்லாந் தெளிவாய்க் கபடற்றதனமாய்ச் சொல்லும்படி உன்னை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உன்னுடைய பாவங்களை எல்லாம் நீ நன்றாய்ச் சங்கீர்த்தனஞ் செய்து உன் மனச்சாட்சி அமரிக்கை அடையும்படி செய். இப்படி நீ பாவசங்கீர்த்தனஞ் செய்தபின் உன் ஆத்தும குருவானவர் உனக்குச் சொல்லும் புத்திமதிகளையும் அபராதங்களையுந் தாழ்ச்சியோடு கேட்டுக்கொண்டு உன் இருதயத்துக்குள் ஆண்டவரே! பேசும், உமது ஊழியன் செவிகொடுத்துக் கேட்கிறான் என்பாய்.

மெய்யாகவே பிரிய சகோதரமே உன்னிடத்திற் பேசுகிறவர் சர்வேசுரன்தான். ஏனெனில் அவர் தமது குருக்களைக் குறித்து உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குத்தானே செவி கொடுக்கிறான் என்றார். நீ முன்னதாகவே வாசித்துத் தியானித்திருக்கவேண்டிய பின்னால் வரும் பிரதிக்கினை முயற்சியைக் கவனமாய் வாசித்து உன்னால் இயன்ற துக்கமனஸ்தாபம் உன் இருதயத்தில் உண்டாகும்படி பிரயாசப்படக்கடவாய்.

20-ம் அதிகாரம்.

சர்வேசுரனைச் சேவிக்கவேண்டும் என்கிற பிரதிக்கினையை ஆத்துமத்திற் பதிப்பதற்காகவும் தவக்கிரியைகளை முடிப்பதற்காகவுமான கேட்டியான பிரதிக்கினை முயற்சி.

இதனடியிற் கையொப்பமிட்டிருக்கும் மிகவும் நீசனும் அபாத்திரவானுமாகிய நான் நித்தியராகிய சர்வேசுரனுக்கு முன்பாகவும் அவருடைய அர்ச்சியசிஷ்டவர்களுக்கு முன்பாகவுஞ் செய்யுங் கெட்டியான பிரதிக்கினையாவது :

என்னை ஒன்றுமில்லாமையினின்று சிஷ்டித்துக் காப்பாற்றி ஆதரித்துக் கணக்கில்லா ஆபத்துகளினின்று என்னை இரட்சித்து இத்தனையாயிரம் உபகார நன்மைகளை எனக்களிக்கத்தயைபுரிந்த என் சர்வேசுரனுடைய தயையின் மட்டற்ற தனத்தை யோசித்துக்கொண்டும் இன்னங் கணக்கில்லா என் நன்றிகெட்ட துரோகங்களையும் நான் மனந்திரும்பாத தாமத

த்தையுஞ் தேவ வரப்பிரசாதங்களை நான் பிறக்கணித்த துரோகத்தையும் இன்னம் எண்ணிமுடியா என் மற்றப் பாவங்களையும் பாராமல் எனக்காக இந்தப் பிராயம்வரையில் இவ்வளவு பொறுமையோடு காத்திருந்து என் அக்கிரமங்களை இத்தனை நாளாய்ச் சகித்துத் தமது அண்டையில் நான் மனந்திரும்பி வரும்படி இத்தனை முறை நல்ல ஏவுதல்களை வருவித்த உத்தம தந்தையின் கண்டுபிடிக்கக்கூடாத தயாளதாக்ஷணியத்தை யோசித்துக்கொண்டும் இன்னம் நான் ஞானஸ்நானம் பெற்றபோது சர்வேசுரனுக்கு உகந்த பரிசுத்த பிள்ளையாய் வசீகரம் பண்ணப்பட்டேன் என்றும் இத்தனை காலம் என்பேரால் அப்போது செய்யப்பட்ட இந்தக் காணிக்கையை மறந்தாற்போலே ஆயிரம் பதினாயிரமுறை மதிகெட்டதனமாய் என் புத்தியை அசுத்தப்படுத்தினேன் என்றும் அறிந்து இப்போது மெய்யாகவே மனந்திரும்பித் திவ்விய நீதியின் சிங்காசனத்திற்கு முன்பாக முழு இருதயத்தோடு சாஷ்டாங்க தெண்டனிட்டு நான் தேவதுரோக பாதகன் என்றும் என் பாவங்களினிமித்தஞ் சிலுவையில் அறையுண்டு மரித்த சேசுகிறீஸ்துநாதருடைய பாடுகளுக்கும் மரணத்திற்கும் உடந்தையாயிருந்தேன் என்றும் மெய்யாகவே ஏற்றுக் கொள்ளுகிறேன். இப்படி நான் என்றென்றைக்கும் சபிக்கப்பட்டு நரகத்திற் புதைக்கப்பட்டிருக்கப் பாத்திரவானாயிருக்கிறேன்.

ஆயினும் நித்திய தயை சுரூபியாகிய சர்வேசுரனுடைய அளவற்ற தயாளத்தின் சந்நிதியைநோக்கி வந்து அவர் என் பாவங்களுக்கெல்லாம் பரிபூரண பொறுத்தல் அளிக்கத் தயைபுரியும்படி மிகவும் இரந்துமன்றாடுகிறேன். இதற்காக என் ஆண்டவரும் என் ஆத்தும இரட்சகருமாகிய சேசுகிறீஸ்துநாதருடைய பாடுகளையும் மரணத்தையுந்தானே ஒப்புக்கொ

டுக்கிறேன். இந்த விசுவாச நம்பிக்கையில் ஊன்றிக்கொண்டு நான் ஞானஸ்நானம்பெற்ற நாளையில் எனக்காகச் சர்வேசுரனுக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தைப்பாட்டை அங்கீகரித்துக்கொண்டு மறுபடியும் அதைப் புதுப்பித்து நிச்சயப்படுத்துகிறேன். பசாசையும் உலகத்தையுஞ் சரீரத்தையும் விட்டுவிடுகிறேன். அவைகளின் நிர்ப்பாக்கிய ஏவுதல்களையும் ஆடம்பரங்களையுங் கிரியைகளையும் என் சீவியகாலத்திற்கும் நித்தியத்திற்கும் அருவருத்துத் தள்ளுகிறேன். மேலும் தயாபர கருணை நிறைந்த சர்வேசுரனை அண்டிவந்து எப்போதைக்கும் என்றென்றைக்கும் அவரைச் சேவித்துச் சிநேகித்து வருவேன் என்கிற மறுக்கப்படாத பிரதிக்கினையை அவருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இதற்காக என் புத்தியையும் அதின் சகல தத்துவங்களையும் என் ஆத்துமத்தையும் அதின் சகல வல்லமைகளையும் என் இருதயத்தையும் அதின் சகல பற்றுதல் ஆசைகளையும் என் சரீரத்தையும் அதின் பஞ்சேந்திரியங்களையுஞ் சர்வேசுரனுக்கு வசீகரம் பண்ணுகிறேன். எனக்குச் சொந்தமாகிய எந்தக் காரியத்தைக்கொண்டும் அவருடைய திவ்விய சித்தத்துக்கும் அவருடைய மேலான மகத்துவத்திற்கும் விரோதமானது எதையும் இனி பரிச்சேதஞ் செய்வதில்லை யென்று கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிறேன். இந்த வார்த்தைப்பாட்டில் பரிச்சேதந் தப்பிப்போகாமலும் என் இப்படிப்பட்ட பிரதிக்கினையைச் செய்தேன் என்கிற மனஸ்தாபத்துக்கு இடம் இராதபடிக்கும் என்றென்றைக்கும் அவருக்கு மிகுந்த கீழ்ப்படிதலுள்ள பிரமாணிக்கமான ஊழியனாக என்னை முழுதும் மனப்பூர்த்தியாய்ச் சம்பூரணமாய் இந்தக்ஷணமே ஒப்புக்கொடுக்கிறேன்.

என் சத்துருவாகிய பசாசின் சோதனையினாலென்கிலும் என்னுடைய பலவீனத்தினாலென்கிலும்

இந்த நல்ல பிரதிக்கினைகளில் எதிலாகிலுந் தப்பிப் போகும்படி நேரிட்டால் அதை நான் அறிந்தவுடனே அந்தத் தப்பிதத்தை விட்டு எழுந்திருந்து அற்ப கூத்தளிப்பு தாமதமின்றி மறுபடியுஞ் சர்வேசுரனுடைய தயை நிறைந்த கரங்களில் என்னை ஒப்பித்து விடுவேன் என்று இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய தயவைக்கொண்டு இப்போதே நல்ல பிரதிக்கினை செய்கிறேன்.

இதுதான் என் கருத்து, என் மனது, என்னுறுதியான மாறாத பிரதிக்கினை. சர்வேசுரனுக்கு முன்பாகவும் ஓட்டோலகத் திருச்சபைக்கு முன்பாகவும் என் நல்ல தாயாராகிய யுத்தத் திருச்சபைக்குமுன்பாகவும் அதின் ஸ்தானாபதியாகிய இந்தக் குருவானவருக்கு முன்பாகவும் மாற்றாமலும் குறைக்காமலும் மேற் சொல்லிய பிரதிக்கினையை உறுதியாக ஸ்திரப்படுத்துகிறேன்.

நித்தியருஞ் சர்வ வல்லபமுள்ளவரும் உத்தமருமான பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய ஏக சர்வேசுரா! இந்த நல்ல பிரதிக்கினையை என்னிடத்தில் உறுப்படுத்தத் தயைபுரியும். என் இருதயம் உமக்கு ஒப்புக்கொடுக்கும் இந்தப் பலியைச் சுகந்த மணம்போல ஏற்றுக்கொள்ளத் தயைபுரியும். இந்தப் பிரதிக்கினையைச் செய்ய என் மனதில் நல்லுணர்ச்சியைத் தரக் கிருபை கூர்ந்த கர்த்தாவே இதை நான் நுணுக்கமாய் அநுசரித்து முடிக்க எனக்கு அவசரமான வர்த்தையும் பலத்தையுங் கொடுத்தருளும். என் தேவனே! நீரே என் இருதயத்திற்கும் ஆத்துமத்திற்கும் புத்திக்கும் ஏக தேவனாயிருக்கிறீர். சேனுவே இப்போதைக்கும் நித்தியத்திற்கும் உம்மை அறிந்து அங்கீகரித்து ஆராதிக்கின்றேன். சேசுநாதர் வாழ்த்தப்படக்கடவாராக.

21-ம் அதிகாரம்.

ஆத்தும சுத்தத்தின் முதற்படியைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளின் அநுமான முடிவு.

இந்தப் பிரதிக்கினையைச் செய்த பின்பு சர்வேசுரனுடைய குருவானவர் சுவாமியின் திருநாமத்தால் இந்தப் பூமியில் உனக்குப் பாவப்பொறுத்தல் கொடுக்கும் அந்நேரத்தில்தானே சம்மனசுகளும் அர்ச்சியசிஷ்டவர்களும் பார்க்க உன் நேச இரட்சகராகிய சேசுகிறீஸ்து நாதர் மோக்ஷத்தில் உனக்குப் பாவப்பொறுத்தல் அளிக்கிறார் என்று நினைத்து மகா பக்தி வணக்கமாய் இருக்கக்கடவாய். அப்போது தான் உனக்கு வந்த பாக்கியத்தைக் கண்டு மோக்ஷவாசிகளனைவருஞ் சந்தோஷித்து அகமகிழ்வார்கள். அப்போதுதான் சந்தோஷ கீதங்கள் பாடிக்கொண்டு பாவப்பிணியினின்று சொஸ்தப்பட்டுச் சர்வேசுரனோடு சமாதானமான உன் இருதயத்திற்குச் சிறந்த சமாதானத்தின் இன்பமான முத்திரையைக் கொடுப்பார்கள்.

ஆ பிரிய சகோதரமே, உன்னை நீ சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதால் தம்மைத்தாமே அவர் உனக்குக் கைம்மாறாக அளித்து நித்திய சீவியத்தைக் கொடுக்கச்செய்யும் இந்த உடன்படிக்கை எவ்வளவு ஆச்சரியத்துக்குரியது! இனி இறகை எடுத்து நல்ல மனதோடு சந்தோஷமாய்க் கையொப்பமிட்டுப் பீடத்தை அண்டிப் போவாய். அங்கே சர்வேசுரனும் உன் பிரதிக்கினையை ஏற்றுக்கொண்டு மோக்ஷத்தைக் கொடுப்போம் என்று தாம் கொடுத்த வார்த்தைப் பாட்டில் தமது திவ்விய முத்திரையைப் பதியவைத்

தாற்போல் சற்பிரசாதத்தின் வழியாக உன் இருத யத்தில் தம்மைத்தாமே பதியவைத்து முத்திரையிடு வார். இவ்வகையாய்த்தான் பிரிய சகோதரமே பாவத் தையும் அதின்பற்றுதலையும் விட்டொழித்து உன் ஆத்துமம் பரிசுத்தமாகும் என்று நினைக்கிறேன். ஆ னல் ஆசாபாசங்களை அடக்கி ஆண்டபோதிலும் இந் தக் கண்ணினீர்க்கணவாயில் நாம் இருக்குமட்டும் நமது சுபாவ பலவீனத்தைப்பற்றி அதுகளை முழு தும் அறுத்து வேரோடே பிடுங்கி நிர்மூலமாக்கிவிட நம்மாற் கூடாததினுல் அதுகள் நமது ஆத்துமத்தில் வெகு சுளுவாய்க் களைகள்போல மறுபடியும் முளைக் கும். ஆதலால் இதற்கான சில புத்திகளைச் சொல் லப்போகிறேன். இதைக்கொண்டு சாவானபாவமும் அதின் பற்றுதல்களும் உன் இருதயத்திற் பரிச்சே தம் நுழையாதபடிக்கு இனி உன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இன்னம் நான் சொல்லப்போகிற ஆ லோசனைகள் உன் ஆத்துமத்தை இன்னம் அதிகமா ய்ச் சொஸ்தப்படுத்துகிறதற்கு உதவும். ஆதலால் இவைகளை நான் சொல்லுகிறதற்கு முந்தி நீ அடை யவேண்டிய அவசியமான விசேஷ பரிசுத்தத்தனத் தைக் குறித்து இரண்டொரு வார்த்தை சொல்லுகி றேன்.

22-ம் அதிகாரம்.

அற்பப்பாவங்களின்மட்டில் எவ்விதப் பற்றுதலு மின்றி நீங்கியிருக்கவேண்டிய தேன் கிறதைக் குறித்து.

சூரியன் உதித்து ஒளிவீசிப் பிரகாசிக்கப் பிரகாசிக்க அதிகத் தெளிவாய் நமது முகத்தில் இருக்கிற தூசி அழுக்குகளை முகக்கண்ணாடியிற் பார்க்கிறோம். இவ்வாறே இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய திவ்விய ஒளியானது நமது இருதயத்தில் அதிகமாகப் பிரகாசித்துத் துலங்கத் துலங்க அதிகத் தெளிவாய் மெய்யான பத்தியை அடைவதற்கு விக்கினமாயிருக்கிற பாவங்களையும் பாவப் பற்றுதல் குறைகளையுங் காண்போம். இந்தத் திவ்விய பிரகாசத்தினால் நமது தப்பறை குற்றங்களை அறிந்துகொள்வதுடன் இவைகளைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்கிற ஆசையும் நமது இருதயத்தில் உண்டாகும்.

ஆதலால் பிரிய சகோதரமே, முன் சொல்லிய ஞானக் கிருத்தியங்களால் சாவானபாவங்களையும் அதுகளின்மட்டில் இருக்கக்கூடுமான பற்றுதலையும் முழுதும் நீ விட்டுவிட்டிருக்கிறாய் என்பது மெய். ஆயினும் இன்னம் உன் ஆத்துமத்தில் அற்பப்பாவங்கள் மட்டில் வெகு நாட்டமும் பற்றுதலும் இருக்கிறது; இதனால் அற்பப்பாவங்கள் உன் இருதயத்தில் இருக்கிறதென்று நான் சொல்லுகிறதில்லை. ஆனால் அற்பப்பாவங்கள்பேரில் உனக்கு நாட்டமும் பற்றுதலும் இருக்கிறதென்று நீயே கண்டுகொள்வாய். அற்பப்பாவத்துக்கும் அற்பப்பாவத்தின்மட்டில் இருக்கிற பற்றுதலுக்கும் வெகு வித்தியாசம் உண்டு. ஏனெனில் அற்பப்பாவமே இல்லாமல் முழுதும் பரிசுத்தமாயிருக்க நம்மாற் கூடாது. இன்னஞ் சரியாய்ச்

சொல்லவேண்டுமானுல் இந்த உத்தம அந்தஸ்தில் நெடுங்காலம் நிலைத்திருப்பது நம்மாற் கூடாது. இதற்கு விரோதமாய் அற்பப்பாவங்களின்பேரில் சொற்ப பற்றுதல் முதலாய் இல்லாதிருக்கலாம். இவ்வகையாய்ச் சொற்ப காரியத்தில் விளையாட்டுப்போல் ஒருவிசை இரண்டுவிசை பொய் சொல்வது வேறே பொய் சொல்வதிற் பிரியம்வைத்து அதின்மட்டிற் பற்றுதலாயிருப்பது வேறே.

இப்போது நான் சொல்லுகிறது என்னவெனில் அற்பப்பாவத்தின்பேரில் இருக்கப்பட்ட பற்றுதல்கள் யாவற்றையும் ஆத்துமங் தள்ளிவிட்டுச் சுத்தமாயிருக்கவேண்டும். அதாவது: இன்னின்ன பாவத்தில் நிலைத்திருக்கவேண்டுமென்கிற மனதும் ஆசையும் இருதயத்தில் இருக்கக்கூடாது. ஏனெனில் சர்வேசுரனுக்கு உன்மட்டில் அருவருப்பு வருவிக்கத்தக்க எந்தப் பற்றுதலையும்வேண்டுமென்று உன் இருதயத்தில் வைத்துக்கொண்டிருப்பது சகிக்கக்கூடாத நீசத்தனமாம். அற்ப பாவத்தினுல் சர்வேசுரனுடைய நித்திய சாபத்திற்கு உள்ளாகாமற்போனபோதிலும் எவ்வளவு சிறு குற்றமாயினும் அவருக்குப் பொருந்தாதே. இப்படி அற்பப்பாவம் அவருக்கு ஏற்காததாயிருக்க நாம் அதின்பேரில் பிரியங்கொள்வது சர்வேசுரனுக்கு எப்பொழுதும் உகந்தவர்களாயிருக்க நமக்கு மனமில்லை என்முற்போலாகும். என்ன! புத்தி அறிவுள்ள ஆத்துமங் தன்னைப் படைத்த ஆண்டவருக்குப் 'பிரியப்படத் தேடாமற்போவதல்லாமல் இன்னம் அவரை அவமானப்படுத்தத் தேடுவது கூடுமான காரியமா ? நன்ருய் யோசித்துப்பார்.'

ஆ பிரிய சகோதரமே, சாவான பாவம் தேவசிநேகத்தோடு பொருந்தாததுபோல் தகாத பற்றுதல்களும் மெய்யான பத்திக்கு முழுதும் ஒவ்வாததே. இந்தப் பற்றுதல்கள் நமது புத்தியின் பலத்தைக்

குறைத்துத்தேவ ஆறுதல்களுக்கு விக்கினமாய்ச் சகல தந்திரங்களுக்கும் வழியாயிருக்கின்றன. இந்த இச்சைகள் ஆத்துமத்தைக் கொல்லாவிட்டாலும் அதைத் துர்ப்பலமாக்கிவிடுகின்றன. பரிமளத்தில் ஈக்கள் விழுந்து சாவதால் அதின் சுகந்தமுங் குணமும் போய்விடுவதாக ஞானியானவர் சொல்லுகிறார். இவர் கருத்து என்னவெனில், ஈக்கள் சற்றுநேரம் பரிமளத்தில் மொய்த்துக் குடிப்பதால் அவைகள் குடித்த பரிமளமாத்திரங் கெட்டுப்போக மற்றது நன்றாயிருக்கும். இதற்கு விரோதமாய்ப் பரிமளத்துக்குள் ஈக்கள் செத்து விழுந்தால் அது முழுதுங் கெட்டுப்போக அதின் விலையுங் குறைந்துவிடும். இவ்வாறே பத்தியுள்ள ஆத்துமத்தில் அற்பப்பாவம் பிரவேசித்து அதில் நீளித்திராதபோது ஆத்துமத்துக்கு இதனால் கொஞ்ச நஷ்டமாத்திரம் வரும். ஆனால் பாவங்களின்மட்டில் ஆத்துமத்துக்குண்டான பற்றுதலினாலே பாவம் அதில் குடிகொண்டிருந்தாற் பரிமளத்தின் சுகந்த வாசனைபோல் இருக்கப்பட்ட மெய்யான பத்தியை அவசியம் இழந்துவிடும்படி நேரிடும்.

சிலந்திகள் தேனீக்களைக் கொல்லுகிறதில்லை. ஆனால் அவைகளின் தேனைக் கெடுத்துவிடும். அதெப்படியென்றால் இந்தப் பூச்சிகள் தேன் கூட்டை ஓட்டடையால் எவ்வளவு பலமாய்ச் சுற்றிவிடுமென்றால் தேனீக்கள் தங்கள் கூண்டில் நுழையக் கூடாமற் கூண்டைவிட்டு ஓடிப்போகும். இவ்வகையாகவே அற்பப்பாவம் நமது ஆத்துமத்தைக் கொல்லாவிட்டாலும் பத்திக்குக் கேடாயிருக்கும். பாவப் பழக்கத்தினாலும் அதின் பற்றுதலினாலும் பாவம் நமது இருதயத்திற் குடிகொண்டிருக்கும்போது நமது ஆத்தும சத்துவங்களைப் பல தொல்லையிற் சிக்கிச் சிதறவிட்டுவிடும். தன் சத்துவங்களைப் பல தொல்லையிற் சித

றவிட்ட ஆத்துமம் மெய்யான பத்தியின் குணமாகிய தேவ சிநேக சுறுசுறுப்பு ஆவிசயோடு நற்கிருத்தியங்களைச் செய்ய வகை அறியாது. ஒரு அற்ப பொய் சொல்வது, வார்த்தைகளில் அல்லது கிரியைகளில் கொஞ்சங் கவனக் குறையாயிருப்பது, பார்வையில் கொஞ்சம் அதிக ஆசைக்கு இடங்கொடுப்பது, உடுத்தும் ஆடையில் கொஞ்ச சிலாக்கியந் தேடுவது, விளையாட்டிலும் வீண்காரியத்திலும் வேடிக்கைகளிலுங் கொஞ்சம் பிரியங்கொள்வது, இவையெல்லாம் அவ்வளவு பெரும் விஷயமல்ல. ஆனல் தேனீக்கள் சிலந்திகளைக் கண்டவுடனே அதனைத் துரத்தச் சலியாததுபோல நமது ஆத்துமத்திற் சிலந்திகளுக்கு ஒப்பான பற்றுதல்கள் நுழைந்தஞ் நுழையாததற்குள்ளாகத் தாமதமின்றி அவைகளைத் துரத்திவிடவேண்டும். ஆனல் நமது இருதயத்திற் சற்றுநேரம் அவைகள் தங்கியிருந்து நாளுக்குநாள் வேரூன்றிப்போக விட்டுவிடுவோமோ நமது பத்தியாகிய தேனெல்லாம் கொஞ்சத்துக்குள் சேதமாய்ப் போம். நமது இருதயமாகிய தேன்கூடு கெட்டுப் பாழாய்ப்போம். ஆதலால் பிரிய சகோதரமே, நீ அறியவேண்டியது யாதெனில், சர்வேசுரனுக்குப் பிரியப்படத் தேடாமல் அவருக்கு அருவருப்பாயிருப்பதைச்செய்யப் பிரியப்படும் ஆத்துமம் மெய்யான பத்தியுள்ள ஆத்துமம் அல்லவென்று, அறிந்துகொள்.

23-ம் அதிகாரம்.

பிரயோசனமற்றதும் ஆபத்துக்குரியதுமான காரியங்களிலுள்ள பற்றுதலை அறுக்க வேண்டும் என்பதின்பேரில்.

வேடிக்கை, விளையாட்டு, விருந்து, விநோதம், நாடகம், கூத்து, தன்னை அலங்கரித்துச் சோடிக்குஞ் சிங்காரச் சிறப்பு இவையெல்லாம் சுபாவமாய்த் தன்னிலே கெட்ட காரியங்களல்ல, தன்னிலே பாவ புண்ணியமல்லாதது இதை நன்மையாகவுந் தின்மையாகவும் பிரயோகித்துக்கொள்ளக் கூடுமாயிருந்தபோதிலும் இவைகளில் எப்பொழுதும் ஆபத்தில்லாமற் போவதில்லை. இவைகளில் பற்றுதல் வைக்கையில் இன்னம் அதிக ஆபத்துக்கு ஏதுவாம். உள்ளபடியே பிரிய சகோதரமே, விளையாடுகிறதுந் தன்னைச் சோடித்து அலங்கரித்துக்கொள்ளுவதும் யோக்கியதையான வேடிக்கைகளைப் பார்ப்பதும் விருந்துண்ணுவதும் பாவமற்ற காரியமாயிருந்தபோதிலும் அதில் பற்றுதல் வைக்கிறது மெய்யான பத்திக்கு ஒவ்வாத காரியம். மேலும் இவ்விதப் பற்றுதலால் பத்திக்கு வெகு ஆபத்து நஷ்டம் உண்டாகும் மெய்யாகவே. நல்ல நிலம்போல் இருக்கப்பட்ட நமதிருதயத்தில் இப்படிப்பட்ட வீணான பற்றுதல்களை விதைப்பது மகா பெரிய தின்மை. ஏனெனில் இந்த வீண் இச்சைகள் நமது ஆத்துமத்தில் விளைவதால் நல்ல நாட்டங்கள் உண்டாக விக்கினமாகும்.

பூர்வகாலத்தில் நசரோயன் சாதியார் இலாகிரி மயக்கம் வருவிக்கக்கூடுமான எதையுஞ் சாப்பிடாமல் தள்ளிவிடுவார்கள். இன்னமு முதிர்ந்த திராக்ஷப் பழங்களையுங் காய்களையுந் தானே சாப்பிடார்கள். ஏனெனில் திராக்ஷக் காய்களும் பழங்களும் மயக்கம் வரு

விக்காமற்போனாலுந் திராக்ஷக்காய்களைச் சாப்பிடுவதால் அதின் பழங்களைச் சாப்பிடவேண்டுமென்கிற ஆசையும் அந்தப் பழங்களைச் சாப்பிடுவதால் அதின் இரசத்தைக் குடித்துப்பார்க்கவேண்டும் என்கிற ஆசையும் வருமென்று பயந்து இப்படி செய்வார்கள். ஆகையால் ஆபத்தான காரியங்களை நாம் பரிச்சேதம் உதவிகொள்ளக் கூடாதென்று சொல்லுகிறதில்லை. ஆனால் அவைகளின்மட்டில் வைக்கும் பற்றுதல் பத்திக்கு நஷ்டம் வருவிப்பதைப்பற்றி அதுகளின்பேரில் நம்முடைய இருதயம் பரிச்சேதம் பற்றுதலாயிருக்கக்கூடாது. கொழுத்த மான்கள் தங்களுக்கு ஆபத்து நேரிடுங்காலத்தில் மிதமிஞ்சின கொழுப்பினால் வேண்டிய வேகத்தோடு தப்பித்து ஓடக்கூடாமல் அடுத்த முட்செடிகளில் பதுங்கி ஒளிந்துகொள்ளும். இத்தன்மையாகவே வீணான பற்றுதல்கள் நிறைந்து கொழுத்தாப்போல் இருக்கும் ஆத்துமந் திறமான பத்தியின் மெய்யான குணமாகிய சுறுசுறுப்பு வேகத்தோடு சுவாமியை நோக்கி ஓடக்கூடாமல் தடைபட்டு நிற்கும். இந்த வீண் பற்றுதல் எம்மாத்திரம் வெட்கத்துக்குரியதென்று பார். சிறு பிள்ளைகள் தும்பிகளைத் துரத்தி ஓடிப் பிடிக்கத் திரிவதைப்பார்த்து நகைப்பார் இல்லை. ஆனால் பெரிய மனிதர்கள் புத்தித் தெளிவுள்ளவர்கள் தும்பிகளுக்கு ஒப்பான சொற்ப வீண் காரியங்களில் புத்தி அறிவில்லாத சிறு பிள்ளைகளைப்போற் கவனித்து வருந்திப் பிரயாசப்படுவதைப் பார்ப்பது எவ்வளவு வெட்கத்துக்குரியது. இன்னுஞ் சரியாய்ச் சொல்லவேண்டுமானால் எவ்வளவோ கஸ்திக்குரியது. இவைகளால் ஆத்துமத்துக்கு அற்ப பிரயோசனமும் வருவதில்லை. அதற்கு விரோதமாய் நம்முடைய பத்தி கெட்டு அழிந்துபோவதற்குக் காரணமாகிறது. இப்படியிருக்க நாம் அவைகளைப் பின்

பற்றி நடப்பது ஞாயமோ. ஆதலால் பிரிய சகோதரமே, இந்தப் பற்றுதல்களை விட்டுவிடவேண்டும் என்று சொல்வது ஞாயந்தானே. எனெனில் மேற்சொல்லிய காரியங்கள் பத்திக்கு விரோதமாயிராவிட்டாலும் அவைகளின்பேரில் வைக்கும் பற்றுதலானது இதற்கு வெகு நஷ்டமாயிருப்பது மெய்.

24-ம் அதிகாரம்.

கெட்ட நாட்டங்களை விட்டுவிடவேண்டும் என்பதின்பேரில்.

பிரிய சகோதரமே, சில சுபாவமான நாட்டங்கள் நம்மிடத்தில் உண்டு. அந்த நாட்டங்கள் பாவப்பழக்கத்தினுல் உண்டாகாதபடியால் அவைகள் பாவமல்ல. வழக்கமாய் இவைகள் சாங்கோபாங்கக்குறை என்று சொல்லப்படும். இந்த நாட்டங்களால் செய்யுஞ் செய்கைகள் தப்பறை குறை என்று சொல்லப்படும். அர்ச்சியசிஷ்ட இயேரோனிமூஸ் என்பவர் சொல்லுமாப்போல் அர்ச். போல் என்னுஞ் சின்னம்மாள் கஸ்தி அழுகைக்கு எவ்வளவு நாட்டமுள்ளவளாயிருந்தாள் என்றுல் தன் புருஷனும் பிள்ளைகளும் இறந்துபோனபோது அவள் பட்ட கஸ்தியினுலும் அழுத கண்ணீராலுஞ் சாகப்போகிறவளாயிருந்தாள். இந்த அம்மாளிடத்தில் இது ஒரு குறைதான். ஆனுல் பாவமல்ல. எனெனில் அவளையுமன்றி அவள் இஷ்டத்துக்கும் மனதுக்கும் விரோதமாய் மீறிவந்த காரியம். இப்படியே சிலரிடத்தில் முரட்டுக்குணமும் சிலரிடத்திற் பிடிவாதக்குணமும் உண்டு. சிலர் கோபத்திற்குச் சார்பானவர்கள்; சிலர் இலௌகீக பொருட்கள்பேரில் பிரியமுள்ளவர்கள். கடைசியாய் எவ்வி

தக் குறையுமிராத மனிதனைக் காண்பது அரிது. ஆத லால் இந்தக் குறைகள் நம்மில் ஒவ்வொருவருக்குஞ் சொந்தமான சுபாவகுணமாயிருந்தபோதிலுங் கொஞ் சஞ் சாக்கிரதையாய்ப் பிரயாசப்பட்டால் அவைகளை குறைத்துச் சீர்ப்படுத்திக் கொள்ளலாம். இன்னமும் அதுகளை முழுதும் விட்டு நீங்கியிருக்கலாம். பிரிய சகோதரமே, இதுதான் நீ செய்யவேண்டியது கசப் பான வாதுமை மரங்களை உருசியான மரங்களாய் மாற்றிவிடுவதற்கு வழி உண்டு. அதெப்படியெனில் அந்த மரத்தின் அடியில் கொஞ்சங் கொத்தி அதின் சாரம் புறப்படும்படி செய்கிறதுதான். இவ்வகை யாய்க் கனியின் கசப்பை மாற்ற வழியுண்டானால் நம்மிடத்தில் உண்டான கெட்ட நாட்டங்களையுங் குறைகளையும் மாற்றிவிட்டு நாம் உத்தமர்களாகக் கூடாதோ சுபாவமாய் ஒருவன் எவ்வளவு சற்குண னாயிருந்தபோதிலுங் கெட்ட பழக்கங்களால் துற்ச னனாகிப்போகலாம். இதேதன்மையாய் ஒருவன் எவ் வளவுதான் சுபாவமாய்க் கெட்டவனாயிருந்தபோதி லுஞ் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தினாலுங் கொ ஞ்சம் நல்ல மனசின் பிரயாசையாலுந் தன்னைச் செயித்து உத்தம மனுஷனாகலாம். ஆதலால் அற்பப் பாவத்தின் பேரிலுள்ள பற்றுதலையும் ஆபத்துக்கு ரிய இச்சைகளையுங் குறைகளையும் விட்டு உன் ஆத் துமத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்கான புத்திமதி களையும் வழிப்பாடுகளையும் இப்போது நான் உனக் குச் சொல்லப்போகிறேன். இந்த ஞான ஔஷதங் களைக்கொண்டு எந்தச் சாவான பாவத்தையும் விட்டு நீ அதிக ஸ்திரமாய்ப் புண்ணியமார்க்கத்தில் நிலை நிற்கலாம். இவைகளை நன்றாய் அநுசரிக்கச் சர்வே சுரன் உனக்குத் தயைசெய்யக்கடவார்.

முதற்பாகம் முற்றும்.

இரண்டாம் பாகம்.

செபத்தியானத்தினாலுந் தேவதிரவிய அநுமானங்களாலுஞ் சர்வேசுரனை நோக்கி ஆத்துமம் தாவி உயர்வதற்கான பல புத்திமதிகள்

முதல் அதிகாரம்.

தியானத்தின் அவசரம்.

1-வது. செபத்தியானத்தின் வழியாக நமது புத்திக்கு ஞானவொளி தெளிவுண்டாகும். நமது மனதில் தேவசிநேக சுவாலை பற்றும். ஆகையால் நமது புத்தியிலுள்ள அந்தகாரத்தை நீக்கி நமது மனதில் ஊன்றியிருக்குங் கெட்ட பாசங்களை ஒழித்துத் தள்ளுவதற்கு இதைப்பார்க்கிலும் உத்தமமான வழிப்பாடு வேறே ஒன்றுமில்லை. இந்தச் செபத்தியானந்தான் குளிர்ந்த சலம்போல் நமது இருதயத்திற் பாய்ந்து அதில் நாட்டப்பட்ட நல்ல ஆசைகளாகிய புண்ணிய பூண்டுகள் துளிர்விட்டுத் தழைத்துப் புஷ்பிக்கச்செய்யும். இந்தத் தேவ ஆசீர்வாதத்தின் சலந்தான் நமது ஆத்துமக் குறைகளைக் கழுவிச் சுத்திப்படுத்தும். ஆசாபாசங்களால் வறண்டு காய்ந்து நமது இருதயத்தின் தாகத்தைத் தணிப்பதும் இந்த ஞானசலந்தான்.

2-வது. ஆகையால் புத்தி தோற்றத்தால் செய்யுந் தியானந்தான் முக்கியமானது. விசேஷமாய் நமது ஆண்டவராகிய சேசுநாதர் சீவியத்தையும் அவர் பட்ட பாடுகளையுந் தியானிப்பது உத்தமம். ஏனெனில் இந்தத் தியானத்தின் வழியாக நமது புத்தி நினைவு சிந்தனையெல்லாம் இரட்சகரிடத்திற் சேர்ந்து அவரையே நாடி நிற்கும்; அவரை எந்நேரமுஞ் சிந்தித்திருப்பதினால் அவரை நன்றாய் அறிந்துகொள்ளுவோம். அவரை நன்றாய் அறிவதினால் அவரிடத்தில் விளங்கின சாங்கோபாங்கத்தை நமக்கு மாதிரிகையாக வைத்து நமது கிரியைகளை உத்தம வகையாய்ச் செய்து சீர்ப்படுத்துவோம். உள்ளபடியே உலகத்துக்கு ஒளி அவரே. ஆகையால் நம்முடைய புத்திக்கு வேண்டிய ஒளிவுந் தெளிவும் அவரிடத்திலிருந்தே வரவேண்டும். அவராலேயே வரவேண்டும். அவருக்காகவே வரவேண்டும்.

நாம் ஆசிக்கும் நித்திய சீவியத்தின் ஒளியைக் கொடுக்கும் விருக்ஷம் அவரே. இவ்விருக்ஷ நிழலில் தான் நாம் தங்கி இளைப்பாறவேண்டும். யாக்கோபென்பவர் தோண்டிய வற்றாத ஊற்றுக்கேணி அவரே. இந்த வற்றாத ஊற்றின் சலத்திலேதான் நாம் மூழ்கி நமது சகல அசுத்தங்களையுங் கழுவவேண்டும். கடைசியாய் எப்படி சிறுபிள்ளைகள் தங்கள் தாய்தகப்பன்மார்கள் பேசுவதைக் கேட்டுக்கேட்டு அவர்களோடு தாங்களும் மழலைச்சொல்லாய்ப் பேசிப்பேசி அவர்களுடைய பாஷையைக் கற்றுக்கொள்ளுவார்களோ அப்படியே நாமுந் தியானத்தினால் நமது இரக்ஷகர் அருகாமையில் இருந்துகொண்டு அவர் சொன்ன வார்த்தைகளையும் அவர் செய்த கிரியைகளையும் அவருக்கிருந்த கருத்துகளையுங் கவனமாய் தியானித்துவருவதால் அவருடைய உதவியால் அவரைப்போல் நாமும் பேசவும் நடக்கவும் அவர்

ஆசித்ததுபோல் நாம் ஆசிக்கவுஞ் சுளுவாய்க் கற்றுக் கொள்வோம். பிரிய சகோதரமே, நமது பிதாவாகிய சர்வேசுரனிடத்தில் இந்த வாசல் வழியாகத்தான் நாம் போய்ச் சேரவேண்டும். ஏனெனில் கண்ணுடிக்குப் பின்னுல் இரசம் பூசியிராவிட்டால் நமது முகத்தைப் பார்க்கக் கூடாததுபோல் நமது இரக்ஷகருடைய பூசிக்கப்பட்ட மனுஷீகந் தெய்வீகத்தோடு சேர்ந்திராவிட்டால் இவ்வுலகில் அந்தத் தெய்வீகத்தை நாம் சிந்தித்துத் தியானிப்பது நம்மாற் பரிச்சேதம் ஆகாது. இது இப்படியிருக்கச் சேசுகிறீஸ்துநாதருடைய சீவியத்தையும் மரணத்தையுங் குறித்துத் தியானிப்பது நமது பலவீனத்துக்கு மிகவுந் தக்கதாம். இதைக்குறித்துத் தியானிப்பது மகா மதுரமாகவும் இன்பமாகவும் பிரயோசனமாகவும் இருப்பதால் நாள்தோறும் இதைக்குறித்துத் தியானஞ்செய்வது உத்தமம். நமது இரக்ஷகர் விசேஷ காரணத்தைப்பற்றியே தம்மைப் பரலோகத்தினின்று இறங்கிய அப்பம் என்று சொல்லுகிறுர். ஏனெனில் பலவிதக் கறி பதார்த்தத்தோடும் அப்பத்தைச் சாப்படுவதுபோல நமது செபங் கிரியைகள் எல்லாவற்றிலும் நமது இரட்சகரைத் தியானித்துச் சிந்தித்துத் தேடவேண்டும். இதற்காகவே சேசுகிறீஸ்துநாதருடைய சீவியத்தையும் மரணத்தையுங் குறித்துப் பல தியானங்களாகப் பகுத்து எழுதியிருக்கிறுர்கள். ஆனதால் இவைகளைக்கொண்டு தியானம்பண்ணுவது அதிக எளிது. உனக்கு இஷ்டமான புத்தகங்களைத் தெரிந்து உதவிக்கொள்ளலாம்.

3-வது. நாள்தோறும் பகல் அசனத்துக்கு முந்தி ஒருமணிநேரந் தியானஞ்செய். கூடுமானுல் அதிகாலமேதானே இந்தத் தியானத்தைச் செய்வது உத்தமம். ஏனெனில் அப்போது புத்தி அவ்வளவு வீண் சிந்தைகளின்றி அமரிக்கையாயிருக்கும். உன் ஆத்

தும குருவானவருடைய விசேஷ உத்தாரமில்லாமல் ஒருமணிநேரத்துக்கு அதிகமாய்த் தியானஞ்செய்யாதே.

4-வது. கோவிலில் அமரிக்கையாயிருந்து தியானஞ்செய்யக் கூடுமானல் உத்தமம். ஏனெனில் அங்கே தாய்தகப்பன் புருஷன் பெண்சாதி ஒருவரும் உனக்குத் தொந்தரை செய்யார்கள். இதற்கு விரோதமாய் உன் வீட்டில் பலபேருக்கு நீ அமைந்து கீழ்ப்படிய வேண்டியிருப்பதால் ஒருமணிநேரம் அவ்வளவு மனச்சுதந்தரத்தோடிருக்கச் சிலவிசை கூடாமையாயிருக்கும்.

5-வது. சர்வேசுரனுடைய சமூகத்தில் இருக்கிறாய் என்று நினைத்துக்கொண்டு செபத்தியானங்களை எப்பொழுதுந் துவக்கக்கடவாய். இந்த ஒழுங்கை அநுசரித்து வருவதற்குப் பின்வாங்காதே. இது உனக்கு எவ்வளவு அநுகூலமாயிருக்குமென்று கொஞ்சத்துக்குள் பார்ப்பாய்.

6-வது. திருச்சபையில் வழங்குகிற இலத்தீன் பாஷையில் பரமண்டலமந்திரம் பிரியதத்தமந்திரம் விசுவாசமந்திரங்களைச்சொல்வது உத்தமம். ஆகிலும் எந்தப் பாஷையில் சொன்னாலும் அதின் ஒவ்வொரு வார்த்தைகளை நன்றாய்க் கண்டுபிடித்துக் கவனமாய்ப் பத்தியோடு சொல்லவேண்டும் அநேக மந்திரங்களைச் செபிக்கவேண்டும் என்று படபடவென்று சொல்லாதே. அதிகமாய்ச் செபங்களைச் செபிப்பது அவசரமல்ல. ஆனல் செய்யுஞ் செபத்தைப் பத்தி சிநேகத்தோடு செய்யவேண்டும். இப்படி பத்தியாய்ச் சொல்லுகிற ஓரோ பரமண்டலமந்திரம் பத்திக் கவனமின்றிப் படபடவென்று செபிக்கும் அநேக மந்திரங்களைப் பார்க்கிலும் பலனுள்ளது.

7-வது. செய்யுஞ் செபங்களிலே ஐம்பத்துமூன்று மணிச் செபம் செய்வது அதிக உத்தமமானது.

ஆனல் இதனைத் தகுந்தபடி சொல்ல நீ கற்றுக்கொள்ள வேண்டியதுமன்றி இதன் முறையைத் தெளிவாய் எழுதியிருக்கும் எந்தப் புஸ்தகமாகிலும் உன்னிடத்தில் இருந்தால் நல்லது இன்னஞ் சேசுகிறீஸ்துநாதர் பிரார்த்தனை தேவமாதா பிரார்த்தனை அர்ச்சியசிஷ்டவர்கள் பிரார்த்தனையையும் பெரியவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செபபுஸ்தகங்களிலுள்ள வேறேசெபங்களையுஞ்செபிப்பது நல்லதுதான். ஆனல் தியானஞ்செய்யும் வரம் உனக்கு இருந்தால் இந்தத் தியானத்தை நீ பிரதானமாய்ச் செய்ய வேண்டும். இப்படி நீ தியானஞ்செய்தபின் வீட்டுவேலையைப்பற்றியென்கிலும் வேறே எந்த முகாந்தரத்தைப்பற்றியென்கிலும் நீ வழக்கமாய்ச் செய்யுஞ் செபங்களைச் செய்யக்கூடாவிட்டால் அதினல் நீ கலங்காதே. தியானத்துக்கு முன்னும் பின்னும் பரமண்டலமந்திரம் பிரியதத்தமந்திரம் விசுவாசமந்திரங்களைமாத்திரஞ் சொல்லு.

8-வது. நீ செபஞ் செய்யும்போது தியானத்தின் பேரில் உன் இருதயத்தில் நாட்டமுண்டானல் உன் செபத்தை விட்டு அந்த நாட்டத்தின்படி அமரிக்கையாய்த் தியானம்செய். இதினல் நீ வழக்கமாய்ச் செய்யுஞ் செபங்களை முடிக்கக்கூடாமற் போனதினிமித்தம் வருத்தப்படாதே. ஏனெனில் இந்தச் செபங்களுக்குப் பதிலாக நீ செய்த தியானஞ் சர்வேசுரனுக்கு அதிக பிரியமாகவும் உன் ஆத்துமத்துக்கு அதிக உபயோகமாகவும் இருக்கும். ஆனல் கடமைச் செபங்களைச்செய்யவேண்டியவர்கள் முந்திக் கடமைச்செபத்தைச் செபிக்கவேண்டும். ஏனெனில் அத்தருணத்தில் எல்லாத்துக்குமுந்திக் கடமையை நிறைவேற்றவேண்டும்.

9-வது. பல வேலைகளைப் பற்றியென்கிலும் வேறே எது காரணத்தைப் பற்றியென்கிலுங் காலமே தியா

னஞ்செய்யக் கூடாவிட்டால் பகல் போசனத்துக்குப்பிறகு உடனே இந்தத் தியானத்தைச் செய்யத் துவக்காதே. கூடியமட்டும் வெகுநேரம்பொறுத்துச் செய். ஏனெனில் சீரணமாவதற்குமுந்தி நன்றாய்த் தியானஞ்செய்யவுங் கூடுமாயிராது, உனக்குச் சவுக்கியக் குறையாகவுமிருக்கும்.

கடைசியாய்த் தியானஞ்செய்ய நாள்முழுதுஞ் சமையங் கிடைக்காவிட்டால் அதின் இடமாக அநேக மனவல்லயச்செபங்களைச் செபித்துப் பத்திக்கடுத்த எந்தப் புஸ்தகத்தையாகிலுங் கொஞ்சம் வாசிக்கலாம். இப்படி அன்று தியானஞ் செய்யக் கூடாமற் போனதின்மட்டில் கஸ்திப்பட்டு மறுநாள் அகத்தியத் தியானஞ்செய்யவேண்டுமென்று கெட்டியான பிரதிக்கினை செய்வாய்.

2-ம் அதிகாரம்.

நன்றாய்த் தியானஞ் செய்வதற்குச் சுருக்கமானவகை
தியான ஆரம்பத்திற்கு முதலிலயாகிய
தேவ சந்நிதானத்தைக் குறித்து.

பிரிய சகோதரமே, எப்படி தியானஞ்செய்யவேண்டுமென்று உனக்குச் சிலவிசை தெரியாது. ஏனெனில் இக்காலத்தில் இதைச் சரியாய் அறிந்து அநுசரிக்கிறவர்கள் மிகவுங் கொஞ்சம்பேர். ஆனதைப்பற்றி நீ தியானம் செய்வதற்கு எளிதான ஒரு வகையைச் சுருக்கத்தில் இப்போது சொல்லிக் காண்பிக்கப் போகிறேன். தியானத்தைக் குறித்து எழுதப் பட்டிருக்கும் அநேக நல்ல புத்தகங்களை வாசிப்ப

தாலும் உன் பரிட்சையினாலுந்தானே அதிக விபரமாக வரவரக் கற்றுக்கொள்வாய்.

இப்போது தியானத்தின் முதனிலையாகிய தியான முஸ்திப்பைக் குறித்துச் சொல்லப்போகிறேன். இந்த முஸ்திப்பில் இரண்டு காரியம் அடங்கியிருக்கிறது. 1—வது. சர்வேசுரனுடைய சமூகத்திலிருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறது. 2—வது. அவருடைய உத்தாசையைக் கேட்கிறது.

சர்வேசுரனுடைய சமூகத்திலிருப்பதாகச் சிந்திப்பதற்குப் பிரதானமான வகை நாலுண்டு. ஆரம்பத்தில் இப்படி செய்வதால் வெகு பிரயோசனம் வரலாம்.

முதல் வகை சர்வேசுரனுடைய அளவற்றதனத்தைப் புத்தியில் ஆழ்ந்து யோசித்துச் சர்வேசுரன் எல்லாத்திலும் எங்கும் வியாபித்திருக்கிறார் என்றும் அவர் மெய்யாகவே இராத இடமும் பொருளும் உலகில் இல்லை என்றும் நினைத்துக்கொள்ளுகிறது. இவ்வாறு பறவைகள் எத்திக்கில் பறந்தபோதிலும் எங்கும் ஆகாயத்துக்குள் இருப்பதுபோல நாம் எந்தவிடத்துக்குப் போனபோதிலும் எங்கே இருந்தபோதிலும் எங்குந் சர்வேசுரன் சந்நிதியில் இருக்கிறோம். இந்தச் சத்தியத்தை அறியாதவர்கள் இல்லை. ஆனால் இதின்மட்டில் வேண்டிய கவனங்கொள்ளுகிறதில்லை. குருடர் தங்கள் அருகாமையிலிருக்கும் மன்னவனைப் பார்க்காவிட்டாலும் மன்னவா னிருக்கின்றான் என்று அறிந்தால் அடக்க ஒடுக்கந்தோடிருப்பார்கள். ஆனால் தங்கள் அருகாமையில் மன்னவான் இருக்கிறதைக் கண்டறிந்துகொள்ள அவர்களுக்குக் கண்ணில்லாமையால் அவன் இருப்பதை எளிதாய் மறந்துபோவார்கள். மறந்துபோவதினால் அவனுக்குச் செய்யவேண்டிய சங்கை மரியாதையைச் செய்யத் தப்பிப்போவார்கள். ஆ! பிரிய சகோதரமே,

இவ்வகையாகவே எங்கும் நிறைந்து பிரசன்னராயிருக்குங் கடவுளை நாமுங் கண்கொண்டு அறியக்கூடாத குருடர்களாயிருக்கிறோம். அவரை நாம் பார்க்காததினால் அவர் நமது அருகில் இருக்கிறாரென்று விசுவாசத்தினால் அறிந்தபோதிலும் அதை எளிதாய் மறந்துவிடுகிறோம். அவர் நமது அருகிலிருந்து நம்மைப் பார்க்காததுபோல் நாம் நடந்து வருகிறோம். ஏனெனில் சர்வேசுரன் எங்கும் நிறைந்திருக்கிறாரென்று நாம் அறிந்திருந்த போதிலும் அப்போதைக்கப்போது இதை நாம் நினையாவிட்டால் இந்தச் சத்தியத்தை நாம் அறியாததுபோலவேயிருக்கும். ஆதலால் எப்போதுந் தியானஞ் செய்வதற்கு முந்தி சர்வேசுரன் எங்கும் இருக்கிறார் என்று நமது ஆத்துமக்கண்ணாற் கவனமாய் உற்றுப்பார்க்க வேண்டும். தாவீதென்பவர் இதில் வெகுவாய்ப் பழகியிருந்தாரென்று அவருடைய சங்கீதங்களைக் கொண்டு தெரியவருகிறது. அவர் சொல்வதைக்கேள். என் கர்த்தரே சுவாமீ! நான் பரமண்டலங்களில் ஏறினும் நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளங்களில் இறங்கினாலும் அங்கும் நீர் இருக்கிறீர். யாக்கோபென்பவர் தெரிசனமாய்க் கண்ட ஏணியைப் பார்த்து அதிசயித்துச் சொல்லிய வார்த்தைகளையுஞ் சொல்லலாம். இந்த ஸ்தலம் எவ்வளவோ பயங்கரத்துக்குரியது. சர்வேசுரன் இங்கு மெய்யாகவே இருக்கிறார். இதை நான் அறியாமலிருந்தேன். இதின் அர்த்தம் யாதெனில் சர்வேசுரன் எங்கும் இருப்பதை அந்நேரத்தில் இவர் நினையாமலிருந்தாரென்பதாம். ஏனெனில் சர்வேசுரன் எங்கும் எல்லாவஸ்துக்களிலும் இருப்பதை இவர் அறியாமல் இருந்திருக்கக்கூடாது. ஆதலால் நீ தியானஞ் செய்ய ஆரம்பிக்கும்போது என் இருதயமே! மெய்யாகவே சர்வேசுரன் உன்னைப் பார்க்கிறார். சர்வேசுரனுக்கு எதி

ராக இங்கேயிருக்கிறாய் என்று உன் முழு இருதயத்தோடு சொல்லுவாய்.

2—வது. இரண்டாம் வகை. நீ இருக்கிறவிடத்தில் சர்வேசுரன் பிரத்தியக்ஷமாய் இருக்கிறாரென்று நினைத்துக்கொள்வதல்லாமல் விசேஷமாய் உன் இருதயத்திலும் உன் புத்திக்குள்ளும் இருப்பதாக நன்றாய் நீ நினைத்துக்கொள்ளவேண்டும். அவர்தான் உன் இருதயத்திற்கு இருதயம்போலவும் உன் புத்திக்குப் புத்திபோலவும் இருந்துகொண்டு தமது தெய்வீகப் பிரசன்னத்தால் அவைகளுக்கு உயிர்போலிருக்கிறார். ஏனெனில் ஆத்துமமானது சரீரமெல்லாம் பரவி எப்பக்கத்திலும் இருந்தபோதிலும் விசேஷவிதமாய் இருதயத்தில் இருக்கிறதுபோலச் சர்வேசுரன் எங்குமிருந்தபோதிலும் நமது புத்தியில் அதிக உத்தமமான விதமாய்ப் பிரசன்னராயிருக்கிறார். இதைப்பற்றித்தான் தாவீதென்பவர் சர்வேசுரனைத் தமது இருதயத்தின் தேவன் என்கிறார். அர்ச். சின்னப்பருஞ் சர்வேசுரனைக் குறித்துப் பேசுகையில் சர்வேசுரனிடத்தில்தான் நமக்குச் சீவியமும் அசைவும் இருப்பிடமும் இருக்கிறதென்கிறார். இந்தச் சத்தியத்தைப் புத்தியில் நன்றாய் வைத்துக்கொண்டு உன் இருதயத்தில் இவ்வளவு ஐக்கியமாயிருக்கிற சர்வேசுரன் பேரில் மிகுந்த சங்கை வணக்கம் பிறக்கும்படி செய்வாய்.

மூன்றாம்வகை. நமது இரக்ஷகர் தமது மனுஷீகத்தோடு பரமண்டலங்களினின்று உலகிலுள்ள சகலரையும் பார்த்துக்கொண்டிருக்கிறாரென்று யோசித்துக்கொள்ளுகிறது. ஆனால் தமது பிள்ளைகளாகிய கிறீஸ்துவர்களை விசேஷவிதமாய்ப் பார்த்துவருவதுமன்றித் தம்மை நோக்கிச் செபத்தியானங்களில் இருப்பவர்களை அதிக சிரேஷ்டமாய்ப் பார்த்து அவர்களுடைய சகல கிருத்தியங்களையுங் குற்றங்களையுஞ்

சோதித்துவருகிறூர். ஆனால் நான் இப்போது சொல்லுகிறது வெறும் உத்தேசமல்ல, நிச்சயமான சத்தியம். எனென்றால் அர்ச்-மூடியப்பர் வேதசாட்சியாய் மரிக்குந் தருணத்தில் சேசுகிறீஸ்துநாதரைப் பார்த்ததுபோல நாம் பார்க்காவிட்டாலுஞ் சேசுகிறீஸ்துநாதர் தமது மகிமையின் சிங்காசனத்தினின்று நமதுபேரில் தமது திருக்கண்ணோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பது சந்தேகமற்ற விஷயம். ஆதலால் உன்னத கவியின் பத்தினியோடு நாமுஞ் சொல்லலாம். அவர்தான் நமது சுவருக்கப்பால் இருந்து கொண்டு சன்னல் வழியாகவுந் திரையின் வழியாகவும் பார்க்கிறூர்.

நாலாம் வகை. இது என்னத்தில் அடங்கியிருப்பதென்றால் நமது சிநேகிதர்கள் நமதருகில் இருப்பதாகவும் அவர்களோடு பேசிக்கொண்டிருப்பதாகவும் நாம் பல முறை உருபிகரித்துக்கொள்வது போலச் சேசுநாதர் தமது மனுஷீகத்தோடு நமது அண்டையில் இருப்பதாக உருபிகரித்துக்கொள்ளுகிறது. ஆனால் பீடத்தில் திவ்வியநற்கருணை ஸ்தாபித்திருந்தால் அவர் நமது அருகில் இருக்கிறூரென்பது வெறும் பாவனையல்ல, மெய்யாகவே இருக்கிறூர். எனெனில் நமது நேசத்துக்குரிய இரட்சகர் அப்பத்தின் உருபக் குணங்களுக்குள் ஒரு திரைக்குள் இருப்பதுபோல மறைந்திருக்கிறூர். அவருடைய மனுஷீகத்தன்மையில் அவரை நாம் பார்க்காவிட்டாலும் நம்மை அவர் நன்றாய் உற்றுப்பார்க்கிறூர். ஆதலால் தியானத்துக்கு முந்தி இந்த நாலுவகையில் ஒன்றை அநுசரித்துச் சர்வேசுரனுடைய சந்நிதியில் உன் ஆத்துமத்தை நிறுத்தக்கடவாய். இந்த நாலுவகைகளையும் ஓரோமிக்க உதவிக்கொள்ளாமல் ஒவ்வொருவிசைக்கும் ஒவ்வொரு விதத்தைமாத்திரஞ் சுருக்கமாய் உதவிக்கொள்வாய்.

3-ம் அதிகாரம்.

தியான ஆயத்தத்தின் இரண்டாம் நிலையாகிய மன்றாட்டைக்குறித்து.

இந்த மன்றாட்டைச் செய்யும் வகையாவது. உன் ஆத்துமஞ் சர்வேசுரனுடைய சந்நிதியில் இருப்பதை அறிந்துகொண்டு அவரது உன்னத மாட்சிமை மகத்துவத்தை வெகுவாய்ச் சங்கித்து வணங்கி அவர் சமூகத்தில் நீ நிற்க அபாத்திரமானவனென்று அறிந்துகொள்ளுகிறது. இதன்பின் சுவாமி உன் நீசத்தனத்தைப் பாராமல் தமது சமூகத்தில் நீ இருக்க விடையளிக்கிறாரென்று கண்டுகொண்டு இந்தத் தியானத்தில் அவரை வேண்டியபடி சேவித்து ஆராதிக்க அவர் தயை இரக்கத்தை மன்றாடுகிறது. உனக்கு இஷ்டமானால் தாவீதென்பவரைப்போல் என் சர்வேசுரா சுவாமீ உமது திருமுகத்தினின்று என்னைத் தள்ளாதேயும். உமது இஸ்பிரீத்துசாந்துவானவரை என்னிடத்தினின்று அகலவொட்டாதேயும். உமது திருமுகத்தின் கதிர்கள் உமது அடியான்மீது பிரகாசிக்கச்செய்யும்; அப்போது நீர் செய்த நவமான காரியங்களை உற்று யோசிப்பேன். எனக்கு உமது அறிவைக் கொடுத்தருளும். உமது திருமுறைமையை ஆராய்ந்து என்னிருதயச் சத்துவமெல்லாங்கொண்டு அதனை அநுசரிப்பேன். நானே உமது ஊழியன், என்மீது உமது ஞான ஒளியை அனுப்பும் என்று இதுமுதலிய சுருக்கமான பத்திசிநேகம் நிறைந்த மனவல்லயச் செபங்களைச் சொல்லலாம். உன் காவலான சம்மனசானவரையும் நீ தியானிக்குந் தியானத்துக்குச் சம்பந்தப்பட்ட அர்ச்சியசிஷ்டவர்களையும் பார்த்து வேண்டிக்கொள். இத்தன்மையாய் நமது ஆண்டவரது மரணத்தின்

பேரில் தியானஞ் செய்தால் பரிசுத்த கன்னிகையை யும் அர்ச். அருளப்பனையும் அர்ச். மரியமதலேன்ம்மா ளையும் நல்ல கள்ளனையும் பார்த்து அவர்கள் இருதயத் தில் உண்டான நல்ல தோற்றங்கள் உன்னிருதயத்தி லும் உண்டாகும்படி வேண்டிக்கொள். மரணத்தின் பேரில் தியானஞ்செய்தால் உன் மரணநேரத்தில் உன க்கு அருகாமையில் நிற்கும் காவலான சம்மனசை நோக்கிஅவர் உனக்கு நல்ல பிரதிக்கினைகளை வருவிக் கும்படிவேண்டிக்கொள். இத்தன்மையாகவே வேறே இன்னம் மற்றத் தியானங்களிலும் வெண்டிக்கொள் வாய்.

4-ம் அதிகாரம்.

தேவரகசியத்தை உருபிகரித்தலாகிய தியான ஆயத்தத்தின் மூன்றும் நிலையைக்குறித்து.

தியான ஆயத்தத்தின் வழக்கமான இவ்விரு ஆயத் தமுமன்றி இன்னம் மூன்றும் ஆயத்தம் ஒன்றுண்டு. இது எவ்விதத் தியானத்துக்கும் பொதுவாயிருக்கிற தில்லை. இது இடத்தின் உருபிகரமென்று சொல்லப் படும். இது புத்தியால் உண்டாகும் வெறும் உருபி கரமல்லாதே வேறல்ல. இதல் நாம் தியானிக்குந் தேவரகசியத்துக்கு அல்லது சத்தியத்துக்குச் சம்பந் தப்பட்ட விஷயங்கள் நமது கண்களுக்குமுன் மெய் யாகவே நடக்கிறதாகப் பாவித்துக் கொள்வதேயாம். இத்தன்மையாய்ச் சிலுவையில் அறையுண்டு தொ ங்கும் நமது ஆண்டவர்பேரில் தியானித்தால் கல்வா ரிமலையின்மீது நீ இருப்பதாகவும் அங்கே நடக்குந்

கஸ்திக்குரிய எல்லா வர்த்தமானத்தையும் உன் கண்ணாலே பார்த்துக்கொண்டிருப்பதாகவும் உருபிகரித்துக்கொள். இன்னம் நீ இருக்கிற இடத்ில்தானே சேசுகிறீஸ்துநாதரைச் சிலுவையில் அறைகிறதாகவுஞ் சுவிசேஷங்களில் இதைக்குறித்து எழுதப்பட்டயாவும் உன் கண்முன் நிறைவேறுகிறதாகவும் நினைத்துக்கொள். நீ மரணத்தைக்குறித்தாகிலும் நரகத்தைக்குறித்தாகிலும் இன்னம் மற்ற எதுவிஷயத்தைக்குறித்தாகிலுந் தியானம்செய்யும்போது இவ்வகையை அநுசரித்துக்கொள்ளலாம். சர்வேசுரனுடைய மகத்துவம் புண்ணியங்களின் மேன்மை நமது கதியாகிய இரட்சண்ணியம் இது முதலிய கண்ணுக்குத் தோன்றாத விஷயங்களின்பேரில் தியானம் செய்யும்போது நான் இப்போது சொன்ன முறையை உதவிக்கொள்ளுகிறதற்கு வழியில்லை. நாம் எளிதாய் இவைகளைக்குறித்துத் தியானிப்பதற்கு உதவியாகப் பல ஒப்பனைகளை உத்தேசித்துக்கொள்ளலாம். அவைகளிலும் பிரயாசையுண்டு. ஆனால் பலவகைத் தோற்றங்களால் உன் புத்திக்குத் தொந்தரையிராதபடிக்கு மகா சுளுவான வழியைக் காண்பிக்கின்றேன். பக்ஷிகளைக் கூண்டில் அடைக்கிறதுபோல் நமது புத்தி அங்குமிங்கும் அலையாதபடிக்கு நாம் தியானிக்குந் தேவரகசியத்தில் உருபிகரத்தால் அதை அடக்கவேண்டும். இவ்வாறு தேவ இரகசியங்களின் உருபிகரங்களை விசுவாசத்தாலும் புத்தியாலுஞ் செய்யலாம். இன்னம் அந்தத் தேவரகசியங்களில் அடங்கிய காரியங்கள் நமது புத்தியிலேயே நடக்கிறதாகச் சிந்தித்துக்கொள்ளலாம். இத்தன்மையாய் உருபிகரிப்பது உத்தமமெனச் சிலர் சொல்லுவார்கள். ஆனால் ஆரம்பத்தில் இது மிகுந்த பிரயாசையாகவுஞ் சத்திக்கு மேற்பட்டதாகவும் இருக்கும். ஆதலால் பிரிய சகோதரமே, தியானமென்னும் பருவதத்தின்

உயர்ந்த சிகரத்தில் சர்வேசுரன் உன்னை உயர்த்தும் வரையில் நான் உனக்குக் காட்டுங் கணவாயிலேயே அமரிக்கையாய்த் தங்கியிரு.

5-ம் அதிகாரம்.

தியானத்து இரண்டாம் பிரிவாகிய தியான யோசனைகளின்பேரில்.

நான் முன் கற்பித்தபடி உருபிகரத்தால் நீ தியானத்துக்கு முஸ்திப்புசெய்தபின் பத்திக் கிருத்தியமாகிய தியானத்தைத் துவக்க வேண்டும். இது எதில் அடங்கியிருக்கிறதென்றால் சர்வேசுரனை நோக்கி நமது இருதயந் தாவுகிறதற்குந் தேவகாரியங்கள்மீது நமக்குப் பிரியம் வருவிக்கிறதற்கும் ஏதுவான ஒன்று அல்லது பல யோசனைகளைச் செய்கிறதேயாம். இதில்தான் தியானத்துக்கும் படிப்புக்குமுள்ள வித்தியாசம் அடங்கியிருக்கிறது. ஏனெனில் எழுதவும் பேசவுந் திறமையுள்ள பண்டிதனாகிறதற்கே படிக்கிறது. இதற்கு விரோதமாய்ப் புண்ணியத்தையுந் தேவசிநேகத்தையுஞ் சம்பாதிக்கிறதற்காகத்தான் தியானஞ்செய்கிறது. ஆதலால் நான் முன் காட்டியபடி தியானத்துக்காக நீ தெரிந்துகொண்ட புண்ணியத்திலே அல்லது சத்தியத்திலே உன் புத்தியை நிறுத்தி முன்னால் சொல்லப்பட்ட தியானங்களில் எழுதியிருப்பது போல் பல யோசனைகளைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். இப்படி நீ செய்யும் யோசனைகளில் உனக்குப் பிரியமானதும் பிரயோசனமுள்ளதுமான யாதொரு யோசனை உன் புத்தியில் வந்தால் இதை விட்டு வே

றே யோசனைகளைச் செய்யக்கூடாது. இதில் தேனீக்களைக் கண்டுபாவிக்கவேண்டும். அதெப்படியென்றால் தேனீக்கள் ஒரு புஷ்பத்தில் தேனிருக்கும் வரையில் அதைவிட்டு அப்புறம்போகாது. இப்படியே நாமும் ஒரு யோசனையில் ஞான நன்மையைக் கண்டால் அதிலே நிற்கவேண்டும். ஆனால் நீ செய்யும் யோசனையில் உன் ஆத்துமத்துக்கான ஞான போசனத்தைக் காணவிட்டால் கொஞ்ச நேரம் ஆழ்ந்து யோசித்தபிறகு வேறே யோசனைகளைச் செய்யவேண்டும். ஆனால் விரைவின்றிக் கலக்கமின்றி அமரிக்கையாய்ச் செய்யவேண்டும்.

6-ம் அதிகாரம்.

தியானத்தின் மூன்றம் பிரிவாகிய சிநேக ஆசைப் பிரதிக்கினைகளின்பேரில்.

மேற்சொல்லியபடி நீ பல யோசனைகளைச் செய்யும்போது அதினால் உன் மனதில் நல்ல ஆசைகள் பிறக்கும். தேவசிநேகம், பிறர்சிநேகம், மோக்ஷத்தின் ஆசை, அழியா மகிமையின் விருப்பம், ஆத்தும விரக்ஷணியத்தின் தாற்பரியம், நமது இரட்சகரைக் கண்டுபாவிக்கவேண்டும் என்கிற மனது, நமது பாவத்தின்மட்டில் பகை துக்கமனஸ்தாபம், நடுத்தீர்வை நரகத்தின்பேரில் அச்சம், சர்வேசுரனுடைய கோபத்துக்கு உள்ளாகப்போகிறோமென்கிற பயம், அவருடைய கிருபைதயாளத்தின்மட்டில் நம்பிக்கை, நாம் வேண்டியபடி பிரயோகித்துக்கொள்ளாத கடந்த காலங்களின்மட்டில் துக்கமனஸ்தாபம் இவைமுத

லியவைகளாம். இவ்விதச் சிநேக ஆசைமுயற்சிகளில் தான் கூடியவனாயில் உன் புத்தி விஸ்தரித்து விசோபிக்கவேண்டும். அப்படியிருந்தபோதிலும் பிரிய சகோதரமே, பொதுவான இப்படிப்பட்ட ஆசை முயற்சிகளைச்செய்வது போதாது. உன் நடக்கையைச் சீர்ப்படுத்துதற்கான விசேஷ பிரதிக்கினை செய்யவேண்டும். நமது ஆண்டவர் சிலுவையில் அறையுண்டிருக்கும்போது திருவுளம்பற்றின முதல் வாக்கியத்தின்பேரில் நீ தியானஞ்செய்தால் அவர் மாதிரிகையாகவே நிந்தை தூஷணங்களுக்குப் பொறுத்தல் கொடுத்துச் சத்துராதிகளையுஞ் சிநேகிக்கவேண்டுமென்கிற ஆசை உன் ஆத்துமத்தில் உண்டாகும். ஆனால் இது போதாது. இதைக்குறித்து நாம் விசேஷமான பிரதிக்கினை செய்யவேண்டும். அதெப்படியெனில் இன்ன மனிதன் அல்லது இன்ன மனுஷி என் அண்டைவீட்டுக்காரன் அல்லது அண்டைவீட்டுக்காரி, என் வேலைக்காரன் இன்னின்ன தருணத்தில் இன்னின்ன சமயங்களில் சொல்லும் வருத்தமான இன்னின்ன வார்த்தைகளால் நான் மனநொந்து வீண்பேச்சுக்கு இடங்கொடுக்கமாட்டேன். இந்த மனிதன் அல்லது இந்த மனுஷி என்னைக்குறித்துச் சொல்லும் இன்னின்ன நிந்தைகளைப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்வேன். இதுவுமன்றி என்பேரில் வருத்தமாயிருக்கும் இன்னான் புத்தியைத் தணிப்பதற்காக இன்ன காரியத்தைச்சொல்வேன். என் பேரிற் கொஞ்சம் வெறுப்பாயிருக்கும் வேறொருவனுடைய இருதயத்தை வசப்படுத்த இன்ன காரியத்தைச் செய்வேன் என்று பிரதிக்கினை செய்யவேண்டும். இவ்வகையாய்த்தான் பிரிய சகோதரமே, கொஞ்ச காலத்துக்குள் உன் குற்றங் குறைகள் எல்லாந் திருத்திக்கொள்வாய். இதற்கு விரோதமாகப் பொதுவில் பிரதிக்கினை செய்வதில்

அவ்வளவு சுளுவாய் உன்னைத் திருத்திக்கொள்ள மாட்டாய்.

7-ம் அதிகாரம்.

தியான முடிவையும் ஞானச்செண்டையுங்குறித்து.

கடைசியாய்த் தியானமுடிவில் மிகுந்த தாழ்ச்சியோடு மூன்று காரியஞ் செய்யவேண்டும்.— முதலாவது நன்றியறிந்த பிரகாரணம். சர்வேசுரன் நமக்கு வருவித்த நல்ல ஆசைப் பிரதிக்கினைகளையும் நாம் தியானித்த தேவரகசியத்தில் அவர் காட்டிய தயை இரக்கத்தையுங் குறித்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறது.— இரண்டாவது காணிக்கைப் பிரகாரணம். சர்வேசுரன் நமதுபேரில் வைத்த தயை தாக்ஷணியத்தையும் அவருடைய ஏகசுதனாகிய சேசுகிறீஸ்துநாதர் நமக்காகப் பாடுபட்டுச் சிந்தின திருவிரத்தத்தினுடைய பலன்களையும் நமது நல்ல ஆசைப் பிரதிக்கினைகளையுந்தானே அவருடைய புண்ணிய பேறுபலன்களோடு சேர்த்துப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறது.— மூன்றாவது மன்றாட்டுப் பிரகாரணம். சேசுகிறீஸ்துநாதருடைய வரப்பிரசாத அநுக்கிரகங்களுக்கும் புண்ணிய பலன்களுக்கும் நம்மைப் பங்காளிகளாக்கி நமது நல்ல ஆசைப் பிரதிக்கினைகளைப் பிரமாணிக்கமாய் நாம் அநுசரித்து வருவதற்கு அவைகளை ஆசீர்வதிக்கும்படியாக மிகுந்த தாழ்ச்சி சிரவணத்தோடு மன்றாடுகிறது. பின்னுந் திருச்சபைக்

க்காகவும் அதின் ஞான மேய்ப்பர் உறவின் முறை யார் சிநேகிதர் இன்னம் மற்றவர்களுக்காகவும் வேண் டிக்கொண்டு தேவமாதாவையுஞ் சம்மனசுகளையும் அர்ச்சியசிஷ்டவர்களையும் பார்த்து வேண்டிக்கொ ள்ளுகிறது. இன்னமுஞ் சகல விசுவாசிகளுக்குஞ் சா தாரணமாய் அவசியமான மந்திரங்களாகிய பரமண் டலமந்திரம், பிரியதத்தமந்திரம், விசுவாசமந்திரங் களையுஞ் சொல்லலாம்.

இதற்குப்பின் ஞானச்செண்டு கட்டவேண்டும். ஒரு நந்தவனத்தில் உல்லாசமாய் உலாத்துகிறவர் கள் இரண்டொரு புஷ்பங்களை அதிற் பறிக்காமல் அதைவிட்டு வெளியிற் புறப்படமாட்டார்கள். வெ ளியில் வந்தபின் பறித்த புஷ்பங்களை அடிக்கடி முக ருவார்கள். இத்தன்மையாகவே தியானத்தினால் நமது புத்தியானது எந்தத் தேவரகசியத்தையென்கி லும் ஆராய்ந்து பார்த்தபின் நமக்கு அதிக பிரிய மானதும் புண்ணியத்தில் விருத்தியடைய அதிக உபயோகமானதுமான இரண்டொரு யோசனைக ளைத் தெரிந்துகொண்டு அன்றையத்தினம் அடிக் கடி அதை ஞாபகம் வருவித்துக்கொண்டு அதின் ஞான சுகந்தத்தை உணரவேண்டும். தியானமுடிந் தபின் இருந்தவிடத்திலேயே அமரிக்கை மவுனமா யிருந்து இந்த ஞானச்செண்டைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

8-ம் அதிகாரம்.

தியானத்துக்கு உபயோகமான சில புத்திமதிகள்.

பிரிய சகோதரமே, ஒருவிசை தியானத்தை முடித்தபின் நீ அதில் செய்த நல்ல பிரதிக்கினைகளைப் புத்தியில் ஸ்திரமாய் வைத்து அன்றையத் தினத்தில் அதற்கான சமயங் கிடைக்கும்போதெல்லாம் அவைகளை அநுசரிக்க விசேஷ கவனமாயிருக்கவேண்டும். தியானத்தின் பிரதான பலன் என்னவென்றால் அதினால் நாம் புண்ணியக் கிருத்தியங்களில் விருத்தியடைவதேயாம். இல்லாவிட்டால் இந்தத் தியானம் நமக்கு உபயோகமற்றதாய்ப் போய்விடுகிறதுமன்றி இன்னம் பலமுறை ஆபத்துள்ளதாம். புண்ணியங்களைப் புத்தியால் உத்தேசித்து அதுகளை அநுசரியாவிட்டால் அதினால் நமது புத்தியிலும் இருதயத்திலுங் கர்வமுண்டாம். ஏனெனில் நாம் எவ்வாறு நடப்பதற்குப் பிரதிக்கினை செய்தோமோ அவ்வாறு நடவாவிட்டாலும் நம்மை நாம் வெகு புண்ணியவான்களாய் எண்ணும்படி நேரிடும். ஆனால் வெறும் பிரதிக்கினைகளைச் செய்வதால் நாம் உத்தமவான்களாய் ஆகப்போகிறதில்லை. அவைகளை நாம் ஸ்திரமாய் அநுசரித்து வருவதால் மாத்திரம் பிரயோசனமுண்டாம். நமது பிரதிக்கினைகள் பலவீனமாயிருக்கும்போதெல்லாம் நமக்கு அவைகள் பிரயோசனமாயிருப்பதில்லை. இப்படி அது உபயோகமற்றதாயிருக்கிறபடியால் அதினால் நமக்கு ஆபத்துண்டாம். ஆதலால் எந்தெந்த வழிப்பாட்டையுந் தெரிந்துகொண்டு எச்சமயங்களிலும் அவைகளை அநுசரிக்கத் தேடவேண்டும். இதற்கு உதாரணமாக எனக்கு

விரோதிகள் இருப்பார்கள் அவர்களுக்கு நான் சாந்த குணத்தைக் காட்டி அவர்கள் பக்தியைத் தணிக்க வேண்டுமென்று காலைத்தியானத்திற் பிரதிக்கினை பண்ணியிருந்தால் அன்றே நான் அவர்களைப் பார்த்து நல்ல முகத்தோடு உபசரணை செய்கிறதற்கான சமயந் தேடுவேன். அவர்களை அன்றையத்தினம் நான் பார்க்கக்கூடாவிட்டால் அவர்களைக் குறித்து நன்மையாகவென்கிலும் பேசப் பிரயாசப்பட்டு அவர்களுக்காகச் சுவாமியைப் பார்த்து வேண்டிக் கொள்வேன்.

ஒருவிசை தியான முடிந்தபின் உன் இருதயத்தைப் பத்திரமாய்ப் பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் தியானத்தால் உன் இருதயங் கொண்ட பரிமளஞ் சிந்திப்போகும். நான் சொல்வது என்னவெனில் கூடுமானால் இன்னங் கொஞ்சம் மவுனமாயிருந்து உன் சிந்தையை அங்கும் இங்கும் விடாமல் உனக்கு வந்த தோற்றங்களையும் ஆசைப் பற்றுதல்களையும் உன்னால் இயன்றவரையில் காப்பாற்றிக்கொண்டு அமரிக்கையாய்த் தியானத்தைவிட்டு உன்னைச் சேர்ந்த அலுவல்களைப் பார்க்கவேண்டும். விலையுயர்ந்த தைல முதலியவைகளைச் சுளுவாய் உடைந்துபோகும் பாத்திரத்தில் வாங்கிக்கொண்டு வருபவன் அங்கும் இங்கும் பராக்குப் பாராமல் மெள்ள மெள்ள நடந்து கல்லு முதலியவற்றில் இடறி விழாமல் தனக்கு முன் பார்த்துக்கொண்டு தன் கையிலிருக்குந் தைலந் தளம்பிச் சிந்தாதபடிக்கு அதின்பேரில் கண்ணாயிருப்பான்; தியானத்தை முடித்தபின் நீயும் இப்படியே செய்யவேண்டும். உடனே பராக்குக்கு இடங் கொடுக்கக்கூடாது. ஆனால் உன்பேரிற் கண்ணாயிருந்து சாக்கிரதையாயிருப்பாய். ஆரிடத்திலென்கிலும் அத்தருணத்தில் பேசவேண்டியிருந்தால் பேசுவதற்கு விக்கினமில்லை. ஆனால் அப்போது

உன் இருதயத்தில் இருக்குந் தியானத்தின் பரிசுத்த தைலஞ் சிந்திப்போகாதபடிக்குப் பார். தியானத்தில் உனக்கு வந்த நல்ல ஆசைகளுக்கு உன் அந்தஸ்துக்கடுத்த கடமைகள் எவ்வளவுதான் பொருந்தாததாகக் காணப்பட்டபோதிலும் அவைகளைப் பிரியத்தோடு செய்வதற்கு வழக்கம் பண்ணவேண்டும். இத்தன்மையான அப்பியாசமுள்ளவர்களுக்குத் தியானத்தைப்பற்றித் தங்கள் அந்தஸ்துக் கடமைகளை நிறைவேற்ற இடைஞ்சலிராது. ஒரு வழக்கை ஏற்றுக்கொண்டு பேசுகிற உத்தியோகஸ்தன் வேண்டிய தருணத்தில் வேண்டியபடி பேசப் பிரயாசப்படவேண்டும். ஒரு வியாபாரி தன் வியாபாரத்திற் கவனிக்க வேண்டும். கலியாண அந்தஸ்திலிருக்கும் ஒரு ஸ்திரீ தன் கலியாண கடமையிற் கவனித்து வீட்டுத் தொல்லைகளைப் பொறுமையாய்ச் சகித்துவரவேண்டும். இவையாவற்றையும் எவ்வளவு மதுரகுணத்தோடும் அமரிக்கையோடுஞ் செய்யவேண்டுமென்றால் இதனால் புத்திக்கு அற்ப கலக்கமும் வரக்கூடாது. ஏனெனில் தியானஞ் செய்கிறதும் நமது கடமைகளெல்லாம் அநுசரிப்பதுஞ் சர்வேசுரனுடைய சித்தமாதலால் மிகுந்த பத்திச் சிரவணத்தோடு தியானத்தை விட்டுக் கடமைகளைச் செய்யவேண்டும்.

இன்னம் நீ அறியவேண்டியது: தியானத்துக்கு நீ ஆயத்தஞ்செய்தவுடனே சிலவிசை உன் இருதயத்தில் சர்வேசுரன்மட்டில் உருக்கமான நேசமுண்டாகும். அப்போது பிரிய சகோதரமே, நான் உனக்குக் காட்டிய தியான வகையை முழுதும் பின்செல்லவேண்டுமென்கிற நிமித்தம் அந்தச் சிநேகப்பற்றுதலை அலக்ஷியமாய் விட்டுவிடலாகாது. சிநேகப் பற்றுதலுக்கு இணங்கி மேன்மேலும் அது உன் இருதயத்தில் சுவாலையைவிட்டு எரியும்படி செய்யவேண்டும். ஏனெனில் வழக்கமாய்ச் சிநேக முயற்சிகளுக்கும்

பிரதிக்கினைகளுக்கும் முந்தி யோசனைசெய்வது கிரமமாயிருந்தபோதிலும் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் நீ யோசனை செய்வதற்கு முந்தி இவ்வித நேசப்பற்றுதல்களை உன் இருதயத்தில் வரவிட்டால் இதை விட்டு நீ யோசனை செய்யத் தேடக்கூடாது. ஏனென்றால் உன் இருதயத்தில் இப்படிப்பட்ட ஆசைப் பற்றுதல்களை எழுப்புகிறதற்காகவே மேற்சொல்லிய ஆலோசனைசெய்கிறது. இவ்வகையாய் நீ ஆலோசிப்பதற்கு முந்தியென்கிலும் பிந்தியென்கிலும் இந்தப் பற்றுதல்கள் வந்தால் அவைகளை விருப்பமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். யோசனைசெய்தபின் சிநேக ஆசை முயற்சிகளுண்டாகப் பிரயாசப்படவேண்டுமென்று தியான ஒழுங்கில் சொல்லியிருந்தபோதிலும் தியான உறுப்புகளை நன்றாய்ப் பகுத்தறியும்படி இப்படி சொல்லலாயிற்று. இதுவுமன்றி ஆத்துமத்தில் உண்டாகுஞ் சிநேக முயற்சிகளை அடக்கவொண்ணாதென்பது பொது ஒழுங்காம். ஆனால் அவைகள் நமது இருதயத்தில் தோன்றி விஸ்தரித்துப் பரம்பும்படிப் பார்க்கவேண்டும். இந்த நல்ல ஆசைகளைக் குறித்துச் சொன்ன யாவற்றையும் நன்றியறிந்த பிரகரணத்திற்குங் காணிக்கை மன்றாட்டுப் பிரகரணத்திற்குஞ் சொல்லலாம். நாம் தியானத்தில் பல ஆலோசனைகள் செய்யும்பொழுது மேற்சொல்லிய பிரகரணங்களைச் செய்கிறதற்கு நாட்டம் வரக்கூடும். அப்போது அந்த நாட்டத்தின்படியே செய்யவேண்டும். ஆனால் எப்பொழுதும் நான் முன் சொல்லியதுபோல் தியான முடிவில் அதுகளை மறுபடியும் இட்டித்துச் செய்யவேண்டும். நாம் செய்ய வேண்டிய பிரதிக்கினைகளை முந்தி செய்யலாகாது. சிநேக முயற்சிகளுக்குப் பின்னுந் தியான முடிவுக்கு முந்தியுஞ் செய்யவேண்டும். ஏனெனில் இப்படி நாம் பிரதிக்கினை செய்கையில் வழக்கமான விசேஷ

காரியங்களைக்குறித்து நாம் நினைக்கவேண்டியிருப்ப தால் சிநேக முயற்சிகளைத் தூண்டவேண்டிய நேரத் தில் பிரதிக்கினைகளைச் செய்யத் தேடுகிறதினால் பல பாராக்குகளுக்கு இடமுண்டாகும். மேற்சொல்லிய சிநேக முயற்சிகளையும் பிரதிக்கினைகளையும் சம்பாஷணையைப்போல் செய்வது நலமாம். இதற்காகச் சில தருணத்தில் சர்வேசுரனிடத்திலுஞ் சம்மனசுகளிடத் திலும் நீ தியானித்த தேவரகசியங்களுக்குச் சம்மந்த ப்பட்டவர்களிடத்திலும் அர்ச்சியசிஷ்டவர்களிடத் திலுஞ் சம்பாஷிக்கலாம். சிலவிசை உனக்குள்ளுஞ் சம்பாஷிக்கலாம், உன் இருதயத்தைப் பார்த்தும் பாவிகளை நோக்கியும் இன்னும் உயிரில்லாச் சிஷ்டிகளை நோக்கியும் பேசலாம். இத்தன்மையாகவே தாவீ தென்பவருஞ் செய்துவந்தாரென்று அவர் சங்கீதங் களிற் காண்கிறோம். வேறே அர்ச்சியசிஷ்டவர்களுந் தங்கள் செபத்தியானங்களில் இப்படி செய்துவந் தார்கள்.

9-ம் அதிகாரம்.

தியானஞ் செய்கையில் புத்திக்கு நேரிடக்கூடுமான திருப்தி ஆறுதலின்மையை குறித்து.

பிரிய சகோதரமே, நீ தியானஞ்செய்கையில் கொ ஞ்சமாவது ஆறுதல், பிரியம் வராவிட்டால் அதினால் நீ கலக்கத்துக்கு இடங்கொடாதே. நான் காண்பிக் கும் ஔஷதங்களை மாத்திரம் உதவிக்கொள். உன் இருதயம் ஆறுதலின்றி வரட்சியாயிருக்கையில் ஏதா கிலுஞ் செபங்களைச் செபிக்கலாம். இன்னஞ் சுவா

மியைப்பார்த்து உருக்கமாய் மன்றாடி உன் நீசத்த னத்தை அறிந்துகொண்டு அவரோ உனக்கு ஒத்தா சையாயிருக்கும்படி அவரை வருந்திக் கேள். பாடுப ட்ட சுரூபத்தைப் பத்தியோடு முத்தமிடலாம். யாக் கோபென்பவரைப்போல ஆண்டவரே உமது ஆசீர்வா தத்தை எனக்குத் தந்தருளுமுன் உமது பாதாரவிந் தங்களை விடேன் என்றும் கனனேயன் ஸ்திரீயைப் போல் ஆண்டவரே நான் ஒரு நாயென்பது மெய்தான் ஆனால் நாய்கள் தங்கள் எசமான்களுடைய மேசை யினின்று விழும் எச்சில்களைத் தின்குமே என்றும் சொல்லலாம். ஒரு தருணத்தில் ஏதாவது புத்தகத் தை எடுத்து உன் புத்தியில் கொஞ்சம் பத்தி சுறு சுறுப்புண்டாகும் வரையில் கவனமாய் வாசிக்கலாம். இன்னம் பத்திக்கடுத்த ஏதர்கிலும் வெளிக்கிரூத்தி யங்களுஞ் செய்யலாம். தரையில் சாஷ்டாங்கமாகத் தெண்டனிடலாம். மார்பின்மீது கரங்களைச் சிலு வையைப்போற் குவித்துக்கொள்ளலாம். பாடுபட்ட சிலுவையை எடுத்துக் கட்டி முத்தமிடலாம். ஆனால் இவைகளை எல்லாம் ஒருவரும் பாராமல் தனியா யிருக்கும்போது செய்யத்தகும். இதன்பின்னும் நீ ஆறுதல் திருப்தியடையாமல் உன் இருதயம் எவ்வ ளவுதான் வரண்டு காய்ந்ததுபோல் இருந்தாலும் அதினால் நீ சற்றாகிலுங் கலங்காதே. சர்வேசுரன் சமுகத்துக்கு முன்பாக மிகுந்த பத்தி சிரவணக்கத் தோடிரு. தங்கள் மன்னவானுக்குப் பிரியப்படவேண் டுமென்று எத்தனையோ இச்சகக்காரர் அவனைக் கண்டு பேசக்கூடும் என்கிற நம்பிக்கை இராவிடி னும் அவன் தங்களைப் பார்க்கும்படியாகவுந் தங்கள் வணக்கத்தை அவனுக்குச் செலுத்தும்படியாகவும் அதிகாலமே ஒரு வருஷத்தில் எத்தனையோவிசை வந்து காத்துக்கொண்டிருப்பார்கள். இவ்விதமாகவே பிரிய சகோதரமே, சர்வேசுரனுக்கு நமது கடமை

யைச் செலுத்தவும் அவருக்கு நமது பிரமாணிக்க நம்பிக்கையைக் காட்டவுமாத்திரம் நாம் தியானஞ் செய்யவரவேண்டும். சர்வேசுரனுக்கு இஷ்டமிருந்து அவர் நமது அண்டையில் நெருங்கித் தமது திரு வுவுதல் மன ஆறுதல்களை நமதுபேரில் பொழிந்து நம்மிடத்தில் சம்பாஷிப்பாரேயாகில் சந்தேகமின்றி நமக்கு இது கன மகிமையாகவும் இன்பமாகவுமிருக் கும். ஆனால் இந்த அனுக்கிரகத்தை நமக்குச் செய் யத் தயைபுரியாமல் நாம் அவர் சமுகத்தில் இருப்ப தை அவர் பார்க்காததுபோல் நம்மிடத்தில் பேசா மல் விட்டுவிட்டால் இதைப்பற்றி நாம் தியானத்தை விட்டு அவர் சன்னிதியில் நின்று அப்புறம் போகக் கூடாது. ஆனால் இதற்கு விரோதமாய்ச் சர்வேசுர னுடைய உன்னத கிருபைச் சிம்மாசனத்துக்கு மூன் பாகச் சங்கை விநயத்துடனே அமரிக்கையாய் நிற்கவேண்டும். நமது பொறுமையை இவர் பிரியத் தோடு அங்கீகரித்து நமது நிலைமையைப் பார்த்துச் சம்பாவனை அளிப்பார். இதுவுமல்லாமல் இன்னம் ஒரு விசை தியானஞ்செய்ய அவர் சமுகத்துக்கு நாம் வருகையில் பிரியமாய் நம்மோடு சம்பாஷித்துத் தியானத்தின் ஞான இன்பங்களை அனுபவிக்கச் செய் வாரென்று நம்பிக்கையாயிருக்கலாம். கடைசியாய் இப்படிப்பட்ட ஆறுதல்களை நமது இருதயத்தில் வர்ஷியாவிட்டால் அவருக்கு அருகாமையில் அவர் சன்னிதியிலிருப்பதே நமக்கு வெகு மகிமை பாக்கி யமென்று நினைக்கவேண்டும்.

10-ம் அதிகாரம்.

காலைக்கிருத்தியங்களைக் குறித்து.

1-வது. காலைக் கிருத்தியத்தைக்குறித்து அநுதினம் ஒருவிசை செய்யவேண்டிய மேற்சொல்லிய தியானமும் மந்திரங்களுமல்லாமல் அதிக சுருக்கமான இன்னும் ஐந்துவகைத் தியானங்களுண்டு. இவைகள் மேற்சொல்லிய தியானம் என்னும் பெரும் விருக்ஷத்துக்குச் சம்பந்தமான சிறு துளிர்போலிருக்கின்றன. இவற்றுள் காலைச்செபம் ஒன்றும். இதுதான் அன்றையத்தினத்தில் நீ செய்யுங் கிருத்தியங்களுக்கெல்லாம் பொதுவான ஆயத்தமாயிருக்கிறது. இதை நீ செய்யவேண்டிய விதம். முதலாவது.—இராக்காலத்தில் சர்வேசுரன் உன்னை ஆபத்தினின்று காப்பாற்றினதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்து மிகுந்த தாழ்ச்சி வணக்கத்தோடு அவரை ஆராதிப்பாய். நேற்றைய சாயரட்சை நீ செய்த ஆத்தும சோதனைக்குப்பின் ஏதாகிலுங் குற்றங்குறை நேரிட்டிருந்தால் அதற்காக அவரைப் பொறுத்தல் கேள்.

2-வது. நீ சதாகாலம் வாழும் நாளைச் சம்பாதிக்கிறதற்காக இன்று ஒருநாள் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்குதென்று யோசித்துக்கொள். இந்தக் கருத்துடனே இந்த நாளை நன்றாய்ப் பிரயோகித்துக் கொள்வதற்குக் கெட்டியான பிரதிக்கினை செய்.

3-வது.— அன்றையத்தினம் நீ செய்யவேண்டிய கருமங்கள் என்னவென்றுஞ் சர்வேசுரனைச் சேவிப்பதற்கு உனக்கான நல்ல சமயங்கள் ஏதென்றுங் கோபத்தினால் என்கிலும் வீண் சிலாக்கியத்தினால்

என்கிலும் வேறே எந்த விஷயங்களினால் என்கிலுஞ் சர்வேசுரனுக்கு ஏலாத உனக்கு வரக்கூடுமான தந்திர சோதனைகள் என்னவென்றும் முன்னுதாய் யோசித்துப்பார்க்கவேண்டும். சர்வேசுரனைத் தோத்திரிப்பதற்கும் பத்தியில் விருத்தியடைவதற்குஞ் சர்வேசுரன் உனக்குக் கொடுக்கும் வழிப்பாடுகளெல்லாம் நன்றாய் உதவிக்கொள்ள வேண்டுமென்று உறுதியான பிரதிக்கினை செய்து அன்றையத்தினம் உன்னுடைய இரக்ஷணியத்துக்குஞ் சர்வேசுரனுடைய மகிமைக்கும் விக்கினமாயிருக்கக்கூடுமான காரியங்கள் எல்லாவற்றையுங் கவனமாய்ப் பார்த்துத் தள்ளவும் இன்னம் அவைகளுடன் போர்செய்து செயிக்கவும் நீ முஸ்திப்பாயிருக்கவேண்டும். இந்தப் பிரதிக்கினையை ஒருவிசை செய்துவிடுவது மாத்திரம் போதாது. அதனை நன்றாய் நிறைவேற்றுவதற்கான வழிப்பாடுகளையுந் தேடவேண்டும். அது எப்படியெனில் கோபியும் மூர்க்கனுமான ஒருவனிடத்தில் ஏதாகிலும் ஓர் காரியத்தைக்குறித்துப் பேசி முடிக்கவேண்டியதென்று முந்தி அறிந்தால் கூடுமானவளாயில் அந்த மனிதனுக்குக் கோபம்வராதபடிக்குப் பேசுவேன் என்கிற பிரதிக்கினை செய்வதுமல்லாமல் இன்னம் அவனை அமர்த்தி நீ சொல்வதைத் தக்கவகையாய் அவன் ஏற்றுக்கொள்ளும்படி தகுந்த மதுரமான வார்த்தைகளையும் முந்தியே முஸ்திப்பு செய்திருக்கவேண்டும். இன்னம் ஒரு பெரிய மனுஷனைத் தெரிந்துகொண்டு மேற்படி கோபியான மனிதனுக்கு வருத்தம் வரவொட்டாமல் இவன் மூலியமாகப் பேசலாம். வியாதிஸ்தன் ஒருவனைச் சந்திக்க வேண்டியிருந்தால் எந்த நேரத்தில் போய் சந்திக்கவேண்டுமென்றும் அவனுக்கு எந்த உதவி சகாயங்களைச்செய்யவேண்டுமென்றும் முந்தியே யோசிப்பாய். இப்படியே மற்ற ஒவ்வொரு விஷயத்தைக்குறித்தும் யோசிக்கவேண்டும்.

4-வது. மேற்சொல்லிய பிரகாரஞ் செய்தபின் தின்மையை விலக்கவென்கிலும் நன்மையைச், செய்யவென்கிலும் நீ செய்த பிரதிக்கினைகளில் ஒன்றையும் நிறைவேற்றத் திராணியற்றவனென்று அறிந்துகொண்டு சர்வேசுரனுக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தக்கடவாய். உன் கரங்களில் உன் இருதயத்தை வைத்துக்கொண்டிருக்கிறதுபோல் உன் நல்ல கருத்துகளுடன் அதைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துத் தமது அடைக்கலத்தில் அதை வைத்துக்கொள்ளும்படியாகவும் அவருக்குச் சரியான ஊழியஞ் செய்வதற்கு வேண்டிய பலத்தைக் கொடுக்கும்படியாகவும் மன்றாடுவாய்.

இதற்காகவும் பின்னாற் சொல்லிக்காட்டுமாப்போல் பல வார்த்தைகளை உன் இருதயத்துக்குள்ளே சொல்லலாம், என் கர்த்தரே சுவாமீ இதோ நிர்ப்பாக்கியனும் ஏழையுமாகிய என் இருதயத்தைக் கடைக்கண்ணோக்கிப் பார்த்தருளும். உமது கிருபையால் அதில் அனேக நல்ல ஆசைகளை மூட்டினீர். ஆனால் அதின் பலவீனமோ உமக்குத் தெரிந்திருக்கிறது. உமது திவ்விய ஆசீர்வாதத்தை அதற்கு நீர் தராவிட்டால் எந்த நன்மையையுஞ் செய்யவறியாது. கிருபை தயாள சமுத்திரமாகிய என் சர்வேசுரா! உமது திரு ஏகசுதன் சிலுவைமீது எங்களுக்காகப் பெற்ற பேறுபலன்களைப்பார்த்து என்னை அர்ச்சித்தருளும். அவருடைய மகிமைத் தோத்திரத்துக்காகவே இன்றையத்தினத்தையும் என் சீவிய நாட்களையும் வசீகரஞ்செய்கிறேன்.—இதன்பின் உன் மன்றாட்டைச் சனுவாய்க் கேட்டருளும்படி அர்ச்சியசிஷ்ட தேவமாதாவையுங் காவலான சம்மனசானவரையும் அர்ச்சியசிஷ்டவர்களையும் பார்த்து வேண்டிக்கொள்.

ஆனால் பிரிய சகோதரமே, இவைகளையெல்லாஞ் சுருக்கமாய்ச் செய்யவேண்டும். கூடுமானால் வீட்

டைவிட்டுப் புறப்படுகிறதற்கு முந்தி முடிக்கவேண்டும். இந்தக் கிருத்தியத்தால் அன்றையத்தினம் நீ செய்யுங் காரியங்களையெல்லாம் ஒழுங்குடன் செய்வதுமன்றி சர்வேசுரனுடைய ஆசீர்வாதம் அவைகளின்பேரில் இறங்கும். இக்காலக்கிருத்தியத்தை ஒரு நாளுந் தவறாமல் அநுசரித்துவரவேண்டியது.

11-ம் அதிகாரம்

இரண்டாங் கிருத்தியமாகிய சாயாட்சை செய்ய வேண்டிய ஞான முயற்சிகளையும் ஆத்தும சோதனையையுங் குறித்து.

மத்தியான அசனத்துக்கு முந்தித் தியான மென்னும் ஞான போசனத்தைக்கொண்டு உன் ஆத்துமத்தைப் போஷித்ததுபோல் இராப்போசனத்துக்கு முந்தியுந் தியான ஒடுக்கமென்னும் ஞான போசனத்தைக் கொஞ்சம் உண்ணவேண்டும். ஆதலால் இராச்சாப்பாட்டுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முந்தி சில நிமிஷம் இந்த ஞானக் கிருத்தியத்திற் செலவழிப்பாய். சர்வேசுரனுக்கு முன்பாகச் சாஷ்டாங்க தெண்டனிட்டுச் சிலுவையில் அறையுண்டிருக்கும் நமது திவ்விய கர்த்தராகிய சேசுகிறீஸ்துநாதர் அருகாமையில் இருக்கிறதாக நினைத்து உன் சத்துவமெல்லாங்கொண்டு அவரை நேசித்து நீ காலமே செய்த தியானத்தில் உன் ஆத்துமத்தில் உண்டான தேவசிநேக அக்கினியை மறுபடியுங் கொளுத்தப் பிரயாசப்படக்கடவாய். இதற்காகக் காலைத்தியானத்தில்

உனக்கு மிகவும் பிரியமாயிருந்தவற்றை மறுபடியும் நினைத்துக்கொண்டாகிலும் உனக்கு இஷ்டமானபடி வேறே எந்தத் தியானத்தைக்குறித்து யோசித்துக்கொண்டாகிலும் உன் திவ்விய இரக்ஷகரை நோக்கி உன் ஆத்துமமானது ஏழெட்டு சிநேக மனவல்லயச் செபங்களைச் சொல்லவேண்டும்.

நித்திரைபோவதற்கு முந்தி ஒவ்வொருவரும் அநுதினமுஞ் செய்யவேண்டிய ஆத்துமசோதனை எப்படி செய்யவேண்டுமென்று நன்றாய் அறியவேண்டும்.

1-வது. சர்வேசுரன் அன்று நமக்குச் செய்த உபகார சகாயங்களுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கிறது.

2-வது. அன்றையதினம் முழுவதும் நாம் என்னமாய் நடந்தோமென்று விசாரிக்கவேண்டியது. இந்தச் சோதனையைச் சுலுவாய்ச் செய்ய நாம் எங்கே போனோம் ஆரோடு பேசினோம் எந்த அலுவல்களில் கவனித்திருந்தோமென்றும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

3-வது. அன்றையத்தினம் ஏதாவது நற்கிருத்தியஞ் செய்ததாகக் கண்டால் அதற்காகச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்கிறது. இதற்கு விரோதமாய்ச் சிந்தனை வாக்குக் கிரிகைகளினால் ஏதாகிலுந் தீங்கான காரியஞ் செய்திருந்தால் சர்வேசுரனைப் பார்த்து அதற்காகப் பொறுத்தல் கேட்டுத் தருணங் கிடைத்தவுடனே அதைப் பாவசங்கீர்த்தனஞ் செய்வேனென்றுங் கூடிய விரைவில் அதைத் திருத்திக்கொள்வேனென்றும் பிரதிக்கினை செய்யவேண்டும்.

4-வது. இதன்பின் தன் சரீரத்தையும் ஆத்துமத்தையுந் தன் சிநேகிதர் பந்துக்களையுந் திருச்சபை முழுமையையுஞ் சர்வேசுரனுடைய திவ்விய அடைக்கலத்

தில் வைத்து அர்ச். தேவமாதாவுங் காவலான சம்மனசானவரும் அர்ச்சியசிஷ்டவர்களும் இந்த இராத்திரிகாலத்தில் நம்மைக் கண்காணித்து ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டு கடைசியாய்ச் சர்வேசுரனுடைய ஆசீர்வாதத்தோடு நமக்கு அவசியமான இளைப்பாற்றியை அமரிக்கையாய் அநுபவிப்போமாக.

காலையில் செய்யவேண்டிய பத்திக் கிருத்தியத்தின் அவசியம் எப்படியோ அப்படியே சாயரட்சையும் இந்தப் பத்திக்கடுத்த காரியத்தைச் செய்வது அவசியம். ஏனெனில் காலையில் நீ செய்த பத்திக்கிருத்தியத்தால் உன் ஆத்துமத்தில் நீ ஆதித்தன் கதிர் பிரகாசித்ததுபோல் சாயரட்சை செய்யும் இந்தப் பத்திக் கிருத்தியத்தால் நரகவிருள் உன் இருதயத்தில் அண்டாமல் அதன் வாசலை அடைப்பாய்.

12-ம் அதிகாரம்.

மூன்றாங் கிருத்தியமாகிய ஞான ஒடுக்கத்தைக் குறித்து.

பிரிய சகோதரமே, இப்போது நான் சொல்லும் ஆலோசனையை மிக்க ஆசை சுறுசுறுப்போடு நீ நிறைவேற்றவேண்டும். ஏனெனில் ஞான சீவியத்தில் நாம் விருத்திப்பதற்கு மிகவும் அவசியமான வழிப்பாடுகளில் இது பிரதான வழிப்பாடு.

இது எதில் அடங்கியிருக்கிறதென்றால் முன் உனக்குக் காட்டிய நாலு வகைகளில் ஒரு வகையைக்கொண்டு சர்வேசுரனது திவ்விய சந்நிதியில் உன்னால் இயன்றவளவில் இருப்பதேயாம். சர்வேசுரன்

செய்வதையும் நீ செய்வதையும் உற்றுப்பார். ஒப்பில்லாத சிநேகத்தினுல் சர்வேசுரன் ஓயாமல் உன்பேரில் கண்ணுயிருந்து உன் பக்கமாய்த் தமது திருக்கண்களைத் திருப்பிக்கொண்டிருக்கிருரென்று கண்டுகொள்வாய். அப்போது ஆ சுவாமீ! என்னை நீர் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறதுபோல் நானும் உமதுமீது ஏன் எப்போதுங் கண்ணுயிருப்பதில்லை? என் கர்த்தரே சுவாமீ! என்னைக்குறித்து நீர் இவ்வளவு நினைக்கவேண்டியதென்ன? நானே உம்மை ஏன் இவ்வளவு அரிதாய் நினைக்கின்றேன். என் ஆத்துமமே நாம் எவ்விடத்தில் இருக்கின்ருேம். நமது மெய்யான இருப்பிடம் சர்வேசுரனிடத்திலாயிற்றே, இதைவிட்டு நாம் எங்கே திரிகிருேம் என்று ஓர்வித ஆச்சரியத்தோடு சொல்லுவாய். பறவைகளுக்கு அவசரமானபோது தங்குகிறதற்கு மரங்களில் கூடுகளுண்டு. மான்கள் கோடைகால வெப்பத்தில் குளிர்ந்த முட்செடி புதர்களில் பதுங்கிக்கொள்ளும் இதே மாதிரியாய்ப் பிரிய சகோதரமே, கல்வாரி மலையின்பேரிலாகிலும் நமது ஆண்டவருடைய திருக்காயங்களிலாகிலும் அவருக்கு அருகாமையில் வேறே எந்தவிடத்திலாகிலும் நாள்தோறும் நமது இருதயமானது ஓரிடத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். புறத்திக் காரியங்களில் எவ்வளவுதான் கவனித்திருந்தபோதிலும் எத்தருணத்திலும் அவசரமானபோதெல்லஞ் சிந்தையால் உலக சந்தடியை விட்டு அவரிடம் இளைப்பாறுவோமாக. நமது இருதயத்துக்கு இந்த இடமானது பசாசின் சோதனைகள் அணுகாத ஓர் கோட்டைபோலிருக்கும். இப்படி ஆண்டவரை நோக்கி நீர் என் அடைக்கல விடுயாகவும் என் சத்துராதிகளுக்கு விரோதமாய் என்னைக் காக்குங் கொத்தளமாகவும் மழையில் என்னை ஆதரிக்குங் கூரையாகவும் உஷ்ணத்தில் என்னை ஆத

ரிக்கும் நிழலாகவும் இருக்கிறீரென்று உண்மையாக வே சொல்லும் ஆத்துமம் பாக்கியம்பெற்றதாம்.

ஆகையால் பிரியசகோதரமே, நீ வேலைச் சந்தடிக ளிலிருந்துகொண்டு பல பேரிடத்திற் பேசவேண் டியிருக்கும்போது முதலாய் உன் இருதயத்தின் அந் தரங்கத்தில் அநுதினம் இடைந்துபோய் ஒடுக்க மாயிருக்க மறந்துபோகாதே. புத்தியால் செய்யும் இந்த ஒடுக்கத்துக்கு உன்னைச் சூழ்ந்திருப்பவர்க ளால் அற்ப விக்கினமும் வராது. ஏனெனில் அவர் கள் உன் இருதயத்தைச் சூழ்ந்திருக்கிறதில்லை, உன் சரீரத்தைமாத்திரஞ் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். உன் அருகாமையில் எத்தனைபேர் இருந்தபோதிலுஞ் சர்வேசுரனுடைய சந்நிதிக்குமுன்பாக உன் இரு தயமாத்திரந் தனியாயிருக்கும். தாவீதரசன் தமது பற்பல அலுவல்களில் முதலாய் இந்த உத்தம கிருத் தியத்தை அநுசரித்து வந்ததாக அவருடைய சங் கீதங்களில் எப்பக்கத்திலுங்காண்கிறோம். அவர் சலி யாமற் சொல்வதைக் கேள். ஆண்டவரே நான் எப் போதும் உம்முடனிருக்கிறேன். எனக்கு எதிராக உம்மை எப்போதுந் தெரிசித்துக்கொண்டிருக்கி றேன். உந்நத பரமண்டலத்தில் வீற்றிருக்கும் என் சர்வேசுராசுவாமீ! உம்மை நோக்கி என் கண்களை உயர்த்தினேன். ஆண்டவரை நோக்கி என் நேத்தி ரங்கள் எப்பொழுதுந் திரும்பியிருக்கின்றன.

மெய்யாகவே வெகுவாய்ச் சம்பாஷித்துப் பேச வேண்டியிருக்குஞ் சமயங்களிலும் பலமுறை நமது இருதயம் இந்த ஞான ஏகாந்தத்தில் இளைப்பாறும் படி செய்யலாம்.

அர்ச். சியேன்நகத்தரீனம்மாளின் தாய்தகப்பன்மார் இந்தம்மாள் தன்னிஷ்டப்படி வேண்டிக்கொள்ள வுந் தியானஞ் செய்யவும் விக்கினமாகப் பல வே லைகளிட்டு அமரிக்கையாய் ஓரிடத்தில் சற்றுநேரம்

இருக்கவிடார்கள். இப்படியிருக்கையில் இந்தம்மாள் தன் இருதயத்திலேயே ஓர் சின்ன செபக்கூடத்தை ஏற்படுத்தி ஓயாமல் வெளி வேலை செய்துகொண்டே தன் இஷ்டப்படி ஞான ஏகாந்தத்திலிருப்பதற்கு நமதாண்டவர் இந்தம்மாளுக்குக் கற்பித்தார். உலக மனிதர்களால் இந்தம்மாளுக்கு நேரிடும் விக்கினங்களில் அற்ப கலக்கத்துக்கும் இடங்கொடாள். ஏனெனில் இந்தம்மாள் சொல்லிக்கொண்டிருந்தது போல் ஞான அறையாகிய தன் இருதயத்திலேயே ஆண்டவரோடு சம்பாஷிப்பதில் ஆறுதல் அடைவாள். அது முதற்கொண்டு இந்தம்மாள் தன்னோடு ஒத்த கூட்டாளிகளுக்கும் இந்த வகையைக் கற்றுக்கொடுத்து அவரவர் தங்களிருதயத்தில் ஓர் சின்ன அறையைக் கட்டிக்கொண்டு சேசுநாதரோடு சம்பாஷிக்கும்படி சொல்வாள்.

ஆதலால் பிரிய சகோதரமே, நீயும் உலகத்தை மறந்து ஞானப்பீடமாகிய உன் ஆத்துமப் பிரயோசனத்துக்காக அந்நியோந்நியமாய்ப் பேசித் தாவீதென்பவரைப்போல் நித்திரையின்றி விழித்திருந்து வனாந்தரத்தில் வசிக்கும் பெலிக்கான் பக்ஷிக்குச் சரியொத்தவனுனேன். இடிந்த பாழான மதில்களில் அடைந்திருக்கும் ஆந்தைபோலவும் கூரையின்மேல் தனித்துக் குந்திய குருவிபோலவும் ஆனேனென்கலாம். இந்த வார்த்தைகளைக்கொண்டு தாவீதென்னும் அரசன் அநுதினமும் ஏகாந்தமாய் வெகுநேரம் ஞான காரியங்களைத் தியானித்து வந்தார் என்று தெரியவருகிறது. ஆனால் இந்த வார்த்தைகளின் ஞானார்த்தம் மூன்று உத்தமமான ஸ்தலத்தைக் குறிக்கிறது. நமது இரட்சகர் பாவனையாக நாமும் இந்த மூன்று வனவாசத்திலும் அவரைப் பின்பற்றிக் கண்டுபாவிக்கலாம். பெலிக்கான்பக்ஷி தன் சொந்த இரத்தத்தைத் தானே தன் குஞ்சுகளுக்குக் கொடுத்து உயிர் வளர்ப்

பிப்பதுபோல் நமதிரக்ஷகர் கல்வாரிமலையின்மீது தமது இரத்தத்தால் நம்மை உயிர்ப்பித்தார். பாழான மதில்களிற் கூவிக்கொண்டிருக்கும் ஆந்தையைப் போல் நமது இரட்சகர் பெத்லேம் நகரில் மாட்டுக் குடிலிற் பிறந்து நமது பாவங்களின்மீது துக்கித்து அழுதார். கடைசியாய் நமதிரட்சகர் தமது ஆரோகணநாளில் கூரைமேல் தனித்துக் குந்திய குருவியைப்போலே உலகத்தின் கூரையாகிய வானத்தை நோக்கி ஆரோகணமானார். நமது வேலைத் தொந்தரை எப்படிப்பட்டதானாலும் மேற்சொல்லி மூன்றிடங்களும் நமக்கு உத்தமமான தங்குமிடமாயிருக்கின்றன. மூத்திப்பேறுபெற்ற எல்செயாரொன்பவர் தன் மனைவி கற்புடையாள் தெல்பீனம்மாளை விட்டு வெகுகாலமாய்த் தூரதேசத்துக்குப் போயிருக்கையில் இத்தம்மாள் அவருடைய சவுக்கியத்தை அறியும்படி அவரிடத்தில் ஒரு ஆளை அனுப்பினாள். இந்தப் புண்ணியவான் அந்த அம்மாளுக்குச் சொல்லியனுப்பின மறுமொழியாவது: நான் சவுக்கியமாகவே இருக்கிறேன். என்னை நீ பார்க்க மனதானால் சேசுகிறீஸ்துநாதருடைய திருவிலாக்காயத்தில் என்னைத் தேடிப்பார். ஏனெனில் நான் வசிக்கும் இடம் அதுதான். தப்பாமல் என்னை அங்கே காண்பாய். வேறே எந்தவிடத்திலாகிலும் என்னைத் தேடுவாயாகில் விருதாவாயிருக்குமென்றார். இவரோ மெய்யான உத்தம கிறீஸ்துவன்.

13-ம் அதிகாரம்.

நாலாங் கிருத்தியமாகிய மனவல்லயச்செபங்
களையும் நல்ல நினைவுகளையுந்தறித்து.

சர்வேசுரனை நாம் விருப்பத்துடன் நேசிப்பதால் அவரை அண்டிப்போகிறோம். இப்படி அவரை அண்டிப்போகிறதற்கே அவரை ஆவலாய்த் தேடுகின்றோம். ஆதலால் உள்ளாந்தர ஒடுக்கமுஞ் சர்வேசுரனை நோக்கி நமது இருதயத்தினின்று பிறக்குஞ் சிநேகமுயற்சிகளும் ஒன்றுக்கொன்று உதவியாம். இவ்விரண்டுக்கும் நல்ல நினைவே ஆதாரம். ஆதலால் பிரிய சகோதரமே, அடிக்கடி சர்வேசுரனை நோக்கிச் சுருக்கமான சிநேக முயற்சிகளை நீ செய்யவேண்டும். அவரது சௌந்தரிய சோபனத்தைக் கண்டு அதிசயப்படு. அவர் உதவி சகாயத்தை மன்றாடு. உன் சிந்தையால் சிலுவையடியில் தெண்டனிட்டுக் கருணாசமுத்திரமாகிய இவரை ஆராதி. உன் இரட்சண்ணிய விஷயத்தில் வேண்டியவற்றை அடிக்கடி கேள். ஒரு நாளைக்கு ஆயிரமுறை உன்னாத்துமத்தை அவருக்கு ஒப்புக்கொடு. அவரது மதுரகுணத்தை நன்றாய் ஆழ்ந்து அறிய அவரை ஊன்றி உற்றுப்பார். தகப்பனைத் தாவிப்போகுஞ் சிறு பாலனைப்போல் சர்வேசுரனே உன்னை நடப்பிக்க அவர் கரங்களில் உன்னை ஒப்புக்கொடு. சுகந்த பூச்செண்டைப்போல் உன் மார்பின்மீது அவரை வைத்துக்கொள். பூசித விருதைப்போல் உன் ஆத்துமத்தில் அவரை நாட்டு க்கொடியாய் உன்னிருதயமானது நாலாவிதத்திலுஞ் சர்வேசுரனை நேசித்து இந்தப் பரம பத்தாவின் இனிய அமிர்த சம்பாஷணையைச் செவிகொடுத்துக் கேட்கக்கடவது. இத்தன்மையாகத்தான் மனவல்லயச் செ

பங்களைச் செய்யவேண்டும். அர்ச். அகுஸ்தினென்பவர் இந்த நற்கிருத்தியத்தைப் புரோபரி என்னும் புண்ணியவதிக்கு வெகுவாய்க் கற்பித்துவந்தார். பிரிய சகோதரமே, உன் புத்தியானது சர்வேசுரனோடு இப்படிப்பட்ட சிநேக சம்மந்தத்திலிருக்க அப்பியாசப்பட்டுவந்தால் கொஞ்சத்துக்குள் அவரது உத்தம விலக்ஷணங்கள் அதில் படிந்துவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. இது மகா பிரயாசையான காரியமல்ல. நமது அந்தஸ்துக்கடுத்த வேலைகளுக்கு இதனால் அற்ப விக்கினமும் வர இடமில்லை. மெய்யாகவே இந்த ஞான ஒடுக்கத்தை என்கிலும் மனவல்லயச் செபங்களை என்கிலுஞ் செய்ய வெகுநேரம் வேண்டியதில்லை. ஓர் நிமிஷம் போதும். இந்த நற்கிருத்தியத்தால் நமது அலுவல்களுக்கு இடைஞ்சல் இராததுமன்றி அவைகளைச் சுறுசுறுப்புடன் வேண்டியபடி செய்ய வெகு ஒத்தாசையாயிருக்கும். வழி நடக்கிறவன் தாகந்தீர்க்கச் சற்றுநேரந் தங்குவதால் இவன் இழந்துபோவதொன்றுமில்லை. இதனால் இவனுக்கு அந்த நேரம் வீணாய்ப்போவதில்லை. அதிக துரிதமாய் நடக்கப் பலமுண்டாகும்படிக்கு இவன் சற்றுத் தங்கவேண்டியிருக்கிறது.

மெய்யாகவே வெகு பிரயோசனமான அநேக மனவல்லயச் செபங்கள் பல புஸ்தகங்களிலுண்டு. ஆனால் இந்தப் புஸ்தகங்களிலிருப்பதைச் சொல்லவேண்டும் என்கிற அவசியமில்லை. தேவசிநேகமானது உனக்கு வருவிக்கும் மனவல்லயச்செபத்தை மனதினாலென்கிலும் வாக்காலென்கிலுஞ் சொல்லுவாய். ஏனெனில் தேவசிநேகமுள்ளவன் இருதயத்தில் இப்படிப்பட்ட மனவல்லயச் செபங்கள் இயல்பாய் உண்டாகும். ஆயினும் நமதிருதயத்தைத் தூண்டுகிறதற்கு விசேஷ பலனுள்ள சில வார்த்தைகள் உண்டு இவை தாவீதிராசா சங்கீதங்களில் வெகுவாய்

அகப்படும், சேசுகிறீஸ்துநாதருடைய திருநாமத்தின் பற்பலசெபங்களிலும் உந்தக்கவியிலும் சிநேகத்தை மூட்டுவதற்கான பற்பல வாக்கியங்களுண்டு. இவைகளை நீ உதவிக்கொள்ளலாம். இன்னஞ் சில ஞானப் பாட்டுகளையும் வெகு பிரயோசனமாகப் பிரயோகித்துக்கொள்ளலாம். ஆனால் இந்தப் பிரயோசனத்தை அடையும்படி கவனமாய் அவைகளைப் பாடவேண்டும்.

ஒருவன் மிதமிஞ்சினவிதமாய் ஒருவனை நேசிப்பானேயாகில் ஓயாமல் இவன்பேரிலேயே சிந்தையாயிருப்பான். அவன் இருதயம் இவனையல்லாமல் வேறொன்றையும் நேசியாது. இடைவிடாமல் இவனைக்குறித்துப் புகழ்ந்து பேசுவான். இவனைவிட்டுப் பிரிந்திருக்கும்படி நேரிட்டால் வெகு உருக்கநேசத்தைக் காட்டி அடிக்கடி காகிதமெழுதுவான். தன் கண்ணுக்கு அகப்படும் எல்லா மரங்களின்பேரில் தன் சிநேகிதனுடைய பேரை எழுதுவான். இத்தன்மையாகவே சர்வேசுரனை நேசிப்பவர்களும் இவர்பேரிலேயே ஓயாத சிந்தையாயிருந்து தாங்கள் செய்வதையெல்லாம் இவரைப்பற்றி செய்து இவரைக்குறித்துப் பேசச் சலியார்கள். கூடுமாயிருந்தால் சகல மனிதர்களுடைய மார்பின்பேரிலுஞ் சேசுகிறீஸ்துநாதருடைய பரிசுத்த திருநாமம் பதிந்திருக்க ஆசிப்பார்கள். தங்கள் இருதயம் ஓயாமல் நேசித்துவரும் பரம பத்தாவின் புகழ்ச்சிகளைச் சகல சிஷ்டிகளுங் கொண்டாடி இன்னந் தாங்கள் இவரை அதிகமாய் நேசிக்கும்படி தங்களுக்கு மேற்சொல்லிய சிஷ்டிகள் சொல்வதுபோலத் தோன்றும். அர்ச். அகுஸ்தீனென்பவரும் அர்ச். அந்தோனியாருஞ் சொல்வதுபோல உலகிலுள்ள யாவுஞ் சர்வேசுரனைக்குறித்தே பேசுகின்றன. உலகமெல்லாஞ் சர்வேசுரனுடைய புகழ்ச்சிகளைப் பாடுங்கிண்ணாரம்போலவுஞ் சகலமனிதர்களும் அவரை நேசிக்க அழைக்கும் எக்காளம்

போலவும் இருக்கின்றது. நாம் உலகில் பார்ப்பதெல்லாம் நல்ல நினைவை வருவிப்பதுமன்றி இந்த நல்ல சிந்தைகளால் நல்ல ஆசைகள் நமது இருதயத்தில் பிறக்கின்றமையால் சர்வேசுரனை நாம் மேன்மேலும் நேசிப்பதற்கு எத்தனமாயிருக்கின்றது நசியான்ஸ் நகரத்துமேற்றிராணியாராகிய அர்ச். கிரெகோரியார் கடலோரத்தில் ஒரு நாள் உலாவிக்கொண்டிருந்தாராம். அலைகள் கடற்கரையில் கிளிஞ்சில் மட்டி முதலியவைகளை ஒதுக்குகிறதையும் வேறே அலைகள் மறுபடியும் அவைகளைச் சலங்களுக்குள் அடித்துக்கொண்டுபோகிறதையும் இதற்கு விரோதமாய் அருகாமையிலிருக்குங் கற்பாறையின்மீது எவ்வளவுதான் பலமாய் அலைகள் வந்து மோதியபோதிலும் அவைகள் அசையாமல் ஸ்திரமாயிருப்பதையும் பார்க்கையில் இவருக்குஉண்டான நல்லயோசனையாவது: புண்ணியத்தில் பலவீனமான ஆத்துமம் மேற்சொல்லிய கிளிஞ்சில்கள்போல் மனவுச்சாயப்படி யாவுங் கைகூடி வரும்போது சந்தோஷமாயுங் கைகூடிவராத தருணத்தில் கஸ்தியாயும் இருக்கும். ஆனால் புண்ணியத்தில் தைரியமாயிருப்பவர்கள் எக்காலத்திலும் எந்தப் புசற்காற்றிலும் அசையாமல் ஸ்திரமாய் நிற்பார்கள்.

இந்த ஆலோசனையானது இவர் புத்தியில் வரவே இவர் பிரமித்துத் தாவீதென்பவர் பாவனையாய் என் ஆண்டவரோ என்னை இரட்சியும். ஏனெனில் என் ஆத்துமம்வரையிற் சலங்கள் பிரவேசித்தன. ஆ என் கர்த்தரோ சுவாமீ! இந்தப் பாதாளத்தினின்று என்னை மீட்டிரட்சியும். நடுச்சமுத்திரத்தில் மூழ்கினேன். புசலானது என்னை அமிழ்த்திவிட்டதென்றார். அத்தருணத்தில் மெய்யாகவே இந்த அர்ச்சியசிஷ்டவரின் இருதயங் கஸ்தியில் அமிழ்ந்திருந்தது. ஏனெனில், தேவ பயபத்தியற்ற மக்சிமென்பவன் இவரை மேற்

றிராசனத்தினின்று தள்ளிவிட்டுத் தான் அதில் அக்கிரமமாய் வந்திருந்தான்.

ருஸ்பா மேற்றிராணியாராகிய அர்ச். புல்ழான்ஸ் என்பவர் கோத்துமார்களுடைய இராசாவாகிய தேயோதோரிக்கு என்பவனோடு உரோமாபுரி பட்டணத்தின் வங்கிஷபதிகளெல்லாம், ஒரு பொதுக்கூட்டமாய்க் கூடியிருக்கையில் இவர்கள் ஒவ்வொருவருந் தங்கள் தங்கள் அந்தஸ்து கௌரவப்படி வெகு ஆடம்பரமாய்த் தங்கள் ஆசனத்தில் வீற்றிருக்கக்கண்டு ஆ சுவாமீ! நிலையில்லா இப்பூவிமீதுள்ள உரோமை நகர் இவ்வளவு சிறப்புற்றோங்கியதாயின் பரலோக செருசலேம் நகர் எவ்வளவோ அலங்கிர்தமுற்றிருக்கவேண்டும். பெருமை சிலாக்கியத்தை நாடியவர்களுக்கு இவ்வுலகில் இவ்வளவு மகிமை கிடைத்தால் சத்தியத்தை நேசிப்பவர்களுக்கு மறுலோகத்தில் வரும் மகிமை எப்பேர்க்கொத்ததாய் இருக்க வேண்டும் என்று ஆச்சரியத்தோடு உரைத்தார்.

கந்தோர்பெரி பட்டணத்தின் அதிமேற்றிராணியாராகிய அர்ச். ஆன்சேல்ம் என்பவர் எது காரியத்தைப்பார்த்தபோதிலும் உடனே அதினால் ஏதாகிலும் ஒரு நல்ல யோசனைகள் அவருக்கு வராமலிருக்கிறதில்லையாம். ஒருநாள் யாத்திரை செய்கையில் நாய்கள் துரத்திவந்த ஒரு முசற்குட்டி இவர் ஏறியிருந்த குதிரையின்கீழ் சாவுக்குத் தப்பித்துக்கொள்ளுகிறதற்கு ஓடிவந்தது. இதைத் துரத்திவந்த நாய்கள் அடைக்கலமென்று ஓடியவிடத்தில் நெருங்குகிறதற்குத் துணியாமல் சுற்றிலும் வெகுவாய்ச் சூலத்துக்கொண்டிருந்தன. அருகில் நின்ற இதைக் கண்ட வேடரெல்லோருக்கும் இது வெகு விநோத வேடிக்கையாயிருந்தது. அர்ச். ஆன்சேல்ம் என்பவரோவெனில் தேம்பி அழுதுகொண்டு வேடர்களைப் பார்த்து உங்களுக்கு நகைப்பாயிருக்கிறது. ஆனால்

இந்த முசலோ நகைக்கிறதில்லை. இத்தன்மையாக அல்லவா பசாசின் வலையில் அகப்பட்டு நாலாவிதத்திலும் எவ்விதப் பாவங்களையுங் கட்டிக்கொண்ட ஆத்துமத்தை மரணநேரத்தில் பசாசுகள் பிடித்து விழுங்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. பிரலாபத்துக்குரிய இவ்வாத்துமம் வெகு திகிலடைந்து எங்கேயாகிலும் ஓர்டைக்கலத்தைத் தேடி இதற்கு அகப்படாவிட்டால் இதின் சத்துருக்களாகிய பசாசுகள் இதைத் தூஷணித்துப் பரிகாசம்செய்து நித்திய நரக நெருப்புக்கு இரையாக்கிவிடும் என்று சொல்லி பெருமூச்செறிந்து வழி நடந்துபோனார்.

பெரிய கொன்ஸ்தாந்தீனென்னுஞ் சக்கரவர்த்தி அர்ச். அந்தோனியாருக்கு மகா சங்கையுள்ள ஒரு காகிதம் எழுதினார். இவருடன் இருந்த சந்நியாசிகள் இதைக் கண்டு வெகுவாய் ஆச்சரியப்பட்டார்கள். இதின்பேரில் இந்த அர்ச்சியசிஷ்டவர் இவர்களைப் பார்த்து ஒரு இராசா ஒரு மனிதனுக்கு எழுதுகிறதைக் குறித்து ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள். சர்வேசுரன் மனிதர்களுக்குத் தமது முறைமையை எழுதிக்கொடுத்ததுமல்லாமல் தமது சொந்தக் குமாரனுடைய நாவால் அவர்களிடத்தில் பேசினதின் மட்டில் அதிகமாய் ஆச்சரியப்படுங்கள் என்றார்.

ஒரு நாள் அர்ச். பிராஞ்சீஸ்கென்பவர் வெள்ளாட்டுக்கிடையில் தனியாயிருந்த ஓர் செம்மறியாட்டைப் பார்த்துத் தன்னோடிருந்த சந்நியாசிக்குச் சொன்னது: இந்த வெள்ளாட்டுக்கிடைக்குள் இந்தச் செம்மறிக்குட்டி எவ்வளவு சாந்தமாயிருக்கிறதென்று பாரும். இப்படித்தான் நமது ஆண்டவரும் பரிசேயர் நடுவில் தாழ்ச்சியுஞ் சாந்தகுணமுமுள்ளவராயிருந்தார். வேறொரு தருணத்தில் ஒரு செம்மறிக் குட்டியை ஓர் பன்றி தின்கிறதை இந்த அர்ச்சியசிஷ்டவர் பார்த்து வெகுவாய் அழுதுகொண்டு ஆ செம்மறிக்

குட்டியே என் இரட்சகருடைய மரணத்தின் மெய்யான அடையாளமாயிருக்கிறாய் என்றார்.

காந்தி நகரத்து மன்னவானும் நமது காலத்தில் பேர்பெற்றவருமான அர்ச். பிராஞ்சீஸ்கு தெ போர்ழியா என்பவருக்கு வேட்டையாடும் அப்பியாசமுண்டு. வேட்டையாடுஞ் சமயத்திலும் இவருக்குப் பத்திக்குரிய பல யோசனைகள் ஒருவிசையாகிலும் வராமலிருந்ததில்லையாம். நாம் வளர்க்குங் குருவிகள் நமது குரற்சத்தத்தைக் கேட்டமாத்திரத்தில் நமது கையின்பேரில் வந்து உட்கார்ந்துகொண்டு நாம் போகும் இடமெல்லாம் நம்மைச் சுற்றிவருகிறதையும் மனிதர்கள் மாத்திரஞ் சர்வேசுரனுடைய குரற்சத்தத்துக்குச் செவிகொடாமல் அவருக்கு அடங்காமல் இருக்கிறதையுங் கண்டு வெகு அதிசயப்படுவாராம்.

அர்ச். பசீலென்பவர் முட்களுக்குள் புஷ்பிக்கும் உரோசா புஷ்பமானது மனிதர்களுக்கு இந்த நல்ல படிப்பினையைப் படிப்பிப்பதாகச் சொல்லுகின்றார். ஓ மனிதர்களே! இவ்வுலகில் எவ்வளவுதான் பிரியமாயிருக்குங் காரியங்களிலுங் கஸ்தித் துன்பங் கலந்திருக்கிறது. இவ்வுலகில் கலப்பில்லாததொன்றுமில்லை. சந்தோஷத்தோடு கஸ்தியுங் கலியாணத்திற்குப் பின் விதவைத்தனமும் புத்திரபாக்கியத்தோடு வேலைத் துன்பங்களும் மகிமையுடன் நிந்தையும் பெருமைபெறச் செலவும் இன்பங்களிற் சலிப்புஞ் சவுக்கியத்தோடு வியாதியும் இணைபிரியாமற் சேர்ந்திருக்கின்றன. இன்னும் இந்த அர்ச்சியசிஷ்டவர் சொல்லுகிறதேதெனில், உரோசாபுஷ்பம் வெகு அழகானதுதான். ஆனால் அதை நான் பார்க்கையில் எனக்கு வெகு கஸ்தியுண்டாகிறது. ஏனென்றால் பாவத்தைப்பற்றியே பூமியானது முள்ளுகளையும் முட்செடிகளையும் விளைவிக்கிறதாக எனக்கிது கற்பிப்பதாகத்

தோன்றுகிறது என்கிறார். மாசு மப்பில்லாத இரவில் புண்ணியவானொருவர் தெளிந்த ஓர் ஓடைக்கருகாமையில் இருந்து அந்தச் சலத்தில் வானமும் நக்ஷத்திரங்களுந் துலங்கக் கண்டு என் சர்வேசுரா சுவாமீ! நான் உமது பரிசுத்த மாளிகையில் வந்தபின் இந்த நக்ஷத்திரங்களெல்லாம் ஒரு நாள் என் பாதங்களின் அடியிலிருக்குமல்லோ. இந்த வான்மீன்கள் உலகின் சலத்தில் காணப்படுகிறதுபோலப் பூவுலகத்தோரும் வானுலகத்தில் தேவசிநேகத்தின் அழகிய தடாகத்தில் காணப்படுகின்றனர் என்றார்.

வேறொரு புண்ணியவான் ஓர் நதியைப் பார்த்து இந்த நதி சமுத்திரத்தில் போவதுபோல என் ஆதியும் அந்தமுமாகிய சர்வேசுரனிடத்தில் என்னாத்துமம் ஒன்றித்து ஐக்கியமாகுந்தனையும் ஒரு நாளும் எனக்கு இளைப்பாற்றி இராதென்றார்.

அர்ச். பிராஞ்சீஸ்கம்மாள் அழகான ஓர் ஓடையின் அருகாமையில் முழந்தாளிட்டு வேண்டிக்கொண்டிருக்குங்காலையில் பரவசமாகி இதோ சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தின் அடையாளம். இப்படித்தான் மனிதர் இருதயங்களில் சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் மகா அமரிக்கையாய் ஓடுகிறதென்றாள்.

வேறொரு புண்ணியவான் நிறையப் பூத்திருக்கும் விருக்ஷங்களைப் பார்த்து ஐயோ திருச்சபையின் நந்தவனத்தில் நான்மாத்திரம் பூக்கொடாத மரமாயிருக்கவேண்டுமோ என்றார்.

கோழிக்குஞ்சுகள் கோழியின் சிறகுக்குள் சேர்ந்திருப்பதை மற்றோர் புண்ணியவான் பார்த்து ஆ என் பரம கர்த்தரே இந்தன்மையாகவே உமது சிறகுகளின் நிழற்குள் எங்களையுங் காப்பாற்றியருளும் என்றார்.

வேறொரு புண்ணியவான் சூரியகாந்திப் புஷ்பத்

தைப் பார்த்து ஆ என் சர்வேசுரா சுவாமீ! எப்பொழுதும் என்னாத்துமம் இந்தச் சூரியகாந்திப் புஷ்பத்தைப்போல் உமது வரப்பிரசாதத்தின் ஏவுதலைப் பின்பற்றி நடக்குமென்றான். இதன்பின் அருகாமையிலிருந்த கண்ணுக்குமாத்திரம் பிரியமாய் மணமில்லாத புஷ்பங்களைப் பார்த்து ஆ என் ஆசை நினைவுகளும் இந்தப் புஷ்பங்களுக்கு ஒத்தவைகள் அல்லவோ. சொல்லிக்காட்ட உள்ளபடி அழகானவைதான். ஆனால் ஒன்றுக்கும் உதவாததல்லோவென்றார்.

இத்தன்மையாகத்தான் பிரிய சகோதரமே, இப்பிரபஞ்ச வாழ்வில் நமக்கு உபயோகப்படுவது எல்லாவற்றைக்கொண்டும் நல்ல நினைவு நல்ல முயற்சிகளை வருவித்துக்கொள்ளவேண்டும். சிஷ்டிக்கப்பட்ட வஸ்துவைச் சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காக உதவிக்கொள்ளாமல் அவைகளைக்கொண்டு பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் உள்ளபடி நிர்ப்பாக்கியவான்கள். ஆனால் சிஷ்டிகளைக்கொண்டு சர்வேசுரனுடைய மகிமைப் பிரதாபத்தைக் கொண்டாடித் தங்கள் வீண் சிலாக்கியங்களை விட்டுச் சத்தியத்தை நாடுபவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள். எது காரியத்தையுந் தன் ஆத்துமப் பிரயோசனத்துக்காக உதவிக்கொள்ளுகிறது உண்மையாகவே உத்தமமான வழக்கமென்று நசியான்ஸ் பட்டணத்தின் அர்ச். கிரெகோரியுஸென்பவர் வசனித்திருக்கின்றார்.

அர்ச். போல் என்னும் சின்னம்மாள் கல்லறையின் பேரில் அர்ச். எரோனிமூசென்பவர் எழுதியதைப் பார்க்கையில் இந்தம்மாள் எந்தத் தருணங்களிலும் மனவல்லயச் செபங்களையுஞ் சிநேக முயற்சிகளையுஞ் செய்வதிலேயே காலமெல்லாம் போக்கியதுபோற் காணப்படுகிறது.

இவ்வாறு ஞான ஒடுக்கமாயிருப்பதிலும் மன

வல்லயச் செபங்களைச் செய்வதிலுந்தான் விசேஷமாய்ப் பத்தியானது அடங்கியிருக்கின்றது. இந்தக் கிருத்தியம் எவ்வளவு பிரயோசனமுள்ளதென்றால் மற்ற எந்தச் செபங்களைச் செய்யாவிட்டாலும் இதைமாத்திரஞ் சரியாய் அநுசரித்துவந்தால் போதுமென்கலாம். இதற்கு விரோதமாய் இந்தக் கிருத்தியத்தைச் செய்யாமல் அசட்டையாய் விட்டுவிட்டால் இதற்குப்பதிலாய்ச் செய்யக்கூடுமான வேறே கிருத்தியம் இல்லையெனத்தகும். இதனை அநுசரியாதவர்கள் ஏகாந்தத்துக்கடுத்த தியான சீவியத்தில் ஒன்றுங் கண்டுபிடியார்கள், தங்கள் அந்தஸ்தின் கடமைகளைச் சரியாய் நிறைவேற்றமாட்டார்கள். ஏனெனில் இந்தக் கிருத்தியத்திற் பழக்கமில்லாதவர்களுக்கு இளைப்பாற்றி சோம்பலாகவும் வேலை வீண் தொந்தரையாகவும் இருக்கும். ஆதலால் இந்த நற்கிருத்தியத்தை உன் முழுவிருதயத்தோடு அங்கீகரித்து ஆதனைப் பரிச்சேதம் விட்டுவிடாதபடி உன்னை வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

14-ம் அதிகாரம்.

பூசையைக்குறித்து.

1-வது. ஞானக் கிருத்தியங்களுக்குச் சூரியன் போல் இருக்கும் வேறொரு உத்தம கிருத்தியத்தைக் குறித்து இன்னம் நான் உன்னிடத்திற் பேசவில்லை. அதென்னவெனில், உன்னத பரிசுத்த திவ்விய பூசைப்பலியாம். இது கிறீஸ்துவேதத்துக்கு நடுநிலையாம், பத்திக்கு ஆதாரமாம், புண்ணியங்களுக்கு

உயிர்நிலையாம், தேவசிநேகத்தின் கரைகாணுச் சமுத்திரத்தை அடக்கிக்கொண்டிருக்கும் வர்க்கால் விஸ்தரித்து உரைக்கவறியாப் பரமரகசியமாம். இந்தத் தேவதிரவிய அநுமானத்தின் மூலமாகத்தான் சர்வேசுரன் தம்மைத்தாமே நமக்கு மெய்யாகவே அளித்து நமதுபேரில் தமது கருணை வரப்பிரசாத மாரியை ஏராளமாய்ப் பொழிகின்றூர்.

2-வது. இந்தத் திவ்விய பலியோடு ஒன்றித்துச் செய்யப்படுஞ் செபத்தியானங்களுக்கு வெகு பலனுண்டு. ஏனென்றால் இத்தருணத்தில் ஆத்துமம் தன் பிரிய பத்தாவின்பேரில் சாய்ந்து குலாவுந் தன்மை போலிருப்பதால் தேவ அருள் ஏராளமாய் இந்த ஆத்துமத்தின்பேரில் வரும். இன்னம் இதனால் இந்த ஆத்துமத்துக்கு எப்படிப்பட்ட ஞான இன்ப ஆறுதல் உண்டாகிறதென்றால் உன்னத கவியில் சொல்லியவாறு அக்கினியிலிட்ட வெள்ளைப்போளங் தூப முதலிய பரிமள வர்க்கங்கள் சுகந்தம் வீசி மேகமண்டலத்தை நோக்கிப் புகைந்து கிளம்புவதுக்கொப்பான ஆனந்த அக்களிப்புண்டாகும்.

3-வது. ஆதலால் உன்னிரக்ஷகர் உனக்காகவுந் திருச்சபைக்காகவுந் தமது ஏகபிதாவுக்கு இடைவிடாமல் ஒப்புக்கொடுக்கும் உந்தப் பலியைக் குருவானவரோடு நீயும் ஒப்புக்கொடுக்கிறதற்கு நாள்தோறுந் திவ்விய பூசைகாணப் பிரயாசப்படக்கடவாய். பூசை நேரத்திலெப்பொழுதுஞ் சம்மனசுகள் புடைசூழ்ந்து நின்று வணக்க நடுக்கத்துக்குரிய பரிசுத்தப் பலியை ஆராதிப்பதாக அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் சொல்லுகின்றூர். நாமும் அத்தருணத்தில் இவர்களோடு ஏகோபித்திருப்பதால் நமக்கு வெகு நன்மையுண்டாம். மோக்ஷத்திலிருக்குஞ் சகல சம்மனசுகளும் உலகில் வசிக்கும் விசுவாசிகளனைவரும் இந்தப் பூசைநேரத்தில் சேசுகிறீஸ்துநாதரோடே ஏகோபி

த்துப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு உன்னத பலியை ஒப்புக்கொடுப்பதால் இதினால் மட்டற்றவிதமாய் அவருடைய தயாள இரக்கத்தைப் பெற்றுக்கொள்வோம்.

4-வது. இந்த உன்னத பூசைப் பலியை நீ காணக் கூடாவிட்டால் உன்னிருதயப் பற்றுதலால் புத்தியினாலென்கிலும் திவ்விய பூசையைக் காணவேண்டும். ஆதலால் நீ கோவிலுக்குப் போய்ப் பூசை காணக் கூடாதபக்ஷத்தில் உன் புத்தியால் கோவிலுக்குப் போய்ப் பூசை காணும்படி காலை வேளையில் ஒரு நேரத்தைத் தெரிந்துகொள். பூசைகாணும் எல்லாக் கிறீஸ்துவர்களுடைய கருத்தோடு உன் கருத்தையும் ஒன்றித்து நீ இருக்கிற இடத்தில்தானே இருந்துகொண்டு கோவிலுக்குப்போய் மெய்யாகவே பூசை காணும்போது செய்யும் வணக்கஞ் சங்கை ஆராதனையை உன் மனதுக்குள்ளே செய்வாய்.

5-வது. உத்தேசத்தினாலாகிலும் மெய்யாகவென்கிலும் பூசை காணும்போது உத்தமவிதமாய்க் காண சுலுவான வகை யாதெனில்,

1-வது. பூசை ஆரம்பமுதற்கொண்டு குருவானவர் பீடத்தின்பேரில் ஏறுகிறவரையில் நீயுங் குருவானவரோடு பூசை ஆயத்தம் செய். இந்த ஆயத்தம் என்னத்தில் அடங்கியிருக்குதென்றால் சர்வேசுரனுடைய சமுகத்தில் இருக்கிறாயென்று நினைத்து அவருடைய சந்நிதியில் நீ இருக்க அபாத்திரவானென்று உன் குற்றங் குறைகளுக்காக அவரைப் பொறுத்தல் கேட்பதிலேயாம்.

2-வது. குருவானவர் பீடத்தின்பேரில் ஏறினது முதற்கொண்டு சுவிசேஷம் வாசிக்கும்வரையில் நமதாண்டவர் நமக்காக மனுஷாவதாரம் செய்து உலகில் சஞ்சரித்ததைப் பொறுவாய் யோசித்துப்பார்.

3-வது. சுவிசேஷந் துவக்கி விசுவாசமந்திரஞ் சொல்லும்வரையில் நமதாண்டவர் பட்டணம் பட்

டிக்காடெங்குஞ் சுற்றித் திரிந்து பிரசங்கித்ததை யோசித்து அவர் கற்பித்த வேதசத்தியங்களையெல்லாம் உறுதியாக விசுவசித்துக் கத்தோலிக்கென்னும் பொதுவான அர்ச்சியசிஷ்ட சபையில் சீவித்து மரிக்க ஸ்திரமான மனதாயிருக்கிறுயென்று அவருக்கு வார்த்தைப்பாடு கொடு.

4-வது. விசுவாசமந்திரந் துவக்கிப் பரமண்டல மந்திரம் வரையில் நமது இரக்ஷகருடைய பாடுகளையும் மரணத்தையும் யோசித்துப்பார். ஏனெனில் இத்திவ்விய பூசை சேசுநாதர் திருமரணத்தின் வெறும் அடையாளமாய் மாத்திரம் இராமல் கல்வாரிமலையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட மெய்யான பலியாகவே இருக்கிறது. ஆதலால் குருவானவருக்கும் மற்ற விசுவாசிகளுக்குமுள்ள கருத்தோடு நீயும் இந்த உன்னதப் பலியைப் பிதாவாகிய சர்வேசுரனுடைய மகிமைக்காகவும் உன் இரக்ஷணியத்துக்காகவும் அவருக்கு ஒப்புக்கொடுப்பாய்.

5-வது. பரமண்டலமந்திரந் துவக்கிக் குருவானவர் திவ்வியநற்கருணை உட்கொள்ளும்வரையில் நமதிரக்ஷகரான சர்வேசுரனோடு இணைபிரியாத நேசத்தால் நித்தியமாய் ஒன்றித்திருக்க ஆசித்து உன்னிருதயத்தில் பல ஆசை சிநேக முயற்சிகளைச் செய்.

6-வது. குருவானவர் திவ்வியநற்கருணை உட்கொண்டதுமுதல் பூசை முடியும்வரையில் உனக்காகச் சர்வேசுரன் மனிதனாய்ப் பிறந்து உலகில் சஞ்சரித்துக் கடின பாடுகளையும் மரணத்தையும் அநுபவித்ததுமன்றி இன்னம் இந்தத் திவ்விய பூசையில் அவர் நமக்குக் காண்பிக்கின்ற அளவுகடந்த சிநேகத்துக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யக்கடவாய். மேலும் திருச்சபைக்கும் உன் சிநேகிதர்களுக்கும் உன் உறவின்முறையார்களுக்கும் உனக்கும் எப்பொழுதும் அவர் உதவி ஒத்தாசையா

யிருக்கும்படி அவருடைய பேறுபலன்களைக்கொண்டு அவனை வேண்டிக்கொள். இதன்பின் மிகுந்த மனத்தாழ்ச்சியோடு உன்னாண்டவர் தமது ஸ்தானாபதியாகிய குருவின் கையால் கொடுக்குந் தேவ ஆசீர்வாதத்தைப் பத்தி விநயத்துடன் பெற்றுக்கொள்.

நாள்தோறும் நீ வழக்கமாய்ச் செய்யுந் தியானங்களில் ஒன்றைக்குறித்துப் பூசைநேரத்தில் தியானிக்க உனக்கு மனதானால் இப்போது சொல்லிக் காட்டிய இந்தப் பூசைகாணும் வகையைப் பின் செல்ல வேண்டியது அவசியமில்லை. ஆனால் பூசை ஆரம்பத்துக்குமுந்தி நீ செய்யுந் தியானத்தைக்கொண்டு இந்தத் திவ்விய பலியை ஆராதித்துக் குருவானவரோடு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்கிற கருத்திருந்தால் போதும்.

15-ம் அதிகாரம்.

பத்திக்கடுத்த பொதுவான வேறே சில கிருத்தியங்களைக்குறித்து.

பிரிய சகோதரமே, பூசை காண்பதுமன்றி ஞாயிற்றுக்கிழமைகளிலுங் கடன் திருவிழாக்களிலும் உன்னால் இயன்றவளாயில் கோவிலில் நடக்கும் பிரார்த்தனை செபங்களுக்கு வந்திருக்கவேண்டும். ஏனென்றால் இந்த நாட்கள் சர்வேசுரனுக்கு வசீகரம் செய்யப்பட்ட நாட்கள். மற்ற நாட்களில் நாம் செய்வதைப்பார்க்க இந்நாட்களில் சர்வேசுரனுடைய தோத்திர மகிமைக்காக அதிகமாய் வருந்திப் பிரயாசப்படு

வந்து நியாயந்தானே. இதனால் உன் இருதயத்துக்கு வெகு ஞான சந்தோஷங்களுண்டாகும். அர்ச். அகுஸ்தினென்பவர் மனந்திரும்பினகாலத்தில் கோவிலுக்குப்போய்த் தேவசங்கீதப் பாட்டுகள் பாடுவதைக் கேட்கும்போது இவர் இருதயத்தில் சொல்லிலடங்காத ஞான சந்தோஷமுண்டாகுமாம். மேலும் நாம் தனியாய்ச் செய்யும் பத்திக் கிருத்தியங்களுக்குள்ள சத்தியைப்பார்க்கிலுந் திருச்சபையிற் பொதுவாய்ச் செய்யப்படும் பிரார்த்தனை செபங்களுக்கு எப்பொழுதும் அதிக பலனுண்டு. ஏனெனில் சர்வேசுரன் தமது ஆராதனையைச் சேர்ந்த விஷயத்தில் தனித் தனியாய்ச் செய்யப்படும் நற்கிருத்தியங்களுக்கு அளிக்கும் வரப்பிரசாத நன்மைகளைவிடப் பொதுவில் விசுவாசிகள் கூடிச்செய்யும் பத்திக் கிருத்தியத்துக்கு அதிக வரப்பிரசாத நன்மைகளைப் பொழிகின்றார்.

நீ இருக்கும் விசாரணைக் கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பற்பல சபைகளில் இருப்பது உனக்குப் பிரியமாயிருக்கவேண்டும். விசேஷமாய் நல்லொழுக்கம் அதிக பத்தி வருவிக்குஞ் சபையைத் தெரிந்துகொள்ளவேண்டும். இப்படி செய்வதால் சர்வேசுரனுக்கு வெகு பிரியமான காரியஞ் செய்கிறாயென்று மறந்துபோகாதே. அதேதெனெனில் எல்லோரும் இந்தச் சபைகளில் இருக்கவேண்டுமென்று திருச்சபை கட்டளையிடாவிட்டாலும் ஒவ்வொருவரும் இந்தச் சபைகளில் வரவேண்டுமென்று ஆசித்து அதற்காகவே சபையிலிருப்பவர்களுக்குப் பல பலன்களை அளித்து வருகிறது. மேலும் அநேகருடைய நற்கருத்துகள் நிறைவேறும்படி இப்படி பலபேர் கூடி அதற்காகப் பிரயாசப்படுவது உத்தமபுண்ணியமாம். கிறீஸ்துவர்களுக்குள் இருக்கவேண்டிய பிறசிநேகத்தின் வர்த்திப்புக்கு இது வெகு உதவியாயிருக்கும்

என்பதற்குச் சந்தேகமில்லை. சபையார்களுக்குள் பொதுவில் செய்யப்படும் நற்கிருத்தியங்களையே ஒருவன் தனியில் அதிக பிரியமாய்ச் செய்யக்கூடுமாயிருந்தபோதிலும் இப்படி பலபேர் சேர்ந்து செய்யும் நற்கிருத்தியத்தால் சர்வேசுரனுக்கு எப்போதும் அதிக மகிமை வருகிறதென்னத்தகும்.

கோவிலில் பொதுவாய்ச் செய்யப்படுஞ் செபங்களையும் பத்தி முயற்சிகளையுங்குறித்து இத்தன்மையாகவே சொல்லலாம். சர்வேசுரனுடைய ஏக தோத்திரத்துக்காகவும் புறத்தியார் நன்மாதிரிகைக்காகவும் நம்மாலியன்றமாத்திரம் இப்படிப்பட்ட பத்திக்கடுத்த தருணங்களில் பத்தியோடிருந்து நமது நல்ல நடக்கையால் எல்லோருக்கும் மாதிரிகையாயிருக்க வேண்டும்.

16-ம் அதிகாரம்.

அர்ச்சியசிஷ்டவர்களை வணங்கி வேண்டிக்கொள்ள வேண்டும் என்பதின்பேரில்.

தேவ ஏவுதல்கள் பலமுறை நமக்குச் சம்மனசுகள் வழியாய் வருவதால் இவர்கள் வழியாகத்தான் நமது செபங்களையும் நல்ல ஆசைகளையுஞ் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். இன்னமும் மோக்ஷத்தில் சர்வேசுரனது மகிமைப் பிரதாபத்தில் வீற்றிருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களும் நமதாண்டவர்தாமே சொல்வதுபோல மேற்சொல்லிய சம்மனசுகளுக்குச் சரியொத்தவர்களாய் நமதுபேரில் பக்ஷமாயிருந்து நமக்கு நல்லுணர்ச்சிகளை வருவித்துத்

தங்கள் செபங்களை ஓயாமல் சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடுக்கின்றமையால் நாம் இவர்களைப்பார்த்து வேண்டிக்கொள்ளவேண்டும்.

ஆதலால் பிரிய சகோதரமே, வானம்பாடிக் குஞ்சுகள் தங்கள் தாயோடு சேர்ந்து பாடக் கற்றுக்கொள்வதுபோல் நாமும் இந்த மோக்ஷவாசிகளோடு சேர்ந்து எப்போதும் இவர்களோடு சம்ப்ராஷித்துவருவோமேயாகில் நன்றாய் வேண்டிக்கொள்ளவுந் தேவஸ்துதிகளை நன்றாய்ப் பாடவுங் கற்றுக்கொள்வோம். வானதூதர்கள் சன்னதியில் தேவசங்கீதங்களைப் பாடுவேனென்று தாவீதென்பவர் வசனிக்கின்றார்.

முத்திப்பேறுபெற்ற கன்னிமரியம்மாள்பேரில் விசேஷ பக்ஷம் வைத்து அந்தம்மாளைச் சங்கித்து வணங்கக்கடவாய். நமது உத்தம தகப்பனாராகிய சேசுநாதருக்கு இந்தம்மாள் மெய்யான தாயாராயிருப்பதால் நமக்குந் தாயார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் எதுகாரியத்திலும் எதுசமயத்திலுஞ் சிறுபிள்ளைகளைப்போல் மிகுந்த நம்பிக்கையோடு இந்தம்மாளிடத்தில் அடைக்கலமென்று ஓடிவந்து இந்த உத்தம தாயானவள் நமதுமீது தாய்நேசங் கொண்டு நமக்கு ஆதரவாயிருக்கும்படி வேண்டிக் கொள்வோம். மேலும் நம்மால் கூடியவரையில் இந்தம்மாளுடைய புண்ணியங்களைக் கண்டுபாவிக்கப் பிரயாசப்பட்டு ஒரு பிள்ளை தன் தாயை நேசிப்பதுபோல் இந்தம்மாளை நேசிக்கக்கடவோம்.

சம்மனசுகள் உன் ஆத்தும சிநேகிதர்களாயிருக்கிறார்களென்றும் நீ அவர்களைப் பாராவிட்டாலும் நீ செய்யுங் காரியங்களையெல்லாம் உனக்கருகாமையிலிருந்து மெய்யாகவே அவர்கள் பார்த்துக்கொண்டு வருகிறார்களென்றும் மறந்துபோகாதே. உன் மேற்றிராணியாருக்குக் கீழ்ப்பட்ட நாடுகளை ஆதரிக்குஞ் சம்மனசுகளையும் உன்னோடு பழக்கமாயிருப்

பவர்களுடைய சம்மனசுகளையும் விசேஷமாய் உன் காவலான சம்மனசானவரையும் நேசித்து வணங்கக்கடவாய். அவர்களைப் பார்த்து அடிக்கடி வேண்டிக்கொண்டு அவர்களைப் புகழ்ந்து கொண்டாடி ஞான காரியத்திலுஞ் சரி இலௌகீக காரியத்திலுஞ் சரி அவர்கள் உன் கருத்துக்கு அநுகூலமாயிருக்கும்படி எந்தச் சமயத்திலும் அவர்கள் உதவி ஒத்தாசையைக் கேள்.

சேசுசபையை ஸ்தாபித்த அர்ச். இஞ்ஞாசியாருடைய மூதற்கூட்டாளியுமாய் இந்தச் சபையில் மூதற்குருவும் மூதற்பிரசங்கியும் வேதசாஸ்திர மூதல் வித்தியாபாரகருமாயிருந்த மூத்திப்பேறுபெற்ற இராய்ப்ப லெபேவர் என்பவர் அல்மாஞ் தேசத்தில் தேவதோத்திரத்துக்காக வெகுவாய்ப் பிரயாசப்பட்டு ஒருநாள் அத்தேசத்தில் நின்று தன் சென்மநாட்டுக்குத் திரும்பிவருகையில் அநேகம் பதிதர் நாடுகளைக் கடக்கவேண்டியிருந்ததாம். இவர் ஒவ்வொரு குருவானவர் விசாரணை எல்லையில் வந்தமாத்திரத்தில் அதை ஆதரிக்குஞ் சம்மனசுகளை வணங்குவார். இந்த உத்தம அப்பியாசத்தால் தமக்குக் கண்காண வெகு நன்மைவந்ததென்றும் இந்தப் பத்திக்கிருத்தியத்தினுல் பதிதர்கள் தமக்குச் செய்யத் தேடியஆபத்துக்குரிய பல இடையூறுகளுக்குத் தப்பித்துக்கொண்டதாகவும் இன்னம் அதினுல் அந்நாட்டில் அநேகர் தமக்குச் செவிகொடுத்து சத்தியமறையை விரும்பி அதில் பிரவேசித்தார்களென்றும் இந்த உத்தம சந்நியாசியாரே சொல்லுவார். இந்தப் பத்திக்கிருத்தியத்தைக் குறித்து இவர் எவ்வள்வு நம்பிக்கை உறுதியோடு பேசுவாரென்றுல் இவர்தாமே இதைக்குறித்துப் பேசக்கேட்ட ஒரு பெண்பிள்ளை அறுபதுவருஷத்துக்குப் பிறகும் இதை மறவாமல் பற்றுதல் விருப்பத்தோடு பேசுவாள்.

நீ கண்டு பாவித்துத் தியானிப்பதற்கு உனக்கு அதிக பிரியமாயிருக்கும் ஒரு அர்ச்சியசிஷ்டவரைத் தெரிந்துகொண்டு அவர் சரித்திரப் புத்தகத்தை அடிக்கடி வாசித்துவா. அவர்பேரில் உன் நம்பிக்கை முழுதும் விசேஷவிதமாய் வைக்கக்கடவாய். மேலும் நீ பேர்கொண்டிருக்கிற அர்ச்சியசிஷ்டவர் நீ ஞானஸ்நானம் பெற்றபோதே உன் சொந்த அர்ச்சியசிஷ்டவராகக் குறிக்கப்பட்டிருக்கிறார்.

17-ம் அதிகாரம்.

தேவவாக்கியத்தை என்னமாய்க் கேட்கவும் வாசிக்கவும் வேண்டுமென்பதின்பேரில்.

உன் ஆத்தும குருக்கள் முதலியவர்களோடு பேசும்போதுஞ் சரி பிரசங்கம் ஞானவுபதேசங்களைக் கேட்கும்போதுஞ் சரி சர்வேசுரனுடைய வார்த்தைகளைக் கேட்கிறாயென்று அவைகளைக் கேட்க ஆவலாயிருந்து எப்பொழுதுஞ் சங்கை கவனத்தோடு கேட்டு வீணில் அவைகள் தரையில் விழாதபடிக்கும் அவைகளைக்கொண்டு உன் ஞானப்பிரயோசனத்தை அடையவும் பிரயாசப்படு. அர்ச். கன்னிமரியாயி தமது திருக்குமாரனுக்குப் புகழ்ச்சியாகச் சொல்லப்படும் வார்த்தைகளையெல்லாம் பத்திரமாய்த் தன் இருதயத்தில் வைத்துக்கொண்டிருந்ததுபோல் நீயுந் தேவ வாக்கியங்களை விலையுயர்ந்த பரிமளம்போல் உன் இருதயத்தில் காப்பாற்றக்கடவாய். குருக்கள் முதலியவர்கள் வழியாய்ச் சர்வே

சுரன் நமக்குச் சொல்லும் வாக்கியங்களை நாம் கவனமாய்க் கேட்பதவ்வளவுக்குந்தான் சர்வேசுரன் நமது செபங்களைக் கேட்பார்.

பத்திக்கடுத்த ஏதாகிலும் ஓர் நல்ல புத்தகம் உன்னிடத்தில் எப்பொழுதும் இருக்கட்டும். மோக்ஷவழியை உனக்குக் காட்டி அதில் போய்ச்சேர உனக்கு வேண்டிய தைரியத்தைக் கொடுக்க இந்தப் புஸ்தகங்கள் மோக்ஷத்தினின்று உனக்கு அனுப்பப்பட்டவை என்று நினைத்துக்கொண்டு நாள்தோறும் மிகுந்த பத்தி கவனத்தோடு கொஞ்சம் அதில் வாசி. அர்ச்சியசிஷ்டவர்கள் சரித்திரப் புஸ்தகங்களையும் வாசித்துவா. அதில் ஒரு முகக் கண்ணாடியில் பார்ப்பது போல் கிறீஸ்துவன் அநுசரிக்கவேண்டிய மெய்யான நல்லொழுக்க மாதிரிகையைக் காண்பாய். உன் அந்தஸ்தின் கடமைகளுக்கு ஒத்தாப்போல் அவர்கள் நல்ல நடக்கையைக் கண்டுபாவித்து உன் ஆத்தும பிரயோசனத்தைத் தேடு. ஏனென்றால் உலகத்தில் சஞ்சரிப்பவர்கள் எல்லோரும் அர்ச்சியசிஷ்டவர்கள் அநுசரித்த பலகிருத்தியங்களைக் கண்டுபாவிக்கக் கூடாதவர்களாயினும் எப்பொழுதும் அவர்களை ஏறக்குறைய கண்டுபாவிக்கக்கூடும். முன் நான் உனக்குக் கற்பித்ததுபோல் ஞான ஏகாந்தத்தை அநுசரிப்பதால் முதல் வனவாசியாகிய அர்ச். சின்னப்பர் பாவனையாய் அவர் வனவாசத்தைக் கண்டுபாவிக்கலாம். மன தாரித்திரக் கிருத்தியங்களால் அர்ச். பிராஞ்சீஸ்கென்பவருடைய தாரித்திரத்தைக் கண்டுபாவிக்கலாம். இன்னஞ் சேசுசபை முதல் சந்நியாசிகள், அர்ச். பிரகாசராசா, அர்ச். பெர்நார்தென்பவர், பிராஞ்சீஸ்கு சபைச் சந்நியாசிகள் முதலியவர்கள் சரித்திரங்களை வாசிப்பதினால் நம்மை நாம் நடத்திக்கொள்வதற்கு உத்தமமான வழிப்பாடுகளை அறியலாம். அர்ச். தெரோசம்மாள் சரித்திரம் விசேஷமாய்

இதுவிஷயத்தில் மகா உத்தமமானதெனத்தகும். இதற்கு விரோதமாய் எஜிப்து தேசத்து மரியம்மாள், சியேன்கத்தரீனம்மாள், ழேன்கத்தரீனம்மாள், ஆஞ்சேலம்மாள் முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள் சரித்திரங்களை வாசிப்பதில் மிகுந்த ஆச்சரியத்துக்கிடமாயிருப்பதேயல்லாமல் நாம் அவர்களை எப்பொழுதுங் கண்டுபாவிக்கக் கூடுமாயிராது. ஆகிலும் இவர்கள் சரித்திரங்களை வாசிப்பதால் சுவாமியை நேசிக்கவேண்டுமென்கிற விருப்பம் உண்டாகாமலிராது.

18-ம் அதிகாரம்.

தேவ ஏவுதல்களை எப்படி அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்பதின்பேரில்.

முந்தமுந்தத் தேவ ஏவுதல்கள் என்னவென்று நீ அறியவேண்டியது. இரக்ஷணிய காரியத்தின்மட்டில் நமக்குள்ள அசட்டைத்தனத்தை விட்டுவிடவும் புண்ணியத்தை அநுசரித்து விருத்தியடையவுஞ் சுவாமியுடைய நேசத்தில் அதிகரித்து வளரவும் ஓரே வார்த்தையில் சொல்லவேண்டுமாகில் நித்திய சீவியத்தை அடைவதற்கு நமக்கு அவசியமானவைகளெல்லாந் தேடுவதற்கு நமது இருதயத்தில் பல்முறை உண்டாகும் நல்ல ஆசைகளே தேவ ஏவுதல்களென்று சொல்லப்படும். இவைகள் ஒவ்வொன்றுஞ் சர்வேசுரன் விசேஷ தயவால் நமக்களிக்கும் வரங்களாம். உந்நத கவியில் மணவாளன் தன் பத்தினியின் இல்லத்துக் கதவைத் தட்டி அன்புடன் அவளிடத்தில் இனிதாய்ப் பேசி அவள் கண்வளர்கையில் தட்டி

யெழுப்பி அவளைக் காணாதபோது குரலிட்டு அழைத்துத் தன்னிடத்திலிருக்கும் இனிய தேனை உருசிபார்த்து உணரவுந் தன் தோட்டங்களிலிருக்குங் கனிகளையும் புஷ்பங்களையும் பறிக்கவுந் தன் செவிகளுக்கு இன்பமாய்த் தன் இனிய குரலிட்டுப் பாடவும் இவளை வருந்தி அழைப்பதாகச் சொல்லியிருக்கின்றது. இவைகளெல்லாந் தேவ ஏவுதல்களின் சத்தியைக் காட்டுவதற்காகச் சொல்லப்பட்டவைகளாம். இதை நன்றாய்க் கண்டுபிடிக்கும்படி ஓர் உவமானஞ் சொல்லிக்காட்டப்போகிறேன்.

ஒருவனுக்குக் கலியாணஞ் செய்துகொள்ள மனதானால் அவன் கலியாணம் முடிவதற்கு மூன்று காரியம் அவசியம். 1—வது. தான் கலியாணஞ்செய்ய ஆசிக்கும் பெண்ணுக்கு அல்லது அவள் சுற்றத்தார்களுக்குத் தன் கருத்தைச் சொல்லிக்காட்டவேண்டும். 2—வது. அந்தப் பெண்ணுக்கு இவன் கோரிக்கை பிரியப்படவேண்டும். 3—வது. இவள் இதற்குச் சம்மதிக்கவேண்டும். இவ்விதமே நம்மிடத்திலும் நமக்காகவும் நம்மாலும் ஏதாவது மகத்தான காரியங்களைச் சுவாமி செய்யச் சித்தமாயிருக்கையில் முந்தமுந்தத் தமது ஏவலால் அந்தக் காரியத்தை நமக்குக் காண்பிக்கின்றார். 2—வது. அது நமக்குப் பிரியப்படுகிறது. 3—வது. அதற்குச் சம்மதிக்கின்றோம். ஏனென்றால் பாவத்தைக் கட்டிக்கொள்ள எப்படி தந்திரமும் அதில் பிரியமும் அதில் சம்மதமும் வேண்டியிருக்கிறதோ அப்படியே புண்ணியத்துக்கும் மூன்று காரியம் வேண்டியது. 1—வது. தந்திரத்தோடு பொருந்தாத தேவ ஏவுதலும், 2—வது. தந்திரத்தில் கொள்ளும் இச்சைக்கு விரோதமாய்த் தேவ ஏவுதல்மட்டில் நாம் வைக்கும் பிரியமும், 3—வது. தந்திரத்துக்குக் கொடுக்குஞ் சம்மதிக்கு முழுதும் விரோதமாய்த் தேவ ஏவுதலுக்குக் கொடுக்குஞ் சம்மதமுமாம்.

தேவ ஏவுதல் நமது சீவியகாலமெல்லாம் நமக்கு இருந்தபோதிலும் அதில் நாம் பிரியம் வைக்காவிட்டால் பரிச்சேதம் நாம் சுவாமிக்குப் பிரியப்படமாட்டோம். இதற்கு விரோதமாய்ச் சுவாமிக்கு இதனல் நிந்தனையுண்டாம். அதெப்படியெனில் இஸ்ருயேலித்தார்களுடன் நாற்பது வருஷகாலமாய்ச் சர்வேசுரன் இருந்துகொண்டு அவர்கள் மனந்திரும்பும்படி நாலாவிதத்திலும் பிரயாசப்பட்டபோதிலும் அவர்கள் பரிச்சேதந் தமது குரல் சத்தத்துக்குச் செவிகொடுக்க மனதாயிருந்ததில்லை என்று சர்வேசுரன்றுமே சொல்லுகின்றூர். இதனுல்தான் இந்தப் பிரசைகள் தமது இளைப்பாற்றியில் பரிச்சேதம் பிரவேசிக்கமாட்டார்களென்று ஆணையிட்டுச் சத்தியமாகச் சொன்னூர்.

தேவ ஏவுதல்கள்மட்டில் நாம் பிரியங்கொள்வதால் சர்வேசுரனுக்கு மகிமையுண்டாம். இதனுல் இவருக்குப் பிரியப்படுவோம். அதேனெனில் தேவ ஏவுதல் மீது நாம் வைக்கும் பிரியம் நமது மனப்பூரணச் சம்மதியின் அடையாளமாயிராவிட்டாலுஞ் சம்மதிப்பதற்கு ஏதுவாயிருக்கிறுமென்னத்தகும். வெளியரங்க தேவ ஏவுதல்போல் இருக்கப்பட்ட தேவ வாக்கியங்களைக் கேட்கப் பிரியமாயிருப்பது மகா உத்தமமான அடையாளமாகவும் வெகு பிரயோசனமான காரியமாகவும் இருக்கிறது. உள்ளாந்தரங்கத் தேவ ஏவுதல்கள்மட்டிலும் பிரியங்கொள்வது சுவாமிக்கு வெகு பிரியமான நல்ல காரியந்தான். இந்தத் தேவ ஏவுதலின் மேரைப் பிரியத்தைக் குறித்துத்தான் என் நேச பத்தா என்னிடத்தில் பேசியபோது என் ஆத்துமஞ் சந்தோஷத்தால் இளகிற்றென்று உந்நத கவியில் ஞானபத்தினி சொல்லுகின்றுள்.

கடைசியாய்த் தேவ ஏவுதலுக்கு நாம் முழுதும் அமைந்துபோவதற்கு நமது பூரண சம்மதி வேண்டி

யது. ஏனென்றால் தேவ ஏவுதலை அடைந்து அதற்குப் பிரியமாய்ச் செவிகொடுத்தபோதிலும் அந்தத் தேவ ஏவுதலுக்கு நாம் சம்மதியாவிட்டால் சர்வேசுரனுக்கு நன்றிகெட்டவர்களாய் அவருக்கு வெகு நிந்தனை வருவிக்கிறோம் எனத்தகும். ஏனெனில் தேவ ஏவுதல்களை நாம் உடனே தள்ளிவிடுவதால் சுவாமிக்கு வரும் நிந்தையைப் பார்க்க இவ்விதமாய் நாம் செய்வதில் அவருக்கு அதிக நிந்தனை வருவிக்கிறதாகக் காண்கிறது. உந்நத கவியில் சொல்லிய பத்தினிக்குச் சம்பவித்ததைப் பார். இவள் சிநேக பத்தாவின் குரற்சத்தம் இவள் இருதயத்தை மிகுந்த சந்தோஷத்தால் பூரிப்பித்தது. ஆகிலும் இவள் தன் பத்தாவுக்குக் கதவைத் திறக்க மனதில்லாமல் வீண் சாக்குபோக்கு சொன்னாள். இதனைக் கண்ட மணவாளன் நியாயத்தோடு இவள்பேரில் சினந்து இவளைவிட்டு அப்புறம் போனான். ஆதலால் பிரிய சகோதரமே, சர்வேசுரன் உனக்கு அனுப்புந் தேவ ஏவுதல்களையெல்லாம் நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கெட்டியான பிரதிக்கினை செய். இந்த ஏவுதல்கள் உனக்கு வரும்போது உன்னோடு உறவாட ஆசிக்கிற பரலோக இராசாவின் ஸ்தானாபதிகளைப்போல் இவைகளை ஏற்றுக்கொள். தேவ ஏவுதல்கள் உனக்குச் சொல்வதை அமரிக்கையாய்க் கேள். இந்த ஏவுதல்களை உனக்கு அனுப்புகிற சர்வேசுரனுடைய சிநேகத்தை யோசித்து இவைகளை மகா பிரியமாய் அங்கீகரித்து இவைகளுக்குச் சம்மதிக்கக்கடவாய். ஆனால் சந்தோஷமாய்ச் சுறுசுறுப்புடன் மனப்பூரணமாய்ச் சம்மதிக்கக்கடவாய். இவ்விதமாய்ச் சுவாமி உனக்குக் காட்டும் நேசத்துக்கு இசைந்து நீ காண்பிக்கும் நல்ல மனதை இவர் தட்டிவிடமாட்டார். ஆனால் ஏதாகிலும் விசேஷமான அல்லது நூதனமான காரியத்தின்பேரில் உனக்குத்

தேவ ஏவுதல் வந்தால் உன் ஆத்துமகுருவானவரை ஆலோசனை கேட்காமல் உடனே இதற்குச் சம்மதியாதே. முந்தி இவரிடத்தில் உனக்கு வந்த தேவ ஏவுதலைச் சொல்லிக் காண்பி. மெய்யானதோ அபத்தமானதோவென்று இவர் பரிசோதித்துச் சொல்லுவார். ஏனென்றால் தேவ ஏவுதலுக்குச் சுளுவாய் ஓர் ஆத்துமம் சம்மதிக்கிறதைப் பசாசு பார்க்கையில் அதை மோசஞ்செய்வதற்காகப் பலமுறை அபத்தமான ஏவுதல்களைப் பசாசு வருவிக்கிறதுண்டு. ஆனால் தாழ்ச்சியோடு தன் ஆத்தும குருவானவருக்குக் கீழ்ப்படியும் ஆத்துமத்துக்கு இப்படிப்பட்ட அபத்த ஏவுதல் அனுப்பப் பசாசினால் கூடாது.

தேவ ஏவுதலுக்கு ஒருவிசை சம்மதித்தபின் அந்த ஏவுதலால் நாம் செய்யத் தீர்மானித்த நற்கிருத்தியத்தைச் செய்து முடிக்கவேண்டும். ஏனென்றால் தேவ ஏவுதலுக்கு மனதில்மாத்திரஞ் சம்மதித்து அதைச் செய்துமுடிக்க மனதிராவிட்டால் திராக்ஷக்கொடியை நட்டு அது கனி கொடுக்காமலிருக்க வேண்டுமென்று விரும்பினதுக்கொத்ததுபோலாகும்.

ஆதலால் இதில் அநுகூலப்பட ஏற்கனவே உனக்குச் சொல்லிக்காட்டியதுபோல் காலமே செய்ய வேண்டிய செபத்தியானங்களும் ஞான ஒடுக்கங்களும் உனக்கு வெகு பிரயோசனமாயிருக்கும். ஏனெனில் இவ்வழியாய் நன்மை செய்வதற்கு எப்பொழுதும் பொதுவாய் நாம் ஆயத்தமாயிருப்பதன்றி இன்னம் விசேஷ ஆயத்தமுள்ளவர்களாயிருப்போம்.

19-ம் அதிகாரம்.

பச்சாத்தாபத்தின்பேரில்.

நமது ஆத்துமத்தில் எத்தனைவிசை பாவ அழுக்குண்டாகுமோ அத்தனைவிசையும் அதனைக் கழுவிச் சுத்தஞ்செய்வதற்காக நமது இரக்ஷகர் தமது திருச்சபையில் பச்சாத்தாபமென்னுந் தேவதிரவிய அநுமானத்தை ஸ்தாபித்திருக்கின்றார். ஆதலால் பிரிய சகோதரமே, இவ்வளவு நிச்சயமுஞ் சுளுவுமான மருந்து உன் கையிலிருப்பதால் உன் இருதயம் நெடுங்காலம் பாவத்தால் அசுத்தப்பட்டிருக்கப் பரிச்சேதஞ் சம்மதியாதே. பாவத்துக்குச் சம்மதித்த ஆத்துமந் தன்மட்டிலேயே அருவருப்பாயிருந்து தன்னைப் பார்த்துக்கொண்டிருக்குஞ் சர்வேசுரனுடைய சன்னதியைச் சங்கித்துக் கூடிய சீக்கிரத்தில் தன்னைச் சுத்தஞ்செய்யவேண்டும். உள்ளபடியே நம்மைச் சொஸ்தப்படுத்துவதற்கு இவ்வளவு உத்தமமான மருந்து நம்மிடத்திலிருந்துந் தேவ வரப்பிரசாதத்தை இழந்து அவலமான மரணம் நமக்கு வராமற் சம்மதிப்பது எப்பேர்க்கொத்த பயித்தியம்.

ஆதலால் எட்டு நாளைக்கு ஒருவிசை பத்தியோடு தாழ்ச்சியாய்ப் பாவசங்கீர்த்தனஞ் செய். உன் இருதயத்தில் ஒரு சாவான பாவமும் இல்லாவிட்டாலும் நீ நன்மை வாங்கும்போதெல்லாங் கூடுமான வரையில் எப்பொழுதும் பாவசங்கீர்த்தனஞ் செய். ஏனென்றால் பாவசங்கீர்த்தனத்தால் நீ சொல்லும் அற்ப பாவங்கள் நிவாரணமாவதுமன்றி இன்னம் இனி இந்தப் பாவங்களைத் தள்ள விசேஷ பலமும் இவைகளை நன்றாய்க் கண்டுபிடிக்க விசேஷ ஞானமும்

பாவங்களால் உனக்கு வந்த நஷ்டத்தையெல்லாம் பரிகரிக்க மிகுந்த வரப்பிரசாதமும் உனக்குக் கிடைக்கும். இதுவுமன்றி தாழ்ச்சி, கீழ்ப்படிதல், கபடற்றதனம், பிறர்சிநேகம், தேவசிநேகமென்னும் புண்ணியங்களையெல்லாம் இதனால் நீ அநுசரிப்பாய். இப்படி மற்றமற்றக் கிருத்தியத்தால் நீ செய்யும் புண்ணியங்களைப் பார்க்கிலும் இந்த ஓரோ நற்கிருத்தியத்தால் அதிக புண்ணியங்களை அநுசரிப்பாய். நீ சங்கீர்த்தனம் செய்யும் பாவங்கள் எவ்வளவு சொற்பமாயினும் அவைகளுக்கு மெய்யான மனஸ்தாபப்பட்டு இனி அவைகளை விட்டுவிடுவேனென்று கெட்டியான பிரதிக்கினை செய். அநேகர் வெறும் வழக்கத்தால் மாத்திரந் தங்கள் அற்ப பாவங்களைச் சங்கீர்த்தனஞ்செய்வார்கள். இவைகளைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்வது அவசியமென்றாற்போலத் தப்பாமல் சொல்லிவருவார்கள். ஆனால் இவைகளைவிட்டுவிடப் பரிச்சேதம நினையாமல் தங்கள் சீவியகாலமெல்லாம் இவ்வித தப்பிதத்தைச் செய்துவருவதால் வெகு ஞான நன்மைகளை இழந்துபோகிறார்கள். ஆதலால் பிறருக்கு நஷ்டம் வருவியாமல் பொய் சொன்னேனென்றும் பிறர்பேரில் கொஞ்சம் இலேசாய்ப் பேசினேனென்றும் மிதந்தப்பி விளையாடினேனென்றும் பாவசங்கீர்த்தனத்தில் சொல்வது போதாது. இதற்கு நீ மனஸ்தாபப் பட்டு இனி இப்படி செய்வதில்லையென்று பிரதிக்கினை செய்யக்கடவாய். சாவான பாவத்தையென்கிலும் அற்ப பாவத்தையென்கிலும் விட்டுவிடவேண்டுமென்கிற நல்ல மனதின்றிப் பாவசங்கீர்த்தனஞ்செய்வது மகா கெட்டவழக்கம். ஏனென்றால் பாவத்தை விட்டுவிடுவதற்கே பாவங்கீர்த்தனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பாவசங்கீர்த்தனம் செய்யும்போது அநேகர் தொடர்ச்சியாய்ச் சடங்குக்காக அவசரமில்லாத காரியங்

களைச் சொல்லுவதுபோல நீ செய்யாதே. சர்வேசுரனைச் சிநேகிக்கவேண்டியபடி சிநேகிக்கவில்லையென்றும் வேண்டிய பக்தியோடு வேண்டிக்கொள்ளவில்லையென்றும் பிறனை நேசிக்கவேண்டியபடி நேசிக்கவில்லையென்றுந் தேவத்திரவிய அநுமானங்களை வேண்டிய சங்கையோடு பெறவில்லையென்றுஞ் சொல்லாதே. ஏனெனில் இப்படி நீ சொல்வதால் உன் ஆத்துமத்தின் அந்தஸ்தை உன் ஆத்தும குருவானவர் கண்டுபிடிப்பதற்கு விசேஷமானதொன்றையும் நீ சொல்லுகிறதில்லை. மோக்ஷவாசிகள் பாவசங்கீர்த்தனஞ் செய்யக் கூடுமாகில் இவர்களும் உலகிலுள்ள சகல புனிதரும் உன்னைப்போலவே மேற்சொல்லிய விதமாய்ச் சங்கீர்த்தனம் பண்ணலாம். ஆனதால் பிரயோசனமில்லாத வீண் காரியங்களைச் சொல்லாமல் இவ்விதத் தப்பிதங்களுக்கு விசேஷ காரணம் என்னவென்று யோசித்துப்பார்த்து உண்மைக்கொத்தபடி கபடற்றதனமாய்ச் சொல்லவேண்டும். சில விசை வெகு வறுமையிலிருக்கும் ஏழையைக்கண்டு அவனுக்குச் சகாயவாய் ஒத்தாசைசெய்து ஆறுதல் சொல்லக் கூடுமாயிருந்தும் அவன்பேரில் சற்றும் மனதிரங்காமல் தோற்றமற்றதனமா யிருந்திருப்பாய். இது விஷயத்தைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லும்போது அசட்டையினாலோ நிந்தனையினாலோ இரக்கமற்றதனத்தினாலோ இவ்வாறு நடந்துகொண்டதென்று யோசித்துப்பார்த்து இன்ன காரணத்தினாலென்று சொல்லிக்காட்டுவாய். வேண்டிய பத்தியோடு வேண்டிக்கொள்ளவில்லையென்று சொல்லாமல் நீ வேண்டிக்கொள்ளும்போது வேண்டுமென்று பராக்காயிருந்தாயோ. அதற்கான இடத்தையுங் காலத்தையுந் தெரிந்துகொள்ளாமல் உன் சவுக்கியத்தைமாத்திரந் தேடினதினால் கவனக்குறை அசட்டைத்தனம் நேரிட்டதோவென்று யோசித்துப்பார்

த்துச் சொல்லுவாய். அவசரமிராத பொதுவான காரியங்களைப் பொதுவாய்ச் சொல்லாதே.

அற்பப் பாவங்களைக்குறித்து இன்னின்ன பாவங்களைச் செய்தேனென்று சொல்வது போதுமென்றிராதே. ஆனால் இந்தப் பாவங்களுக்குக் காரணம் என்னவென்றுந் தெரிவிப்பாய். பிறருக்கு நஷ்டமின்றிப் பொய் சொன்னேனென்று சொல்வது போதாது. ஆனால் வீண் சிலாக்கியத்துக்காகவோ உன் தோத்திரப்பிரியத்துக்காகவோ உன்னைக் குற்றமற்றவனாய்க் காட்டிக்கொள்வதற்காகவோ வீண் சந்தோஷத்தினாலோ அல்லது வைராக்கியத்தினாலோவென்று பகுத்தறிந்து சொல்லவேண்டும். விளையாட்டைமுன்னிட்டு உனக்கொரு தப்பிதம் நேரிட்டிருந்தால் கெலிக்கவேண்டுமென்கிற ஆசையினாலோ அல்லது பெசவெண்டுமென்கிற பிரியத்தினாலோவென்று சொல்லிக்காட்டுவாய். இதுவுமன்றி உன் பாவத்தில் வெகுநேரம் நிலைத்திருந்தாயோ இல்லையோவென்றுஞ் சொல்லவேண்டும். ஏனென்றால் வழக்கமாய் ஒரு தப்பிதத்தில் நாம் நிலைத்திருக்கும் அவ்வளவுக்குங் குற்றவாளிகளாகிறோம். இத்தன்மையாய்க் கால்நாழி நேரமாத்திரம் நமது புத்தியிலிருந்த வீண் சிலாக்கியத்துக்கும் ஒருநாள் இரண்டுநாள் மூன்றுநாள் வேண்டுமென்று நாம் அதில் பிரியப்பட்டிருந்ததற்கும் வெகு வித்தியாசமிருக்கிறது ஆதலால் நீ செய்த தப்பிதம் என்னவென்றும் அதற்குக் காரணம் என்னவென்றும் எத்தனைகாலம் இருந்ததென்றுஞ் சொல்லவேண்டும். ஏனென்றால் அற்ப பாவங்களை எப்பொழுதும் இப்படி நுணுக்கமாய்ச் சொல்ல வேண்டியிராவிட்டாலும் இன்னம் இவைகளைப் பாவசங்கீர்த்தனத்தில் அவசியஞ் சொல்லமுதலாய்க் கடமை இல்லாவிட்டாலும் உத்தம சாங்கோபாங்கத்தைப் பூரணமாய் அடைய விரும்பித் தங்கள் ஆத்து

மத்தை நன்முய்ச் சுத்திசெய்ய மனதாயிருப்பவர்கள் அற்ப குற்றங் குறைகளைமுதலாய் ஞான வயித்திய ராகிய தங்கள் ஆத்தும குருவானவருக்குச் சொல்லிக் காட்ட வெகு சாக்கிரதையாயிருப்பார்கள். இவ்வழி யாகத்தான் இவர்கள் ஆத்துமம் மெய்யான சொஸ் தமடைந்து பரிசுத்தமாகும்.

உன் தப்பிதத்தின் குணத்தைக் காட்டுவதற்கு அவ சியமானதைச் சொல்லாமலிராதே சிலவிசை கோ பித்திருப்பாய் அல்லது ஒரு துர்க்குணத்தின்மட்டில் பார்த்தும் பாராமையாயிருப்பாய். இதற்கு முகாந் தரம் என்னவென்று தெரிவிக்கவேண்டியது. உனக் குப் பிரியமாயிராத ஒருவன் விளையாட்டுக்காக உன் பேரில் இலேசாய் ஒரு வார்த்தை சொல்லக்கூடும். ஆனால் அதை நீ ஈரர்த்தப்படுத்தி அதற்காக நீ அவன் பேரில் கோபித்துக்கொள்ளுவாய். உனக்குப் பிரிய மான வேறொருவன் அதிலுங் கடுமையான வார்த் தை ஒன்று சொல்லுவான். அதை நீ நல்ல அர்த்தஞ் செய்து அவன்பேரில் பரிச்சேதங் கோபங்கொள்ள மாட்டாய். அதலால் நீ பாவசங்கிர்த்தனம் செய்யும் போது ஒருவன் உன்பேரில் சொன்ன ஒரு வார்த் தையைப்பற்றிக் கோபித்துக்கொண்டேனென்று சொல்லாமல் அந்த வார்த்தை தன்னிலே சொற்பமா யிருந்தபோதிலும் அதைச் சொன்னவன் உனக்குப் பிரியமில்லாதவனானதால் அதைப்பற்றி அவன்பே ரில் இப்படி கோபித்துக்கொண்டேனென்று சொல் லவேண்டும். ஆத்தும குருவானவர் உன்னை நன்முய் அறிவதற்கு அந்த வார்த்தைகள் என்னவென்று விசேஷித்துச் சொல்வது அவசியமாகில் அவைகளை அவருக்குச் சொல்லிக் காண்பிக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ஏனெனில் இத்தன்மையாய் உண் மைக்கொத்தபடி பாவசங்கிர்த்தனஞ் செய்வதால் கட்டிக்கொண்ட பாவங்களை வெளிப்படுத்துவதுடன்

இன்னங் கெட்ட நாட்டங்களையும் பழக்கங்களையுஞ் சமயங்களையும் பாவத்தின் மற்றமற்றக் குணங்களையுஞ் சொல்லிக் காட்டுகின்றோம். இதைக்கொண்டு ஞான வயித்தியரானவர் தான் நடப்பிக்கும் ஆத்துமத்தின் அந்தஸ்தையும் அதற்கு வேண்டிய அவுஷதங்களையும் நன்றாய் அறிந்துகொள்வார். ஆயினும் உன் பாவத்துக்கு உடந்தையானவர்கள் பேரை உன்னால் இயன்றவரையில் எப்பொழுதும் மறைத்துச் சொல்லவேண்டும்.

உனக்குத்தானே தெரியாமல் பலமுறை உன்னிருதயத்தில் குடிகொண்டு நிலைத்திருக்குந் திரளான பாவங்களைக் கவனமாய் ஆராய்ந்துபார்த்துப் பாவசங்கீர்த்தனத்தில் இவைகள் நிவர்த்தியாகும்படி மெத்த கவனமாயிருக்கவேண்டும் இதற்காக இப்புத்தகத்து மூன்றும் பாகம் 6-ம். 27-ம். 28-ம். 29-ம். 35-ம். 36-ம். அதிகாரங்களையும் 4-ம். பாகம் 7-ம். அதிகாரத்தையுங் கவனமாய் வாசித்துப்பார்.

உன் ஆத்தும குருவானவரை எளிதாய் மாற்றிவிடாதே. ஆனால் ஒருவரைத் தெரிந்துகொண்டபின் குறிக்கப்பட்ட நாட்களில் உன் ஆத்துமத்தின் அந்தஸ்தை அவருக்குக் காட்டி உனக்கு நேரிட்டிருக்கக்கூடுமான பாவங்களைக் கபடற்றவிதமாய் உள்ளபடி சொல்லிக்காட்டு. இன்னம் அடுத்தடுத்து. அதாவது மாதந்தோறும் அல்லது இரண்டு மாதந்தோறும் உன் நாட்டங்களின் நிலையை அவருக்குச் சொல்லிக்காண்பி. இவ்வகைளால் அற்பமும் உனக்குப் பாவம் வராமல் இருக்கலாம். இப்படி கஸ்தி சஞ்சலம் அல்லது மிதமிஞ்சின சந்தோஷம் பொருளாசைமுதலிய கெட்ட நாட்டங்கள் உன்னைப் போராடிவரும். இவைகளையெல்லாங் கபடற்றவிதமாய்ச் சொல்லிக் காண்பிப்பாய்.

20-ம் அதிகாரம்.

அடிக்கடி சற்பிரசாதம் உட்கொள்வதின்பேரில்.

ஆசியா துர்க்கிதேசத்தில்போன்த்என்னும் பூர்வீக நாடொன்றுண்டு. அதற்கு அரசனாகிய மித்ரிதாத் என்பவன் திராவக முறையொன்று செய்தானாம். அதற்கு மித்ரிதாத்தென்னும்பெயரோ வழங்கிவந்தது. இதை இவன் குடித்து வந்ததால் இவன் சரீரம் எவ்வளவு பராக்கிரம சத்தியுள்ளதானதென்றால் உரோமையர்கள் இவனைப் பிடிக்கவந்தபோது இவர்கள் கையில் அகப்பட்டு அடிமையாகாதபடிக்கு விஷங் குடித்துச் சாகப் பார்த்தான். ஆனால் இவன்பேரில் விஷஞ் சத்தியற்றதா யிருந்தது. இத்தன்மையாகவே நமது இரட்சகர் தமது சரீரமும் இரத்தமும் மெய்யாகவே அடங்கிய சற்பிரசாதமென்னும் மிகவும் உன்னத தேவதிரவிய அநுமானத்தை எற்படுத்தி இதைப் பொசிப்பவன் நித்தியமாய்ச் சீவிக்கும்படி சித்தமானார். ஆதலால் பத்தியோடு அடிக்கடி இதைப் பொசிப்பவன் ஆத்துமம் பிழைத்து வாழ இவனுக்கு எவ்வளவு சத்துவத் திராணியுண்டாகிறதெனில் கெட்ட இச்சைகளென்னும் எந்த விஷத்தாலும் இவன் தீண்டப்படான். இந்தத் திவ்விய போசனத்தைப் பொசித்துக்கொண்டு சாவுக்குரிய பாவ இச்சைகள் பற்றுதலோடு சீவிப்பது கூடுமானதல்ல. பூலோக மோக்ஷத்தில் சர்வேசுரன் நாட்டிய சீவிய விருக்ஷத்தின் கனிகளைப் பொசிப்பதால் மானிடர்கள் சாகாத வரமுடையவர்களாயிருக்கக் கூடுமாயிருந்ததுபோல நித்திய சீவியத்தின் தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றுவருவதால் நித்திய மரணத்துக்குத் தப்பித்துக்கொள்வார்கள். பலமுறை வெகு சுறு

வாய்க் கெட்டுப்போகக்கூடுமான பலவித இனிய பழங்களைச் சர்க்கரையில் அல்லது தேனில் போட்டுவைப்பதால் வருஷமெல்லாங் கெட்டுப்போகாமலிருக்கும். நமது இருதயம் வெகு பலவீனமுள்ளதாயினுந் தேவசுதனின் அழியாத திருச்சரீரத்தையுந் திருவிரத்தத்தையும் அருந்திவருவதால் பாவத்தால் அழிந்து கெடாமலிருப்பது அதிசயமல்ல. ஆதலால் பிரிய சகோதரமே, நடுத்தீர்வை நாளில் தீர்வைக்குள்ளாகுங் கிறீஸ்துவர்கள் தங்கள் நீதிக் கர்த்தருக்கு மறுமொழி சொல்ல அறியாமல் வாயடைத்து நிற்பார்கள். ஏனெனில் நித்திய சீவியத்தை அடைவதற்கு இவர்களுக்கு இவர் அளித்த ஞான போசனத்தைக் கொண்டு வெகு சுளுவாய்த் தங்கள் சவுக்கியத்தையுஞ் சீவியத்தையுங் காப்பாற்றக்கூடுமாயிருந்தும் இதனைப் பொசியாமல் நித்திய சாவுக்குள்ளானதால் ஆ! நிர்ப்பாக்கியவான்களே நித்திய சீவியத்தின் கனியையே நான் உங்களுக்குப் போசனமாகக் கொடுத்திருந்தும் வேண்டுமென்று என் ஞான சீவியத்தை இழந்து நித்திய மரணத்துக்கு ஏதுவானீர்கள் என்பார்.

நாள்தோறும் நன்மை வாங்குவதை நான் புகழுகிறதுமில்லை, இகழுகிறதுமில்லை. ஆனால் ஞாயிற்றுக்கிழமைதோறும் நன்மைவாங்கும் வழக்கத்தை நான் அங்கீகரித்துக்கொள்வதுமல்லாமல் இந்தப்படி செய்ய ஒவ்வொருவருக்கும் ஆலோசனையுங் கொடுக்கின்றேன். ஆனால் இப்படி நன்மை வாங்குகிறவர்களின் புத்தியில் எந்தப் பாவப்பற்றுதலும் இருக்கலாகாது. இவ்வாறே அர்ச். அகுஸ்தீனென்பவருஞ் சொல்லுகிறார். இவரைப்போல் நானும் நாள்தோறும் நன்மைவாங்குவதை இகழுகிறதுமில்லை, அங்கீகரிப்பதுமில்லை ஆனால் இது விஷயத்தில் ஒவ்வொரு கிறீஸ்துவனுந் தன் ஆத்தும குருவானவரைக் கே

ட்டு நடக்க வேண்டும். ஏனெனில் அடிக்கடி நன்மை வாங்குவதற்கு எவ்வளவு உத்தமமான ஆயத்தம் வேண்டுமென்றால் இதைக்குறித்துப் பொதுவாய் ஆலோசனை கொடுப்பது சரியல்ல. இந்த ஆயத்தங்கள் அருமையானவைகளாயினும் அநேகம் புண்ணியவான்களிடத்தில் இருக்கக்கூடும். ஆதலால் யாவரும் இப்படி செய்யலாகாதென்று பொதுவில் விலக்குவதுஞ் சரியல்ல. ஒவ்வொருவன் உள்ளாந்தரிக்கத்தின் அந்தஸ்தைப் பார்த்து அவனவனுக்கான ஆலோசனை கொடுக்கவேண்டும். இந்தத் திவ்விய சற்பிரசாதத்தை அடிக்கடி உட்கொள்ளும்படி எல்லோருக்கும் வித்தியாசமின்றி ஆலோசனை கொடுப்பது விவேகமற்றதனம். விசேஷமாய் இப்படி அடிக்கடி நன்மை வாங்குகிறவர்கள் இது விஷயத்தில் தகுந்த ஆத்துமகுருவானவர் ஆலோசனையைப் பின்செல்லுவார்களேயாகில் இவர்களை இகழுவதும் விவேகமற்றதனமாம். சியேனென்னுங் கத்திரீனம்மாள் இதை முன்னிட்டு மகா நேத்தியான மறுமொழி சொல்லியிருக்கின்றாள். இந்தம்மாள் அடிக்கடி நன்மைவாங்குவதை விட்டுவிடச் செய்வதற்காக நாள்தோறும் நன்மை வாங்கும் வழக்கத்தை அர்ச். அகுஸ்தீனென்பவர் புகழுகிறதுமில்லை இகழுகிறதுமில்லையென்று இவளுக்குச் சொல்லுவார்கள். ஆனால் அர்ச். அகுஸ்தீனென்பவர் இதை இகழாததால் நீங்களும் இதை இகழலாகாதென்றும் . இந்த ஞாயம் . தனக்குப் போதுமென்றும் மறுமொழியாகச் சொல்லுவாள்.

ஆனால் பிரிய சகோதரமே ஞாயிற்றுக்கிழமை தோறும் நன்மை வாங்க அர்ச். அகுஸ்தீனென்பவர் ஆலோசனைசொல்லுகிறார். ஆதலால் உன்னால் கூடியவனாயில் அந்தப்படி செய். நான் நினைக்கிறது போல சாவான பாவத்துக்கென்கிலும் அற்ப பாவத்துக்கென்கிலும் எவ்வித அற்பப்பற்றுதலும் உன்

ளிடத்தில் இல்லாவிட்டால் நன்மை வாங்குவதற்கு அவசியம் வேண்டியதாக அர்ச். அகுஸ்தீனென்பவர் சொல்லும் மெய்யான ஆயத்தமும் உன்னிடத்தில் இருக்கிறதென்னத்தகும். இன்னஞ் சொல்லவேண்டுமானால் அதிக நேர்த்தியான ஆயத்தமாயிருக்கிறாயென்னவேண்டும். ஏனெனில்-பாவஞ் செய்யவேண்டுமென்கிற மனது உன்னிடத்தில் கிடையாததுமன்றிப் பாவப் பற்றுதலும் உன்னிடத்தில் கிடையாது. இப்படி உன் ஆத்தும குருவானவர் நலமென்றெண்ணினால் ஞாயிற்றுக்கிழமையுமல்லாமல் இன்னம் அடுத்தடுத்து வெகு பிரயோசனத்தோடு நீ நன்மைவாங்கலாம்.

ஆகிலும் இதற்கு நியாயமான விக்கினங்கள் நேரிடக்கூடும். இவைகள் உன் வழியாய் வராவிட்டாலும் நீ கலந்து புழங்கவேண்டிய மனிதர்கள் வழியாய் வரலாம். இதைப்பற்றி உன் ஆத்தும குருவானவர் நீ இவ்வளவு அடிக்கடி நன்மை வாங்காதபடிக்கு விக்கினஞ் செய்யக்கூடும். நீ ஒருவருக்கு அடங்கியிருக்க வேண்டியிருக்கும், அல்லது நீ கீழ்ப்படிந்து சங்கிக்கவேண்டியவர்கள் வேதத்தை நன்றாய் அறியார்கள், அல்லது கொஞ்சம் விபரீதக்குணமுள்ளவர்களாய் இப்படி அடிக்கடி நன்மைவாங்குவதைப் பார்த்துக் கலங்கி வக்கங்கொள்வார்கள். அத்தருணத்தில் இதுகாரியங்களை நன்றாய்ச் சீர்தூக்கிப் பார்த்து அவர்கள் பலவீனத்துக்குத் தக்காப்போல பதினைந்து நாளைக்கு ஒருவிசை நன்மைவாங்குவது சிலவிசை நலமாயிருக்கும். ஆனால் இவர்கள் நியாயங்களைக் கண்டுபிடியாமல் முரட்டுத்தனமாய் விக்கினஞ் செய்கையில்மாத்திரம் இவ்விதம் நடந்துகொள்ளவேண்டும். மேலும் இதைக்குறித்துப் பொதுவாய் இவ்விடத்தில் நிருணிப்பது பிரயாசை. உன் ஆத்தும குருவானவர் சொல்வதை நீ செய்யவேண்

டும். ஆகிலுஞ் சர்வேசுரனைப் பத்தியோடு சேவிக்க மனதுள்ளவர்கள் மாதத்துக்கு ஒருவிசையாகிலும் நன்மை வாங்குவது அவசியமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

நீ கொஞ்சம் விவேகியாயிருந்தால் உன் தந்தை தாய் புருஷன் பெண்சாதி ஒருவரும் அடிக்கடி நீ நன்மைவாங்கவேண்டாமென்று விக்கினஞ் செய்யார்கள். ஏனென்றால் நீ நன்மை வாங்கும் நாளில் உன் அந்தஸ்துக்கடுத்த கடமைகளை அதிகக் கவனமாய்ச் செய்து சாந்தமாய்ப் பேசிப் புழங்கி எவ்வித அலுவல்களையும் மனத் திருப்தியாய் ஏற்றுக்கொள் வாயேயாகில் இந்த நற்கிருத்தியத்தால் அற்ப சங்கடமும் நேரிடாததால் சகசமாய் இதனை விட்டுவிடும்படி ஆசிப்பார்கள். இப்படி உன்னை இது விஷயத்தில் விக்கினஞ்செய்கிறவர்கள் மெய்யாகவே வெகு விபரீத மூடாத்துமாக்களாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட சமயத்தில் நான் சொல்லியதுபோல இவர்களுக்கு நீ கொஞ்சம் இணங்கிப்போக உன் ஆத்துமகுருவானவர் சொல்லுவார்.

கலியாண அந்தஸ்தில் இருப்பவர்களைக் குறித்தோவெனில் இரண்டொரு வார்த்தை சொல்வது போதும். பழைய ஏற்பாட்டில் திருவிழாநாட்களில் கடன்கொடுத்தவர்கள் தங்களுக்குச் சேரவேண்டியதைக் கட்டாயம்செய்து கேட்பது சுவாமிக்குப் பிரியமிராத காரியமாயிருந்தது. ஆனால் இப்படி கடன்காரர்கள் கட்டாயம்செய்து கேட்பார்களேயாகில், இந்நாட்களில் கடன்பட்டவன் தன் கடனைக் கொடுத்துவிடுவது தீதாயிருந்ததில்லை. இத்தன்மையாகவே கலியாண அந்தஸ்தில் நன்மை வாங்கு நாளில் கலியாணக்கடனைக் கேட்பது பெரிய பாவமாயிராவிட்டாலும் எப்பொழுதும் வெகு மரியாதைக் குறைச்சலாம். ஆனால் இந்த நாட்களில் இதனைக்

கேட்கையில் இந்தக் கடனை முடிப்பது வேதத்துக்கு ஒவ்வாததல்ல. ஆதலால் கலியாணக் கடமைக்கு உட்பட்டிருப்பதால் நன்மை வாங்க மெய்யான ஆசையுள்ளவர்களுக்கு விசேஷ விக்கினமில்லையென்பது திஷ்டாந்தமாயிருக்கிறது. மெய்யாகவே திருச்சபையின் ஆரம்பத்தில் கிறீஸ்துவர்கள் நாள்தோறும் நன்மை வாங்குவார்கள். ஆகிலும் இவர்கள் கலியாண அந்தஸ்திலிருந்துகொண்டு வெகு புத்திர சந்தானம் உள்ளவர்களாயிருந்தார்கள். ஆதலால் அடிக்கடி நன்மை வாங்குதால் தாய்தகப்பன்மார்களுக்கென்கிலும் புருஷன் பெண்சாதிக்குள்ளென்கிலும் எவ்வித இடைஞ்சலும் வராததால் நன்மை வாங்க ஆசிப்பவர்கள் தருணமறிந்து விவேகத்தோடு நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

சரீர வியாதியுள்ளவர்களுக்கோவெனில் அடிக்கடி நன்மை வாங்குவதற்கு நியாயமான எந்த விக்கினமுங் காணோம். ஆனல் அடிக்கடி வாங்கி எடுப்பவர்களுக்கு மெய்யான விக்கினமுண்டு.

ஆதலால் எட்டுநாளைக்கொருவிசை நன்மை வாங்குவதற்குச் சாவானபாவம் இல்லாமலிருப்பதுமன்றி அற்பப் பாவப்பற்றுதலும் இருக்கலாகாது. மேலும் நன்மை வாங்கவேண்டுமென்கிற மிகுந்த ஆசையு மிருக்கவேண்டும். ஆனல் நாள்தோறும் நன்மை வாங்குவதற்குத் தன்னிடத்திலுள்ள கெட்ட நாட்டங்களை வெகுவாய் அடக்கியிருக்க வேண்டியதுமன்றி தன் ஆத்தும குருவானவர் ஆலோசனையுங் கேட்கவேண்டும்.

21-ம் அதிகாரம்.

எத்தன்மையாய் நன்மை வாங்கவேண்டும் என்பதின்பேரில்.

நன்மை வாங்குகிறதற்கு முந்தின சாயரட்சைதானே பல அநேக ஆசைமுயற்சிகளைச் செய்து ஆயத்தம்செய்யக்கடவாய். காலமே கொஞ்சஞ் சீக்கிரம் எழுந்திருக்கும்பொருட்டுக் கொஞ்சம் முன்னதாய்ப் படுத்துக்கொள்ளலாம். அன்றிரவில் நீ விழித்தால் ஏதாகிலும் பத்திக்குரிய வார்த்தைகளையாகிலும் மனவல்லயச் செபங்களையென்கிலும் உச்சரித்துவா. இவைகள் உன் ஆத்தும பத்தாவின் வருகைக்கு நீ முஸ்திப்புசெய்யுஞ் சுகந்த பரிமளம்போலிருக்கும். மெய்யாகவே இந்தச் சிநேகப் பத்தாவானவர் நீ நித்திரை செய்கையில் விழித்திருந்து உன் ஆயத்தத்துக்குத் தக்காப்போல் கணக்கில்லா வரப்பிரசாத ஞான நன்மைகளை உனக்குக் கொண்டுவர முஸ்திப்பாய் இருக்கிறார். உனக்கு அவர் ஆசித்துச் செய்யவிருக்கிற வரப்பிரசாத நன்மைகளை அடைவதற்குக் காலமே வெகுசந்தோஷத்தோடு எழுந்திருந்து நன்றாய்ப் பாவசங்கீர்த்தனஞ் செய்துவிட்டு மிகுந்த நம்பிக்கை தாழ்ச்சியோடு நித்திய சீவியமளிக்கும் பரலோக அப்பத்தைப் பொசிக்கப் போவாய். ஆண்டவரோ நீர் என் விடுதிக்கு எழுந்தருளிவர நான் பாத்திரவானல்லவென்கிற இந்த அமிர்த வாக்கியத்தை நீ சொல்லிமுடித்தபின் குருவானவர் சற்பிரசாதங் கொடுக்க வரும்போது இதழ்களை அசைத்து வேண்டிக்கொள்ளாமலுங் தலையை ஆட்டாமலுங் குருவானவருக்கு இடைஞ்சலில்லாமல் தலை நிமிர்ந்து மெதுவாய்க் கொஞ்சம் வாயைத் திறந்து சர்வத்துக்கும் ஆதியும்

அந்தமும் உன் விசுவாச நம்பிக்கை நேசத்துக்கு ஆதாரமுமாகிய பரம ஆண்டவனை மிகுந்த விசுவாச நம்பிக்கை தேவசிநேகத்தோடு உட்கொள்ளுவாய். ஆ! பிரிய சகோதரமே, புஷ்பங்களிற் பெய்திருக்கும் பனியையும் பூமியினின்று அந்தப் புஷ்பங்களுக்கு வரும் இனிய சாரத்தையுந் தேனீயானது ஒன்ருகச் சேர்த்துத் தேனாக்கித் தன் கூட்டிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். இப்படியே குருவானவர் பனியைப்போல் பரலோகத்தினின்றிறங்கிய மெய்யான தேவகுமாரனும் புஷ்பத்தைப்போல் மனுஷீகமென்னு நிலத்திலுதித்த பரிசுத்த கன்னிகையின் மெய்யான குமாரனுமான உலக இரக்ஷகனைப் பீடத்தினின்று எடுத்து உனக்கு அமிர்த போசனமாகும்படி உன்னுவில் வைக்கிருர். அவனை உட்கொண்டபின் இந்தப் பரம ராசாவுக்கு உன் இருதயச் சத்துவமெல்லாங்கொண்டு ஸ்துதி நமஸ்கார காணிக்கை ஒப்புக்கொடுத்து உன் உள்ளாந்தரங்கக் காரியங்களைக்குறித்து அவரோடு பேசி உன் பாக்கியமுஞ் சம்பாவனையுமாக எழுந்தருளி வந்திருக்கும் உன் சிநேக தேவனை உனக்குள் தானே சிந்தித்துப்பார். கடைசியாய் உன்னுல் இயன்றவரையில் பக்ஷத்தோடு இவனை அரவணைத்து சுவாமி உனக்குள் இருக்கிருரென்று உன் கிரியைகளால் மற்றவர்கள் அறியும்படி நடந்துகொள். ஆனல் பூசையில் மெய்யாகவே இவனை உட்கொள்ளும் பாக்கியங் கிடைக்காதபோது இந்தத் திவ்விய இரக்ஷகரின் சீவியந் தருஞ் சரீரத்தை உட்கொள்ள வேண்டுமென்கிற மிகுந்த ஆசையினுலே ஞானவிதமாய் நன்மைவாங்குவாய்.

நீ நன்மைவாங்கும்போது தேவசிநேகத்தில் வர்த்தித்துப் பலப்பட்டு ஆறுதலடைய வேண்டுமென்கிற பிரதான கருத்தை மறந்துபோகாதே. ஏனென்ருல் சுவாமி அத்தியந்த சிநேகத்தால் உனக்குத் தம்

மைத் தாமே கொடுக்கத் தயைபுரிவதால் நீயும் அவர் மட்டில் சிநேகங்கொண்டே அவரை உட்கொள்ள வேண்டும். உள்ளபடியே இந்தத் தேவத்திரவிய அநுமானத்திலன்றி வேறெங்கும் நமதிரட்சகர் தமது கிருபா சிநேகத்தின் அத்தாட்சியை அதிகமாய்க் காட்டுகிறதில்லை. இதில்தான் அத்தியந்த விதமாய்த் தம்மைத் தாழ்த்தித் தமது விசுவாசிகள் இருதயத்தில் அந்நியோந்நிய பந்தனமாய்ச் சேர்ந்திருப்பதற்குத் தம்மைத் தாமே போசனமாக நமக்கு அளிக்கின்றார்.

இவ்வளவு அடிக்கடி ஏன் நன்மை வாங்குகிறாயென்றி உலக மனிதர்கள் உன்னைக் கேட்பார்களேயாகில் சுவாமியை நேசிக்கக் கற்றுக்கொள்ளவும் உன் குற்றங் குறைகளை நிவர்த்திபண்ணவும் துன்ப துயரங்களைத் தள்ளவுங் கஸ்தி துன்பங்களில் ஆறுதலடையவும் பலவீனத்திற் பலனடையவும் நன்மை வாங்குகிறேனென்று மறுவுத்தாரஞ் சொல்லுவாய். இரண்டு வித அந்தஸ்தில் இருக்கப்பட்ட மனிதர்கள் அடிக்கடி நன்மைவாங்கவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லிக் காண்பி. சாங்கோபாங்கத்தில் சேர்ந்தவர்கள் அடிக்கடி நன்மை வாங்கவேண்டும். ஏனெனில் இந்தப் பாக்கியத்தைப் பெறுவதற்கான ஆயத்தத்தால் இவர்களிருந்துஞ் சாங்கோபாங்கத்தின் சுனையை அண்டிப் போகாமல் இருப்பது இவர்களுக்குக் கன நஷ்டமாம். சாங்கோபாங்கத்தில் அவ்வளவு வர்த்தியாதவர்களுஞ் சாங்கோபாங்கத்தை அடைவதற்கு அடிக்கடி நன்மை வாங்குவதைப் பார்க்கிலும் உத்தமமான காரியம் ஒன்றுஞ் செய்ய அறியார்கள். புண்ணியத்தில் பலவான்களாயிருப்பவர்கள் பலவீனப்படாதபடிக்கும் புண்ணியத்தில் பலவீனர்களாயிருப்பவர்களோ பலப்படும்படியும் நன்மை வாங்கவேண்டும். வியாதிஸ்தர் சவுக்கியமடையவும் சவுக்கியமாயி

ருப்பவர்கள் வியாதியில் விழாதபடிக்கும் நன்மைவாங்கவேண்டும். ஆதலால் பிரிய சகோதரமே, உனக்கு வெகு குறை பலவீனம் வியாதியிருப்பதால் உன் சாங்கோபாங்கமுஞ் சத்துவமும் வயித்தியருமாகிய பரம கர்த்தரை அடிக்கடி உட்கொள்ளவேண்டும். அதிக வேலையில்லாதவர்களுக்கு வேண்டிய சாவகாசமிருப்பதால் அடிக்கடி நன்மை வாங்கவேண்டும். பல அலுவலுள்ளவர்களும் அடிக்கடி நன்மைவாங்க வேண்டும். ஏனெனில் வெகு வேலை செய்து சங்கடப்படுகிறவர்களுக்குத்தான் விசேஷமாய்ப் பலமான சாப்பாடு போதுமானவரையில் வேண்டியிருக்கிறது. மேலுந் தகுந்த விதமாய் நன்மைவாங்கக் கற்றுக் கொள்வதற்கு நன்மை வாங்குகிறுயென்று உன்னைக் கேட்பவர்களுக்குச் சொல்லு. ஏனெனில் அடிக்கடி பழக்கமிராத ஒரு காரியத்தை நன்றாய்ச் செய்வது கூடாத காரியம. ஆதலால் பிரிய சகோதரமே, உன் ஆத்தும குருவானவர் ஆலோசனையின்பேரில் அடுத்தடுத்து நன்மைவாங்கக்கடவாய். ஏனெனில் மலைகளில் வசிக்கும் முசல்கள் மாரிகாலத்தில் எப்பக்கத்திலும் வெண்பனிக்கட்டிகளை மாத்திரம் பார்த்துக் கொண்டு அவைகளையே தின்று வருவதால் வெண்மையாய்ப் போவது உண்மையானல் இந்த உந்நதத் தேவத்திரவிய அநுமானத்தில் எவ்வித வஸ்துக்களுக்கும் அழகு சவுந்தரியத்தைத் தருகிறவரும் அமலசுரூபியுமாயிருக்கிற ஆண்டவரைச் சிந்தித்துப்பார்த்துப் போஷித்து வரவர நீயும் மகா சவுந்தரியவானுகவும் பரிசுத்தத்தன முதலிய சுகிர்த குணமுடையவனுகவும் ஆவாயென்றறிக.

இரண்டாம் பாகம் முற்றும்.

மூன்றாம் பாகம்.

நாமனுசரிக்கவேண்டிய புண்ணியங்களைக் குறித்துப் பல ஆலோசனைகள்.

1-ம் அதிகாரம்.

நாம் அநுசரிக்கவேண்டிய புண்ணியம் ஏதென்று தெரிந்துகொள்வதின்பேரில்.

தேனீக்களுக்குத் தாய்ப்பூச்சியானது மெய்யான இராசாபோல் இருப்பதால் தனக்குப் பிரசைகளாகிய மற்றத் தேனீக்கள் சூழ்ந்திராமல் வெளிவயல்களில் புறப்படுகிறதில்லையாம். இத்தன்மையாகவே தேவசிநேகம் மற்றச் சுகிர்த புண்ணியங்களின்றித் தனிமையாய் ஒரு ஆத்துமத்தில் இருக்கிறதில்லை. இந்தத் தேவசிநேகந்தான் ஓர் தளகர்த்தன் தன் வீர சேவகர்களைப் பழக்குவதுபோல் மற்றப் புண்ணியங்களையெல்லாம் பழக்கிச் சீர்ப்படுத்துகிறது. ஆனால் எல்லாவிடத்திலும் எச்சமையத்திலும் எப்பொழுதும் ஓரேவிதமாய் உடனே இவைகளைச் சீர்ப்படுத்தித் திருத்துகிறதில்லை. குளிர்ந்த ஓடைக்கருகில் நாட்டப்பட்டுக் காலத்தோடு கனிகொடுக்கும் விருக்ஷத்துக்கு ஒப்பாய் நீதிமான் இருக்கிறான். ஏனெனில் தேவசிநேகம் இவன் ஆத்துமத்தில் பாய்ந்து அந்தந்தப் புண்ணியங்களுந் தன்காலத்தில் ஞானகனி கொடுக்கும்படி செய்யும். உவமை ஆகமத்திற் சொல்லியிருப்பதுபோல் கீதவாத்தியங் காதுக்கு எவ்வளவுதான் பிரியமாயிருந்தபோதிலுந் துக்கநாட்களிற் சகிக்காது. ஏதாகிலும் ஓர் விசேஷ புண்ணிய

த்தை அநுசரிக்கத் துடங்குகிறவர்கள் எவ்விடத்தும் எத்தருணங்களிலும் அந்தப் புண்ணியத்தை அநுசரிக்கவேண்டுமென்பது பெருந் தப்பறையாம். இதுவிஷயத்தில் இவர்கள் நடக்கை மூற்காலத்துச் சில ஞானசாஸ்திரிகள் நடக்கைக் கொத்ததாம். இவர்களில் ஒருவன் எப்பொழுதுஞ் சிரிக்கவேண்டுமென்பான். வேறொருவன் எப்பொழுதும் அழவேண்டுமென்பான். இன்னந் தாங்கள் அநுசரிக்கும் புண்ணியங்களைத் தங்களைப்போல் எப்பொழுதும அநுசரியாதவர்களை இகழ்ந்து பழிப்பதும் மதியீனமாம். அப்போஸ்தலர் சொல்லுமாப்போல் சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்படவேண்டும். அழுகிறவர்களோடு அழவேண்டும். பிறசிநேகமானது பொறுமைதயை உதாரம் விவேகந் தாக்ஷண்ணியமுள்ளதாய் இருக்கிறதென்கிறார்.

ஆகிலுஞ் சில புண்ணியங்கள் ஏறக்குறையப் பொதுவாய் அநுசரிக்கப்பட்டு மற்றச் சகல புண்ணியங்களோடுங் கலந்திருக்க வேண்டியிருக்கிறது. அதேதெனனில் வீரதத்துவம் பெருந்தன்மை முதலிய புண்ணியங்களை அடிக்கடி அநுசரிக்கச் சமயங் கிடைப்பதில்லை, ஆனால் சாந்தகுணம், அடக்கம், நாணயம், தாழ்மை முதலிய புண்ணியங்கள் நீ உயிர் வாழுங் காலத்தில் செய்யுங் கிருத்தியங்கள் எல்லாவற்றிலுங் கலந்து அவைகளைச் சொகுசாக்க வேண்டியிருக்கிறது. இவைகளைப் பார்க்கிலும் அதிக மேலான புண்ணியங்கள் இருப்பது உண்மையாயினும் மேற்சொல்லிய புண்ணியங்களைப் பார்க்கினும் நமது அநுபோகத்துக்கு அவசரமான புண்ணியங் கிடையா. உப்பிலும் சர்க்கரை அதிக நேத்தியனதுதான், ஆனால் உப்பை நாம் அதிகமாய் உதவிக்கொள்வதுமல்லாமல் நமக்கு இது வெகு அவசியமான பண்டம். ஆதலால் இந்தப் பொதுவான புண்ணியங்கள் ஏறக்

குறைய நமக்கு எச்சமயத்திலும் உதவவேண்டிய தால் எப்பொழுதும் நம்மிடத்தில் இவைகள் மிகுதி யாய் இருக்கவேண்டும்.

ஆதலால் நாம் புண்ணியங்களை அநுசரித்து வரு வதில் நமது சொந்த பிரியத்துக்குச் சரிப்பட்டவை களை அல்ல, ஆனால் நமது கடமைக்கும் அந்தஸ்து க்கும் ஒத்த புண்ணியங்களை அதிகமாய்த் தெரிந்து அநுசரிப்பது அவசியம். ஞான இன்பங்களை அதிக எளிதில் அநுபவிப்பதற்குக் கடுமையான சரீர ஒறு த்தல்களை அர்ச். போலென்னும் சின்னம்மாள் வெகு பிரியத்தோடு செய்வாள். ஆனால் இவள் தனது சிரேஷ்டர்களுக்குக் கீழ்ப்படிந்து போவதே இவளு க்கு விசேஷ கடமையாயிருந்தது. இதைப்பற்றித் தான் இவள் தன் மேற்றிராணியார் ஆலோசனைக்கு விரோதமாய் மிதமிஞ்சின ஒருப்பொழுது உபவாசம் பிடித்துவந்ததால் கண்டனைக்குரிய குற்றவாளியாயி ருந்தாளென்று அர்ச். எரோனிமூஸென்பவர் சொல் லுகின்றார். அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் போதித்து ஆத்துமங்களுக்குப் பரலோக அப்பத் தைப் பகிர்ந்துகொடுக்கக் கடமையுள்ளவர்களாயிரு ந்தபடியால் ஏழைகளைப்பார்த்துப் பராமரிப்பது எவ் வளவுதான் உச்சித புண்ணியமாயிருந்தபோதிலும் இதைப்பற்றித் தங்கள் பரிசுத்த கடமையை அசட் டைசெய்யக்கூடாதென்று வெகு ஞானத்தோடு தீர் மானித்தார்கள். ஒவ்வொரு அந்தஸ்துக்குந் தொழி லுக்கும் ஏதாகிலும் விசேஷ புண்ணியம் அவசரமா யிருக்கிறது. இப்படி ஒரு மேற்றிராணியார் அநுச ரிக்கவேண்டிய புண்ணியங்கள் வேறே. ஓர் போர்ச்சே வகன் அநுசரிக்கவேண்டிய புண்ணியங்கள் வேறே. இல்லற வாழ்க்கையிலிருக்கும் பெண்ணனவள் அநு சரிக்கவேண்டிய புண்ணியங்கள் வேறே. ஓர் விதவை ஸ்திரீ அநுசரிக்கவேண்டிய புண்ணியங்கள் வேறே.

எவ்லோரும் எல்லாப் புண்ணியங்களையும் அநுசரிக்க வேண்டியிருந்தபோதிலும் எல்லாரும் ஓரேவிதமாய் அநுசரிக்கக் கூடாது. ஆதலால் அவனவனுந் தன் தன் அந்தஸ்துக் கடமைக்கொத்த விசேஷ புண்ணியங்களை அநுசரிக்கவேண்டும்.

நமது விசேஷ கடமைக்குச் சம்மந்தப்படாத புண்ணியங்களை அநுசரிக்கையில் அதிக உத்தமமானதைத் தெரிந்துகொள்ளவேண்டியதல்லாமல் அதிகமாய் வெளிக்குக் காணப்படுவதைத் தெரிந்துகொள்ளலாகாது. நட்சத்திரங்களைப்பார்க்கிலும் வால்நட்சத்திரங்கள் வழக்கமாய் அதிக பெரிதாய்க் காணப்படும். ஆகிலும் பருமையிலென்கிலுந் அழகிலென்கிலும் இவைகளை நட்சத்திரங்களுக்கு இணையிட்லாகாது. அதிக கிட்ட இருப்பதைப்பற்றி அதிக பெரிதாகத்தோன்றும். இத்தன்மையாகவே சில புண்ணியங்கள் நமக்கு அருகிலுங் கண்முன்னும் இருப்பதால் மற்றப் புண்ணியங்களைப்பார்க்கிலும் அதிக கனமாய் எல்லோராலும் எண்ணப்படும். இப்படித்தான் பிரசங்கித்துப் பிரயாசப்பட்டுப்போதிக்குந் தர்மத்தைப் பார்க்கிலும் பணங் காசு கொடுப்பதை வழக்கமாய் அதிக பெரிய தர்மமென்பார். சாந்தகுணந் தயை தாக்ஷணியம் அடக்கவொடுக்கமுதலிய மனவொறுத்தல்கள் எவ்வளவுதான் சிறந்த புண்ணியங்களாயிருந்தபோதிலுங் முள்ளொட்டியாணம் ஒருப்பொழுது உபவாசமுதலிய சரீரவொறுத்தல்களை அதிக கனமாயெண்ணுவார்கள். ஆதலால் பிரிய சகோதரமே, அதிகமாயெண்ணப்பட்டு வெளிக்குக் காணப்படும் மகிமைக்கான புண்ணியங்களையல்ல, ஆனால் மேலான உத்தம புண்ணியங்களை அறிந்தநுசரிக்கத் தேடு. ஒவ்வொருவனும் எந்தப் புண்ணியத்தையாகிலும் ஒன்றை விசேஷ விதமாய் அநுசரிக்கத் தேடுவதில் வெகு பிரயோசனமுண்டு. இதினால் நமது புத்தியை

னன்றாய்ச் சீர்ப்படுத்தவும் ஏதாகிலும் உத்தமமான விஷயத்திற் கவனித்திருக்கும்படி செய்யவும் வழியாயிருக்கும். இதைப்பற்றி மற்றப் புண்ணியங்களை யெல்லாம் விட்டுவிடவேண்டுமென்கிறதில்லை. ஒரு நாள் அழகிய ஸ்திரீயொருத்தி இராணியைப்போல் ஆடையாபரணங்கள் அணிந்து ஒலீவ் முடியைச் சிரமேற் பூண்டு சூரியனிலும் அதிக பிரகாச மேற்கொண்டு அலெக்சாந்திரியா பட்டணத்தின் அதிமேற்றிராணியாராகிய அர்ச். அருளப்பருக்குத் தரிசனையாகி நான் இராசாவின் சிரேஷ்ட புத்திரி. எனக்கு நீ இஷ்டனாயிருப்பாயேயாகில் அவர் சமுகத்துக்கு உன்னை நான் அழைத்துப்போவேனென்றாள். இந்தக் காட்சியினால் எளியவர்கள்பேரில் தயாளமுள்ளவராயிருக்கவேண்டுமென்று சர்வேசுரன் தமக்குக் கற்பித்ததை இந்த அர்ச்சியசிஷ்டவர் அறிந்து அதுமுதல் இந்தப் புண்ணியத்தை எவ்வளவு விருப்பத்தோடு அநுசரித்துவந்தாரெனில் எங்கும் எவரும் இவரைத் தரும பிதாவாகிய அருளப்பரென்று அழைப்பார்கள். அலெக்சாந்திரியா பட்டணத்தில் வசித்த எலோழ் என்னும் மகாத்துமா சுவாமியை உத்தமவிதமாய்ச் சேவிப்பதற்கு ஏதாகிலும் விசேஷ புண்ணியத்தைச் செய்யவேண்டுமெனக் கருதி வனவாசம் பண்ணவாகிலும் வேறொருத்தருக்குக் கீழ்ப்படிந்து அமைந்து நடக்கவாகிலும் வேண்டிய பலமில்லாமையினால் பிறர்சிநேகத்திலும் ஒறுத்தலிலும் விருத்தியடைவதற்குப் புழுப்புழுத்த குஷ்டரோகி ஒருவனைத் தன் வீட்டிற் கொண்டுவந்து வெகு பட்சமாய்ச் சவரக்ஷணை செய்துவந்தார். இன்னுமதிக புண்ணியப்பேறு அடையும்படி ஓர் ஊழியன் தன் எசமானுக்கு ஊழியஞ் செய்வதுபோல் இந்த வியாதிஸ்தனைச் சங்கித்துச் சவரக்ஷணை செய்வேனென்கிற வார்த்தைப்பாடுஞ் செய்தார். இப்படியாயிருக்கையில் இந்தக் குஷ்

டரோகிக்கும் எலோழ் என்பவருக்கும் ஒருவனை விட்டொருவர் பிரியவேண்டுமென்கிற தந்திரமுண்டாகி வனவாசியான பெரிய அந்தோனியாரிடத்தில் தங்கள் கருத்தைச் சொல்லிக்கொண்டார்கள். அதற்கு இவர்: எனது நேசபிள்ளைகளே இப்படி பிரிந்து போகாதேயுங்கள். ஏனெனில் உங்களிருவருக்கும் மரணங் கிட்டியிருக்கிறது. அத்தருணத்தில் நீங்கள் பிரிந்திருக்கச் சம்மனசானவர் கண்டால் உங்கள் முடிகளை இழந்துபோவீர்களென்றார்.

பிணியாளிகள் மடங்களைச் சந்திப்பதும் பிணியாளிகளுக்குத் தன் கையால்தானே ஊழியம் செய்வதும் அர்ச். ஞானப்பிரகாச இராசாவுக்குச் சொந்தக் கடமைபோலிருக்கும். எல்லாப் புண்ணியத்துக்கு மேலாய்த் தரித்திரத்தை விசேஷமாய் அர்ச். அஞ்சுகாய பிராஞ்சீஸ்கு என்பவர் நேசித்து வந்தபடியால் இதைத் தன் குருவென்பார். போதிக்கிறதென்னும் புண்ணியம் அர்ச். சாமிநாதருக்கு வெகு பிரியமாயிருந்தபடியால் இவர் ஏற்படுத்திய சபைக்குப் போதக சந்நியாசிகள் சபையென்னும் பேர் உண்டாயிற்று. பிதாப்பிதாவாகிய அபிரகாமென்பவர் பாவனையாகத் திரு யாத்திரைக்காரர்களுக்கு இல்லிடங் கொடுத்துச் சவரக்ஷணை செய்வது அர்ச். பெரிய கிரெகோரியாருக்கு வெகு பிரியமாயிருக்கும். இதற்குச் சம்பாவனையாக யாத்திரைக்காரன் உருபமாக வந்த சர்வேசுரனைத் தாமே தன் வீட்டில் வரவழைத்துப் பராமரிக்க இவருக்கு அதிஷ்டங் கிடைத்தது. தோபியாசென் மரித்தோரை அடக்கஞ் செய்துவந்ததால் வெகு பிறசிநேகத்தைச் சம்பாதித்தார். அர்ச். எலிசபெத்தம்மாள் மகா பெரிய மன்னவதியாயிருந்தபோதிலுந் தன்னைத்தானே நீசமாயெண்ணுவதில் விசேஷமாய் வெகு பிரியங்கொள்ளுவாள். மேனென்னுங் கத்தரீனம்மாள் விதவையானபின் பிணியாளி

மடங்களில் மனப்பிரீதியாய் ஊழியஞ் செய்துவரு வாள். வேறே புண்ணியஸ்திரீ ஒருத்தி பொறுமை யைச் சம்பாதிக்கவேண்டுமென்று அர்ச். அத்தனுசி யாரிடத்திற்போய் இதற்கு என்ன வழியென்று கேட் டாள். இவள் ஆசைக்குத் திருப்தி வருவிப்பதற்கா கக் கோபியும் பொறுமையற்றவளும் அலட்டுக்காரி யுமான உள்ளபடியே சகிக்கக்கூடாத ஒரு ஏழை விதவை ஸ்திரீயை இவளண்டையில் வைத்தாராம். இவள் ஓயாமல் அந்தப் புண்ணியவதியைக் கண்டி த்து அலட்டித் தொந்தரைசெய்து வந்ததால் இவள் வெகு பொறுமைசாலியாவதற்கு வழியாயிருந்த தாம். இது சரித்திரத்தைக் கசியேனென்னும் மடாதிபதி எழுதிவைத்தார். இத்தன்மையாகத்தான் சர்வேசுரனுக்குப் பிரிய தாசர்களில் சிலர் பிணியா ளிகளுக்குப் பணிவிடை செய்யவும் சிலர் ஏழைக ளைப் பராமரிக்கவுஞ் சிலர் சிறுபிள்ளைகளுக்கு வேத சத்தியங்களைக் கற்பிக்கவுஞ் சிலர் நெறிகெட்டுத்தவ றிய ஆத்துமங்களை இரட்சிக்கவுஞ் சிலர் தேவாலயங் களையும் பீடங்களையும் அலங்கரித்துச் சோடிக்கவுஞ் சிலர் மனிதர்களுக்குள் சமாதான ஒருமிப்பை உண் டாக்கவும் ஏக அலுவலாயிருக்கிறார்கள். இப்படி இவர்கள் பொன் வெள்ளி சரிகைகளைக்கொண்டு பட் டுப்பட்டாவளிகளில் எவ்விதப் புஷ்பங்களையும் வித விதமாய் நெய்கிற பட்டுநூற்காரர்களுக்கு ஒத்தவர் கள்போலாம். ஏனெனில் மேற்சொல்லிய புண்ணிய வான்கள் ஏதாகிலும் ஓர் விசேஷ புண்ணியத்தை அநுசரித்துவருகையில் இதனை ஆதாரமாகக்கொ ண்டு மற்றப் புண்ணியங்களெல்லாம் பலவிதப் புஷ் பங்கள்போற் பலவாறு இதன்மீது பரம்பிச் சோதிக் கச் செய்கிறார்கள். அதெப்படியெனில் இவர்கள் எல் லாக் கிருத்தியங்களும் ஆசை நாட்டங்களும் ஓரே பிரதான கருத்தைத் தாவியிருக்கின்றமையால் இவர்

கள் செய்யுங் காரியங்களெல்லாம் வெகு ஒருமிப்பு ஒழுங்குள்ளதாம். இதினால் மெல்லிய பொன் சரிகையினால் விசித்திர விநோதமாய் அமைந்த அழகிய பட்டாவளிபோல் பத்தியென்னும் புண்ணியம் இவர்களிடத்தில் துலங்கிக் காணும்.

ஏதாகிலுந் துர்க்குணம் நம்மைத் தொந்தரவு படுத்திப் போர்செய்கையில் நம்மால் இயன்றமாத்திரம் அதற்கு விரோதமான விசேஷ புண்ணியத்தை அநுசரித்து மற்றப் புண்ணியங்களும் இதற்கு உபயோகமாயிருக்கும்படி பார்க்கவேண்டும். ஏனெனில் இவ்வழியாய் நம்மிடத்திலிருக்கும் நமது சத்துருவாகிய துர்க்குணத்தை நாம் வெல்லுவதுடன் மற்றெல்லாப் புண்ணியங்களிலும் வர்த்தித்து வருவோம். கோபம் அல்லது ஆங்காரம் உன்னிடத்திற் போர்செய்துவருமேயாகில் எல்லாக் காரியத்திலுந் தாழ்ச்சி பொறுமையுள்ளவனாயிருக்கப் பார். இதில் அநுகூலப்படுவதற்கு நீ செய்யுந் தியானங்களும் பெறுகிற தேவத்திரவிய அநுமானங்களும் விமரிசை, நிலைமை, மட்டசனமுதலிய புண்ணியங்களை அடைய நீ படும் பிரயாசைகள் யாவும் மேற்சொல்லிய கருத்துக்கு உபயோகமாயிருக்கும்படி பார். ஏனெனில் காட்டுப்பன்றிகளுக்கு ஆயுதம் அவைகளின் பல்லுகளேயாம். ஆபத்துவருங்காலத்தில் பல்லோடு பல்லைத் தேய்த்துக் கூராக்கும். இவ்வாறே புண்ணியவான் தான் இரக்ஷணியமடைய இன்ன புண்ணியம் அவசரமென்று அறிந்து அதிற் பழக ஆரம்பித்த பிற்பாடு மற்றப் புண்ணியங்களோடு அதை அநுசரித்து வருவதால் அதைத் தீட்டிக் கூராக்குகிறதுபோலாகும். இதனால் மற்றப் புண்ணியங்களும் அதிக நாணயம்பெற்றுச் சிறந்ததாகும். இவ்வகையாகவே யோபென்பவர் தனக்கு வந்த தந்திரசோதனைகளிலெல்லாம் மனதைரியத்தை விடாமற் பொறுமையை விசேஷமாய் அரிசரி

ரித்துவந்தமையால் மற்ற எவ்விதப் புண்ணியங்களி லும் இவர் வர்த்தித்து மகா பெரிய அர்ச்சியசிஷ்ட வரானார். பலமுறை ஒருவன் ஒரு புண்ணிய கிருத் தியத்தை ஓரோவிசை மகா சாங்கோபாங்கத்தோடு செய்ததினால் உடனே வெகு புண்ணியவானாய் ஆகும் படி நேரிட்டதென்று நசியான்சு பட்டணத்து கிரெ கோரியென்பவர் சொல்லுகிறார். ஓர் இராத்திரிமாத் திரம் இல்லிடங் கொடுத்த நற்கிருத்தியத்துக்காகக் கனமகிமையடைந்த இராஅப் என்பவளுடைய சரித் திரத்தைக்கொண்டு இதை எண்பிக்கின்றார். ஆனால் இப்பேர்க்கொத்த விசேஷ பேறுபலன் அடைவ தற்கு நாம் இயற்றுங் கருமத்தை வெகு பத்தி நேசத் தோடு புரியவேண்டும்.

2-ம் அதிகாரம்.

இதுவுமது.

பத்தியாயிருக்க ஆரம்பிக்கிறவர்கள் துவக்கத்தில் சில தப்பிதங்களைச் செய்வது வழக்கமென்றும் இவைகள் சாங்கோபாங்கத் திட்டப்படி கண்டனைக் குரியவைகளாயினும் ஓர் விஷயத்தில் புகழ்ச்சிக்குரிய வைகளென்றும் அர்ச். அகுஸ்தீனென்பவர் சொல் லுகிறார். ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் ஒரு நாள் அதிக புண்ணியவான்கள் ஆவார்களென்கிற நம்பிக்கைக்கு இடமுண்டென்றும் இந்தக் குற்றங்க ளே இதற்கு ஓர்வித ஆயத்தம்போல் இருக்கிறதென் றுஞ் சொல்லுகிறார். பாவவழியை விட்டுப் புதிதாய் நன்னெறியில் நடக்க ஆரம்பிப்பவர்களிடத்தில் மித மிஞ்சின வீண் கலக்கங்களை வருவிக்கிற பயமானது

துவக்கத்தில் பெரிய புண்ணியமாயிருப்பதுமன்றி இருதயச் சுத்தத்தின் நிச்சயமான அத்தாட்சியுமாயிருக்கிறது. ஆனால் புண்ணிய நெறியில் வெகுவாய் அதிகரித்தவர்களிடத்தில் இப்படிப்பட்ட பயந்தகாததெனவேண்டும். இத்தன்மையான அடிமைக்கடுத்த பயத்தைத் தேவசிநேகம் இவர்களிடத்தினின்று கொஞ்சங் கொஞ்சமாய்த் தூரத்தி இவர்கள் இருதயத்திற் சம்பூரணமாய் வீற்றிருக்கவேண்டும்.

அர்ச். பெர்நார்தென்பவர் குருப்பட்டம் பெற்றபின் ஆத்துமங்களை நடப்பிக்கிறதில் வெகு கடுமையுள்ளவராயிருப்பார். தம்மிடத்தில் வருகிறவர்கள் முந்தமுந்தச் சரீரத்தைவிட்டுப் புத்தியோடு மாத்திரம் வரவேண்டுமென்பார். பாவசங்கீர்த்தனங் கொடுக்கும்போது மகா சொற்ப குற்றங்கள்பேரில் முதலாய்க் கிரமமற்ற கண்டிப்புள்ளவராயிருப்பார்; பத்தியில் வளரத் துவக்குகிறவர்கள் உடனே சாங்கோபாங்க நெறியில் தேட்டையாய்ப் போகவேண்டுமென்றுப்போல் நடத்துவார். இதனால் இவர்கள் அவதைரியப்பட்டு இவ்வளவு அருமையான பத்தி மார்க்கத்தில் நடப்பது எப்படியென்று அதை விட்டுவிடுவார்கள். பிரிய சகோதரமே, இதில் நீ அறியவேண்டியதென்னவெனில் மகா பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று இவருக்குள் இருந்த மிகுந்த ஆசை விருப்பமானது இப்படி இவர் மற்றவர்களை நடப்பிப்பதற்குக் காரணமாயிருந்தது, இந்தப் பத்தி சுறுசுறுப்பானது இவரிடத்தில் பெரிய புண்ணியந்தான்; ஆகிலுங் கண்டனைக்குப் பாத்திரமானது. இதைப்பற்றிச் சர்வேசுரன் தாமே இவருக்குத் தரிசனையாகி இவர் இருதயத்தை மாற்றி மதுரமுஞ் சாந்தமும் பிரியமுமுள்ள இருதயமாக்கினார். இதில் இவர் முழுதும் மாறி இவ்வளவு கடுமையாயிருந்ததின்மட்டில் மகா விதனப்பட்டு ஒவ்வொருவர்மட்டிலும் எவ்வளவு தயை தாக்ஷணிய

முள்ளவரானார் என்றால் எல்லோரையுஞ் சேசுகிறீஸ்துநாதரிடத்தில் சேர்ப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஆனபடி நடந்துகொண்டார்.

அர்ச். எரோனீமூசென்பவருக்குப் பிரிய குமாரத்திபோலிருந்த போலென்னும் அர்ச். சின்னம்மாளைக் குறித்து இவர் சொல்வதாவது: இந்தம்மாள் சரீர ஒறுத்தல்களைச் செய்வதில் மிதமிஞ்சினவளாய் இன்னம் ஒருவிதப் பிடிவாதமுள்ளவளாயிருந்தாள். இதைக் குறித்து இவளுடைய மேற்றிராணியாராகிய அர்ச். எப்பிபானென்பவர் சொல்லும் ஆலோசனை எல்லாந் தட்டிவிடுவாள். இதன்றித் தன்னுறவின் முறையாரில் ஆராகிலுஞ் சாகும்போது மிதமிஞ்சின கஸ்திப்பட்டுச் சாகிறதுபோல் இருப்பாள். இதுகாரியங்களை இந்த அர்ச்சியசிஷ்டவர் சொன்னபின் இவர்தாமே இன்னஞ் சொல்லுகிறதாவது. இந்தம்மாளைப் புகழ்கிறதற்குப் பதிலாய் இவளைப் பழித்து இவள் குற்றத்தை எடுத்துக்காட்டுகிறேனென்று சில விசை ஆராகிலுஞ் சொல்லுவார்கள். ஆனால் அவள் சிநேகித்துச் சேவித்தவருமாய் நானுஞ் சேவிக்க விரும்புகிறவருமான சேசுநாதரே இதற்குச் சாக்ஷி. உண்மைக்கு விரோதமாய் நான் ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. ஒரு கிறீஸ்துவன் செய்யவேண்டியபடி இந்தம்மாள் சரித்திரத்தை மாத்திரம் உண்மைக்கொத்தபடி சொல்லுகிறேன். ஆனால் இவளிடத்தில் துர்க்குணமாயிருந்தது வேறே அநேகரிடத்தில் மெய்யாகவே புண்ணியமாய் இருந்திருக்கும். ஆனால் பிரிய சகோதரமே, இந்த அர்ச்சியசிஷ்டவளிடத்தில் குற்றமாகப் பாவிக்கப்பட்டது இவளிலும் பத்தியில் அவ்வளவு விருத்தியடையாதவர்கள் இடத்திற் புண்ணியமாகப் பாவிக்கப்பட்டிருக்குமென்று நன்றாய்க் கண்டுபிடிக்கின்றாய். ஏனெனில் சாங்கோபாங்கத்தில் தேர்ந்தவர்களிடத்தில் குறையாகக் காணப்படும். இன்

ஷின்ன கிருத்தியங்கள் சாங்கோபாங்கத்தில் இன்னம் போதுமான வரையில் வளராதவர்கள் இடத்தில் மகா உத்தம கிருத்தியங்களாகப் பாவிக்கப்படும். வியாதியாய் இருந்து சொஸ்தப்பட்டவனுக்குக் கால் வீங்கினால் சிலசமயம் நல்ல அடையாளமாம். ஏனெனில் இவன் சரீரம் ஏற்கனவே பலப்பட்டு மிகுதியான கெட்ட நீர்களை எல்லாந் தள்ளிவிடுமென்று அடையாளமாம். ஆனால் இந்த அடையாளந்தானே சவுக்கியமாய் இருக்கிறவர்களிடத்திலே கெட்ட அடையாளமாயிருக்கும். ஏனெனில் இதினால் இவர்கள் சரீரத்திலுள்ள கெட்ட நீர்களைத் தள்ளிவிட இதற்கு அவ்வளவு பெலனில்லை என்று திஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

பிரிய சகோதரமே, புண்ணியங்களை அநுசரித்து வருகிறவர்களிடத்தில் எதாகிலுங் குறைகள் காண்கினும் அவர்கள்மட்டில் நல்ல எண்ணமாய் இருக்க வேண்டும். ஏனெனில் அர்ச்சியசிஷ்டவர்கள் முதலாய்ப் பலமுறை இத்தன்மையான குற்றங் குறையோடே புண்ணியத்தை அநுசரித்து வந்தார்கள். ஆனால் நாமோவெனில் பிரமாணிக்கமாய்ப் புண்ணியத்தை அநுசப்பதுமல்லாமல் இன்னம் அதை விவேகத்தோடு அநுசரிக்கவேண்டும். இதற்காக ஞானியானவர் சொல்லும் ஆலோசனையை நுணுக்கமாய்ப் பின்சென்று நமது சொந்த விவேகத்தை நம்பாமல் நம்மை நடப்பிப்பதற்காகச் சுவாமி நமக்குக் கொடுத்த ஞான மேய்ப்பர்கள் ஆலோசனையைக் கேட்டு நடக்கவேண்டும். கல்வித்திறமை இல்லாதவர்கள் புண்ணியமாக எண்ணுஞ் சில காரியங்கள் உண்டு. ஆகிலும் இவைகள் பரிச்சேதம் புண்ணியமாகிறதில்லை. இதைக் குறித்து இரண்டொரு வார்த்தை சொல்வது நலம். பரவசமாயிருத்தல், பஞ்சேந்திரியத் தோற்றமற்றிருத்தல், பரிசமின்றி இருத்தல்,

வேத ஐக்கியமாயிருத்தல், பரவசத்தால் சரீரம் உயர்த்தல், உரூபமாறுதல், இவைமுதலிய மேலான வரங்களைக் குறித்துச் சில பிரபந்தங்களில் பேசக் காணலாம். மேலும் அறிவினாலேயே உண்டாகும் ஞான தரிசன அந்தஸ்துக்கும் புத்தியின் விசேஷ தெய்வ நோக்க அந்தஸ்துக்குஞ் சர்வேசுரனையே தாவியிருக்கும் மிகவும் உயர்ந்த சீவியத்துக்கும் ஆத்துமம் எப்படி வந்து சேரக்கூடுமென்று விசேஷ விதமாய் இப்பிரபந்தங்களில் , கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிரிய சகோதரமே, இதில் அறியவேண்டியது என்னவெனில் இந்த மேலான நன்மை வரங்கள் புண்ணியங்களல்ல, இன்னஞ் சரியாய்ச் சொல்லவேண்டுமாகில் தய்வுள்ள சர்வேசுரன் புண்ணியத்துக்கு இப்பூவுலகில்தானே கிருபையுடன் அளிக்குஞ் சம்பாவனையாம் அல்லது நித்திய மோக்ஷபாக்கியத்தின் அடையாளமாம். மோக்ஷத்தில் நமக்குக் கொடுக்கச் சர்வேசுரன் முஸ்திப்பு செய்திருக்கும் பூரண பாக்கியத்தை மனிதன் ஆசித்து விரும்பித் தேடும்படியாகவே பல முறை இப்படிப்பட்ட வரங்கள் மனிதனுக்குக் கொடுக்கப்படுவதன்றி வேறல்ல. இந்த வரங்களை அவ்வளவு ஆசிக்கப்போகாது. ஏனெனில் சர்வேசுரனை நன்றாய்ச் சேவித்து நேசிப்பதே நமது ஏக கருத்தாதலால் இதற்கு இப்படிப்பட்ட வரங்கள் வேண்டியதில்லை. மேலும் இந்த மேலான வரங்களை நமது பிரயாசைத் திறமையால் அடையக்கூடாது. ஏனெனில் இவைகள் சர்வேசுரனே நம்மிடத்தில் நடத்துங் கருமமல்லாமல் நாமாய் நடத்துங் கருமமல்ல. உத்தமவான்களுமாய்ப் பத்தியுள்ளவர்களுமாய் ஆகவேண்டுமென்கிற கருத்தேயன்றி நமக்கு வேறே கருத்தில்லாததால் இது ஒன்றையே கவனிக்கவேண்டும். சம்மனசுகளுக்குரிய இவ்விதப் பத்தியில் நம்மை உயர்த்தச் சுவாமிக்குச் சித்தமானால் அப்போது நாம்

நல்ல சம்மனசுகளாயிருப்போம். ஆனால் அதுவரை யில் நமதாண்டவர் நாம் பிரயாசப்பட்டு அடையும் படி கற்பிக்கிற பொறுமை, சாந்தம், ஓறுத்தல், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், தாரித்திரம், கற்பு, அடக்கவொடுக்கம், பிறர்மேல் இரக்கம், பிறர்குறைகளைச் சகித்தல், பத்திச் சுறுசுறுப்பு முதலிய சிறிய புண்ணியங்களைத் தாழ்ச்சியோடு கபடற்றவிதமாய்ப் பத்தியாய் அநுசரித்து வரக்கடவோம். மனப்பூரணமாய் மேலான புண்ணியங்களை மேலானவர்களுக்கு விட்டுவிடுவோம். சர்வேசுரன் ஊழியத்தில் இவ்வளவு உயர்ந்தபடியில் இருக்க நாம் பாத்திரவான்களல்ல. தாழ்ந்தபடியில் இருந்துகொண்டு சர்வேசுரனுடைய தாழ்மையான ஊழியர்களில் கடைசி ஊழியராய் அவரைச் சேவிப்பது நமக்கு மகா அதஷ்டமென்று நினைக்கக்கடவோம். மகிமையான இடத்திலுஞ் சுவாமியுடைய அந்நியோந்நிய சம்பாஷணையிலும் இருப்பது நம்மாலல்ல. அவருக்கு நலமென்று தோன்றினால் அவர்தாம் நம்மை மகிமைப்படுத்தவேண்டும். ஆதலால் பிரிய சகோதரமே, மகிமைப் பிரதாபமுள்ள இராசாவாகிய நமதண்டவர் தமது ஊழியர்களுக்குச் சம்பாவனை கொடுக்கையில் அவர்கள் மேலான அந்தஸ்து மகிமையைப் பார்க்கிறதில்லை. ஆனால் இவர்கள் நேசத்துக்குந் தாழ்ச்சிக்கும் ஒத்தபடி சம்பாவனை கொடுப்பார். சவூல் என்பவர் தன் தகப்பனுருடைய கழுதைகளைத் தேடிப்பார்த்துக்கொண்டிருக்கும்போது இஸ்ரயேல் ராச்சியத்தைக் கண்டார். இரெபேக்கா என்பவள் அபிரகாம் என்பவருடைய ஒட்டைகளுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டிருக்கையில் அவர் குமாரனின் மனைவியானாள். ரூத்தென்பவள் போவோசென்பவரது நிலங்களில் அறுப்பறுத்தபின் சிந்தின தானியங்களைப் பொறுக்கிக்கொண்டு இவர் பாதத்தை அண்டிவருகையில்

இவருக்குப் பிரிய பத்தினியாகத் தெரிந்துகொள்ளப் பட்டாள். மெய்யாகவே மேற்சொல்லிய நூதனமான இவ்வளவு மேலான காரியங்களைச் சிந்தித்து ஆசிப்ப வர்கள் பசாசின் மாய்கையால் வெகு மோசத்துக்கு உள்ளாகிறார்கள். மேலும் பலமுறை தங்களைச் சம்ம னசாக எண்ணுகிறவர்களுக்கு நல்லவர்கள் என்கிற பெயர் முதலாய்ச் செல்லாது. இவர்கள் நினைவிலுங் கிருத்தியங்களிலும் உள்ள பெருந்தன்மை மேன்மை யைப் பார்க்கிலும் இவர்கள் வார்த்தைகளிலும் பேசுந் தன்மையிலும் அதிக பெருமை விளங்கும். ஆகிலும் யோசியாமல் ஒன்றையும் இகழவும் பழிக்கவுங்கூ டாது. ஆனால் சுவாமி மற்றவர்களுக்குச் செய்யும் விசேஷ நன்மை மேன்மைக்காக அவருக்குத் தோத் திரஞ்சொல்லி நமதந்தஸ்தில் தாழ்ச்சியாய் நிற்போம். அது தாழ்மையானாலும் அதிக நிச்சயமுள்ளது. வெளிக்குத் தோன்றாதேபோனாலும் நமது பலவீனத் துக்குத் தக்கது. பிரமாணிக்கமாய்த் தாழ்ச்சியோடு நாம் இதில் நிலைநின்றால் நமது எண்ணங்களுக்கு மேற்பட்ட மகிமையில் சர்வேசுரன் நம்மை உயர்த் துவார்.

3-ம் அதிகாரம்.

பொறுமையைக் குறித்து.

சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிற வர்களுக்கு அவர் வார்த்தைப்பாடு தந்த சம்பாவனை யை அடையப் பொறுமை அவசியமென்று அப்போ ஸ்தலர் சொல்லுகிறார். உங்கள் பொறுமையைக் கொண்டு உங்கள் ஆத்துமங்களைக் காப்பாற்றிக்கொண்

டிருப்பீர்களென்று நமதிரட்சகர் சேசுகிறீஸ்துநாதர் நமக்குக் கற்பிக்கின்றார். மெய்யாகவே பிரிய சகோதரமே, தன்னாத்துமத்தை அமரிக்கையில் ஆளும் மனிதன் வெகு பாக்கியவான். நமது பொறுமை எவ்வளவுக்கதிக உத்தமமானதோ அவ்வளவுக்கும் அதிக நேத்தியாய் நமது ஆத்துமங்களைக் காப்பாற்றுவோம். நமது ஆண்டவர் பொறுமை உபத்திரவத்தால் நம்மை இரட்சித்தபடியால் நிந்தை இடையூறுகளையுங் கஸ்தித் துன்பங்களையும் நம்மாலான பொறுமை அமரிக்கையோடு சகித்து நாமுங் கஸ்தி இக்கட்டுகளால் நமது இரக்ஷணியத்தை முடிக்கவேண்டுமென்று அடிக்கடி ஞாபகம் வருத்திக்கொள்வோம்.

இன்னின்ன கஸ்தி நிந்தையைமாத்திரம் பொறுமையோடு சகிப்பேனென்று சொல்லாதே. சுவாமி உனக்கு அனுப்புவதெல்லாவற்றையும் அல்லது உனக்கு வரும்படி அவர் சித்தமாயிருக்கிற துன்பங்களைப் பொதுப்பட பொறுமையாய் அங்கீகரித்துக்கொள். மகிமையை வருவிக்குங் கஸ்தித் துன்பங்களைமாத்திரஞ் சகிப்பது சிலருக்குப் பிரியமாயிருக்கும். அப்படியே போர்க்களத்தில் காயப்படுகிறதும் அதிற் பிடிபட்டு அடிமையாகிறதும் வேதத்துக்காகத் துன்பப்படுகிறதும் வீம்புக்கு வழக்காடி கெலித்தும் வறுமையாகிறதும் இதுமுதலிய பெருமைக்குரிய சஞ்சல நஷ்டங்களைப் பொறுமையாய்ச் சகிப்பது வெகு பிரயாசையல்ல. இப்படிப்பட்டவர்கள் உள்ளபடி துன்பத்தை நேசிப்பதில்லை. ஆனால் அதினால் வரும் மகிமையை மாத்திரந் தேடுகிறார்கள். மெய்யான பொறுமைசாலி சர்வேசுரனை உண்மையாகவே சேவிப்பவன் எப்படிபட்ட துன்பங்களையும் மகிமைக்குரியதாயினுஞ்சரி இழிவுக்குரியதாயினுஞ்சரி குளிர்ந்த முகத்தோடு ஓரே மனதாய்ச் சகிப்பான். தீயோர்களால் நிந்திக்கவுங் கண்டிக்கவுங் குற்றஞ் சாட்டவும்

படுவது தைரியசாலிக்கு இன்பமாகவேயிருக்கும். ஆனால் தன் சொந்தச் சிநேகிதர் பந்துக்களால் கண்டிக்கவுங் குற்றஞ் சாட்டவுஞ் சீறுமாறாய் நடத்தவும் படுவது அவ்வளவு சொற்ப காரியமல்ல. இதனைச் சகிப்பதற்கு ஆண்மையான வெகு பொறுமைவேண்டும். இதில்தான் மெய்யான தைரியசாலிக் குணம் விளங்கும். பலபேரால் பலசமயத்தில் அர்ச். ஷார்ல் பொரோமே என்பவருக்கு வந்த கஸ்திகளில் இவர் காட்டிய பொறுமை சாந்தகுணம் அதிசயத்துக்குரியதாயினும் வெகு கிரம ஒழுங்காய் நடந்துவந்த சந்நியாசசபையிற் பேர்போன ஒரு பிரசங்கி இவரைக் குறித்துப் பிரசித்தமாய்ப் பிரசங்கத்திற் சொல்லி வந்த இழிவான பேச்சுகளை நெடுங்காலஞ் சகித்தது அதைவிட மகத்தான பொறுமை என்னவேண்டும். ஏனெனில் தேனீக்கள் கொட்டினால் மற்ற ஈக்கடியைப் பார்க்கிலும் அதிகமாய்க் கடுக்கும். இத்தன்மையாகவே நல்லவர்கள் வழியாய் வரும் இடையூறு வருத்தங்கள் மற்ற எந்தத் துன்பங்களிலும் அதிக கடுமையாம். ஆகிலும் இரண்டுபேர் எவ்வளவு நல்ல கருத்துள்ளவர்களாயினும் ஒவ்வொருவருந் தம் தம் கருத்துத் தோற்றப்படி செய்துவருதால் பல முறை இவர்களுக்குள் வெகு ஒவ்வாமை வருத்தம் நேரிடுகிறதுண்டு. மேலும் உனக்கு வருந் துன்பதுரிதத்தைமாத்திரம் பொறுமையாய்ச் சகிப்பது போதாது. ஆனால் அதனால் வருஞ் சகல இமிசை சங்கடங்களையும் பொறுமையாய்ச் சகிக்கவேண்டும். பல பேர் தங்களுக்கு நஷ்டம் வருவியாத எந்தத் தின்மைவந்தாலும் வரட்டும் என்பார்கள். ஒருவன் எளியவனாயிருப்பதினால் தன் சிநேகிதர்களுக்கு ஒத்தாசை செய்யவுந் தன் பிள்ளைகளைத் தகுந்தபடி வளர்க்கவுந் தான் ஆசிக்கிறபடி மகிமையாய்ச் சீவிக்கவும் விக்கினம் நேரிடாவிட்டால் தாரித்திரனாயிருப்பதைப்

பற்றி வருத்தப்படமாட்டேனென்பான். வேறொருவன் தன் தப்பிதத்தால் இன்ன காரியஞ் சம்பவித்ததென்று உலகஞ் சொல்லாவிட்டால் அதுகாரியந் தனக்குப் பெரிதல்லவென்பான். மற்றொருவன் தன் பேரில் அபதூறு சொல்லுகிறவன் வார்த்தையை ஒருவரும் நம்புகிறதில்லையென்று அறிவானே, இவன் சொல்லுகிறதெல்லாஞ் சொல்லட்டுமென்று வெகு பொறுமையாயிருப்பான். எந்தத் தின்மையும் எப்படிப்பட்ட நஷ்டமும் வந்தாலும் வரட்டுமென்பார் சிலர், ஆனால் எல்லாம் ஒருமிக்க வரக்கூடாதென்பார். வியாதியாயிருப்பதால் வருத்தப்படுகிறதில்லை, ஆனால் வியாதியைச் சொஸ்தப்படுத்திக் கொள்வதற்கான அவகாசம் இராததைப்பற்றியும் அல்லது தன் சுற்றத்தார் தன்னால் சங்கடப்படுவதைப்பற்றியும் வருத்தப்படுகிறேனென்பார்கள்.

பிரிய சகோதரமே, வியாதியில் பொறுமையாயிருக்கவேண்டியது மெய்தான். ஆனால் இன்னமுஞ் சுவாமி இஷ்டப்பட்டு அனுப்பும் வியாதியிலும் அவருக்கு இஷ்டமாயிருக்கும் இடத்திலும் அவருக்குச் சித்தமான மனிதர்கள் நடுவிலும் அவருக்கு இஷ்டமான சங்கட இக்கட்டுகளிலும் பொறுமையாயிருக்க வேண்டும். இப்படிதான் எந்தெந்தத் துன்பங்களிலும் நடந்துகொள்வாய். உனக்கு ஏதாகிலுந் தின்மை நேரிடும்போது சுவாமி சித்தப்படி உன்னாலான மருந்துகளைத் தேடவேண்டும். ஏனெனில் இவ்விதமாய்ச் செய்யாவிட்டால் சுவாமியைச் சோதிப்பது போலாகும். ஆனால் வேண்டிய மருந்துகளைத் தேடி அதற்கான பிரயாசப்பட்டபின் சுவாமி சித்தப்படி ஆகட்டுமென்று மகா பொறுமையாய்க் காத்திருக்க வேண்டும். தின்மை நீங்கினால் தாழ்ச்சியாய்ச் சுவாமிக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய். உன் மருந்து

சுத்திசெய்யாவிட்டாற் பொறுமையோடு சுவாமியைப் புகழ்வாய்.

அர்ச். கிறெகோரியூர் சொல்லும் ஆலோசனையின்படி நானுஞ் சொல்லுகிறதேதெனில் நீ செய்தயாதாமொரு தப்பிதத்தைப்பற்றி நியாயத்தோடு உன்னைக் குற்றஞ் சாட்டுகையில் மிகவுந் தாழ்ந்துபோய் உன்பேரில் சொல்லப்பட்டதைப் பார்க்கிலும் அதிக் குற்றவாளியாயிருக்கிறுய் என்று ஏற்றுக்கொள்ளக் கடவாய். அபத்தமாய் உன்பேரில் குற்றஞ் சாட்டினுல் நீ குற்றவாளி அல்லவென்று பொறுமையாய் உன் நியாயங்களைச் சொல்லிக் காட்டுவாய். ஏனெனில் உண்மை வெளிப்படவும் பிறர் நன்மாதிரிகைக்காகவும் இவ்விதம் நீ செய்யவேண்டியதே. ஆனுல் கிரமப்படி உண்மையைச் சொல்லியபின் இன்னமும் உன்னைக் குற்றஞ் சாட்டுவார்களேயாகில் அதினுல் பரிச்சேதங் கலக்கத்துக்கு இடங்கொடாதே. உன் நியாயங்களை ஏற்றுக்கொள்ளும்படி வீண் பிரயாசப்படாதே. ஏனெனில் உண்மை விளங்கும்படி நீ செய்யவேண்டியதைச் செய்தபின் தாழ்ச்சியாய் இருக்கவேண்டுமென்கிற கடமையையும் மறக்கலாகாது. இவ்விதமாய் உன் கீர்த்தியைக் காப்பாற்றக் கிரமப்படிசெய்யவேண்டியதைச் செய்வதுடன் தாழ்ச்சி, மனச்சமாதானத்தின்மட்டில் உனக்கு இருக்கவேண்டிய பிரியத்தையுங் காண்பிப்பாய்.

உனக்கு வரக்கூடுமான நிந்தனை அவமான வருத்தங்களைக் குறித்து முறையிடாமல் உன்னுல் ஆனமட்டும் அமரிக்கையாயிருப்பது உத்தமம். ஏனெனில் நமக்கு நேரிடும் நிந்தனை சொற்பமாயினுஞ் சுயபக்ஷத்தால் அதனைப் பெரிதாக எண்ணுவதால் முறைப்பாடிடுகிறவன் வழக்கமாய் ஏதாகிலுந் தப்பிதத்தைக் கட்டிக்கொள்ளுகிறுனென்பது உண்மை. ஆனுல் விசேஷமாய் ஒன்றுமில்லாத காரியத்துக்கு வெகு

சுளுவாய்க்கோபித்துக்கொண்டு விகற்பமாய் நினைக்கிறவர்களிடத்தில் முறையிடாதே. உனக்குவந்த நிந்தனையைத் தீர்ப்பதற்கென்கிலும் அல்லது அதற்கான வழி பார்க்கவென்கிலும் உன் புத்திக்கு அமரிக்கை சமாதானத்தை வருவிப்பதற்காகிலும் உன் வருத்தத்தைப் பிறரிடத்தில் சொல்வது நலமாயிருந்தால் தேவசிநேகஞ் சமாதான அமரிக்கையுள்ள மனிதர்களிடத்தில் சொல்லிக்கொள். இல்லாவிட்டால் இதனுல் உன் புத்திக்கு வெகு தொந்தரையும் பலத்த சஞ்சலங்களும் வருவதுமன்றி உன் இருதயத்தில் தைத்திருக்கும முள் அதிக ஆழமாய்ப் பாய இடமாயிருக்கும்.

அநேகர் தங்களுக்கு வியாதி அல்லது ஏதாகிலுங் கஸ்தி நிந்தை வந்தால் இவைகளைக் குறித்து முறைப் பாடிடுவது தைரியமற்றதனமென்று முறையிடாமல் வெகு பொறுமையாயிருப்பார்கள். ஆனால் இவர்களைப் பார்க்க வருகிறவர்கள் எல்லோரும் இவர்கள் வியாதியின்பேரில் மனமிரங்கி இவர்கள் படும் வியாதி வெகு கடினமாயினும் மெத்தப் பொறுமைசாலிகளாயிருக்கிறார்களென்று இவர்களுக்கு மகிமையாய்ச் சொல்லும்படி வெகுவாய் ஆசித்து அதற்கான விதமாய் நடந்துகொள்ளுவார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்களிடத்தில் மெய்யாகவே மெத்தப் பொறுமையுண்டோ? பரிச்சேதமில்லை. இவர்கள் பொறுமையெல்லாம் வெகு சூக்ஷமான பேராசை வீண் சிலாக்கியமல்லாது வேறல்ல. அப்போஸ்தலர் சொல்லுமாப்போல் இவர்கள் மகிமையெல்லாம் மனிதர் கண்களுக்கு முன்பாகத்தான், சுவாமிக்கு முன்பாக ஒன்றுமில்லை. மெய்யான பொறுமைசாலி தனக்கு நேரிட்டிருக்குந் தின்மையைக்குறித்து முறை பாடுகிறதுமில்லை, மற்றவர்கள் அதின்பேரில் முறைப்பாடிட ஆசிக்கிறதுமில்லை. இவன் தன் இக்கட்டின்பேரில் பிரலாபித்துக் கோபியான். தனக்கு இருக்கும் வியா

தியை அதிக பெரிதாகவுங் காட்டான். வேண்டுமாஞல் கபடற்ற விதமாய் உண்மைக்கு ஒத்தபடி தனக்கு இருக்கும் வருத்தத்தைச் சொல்லிக் காண்பிப்பான். மற்றவர்கள் இவனைப் பார்த்துப் பிரலாபிப்பார்களேயாகில் அதற்கும் பொறுமையாய் இருப்பான். இவன் படும் வருத்தத்தை அதிக கனமாய் எண்ணிப் பேசுவார்களாஞல் தனக்கு அவ்வளவு வருத்தமில்லை என்று அடக்க மரியாதையோடு சொல்லுவான். இத்தன்மையாய்த் தனக்கு இருக்கும் வியாதி இன்னதென்று வெளிப்படுத்தி அதனைக்குறித்து முறையிடாமல் இருப்பதால் இவனே மெய்யான பொறுமைசாலி என்கலாம்.

சாங்கோபாங்க வழியில் பல தொந்தரை இக்கட்டு வருமென்பது தப்பாது. அச்சமயத்தில் நமதாண்டவர் சொல்லியதை நினைத்துக்கொள்ளவேண்டும். ஸ்திரீயானவள் பிள்ளைபெறும்போது வெகு அம்பாயப்படுகிருள். ஆஞல் பிள்ளையைப் பெற்றபின் சந்தோஷ மிகுதியால் தான் பட்ட வருத்தத்தை நினையாள். பத்தியாயிருக்க நீ ஆரம்பிக்கையில் மனுமக்களில் மிகவுஞ் சுபசௌந்தரிய மாட்சிமையுள்ள சேசுகிறீஸ்துநாதர் உன் ஆத்துமத்தில் உற்பவித்தது போலாகும். இப்படி நீ பத்தியில் மிகுத்து உன்னிடத்தில் அவர் முழுதும் பிறப்பதற்கு முந்திக் கஸ்தி இக்கட்டு அநுபவியாமலிருப்பது கூடுமானதல்ல. ஆஞல் தைரியமாயிரு. இந்த வருத்தங்களெல்லாங் கடந்துபோம். சேசுநாதர் திருச் சீவியத்தைக் கண்டு பாவித்து நடப்பதால் உன் கிருத்தியங்களும் ஒருவிசை அவர் கிருத்தியங்களுக்கு ஒத்ததாகியபின் அவரை நீ முழுதும் பெற்றெடுத்ததுபோலவே ஆகும். இதஞல் உனக்கு வருஞ்சந்தோஷமோ நித்தியமாய் இருக்கும்.

நீ வியாதியாயிருக்கும்போது உன் கஸ்திச் சலிப்பு

வருத்தங்களையெல்லாஞ் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்து உனக்காக அவர் அநுபவித்த உபாதைகளோடு ஒன்றாய்ச் சேர்க்கும்படி அவரைப்பார்த்து மன்றாடு. உன் வயித்தியனுக்குக் கீழ்ப்படிந்து அவன் கொடுக்கும் அவுஷதங்களைப் பொறுமையாய்ச் சாப்படு. சர்வேசுரன் நமதுபேரில் வைத்த நேசத்தால் உட்கொண்ட பிச்சோடு கலந்த புளித்த ரசத்தை நினைத்துக் கொண்டு அவர் பேரில் உனக்கு இருக்கவேண்டிய நேசத்தைப்பற்றி அவசரமான மருந்துகளைப் பிரியமாய்ச் சாப்பட்டுப் பத்தியம்பிடிப்பாய். சுவாமிக்கு ஊழியஞ் செய்கிறதற்காகவே நீ சொஸ்தப்பட ஆசிக்கவேண்டியது. அவர் சித்தத்துக்கு ஒத்தபடி வியாதியில் மெலிந்து வருத்தப்படத் தத்தளியாதே. நீ இவ்வுலகத்தை விட்டுவிடச் சுவாமிக்குச் சித்தமானால் அவரைப் புகழ்ந்து அவரோடு வீற்றிருக்கும்படி சாவுக்கு முஸ்திப்பு செய்யக்கடவாய். தேனீக்கள் தேனை உண்டுபண்ணுங் காலத்தில் மகா கசப்பான வஸ்துகளைச் சாப்பட்டுச் சீவிக்கின்றன. இப்படி துன்பமென்னுங் கசப்பான போசனத்தை அருந்தி கஸ்தி இக்கட்டுகளில் சீவிக்கும்போது தான் பொறுமை தயாளமென்னும் புண்ணியங்களைக் கொண்டு மற்றமற்றப் புண்ணியங்களின் இனிய தேனை உண்டுபண்ணுவோம். கசப்பான சின்ன பூலாகிய தீம் என்னும் பூண்டின் புஷ்பங்களினின்று எடுக்கப்படுந் தேன் மற்ற எல்லாத் தேன்களிலும் அதிக நேர்த்தியானதாம். இத்தன்மையாகவே அதிக தாழ்மைக்குரிய துன்ப துயரங்களென்னுங் கசப்பில் உண்டாகும் புண்ணியம் மற்றெல்லாப் புண்ணியங்களினுஞ் சிறந்ததாம். சேசுகிறீஸ்துநாதர் தேவதூஷணம் நிந்தைகளுக்குள்ளாகி எல்லாராலுங் கைவிடவும் வஸ்திரம் உரியவும்பட்டு எவ்விதக் கஸ்திச் சஞ்சல வருத்தங்களையும் அநுபவித்துச் சிலுவையில் அறையுண்டிரு

ப்பதை உன் ஆத்துமத்தின் ஞானக்கண்களால் அடிக்கடி உற்றுப்பார். நீ அநுபவிக்கும் வருத்தங்களெல்லாம் அதற்கு ஒத்ததாகவும் அவ்வளவு பெரிதாகவும் இராததால் அவருடைய பாடுகளுக்குப் பரிச்சேதம் இணையிடக்கூடாதென்று யோசித்துக்கொள். மெய்யாகவே உனக்காக அவர் பட்ட பாடுகளுக்குச் சரியொத்த ஒன்றையும் நீ படமாட்டாய்.

முற்காலத்தில் வேதசாக்ஷிகள் அநுபவித்த உபாதைகளையும் இன்னம் இக்காலத்திலுங் கணக்கற்ற பேர் அநுபவிக்கும் வருத்தங்களையும் யோசித்துப் பார். இவைகளுக்கு முன்பாக நீ அநுபவிக்கும் வருத்தங்கள் ஒன்றுமில்லையென்பாய். நீ அநுபவிக்குங் கஸ்தித் துன்பங்களுக்கு ஆயிரமடங்கு பெரிதான கஸ்திகளுக்குள்ளாய் அற்ப ஒத்தாசை ஆறுதலின்றி ஒருவித இடைவிடா மரண அவஸ்தையில் சீவிக்கும் அநேகருக்கு உன்னை இணையிட்டுப் பார்ப்பாயேயாகில் உன் பிரயாசைகள் உனக்கு ஆறுதலாகவும் உன் வருத்தச் சஞ்சலங்கள் உனக்கு உரோசாப் புஷ்பங்களாகவும் இருக்கிறதென்று கண்டுகொள்ளுவாய்.

4-ம் அதிகாரம்.

வெளியரங்கத் தாழ்ச்சியைக்குறித்து.

வேத புத்தகத்திற் சொல்லியிருக்குஞ் சின்னதோர் சரித்திரமாவது: எளிய விதவை ஸ்திரீ ஒருத்தி தன் நிர்ப்பாக்கியத்தை எலிசை என்னுந் தீர்க்கதரிசிக்குச் சொல்லிக்கொண்டாள். சுவாமிக்கு மிகவும் பிரிய தாசனாகிய இவர் இவளைப்பார்த்து இரவலாக வாங்கக் கூடுமான வெறும் பாண்டங்களை வாங்கி இவளிடத்

தில் இருந்த கொஞ்சம் எண்ணெயை அதுகளில் வார்க்கவும் இப்படி எல்லாப் பாண்டங்களுஞ் சரியாய் நிறையும்வரையில் இந்த எண்ணெய் குறைவுபடாதென்றுஞ் சொன்னார். இவர் சொன்னபடி இந்த மனுஷி செய்ய இவர் வார்த்தையின்படி காரியஞ் சித்தித்தது. இதனால் நாம் அறியவேண்டியதேதெனில் தேவ வரப்பிரசாதங்களை நாம் அடையவேண்டுமோ இதற்கு நமது இருதயத்தில் வீண் சிலாக்கிய பெருமை ஒன்றும் இருக்கலாகாது. இராசாளி எப்படிப்பட்ட பெரிய பக்ஷிகளையும் பார்த்துக் கூவினால் அவைகள் பயந்து ஓடிப்போம். இதைப்பற்றியே மாடப்புறாக்கள் மற்றப் பக்ஷிகளைப் பார்க்கிலும் அதிகமாய் இதை நேசித்து இதன் அண்டையில் அமரிக்கையாய்ச் சீவிக்கும். இத்தன்மையாய்த் தாழ்ச்சியானது பசாசைத் துரத்தி இஸ்பிரீத்துசாந்துவின் அநுக்கிரக வரங்களை நம்மிடத்திற் பதலமாய்க் காக்கும். இதைப்பற்றித்தான் சகல அர்ச்சியசிஷ்டவர்களும் விசேஷமாய் அர்ச்சியசிஷ்டவர்கள் முடியும் அரசுமாகிய சேசுகிறீஸ்துநாதரும் அவர் திருத்தாயாரும் இந்தப் புண்ணியத்தை மற்ற எந்தப் புண்ணியத்துக்கு மேலாய் எப்பொழுதும் அபேட்சித்து அநுசரித்து வந்தார்கள்.

நம்மிடத்தில் இராத காரியங்களைப்பற்றியாகிலும் நம்மிடத்திலிருந்தும் நமக்குச் சொந்தமாய் இராத காரியங்களைப் பற்றியாகிலும் நமக்குச் சொந்தமாயிருந்தும் நாம் பெருமை பாராட்டிக்கொள்ளத்தகாத காரியங்களைப்பற்றியாகிலும் நாம் பாராட்டிக்கொள்ளும் மகிமைதான் வீண் சிலாக்கியமென்று அழைக்கப்படும். உயர் குலத்தில் பிறப்பதுங் கனவான்கள் சிநேக விகிதத்தைப் பெற்றிருப்பதும் எத்திறத்தோர் சனுவிலிருப்பதும் நம்மால் ஆனதல்ல. ஆனால் இவைகளெல்லாம் நமது முன்னோர்களிடத்திலும்

அல்லது பிறர் எண்ணத்திலும் இருக்கிறதன்றி வேறல்ல. ஒருவனுக்கு அழகான குதிரை நேத்தியான உடுபாவனை இருப்பதால் வெகு பெருமை பாராட்டுவான். ஆனால் இதிலுள்ள மதியீனத்தைக் காணுதவனுர். ஏதாகிலும் இதனால் மகிமை வருவதாயிருந்தால் இந்த மகிமை எல்லாம் நாலுபேர் கண்ணுக்குப் பிரியமாய் இருக்கிற குதிரைக்கும் திறமையோடு உடுபாவனைகளைத் தைத்த தையற்காரனுக்குமல்லோ வரவேண்டும். இத்தன்மையாய் ஓர் நீச மிருகத்தினிடத்திலும் வீணை ஆடையினின்றும் பெருமை சிலாக்கியத்தை இரவல் வாங்குவது என்ன மூடத்தனமே. சிலர் தங்கள் முறுக்கான மீசையைப்பற்றியும் அடர்ந்த நீண்ட தாடியைப்பற்றியுஞ் சொகுசான கூந்தலைப்பற்றியும் மிருதுவான கைகளைப்பற்றியும் வேறுசிலர் தங்களுக்குக் கூத்தாடவும் ஈதவாத்தியங்களை வாசிக்கவும் பாடவுந் தெரிகிறதைப்பற்றியுந் தங்களைக் கனமாய் எண்ணிப் பெருமை பாராட்டிக்கொள்வார்கள். ஆனால் பிச்சை எடுப்பதுபோல அவிவேகமான இவ்வளவு அற்பகாரியங்களைக்கொண்டு மேன்பாட்டுக் கீர்த்தியில் ஓங்கத் தேடுகிறவர்களிடத்தில் வெகு அற்பபுத்தி நீசத்தனங் காண்கிறதல்லோ? சிலர் கொஞ்சம் படித்திருப்பதால் எல்லோருந் தங்களிடத்திற் பாடங்கேட்டுத் தங்களைச் சாஸ்திரிகள் என்று நினைக்கவேண்டுமென்றாப்போல் சகலராலுஞ் சங்கித்துக்கொண்டாடப்பட விரும்புவார்கள். ஆனால் இதனாற் சம்பவிக்கிறது என்ன, நியாயத்தோடு எல்லோரும் இவர்களுக்குப் பெரும் பேதையென்கிற பட்டப்பேர் இடுவார்கள். வேறு சிலர் தாங்கள் சற்றே அழகாய் இருப்பதைப்பற்றி ஒய்யாரநடை நடந்து எல்லோருந் தங்கள்பேரில் கண்ணைப் பட்சமாய் இருப்பதாக எண்ணிக்கொள்வார்கள். இவைகள் யாவும் மகா மூடத்தன வீண் சிலாக்கிய

கெறுவமென்றறிக. இவ்வளவு அற்ப முகாந்தரங்களைப்பற்றிக் கொள்ளுகிற மகிமைப் பெருமையே மதியற்ற மூடத்தனம் என்று அழைக்கப்படும்.

பரிமளம் மெய்யானதோ அல்லவோ என்று சோதித்து அறிகிறதுபோல் ஒவ்வொருவரிடத்திலுமுள்ள நன்மை மெய்யானதோ என்று சோதித்தறியலாம். பரிமளத்தைத் தண்ணீரில் விட்டுச் சோதித்துப் பார்ப்பார்கள். தண்ணீருக்கு அடியில் இறங்கிணல் மெத்த விலைபெற்றதாம். மேலே மிதந்தாலோ ஒன்றுக்கும் உதவாதென்பார்கள். இத்தன்மையாகவே ஒருவன் மெய்யான விவேகியோ கல்விமானோ பெருந்தன்மை உதாரத்துவமுள்ளவனோ என்று அறிவதற்கு இவன் சற்குணங்கள் எல்லாந் தாழ்ச்சி அடக்க ஒடுக்கங் கீழ்ப்படிதலை நாடி இருக்கிறதோ இல்லையோவென்று பார்க்கவேண்டும். ஏனெனில் அப்போதுதான் இவன் மெய்யான சற்குணசாலி எனத்தகும். இவனிடத்திலுள்ள நன்மை மெய்யானதாம். ஆனல் இதற்கு விரோதமாய் அவன் நற்குணங்கள் வெளியில் காணவும் நாலுபேருக்கு எண்ணப்படவும் விருப்பமுள்ளவனுகில் வெளிக்குக் காணப்படும் அவ்வளவுக்கும் இவனிடத்தில் மெய்யான நன்மை சற்குணமில்லை எனத்தகும். காற்றுமழையிலும் இடிமுழக்கத்திலுஞ் செனிக்கும் முத்துக்கள் மெய்யான கெட்டிமுத்துக்களாகாமற் சிப்பிமுத்துக்களாம். இவ்வண்ணமே ஆங்கார பெருமை சிலாக்கியத்தில் உண்டாகி வளர்ந்த புண்ணியங்களுஞ் சற்குணங்களும் வெளிக்குமாத்திரம் நன்மையாகத் தோன்றுகிறதேயன்றி இதற்கு வேண்டிய சாரமும் உருசியும் பலமுஞ் சத்துவமுமிருக்கிறதில்லை.

மஞ்சட்செடிகளைக் காலால் உதைத்து இடிப்பதால் அதிக நேர்த்தியாய் விளைந்து பலன் தரும். மகிமைவரிசைகளும் மேன்மைப்பட்டம் மேலான அந்

தஸ்துகளும் மேற்சொல்லிய செடிகளுக்கொத்தவை களென்னத்தகும். ஆதலால் வீண் சிலாக்கியங் கொள்வதில் மகிமையில்லை. அழகானது எல்லோருக்கும் பிரியப்படவேண்டுமானால் அதை நாம் ஓர் விஷயம் பண்ணக்கூடாது. கல்வியினால் தாழ்ச்சியைக் கற்றுக் கொள்ளாமல் வீம்பு கெறுவங்கொள்ளுவோமேயாகில் அதினால் அவமானமடைவோம்.

மேலான வரிசை முதல் இடங்களையும் மகிமைப் பட்டங்களையும் வேண்டுமென்று தர்க்கஞ் செய்யத் தேடுவதால் நமது குணம் இன்னதென்று யாவரும் அறிய இடமாயிருப்பதுமன்றி இதனால் நம்மிடத்தில் பெருந்தன்மை விளங்காமல் அற்ப புத்திமாத்திரந் தோன்றும். அதேனெனில் ஏதாகிலும் நன்மையை முன்னிட்டுவரும் மகிமை எவ்வளவுதான் சிறந்ததாயிருந்தபோதிலும் அதை வேண்டுமென்று தேடிக் கட்டாயமாய் அடையும்போது நிந்தைக்குரியதாகும். மயில் தன் உரூப வடிவைப் பார்ப்பதற்கு அழகிய தன் சிறகுகளை விரிக்கும்போது இதின் சரீரமுழுதுஞ் சிலுப்பிக்கொள்வதால் இதினிடத்தில் இருக்கக்கூடுமான அவலட்சணங்களெல்லாங் காணும். ஒரு புஷ்பத்தைப் பறித்துப் பலபேர் கையிற் கொடுத்தாற் கொஞ்சத்துக்குள் அழகு மறிப்போம். சில புஷ்பங்களை இலேசாய் முகர்ந்து பார்த்தால் மகா நேத்தியான வாசம் வீசும். ஆனால் நெடுநேரம் அவைகளை முகர்ந்தாலோ ஓர்வித மயக்கமுண்டாம். இத்தன்மையாகவே மகிமையை மிஞ்சின விருப்பத்தோடு வேண்டுமென்று தேடாதவர்களுக்கு மகிமை வந்தால் ஆறுதல் சந்தோஷமாம். ஆனால் மெத்த ஆவலோடு அதனை வருந்தித் தேடுகிறவர்களுக்குக் கன வெட்கக்கேடுண்டாம்.

புண்ணியத்தை நேசித்து அநுசரிக்கத் தேடுகையில் நாம் நல்லவர்களாக ஆரம்பிக்கின்றோம். மகி

மையை நேசித்துத் தேடுகையிலே நாலுபேருக்கு நிந்தனைக்குரியவர்களாய்க் கெட்டவர்களாகத் துவக்குகின்றோம். பெருந்தன்மையுடையோர் இவ்வித மகிமை சிலாக்கியத் தோத்திரங்களை ஒரு பொருட்டாய் எண்ணார்கள். இவர்களுக்கு வேறே பிரயோசனமான அலுவல்கள் உண்டு. அற்ப புத்தி உடையவர்கள் தான் மகிமையே கெதியென்றிருப்பார்கள். கெட்டி முத்துக்கள் போதுமானவரையில் உள்ளவனுக்கு அவைகளின் மேலோடுகள் பெரியகாரிமல்ல. புண்ணியத்தை அநுசரிக்கத் தேடுகிறவர்கள் மகிமையை மெத்தத் தேடார்கள். ஆகிலும் ஒவ்வொருவனுந் தன் அந்தஸ்துக் கொத்தபடி தாழ்ச்சிக்குக் குந்தகமில்லாமல் மகிமையானவிடத்தில் இருக்கலாம். ஆனால் வேண்டுமென்று இந்த மகிமைப் பட்டத்தைத் தேடாமல் இதின்மட்டில் தோற்றமற்றவிதமாய் நடந்து கொள்ளவேண்டியது. ஏனெனில் பெரு என்கிற தேசத்தினின்று வருபவர்கள் பொன் வெள்ளியுமல்லாமல் இன்னங் குரங்கு கிளிப்பிள்ளைகளையுங் கொண்டு வருவார்கள். ஏனெனில் இவைகள் சொற்ப விலையாயும் கப்பலுக்குப் பாரமில்லாமலும் இருக்கின்றன. இவ்வாறே புண்ணிய விருப்பமுள்ளவர்கள் தங்களுக்குக் கிரமப்படி வரவேண்டிய சங்கை மகிமையான இடங்களை விட்டுவிடுகிறதில்லை. ஆனால் இது முகாந்தரமாக இவர்கள் வீண் தொந்தரை சங்கடங்களுக்குங் கலக்க ஏக்கங்களுக்கும் வாக்குவாத சச்சரவுகளுக்குந் துணியமாட்டார்கள். பொது நன்மையைக் கோரி அவனவன் காக்கவேண்டிய வரிசை மகிமைப்பட்டங்களைக் குறித்தும் ஒவ்வொருவனுந் தன் தன் மகிமையைக் காப்பாற்ற வேண்டியிருக்கிற சில விசேஷ தருணங்களைக் குறித்தும் இவ்விடத்திற் பேசிவதில்லை. ஏனெனில் இது விஷயங்களில் ஒவ்வொருவனுந் தனக்குச் சொந்தமாய் வரவேண்டிய

ணை விமரிசையோடு காப்பாற்றவேண்டும். எப்படியும் அச்சமயத்தில் மிகுந்த பிறசிநேக உபசாரமாய் நடந்துகொள்வது கடன்.

5-ம் அதிகாரம்.

அந்தரங்கத் தாழ்ச்சியைக் குறித்து.

பிரிய சகோதரமே, தாழ்ச்சியில் அபிவிருத்தி அடைந்து நடக்க ஆசிக்கிறாய். ஏனெனில் மூந்தின அதிகாரத்தில்சொன்னதுபோல் நடந்துகொள்வதில் விவேகம் விளங்குமேயல்லாது தாழ்ச்சி அவ்வளவு விளங்காது. ஆதலால் உனக்குத் திருப்தி வரும்படி இன்னம் அதைக்குறித்தே கொஞ்சம் விரிவாய்ப் பேசப்போகிறேன். அநேகர் சர்வேசுரன் தங்களுக்குச் செய்த விசேஷ வரங்களைப்பற்றி வீண் சிலாக்கியம் வரப்பேர்குதென்று பயந்து அதுகளைக்குறித்து நினைக்கத் துணியார்கள். மெய்யாகவே இதில் இவர்கள் வெகு மோசம்போகிறார்கள். ஏனெனில் தேவசிநேகத்தில் விருத்தியடைய மெய்யான வழி என்னவெனில், அர்ச். தோமாசென்னும் வேதபாரகர் கற்பிப்பதுபோல் சர்வேசுரன் நமக்குச் செய்த உபகாரங்களை நினைத்துத் தியானிப்பதுதான். சுவாமி நமக்குச் செய்த நன்மைகளை எவ்வளவுக்கு அதிகமாய் நாம் அறிவோமோ அவ்வளவுக்கு அதிகமாய். அவரைச் சிநேகிப்போம். பொதுவான வரங்களைப்பார்க்கிலுஞ் சுவாமி ஒவ்வொருவனுக்குஞ் செய்துவரும் விசேஷ வரங்கள் அதிகமாய் நமது பக்ஷத்தைத் தூண்டுவதால் அதிக கவனமாய் இவைகளைச் சிந்திக்கவேண்டும். உள்ளபடியே சுவாமி நமக்குச் செய்துவரும்

எண்ணிறந்த உபகாரங்களைப் பார்க்கிலும் அவர் திருக் கருணைத் தயாளத்துக்குமுன் அதிகமாய் நம்மைத் தாழ்த்தக்கூடுமானது ஒன்றுமில்லை. இப்படியே நமது எண்ணிறந்த பாவங்களைப் பார்க்கிலுந் தேவ நீதிக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தக்கூடுமானதும் ஒன்றுமில்லை. நமக்கு அவர் செய்ததையும் அவருக்கு விரோதமாய் நாம் செய்ததையும் யோசித்துப்பார்க்கக்கடவோம். நமது பாவங்களை எல்லாம் ஒவ்வொன்றாய் நாம் யோசிப்பதுபோல அவர் வரப்பிரதாசங்களையும் ஒவ்வொன்றாய் யோசித்துப் பார்ப்போம். நம்மிடத்திலுள்ள நன்மைகள் நமமால் வந்ததில்லை என்கிற சத்தியம் நமது புத்தியில் ஸ்திரமாய் இருக்குமேயாகில் சுவாமி இவ்வளவு தயையோடு நமக்கு ஏராளமாய்க் கொடுத்த நன்மைகளை அறிவதால் நமக்கு அகங்காரம் உண்டாகுமென்று பயப்பட இடமில்லை. கோவேறு கழுதைகள் மன்னவான்களுடைய விலை உயர்ந்த நேத்தியான தட்டுமுட்டுகளைச் சுமந்துபோனபோதிலும் எப்பொழுதும் அவைகள் கழுதைகளே அல்லாமல் வேறலல. அப்போஸ்தலர் சொல்லுமாப்போல் நாம் அடையாத நன்மை நம்மிடத்திலேது. இத்தன்மையாய் நம்மிடத்தில் உள்ளதெல்லாஞ் சுவாமியிடத்தில் பெற்றிருந்தால் அவரிடத்திற் பெறாததுபோல் ஏன் மகிமை பாராட்டிக்கொள்ளுகிறோம். இதற்கு விரோதமாய்ச் சுவாமி நமக்குச் செய்த நன்மைகளை நன்றாய் யோசிப்பதால் அதிக தாழ்ச்சியுள்ளவர்களாக வேண்டி இருக்கிறது. அதேனெனில் நாம் அடைந்த நன்மைகளை அறிவதால் நன்றியறிந்தவர்களாய் இருப்போம். ஆனால் சுவாமி நமக்குச் செய்த வரங்களைப் பார்க்கையில் அதினால் நமது இருதயத்தில் வீண் சிலாக்கியம் உண்டாகுமேயாகில் இதனை அழிக்க நமது நன்றிகெட்டதனங் குற்றங்

குறை நிர்ப்பாக்கியங்களை யோசிப்பதே பரம அவுஷ தமாம். சர்வேசுரன் நம்மோடில்லாத காலத்தில் நாஞ் செய்ததை யோசித்துப் பார்க்கும்போது அவர் நம்மோடிருக்குங் காலையில் நாம் செய்வது நம்மால் அல்லவென்று கண்டுகொள்வோம். நமக்குக் கிடைத் திருக்கும் நன்மையையோ பிரியமாய் அநுபவித்து அதினால் சந்தோஷமடைவோம். ஆனால் சுவாமியே இதற்குக் காரணமாதலால் அவரையே தோத்திரித் துப் புகழ்வோம்.

இத்தன்மையாகத்தான் அர்ச். கன்னிமரியம்மாள் சர்வேசுரன் தன்னிடத்தில் மகத்தான காரியங்களைச் செய்தாரென்று வெளிப்படுத்துகின்றாள். தன்னைத் தாழ்த்துவதற்குஞ் சுவாமியைத் தோத்திரிப்பதற்கு மே என் ஆத்துமம் ஆண்டவரை வணங்கித் தோத்தி ரம் பண்ணுகிறது. அதேனெனில் வல்லபமிக்கவர் தம்முடைய பெருமையுள்ளதுகளை என்னிடத்திற் செய்தருளினார் என்கிறாள்.

பலமுறை நாம் ஒன்றுமில்லாதவர்கள் என்றும் மகா இழிவுக்குரிய நிசித வஸ்துவென்றுஞ் சொல்லு கிறோம். ஆனால் நம்மைக் குறித்து நாம் சொல்லும் இழிவான வார்த்தைகளையே வேறொருவர் நமதுபே ரில் சொல்லி நம்மை இப்படிப்பட்டவர்கள் என்று சொல்லுவார்களேயாகில் கடுங்கோபங் கொள்வோம். இத்தன்மையாய் நாம் நடந்துகொள்ளும்போது தங் கள் பின்னால் ஓடிவந்து தங்களைத் தேடும்பொருட்டு ஓட்டங்காட்டி. ஒளிந்துகொள்ளுகிறவர்களுக்குச் சமானராயிருக்கிறோம். முதன்மையான இடத்தில் மகிமையோடு வரும்படி கடைசி இடத்தைப் பிரிய மாய் ஏற்றுக்கொள்வதுபோலக் காட்டுகின்றோம். மெய்யான தாழ்ச்சி தன்னைக் காட்டுகிறதுமில்லை. தா ழ்ச்சியான வார்த்தைகளைச் சொல்லுகிறதுமில்லை. ஏனெனில் மற்றப் புண்ணியங்களை எல்லாம் ஒளித்து

வைக்கத் தாழ்ச்சியானது தேடுகிறதுமன்றி விசேஷமாய் இன்னந் தன்னைத்தானே ஒளித்துக்கொள்ள விரும்பும். பொய்சொல்லி வேஷம்போடவும் பிறருக்குத் துர்மாதிரிகை காட்டவும் உத்தரவிருந்தால் இவைகளால் தன்னை மறைத்துக்கொண்டு முழுதும் ஒருவருந் தன்னை அறியாமற் காலந் தள்ளும்படியாய் மகா ஆங்காரா வீண் சிலாக்கிய கிருத்தியங்களைச் செய்யும். ஆதலால் பிரிய சகோதரமே, இதுவிஷயத்தில் நான் சொல்லும் புத்திமதிகளைக் கேள். தாழ்ச்சியான வார்த்தைகளைச் சொல்லாமல் இருப்போம். சொன்னால் வெளியில் சொல்வதற்கு ஒத்ததுபோல் இருதயத்திலும் உண்மையாகவே நினைத்துச் சொல்லக்கடவோம். நமது இருதயத்தைத் தாழ்த்திக்கொண்டே நமது கண்களையுந் தாழ்த்துவோம். நல்ல மனதுடன் கடைசிப்படியில் இருக்க மனம் இராவிட்டால் கடைசிப்படியில் இருக்க மனதுள்ளவர்களைப்போல் காட்டிக்கொள்ளாமல் இருக்கக்கடவோம். இதுவிஷயத்தில் இது பொதுவான ஒழுங்காம். ஆனால் ஒரு காரியம் இதில் அறியவேண்டும். நாம் இன்னருக்குக் கொடுக்கும் மேலானவிடத்தை அவர்கள் அங்கீகரித்துக்கொள்ளமாட்டார்கள் என்று நிச்சமாய் அறிந்து உபசார மரியாதைக்காக முதன்மையான இடத்தைச் சிலவிசை அவர்களுக்குக் கொடுப்பதுண்டு. இப்படி செய்வது கள்ள தாழ்ச்சிக்கபடென்று சொல்லப்படாது. ஏனெனில் அத்தன்மையாய் மேலான இடத்தைக் கொடுப்பதால் அவர்களைக் கொஞ்சங் கனப்படுத்துகின்றோம். முழுதும் அவர்களை மகிமைப்படுத்தக் கூடாதபடியால் அப்படி கொஞ்சம் மகிமைபடுத்துவதில் தின்மை ஒன்றுமில்லை, மகிமை சங்கைக்கு அடையாளமாய் இவ்விதஞ் செய்வது வழக்கம். சிற்சில உபசார வார்த்தைகளைக் குறித்தும் இத்தன்மையாகவே சொல்லலாம். இவை

கள் மெய்யாகவே உண்மையான வார்த்தைகளாகத் தோன்று. ஆயினும் இந்த உபசார வார்த்தைகளைச் சொல்லுகிறவனுக்குத் தான் உபசரிப்பவனை மெய்யாகவே சங்கித்து மரியாதை பண்ணவேண்டுமென்கிற கருத்திருக்குமாகில் இவன் சொல்லும் வார்த்தைகள் வேண்டிய வரையில் உண்மையானவை எனத்தகும், ஏனெனில் இந்த வார்த்தைகள் நமது கருத்தையும் நினைப்பையுங் கொஞ்சம் அதிகரித்துக் காட்டியபோதிலும் உலக வழக்கப்படி அவைகளைச் சொல்வதில் தின்மையொன்றுமில்லை. அப்படியாயினுங் கபடற்ற தனத்தையும் உண்மையையும் எதுகாரியத்திலும் எந்த இடத்திலும் நாம் அநுசரிக்கும்படி நம் மாற் கூடியவரையில் நமது வார்த்தைகள் நமது எண்ணத்துக்குங் கருத்துக்கும் ஒத்திருக்கப் பார்க்க வேண்டும். மெய்யான தாழ்ச்சியுள்ளவனைப் பார்த்து இவன் வெகு பேதை, ஒன்றுக்கும் உதவாத அற்ப மனிதனென்று ஒருவன் சொன்னால் வெகு பிரியமாய் இதை ஏற்றுக்கொள்வான். ஆனால் தான் தானே தன்னைக்குறித்து இவ்வாறு பேச ஆசியான். சிலவிசை இப்படி தனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்களென்று இவன் அறிந்தால் தடுத்து ஒன்றுஞ் சொல்லாமல் மற்றவர்கள் சொல்வது சரியென்று நல்லமனதோடு அங்கீகரித்துக்கொள்வான். ஏனெனில் இவன் தன்னைத்தானே மெய்யாகவே இப்படி எண்ணிவருவதால் தன் கருத்துக்கொத்தபடி மற்றவர்கள் பேசுவதைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வான்.

அநேகர் நாங்கள் வெகு பழுதுள்ளவர்களாய் இருப்பதால் தியானம் பண்ணப் பாத்திரவான்களல்லவென்று புண்ணியத்தில் ஸ்திரப்பட்டவர்கள் தியானஞ் செய்யட்டும் என்பார்கள். வேறு சிலர் தாங்கள் அவ்வளவு பரிசுத்தவான்களாய் இராதபடியால் அடிக்கடி நன்மை வாங்கத் துணிகிறதில்லை என்

பார். சிலரோவெனில் தாங்கள் வெகு நிர்ப்பாக்கிய பலவீனராய் இருப்பதால் தாங்களும் பத்தியுள்ளவர்களாக இருக்க விரும்புவார்களேயாகில் தங்களால் மெய்யான பத்திக்கு எங்கே நிந்தை வரப்போகுதோவென்று பயப்படுகிறோம் என்பார்கள். இன்னஞ் சிலர் தங்களுக்கு இருக்குந் திறமை சாமர்த்தியத்தைச் சர்வேசுரன் ஊழியத்திலும் பிறர் ஊழியத்திலும் உதவிக்கொள்ளமாட்டோம் என்பார்கள். எனெனில் இவர்கள் தங்கள் நிர்ப்பாக்கியத்தை நன்றாய் அறிந்திருப்பதால் தங்களால் வரக்கூடுமான நன்மையைப்பற்றித் தங்களுக்கு எங்கே ஆங்காரம் வரப்போகுதோவென்றும் மற்றவர்களுக்கு வழிகாட்டுவதினுல் தாங்களே எங்கே வழிதப்பித் தவ்றிப் போகிறோமோ என்றும் பயப்படுகிறோமென்பார்கள் இவைகளெல்லாங் கபடுஞ் சூதுமல்லாது வேறல்ல. இப்படிப்பட்டவர்கள் மெய்யாகவே தாழ்ச்சியுள்ளவர்களல்லாததுமன்றித் துர்க்குணமுடையோரென்கலாம். எனெனில் இவர்கள் இத்தன்மையாய்ப் பேசுவதால் சர்வேசுரனுடைய கிருத்தியங்களையே இகழ்கிறார்கள் என்னத்தகும். தங்கள் சுய எண்ணத்தின் மட்டிலும் அசட்டை சோம்பேறித்தனத்தின்பேரிலும் இவர்களுக்குள்ள பக்ஷத்தைத் தாழ்ச்சியென்னும் போர்வையால் மூடத் தேடுகிறார்கள்.

இசாயியென்ற தீர்க்கதரிசி தேவ பத்தி இழந்த அக்காசென்னும் இராயனை நோக்கி மேலே வானத்திலென்கிலுங் கீழே பாதாளத்திலென்கிலுஞ் சர்வேசுரனைப் பார்த்து ஒரு புதுமையைக் கேள் என்றார். இதற்கு இவன் மறுமொழியாக் இப்படி புதுமையைக் கேளேன், ஆண்டவனைச் சோதியேனென்றான். இதனால் இவனிடத்தில் எவ்வளவு கெட்ட குணங் காண்கிறது. சுவாமிபேரில் வெகு சங்கையாய் இருப்பதாகக் காட்டுகிறான். தாழ்ச்சியின் கோலத்தில்

சர்வேசுரன்தாமே இவனுக்கு அளிக்கும் வரத்தை ஆசியாமல் தட்டிவிடுகிறான். ஆனால் சுவாமி நமக்கு ஏதாகிலுஞ் சனுச்செய்ய மனதாயிருக்கையில் அதை வேண்டாமென்பது ஆங்காரமல்லவா. சுவாமி நமக்கு ஏதாகிலும் வரமளிக்கையில் அதனைக் கைக்கொள்ள நமக்குக் கடனுண்டு. நம்மால் கூடியவரையில் துரிதமாய்ச் சுவாமியுடைய ஆசைக்குக் கீழ்ப்படிந்து அதின்படி செய்வது தாழ்ச்சியின் கடமை. இது இப்படி இருக்கையில் சுவாமியுடைய ஆசை என்னவெனில் நாம் பரிசுத்தவான்களாயிருந்து அவரோடு ஐக்கியப்பட்டு அவரை எவ்வளவு உத்தம விதமாய்க் கண்டுபாவிக்கக்கூடுமோ அப்படி கண்டு பாவிக்கவேண்டுமென்பதுதான். தன் பலத்தைத்தானே நம்புகிற ஆங்காரி ஒருகாரியத்தையுந் தொடங்கி நடத்தத் துணியாமலிருப்பது நியாயந்தான். ஆனால் தாழ்ச்சியுள்ளவன் தான் எவ்வளவுக்கு அதிக பலவீனனென்று எண்ணுகிறானோ அவ்வளவுக்கும் அதிக தைரியசாலியாய் இருப்பான் தான் ஒன்றும் இல்லாமையாயிருப்பதை அறிந்துகொள்ள இவனுக்கு அதிக துணிகரமுண்டாம். ஏனெனில் இவன் நம்பிக்கையெல்லாஞ் சர்வேசுரனிடத்திலன்றி வேறிடத்திலில்லை. சர்வேசுரன் நமது பலவீனத்தில்தான் தமது வல்லமையை விளங்கச்செய்து நமது நிர்ப்பாக்கியமென்னும் அஸ்திவாரத்தின் பேரில்தான் தமது தயாளத்தின் மகத்துவத்தைக் காட்டுகின்றார். ஆகலால் நாம் ஞான சீவியத்தில் வர்த்திக்க நமது ஆத்துமக்குருக்கள் தகுதியென்று சொல்வதையெல்லாந் தாழ்ச்சியோடும் நல்ல கருத்தோடுந் துடங்கிச் செய்யவேண்டும்.

தனக்குத் தெரியாததைத் தெரியுமென்றுநினைக்கிறது பெரும்மூடத்தனம். தனக்குத் தெரியாத காரியத்தில் சாஸ்திரியைப்போல் காட்ட விரும்புவது சயி

க்கக்கூடாத வீண் சிலாக்கியந்தான். நானேவெனில் எனக்குத் தெரிந்ததைக் குறித்துங் கெட்டிக்காரனாகக் காட்டிக்கொள்ளமாட்டேன். அறிந்ததை அறியாதவனாகவுங் காட்டமாட்டேன். பிறர் படிப்பினைக்கு அவசரமாயிருப்பதை மாத்திரமல்ல, இன்னம் அவர்களுக்குப் பிரயோசனமாய் ஆறுதலாய் இருப்பதையுங் கபடற்றவிதமாய்ப் பிறசிநேகக் கடமையை முன்னிட்டுச் சொல்லிக்காட்டுவேன். ஏனெனில் தாழ்ச்சியானது புண்ணியங்களைப் பத்திரமாய்க் காப்பாற்றும்பொருட்டு அவைகளைக் காண்பிக்காமல் மறைத்துவைத்திருக்கும். ஆயினும் பிறசிநேகக்கடமை நேரிடுமோ இவ்வழியாய் அந்தப் புண்ணியங்கள் வளர்ந்து தேட்டையாகும்படி பலமுறை அவைகள் வெளியிற் காணும்படி செய்யும். இது விஷயத்தில் தாழ்ச்சியானது தாமரைக்கொப்பாம். இவைகள் இரவில் இதழ்களைக் குவித்துக்கொள்ளும், சூரியனுதயத்திலோ மலரும். இத்தன்மையாகவே தாழ்ச்சியானது தன்னிடத்தில் எங்கெந்தப் புண்ணிய சாங்கோபாங்கம் இருக்கக்கூடுமோ அவையாவையும் மறைத்து ஒளித்துக்கொள்ளும். எப்போதாகிலும் இந்தப் புண்ணியங்கள் வெளியில் தோன்றுமேயாகில் பிறசிநேகக் கடமையைப்பற்றியே தோன்றும். ஏனெனில் இந்தப் புண்ணியம் மனுஷசுபாவத்துக்கு அடுத்ததாயிராமல் பரலோகத்துக்குரியதாயுந் திவ்வியமானதாகவும் மற்றப் புண்ணியங்களுக்கெல்லாம் மெய்யான சூரியன்போலும் இருப்பதால் இவைகள் எல்லாவற்றின்பேரிலும் எப்பொழுதும் இது அதிகாரமுள்ளதாயிருக்கவேண்டும். தாழ்ச்சியாற் பிறசிநேகத்துக்கு இடைஞ்சலிருந்தால் இந்தத் தாழ்ச்சியானது அபத்தமானதென்பதற்குச் சந்தேகமற்ற திஷ்டாந்தமாம்.

என்னைப் பயித்தியக்காரனாகவுங் காட்டிக்கொள்ள

மாட்டேன், ஞானியாகவுங் காட்டிக்கொள்ளமாட்டேன். ஏனெனில் ஞானியாக என்னைக் காட்டிக்கொள்ள வேண்டாமென்று தாழ்ச்சியானது கற்பிப்பதுபோற் பயித்தியக்காரனாகவுங் காட்டிக்கொள்ள வேண்டாமென்று கபடற்றதனமானது இயல்பாய்க் கற்பிக்கின்றது. வீண் சிலாக்கியந் தாழ்ச்சிக்கு ஒவ்வாமலிருப்பதுபோல் கபடு சூதுவாதானது உண்மையோடு பொருந்தாது. சுவாமிக்குப் பிரிய தாசர்களாகிய சிலர் தங்களைப் பயித்தியக்காரராகக் காட்டிக்கொண்டால் இவர்களைக் கண்டு அதிசயப்படவேண்டுமேயல்லாது கண்டுபாவிக்கக்கூடாது. ஏனெனில் இப்படி இவர்கள் செய்வதற்கு நூதன விசேஷ காரணங்கள் இருந்திருக்கும். இவர்களைக் கண்டுபாவித்து இவர்களைப்போலத் தானுஞ் செய்யலாமென்று ஒருவனுஞ் சொல்லப்போகாது. தாவீதென்பவர் மனக்களிப்பாய் வழக்கத்துக்கு விரோதமாய்ப் பெட்டகத்துக்கு முன் குதித்து ஆடிக்கொண்டுவந்தார். இது இராச மேட்டிமைக்கு குறைவாகக் காணப்பட்டாலும் பயித்தியக்காரனென்று தன்னை எண்ணும்படி இவர் இவ்விதஞ் செய்தவரல்ல, ஆனால் இவர் இருதயத்திலிருந்த அணைகடந்த சந்தோஷ அக்களிப்புக்குத் திருத்தி வருவிக்கவேமக்கா கபடற்றவிதமாய் இப்படி ஆடினார். இவர் பெண்சாதி மிக்கோலென்பவள் இவர் இத்தன்மையாய் ஆடினதின்மட்டில் நகைத்துப் பரியாசம் பண்ணினாள். இதை இவர் கவனியாமல் தமது மன அக்களிப்பு சந்தோஷத்தைப் பல ஆட்டங்களாற் காட்டித் தமது சுவாமிக்காகக் கொஞ்சம் வெட்கத்துக்குள்ளாவது பெரிய மகிமையென்று காண்பித்தார். இதைக்குறித்து நான் உனக்குச் சொல்வது என்னவெனில் கிரமமான பல பத்திக் கிருத்தியங்களை நீ செய்கையில் புத்தியில்லாததனமாய் நீச காரியங்க

னைச் செய்கிறாயென்று உன்பேரில் இழிவாய்ப் பேசக்கூடும். இதற்கு நீ காரணமாயிராவிட்டாலும் புறத்தியாரால் நீ தாழ்த்தப்படும்படி சமையங் கிடைத்தது பெரிய அதஷ்டமென்று நீ சந்தோஷப்படும்படி தாழ்ச்சியானது செய்யும்.

6-ம் அதிகாரம்.

தாழ்ச்சி நமது சொந்தத் தாழ்மையை நாம் ஆசிக்கச் செய்கிறதென்பதின்பேரில்.

பிரிய சகோதரமே, தாழ்ச்சியைக்குறித்து இன்னமும் அதிக விபரமாகப் பேசவேண்டியிருக்கிறது. எந்தக்காரியத்திலும் எங்கும் உன் சொந்தத் தாழ்மையை நீ நேசிக்கவேண்டும். ஆனால் சொந்தத் தாழ்மையை நேசிக்க வேண்டுமென்பதற்கு அர்த்தமென்னவென்று கேட்பாயாக்கும். தாழ்மையென்றால் தாழ்ச்சியென்றர்த்தமாம். தாழ்ச்சியென்றால் தாழ்மையென்றர்த்தமாம். இத்தன்மையாய்த் தேவமாதா, ஆண்டவர் தன் அடியாளுடைய தாழ்மையைப் பார்த்தபடியால் வருஞ் சந்ததிகளெல்லாந் தன்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லுகின்றாள். இதற்கு அர்த்தம் ஆண்டவர் இவள் தாழ்மையையும் ஒன்றுமில்லாமையையும் நீசத்தனத்தையும் தயவாய்ப் பார்த்து இவளை வரப்பிரசாத நன்மைகளால் நிரப்பக் கிருபைபுரிந்தாரென்பதாம். ஆகிலுந் தாழ்ச்சியென்னும் புண்ணியத்துக்குந் தாழ்மைக்கும் வித்தியாசமுண்டு. ஏனெனில் தாழ்மையென்பது நாம் அதை நினையாதிருந்தாலும் நம்மிடத்திலுள்ள அற்ப

தனம் நீசத்தனம் பலவீனமாம். ஆனால் தாழ்ச்சி யென்னும் புண்ணியமோ நம்முடைய தாழ்மையை மனவுச்சாயமாய் நாம் மெய்யாகவே அறிந்து உண ர்ந்திருப்பதேயாம். ஆதலால் இந்தத் தாழ்ச்சியின் மகத்துவம் எதில் அடங்கியிருக்கிறதெனில் தான் தாழ்மையுள்ளவனாயிருக்கிறேனென்று நன்றாய் அறி ந்துகொள்வதுமன்றி இன்னம் அந்தத் தாழ்மையை நேசித்து அதிற் பிரியங்கொள்வதில் அடங்கியிருக்கி றது. இவ்விதமாய் நமது தாழ்மையை மனது பொ ருந்தி ஆசிப்பது தைரியக் குறைச்சலினாலுமல்ல, பெருந்தன்மைக் குறைச்சலினாலுமல்ல, ஆனால் சுவா மிக்கு அதிக மகிமை வருவிக்கவும் நம்மைப் பார்க் கிலும் பிறனை அதிகமாய் எண்ணவுந்தான். பிரிய சகோதரமே, இவ்விதத் தாழ்ச்சியைத்தான் நீ சம்பா திக்கும்படி ஆசிக்கிறேன். இதை நன்றாய்க் கண்டுபி டிக்க நாம் அநுபவிக்குந் தின்மைகளில் சிலது தா ழ்மையுள்ளவைகளாகவுஞ் சிலது மகிமையுள்ளவை களாயும் இருக்கிறதென்று அறியவேண்டும். மகிமை யான தின்மைகளை வேண்டியவரையில் அநேகர் ஏற் றுக்கொள்வார்கள். ஆனால் தாழ்மையானவைகளை யோ ஒருவனும் அங்கீகரிக்கத் துணியான். வனவா சியொருவர் கிழிந்த வஸ்திரங்களைப் போர்த்திக்கொ ண்டு குளிர் நடுக்கம் பிடித்திருப்பதைப் பார்ப்பவர் கள் எல்லோரும் கிழிந்த அந்த வஸ்திரத்தைச் சங் கையாய்ப் பார்த்து இவர் படும் வருத்தத்தின்மட்டில் வெகு மனமிரக்கங் கொள்ளுவார்கள். ஆனால் எளிய தொழிலாளி அல்லது நாலுபேருக்கு எண்ணப்பட்ட ஒரு எளிய மனிதன் அல்லது ஏழை ஸ்திரீ இந்த அந்தஸ்திலிருந்தால். எல்லோரும் இதைப் பார்த்து நகைத்துப் பரிகாசம் செய்வார்கள். இதைக்கொ ண்டு எளிமைத்தனம் எப்படி தாழ்மையானதாயிரு க்கிறதென்று கண்டுபிடிக்கிறாய். ஒரு சந்நியாசி

தன் சிரேஷ்டருடைய கடின கண்டனைக்கும் ஓர் பிள்ளை தன் தகப்பனுடைய கண்டனைக்கும் பணிந்து அமைந்தால் அதை ஓறுத்தலென்றுங் கீழ்ப்படிதலென்றுஞ் சொல்வார்கள். ஆனால் ஓர் பிரபு அல்லது ஓர் காணைய ஸ்திரீ சுவாமியுடைய பட்சத்தைப் பற்றி இப்படிப்பட்ட கண்டனைகளுக்கு உள்ளானால் இவர்கள் இதனைப் பொறுமையாய் அநுபவிப்பது நீசத்தனம் அல்லது கோழைத்தனமென்பார். இன்னம் வேறேவிதமான தாழ்மையுண்டு. ஒரு மனுஷிக்குக் கையில் ஒரு புண்ணிருக்கும். அப்படிப்பட்ட புண்ணே வேறொருத்திக்கு முகத்திலிருக்கும். கையில் புண்ணுள்ளவளுக்கு ஒரு வருத்தமாத்திரம். ஆனால் முகத்திலுள்ளவளுக்கு வருத்தத்தோடு நிந்தையுந் தாழ்மையுங் கலந்திருக்கும். இத்தருணத்தில் என்ன செய்யவேண்டுமெனில் இந்த வருத்தத்தைப் பொறுமையாய் அநுபவித்து இதனை நேசிக்கவேண்டியதுமல்லாமல் இதனோடு சேர்ந்திருக்குந் தாழ்மையையுந் தாழ்ச்சியென்கிற புண்ணியத்தைக்கொண்டு நேசிக்கவேண்டும். மேலும் புண்ணியங்கள் சிலது தாழ்மையுள்ளவைகளாயுஞ் சிலது மகிமைக்குரியவைகளாயும் இருக்கின்றன. பொறுமை சிரவணந் தாழ்ச்சி கபடற்றதனமுதலிய புண்ணியங்களை வெகு நிசிதமாய் உலக மனிதர் எண்ணுவார்கள். இதற்கு விரோதமாய் விவேகஞ் சாமர்த்தியம் உதாரகுண முதலிய புண்ணியங்களை வெகு கௌரவத்துக்குரியதாய் எண்ணுவார்கள். இன்னம் ஓரே புண்ணியக் கிருத்தியங்களிற் சிலது நிந்தைக்குரியதாயுஞ் சிலது மகிமைக்குரியதாயும் இருக்கின்றன். பிட்சை கொடுப்பதும் நமக்குச் செய்யப்பட்ட நிந்தனைகளைப் பொறுப்பதும் இவ்விரண்டும் பிறசிநேகக் கிருத்தியங்களாயினும் முதற் கிருத்தியத்தை எல்லோரும் மகிமையாய்ப் பாவித்து மற்றொன்றை இழிவாய்ப் பார்ப்பார்

கள். ஆடிப் பாடிப் பேசவும் நன்றாய்ச் சாப்பட்டு சொகுசாய் உடுத்திக்கொள்ளவு மாத்திரந் தெரியுந் தீயோருடைய கூட்டத்தை விட்டு ஒரு தனவான் அல்லது மேன்குலஸ்திரீ எட்டி நின்றால் இவர்களை நகைத்துப் பரிகாசஞ்செய்வார்கள். இவர்களுடைய அடக்க மரியாதையைக் கள்ளப் பத்தி என்பார்கள். இந்த நிந்தையை நேசிப்பதுதான் தாழ்மையை நேசிப்பதென்று சொல்லப்படும். இன்னம் வேறேவித தாழ்மையுண்டு. வியாதிஸ்தர்களைச் சந்திக்கப் போகும்போது பெரியவர்கள் இஷ்டப்படி பிணிபிடித்த ஏழையொருவனைப் பராமரிக்கவேண்டியிருந்தால் உலக எண்ணப்படி அது தாழ்மையாம். அதைப்பற்றி அந்த த்தாழ்மையை ஆசிப்போம். வங்கிஷபதியான ஓர் பெரியமனுஷனைப் பராமரிக்கவேண்டியிருந்தால் ஞானமுடையவனுக்கு அதுவுந் தாழ்மைதான். ஏனெனில் அதில் அவ்வளவு புண்ணியப்பேறு அடங்கியிருக்கிறதில்லை. இந்தத் தாழ்மையையும் ஆசிப்போம். வெளியில் நடக்கும்போது வீதியில் விழுந்தால் அதினால் வரும் வருத்தமன்றி இன்னம் வெட்கத்துக்கிடமுண்டாம். இந்தத் தாழ்மையையும் நேசிக்கவேண்டும்.

பலமுறை நம்மிடத்திற் பல குறைகளிருக்கும். இவைகளால் நமக்கு வருந் தாழ்மையேயல்லாமல் வேறே தின்மை ஒன்றுமிராது. இந்தத் தாழ்மைவரும்பொருட்டு இப்படிப்பட்ட குற்றங் குறைகளை வேண்டுமென்று செய்யும்படி தாழ்ச்சியானது கற்பிக்கிறதில்லை. ஆனல் இப்படிப்பட்ட தப்பிதங்கள் நமக்கு நேரிடும்போது இதனால் கலங்காமலிருப்பது தாழ்ச்சியாம். இவ்விதமாய் அவிவேக ஆசாரக் குறைசசலுக்கு இடங்கொடாதபடிக்கு நாம் கவனிக்கவேண்டிய பல சந்தர்ப்பங்களுண்டு. ஆனல் இந்தச் சந்தர்ப்பங்கள் நேரிட்டால் அதினால் நமக்கு வருந் தாழ்

மையை ஆசித்துத் தாழ்ச்சியென்னும் புண்ணியத்தை அநுசரிப்பதற்காக நல்ல மனதோடு இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் இன்னங் கோபத்தினாலாகிலும் வேறே எந்த முகாந்தரத்தினாலாகிலுந் தகாத வார்த்தைகள் சொல்லும்படி நேரிட்டிருந்து அதனால் சுவாமிக்கும் புறத்தியாருக்கும் நிந்தனை வந்திருந்தால் இந்தத் தப்பிதத்துக்கு வெகு மனஸ்தாபப்பட்டு நம்மாற் கூடியவரையில் அதிக உத்தமமானவிதமாய் அதைப் பரிகரிக்கப் பிரயாசப்படவேண்டும். இத்தோடு வருந் தாழ்மையையும் பிரியமாய் ஏற்றுக்கொள்ளுவோம். இந்தத் தப்பிதமுந் தாழ்மையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியக்கூடுமாகில் பாவத்தை வெகுவாய் அருவருத்துத் தள்ளி அதனோடு வருந் தாழ்மையைத் தாழ்ச்சியோடு அங்கீகரித்துக் கொள்ளுவோம்.

தின்மையில் நின்று வருந் தாழ்மையை நாம் நேசித்தபோதிலும் இந்தத் தாழ்மையை வருவித்த தின்மையைக் கிரமமான வழிப்பாடுகளைக்கொண்டு தள்ளத் தேடவேண்டும். விசேஷமாய் இந்தத் தின்மையால் வேறே அநேக தொந்தரைக்கு இடமிருந்தால் அதை நீக்கப் பார்க்கவேண்டும். தாழ்மையை வருவிக்கும் ஏதாகிலும் ஒரு புண் அல்லது காயம் முகத்திலிருந்தால் அதைச் சொஸ்தப்படுத்தத் தேடுவோம், ஆயினும் அதனால் வருந் தாழ்மையை விட்டுவிடாமலிருப்போம். ஒருவருக்குங் குறைச்சலில்லாத ஏதாகிலுந் தப்பிதத்தை நாம் செய்தால் அந்தக் குற்றத்தை நாம் செய்யாததுபோற் பேசாமலிருப்போம். ஏனெனில் நாம் செய்தது தப்பிதமாயிருந்தபோதிலும் அதினால் வெட்கமன்றி வேறே தின்மை வராதபடியால் அதினால் வருந் தாழ்மைக்குத் தப்பித்துக்கொள்ள மாத்திரமே அதைக்குறித்துச் சாக்குப்போக்குச் சொல்ல இடமிருக்கும். கவனமற்றதனத்தினால் அல்லது

மூடத்தனத்தினால் யாதாமொருவருக்கு வருத்தம்வருவித்திருந்தால் அல்லது துர்மாதிரிகை காட்டியிருந்தால் நாம் வருவித்த தின்மை எப்பொழுதும் நீளித்திருப்பதாலும் அதை நீக்கிவிடப் பிறர்சிநேகம் உடன்படுத்துவதாலும் உண்மையான நியாயங்களைச் சொல்லி நமது குற்றத்தைப் பரிகரிப்போம். கடைசியாய் நமது கீர்த்தி புறத்தியார் நன்மைக்கு அவசரமாயிருக்கையில் நமக்கு நேரிடக்கூடுமான தாழ்மையை நாம் தள்ள வழிதேடும்படி பலமுறை பிறசிநேகத்தைப்பற்றி நமக்குக் கடமையுண்டு. ஆனால் இத்தருணத்திற் பிறருக்குத் துர்மாதிரிகை வராதபடிக்கு அவர்கள் கண்களுக்கு முன்பாக நமது தாழ்மையை நீக்கத் தேடுகையில் அவர்கள் நன்மாதிரிக்காக அந்தத் தாழ்மையை நமது இருதயத்தில் ஒளித்து மறைத்துவைக்கவேண்டும்.

இதன்பின் பிரிய சகோதரமே, மிகவும் உத்தமமான தாழ்மை என்னவென்று அறிய விரும்புவாயேயாகில் சடுதிப்போராய் நமக்கு நேரிடுந் தாழ்மைகள் அல்லது நமது அந்தஸ்தோடு சேர்ந்துவருந் தாழ்மைகள்தான் நமது ஆத்துமத்துக்கு மிகுந்த பிரயோசன முள்ளவைகளாயுஞ் சுவாமிக்கு மிகவும் பிரியமானவைகளாயும் இருக்கிறதென்று வெளியரங்கமாய்ச் சொல்லலாம். ஏனெனில் இந்தத் தாழ்மைகள் நம்மால் நமக்கு வருகிறதில்லை. ஆனால் சுவாமி கையினின்று வருகிறது. நாமாய்த் தெரிந்துகொள்ளுந் தாழ்மையைப்பார்க்கிலுஞ் சுவாமி அனுப்புவது அதிக உத்தமமென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் இப்படிப்பட்ட தாழ்மைகளைத் தெரிந்துகொள்ளும்போது பெரிய தாழ்மைகள் அதிக உத்தமமானவைகளாதலால் அவைகளைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். அதிகப் பெரிதானவைகளாய் எண்ணப்படுந் தாழ்மைகள் என்னவெனில், நமது நாட்டங்க

ளுக்கு அதிக விரோதமானவைகள்தான், ஆனால் நமது அந்தஸ்துக்கு ஒத்தவைகளாய் இருக்கவேண்டும். மேலும் இதில் ஒரு காரியம் அறியவேண்டும். நமது சொந்த இஷ்டத்தின்படி நாம் தெரிந்துகொள்ளும்போதுதான் எல்லாங் கெட்டுப்போவதுமன்றி வெறக்குறைய நமது புண்ணியங்களெல்லாம் பலனற்றதாகின்றன. தீயோர்களது கூடாரங்களில் வசிப்பதைப்பார்க்கிலும் என்னாண்டவராகிய சர்வேசுரன் வீடுதியில் தாழ்மையாயிருப்பதையே அதிகமாய்த் தெரிந்துகொண்டேனென்று தீர்க்கதரிசியாகிய தாவீதரசனோடு நாமுஞ் சொல்வதற்கான வரப்பிரசாதத்தை நமக்கு ஆர் கொடுக்கக்கூடும். பிரிய சகோதரமே, கெட்டுப்போன நமது சுபாவத்தை மேன்மைப்படுத்துவதற்காகத் தமது சீவியத்திலும் மரணத்திலும் மனிதர் கண்களுக்கு அவமானமாகவுஞ் சகல சாதி சனங்களுக்கு இழிவாகவுமிருந்த நமது இரக்ஷகரேயல்லாமல் வேறொருவரும் அவ்வரத்தை நமக்குக் கொடுக்கக்கூடாது. நான் இதுவரையில் சொன்ன காரியங்களில் அநேகம் பார்த்தமாத்திரத்தில் உனக்குக் கடுமையாய்த் தோன்றும். ஆனால் நான் சொல்வதை நம்பு. இவைகளை நீ அநுசரிக்கும்போது சர்க்கரைத் தேனைப்பார்க்கிலும் அதிக இன்பமாயிருக்கும்.

7-ம் அதிகாரம்.

தாழ்ச்சியை அநுசரிக்கையில் நமது கீர்த்தியை எப்படி காப்பாற்றவேண்டும் என்பதின்பேரில்.

வழக்கமாய் மனிதர்கள் நாடோடியான புண்ணியத்தைப் புகழ்ந்து சங்கித்து மகிமைப்படுத்துகிறதில்லை. ஆனால் அருமையான சிறந்த புண்ணியத்தைப் புகழ்ந்து கொண்டாடுவது வழக்கம். ஏனெனில் நாம் ஒருவனைப் புகழும்போது அவன் மேன்மை மகத்துவத்தை எல்லோரும் மதித்துக் கொண்டாடும்படி விரும்புகின்றோம். நாம் ஒருவனைச் சங்கிக்கையில் நாம் தாமே அவனைக் கனமாய் மதிக்கிறோமென்று காண்பிக்கின்றோம். மகிமையென்பது என்னவெனில் நாம் ஒருவனைப் புகழ்ந்து சங்கிக்கும்போது அவனுக்கு வருங் கீர்த்தியே யல்லாமல் வேறல்ல. இத்தன்மையாய் நன்மையானது ஓர் முடிபோலவும் ஸ்துதி சங்கைகள் அதிற் பதித்திருக்கும் முத்து வயிர மணிபோலவும் இருக்கின்றன. ஆனால் நமது மட்டில் நல்ல எண்ணமுள்ளவர்களாய் மற்றவர்களுக்கு மேலாய் மேன்பட்டுப்போகவேண்டுமென்று எண்ணங்கொள்வது தாழ்ச்சிக்கு ஒவ்வாததாயிருப்பது போலவே மேன்மை திறமைக்குமாத்திரம் வரவேண்டிய ஸ்துதி சங்கை மகிமையை ஆசித்துத் தேடுவதுந் தாழ்ச்சிக்கு ஒவ்வாது. ஆகிலும் ஞானியானவர் சொல்லும் புத்திமதியின்படி நமது கீர்த்தியின்மட்டிலுங் கவனங்கொள்ளவேண்டும். ஏனெனில் கீர்த்தியானது மகத்துவ மேன்மையின்பேரில் ஊன்றியிருக்கும் வெறும் எண்ணமாத்திரமல்ல, ஆனால் நமது

நல்ல நடத்தை நாணயத்தின்பேரில் ஊன்றியிருக்கும் மெய்யான நன்மையாம். இதை நாம் அறிந்து காப்பாற்றத் தேடுவதில் தாழ்ச்சிக்கு இடைஞ்சல் ஒன்றுமில்லை. கீர்த்தியானது பிறசிநேகத்துக்கு உபயோகமாயிராவிட்டால் இந்தக் கீர்த்தியைத் தாழ்ச்சியானது தேடாமல் வெறுத்துத் தள்ளுமென்பது உண்மை. ஆனால் இந்தக் கீர்த்தி மனுஷர் கூட்டத்துக்குவேண்டிய அஸ்திவாரங்களில் ஒன்றாயிருப்பதால் இதில்லாமற் பொதுப்பிரயோசனத்துக்கு உபயோகமற்றவர்களாய் இருப்பதுமல்லாமல் இன்னம் நமது கெட்ட பேரால் அதற்குத் துர்மாதிரிகையாய்க் கேடாயிருக்கக்கூடும். ஆதலால் நமது கீர்த்தியை நாம் ஆசித்துப் பத்திரமாய் அதைக் காப்பாற்றும்படி பிறசிநேகங் கற்பிப்பதுமன்றித் தாழ்ச்சியும் இவ்விதமே செய்யவேண்டுமென்று படிப்பிக்கிறது.

இதுவுமன்றி மரங்களிலிருக்கும் இலைகள் தம்மிலே வெகு உயர்ந்தவைகளாயிராவிட்டாலும் அந்த மரங்களுக்கு இவைகள் அழகாயிருப்பதுடன் அதின் கனிகளைப் பத்திரமாய்க் காப்பாற்ற உதவும். இத்தன்மையாகவே நல்ல பேர் கீர்த்தியானது தன்னிலே வெகுவாய் ஆசிக்கவேண்டியதாய் இராவிட்டாலும் நமக்கு வெகு பிரயோசனமாயிருக்கிறது. நமது வாழ்நாட்களுக்கு இது ஓர் ஆபரணம்போல் இருப்பதுமல்லாமல் நமது புண்ணியங்களைக் காப்பாற்றவும் விசேஷமாய் அந்தப் புண்ணியங்கள் இன்னம் பலவீனமுள்ளவைகளாயிருக்கும்போது அதற்கு உதவியாகவுமிருக்கும். நமது கீர்த்தியைக் காப்பற்றவேண்டுமென்கிறதும் நம்மை மற்றவர்கள் மதிப்பதற்கு ஒத்தவர்களாயிருக்க வேண்டுமென்கிறதுமான கடமையானது நமது சுபாவ அசமந்தத்தனத்துக்கு ஓர் பலத்த தூண்டுகோலாம். ஆதலால் பிரிய சகோதரமே, நமது எல்லாக் கிருத்தியங்களுக்கும் அதிபதி

கர்த்தராகிய சர்வேசுரனுக்கு நமது புண்ணியங்கள் பிரியமாயிருப்பதால் அவைகளைக் காப்பாற்றக்கடவோம். ஆனால் நெடுநாள் பல கனிகளைக் காப்பாற்ற மனதுள்ளவர்கள் சர்க்கரையில் அவைகளை ஊற வைப்பதுமல்லாமல் இன்னம் அவைகளைக் காப்பாற்றுகிறதற்குத் தகுந்த பாண்டங்களில் போட்டுவைப்பார்கள். இத்தன்மையாகவே தேவசிநேகம் விசேஷமாய் நமது புண்ணியங்களையெல்லாங் காப்பாற்ற வேண்டியிருந்தபோதிலும் இன்னம் நமது கீர்த்தியை இதற்குத் தகுந்த உதவியாக வைத்துக்கொள்ளலாம் என்பதற்குச் சமுசயமில்லை.

ஆகிலும் நமக்கு வரவேண்டிய சங்கை மரியாதையின்பேரில் மிஞ்சின ஆசைகொண்டு அதுவிஷயத்தில் ஏதாகிலுங் குறை காணும்போது மனத்தாங்கல் கொள்ளக்கூடாது. ஏனெனில் தங்கள் கீர்த்தியின் மட்டில் இவ்வளவு தோற்றமுள்ளவர்களாய் இருப்பவர்கள் மகா சொற்ப வியாதிகளுக்குப் பலத்த அவுஷதஞ் சாப்பிடும் மனிதர்களுக்கு ஒத்தவர்களாவார்கள். இப்படி தங்கள் சவுக்கியத்தைக் காப்பாற்றுகிறதாய் நினைத்து அதை முழுதுங் கெடுத்து விடுவார்கள். தங்கள் கீர்த்தியை இவ்வளவு அருமைமையாய்க் காப்பாற்ற விரும்பி முழுதும் அதை இழக்கிறார்கள். ஏனெனில் இவர்கள் தங்கள் மகிமையின் மட்டில் இவ்வளவு தோற்றமுள்ளவர்களாயிருப்பதால் விபரீதக்குணமுள்ளவர்களாய் எல்லோருக்குஞ் சகிக்கக்கூடாதவர்களாகிறார்கள். இதனால் பல கோள் குண்டணிகளுக்கும் உள்ளாகிறார்கள். நமக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்கள்மட்டில் வற்மங் கொண்டு தர்க்கித்துப் பழிவாங்கத் தேடுவதைப்பார்க்கிலும் அவைகளைப் பாராததுபோல் விட்டுவிடுவது அதிகப் பிரயோசனமான அவுஷதமாகும். இப்படி நாம் அவைகளைக் கவனித்துப் பார்க்காதபோது

தானாய் அவைகள் மறைந்துபோம். இதற்கு விரோதமாய் இதின்மட்டில் கோபங்கொண்டு வருத்தப்பட்டால் இவைகளெல்லாம் மெய்யென்று ஒத்துக்கொள்வதுபோலாகும். முதலைக்குப் பயப்படுகிறவர்களைத்தான் முதலை பிடிக்கிறதென்று சொல்லுவார். இத்தன்மையாகவே நானுஞ் சொல்லுகிறதென்னவெனில் கோள் குண்டணியின்மட்டிற் கலக்கங்கொண்டு அதனால் வருத்தப்படுகிறவர்களுக்குத்தான் கோள் குண்டணி கேடாயிருக்கிறது."

தன் கீர்த்திக்கு எங்கே நஷ்டம் வரப்போகுதோவென்று மிதமிஞ்சிப் பயப்படுகிறவன் தன் நடத்தை மெய்யாகவே அவ்வளவு உத்தமமானதாய் இராமையால் தன் கீர்த்தி எங்கே போய்விடுதோவென்று நியாயத்தோடு பயப்படுகிறதாகக் காணப்படும். பெரிய நதிகளின்பேரில் மரப் பாலங்கள் இருந்தால் அவைகளுக்குச் சமீபத்தில் இருக்கும் பட்டணத்தார் சொற்ப வெள்ளத்திலு முதலாய் அந்தப் பாலங்கள் எங்கே முறிந்துபோகுதோ என்று பயப்படுவார்கள். ஆனால் கல்லால் உறுதியாய்க் கட்டிய பாலங்களுள்ள பட்டணத்தார் பெரும் வெள்ளத்தில்மாத்திரங் கொஞ்சம் அஞ்சுவார்கள். இப்படி கிறீஸ்துவர்களுக்கடுத்த புண்ணியங்களில் ஸ்திரமாய் ஊன்றியிருக்குஞ் சான்றோர் தீயோருடைய நாக்கினால் உண்டாகும் அணைகடந்த வெள்ளத்தை வழக்கமாய்ப் பிறக்கணித்துப் பார்ப்பார்கள். ஆனால் புண்ணியத்தில் பலவீனரானவர்கள் அற்ப காரியங்களுக்குங் கலங்கித் தவிப்பார்கள். மெய்யாகவே, பிரிய சகோதரமே, எல்லோருந் தன்னை மதிக்கவேண்டுமென்று விரும்புகிறவன் பலமுறை எல்லோராலும் நிந்திக்கப்படுகிறான். தங்கள் துர்க்குணங்களால் மெய்யாகவே நிந்தைக்குரியவர்களான நீச மனிதர்கள் முதலாய்த் தன்னைச் சங்கித்துக் கொண்டாடவேண்டு

மென்று விரும்புகிறவன் தன் மகிமைக் கீர்த்தியைக் காப்பாற்ற அபாத்திரனுயிருக்கிறுன்.

மெய்யான கீர்த்தியானது புண்ணியம் எங்கே இருக்கிறதென்று நாலுபேர் அறியச் செய்யும் அடையாளம்போலிருக்கிறது. ஆதலால் எந்தக் காரியத்திலும் எந்தவிடத்திலும் புண்ணியத்தையே மேலாகத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆதலால் நீ பத்தியாய்ச் சீவிப்பதினுல் உன் பத்தி கள்ளப்பத்தியென்று சொன்னுலும் அல்லது உனக்குச் செய்யப்பட்ட நிந்தையை நீ பொறுத்துக்கொண்டபடியினுலே உன்னைத் தைரியமற்ற கோழையென்று சொன்னுலும் இதையெல்லாம் ஒரு விஷயமாகப் பாராட்டாதே. ஏனெனில் ஒன்றுமறியாத இழிவுக்குரிய அற்ப மனிதர்கள்தான் இவ்விதத் தீர்மானஞ் செய்வது வழக்கம். இதைப்பற்றி இப்படிப்பட்டவர்கள் சனுவு உனக்கு இருக்கும்படியாகவும் உன் பேருக்கு நஷ்டம் வராதபடிக்கும் சன்மார்க்கத்தையும் புண்ணியத்தையும் விட்டுவிடலாகாது. எப்பொழுதும் இலைகளை விட்டு விட்டுக் கனிகளைமாத்திரந் தெரிந்துகொள்ளக் கடவோம், வெளியிற் காணப்படுந் தோற்றத்துக்குரிய நன்மைகளையெல்லாம் விட்டு அந்தரங்க ஞான நன்மைகளைமாத்திரந் தெரிந்துகொள்வோம். நமது கீர்த்தியை நாம் தேடவேண்டும் என்பது மெய். ஆனுல் அதுதான் கெதியென்றுற்போல் அதையே நாடியிருக்கக்கூடாது. நல்லவர்கள் கண்களுக்கு நாம் நல்லவர்களாயிருக்கவேண்டி இருப்பதுபோல் கெட்டவர்கள் கண்களுக்கும் பிரியப்பட்டிருக்கத் தேடக் கூடாது. மனிதனுக்குத் தாடியும் பெண்பிள்ளைக்குக் கூந்தலும் ஆபரணமாம், மோவாய்க்கட்டை மயிரையுந் தலை மயிரையும் பிடுங்கிவிட்டால் மறுபடி எளிதாய் முளையாது. ஆனுல் அவைகளை வெட்டி மாத்திரம் விட்டுவிட்டாற் கொஞ்சத்துக்குள் அதிகப்

பலமாய் வளர்ந்து அதிக அடர்த்தியாகும். இத்தன்மையாகவே தாவீதென்பவர் சொல்வதுபோல் மகா கூர்மையான சவரக்கத்திபோலிருக்கும் கோள் குண்டணிக்காரர்களது நாக்கால் கீர்த்தியானது வெட்டப்பட்டும் முழுதுந்தானே சிரைக்கப்பட்டும் இருந்தபோதிலும் அதினால் கலங்கக்கூடாது. ஏனெனில் கொஞ்சத்துக்குள் அது மறுபடியும் முளைத்து முன்னிருந்ததவ்வளவு அழகாயிருப்பதுமன்றி இன்னம் அதிக உறுதியாயிருக்கும். ஆனால் நமது துர்க்குணங் கோழைத்தனங் கெட்ட நடத்தையால் நமது கீர்த்தியை இழந்து விடுவோமேயாகில் மறுபடியும் அது எப்போதாகிலுந் திரும்பிவருவது மகா கஷ்டம். ஏனெனில் நமது கெட்ட நடத்தையால் நமது கீர்த்தியின் வேர்தானே முழுதும் அறுபட்டுப்போகிறது. ஆனால் நமது கீர்த்தியின் வேராகிய தயை நாணயம் நம்மிடத்தில் குடிகொண்டிருக்குந்தனையும் இதற்கு வரவேண்டிய சங்கை மகிமை எப்பொழுதும் மறுபடியும் நமக்கு வரக்கூடும்.

வீண் சம்பாஷணையினாலும் பிரயோசனமற்ற சிநேகிதர்கள் கூட்டத்திற் சேர்ந்திருப்பதாலும் வீணை விளையாட்டுக்கு இடங்கொடுப்பதாலும் நமது கீர்த்திக்குப் பழுது வருமேயாகில் இவைகளையெல்லாம் விட்டுவிடவேண்டும். ஏனெனில் இவ்வித வீணை திருப்தி சந்தோஷத்தைப் பார்க்கிலுங் கீர்த்தியானது அதிக விலையுயர்ந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் நமது பத்திக் கிருத்தியங்களைப்பற்றியாகிலும் புண்ணியத்தில் நாம் நாளுக்குநாள் அதிகரித்து நித்திய நன்மையை அடையப் பிரயாசப்படும்போதாகிலும் நமதுபேரில் முறைப்பாடிட்டு வீணய்க் கண்டித்துக் கோள் குண்டணி பேசுகையில் பழமொழி சொல்வதுபோல் சூரியனைப்பார்த்துக் குலைக்கும் நாய்களைக் குலைக்க விட்டுவிடவேண்

டும். ஏனெனில் இந்த மனிதர்கள் தங்கள் கோள் குண்டணியால் நமதுமட்டில் கெட்ட எண்ணம் வருவித்து நமக்கு ஆபரணங்கள்போல் இருக்கப்பட்ட கூந்தல்களையுந் தாடியையும் வெட்டிவிடுவார்களேயாகில் கொஞ்சத்துக்குள் அது அதிகமாய் எப்பக்கத்திலும் முளைக்கும். கொடிமுந்திரிகைக் கொடியைக்கழிப்பதால் அதிக நேத்தியாய் வளர்ந்து ஏராளமாய்க் கனிகொடுப்பதுபோலக் கோள் குண்டணிகளாகிய கத்தியால் நமது மகிமை நாளுக்குநாள் அதிகப்படும்.

சிலுவையில் அறையுண்டிருக்குஞ் சேசுகிறீஸ்துநாதரை நமது கண்கள் எப்பொழுதும் நோக்கியிருக்கட்டும். அவருடைய திரு ஊழியத்தில் நம்பிக்கை கபடற்றத்தனத்தோடு நடக்கக்கடவோம். ஆனால் இந்த நம்பிக்கையோடு விவேகம் விமரிசையுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். நமது இரக்ஷகரே நமது கீர்த்தியைப் பராமரித்துக் காப்பாற்றுவார். ஆனால் நமது கீர்த்தியை நாம் இழந்துவிடும்படி இவருக்கு இஷ்டமானால் அதிக நேத்தியான கீர்த்தியை நமக்குத் தரவுந் தாழ்ச்சியில் நாம் விருத்தியடையவுமே இதற்குச் சம்மதிப்பார். மெய்யாகவே இவ்வழியாய் வரும் ஒரு பலம் மகிமை ஆயிரம் இருத்தல் மகிமைக்கு மேலானது எனத்தகும். அநியாயமாய் நம்மைத் தூஷித்தால் கோள் குண்டணியை மறுக்க அமரிக்கையாய் உண்மையைச் சொல்லிக்காட்டுவோம். நமதுபேரிற் கோள் குண்டணி சொல்லுகிறவர்கள் இன்னஞ் சலியாவிட்டால் நாமுந் தாழ்ந்துபோகச் சலியாமலிருக்கக்கடவோம். இத்தன்மையாய் நமது கீர்த்தியையும் ஆத்துமத்தையும் ஒருமிக்க ஆண்டவர் திருக்கரங்களில் வைத்துவிடுவதைப் பார்க்கிலும் அதைப் பத்திரமாய்க் காப்பாற்ற அதிக உத்தமமான வழி ஒன்றுமில்லை. அர்ச். சின்னப்பரைக் கண்டுபாவித்து நமது கீர்த்தியிலும்

அவகீர்த்தியிலுஞ் சந்தோஷமாய் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யக்கடவோம். இவ்வகையாய் என் ஆண்டவரே உமக்காகவே நிந்தையைச் சகித்தேன், அவமானமும் என் முகத்தை மூடிக்கொண்டதென்று நாமுந் தாவீதென்பவரோடு சொல்லலாம்.

ஆயினும் மகா கொடூர அவமானப் பாதகங்களை அநியாயமாய் ஒருவன்பேரிற் சுமத்தும்போது நியாயத்தைக் காட்டி இவைகளை வெல்லக்கூடுமாயிருக்கையில் வெல்லவேண்டியதேயல்லாமல் ஒருவனும் அதைச் சகித்து மவுனமாயிருக்கலாகாது. இப்படியே ஒருவன் கீர்த்தியை இழந்துபோவதால் மற்றவர்களுக்கு நஷ்டமாயிருக்குமேயாகில் அத்தருணத்திலுங் கோள் குண்டணியை வென்று கீர்த்தியைக் காப்பாற்றத் தேடவேண்டும். ஏனெனில் இத்தருணத்தில் வேதசாஸ்திரிகள் சொல்வதுபோல் நமக்கு வந்த நஷ்டத்தைப் பரிகரிக்க அமரிக்கையாய்ப் பிரயாசப்படவேண்டும்.

8-ம் அதிகாரம்.

பிறர்மட்டில் இருக்கவேண்டிய தயை கோபத்தை அமர்த்துகிறதற்கான அவுஷதம்.

அப்போஸ்தலர்கள் நாள்தொட்டுத் திருச்சபையில் உறுதிப்பூசுதல் தேவத்திரவிய அநுமானத்தை நிறைவேற்றுகையிலும் பாத்திரமுதலிய தேவ ஊழியத்துக்கு உபயோகமான பண்டங்களை மந்திரிக்கையிலும் பரிமள தைலத்தை உதவிக்கொண்டு வருகிறார்

கள். இதில் ஓலீவ் எண்ணெயும் பரிமளமுங் கலந்திருக்கிறது. இவ்விரண்டு வஸ்துகளும் நமது ஆண்டவரிடத்தில் உத்தமவிதமாய் விளங்கி இவருக்கு மகா பிரியமான இரண்டு புண்ணியங்களின் அடையாளமாயிருக்கின்றது. மேலும் இந்தப் புண்ணியங்களை நமக்கு விசேஷவிதமாய்க் கற்பிக்கிறதற்காகத் தாம் சாந்தமுந் தாழ்ச்சியுமுள்ள இருதயமுடையவரென்று தம்மிடத்திற் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். தம்மைக் கண்டுபாவித்து நமது இருதயத்தைத் தமக்கு வசீகரம் பண்ண அதிக நிச்சயமான வழி இதுதானென்று நமக்குக் காட்டுகின்றார். மனிதன் சர்வேசுரனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளை வேண்டியபடி செலுத்துவதற்குத் தாழ்ச்சி அவசியம். பிறர்மட்டில் அவன் செலுத்தவேண்டிய கடமைகளை வேண்டியபடி செலுத்துவதற்குத் தயை சாந்தம் அவசியம்.

முன்னால் சொல்லியதுபோல் பரிமளம் நீராளமான மற்ற வஸ்துகளில் சேரும்போது எப்பொழுதும் அடியில் நிற்கும். இதைப்பற்றி அதைத் தாழ்ச்சிக்கு ஒப்பனையிடுவார்கள். எல்லாத்தையும் வென்று எல்லாப் புண்ணியங்களுக்கும் மேலாயிருக்குஞ் சாந்தகுணந் தயையானது எப்பொழுதும் மேலே மிதக்கும் ஓலீவ் எண்ணெய்க்கு ஒத்ததாயிருக்கின்றது. இந்தப் புண்ணியமானது பிறசிநேகத்தின் மெய்யான புஷ்பமாம். இந்தச் சாந்தகுணமானது பொறுமையுள்ளதாயிருப்பதுமல்லாமல் இன்னம் மதுரமுள்ளதாயும் இரக்கமுள்ளதாயும் இருக்கும்போதுதான் இது குறையற்ற தேர்ந்த புண்ணியமாயிருக்கிறதென்று அர்ச். பெர்னார்தென்பவர் சொல்லுகின்றார். ஆனல் பிரிய சகோதரமே, மதுரகுணந் தாழ்ச்சியினால் உண்டாகிய பரிமளம் உன்னிருதயத்தில் இருக்கும்படி பத்திரமாயிரு. ஏனெனில்

இதுகாரியத்திற் பசாசு பலபேரை மோசம்போக்கி இவர்கள் இவ்விரண்டு புண்ணியங்களையும் வார்த்தையினாலும் வெளிக்கிருத்தியங்களினாலு மாத்திரம் அநுசரித்துவருவதால் தங்களைத் தாழ்ச்சி சாந்தகுணமுள்ளவர்களாக எண்ணும்படி செய்கிறது. இத்தன்மையாய் இந்த மனிதர்கள் தங்கள் உள்ளாந்தரங்கப் பற்றுதல்களை நன்றாய்ப் பரிசோதித்துப் பாராமல் சாந்தகுணமுள்ளவர்களாகவுந் தாழ்ச்சியுள்ளவர்களாகவுந் தங்களை எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையாகவே இவர்கள் தங்கள் கிருத்தியங்களில் தாழ்ச்சி சாந்தகுணமுள்ளவர்களாயிருக்கிறதில்லை. இதனை வெகு சுளுவாய் அறியலாம்.

வெளிக்கு மாத்திரம் ஓர்விதச் சடங்குபோல் தாழ்ச்சியுள்ளவர்களாகவும் மதுர குணமுள்ளவர்களாகவுங்காட்டியபோதிலும் இவர்களுக்கு ஏதாகிலும் அற்ப நிந்தை அல்லது இவர்கள் கருத்துக்கு ஒவ்வாத அற்ப வார்த்தை சொன்னால் உடனே அகங்கார கர்வத்தோடு கோபித்துப் பேசுவதைப் பார்க்கலாம். விரியன் பாம்பால் கடிபட்டவர்கள் முதற்றரமான ஓர்வித அவுஷதத்தைச் சாப்பட்டால் அவர்களுக்கு விஷமேறாமலும் வீக்கங் காணாமலும் இருப்பார்களாம். இத்தன்மையாகவே தாழ்ச்சியும் மதுரகுணமும் உண்மையானவைகளாயிருக்கும்போது நமக்கு ஏதாகிலும் நிந்தைசெய்யப்படுகிற வேளையில் நமது இருதயத்தில் வழக்கமாய் உண்டாகுங் கோபமூர்க்கத்தைத் தணித்துவிடும். நமதுபேரில் கோள் குண்டுணி சொல்வதாற் கோபங்கொண்டு அகங்காரத்துக்கு இடங்கொடுப்போமேயாகில் நமது தாழ்ச்சியும் மதுரகுணமும் உண்மையானதல்லவென்றும் கள்ளத்தனம் அல்லாமல்வேறல்லவென்றும் அடையாளமாம்.

பிதாப்பிதாவாகிய யோசேப்பென்பவர் எசித்து தேசத்தினின்று தமது சகோதரர்களைத் தகப்பனார்

வீட்டுக்கு அனுப்பும்போது வழியில் ஒருவர்பேரில் ஒருவர் கோபித்துக்கொள்ளாதேயுங்கள் என்கிற இந்த ஒரே புத்திமதியைச் சொல்லி அனுப்பினர். பிரிய சகோதரமே, நானும் உனக்கு இந்தப்படி சொல்ல வேண்டியது. துன்பம் அடர்ந்த இந்தப் பிரபஞ்ச ஜீவியமானது பரலோக மோக்ஷராச்சியத்துக்குப்போகிறதற்காக நாம் செய்யவேண்டியிருக்கிற யாத்திரையேயல்லாமல் வேறல்ல. ஆதலால் வழியில் ஒருவர்பேரில் ஒருவர் கோபித்துக்கொள்ளாமலிருக்கக்கடவோம். நமது சகோதரர் கூட்டாளிகளோடு அமரிக்கை சமாதான பட்சத்தோடு நடந்துகொள்ளக்கடவோம். எதார்த்தமாய்ச் சொல்லுகிறேன். கூடுமாகிற் பரிச்சேதங் கோபியாதே. எதுமுகாந்தரத்தைப் பற்றியென்கிலுங் கோபத்துக்கு உன் இருதய வாசலைத் திறவாதே. ஏனெனில் மனிதனுடைய கோபத்தால் சர்வேசுரனுடைய நீதி நிறைவேறுகிறதில்லையென்று அர்ச். இயாகப்பர் சொல்லுகின்றார். நமக்கு அமைந்தவர்களுடைய துர்க்குணங்களைத் திடத்தோடும் நிலைமையோடுங் கண்டித்துத் தின்மையை விலக்கவேண்டுமென்பது மெய். ஆனல் இதையுஞ் சாந்தகுணம் அமரிக்கையோடு செய்யவேண்டும். கோபங்கொண்ட யானை தணிந்துபோவதற்குச் செம்மறிப்புருவையைப் பார்த்தாலே போதும். பீரங்கி குண்டுகளைத் தடுப்பதற்குப் பஞ்சுமெத்தையைவிடத் தகுதியானது ஒன்றுமில்லை. நியாயமிருந்தும் கோபமுதலிய ஆசாபாசத்தால் இடப்படுந் தண்டனை எப்பொழுதும் பிரயோசனமுள்ளதாயிராது. கோபங் கலவாமல் ஞாயப்படி செய்யுங் கண்டனை சிட்சையோ வெகு உபயோகமாயிருக்கும். ஏனெனில் மனிதன் சுவாவமாய் நியாயத்துக்கு அடங்கினவனாயிருப்பதால் நியாயத்தின்படி நடத்தப்படச் சுளுவாய்ச் சம்மதிப்பான். இதற்கு விரோதமாய்

எவனும் ஆசாபாசத்தால் தன்னை ஆண்டு நடத்தச் சகிக்கமாட்டான். இதைப்பற்றித்தான் ஆசாபாச பலத்தைக்கொண்டு நியாயமானது ஏதுகாரியத்தையா கிலுஞ் செய்யத் தேடுகையில் எல்லோருக்கும் இது அருவருப்புள்ளதாய்ப் போவதுமன்றி வீணாய்ப் பிர திகூலமடையும். இப்படி இதற்குச் சேதமுண்டாகா விட்டாலும் ஆசாபாசத்தின் கொடுங்கோன்மைக்கு அமைந்து நடப்பதால் தன் சொந்த அதிகாரத்தைத் தானே வெகுவாய் இழந்துவிடும்.

இராச்சியங்கள் சமாதானமாயிருக்கும் காலத்தில் மன்னவான்கள் தங்கள் பரிவாரத்தோடு தங்கள் தே சங்களைச் சுற்றிப்பார்க்கப் போகும்போது சனங்கள் தங்களுக்கு இது கன மகிமை என்று நினைத்து வெகு ஆறுதலடைவார்கள். ஆனால் பொதுநன்மைக்காக வே இவர்கள் தங்கள் படைகளோடு வந்தாலோ சனங்களுக்கு எப்பொழுதும் பிரியமிராததுமன்றி நஷ்டமாயிருக்கும். எனெனில் இவர்கள் தங்கள் போர்ச் சேவகர்களை எவ்வளவுதான் கண்டிப்பு ஒழுக் கத்தோடு நடக்கும்படி செய்தபோதிலும் இவர்க ளால் ஏதாகிலும் அலங்கோலை குடிகளுக்கு இடை யூறு வராமலிருப்பது கூடுமான காரியமல்ல. இவ்வ கையாய் நியாயப்படி அமரிக்கையாய் ஏதாகிலுந் தண்டனை இடும்போது இந்தத் தண்டனை எவ்வளவு தான் கண்டிப்புள்ளதா யிருந்தபோதிலும் எவனும் இதை அங்கீகரித்துப் பிரியமாய் ஏற்றுக்கொள்வான். ஆனால் இந்த நியாயத்தோடு இதின் சேவகர்கள் போலிருக்கப்பட்ட கோபம், மூர்க்கத்தனம், பலாத் காரங் கலந்தால் இதினால் வருந் தண்டனையை ஆசிக் கச் செய்வதற்குப் பதிலாய் எவரும் இதற்கு அஞ்சி அருவருக்கிறதற்கு மாத்திரமே உதவியாயிருக் கும். வெகு மன வருத்தங் கலக்க ஏக்கத்துக்கிடமா

கும். மேற்சொல்லிய அர்ச்சியசிஷ்டவரோ தன்னிஷ்டன் ஒருவனுக்குச் சொல்லியதுபோல் எந்த அற்ப கோபத்துக்குஞ் சம்மதிப்பதைப் பார்க்கிலும் நியாயமாய்க் கோபித்துக்கொள்ளவேண்டியபோது முதலாய் நமது இருதயவாசலைக் கோபத்துக்குத் திறவாமலிருப்பது அதிக உத்தமம். ஏனெனில் கோபத்துக்கு இடங்கொடுத்தபின் அதை நமது இருதயத்தினின்று தள்ளுவது மகா பிரயாசை. கோபமானது ஒரு சிறிய கொடிபோல் நமது இருதயத்திற் புகுந்து வெகு சுளுவாய்ப் படர்ந்து பெரிய மரமாகிவிடுகிறது. இதைப்பற்றித்தான் அப்போஸ்தலர் நமது கோபத்தின்பேரிற் சூரியன் அஸ்தமிக்கக்கூடாதென்கிறார். ஏனெனில் நாள்முழுதும் நமது இருதயத்தில் கோபத்துக்கு இடங்கொடுத்து இரவிலும் அதைத் தள்ளிவிடாமல் கோபத்தோடு படுத்துக்கொள்ளுவோமேயாகில் சுளுவில் அமர்த்தக்கூடாத பகையாகிவிடுவதால் அதை வெல்வதற்கு இனி வழியில்லை என்னத்தகும். இப்படி நாளுக்கு நாள் அபத்தமான பல வீண் தோற்ற எண்ணங்களுக்கு இடங்கொடுத்தபின் கோபங்கொண்ட மனிதன் நியாய அநியாயத்தைக் கண்டுபிடிப்பது மகா பிரயாசை.

ஆதலால் கோபத்தை விவேகத்தோடும் மட்டாகவும் உதவிக்கொள்ளத் தேடுவதைப் பார்க்கிலுங் கோபத்துக்கு இடங்கொடாமல் சீவிக்கக் கற்றுக்கொள்வது உத்தமம். ஆனால் நமது சுபாவ பலவீனக் குறைவால் கோபத்துக்கு இடங்கொடுப்போமேயாகில் அசட்டையாயிராமல் உடனே அதைத் தள்ளிவிடுவது நலம். ஏனெனில் இதற்குக் கொஞ்சம் இடங்கொடுப்போமேயாகில் நமது இருதயத்தில் குடிகொண்டு பாம்பானது தன் தலையை ஒருவிசை நுழைவித்த இடத்தில் சரீரத்தை எல்லாஞ் சுருட்டி வெகு சுளுவாய்ச் சேர்த்துக்கொள்வதுபோல் பலப்பட்டுப்

போம். ஆனால் இதை என்னமாய்த் தள்ளுவேனென்று சொல்லுவாயாக்கும். பிரிய சகோதரமே, கோபம் உன்னிடத்தில் எழும்பிய மாத்திரத்தில் அமரிக்கையாய் உன் சத்துவமெல்லாங் கொண்டு அதைத் தள்ளப்பார். இதில் படபடப்பு துரிதமாகாது. ஏனெனில் ஆலோசனைச் சங்கமுதலிய கூட்டங்களில் சந்தடிசெய்து பேசுகிறவர்களை அமர்த்துகிற சேவகர்கள் தாங்கள் அமர்த்தத் தேடுகிறவர்கள் செய்யுஞ் சத்தத்தைப்பார்க்கிலும் அதிக சத்தஞ்செய்வார்கள். இத்தன்மையாகவே பலமுறை நமது மனதில் கிளம்புங் கோபத்தை ஆத்திர வேகத்தோடு அடக்கத் தேடுவோமேயாகில் கோபத்தால் நமது இருதயத்தில் வந்த குழப்பத்தைப் பார்க்கிலும் அதிக குழப்பத்தை நமது இருதயத்தில் கிளப்புவோம். இப்படி நமது மனங் கலங்கிப்போனபின் நம்மைத்தானே அடக்கக் கூடாமையாயிருக்கும்.

அமரிக்கையாய் உன் கோபத்தை அமர்த்தியபின் வாலிபராயிருந்த ஓர் மேற்றிராணியாருக்கு வயது சென்ற அர்ச். அகுஸ்தினென்பவர் சொன்ன ஆலோசனையை அநுசரிக்கக்கடவாய். அதென்னவெனில் ஓர் மனிதன் செய்யவேண்டியதைச் செய் என்கிறார். என் கண்ணானது கடுங்கோபத்தால் கலங்கியிருக்கிறதென்று சுவாமியுடைய மனதுக்கு ஒத்த மனதுள்ளவராயிருந்த தாவீதென்பவர் சொன்னது போல் நீயுஞ் சொல்லும்படியான சமையம் நேரிட்டால் உடனே ஆண்டவனை நெருங்கிப் போய் உன் பேரில் அவர் தமது வலதுகையை நீட்டி உன் கோபத்தைத் தணிக்கும்படியாய் ஆண்டவரே என்மேல் இரக்கமாயிருமென்று சொல்லு. அப்போஸ்தலர்கள் சலங்களினடுவே காற்றால் அலைக்கழிக்கப்பட்டபோது செய்ததுபோல் நாமுங் கோபத்தால் அலைக்கழிக்கப்பட்டிருக்கும்போது தேவ ஒத்தாசையைக்கெஞ்சி

மன்றாடக்கடவோம். நமது ஆசாபாசங்கள் அமர்ந்துபோகும்படி கட்டளையிடுவார். உடனே மிகுந்த அமரிக்கையுண்டாம். ஆனால் கோபத்தில் நாம் செய்யுஞ் செபத்தை மெதுவாய் அமரிக்கையாய்ச் செய்ய வேண்டும். பலவந்த பிரயாசையாகாது. கோபத்தை அமர்த்துவதற்காக நாம் உதவிக்கொள்ளும் அவுஷதங்களை எல்லாம் மகா பொறுமை அமரிக்கையோடு உதவிக்கொள்ளவேண்டும்.

கோபத்தால் ஏதாகிலும் நீ செய்ததாக அறிந்த மாத்திரத்தில் ஆர்பேரில் நீ கோபித்திருப்பாயோ அவர்களுக்கு நல்ல முகங் காட்டித் தயையாய்ப் பேசி நீ செய்த தப்பிதத்தை உடனே பரிகரிப்பாய். ஏனெனில் பொய் சொல்லும் வழக்கத்தைவெல்வதற்கு உத்தமமான அவுஷதம் பொய்சொன்னதாக அறிந்தவுடனே பிசகாய்ச் சொன்னதைத் திருத்தி மறுபடியும் உண்மைக்கு ஒத்தபடி சொல்வதேயாம். இத்தன்மையாகவே கோபத்துக்குப் பரம அவுஷதம் அதற்கு விரோதமான ஏதாகிலும் பொறுமைக்கடுத்த கிருத்தியத்தை உடனே செய்வதேயாம். புதிதாய்ப் பட்ட காயங்கள் சொஸ்தமடைவது எப்பொழுதும் வெகு எளிது.

மேலும் கோபத்துக்கு இடமின்றி நீ அமரிக்கையாயிருக்கும்போது மிகுந்த தயை பொறுமையைச் சம்பாதிப்பதற்கான நற்கிருத்தியங்களைச் செய்துவருவாய். இதற்காக உன் வார்த்தை கிருத்தியங்களில் உன்னால் கூடுமான அமரிக்கை மதுரகுணத்தைக் காட்டி உந்நத கவியின் பத்தினியைக் கண்டுபாவிப்பாய். இவளுக்கு உதட்டிலும் நாக்கிலுந் தேன் இருப்பதுமல்லாமல் இன்னம் இவள் நாக்கடியிலும் இருக்கிறதாம். அதென்னவெனில் இவள் இருதயத்திலும் இருக்கிறதென்று அர்த்தமாம். தேனுடன் இன்னம் பாலுங் கலந்திருக்கிறதாம். ஏனெனில் பிறரு

க்கு மதுரமான வார்த்தையைமாத்திரஞ் சொல்வது போதாது. இன்னம் நமது இருதயமுழுதும் நமது ஆத்துமத்தின் உள்ளாந்தரமெல்லாம் மதுரமாயிருக்கவேண்டும். வாசனை கலந்த தேனின் இன்பம் நம்மிடத்தில் இருப்பது போதாது. அதாவது: அந்நியர்களோடு மரியாதையாய் இன்பமாய்ச் சம்பாஷிப்பது போதாது. ஆனால் இன்னந் தன் அடுத்த வீட்டாரோடும் ஊழியக்காரரோடும் பாலுக்கொத்த மதுர குணமுடையவர்களாயிருக்க வேண்டும். ஆனால் இது விஷயத்தில் வெகுவாய்ப் பிசகி மோசம்போய் வீதியில் சம்மனசுகளைப்போல் காணப்பட்டு வீட்டில் குடும்பத்தார் ஊழியரோடு பசாசுகளைப்போல் இருக்கிறவர்கள் அநேகர்.

9-ம் அதிகாரம்.

நமதுமட்டிலேயே நாம் சாந்தமாயிருக்க வேண்டுமென்பதின்பேரில்.

பிறர் மீது சாந்தமாயிருப்பதற்கு உத்தம வழி நமது பேரிலேயே சாந்தகுணமுள்ளவர்களாயிருக்கப் பிரயாசப்படுவதேயாம். நமக்கே எதிரிடையாய் நமது மீதும் நமது குற்றங் குறைகள்மீதும் பரிச்சேதம் எரிச்சல் கோபங் கொள்ளாமலிருப்போம். ஏனெனில் நாம் ஏதாகிலுந் தப்பிதஞ்செய்யும்போது அதற்குக் கஸ்திவருத்தப்படுவது நியாயமாயிருந்தபோதிலும் நமது கஸ்தி அமரிக்கையுள்ளதாயிருக்கவேண்டுமே யல்லாமல் அதினால் நாம் வீண் கலக்கங்கொண்டு சலிப்படைந்து மிஞ்சின கஸ்தியாயிருக்கலா

காது. அநேகர் கோபத்துக்கு இடங்கொடுத்த பின் இப்படி கோபித்துக்கொண்டதின் மட்டிலேயே வெகு கோபங்கொள்ளுவார்கள். இதனால் இவர்கள் இருதயம் எப்பொழுதுங் கோபத்தால் அலைக்கழிந்து உபாதிக்கப்படுவதுடன் இவர்களுக்கு வந்த முதல் கோபத்தைத் தணிப்பதற்குப் பதிலாய் மறுபடியும் இவர்கள் கோபித்துக்கொள்வதால் இன்னம் வெகு கோபத்துக்குமாத்திரமே வழிபண்ணுகிறார்கள். இதுவுமன்றித் தன்பேரில்தானே கொள்ளுங் கோப எரிச்சலானது வெறும் ஆங்காரத்தை மாத்திரங் காண்பிக்கும். இதற்கு மூலாதாரஞ் சுயபக்ஷமேயல்லாது வேறல்ல. இதனாலேயே நாம் குற்றங் குறையுள்ளவர்களாயிருக்கிறதைக் கண்டு கலங்கி ஏங்கிநிற்கின்றோம். நமது குற்றங்களை அருவருத்துத் தள்ளவேண்டும்; மெய். ஆனால் ஸ்திரமனதோடு அமரிக்கையாய்த் தள்ளவேண்டும். ஏனெனில் ஓர் நியாயாதிபதி நியாயத்துக்கு ஒத்தபடி பயப்படாமல் தீர்மானஞ் செய்யும்போது துஷ்டர்களைப் பிரயோசனம் வரத்தக்கவிதமாய்த் தெண்டிக்கிறான். கோப ஆசாபாசத்தால் ஏதாகிலுந் தீர்மானஞ் செய்வானேயாகில் அவ்வளவு பிரயோசனமிராது. ஏனெனில் இப்படி ஆசாபாசத்தால் தீர்மானஞ் சொல்லும்போது தப்பிதத்துக்கு ஒத்தபடி தப்பிதத்தைத் தெண்டிக்காமல் தன் கோபத்துக்கு ஒத்தபடி தண்டிக்கின்றான். இத்தன்மையாகவே நமது பேரிலேயே கோப எரிச்சல்கொண்டு முறையிடுவதைப்பார்க்கிலும் நிலைமையாய் அமரிக்கையோடு நமது தப்பிதத்துக்குக் கஸ்திப்படும்போது நம்மைத்தானே பிரயோசனத்துடன் தண்டிக்கின்றோம். ஏனெனில் நமதுபேரில் நாம் படுங் கிரமந்தப்பின முறைப்பாடு நமது தப்பிதங்களின் கனத்துக்கு ஒத்ததாயிராமல் நமது சுய நாட்டங்களுக்கு ஒத்ததாகும். இப்படி கற்பென்னும் புண்ணியத்தை

நேசிக்கிறவன் இதற்கு விரோதமான ஏதாகிலும் அற்ப குற்றத்தைக் கட்டிக்கொண்டால் சொல்லிமுடியாத கஸ்தி சஞ்சலப்படுவான். ஆனால் இவன் சொன்ன அபாண்டமான கோள்குண்டணி இவனுக்கு ஒரு பொருட்டாய்த் தோன்றாது. இதற்கு விரோதமாய்க் கோள் குண்டணியைப் பகைக்கிறவனுக்குத் தன்னையுமன்றி இவ்விதச் சொற்குறை நேரிட்டால் வெகுவாய் வருந்தி விதனப்படுவான். ஆனால் கற்புக்கு விரோதமான குற்றங்களை ஒன்றுமில்லாமையாய் எண்ணுவான். இவ்வாறே ஒவ்வொரு புண்ணியத்தையுங் குறித்துச் சொல்லலாம். ஆனால் இதுகளுக்கெல்லாங் காரணம் என்னவெனில் ஒவ்வொருவனும் புத்தி அறிவால் தன் மனச்சாக்ஷியைத் தீர்மானஞ் செய்யாமல் ஆசாபாசச் சொற்படி தீர்மானிக்கிறான். பிரிய சகோதரமே, ஓர் தகப்பன் தன் பிள்ளையைச் சினந்து கோபிப்பதால் வரும் பிரயோசனத்தைப் பார்க்கிலும் அமரிக்கை பக்ஷத்தோடு செய்யுந் தண்டனையால் அதிக பிரயோசனம் வரும். இத்தன்மையாய் நமது இருதயம் ஏதாகிலுந் தப்பிதத்துக்கு இடங்கொடுத்தபின் அதின்பேரில் கோபங்கொள்ளாமல் மிகுந்த தயைவைத்து அமரிக்கை பக்ஷத்தோடு கண்டிப்போமாகில் அது திருந்துவதற்கு வழியாயிருப்பதுமல்லாமல் இதனால் அதற்கு வரும் மனஸ்தாபம் அதிகமாய் வேரூன்றி நிற்கும். அதற்கு விரோதமாய் அதின்பேரில் சினந்து கோபித்துப் பொறுமையற்றதனமாய் நடந்துகொள்வதில் அற்ப பிரயோசனமுமிராது.

இப்படி வீண் சிலாக்கியத்துக்கு இடங்கொடுக்க மாட்டேன் என்று நான் பிரதிக்கினை செய்தபின் அதுவிஷயத்தில் எனக்குப் பெரிய தப்பிதம் நேரிட்டால் என் இருதயத்தை நோக்கி வீணாய்ப் புலம்பி ஆ! மதிகெட்ட இருதயமே, இத்தனையாயிரம் பிரதி

க்கினைகளைச் செய்தபின்னும் வீண்சிலாக்கியத்துக்கு இடங்கொடுத்தாயே. உன்னைச் சகிப்பதெப்படி? ஆ! நிர்ப்பாக்கிய இருதயமே, வெட்கத்தால் நாணி உன் ஆண்டவருக்கு இவ்வளவு நன்றிகெட்ட துரோகியாயிருப்பதால் வானத்தைநோக்கி இனி உன் கண்களை ஏறெடுத்துப் பார்ப்பாயோவென்று இதுமுதலான பிரயோசனமற்ற முறைப்பாடுகளைச் செய்யவேமாட்டேன். ஆனல் அதற்குத் தயை இரக்கத்தைக் காட்டி நியாயப்படி திருத்தத் தேடுவேன். ஆ! என் ஆத்துமமே, நாம் இத்தனைமுறை தப்பித்து இடைந்துபோக வேண்டுமென்று தீர்மானித்த பள்ளத்தில் விழுந்துவிட்டோமே, என்னசெய்கிறது அதினின்று எழுந்து ஒருநாளும் மறுபடியும் அதில் விழாமல் சாக்கிரதையாயிருப்போம். சுவாமியுடைய தயை அநுக்கிரகத்தைக் கெஞ்சி மன்றுடி நாம் இனி அதிக உறுதி திடமுள்ளவர்களாயிருக்கச் சுவாமி ஒத்தாசை செய்வாரென்று நம்பி மறுபடியுந் தாழ்ச்சியின் பாதையைப் பின்பற்றித் தைரியத்தை விடாமல் எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருப்போம். சுவாமி நமக்கு ஒத்தாசையாய் இருப்பார். ஏதாகிலும் நம்மால் ஆன நன்மை செய்வோம். இது முதலிய நம்பிக்கை தைரியத்துக்குரிய வார்த்தைகளால் என் இருதயத்துக்கு வேண்டிய ஆறுதல் தைரியம் வருவித்தபின் எனக்கு நேரிடும் வீண் சிலாக்கியமென்னுந் தப்பிதத்தில் மறுபடியும் விழாதபடிக்கு உறுதியான நல்ல பிரதிக்கினை செய்து இந்தப் பிரதிக்கினையில் நிலைமையாயிருப்பதற்கு ஆன வழிப்பாடுகளைத் தெரிந்துகொண்டு விசேஷமாய் என் ஆத்துமகுருவானவர் ஆலோசனையைப் பின்சென்று நடப்பேன்.

அப்படியிருந்தபோதிலும் இந்தத் தணிவான கண்டனையால் தன் இருதயம் இளகவில்லையென்று கண்

டால் இன்னங் கொஞ்சம் பலமாய் அதைக் கண்டித்து முறைப்பாடிடலாம். இதனால் அதற்கு அதிக வெட்கம் நாணம் வருவதற்கு இடமாகும், ஆனால் இப்படி தன் இருதயத்தைக் கண்டித்துத் திருத்திய பிற்பாடு அதற்கு ஆறுதல் வரும்படியாய்ச் சர்வேசுரனிடத்தில் தன் முழு நம்பிக்கையை வைத்துத் தாவீதென்பவனைப்போல் என் ஆத்துமமே நீ கஸ்தியாயிருப்பதேனோ, இன்னம் எனக்குக் கலக்கம் வருவிப்பானேன், சர்வேசுரனிடத்தில் உன் நம்பிக்கையை வை. ஏனெனில் என்முகத்துக்கு இரக்ஷணியப் பிரகாசமாகவும் என் மெய்யான தேவனாகவும் இன்னம் அவரை ஸ்துதித்துக் கொண்டாடுவேன் என்று சொல்லக்கடவோம்.

ஆதலால் உன் இருதயம் எந்தத் தப்பிதத்திலெ ன்கிலும் விழும்போது இதனால் நீ ஆச்சரியப்படாமல் உன் நிர்ப்பாக்கியத்தை அறிந்து சுவாமிக்குமுன் உன்னை வெகுவாய்த் தாழ்த்தி மகா அமரிக்கையாய் உன் இருதயத்துக்குத் தைரியஞ் சொல்லுவாய். இப்படி தப்பிதம் நேரிடுவதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஏனெனில் பலவீனராகிய நாம் பலவீனமான காரியத்தைச் செய்வதும் நிர்ப்பாக்கியவான்களாகிய நாம் நிர்ப்பாக்கியவான்களாயிருப்பதும் அதிசயமல்ல. அப்படியிருந்தபோதிலும் உன்னால் சுவாமிக்கு வந்த நிந்தையைப் பரிகரிக்க உன் பலனெல்லாங்கொண்டு பிரயாசப்படக்கடவாய். மிகுந்த தைரியத்தோடு சர்வேசுரனுடைய கருணை தயாளத்தின்மட்டில் உறுதியான நம்பிக்கை வைத்து நீ அநுசரியாமல் விட்டுவிட்ட புண்ணியத்தை மறுபடியுந் துடங்கி அநுசரிப்பாயாக.

10-ம் அதிகாரம்.

கவனமாய்த் தன் காரியங்களை நடத்த வேண்டும். ஆனால் அதில் மிஞ்சின கவலை படபடப்பு உதவாது.

நாம் செய்யவேண்டிய காரியங்களைக் கவனத்தோடுஞ் சுறுசுறுப்போடுஞ் செய்வது வேறே, அதினால் கலக்கங் கவலைகொண்டு தீவரப்படுவது வேறே. சம்மனசுகள் நமது இரக்ஷணியத்தின்மட்டில் வெகு சாக்கிரதையாய்ச் சுறுசுறுப்போடு பிரயாசப்படுகிறார்கள். ஆனால் இதைப்பற்றி இவர்கள் துரிதப்பட்டு அற்ப கிலேசப்படுவதில்லை. ஏனெனில் இவர்கள் நமதுமட்டிலுள்ள பிறசிநேகத்தைப்பற்றி நமதுபேரில் கவனம்வைத்து வெகு சாக்கிரதையாய் நம்மைப் பராமரித்து வருகிறார்கள். இதனால் இவர்களுக்குக் கலக்க ஏக்கமும் படபடப்பும் இருக்குமேயாகில் இவர்களுடைய பாக்கியத்துக்கு இவைகள் பொருந்தாமையாயிருக்கும். கவனமாய்ச் சுறுசுறுப்போடு செய்யுங் காரியங்களை எல்லாம் ஆத்தும சமாதான அமரிக்கையோடு செய்யலாம். இவைகளில் வீண் விசார சஞ்சலமும் விசேஷமாய் மிஞ்சின படபடப்புங் கலந்தாலோ அமரிக்கைக்கு இடமிராது.

ஆதலால், பிரிய சகோதரமே, உன் காரியங்களை எல்லாங் கவனமாயுஞ் சாக்கிரதையோடுஞ் செய்து வா. ஏனெனில் இவைகளை நீ செய்யச் சுவாமிக்குச் சித்தமாதலால் மிகுந்த கவனத்தோடுஞ் செய்யும்படி சித்தமாயிருக்கிறார். ஆனால் கூடுமானமட்டும் இதைப்பற்றி மிஞ்சின கவலை ஏக்கத்துக்கு இடங்கொடாதே. ஏதுகாரியத்தையுங் கலக்க ஏக்கத்தோடு துரி

தப்பட்டுத் துவக்காதே. வேலை செய்யும்போதும் வீண் துரிதமாகாது. ஏனெனில் எவ்விதப் பட்படப்பும் புத்தி ஆலோசனையைக் குழப்பிவிடும். மேலும் நாம் செய்ய மனதாயிருக்கிற கிரியத்தை நன்றாய் வேண்டியபடி செய்துமுடிக்க விக்கினமாயிருக்கும்.

நமதாண்டவர் மார்த்தம்மாளைப் பார்த்து: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களின்பேரில் கவலைப்பட்டுக் கலங்குகிறாயென்றார். இவள் தான் செய்வதைக் கவனமாய் மாத்திரஞ் செய்திருப்பாளேயாகில் இவளுக்குக் கலக்கம் வந்திராது. ஆனால் இதனால் இவள் ஏக்கங்கொண்டு கவலையாயிருந்தபடியால் வீணாய்த் துரிதப்படுவதுமல்லாமல் கலக்கத்துக்கும் இடங்கொடுத்தாள். இதைக் குறித்துத்தான் நமதாண்டவர் இவளுக்குப் படிப்பினை கொடுக்கின்றார். சமமான நிலத்தில் மெதுவாய் ஓடும் நதிகளில் பெரிய படகுகள் ஓடும், விலையுயர்ந்த சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாகும். வெளி நிலங்களில் மெதுவாய்ப் பெய்யும் மழைகள் புல்லுகளுக்குந் தவசதானியங்களுக்கும் வெகு பிரயோசனமாயிருக்கும். ஆனால் வெள்ளங்களும் வேகமாயோடும் ஆறுகளும் ஓயாமல் இரு கரைகளையுங் கரைத்துக்கொண்டு போவதுமல்லாமல் வியாபாரத்துக்குப் பிரயோசனமற்றவைகளாம். இத்தன்மையாகவே கனத்த மழை வயல்களையும் பசும் புல் நிலங்களையும் பாழாக்கிவிடும். விரைவோடு செய்யும் எந்த வேலையும் ஒரு நாளுஞ் செவ்வையாய்ச் செய்யப்படா. பழமொழி சொல்வதுபோல் மெதுவாய்த் துரிதப்படவேண்டும். துரிதமாய் நடக்கிறவன் ஒவ்வொரு அடிக்கும் விழப்பார்க்கிறானென்று சலோமோனென்பவர் சொல்லுகின்றார். நாம் செய்யுங் காரியத்தை நன்றாய்ச் செய்யும்போது எப்பொழுதும் போதுமானவளாயில் செய்கின்றோம். தேனீக்களைப்பார்க்கிலும் வண்டுகள் அதிக சத்தம் செய்

வதல்லாமல் வெகு துரிதப்படுவதாகத் தோன்றும். ஆனால், இந்த வண்டுகள் தேனை உண்டுபண்ணுகிற தில்லை, மெழுகைமாத்திரம் உண்டுபண்ணும். இத்தன்மையாகவே மிஞ்சின விசார கவலையோடு துரிதப் படுகிறவர்கள் எது நன்மையையுஞ் செய்ய அறியார்கள். செய்கிற நன்மையையுஞ் செவ்வையாய்ச் செய்யார்கள்.

ஈக்கள் தங்கள் பலத்தால் நமக்குத் தொந்தரவு வருவிக்கிறதில்லை, ஆனால் இவைகள் மிகுந்திருக்குமோ நமக்கு வெகு சங்கடம் நேரிடுகிறது. இத்தன்மையாகவே பெரிதான காரியங்கள் பெரிதாயிருப்பதால் நமக்கு அவ்வளவு கலக்கம் வருவிக்கிறதில்லை. ஆனால் நாம் செய்யுங் காரியங்கள் சொற்பமானவைகளாயிருந்தபோதிலும் கணக்கற்றதாகில் நமக்கு வெகு சங்கடத்துக்கு இடமாயிருக்கும். ஆதலால் உனக்கு வரும் வேலைகளைச் சமாதானமாய் ஏற்றுக் கொண்டு ஒன்றுக்குபின் ஒன்றாய்க் கிரமமாய்ச் செய்யப் பிரயாசப்படுவாய். ஏனெனில் கிரமமில்லாமல் ஒருமிக்க எல்லாத்தையுஞ் செய்யத் தேடுவாயேயாகில் நீ படும் பிரயாசையால் உன் புத்திக்கு வருத்தமும் உனக்குப் பிரயோசனமில்லாத வீண் தொந்தரையும் உண்டாம்.

நீ செய்யுங் காரியங்களையெல்லாம் முழுதுந் தேவசித்தத்தில் ஊன்றிச் செய். இந்தத் தெய்வச் செயலால்தான் நீ செய்யுங் காரியங்களெல்லாம் அநுகூலமாகவேண்டும். அப்படி இருந்தபோதிலுந் தெய்வச் செயலால் உன்னிடத்தில் ஆகவேண்டிய காரியங்களை முடிப்பதற்கு நீயும் வருந்திப் பிரயாசப்பட்டு உன்னாலானதைச் செய்து சுவாமிபேரில் உன் முழு நம்பிக்கை வைத்தால் அவ்வழியாய் வரும் அநுகூலம் உனக்கு எப்பொழுதும் வெகு பிரயோசனமாயிருக்குமென்றும் இந்த அநுகூலம் உன் சொந்தத்

தீர்மானத்துக்கு நன்மையாகக் காணப்பட்டாலுஞ் சரி தின்மையாகக் காணப்பட்டாலுஞ்சரி உனக்கு அநுகூலமாகவே இருக்குமென்று நிச்சயமாயிரு.

இலௌகீக நன்மைகளைப் பாரமரித்துச் சம்பாதிப்பதில் ஒரு சிறுபிள்ளை ஒரு கையால் தன் தகப்பனுைப் பிடித்துக்கொண்டு மற்றொன்றால் வேலிவழியாயிருக்கும் பல காய்கனிகளைப் பறிப்பதுபோல் நீயுஞ் செய்யவேண்டும். இப்பிரபஞ்ச நன்மையைச் சம்பாதிக்க உன் இரு கரங்களில் ஒன்றை உதவிக்கொள். ஆனால் மற்றொன்றால் எப்பொழுதும் உனது பரலோக பிதாவின் கரத்தைப் பிடித்துக்கொண்டு உன் வேலைப் பிரயாசைகளைப் பிரியமாய் இவர் பார்க்கிறாரோவென்று இவரை நோக்கி அடுத்தடுத்துத் திரும்பிப்பார். விசேஷமாய் இரு கைகொண்டும் நிறையச் சேர்க்கலாமென்கிற தோற்றத்தில் இவர் கையை விட்டுவிடப்போகிறாய். ஏனெனில் இவர் உன்னைக் கைவிட்டால் தடுமாறிக் குப்புற விழாமல் ஓர் அடிமுதலாய் எட்டிவைக்கமாட்டாய். ஆதலால் பிரிய சகோதரமே, நான் உனக்குச் சொல்லுகிறதென்னவெனில் வழக்கமான பல வேலையைச் செய்கையில் அவ்வளவு பலமாய்க் கவனித்திருக்கவேண்டியதாய் இராவிட்டால் நீ செய்யும் வேலையில் கண்ணுயிருப்பதைப்பார்க்கிலுஞ் சுவாமியின்பேரில் அதிகக் கண்ணுயிரு. ஆனால் நீ செய்யுங் காரியம் பலத்ததாயிருந்து அதைச் சரியாய்ச் செய்து முடிப்பதற்கு விசேஷ விதமாய்க் கவனிக்கவேண்டியிருந்தால் அடுத்தடுத்துச் "சுவாமியை நோக்கிப்பார். இப்படித்தான் கடல் யாத்திரை செய்கிறவர்கள் தாங்கள் போய்ச் சேர ஆசிக்கிற பூமியில் போய்ச் சேரக் கடலைப் பார்ப்பதைப் பார்க்கிலும் வானத்தை அதிகமாய் உற்றுப்பார்ப்பார்கள். இவ்விதமாய்ச் சர்வேசுரன் தாமே உன்னோடும் உன்னிடத்திலும் உனக்காகவும் வேலை

செய்வார். இதனால் உன் வேலையில் நீ வெகு ஆறுதலடைந்து அநுகூலமடைவாய்.

11-ம் அதிகாரம்.

கீழ்ப்படிதலைக்குறித்து.

பிறசிநேகம் ஒன்றே நம்மைச் சாங்கோபாங்கம் உள்ளவர்களாகச்செய்யும். ஆனால் இந்தச் சாங்கோபாங்கத்தைச் சம்பாதிப்பதற்குக்கீழ்ப்படிதல், கற்பு, தாரித்திரம் இம்மூன்றும் பிரதான வழிகளாம். சர்வேசுரனைச் சிநேகித்துச் சேவிப்பதற்குக் கீழ்ப்படிதலால் நமது இருதயத்தையுங் கற்பால் நமது சரீரத்தையுந் தாரித்திரத்தால் நமது ஆஸ்திபாஸ்திகளையுஞ் சுவாமிக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இம்மூன்று புண்ணியங்களுமே ஞான விருட்சமாகிய சிலுவையின் மூன்று கிளைகளாம். ஆகிலும் இம்மூன்று புண்ணியங்களுக்கும் அஸ்திவாரந் தாழ்ச்சியென்னும் நாலாம் புண்ணியமாம். சந்நியாச சபைகளிற் பிரவேசிக்கிறவர்கள் செய்யும் விசேஷ வார்த்தைப்பாடுகளுக்கு என்கிலும் இன்னம் உலகத்தில்தானே செய்யக்கூடுமான வெறும் வார்த்தைப்பாடுகளுக்கு என்கிலுஞ் சம்பந்தப்பட்டமேயாய் இந்த மூன்று புண்ணியங்களைக்குறித்து நான் உனக்குச் சொல்லுகிறதில்லை. ஆனால் இவைகளுக்குச் சம்பந்தப்படாதவிதமாய் இந்தப் புண்ணியங்கள் தம்மிலே எப்படிப்பட்டவைகளென்று யோசித்துப்பார்க்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் இவைகளைக்குறித்து வார்த்தைப்பாடு செய்வதில் விசேஷ வரப்பிரசாதப் பேறுபலன் உண்டா

யினும் வார்த்தைப்பாடு செய்யாவிட்டாலும், இவைகளை நாம் சரியாய் அநுசரித்து வருவோமேயாகில் சாங்கோபாங்கத்தை அடையப் போதுமாயிருக்கும்.

ஒருவன் இந்த வார்த்தைப்பாடுகளைச் செய்யும்போது சாங்கோபாங்க அந்தஸ்துக்குள்ளாகிறான் என்பது மெய். ஆனால் சாங்கோபாங்க அந்தஸ்துக்குஞ் சாங்கோபாங்கத்திலேயே இருப்பதற்கும் வெகு வித்தியாசமுண்டு. ஏனெனில் எல்லா மேற்றிராணிமார்களுஞ் சந்நியாசிகளுஞ் சாங்கோபாங்க அந்தஸ்தில் இருக்கிறார்கள். ஆகிலும் எல்லோருஞ் சாங்கோபாங்கமுள்ளவர்களாயிருக்கிறதில்லை. ஆதலால் பிரிய சகோதரமே, இம்மூன்று புண்ணியங்களையும் ஒவ்வொருவருந் தத்தம் அந்தஸ்துக்கு ஒத்தபடி நன்றாய் அநுசரிக்கப் பிரயாசப்படக்கடவோம். ஏனெனில் இதனால் நாம் சாங்கோபாங்க நிலையில் வராவிட்டாலுஞ் சாங்கோபாங்கமுள்ளவர்களாவோம் என்பது உண்மை. ஆதலால் இந்தப் புண்ணியங்களை ஓரேவிதமாய் அநுசரிக்க நமக்குக் கடமை இராவிட்டாலும் இந்தப் புண்ணியங்களையெல்லாம் அநுசரிக்க எல்லோருக்குங் கடமையுண்டு.

அவசரமானதும் மனவுற்சாயமானதுமான இரண்டுவகைக் கீழ்ப்படிதலுண்டு. அவசியம் என்னுங் கீழ்ப்படிதலால் பாப்பானவர் மேற்றிராணியார் விசாரணைக் குரு முதலியவர்களுக்கும் நீ இருக்கிற தேசத்தின் பல அதிகாரிகளுக்கும் உன் தந்தை தாய் எசமான் இன்னம் மற்ற எந்தெந்தப் பெரியோர்களுக்கும் நீ கீழ்ப்படிய வேண்டியிருக்கிறது. இந்தக் கீழ்ப்படிதல்தான் அவசரமான கீழ்ப்படிதலென்று சொல்லப்படும். ஏனெனில் இவ்விதப் பெரியோர்களுக்குக் கீழ்ப்படியாமல் தப்பித்துக்கொள்ள எவனுக்குங் கூடாது. ஏனெனில் இவர்களில் ஒவ்வொருவ

ருக்கும் நமது பேரிலுள்ள அதிகாரப்படி நம்மை ஆளவும் நடத்தவுஞ் சர்வேசுரனால் இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிவது அவசியம். ஆனால் இன்னம் நீ உத்தமனாயிருக்க விரும்புவாயேயாகில் அவர்கள் ஆலோசனை ஆசை நாட்டங்களையுந்தானே அறிந்து பிறசிநேகத்துக்கும் விவேகத்துக்கும் ஒத்தபடி நடப்பாய். சாப்படவாகிலும் இளைப்பாறவாகிலும் இப்படி உனக்குப் பிரியமான யாதொரு காரியத்தைச் செய்யவாகிலும் உனக்குக் கட்டளையிடும்போது கீழ்ப்படிந்து போகக்கடவாய். இத்தருணங்களில் கீழ்ப்படிவதில் அவ்வளவு பலன் இல்லாததுபோலத் தோன்றியபோதிலும் இத்தருணத்தில் கீழ்ப்படியாமல் போவது பெருந் துர்க்குணமாம். உனக்குப் பிரியமான வஸ்திரத்தை விட்டு வேறே வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளவென்கிலும் ஒரு வழியை விட்டு வேறே வழியாகப் போகவென்கிலும் பாடவென்கிலும் பேசாமல் இருக்கவென்கிலும் இப்படி பாவமும் புண்ணியமுமாய் இராத காரியங்களைச் செய்யக் கட்டளையிடும்போதுங் கீழ்ப்படியவேண்டும். மெய்யாகவே இந்தக் கீழ்ப்படிதல் வெகு மேன்மையானது. உனக்குப் பிரயாசை வருத்தமான காரியங்களில் கீழ்ப்படிவாயாக. இந்தக் கீழ்ப்படிதல் சாங்கோபாங்கத்துக்கடுத்த உத்தம கீழ்ப்படிதலாம். கடைசியாய் எதிர்த்து நியாயஞ் சொல்லாமல் தாமதமின்றிச் சந்தோஷமாய் அமரிக்கையோடு கீழ்ப்படியக்கடவாய். விசேஷமாய் நமதுபேரில் வைத்த அன்பு நேசத்தைப்பற்றி மரண பரியந்தம் ஆம் சிலுவையின் மரண பரியந்தங் கீழ்ப்படிந்து கீழ்ப்படிதலை விட்டுவிடுவதைப் பார்க்கிலும் பிராணனை இழக்க அதிகமாய் நேசித்த உன் ஆண்டவர் நேசத்தைப்பற்றிப் பிரியமாய்க் கீழ்ப்படியக்கடவாய்.

உன் பெரியோர்களுக்குச் சுளுவாய்க் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள உனக்குச் சரியொத்தவர்கள் மனதுக்கு எளிதாய் இணங்கிப்போய்ப் பிடிவாத ஓட்டாரங் காண்பியாமல் தின்மையாயிராத விஷயத்தில் அவர்கள் எண்ணத்துக்குங் கருத்துக்கும் இசைந்துபோகப் பார். உனக்குச் சிறியவர்களாய் இருப்பவர்கள் தங்கள் கடமைக்கு ஒத்தப்படி நடக்கையில் கடுமையாய் அவர்களுக்கு அதிகாரம் செய்யாமல் நியாயத்துக்கு ஒத்தபடி அவர்கள் ஆசை திருத்திக்கும் ஒத்துப்போவாயாக.

சர்வேசுரனுல் நமக்கு மேலாய் நியமிக்கப்பட்டவர்களுக்குக் கீழ்ப்படியப் பிரயாசை அருவருப்பு நமக்கு உண்டாவதைப்பற்றிச் சந்நியாசியாய் அல்லது கன்னியாஸ்திரீயா யிருந்தால் வெகு சுளுவாய்க் கீழ்ப்படியலாம் என்று நினைப்பது முழு தப்பறை.

மனவுற்சாயக் கீழ்ப்படிதல் என்னவென்றுல் யாதொருவருடைய கட்டாயமுமின்றி நாமாய் ஏதாகிலும் ஓர் நற்கிருத்தியத்தைச் செய்வதற்கு உடன்படுவதுதான். வழக்கமாய் நமக்கு அதிகாரஞ்செலுத்தும் மன்னவான் மேற்றிராணியாரை என்கிலும் தந்தை தாயை என்கிலும் நாமாய்த் தெரிந்துகொள்ளுகிறதில்லை. இன்னம் பலமுறை ஸ்திரீயானவள் தன் புருஷனையுந் தானுய்த் தெரிந்துகொள்ளுகிறதில்லை. ஆனுல் அவரவருந் தங்கள் இஷ்டப்படி தங்கள் ஆத்தும குருவானவரைத் தெரிந்துகொள்ளுகிருர்கள். இப்படி அர்ச். தெரேசம்மாள் தன் மடத்துச் சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிவேன் என்கிற பிரசித்த வார்த்தைப்பாட்டைக் கொடுத்ததுமல்லாமல் கிருசியானென்னும் ஓர் குருவானவரை ஆத்தும குருவானவராகத் தெரிந்துகொண்டு அவர் கட்டளைகளுக்குங் கீழ்ப்படிவேனென்கிற வார்த்தைப்பாட்டை மனவுற்சாயமாய்க் கொடுத்து அதின்படி நடந்துவந்தாள். இவ்வ

கையாய் நமது ஆத்தும குருவானவருக்கு நாம் கீழ்ப்படிவோமென்று வார்த்தைப்பாடு செய்திருந்தாலுஞ்சரி இப்படி வார்த்தைப்பாடு கொடாமல் ஒருவருடைய கட்டளைக்கு அமைந்துபோனாலுஞ்சரி எப்பொழுதும் இந்தக் கீழ்ப்படிதலுக்கு நமது சொந்த மனசே காரணமாயிருப்பதால் இந்தக் கீழ்ப்படிதல் மனவுற்சாயக் கீழ்ப்படிதலெனப்படும்.

நமது பெரியோர்கள் எல்லோருக்குங் கீழ்ப்படியவதவசியம். இன்னும் நமதுபேரில் அவரவருக்குமுள்ள அதிகாரப்படி அவரவருக்குங் கீழ்ப்படியவேண்டும். இப்படியே பொது நன்மையைச் சேர்ந்த விஷயங்களில் பொது காரியங்களை நடப்பிக்கும் அதிகாரிகளுக்குந் திருச்சபைச் சட்ட திட்டங்களுக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களில் மேற்றிராணிமார்களுக்குங் குடும்ப விஷயங்களில் தங்கள் தந்தை தாய் பெரியோர்களுக்குங் கீழ்ப்படியவேண்டும். ஆத்துமத்துக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களிலோவெனில் தன் ஆத்தும குருவானவருக்கு அமைந்து நடக்கவேண்டும். நீ அநுசரிக்கவேண்டிய பத்திக்குரிய காரியங்களையே உன் ஆத்தும குருவானவர் கட்டளையாகக் கற்பிக்கும்படி கேள். இவ்வழியாய் இவைகள் உத்தமமானவைகளாவதுமன்றி இரண்டு நன்மைகளுண்டாம். இவைகள் பத்திக்கடுத்த காரியங்களாயிருப்பதால் இவைகளை அநுசரிப்பதில் இந்த நற்கிருத்தியங்களுக்குத் தம்மிலே யுள்ள பலனுமல்லாமல் கீழ்ப்படிதலை முன்னிட்டு இவைகளைச் செய்வதால் கீழ்ப்படிதலுக்கு வருஞ் சம்பாவனையுங் கிடைக்கும். கீழ்ப்படிதலுள்ளவர்கள் மெய்யாகவே பாக்கியவான்கள். ஏனெனில் இவர்கள் மெய்ம்மார்க்கத்தை விட்டுத் தவறிப் பிசகும்படி சுவாமி சம்மதிக்கமாட்டார்.

12-ம் அதிகாரம்.

கற்பென்னும் புண்ணியத்தின் அவசியம்.

கற்பென்னும் புண்ணியமானது மற்றெல்லாப் புண்ணியங்களில் தூய லீலிய புஷ்பத்துக்கு ஒத்தது. இந்தப் புண்ணியத்தால் இவ்வுலகில்தானே நாம் சம்மனசுக்கு ஒத்தவர்களாயிருக்கிறோம் என்கதகும். எங்கும் எதுகாரியத்துக்குஞ் சுத்தமே அழகான ஆபரணம். மனுஷர்களுக்குக் கற்பு நிலையே பரிசுத்த சோடிப்பலங்காரமாம். இந்தப் புண்ணியத்தை நாணயம் யோக்கியதை யென்பார்கள். இதன் அநுபவத்தை மகிமை யென்பார்கள். இன்னம் இந்தப் புண்ணியத்தைக் கெடாமை பழுதின்மை என்றும் இதற்கு விரோதமான குற்றத்தைப் பழுதென்றும் அழிவென்றுஞ் சொல்வார்கள். ஓரே வார்த்தையிற் சொல்லவேண்டுமானல் இந்தப் புண்ணியம் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் ஒருமிக்கச் சிறந்த ஆபரணமான புண்ணியமாயிருப்பதால் மற்றமற்றப் புண்ணியங்களுக்குக் கிடையாத அருமையான விசேஷ மகிமை இதற்குண்டு.

கிரமமான மெய்விவாகத்திலல்லாமல் மற்ற எந்த விதத்திலும் நமது புலன்களால் சிற்றின்பப் பிரியங் கொள்ளப் பரிச்சேதம் எவனுக்கும் உத்தரவு இல்லவே இல்லை. மெய்விவாகத்தின் பரிசுத்தத்தனத்தால் சமுசார வாழ்க்கையில் வரும் நஷ்டத்தைப் பரிகரிக்கக்கூடும். இன்னம் இதில் அவனவன் கருத்தும் எவ்வளவு நேர்மை நாணயமுள்ளதாயிருக்கவேண்டுமென்றல் இதில் மரியாதைக் குறைச்சல் இருந்த போதிலும் இதனுல் மனதில் எள்ளளவும் நாணயக்

குறைச்சல் நேரிடாமலிருக்கும்படி பார்க்கவேண்டும்.

கற்புள்ள தூய இருதயங் கடல்சிப்பிக்கு ஒத்தது. இந்தச் சிப்பியானது வானத்தினின்று வருஞ் சலத்தையன்றி வேறே எந்தச் சலத்தையுங் கிரகிக்கிறதில்லை. சுவாமியால் ஏற்படுத்தப்பட்ட விவாகச் சுகத்தை அல்லாமல் வேறே எந்தப் பிரியத்தையும் இந்த இருதயஞ் சுகிக்க அறியாது. இது நிற்க மனது பொருந்திவேணுமென்று இதுவிஷயத்தைக்குறித்து நினைக்கமுதலாய் உத்தரவில்லை. பிரிய சகோதரமே, இந்தப் புண்ணியத்தின் முதல் கிரமத்தை அநுசரிப்பதற்கு விலக்கப்பட்ட இன்ப சுகம் யாவற்றையும் அதாவது கலியாண அந்தஸ்துக்குப் புறம்பாகவென்கிலும் இன்னம் அந்த அந்தஸ்தின் கிரம ஒழுக்கத்துக்குமே ஒவ்வாத இன்ப சுகத்தை என்கிலும் ஒருக்காலுஞ் சுகிக்கவொண்ணாது.

இதின் இரண்டாங் கிரமத்தை அநுசரிக்க உபயோகமற்ற வீண் இன்பங்கள் எவ்வளவுதான் யோக்கியதையுள்ளவையும் விலக்கப்படாதவையும் ஆயினும் இவைகளனைத்தையும் உன்னால் இயன்றவரையில் தள்ளிவிடுவாய்.

இதின் மூன்றாங் கிரமத்தை அநுசரிப்பதற்கு ஒருவிதக் கடமையுள்ளதும் ஒழுக்கத்துக்கு அடுத்ததுமான இன்பங்களில் முதலாய்ப் பரிச்சேதம் பற்றுதல் வையாதே. ஏனெனில் மெய்விவாகத்தின் ஏற்பாட்டுக்கும் பயனுக்கும் இயல்பான சுகப்பிரியங்களுக்கு இணங்கிப்போக வேண்டியதாயினும் அதில் இலவலேசமும் புத்தி இருதயத்தை வைக்கப்போகாது. மேலும் இந்தப் புண்ணியம் எவ்வித அந்தஸ்துள்ளவர்களுக்கும் எவ்வளவு அவசரமானதென்று சரியாய்க் கண்டுபிடிப்பது பிரயாசம். எத்திறத்தோருக்கும் இந்தப் புண்ணியங் கன அவசரம். தாரமிழந்த

அந்தஸ்திலோ கற்பானது எவ்வளவு நுணுக்கமாய் எப்பிரியத்தையும் விட்டு விலகி நிற்கவேண்டுமென்றால் நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் இப்பேர்க்கொத்த சிந்தைகள்மட்டில் சாக்கிரதையாயிருக்க வேண்டியதுமன்றிக் கடந்தகாலத்தில் நடந்தவையை முதலாய்ச் சிந்திக்கவொண்ணாது. ஏனெனில் இந்தச் சிந்தனைகளால் ஆபத்துக்கு இடமிருப்பதுடன் இதனால் தகாத தோற்றங்கள் எளிதாய்ப் புத்தியில் வர இடமாயிருக்கும். அகுஸ்தீனென்பவர் தமது பிரிய சிநேகிதனாகிய அலிபியூஸ் என்பவனிடத்தில் இருந்த பரிசுத்தத்தனத்தைக் குறித்து வெகு அதிசயமாய்ப் பேசுவார். இவர் ஆத்துமம் எவ்வளவு சுத்தமாயிருந்ததெனில் வாலிபத்தில் இடங்கொடுத்த இன்ப சுகங்களின் ஞாபகந் தோற்றமுதலாய் இவர் மனந் திரும்பியபிறகு இவனைவிட்டு முழுதும் நீங்கிப் போயிற்றாம். உள்ளபடியே இன்னம் அழுகிப்போகாமல் நன்றாயிருக்குங் கனிவர்க்கங்களை இலைகளிலாகிலும் வைக்கோல் மணலிலாகிலும் வைத்துக் காப்பாற்றுவது எளிதென்று எல்லோருக்குந் தெரியும். ஆனால் கொஞ்சம் வதங்கி நசுங்கிப்போய்விட்டால் இவைகளைக் காப்பாற்றுவதற்குச் சர்க்கரை அல்லது தேனில் போடவேண்டுமேயல்லால் வேறு வழியில்லை. கற்பானது அழியாமல் பூரணமாயிருக்கையில் அதனை நிச்சயமாய்க் காப்பாற்றுவதற்கான பல வழிப்பாடுகள் உண்டு. ஆனால் ஒருவிசை குறைந்து சேதப்பட்டுவிட்டால் நான் உனக்குப் பலமுறை சொல்லிய வண்ணம் புத்திக்கு மெய்யான சர்க்கரை தேன்போலிருக்கப்பட்ட உத்தம பத்தியன்றி வேறொன்றும் இனி அதனைக் காப்பாற்றக் கூடாது.

கன்னியர்களுக்கோ மகா அருமை நுட்பமான கற்பு அவசரம் என்றும் இவர்கள் மகா இருதய சுத்தம் நுட்பமான மனச்சாட்சியுள்ளவர்களாய் எவ்வித

நூதனச் சிந்தைகளையும் அசுத்த இன்பங்களையும் முழுதும் அருவருத்து வெறுத்துத் தள்ளவேண்டும். இந்த அசுத்த இன்பங்கள் ஞானமுள்ள மனிதர்களுக்கு ஆனவையல்ல. கழுதை பன்றிமுதலிய மிருகங்களுக்கு ஏற்றவையாதலால் சற்றேனும் நாணயமுள்ள எவரும் இவைகளை விரும்பி ஆசிக்கத்தக்கவையல்ல. ஆதலால் இந்த உச்சித புண்ணியத்துக்கு முழுதும் ஒவ்வாததும் இதனோடு பொருந்தாததுமான எந்தெந்த விஷயங்களுக்கும் ஒப்பனையற்ற விதமாய் இந்தப் புண்ணியஞ் சிறந்ததென்று பரிசுத்த கற்புடையோர் நன்றாய் அறியவேண்டியிருக்கிறது. ஏனெனில் அர்ச். எரோனிமுசென்பவர் எழுதிவைத்த வண்ணம் இன்ப சுகங்கள் தம்மிலே உள்ளபடி இருக்கிறதைப்பார்க்கிலும் மட்டற்ற பிரியம் இன்பமுள்ளவையாகப் பசாசானது கன்னியர்களுக்கு விஸ்தரித்து வருணித்துக் காட்டி இவர்கள் இவைகளை ஒருவிசையாகிலுஞ் சுகித்துப்பார்க்கும்படி கன்னியர்களைப் பலமாய்த் தந்திரம்பண்ணப் பிரயாசப்படுகிறது. இந்த அர்ச்சியசிஷ்டவரோ சொல்வதுபோல் இந்தக் கற்புடையோர் தாங்கள் அறியாததை ஏதோ அதிக இன்பமுள்ளதுபோற் கருதுகிறபடியால் இதனால் வெகுவாய்க் கலங்கி நிற்பார்கள். சில பூச்சிகள் விளக்கைச் சுற்றிச்சுற்றிப் பறந்து இந்த விளக்கானது அழகாய்க் காணப்படுவதவ்வளவு பிரியஞ் சுகமுள்ளதென்று எண்ணி அதிற் பறந்தோடிப் பரிட்சை பார்த்தது, பார்த்ததுக்குள்ளாக அதில் மாளும். இவ்வகையாகவே வாலிபர்கள் பலமுறை சரீர இன்பச்சுவாலே வெகுபிரியம் மதுரமானதென்று மூட்டாள்தனமாய் எண்ணிப் பல வீண்சிந்தைகளுக்கு இடங்கொடுத்துக் கடைசியாய் அதில் மாண்டு மடிகிறார்கள். இதில் இவர்கள் மேற்சொல்லிய பூச்சிகளைப்பார்க்கிலும் மதியீனரெனவேண்டும்.

வெனெனில் விளக்கானது மெத்த அழகு காந்தியுள்ளதாயிருப்பதுபோலவே இன்பமாயுமிருக்குமென்று நினைக்க அப்பூசிகளுக்கு இடமுண்டு. ஆனால் இந்த வாலர்கள் ஆசித்துத் தேடுவது விசேஷமாய்த் தகாததென்று இவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தும் மிருகத்துக்கடுத்த இந்த இன்பசுகத்தை காலையம் நல்லொழுக்கத்துக்கு மேலாய் எண்ணுவது மகா மூடத்தனமல்லோ.

மெய்விவாக அந்தஸ்திலுங் கற்பானது அவசியமென்று பொதுப்பட நினைக்கிறதில்லை. இது பெருந்தப்பறை. வெனெனில் இந்த அந்தஸ்திலுங் கற்பை அநுசரிப்பது அவசியம். இன்னம் விசேஷவிதமாகவும் அதை அநுசரிக்க வேண்டியிருக்கிறது. இதனால் கலியாணப் பிரமாணிக்கத்தின் சுவாதீனங்களை விட்டுவிட வேண்டுமென்று நினைக்கத்தகாது. ஆனால் இதுவிஷயத்திற் கிரமப்பிசமாய் நடவாமல் எச்சரிக்கையாயிருப்பதற்கு இந்தப் புண்ணியத்தைக் காப்பது அவசியம். மேலுங் கோபித்துக்கொள்ளுங்கள், ஆனால் பாவத்துக்கு இடங்கொடாதேயுங்கள். என்னுங் கற்பனையானது கோபித்துக்கொள்ளாதேயுங்கள் என்னுங் கற்பனையை அநுசரிப்பதைப் பார்க்கிலும் அதிக பிரயாசை எனத்தகும். வெனெனில் கோபத்தைச் சீராய் உதவிக்கொள்வதைப் பார்க்கிலுங் கோபத்தை முழுதுந் தள்ளுவது அதிக எளிது. இத்தன்மையாகவே சரீரப்பிரியங்களைக் கிரமமாய் மட்டுத்திட்டத்தோடு உபயோகித்துக் கொள்வதைப்பார்க்கிலும் அதனை விட்டு அகன்று நிற்பது அதிக எளிதாம். தேவ அநுக்கிரகத்தால் மெய்விவாகம் அர்ச்சிக்கப்பட்டிருப்பதால் இது சுபாவீக ஆசாபாசத்தைத் தணிப்பதற்கு வெகு உதவியாயிருக்கிறதென்பது மெய். இதனை உபயோகித்துக்கொள்ளும் பலவீனரான பலர் உத்தரவின்படி நடப்பதாக எண்ணி

வெகு சூளுவாய் உத்தரவுக்கு மிஞ்சிப்போவார்கள். இத்தன்மையாய் மெய்விவாகப் பிரயோகத்தைத் துர்ப்பிரயோகமாக்கிவிடுவார்கள். பலமுறை திரவியவான்களில் அநேகர் பிறர் பொருள்களைக் கொண்டு அநியாயமாய்ச் சுகமடையத் தேடுவார்கள். வறுமையினாலோ அல்ல, உலோபித்தனத்தாற் செய்வார்கள். இத்தன்மையாகவே விவாக அந்தஸ்திலிருக்கிற பலபேர் கிரமமான ஒருவர்மட்டில் தங்கள் இருதயப் பக்ஷத்தை வைக்கக்கூடுமாயினும் இன்னம் வைக்கக் கடமையிருந்தும் மட்டுக்கடந்த காமாதுரத்தால் தங்களைச் சேராத அந்நிய பிரியங்களை ஆவலாய் நாடிப்போகக் கண்டுவருகிறோம். கடுமையான மருந்துகளை உண்பது எப்பொழுதும் ஆபத்து. வேண்டியதற்கு மேற் சாப்பட்டாலுஞ் சரி அல்லது அவைகள் வேண்டியபடி பக்குவம்பண்ணியிராமற் போனாலுஞ்சரி சவுக்கியத்திற்கு மெத்தக் கேடாம். சுபாவ ஆசாபாசத்துக்கு அவுழ்தமாயிருக்க ஒரு முறையில் மெய்விவாகம் ஏற்படுத்தவும் அர்ச்சிக்கவும்பட்டிருக்கிறது. இந்த அவுழ்தம் நல்ல சஞ்சீவியாயினும் வெகு கடுமையானது. ஆதலால் இதனை மட்டுத்திட்டமின்றிப் பத்தியுள்ள கிறீஸ்துவனுக்கு இருக்கவேண்டிய எச்சரிக்கை தப்பி உதவிக் கொண்டால் வெகு ஆபத்துக்குரியதாகும்.

புருஷன் பெண்சாதிகள் வியாதியைப்பற்றியாவது இன்னம் பல அலுவல் மூகாந்தரத்தைப்பற்றியாவது பலமுறை நெடுநாள் பிரிந்திருக்கும்படி நேரிடும். ஆதலால் சமுசாரிகளுக்கு இருவித கற்பு அவசியம். முதலாவது, இவர்கள் மேற்சொல்லிய எந்த காரணத்தை முன்னிட்டாவது பிரிந்திருக்கையில் எவ்விதச் சரீர இச்சையையும் விட்டு விலகி நிற்கவும்; இரண்டாவது, ஒருமித்திருக்கையில் தங்களை அடக்கிக் கிரமமாய் நடக்கவுங் கற்பென்னும் புண்

ணியம் மிக அவசரம். மெய்விவாகமென்னுர் தேவத்திரவிய அநுமானத்தின் பரிசுத்தத்தனத்தைக் கெடுத்ததை முன்னிட்டு நரகவாசிகளுக்குள் அநேகர் வெகு கடுமையாய் உபாதிக்கப்பட அர்ச். சியேன் கத்திரீனம்மாள் கண்டாள். இவர்கள் இவ்விதம் விசேஷமாய்த் தெண்டிக்கப்படுவது இவர்கள் பாவங்களின் அகோரத்தைப்பற்றியல்ல. ஏனெனில், கொலையுந் தேவதூஷணங்களும் அதிக அகோரமான பாவங்கள்தான் ஆனால் இவ்விதப் பாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் அற்பமும் இதின்மட்டிற் கவலை வையாமல் தங்கள் சீவியகாலமெல்லாம் இந்தப் பாவங்களைக் கட்டிக்கொண்டுவருவதால் இப்பேர்க்கொத்த கடின தெண்டனைக்குள்ளாகிறார்களென்று இந்த அர்ச்சியசிஷ்டவள் சொல்லுகின்றாள்.

ஆதலால் பிரிய சகோதரமே, எவ்வித அந்தஸ்துக்குங் கற்பானது எவ்வளவு அவசரமாய் இருக்குதென்று கண்டுகொள்ளுகிறாய். எல்லோரோடுஞ் சமாதானத்தையும் இன்னம் பரிசுத்தத்தனத்தையுந் தேடுங்கள். இந்தப் பரிசுத்தத்தனம் இல்லாவிட்டால் சர்வேசுரனை ஒருவருந் தரிசிக்க மாட்டார்களென்று அப்போஸ்தலர் வசனிக்கிறார். அர்ச். எரோனிமூஸ் என்பவர் அர்ச். கிறிசொஸ்தோம் என்பவர் இவர்கள் வியாக்கியானப்படி கற்பென்னும் புண்ணியத்தைத்தான் அப்போஸ்தலர் பரிசுத்தத்தனமென்று அழைக்கிறார். ஆம், பிரிய சகோதரமே, கற்பென்னும் புண்ணியமிராதவனுஞ் சுவாமியைப் பார்க்கமாட்டான். பரிசுத்த இருதயம் இராத எவனும் அவர் பரிசுத்த விடுதியில் வசிக்கமாட்டான். நமது இரக்ஷகர்தாமே சொல்லுமாப்போல் நாய்களுங் காமாதூரரும் அதினின்று தள்ளப்படுவார்கள். இதைப்பற்றித்தான் தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் இவர்களே சர்

வேசுவனைத் தரிசிப்பார்களென்று நமது இரக்ஷகர் தெளிவாய்த் திருவுளம்பற்றுகிறார்.

13-ம் அதிகாரம்.

கற்பைக் காப்பாற்றுவதற்கான புத்திமதிகள்.

ஆபத்துக்குரிய இலெளகீக தகாத இன்பத்துக்கு யாதொரு நாட்டத்தை வருவிக்கும் எது காரியத்தையும் அதிவிரைவில் தள்ளுகிறதற்கு எப்பொழுதும் உன்மீது மகா கவனமாயிரு. ஏனெனில் இவ்வித நாட்டமானது தோற்றமற்றவிதமாய் நம்மிடத்தில் இலேசாய் ஆரம்பித்து வெகுவாய் வேரூன்றிப் பலப்பட்டுப்போம். ஓரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் அந்த நாட்டத்துக்கு இடங்கொடுத்தபின் அதைத் தள்ளி நிவாரணம்பண்ணத் தேடுவதைப் பார்க்கிலும் அதனைவிட்டு அகன்று நிற்பதே எளிது. அர்ச். சின்னப்பர் வசனிக்குமாப்போல் கற்பானது மெத்த இலேசாய் உடையும் பண்டங்களில் நாம் காப்பாற்றி வைத்திருக்கும் பொக்கிஷம்போல் இருக்கிறது. கொஞ்சந் தப்பினால் ஒன்றோடொன்று மோதி வெகு இலேசாய்ப் பெரும்பாலும் உடைந்துபோகிற மண் பாண்டங்களுக்கே இந்தப் புண்ணியம் ஒத்ததாயிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. கெட்டுப்போகாத வெகு நேர்த்தியான பழங்களும் ஒன்றோடொன்று படும்படி நெருங்கியிருந்தால் கொஞ்சத்துக்குள் கறைபட்டுக் கெட்டுப்போம். ஓர் பாண்டத்தில் காப்பாற்றிவைத்திருக்குங் குளிர்ந்த சலத்

தை யாதொரு மிருகசெந்து கொஞ்சந் தொட்டுவிட்டால் அதின் குணம் மாறிக் குளிர்ச்சியும் போய் விடும்.

ஆதலால் பிரிய சகோதரமே, விளையாட்டுப்போலென்கிலும் பக்ஷ தாட்சணியத்திலேயாகிலும் மரியாதைக் குறைவாய் ஒருவரும் உன்னைத் தொடாமலிருக்கவும் நீதானே உன்னைத் தொடாமலிருக்கவும் வெகு எச்சரிக்கையாயிரு. வழக்கமாய் வராததால் கெட்ட கருத்தைப்பார்க்கிலும் அறியாமை தோற்றமற்றதனம் விளங்கும் இவ்விதக் கிருத்தியங்களில் கற்பானது பழுதின்றிக் காப்பாற்றப்பட சிலவிசை கூடுமாயினும் இந்தப் புண்ணியத்தின் சத்துவ பலத்துக்குஞ் சுக சௌந்திரியத்துக்கும் ஏதாகிலுங் குறை நஷ்டம் இதினால் எப்பொழுதும் நேரிடுமென்பது தப்பாது. ஆனால் மேரை மரியாதை தப்பினவிதமாய் எவராகிலுந் தொடும்படி சம்மதித்தாலோ கற்பானது முழுதுஞ் சேதப்பட்டு அழிந்துபோம்.

கற்புக்கு இயல்பாய் இருதயமே ஆதாரநிலை. சரீரமோ இதற்கு எத்தனைப்பொருளாம். ஆகையினால் தான் புத்தியில் உண்டாகுஞ் சிந்தைகளாலும் இருதயத்தில் பிறக்கும் ஆசை இச்சைகளாலுங் கற்பழிவதுபோலச் சரீர வெளிப்புலன்கள் யாவற்றாலுங் கற்பழிந்துபோம். இருதயப்பற்றுதலோடு மனப்பிரீதியாய் நாணயக்குறைவான எதுகாரியத்தையும் பேசுவதுங் கேட்பதும் பார்ப்பதும் நினைப்பதுந் தொடுவதுங் கற்புக்கு விரோதமான குற்றம். இதைப்பற்றித்தான் விபசாரமென்னும் பேர்முதலாய் உங்களுக்குள் உச்சரிக்கப்படாமலிருக்கவென்று அப்போஸ்தலர் சொல்லுகிறார். தேனீக்கள் புழுத்த பிணங்களைத் தொடாமலிருக்கிறதுமல்லாமல், அவைகளைச் சுற்றி வீசுந் துர்க்கந்தத்தையும் விட்டு ஓடிப்போம். உந்தக் கவியின் பத்தினிக் கரங்கள் வெள்ளைப்போ

ளத்தைலஞ் சொரிகிறதாம். இத்தைலம் எவ்விதச் சட்டலமும் கெடாமற் காப்பாற்ற உதவும். இவள் வார்த்தைகள் வெகுமேரை மரியாதையுள்ளவையென் பதற்கு அடையாளமாய் இவளது இதழ்கள் பவள நிறம்போன்ற நாடாவினுல் கட்டப்பட்டிருக்கிறது. இவள் கண்விழிகளோ சுத்தத்தைப்பற்றி மாடப் புறுவின் கண்களுக்கு ஒப்பிட்டிருக்கிறது. இவள் பரிசுத்தத்தனத்தின் குறிப்பாய் இவள் காதுகளில் பசும்பொன் நகைகள் தரிக்கப்பட்டிருக்கின்றன இவளது மூக்கோ லீபான் பர்வதத்துச்சேதர் என்னும் விருக்ஷத்துக்கு ஒத்ததாம். இச்சாதி விருக்ஷம் அழியாமையைக் காட்டும். மெய்யான பத்தி நிலைபெற்றவன் கரங்களும் இதழ்களுஞ் செவி நேத்திரங்களுஞ் சரீரமுழுதும் நாணயமுள்ளதாய் இருக்கவேண்டும்.

இதுவிஷயத்தில் அர்ச். பசீல் என்பவர் மகா தாழ்ச்சியோடு தம்மைக்குறித்துப் பேசும் ஒரு நாள் தம்முடைய வாயால் வெளிப்படுத்தினதாகப் பூர்வீக குருக்களில் ஒருவராகிய கசியேன் என்னும் அருளப்பர் நிச்சயிக்கும் விசேஷ வாக்கியமொன்றை உனக்கு உதாரணமாகச் சொல்லிக்காட்ட மனதாயிருக்கிறேன். அவ்வாக்கியம் என்னவெனில் நான் பெண்பிள்ளைகள் முகம் அறியேன், ஆயினும் நான் கன்னிமையுள்ளவனல்லவென்றார். உள்ளபடியே எத்தனை விதக காமக்கொடூரங்கள் இருக்கின்றனவோ அத்தனைவிதமாய்க் கற்பானது அழிந்துபோகிறது. இவைகள் சொற்பம் அல்லது கனமானவையாய் இருப்பதளவாகக் கற்பைப் பலவீனப்படுத்தி அல்லது பலமாய்க் காயப்படுத்தி அல்லது முழுதும் அழித்துவிடுகின்றன. இன்ப சுகத்தை நாடிய விமரிசையற்ற சிற்சில சரசபரியாச விளையாட்டுகள் உண்டு. சரியாய்ப் பேசவேண்டுமானுல் இவைகள் கற்பைக் கெடுக்காவாயினும் அதைத் துர்ப்பலப்படுத்தித் திராணி

யற்றதாக்கி அதன் ஒளியை மங்கடிக்கின்றன. இன்னம் வேறு சரசபரியாசங்கள் உண்டு. இவைகள் விமரிசையற்றவைகளாயிருப்பதுடன் துர்நாட்டம் உள்ளவைகளாயும் வீண் பகடிக்குரியவைகளாயிருப்பதுடன் நாணயமற்றவையாயும் இன்ப சுகத்துக்கு அடுத்தவையாயிருப்பதுடன் ஸ்பரிச பிரியத்துக்காணவைகளாயும் இருக்கின்றன. இவைகள் குறைந்த பட்சங் கற்பானது முழுதுஞ் சேதப்படத்தக்க விதமாய் அதனைக் காயப்படுத்துகின்றன. ஆனால் இவ்விதப் பரியாசங்கள் காமவிகார சிற்றின்பக் கடைசி எல்லைவரைக்கும் போகுமாகில் கற்பானது முழுதும் அழிந்துவிடும். இன்னம் விபசாரத்தினாலுஞ் சோரம் அடாத சிற்றின்பப் போகத்தினாலுமுதலாய் இதற்கு நேரிடுங் கேட்டைப்பார்க்கிலும் மேற்சொல்லிய விதமாய்க் கெட்டுப்போகிறதில் மகா நிர்ப்பாக்கிய தீங்கு நீசத்தனம் அடங்கியிருக்கிறது. ஏனெனில் மிருகத்துக்கடுத்த இப்போது சொல்லிய இன்ப சுக பாவ அக்கிரமங்கள் கனமான குரூரமாயிருந்தபோதிலுந் தெர்த்துலியேன் என்னும் வேதபாரகர் கற்பைக்குறித்து எழுதிய புத்தகத்திற் சொல்லுமாப்போல மேற்சொல்லிய சரசபரியாசங்கள் பாவ அக்கிரமங்கள் நிறைந்த சண்டாள பெரும் பூதங்களாம். மேலும் அர்ச். பசீல் என்பவர் தம்மைக் கன்னிமையுள்ளவன் அல்லவென்றபோது ஒருவாறு கிரமப் பிசகாய்த் தாம் நடந்ததாகச் சொல்ல மனதாயிருந்தாரென்று அர்த்தமாகாது. ஆனால் இவர் சரீரங் கன்னிமையுள்ளதாயினும் புத்தி இருதயத்தை அசுத்தப்படுத்துகிற துர்நினைவுகளைப்பற்றி இவ்வாறு பேசினார் என நியாயத்துடன் நினைக்க இடமுண்டு. இந்த இருதயக்கற்பு பரிசுத்தத்தனத்தைத்தான் சகல ஆபத்தினின்றுங் காப்பாற்றப் பக்தியில் சிறந்தோர் ஏகசிந்தையாயிருந்து வருந்திப் பிரயாசப்படுவார்கள்.

இந்த உச்சிதமான புண்ணியத்துக்கு விரோதமாய் நரிகளைப்போல் நடக்கிற மனுஷர்களிடத்தில் கிஞ்சித்தும் உறவாடாதே. விசேஷமாய் நாணயங் கெட்ட துர்நடத்தையுள்ளவர்களை விட்டு அகன்றிரு. துர்நடத்தையுள்ளவர்கள் வழக்கமாய் நாணயங் கெட்டவர்களாய் இருக்கிறார்கள்.

இயல்பாய் உருசிகரமுள்ள நல்ல சாதி வாதுமை மரங்களை வெள்ளாட்டுக் கிடாக்கள் கடிக்குமாகில் அம்மரத்துக் கனிகள் கசப்பாகிவிடுகிறதாம். துஷ்டத்தனமுள்ள மிருகத்துக்கு ஒப்பான இம்மேனையான மனுஷர்கள் ஆண் பிள்ளைகளோடென்கிலும் பெண் பிள்ளைகளோடென்கிலும் பேசும்போது கொஞ்சமாகிலும் மானத்துக்குப் பழுதுவராமல் பேசவறியார்கள். இவர்கள் தங்கள் கண்களிலும் சுவாசங்களிலும் விஷம்போன்ற நாகப் பாம்புகளுக்கு ஒப்பானவர்கள் எனத்தகும்.

இதற்கு விரோதமாய்க் கற்புள்ள சான்றோரிடத்து நற்சகவாசம் பண்ணக்கடவாய். வேத புத்தகங்களை அடிக்கடி வாசித்துவா. ஏனெனில் தேவவாக்கியங் கற்புள்ளது. அதை நேசிப்பவர்கள் கற்புள்ளவர்கள் ஆவார்கள். ஆகையால் தாவீதென்பவர் இதைப் புட்பராகமென்னும் விலையுயர்ந்த கல்லுக்கு ஒப்பனையிடுகிறார். இதனது விசேஷ குணம் ஆசாபாச வெப்பத்தைத் தணிக்குந் தன்மையுடையதாம்.

சிலுவையில் அறையுண்டிருக்குஞ் சேசுகிறீஸ்து நாதர் அண்டையில் ஞான விதமாய்த் தியானத்தினால் என்கிலுந் திவ்வியநற்கருணை மூலியமாக உண்மையாய்ச் சரீரசம்பந்தத்தினால் என்கிலும் எப்பொழுதுமிரு. கற்புள்ள செம்மறிப்புருவையென்று சொல்லப்படும் ஓர் புல்லுண்டாம். இதின்மீது படுத்திருப்பவன் கற்புள்ளவனாயிருக்கும்படி செய்ய இதற்கு விசேஷ சத்தி உண்டாம். மாசற்ற செம்மறிப்புரு

வையாகிற உன் ஆண்டவரிடத்து உன் இருதயம் இளைப்பாறுகையில் உன் ஆத்தும சரீர சத்துவ புலன்களெல்லாம் எவ்வளவோ கற்புள்ளவைகளாக வேண்டும்.

14-ம் அதிகாரம்.

திரவியங்களிருக்க மனதாரித்திரமாய் இருத்தல்.

மனதாரித்திரர் பாக்கியவான்கள் ஏனெனில் மோக்ஷராச்சியம் அவர்களுடையது. ஆதலால் மனத்திரவியவான்கள் நிர்ப்பாக்கியவான்கள். ஏனென்றால் நரகத்துன்பம் இவர்களுக்குச் சொந்தம். தன் ஆஸ்தியின்மட்டில் சிந்தையாயிருப்பவனும் ஆஸ்திச் சம்பத்தில் மனப்பற்றுதலுள்ளவனும் மனத் திரவியவானும். திரவியச் சிந்தையில்லாதவனும் ஆஸ்தியில் அற்ப ஆசைப் பற்றுதல் வையாதவனும் மனதாரித்திரன் எனப்படுவான். மீன்கொத்தியின் உருண்டையான கூடுகட்டும். அதின் மேற்பக்கத்தில்மாத்திரம் மகா சிறியதோர் துவாரமிடும். கடற்கரையில் வழக்கமாய் இவைகளைக் கட்டும். எவ்வளவு திறமையோடும் பலமாகவுங் கட்டுமென்றால் கடற் பெருக்கில் தண்ணீரில் அகப்பட்டுக்கொண்டாலும் ஒரு துளித் தண்ணீரும் இதில் நுழையாது. ஆனால் தண்ணீரின் மேல் மிதந்துகொண்டு கடல் நடுவிற் கடல் எசமான்போலிருக்கும். பிரிய சகோதரமே, உன் இருதயம் இந்தக் கூண்டைப்போல் மோக்ஷத்துக்கு மாத்திரந் திறக்கப்பட்டிருக்கவேண்டும். இவ்வுலக அநித்

தியஆஸ்திபாஸ்திகள் இதில் நுழையக்கூடாது. உனக்கு ஆஸ்திகளிருந்தால் அதில் உன்னிருதயப் பற்றுதல் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. எப்பொழுதும் உன்னிருதயம் உலகத்துக்குமேலே நிற்கட்டும். திரவியச் சம்பத்துகளிலும் இவைகள் இல்லாததுபோல் இவைகளுக்குத் தலைமையாயிருக்கட்டும். பரலோகத்துக்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் உன் மனதை இலௌகிக பொருட்களில் வையாதே. உன் இருதயம் எப்பொழுதும் ஆஸ்தித் திரவியங்களுக்கு மேலாய் நின்று அவைகளுக்கு வசமாகாமல் அவைகளை ஆளும்படிச் செய்யக்கடவாய். ஒருவனிடத்தில் விஷமருந்து இருக்கிறது வேறே, அந்த விஷமருந்தைக் குடித்திருக்கிறது வேறே. மருந்துக் கடைக்காரர்களிடம் பல விஷமருந்துகள் எப்பொழுதுமிருக்கும். பல சமயங்களில் இதை உதவிக்கொள்வார்கள். ஆனால் இதனால் இவர்கள் விஷமிடப்பட்டுச் சாகிறதில்லை. ஏனெனில் மருந்துக் கடையில்மாத்திரம் விஷமிருக்கிறதேயன்றி இவர்கள் சரீரத்தில் இருக்கிறதில்லை. இப்படியே உனக்கு எவ்வளவுதான் ஆஸ்திச் சம்பத்துகள் இருந்தபோதிலும் அதினால் உனக்கு அற்ப தின்மையும் வராமலிருக்கலாம். அப்படி ஆபத்து வராமலிருப்பதற்கு உன் இருதயத்தில் ஆஸ்திகளிராமல் உன் வீட்டிலாகிலும் அல்லது பணப்பையிலாகிலும் இருக்கவேண்டும். மெய்யாகவே மகாராசனாயிருந்து ஆசையால் எளியவனாயிருப்பது கிறீஸ்துவனுக்கு மகா பாக்கியமெனத்தகும். ஏனெனில் இவ்வழியாய்க் கிறீஸ்துவனுக்கு ஆஸ்தித் திரவியங்கள் இவ்வுலகில் உபயோகமாயிருக்கும். மேலும் மறுலோகத்தைச் சம்பாதிக்கவேண்டிய தாரித்திரத்தின் பலனுஞ்சித்திக்கும்.

ஆ பிரிய சகோதரமே, தான் உலோபியென்று எவனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். எவனுந் தனக்கு

இப்படிப்பட்ட நீச குணம் உண்டென்று சொல்லான். தனக்கு வெகு பிள்ளைகளிருப்பதாலும் அல்லது வருங்காலம் எப்படியிருக்குமோ தெரியாததாலுங் கொஞ்சம் பணங் காசுள்ளவனாய் இருக்க வழிபார்ப்பது விவேகமென்று சொல்லுவான். ஆனால் மிஞ்சி இருக்கிறதென்று ஒருநாளுஞ் சொல்லான். ஆஸ்திகளை மேன்மேலுஞ் சம்பாதிப்பதற்கு எப்பொழுதும் ஏதாகிலும் ஒரு நல்ல முகாந்தரம் இவர்களுக்குக் கிடையாமற்போகாது. கன லோபிகள் முதலாய்த் தாங்கள் உலோபிகளென்று ஏற்றுக்கொள்ளாரன்றித் தாங்கள் உலோபிகளாயிருக்கிறார்களென்று மனச்சாக்ஷிப்படி நினைக்கமுதலாய் மாட்டார்கள். உள்ளபடி இதின்மேல் இவர்களுக்கு ஒரு சிந்தையுமில்லை. ஏனென்றால் உலோபித்தனம் அதிசயம் வருவிக்கத்தக்க ஓர்விதக் காய்ச்சல். இந்தக் காய்ச்சல் எவ்வளவுக்கு அதிக உக்கிரமாயிருக்கிறதோ அவ்வளவுக்கும் பலமுறை சொற்பமாய்க் காணப்படும். பரலோக அக்கினி முட்செடியைக் கொளுத்தி எரித்தபோதிலும் அந்த முட்செடியை அழிக்காதிருக்க மோயிசன் கண்டார். ஆனால் இதற்கு விரோதமாய் உலோபித்தனத்தின் பிரபஞ்ச அக்கினியானது உலோபியை அற்பமென்கிலுஞ் சுட்டெரிக்காமல் அவனை அழித்து விழுங்கிவிடுகிறது. ஆகிலும் மகா அகோர உஷ்ணத்திலும் மற்றெவரும் அநுபவியாத இனிய குளிர்ச்சியை நுகருகிறதாகப் பெருமையாய்ச் சொல்லுவான். திரவியத்தின்மீது இவனுக்குள்ள தீராத தாகம் சுபாவ இன்பமான தாகமென்பான்.

உனக்கிராத திரவியங்களை ஆவலாய் ஆசித்து அதில் ஓயாமற் சிந்தையாயிருப்பாயேயாகில் அநியாயமாய் இவைகளைச் சம்பாதிக்க உனக்கு மனமில்லையென்று நீ என்னதான் சொல்லினும் நீ மெய்யான உலோபியென்பதற்கு அற்ப சமுசயமுமில்லை. காய்ச்

சலாயிருப்பவன் ஆவல்கொண்டு ஓயாமல் குடிக்க ஆசிப்பான். வெறுந் தண்ணீரமாத்திரங் குடிக்க மனதாயிருக்கிறேன் என்றபோதிலும் இதனால் இவனைக் காய்ச்சல் இன்னம் விட்டதில்லையென்பதற்கு அடையாளமாம்.

பிரிய சகோதரமே, நியாயமாய் ஒருவனுக்கு இருப்பதை நியாயத்தோடு கைக்கொள்ள நாம் ஆசிப்பது நீதியோ அல்லவோ தெரியவில்லை. ஏனெனில் இந்த ஆசையினாலே மற்றவர்களுக்கு இடைஞ்சலுண்டாகி நமது சௌக்கியத்தைமாத்திரந் தேடிக்கொள்ள ஆசிப்பதுபோலத் தோன்றுகிறது. நியாயமாய் ஒருவனுக்கு இருக்கும் பொருளை நாம் நியாயத்தோடு அடைந்து கைக்கொள்ளுவதைப் பார்க்கிலும் நியாயத்தோடு அவனிடத்திலேயே அந்தப் பொருள் இருப்பது அதிக நியாயமாயிருக்கிறதல்லவா. ஆதலால் அவனுக்கிருக்கும் நன்மையை நாம் ஆசித்து அவன் அதை இழந்துவிடும்படி கோருவானேன். மெய்யாகவே நமக்கு இருக்கும் இந்த ஆசை நீதிக்கு விரோதமாயிராதபோதிலும் பிறசிநேகத்துக்கு அடுத்ததாயிராது. ஏனெனில் நியாயத்தோடு நமக்கு இருக்கவேண்டுமென்று நாம் ஆசிக்குங் காரியத்தை நியாயத்தோடே ஏவனாகிலும் ஆசிக்க நமக்குப் பிரியமிராது. அக்காப் என்பவன் இப்படித்தான் பாவத்தைக் கட்டிக்கொண்டான். நபோத்தென்பவனுக்கிருந்த திராக்ஷத் தோட்டத்தை நியாத்தோடு வாங்க மனதானான், ஆனால் நபோத்தென்பவனுக்கு இன்னம் அதிக நியாயத்தோடு தனக்கிருக்குந் தோட்டத்தை விட மனதில்லாமற்போயிற்று. ஆயினும் அக்காபென்பவன் வெகுகாலமாய் ஏக்கங்கொண்டு வெகுவாய் அதை ஆசித்ததால் சுவாமிக்கு ஏலாதவனாய்ப் போனான்.

பிரிய சகோதரமே, பிறர்பொருள் உனக்குச் சித்திக்கவேண்டுமென்று ஆசிப்பதில் கொஞ்சம் பொறுமையாய்க் காத்திரு. புறத்தியான் மூந்தத் தனக்கிருப்பதை விட்டுவிட ஆசிக்கட்டும். ஏனென்றால் அப்போது அவன் ஆசை உனக்கிருக்கும் ஆசையை நியாயமுள்ளதாய் இன்னம் பிறசிநேகமுள்ளதாய்க் கிவிடும். நான் சொல்வதைக் கேள். உனக்கிருக்கக் கூடுமான ஆஸ்திப் பொருட்களைப் பராமரித்து விருத்திசெய்யப் பிரயாசப்படவேண்டியதே. ஆனால் நீதியோடு இவ்விதம் பிரயாசப்படுவதுமல்லாமற் பிறசிநேகத்தை விடாமல் அமரிக்கையாய்ப் பிரயாசப்படு.

உனக்குள்ள ஆஸ்திகளின்பேரில் நீ மிகுந்த பற்றுதலாய் அதின்பேரிலேயே நினைப்பாயிருந்து மிஞ்சின கவலைகொண்டு எங்கே அவைகளை இழந்துபோகிறுயோ என்கிற கலக்கம் பயம் உனக்கு இருந்தால் இன்னம் உனக்கு ஓர்விதக் காய்ச்சல் உண்டென்று அறிந்துகொள். ஏனெனிற் காய்ச்சலாயிருக்கிறவர்கள் வெகு ஆவலாகவும் பிரியமாகவுந் தண்ணீர் குடிப்பார்கள். சவுக்கியமாயிருக்கிறவர்கள் இவர்களைப் போலக் குடிக்கமாட்டார்கள். ஒரு காரியத்தின்மட்டில் மிகுந்த பிரியமிருக்கும்போது அதின்பேரில் மிகுந்த பற்றுதலில்லாமலிருப்பது கூடுமானதல்ல. உன் ஆஸ்திபாஸ்திகளுக்குச் சேதம் வந்து அதினால் உன் இருதயம் வெகுவாய்த் துக்கித்துச் சஞ்சலப்பட்டால் அதின்மட்டில் உனக்கு மிகுந்த பற்றுதல் உண்டென்று அறிந்துகொள். அதேனெனில் இழந்துபோன ஓர் காரியத்தின்மட்டில் நமக்கிருக்கும் பற்றுதல் எப்படிப்பட்டதென்று காண்பிப்பதற்கு அதினால் வருங் கஸ்திலையவிட வேறொன்றும் அதிகமாய்க் காண்பியாது.

ஆதலால் உனக்கு இராத திரவிய சம்பத்துகள் வரவேண்டுமென்று மிஞ்சினவிதமாய் ஆசியாதே.

உனக்கிருக்கும் ஆஸ்திகளில் உன்னிருதயத்தை அதிகமாய் வையாதே, உனக்கு வரக்கூடுமான சேதத்தைப்பற்றி ஏக்கங்கொண்டு கஸ்திப்படாதே, அப்போது நீ மெய்யாகவே ஐசுவரியவானாயிருந்தபோதிலும் உன் இருதயப்பற்றுதலால் ஐசுவரியவானாயிருக்கிறதில்லையென்று நீ நினைக்கலாம். இன்னம் மனதாரித்திரனாயிருக்கிறாயென்றும் மன தாரித்திரர்களுக்குச் சொந்தமான வானராச்சியம் உனக்குச் சொந்தமாயிருக்கிறபடியால் மெய்யாகவே நீ பாக்கியவானென்றும் நீ நினைக்க இடமுண்டு.

15-ம் அதிகாரம்.

ஆஸ்தித் திரவியங்களிருக்கையில் மெய்யான தாரித்திரத்தை அநுசரிக்கும் முறை.

பேர்பெற்ற சித்திரக்காரன் ஒருவன் ஒன்றுக்கொன்று சரிப்படாத பலவிதக் குணங்களையும் ஒன்றாகக் காட்டி மகா சாமார்த்தியமாய் அத்தேன் பிரஜைகள் எப்பேர்க்கொத்தவர்களென்று எழுதிக்காட்டினனும், பிரிய சகோதரமே, ஆஸ்தியும் எளிமைத்தனமும் இலௌகீக நன்மைகளைச் சம்பாதிக்க மெய்யான கவலையும் அதின்மட்டில் மெய்யான வெறுப்பும் எல்லாம் ஒருமிக்க உன்னிருதயத்திற் காண விரும்புகின்றேன். உலக மனிதர்களைப் பார்க்கிலுந் தானே உனக்கிருக்கும் ஸ்திதிகள் அதிகரித்துக் கைகூடிவரும்படிப் பிரயாசப்படக்கடவாய். மகா பிரபுக்களது தோட்டக்காரர்கள் அவர்கள் தோட்டங்களை அலங்கரித்

துப் பயிரிடுவதற்கு வெகு சுறுசுறுப்போடு பிரயாசப்படுகிறார்களல்லோ. சிலவிசை இந்தத் தோட்டங்கள் இவர்களுக்குச் சொந்தமாயிருந்தால் அவ்வளவாக அலங்கரித்துச் சீர்ப்படுத்தத் தேடார்கள். எது காரணத்தினாலென்றால் இந்தத் தோட்டங்கள் மன்னவான்களுக்குச் சொந்தமென்று இவர்களுக்குப் பிரியப்படுவதற்காக இப்படி வருந்திப் பிரயாசப்படுவார்கள். பிரிய சகோதரமே, உனக்கிருக்கும் காணி பூமி ஆஸ்திகள் உனக்குச் சொந்தமல்ல. அவைகளை விருத்திசெய்யும்படி சுவாமி உனக்குக் கொடுத்தார். ஆதலால் அதின்மட்டில் எப்போழுதும் வேண்டிய கவனம் வைத்து விருத்தியாகப் பார்ப்பதால் நாம் அவருக்குப் பிரியமாய் ஊழியஞ் செய்யத் தேடுகிறோமெனத்தகும். ஆனால் உலக மனிதர்கள் தங்கள் ஆஸ்தி விருத்தியாகப் படும் பிரயாசத்தைப் பார்க்கிலும் நாம் அதிக நிலைமையோடு பிரயாசப்படுவோம். ஏனென்றால் உலக மனிதர்கள் தங்கள் சுயநலத்துக்காகவே பிரயாசப்படுவார்கள், நாமோ சுவாமியுடைய நேசத்தைப்பற்றிப் பிரயாசப்பட்டு உழைப்போம். ஆனால் சுயபக்ஷமானது தானென்கிற ஆணவமுடையதாய் ஏக்கங்கொண்டிருப்பதுபோல் அதற்காகப் படும் பிரயாசையிலுங் கலக்க ஏக்கங் கலந்திருக்கும். தேவசிநேகமானது அமரிக்கைச் சமாதானத்தை வருவிப்பதால் அதில் ஊன்றி உலக நன்மையைச் சம்பாதிக்கப் படும் பிரயாசமும் இளைப்பாற்றி இன்பமாம். ஆதலால் நமக்கிருக்கும் நன்மைகளைக் காப்பாற்றவும் இன்னம் நியாயமான சமயங் கிடைக்கும்போது நமது அந்தஸ்துக்கு ஒத்தவிதமாய் நமது இலௌகீக நன்மைகள் அதிகரிக்கவும் பிரியத்தோடு பிரயாசப்படக்கடவோம். ஏனெனில் சுவாமி தமது பக்ஷத்தை முன்னிட்டு நாம் இவ்விதம் நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறார்.

ஆனால் உன் சொந்த சுய பக்ஷத்தால் நீ மோசம் போகாதபடி சாக்கிரதையாயிரு. ஏனென்றால் பல முறை நமது சுய பக்ஷம் எவ்வளவு நேத்தியாய்த் தேவசிநேகம்போலக் காட்டிக்கொள்ளுகிறதெனில் நமது சுய பக்ஷத்தையே தேவசிநேகமாக எண்ணிக் கொள்ளுகிறோம். ஆதலால் இப்படி நீ மோசம்போகாதபடிக்கும் இலௌகீக நன்மைகளைச் சம்பாதிக்க நீ கொள்ளுங் கவலை உலோபித்தனமாய் மாறிப்போகாதபடிக்கும் முந்தின அதிகாரத்தில் சொல்லியதை அநுசரிப்பதுடன் சுவாமி நமக்கு எவ்வித ஆஸ்தித் திரவியங்களைக் கொடுக்கினும் அடிக்கடி மெய்யான தாரித்திரத்தை ஆசித்து அதை அநுசரிப்பது அவசரம். ஆதலால் உனக்குள்ள ஆஸ்திகளில் ஒரு பங்கை நல்ல மனதோடு ஏழைப் பரதேசிகளுக்குத் தத்தஞ் செய்துவிடு. எப்போதும் அந்தப் பங்கு உனக்குச் சொந்தமல்லவென்றாற்போலிருக்கட்டும். ஏனெனில் நமக்கிருப்பதைக் கொடுத்துவிடுவதால் அவ்வளவுக்கும் எளிமையாவோம். இவ்வாறு எவ்வளவுக்கதிகமாய்க் கொடுப்போமோ அவ்வளவுக்கும் அதிகமாய் எளிமையாவோம். ஆனால் இவைகளை எல்லாம் சுவாமி மறுலோகத்திலுமன்றி இன்னம் இவ்வுலகில் தானே உனக்குக் கொடுப்பானென்பது உண்மை. ஏனெனில் நமக்கு இலௌகீக நன்மைகள் விருத்தியாவதற்கு உத்தமமான வழி தானதர்மஞ் செய்வதே. ஆனால் சுவாமி உனக்கு மறுபடியுந் திரவிய சம்பத்தைக் கொடுக்கும்வரையில் நீ செய்யுந் தானதர்மத்தை முன்னிட்டு எப்பொழுதுங் கொஞ்சம் எளியவனாயிருப்பாய், தானதர்மஞ் செய்வதால் வரும் எளிமைத்தனம் மெய்யாகவே அதிஷ்டமான எளிமைத்தனமாம்.

எளியவர்களையும் எளிமைத்தனத்தையுஞ் சிநேகி, இந்தச் சிநேகத்தால் மெய்யாகவே எளியவனாவாய்.

வனென்றால் நாம் நேசிக்கும் காரியங்களுக்குச் சரியொத்தவர்களாகிறோமென்று வேத புத்தகத்தில் சொல்லியிருக்கிறது. சிநேகிதர்களுக்குள் சிநேகமே யாது காரியத்தையும் வித்தியாசமில்லாமற் சரியாக்கிவிடும். பலவீனனாயிருக்கிறவன் எவனோ அவனோடு நானும் பலவீனனாயிருக்கிறேன் என்று அர்ச். சின்னப்பர் வசனிக்கின்றார். இத்தன்மையாகவே ஏழையாயிருப்பவனோடு நானும் ஏழையாயிருக்கிறேனென்று இவர் சொல்லக்கூடும். அதேனெனில் பிறர்மட்டில் இவருக்குண்டாயிருந்த நேசத்தால் இவர் பட்சம் வைத்திருந்தவர்களுக்குச் சரியொத்தவரானார். ஆதலால் ஏழைகளை நேசித்தால் அவர்கள் ஏழைத்தனத்தில் உண்மையாகவே உனக்குப் பங்கிருப்பதுமன்றி அவர்களைப்போல் நீயும் எளியவனாயிருப்பாய்.

இத்தன்மையாய் ஏழைகள்மீது பட்சமாயிருப்பாயேயாகில் அடிக்கடி அவர்களுக்கு ஆறுதலான வார்த்தை சொல்லி அவர்கள் உன் வீட்டுக்கு வரப் பிரியமாய்ப் பார்த்து நீயும் அவர்கள் வீட்டுக்குப்போய் அவர்களைச் சந்திப்பாய். அவர்களோடு மனப்பிரீதியாய்ச் சம்பாஷிப்பதுமல்லாமல் கோவில்களிலுந் தெருவீதிகளிலும் இன்னம் மற்ற எந்தவிடங்களிலும் அவர்கள் உன்னை அண்டிவருவது உனக்குப் பிரியமாயிருக்கட்டும். எளியவர்கள் உனக்குச் சரியொத்தவர்களென்று எண்ணி நீயும் அவர்களோடு எளியவனாயிருந்து இந்த ஏழைகளிடத்தில் இருக்கக்கூடுமான ஆஸ்தியைப்பார்க்கிலும் உன்னிடத்திலிருக்குந் திரவியம் அதிகமென்று அவர்களுக்குத் தானதர்மஞ்செய்து உன் கையால் நீ திரவிய சம்பன்னனாயிருக்கப் பார்.

பிரிய சகோதரமே, இன்னம் அதிகமாய்ச் செய்ய உனக்கு விருப்பமிருக்குமேயாகில் எளியவர்களைப்போல் நீயும் ஏழையாயிருக்கப் பிரியங்கொள்ளுவது

போதாது, ஆனால் எளியவர்களைப்பார்க்கிலும் அதிக ஏழைத் தாரித்திரனாயிருக்கக்கடவாய். இது எப்படியென்பாயாக்கும்; ஊழியன் தன் எசமானுக்குச் சின்னவன். ஆதலால் எளியவர்களுக்கு ஊழியனாய் வியாதியில் அவர்களுக்கு உன் கையால் ஒத்தாசை ஊழியஞ் செய்து உன் சொந்த செலவைக்கொண்டே அவர்களுக்கு வேண்டிய பத்தியம் பரிகாரஞ் செய்து அவர்கள் வஸ்திரங்களைச் சுத்தஞ் செய்து படுக்கையைத் தட்டிப்போட்டு நானாவிதப் பணிவிடையுஞ் செய்துவா. ஆ பிரிய சகோதரமே, பொன்முடியினும் இவ்வூழியம் அதிக விலைபெற்றது. இவ்வுலகில் கீர்த்திதங்கிய அரசர்களில் ஒருவராகிய அர்ச். பிரகாச இராசாவுக்கு ஏழைகள்மட்டில் இருந்த தயை இரக்கம் மகா பிரமிப்பு வருவிக்கத்தக்கது. இவர் எவ்வித மகத்தான காரியங்களிலும் மெய்யாகவே பெரியவராய் விளங்கினார். ஏழைகளுக்கு அன்னமிட்டுத் தமது கையால் பரிமாறுவார். ஏறக்குறைய நாள்தோறுந் தம்முடன் மூன்று ஏழைகள் சாப்பிடும்படிச் செய்வார். பலமுறை அவர்கள்பேரில் இவருக்குள்ள பிரியத்தால் மகா விருப்பத்தோடு அவர்கள் சாப்பிட்டு மீந்ததைச் சாப்பிடுவார். பிணியாளிகள் மடங்களில் அடிக்கடி வியாதிஸ்தர்களைச் சந்திக்கப்போவார். வழக்கமாய்க் குஷ்டரோகிகள் முதலிய கடின வியாதிஸ்தர்களுக்குத் தயை பக்ஷங் காட்டி இவர்களிடத்தில் உலக இரக்ஷகனைப் பார்ப்பதுபோல் சங்கையாய்த் தலையில் ஒன்றும் போடாமல் முழந்தாளிட்டு ஊழியஞ் செய்துவருவார். உருக்கமுள்ள தாயானவள் தன் பிள்ளையை நேசிப்பதுபோல் வியாதிஸ்தர்களை நேசிப்பார். இங்கிரி தேசத்தின் இராசகுமாரத்தியாகிய அர்ச். எலிசபெத்தம்மாள் வழக்கமாய் ஏழைகளுடன் இருப்பதுமன்றிப் பலமுறை தோழிமாருக்குமுன்பாக ஏழையைப்போல் உடுத்திக்கொள்ளு

வாள். நான் ஏழையாயிருந்தால் இப்படித்தான் உடுத்திக்கொள்வேனென்று பல தருணங்களில் தோழிமாருக்குச் சொல்வாள். ஆ பிரிய சகோதரமே, இந்த இராசாவுக்கும் இந்த மன்னவதிக்கும் ஆஸ்தித் திரவியங்களிருந்தாலும் எவ்வளவு ஏழைகளாகவும் மன தாரித்திரத்தில் எவ்வளவு மகாராசர்களாகவும் இருந்தார்கள். இத்தன்மையாய் எளியவர்களாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் மோக்ஷவிராச்சியம் இவர்களுக்குச் சொந்தம். நான் பசியாயிருந்தேன், எனக்குப் போசனங் கொடுத்தீர்கள். குளிர் நடுக்கங் கொண்டிருந்தேன், எனக்கு வஸ்திரமளித்தீர்கள். உலக ஆதியிலேயே உங்களுக்காக முஸ்திப்பு செய்யப்பட்டிருக்கும் வான இராச்சியத்திற்கு வாருங்களென்று நடுத்தீர்வை நாளில் ஏழைகளுக்கும் இராசாக்களுக்கும் இராசாவாகிய பரமகர்த்தர் சொல்லுவார். பல தருணத்தில் ஏதாகிலுங் குறைவருத்தம் அநுபவியாதவன் ஒருவனுமில்லை. நினையாத சமயத்தில் ஒரு விருந்தாளி வருவான். இவனை நன்றாய்ச் சவரக்ஷணை செய்ய மனமிருக்கும். ஆனால் அச்சமயத்தில் அதற்கு வழியிராது. தகுந்தவிதமாய் ஓர் கூட்டத்திற் போக நல்ல உடுப்பு வேண்டுமென்று ஆசிப்பாய். அத்தருணத்தில் அந்த உடுப்பு உன்னிடத்திலிராமல் வேறே தூலயிட்ட இடத்திலிருக்கும். சில விசை களஞ்சியத்திலிருக்கும் நெல்லெல்லாம் பதராய்ப்போம். ஒரு பட்டிக்காட்டில் வயல் வெளிகளில் நாளைப் போக்கவேண்டியிருக்கும். அங்கே ஒன்றும் அகப்படாது. ஒரு கட்டில் என்கிலும் அறையென்கிலும் மேசையென்கிலும் ஒன்றுங் கிடையாது. கடைசியாய் என்னதான் மகாராசனாயிருந்தபோதிலும் பலமுறை ஏதாகிலுங் குறைவுபடுவது சகசம். ஆதலால் நமக்குக் குறைவுபடுகிறதைக்கொண்டே நாம் திருப்தியாயிருப்பதுதான் மெய்யான எளிமைத்

தனம். பிரிய சகோதரமே, ஏதாகிலுங் குறை சங்கடம் வந்தால் நலமென்று நல்ல மனதோடு ஏற்றுக்கொண்டு சந்தோஷமாய்ச் சகிக்கக்கடவாய்.

பெருங்காற்று, அக்கினிப்பிரவாகம், வெள்ளம், இருட்டு, வியாச்சியம், மழையில்லாமை முதலிய தின்மைகளால் உனக்குச் சொற்ப நஷ்டமாகிலும் பெரிய நஷ்டமாகிலும் வந்து ஏழையாய்ப் போகும்போதுதான் தாரித்திரத்தை அநுசரிக்கிறதற்கு நல்ல சமயங் கிடைக்கும். அத்தருணத்தில்தான் உன் வரும்படி குறைந்துபோவதைப் பார்த்துத் தைரியமாய்ப் பொறுமையோடு இந்தச் சொற்ப தாரித்திரத்தை அங்கீகரித்துக்கொள்ளவேண்டும். எசாயு என்பவர் மயிர் அடர்ந்த கரங்களோடு தன் தகப்பனுரிடத்திற் போனுர். இயாக்கோப் என்பவரும் இப்படியே போனுர். ஆனால் இயாக்கோபென்பவர் கைகளிலிருந்த மயிர்கள் அவர் தோலோடு ஓட்டியிராமல் கைமேற்சோட்டின்மேல்மாத்திரம் ஓட்டிக்கொண்டிருந்தபடியால் இவருக்கு ஒரு வருத்தமும் வருவியாமல் சுளுவாய் இந்த மயிர்களை எடுக்கக்கூடுமாயிருந்தது. இதற்கு விரோதமாய் எசாயு என்பவர் சரீரமுழுதுஞ் சுபாவமாய் மயிர் அடர்ந்திருந்தமையால் இதைப் பிடுங்கவேண்டுமானுல் இவருக்கு வெகு நோக்காடு உண்டாவதுமல்லாமல் அதற்கு இவருஞ் சம்மதித்திருக்கமாட்டார். நமது ஆஸ்திக் காணியாட்சியின்மட்டில் நாம் பற்றுதல் வைத்திருக்கும்போது புசல், திருடர், வீண் வழக்காளிகளால் ஏதாகிலும் நஷ்டம் வந்தால் எவ்வளவோ கலக்கங்கொண்டு பொறுமையற்றவர்களா யிருக்கின்றோம். ஆனுல் நமது ஆஸ்திகளைப் பராமரிக்கவேண்டுமென்று சுவாமிக்குச் சித்தமாயிருப்பதால் மாத்திரம் அவைகளைப் பாரமரித்து நமது இருதயப்பற்றுதலை அவைகளில் வைக்காவிட்டால் இவைகள் நம்மிடத்தினின்று பறி

த்துக்கொள்ளப்படுவதால் மன அமரிக்கைச் சமாதானத்தை விடமாட்டோம். மனிதர்கள் உடுத்திக்கொள்ளும் உடுப்புகளுக்கும் மிருகங்களின் உடுப்புக்கும் இதே வித்தியாசமுண்டு. மிருகங்களின் உடுப்பு அதுகளின் சதையோடு ஒட்டிக்கொண்டிருக்கும். ஆனால் மனிதர்கள் உடுப்புகள் உடம்பின்மேலேமாத்திரந் தொடுக்கப்பட்டிருப்பதால் இஷ்டமானபோது போட்டுக்கொள்ளலாம், இஷ்டமானபோது கழற்றிவிடலாம்.

16-ம் அதிகாரம்.

மெய்யான தாரித்திரத்தில் மனத்திரவியத்தை எப்படி அநுசரிக்கவேண்டும் என்பதின்பேரில்.

ஆ பிரிய சகோதரமே, நீ மெய்யாகவே தாரித்திரனாயிருப்பாயேயாகில் இன்னம் மனத் தாரித்திரனாயிருக்கப் பிரயாசப்படு. நீ கட்டாயமாய்த் தாரித்திரனாயிருக்கவேண்டியிருப்பதால் அந்தக் கட்டாயத்தைப் புண்ணியமாய் மாற்றிக்கொள். தாரித்திரமென்னும் இந்த ரத்தினத்தை அதின் மதிப்புக்கொத்தபடி மதித்துவா. உலகத்தார் கண்களுக்கோ இருளடைந்து மங்கினதாய் இது காணப்படும். இவர்கள் இதின் கிரயத்தை அறியார்கள். ஆகிலும் இதின் காந்தி வெகு ஆச்சரியம் வருவிக்கத்தக்கது. இதின் விலையோ மதிக்கப்படாா.

தைரியமாயிரு. தாரித்திரம் உனக்கு உத்தம கூட்டாளியாம். நமது ஆண்டவரும் அர்ச். கன்னிமரியம்

மாளும் அப்போஸ்தலர்களும் கணக்கிலா அர்ச்சிய சிஷ்டவர்களும் ஏழையாயிருந்தார்கள். மகராசர்களாயிருக்கக் கூடுமாயிருந்தும் மகராசத்தனத்தை நிந்தித்து அருவருத்தார்கள். உலகத்தில் எத்தனையோ தனவான்கள் நானுவித விக்கினங்களையும் வென்று சந்நியாச மடங்களிலும் பிணியாளி மடங்களிலும் போய்த் தாரித்திரம் என்னும் மேலான இந்தப் புண்ணியத்தை மகா ஆவலோடு அநுசரித்துவந்தார்கள். இந்தத் தாரித்திரத்தைக் காண மெய்யாக்வே வெகுவாய் வருந்திப் பிரயாசப்பட்டார்கள். அர்ச். அலெக்சிஸென்பவரும், அர்ச். சின்னம்மாளும், அர்ச். பவுலினென்பவரும், அர்ச். அஞ்சேலம்மாளும் இன்னம் கணக்கற்ற அர்ச்சியசிஷ்டவர்களும் இதற்குச் சாட்சிகளாம். ஆ! பிரிய சகோதரமே, இந்தத் தாரித்திரமானது தானே வலிய உன் வீட்டில் பிரியமாய் வருகின்றது. நீ தேடாமலே இதனைக் காண்பாய். ஒரு பிரயாசையுமில்லாமல் இதனை அடைவாய். தாரித்திரத்தில் பிறந்து தாரித்திரத்திலேயே சீவித்து மரித்த சேசுகிறீஸ்துநாதருக்குப் பிரிய கூட்டாளிபோலிருந்த இந்தத் தாரித்திரத்தை வெகு ஆவலாய்க் கட்டி அரவணைத்துக்கொள்ளக்கடவாய்.

பிரிய சகோதரமே, உன் தாரித்திரத்துக்கு விசேஷ இரண்டு பலனுண்டு. இதின் வழியாய் நீ வெகு புண்ணிய பேறுகளை அடைவாய். முதல் பலன் என்னவெனில், நீயாய் இதனைத் தெரிந்துகொள்ளாமல் தேவசித்தத்தால் மாத்திரம் வருகிறது. உன் சொந்த மனது எவ்வளவு பார்த்தியப்படாமலிருக்க இவர்தான் உன்னை எளியவனுக்கினர். இப்படியாயிருக்கச சர்வேசுரனுடைய சித்தத்தால் மாத்திரம் வருவதை நாம் அங்கீகரித்துக்கொள்ளுவது எப்பொழுதும் அவருக்கு வெகு பிரியமாயிருக்கும். ஆனல் இதனை நல்ல மனதுடன் அவர் திவ்விய சித்தத்தின் நேசத்தைப்பற்றி

ஏற்றுக்கொள்ளவேண்டும். நமது மனது எங்கே சொற்பமாயிருக்குமோ அங்கே சுவாமி இஷ்டம் அதிகமாயிருக்கும். தேவசித்தத்தை உத்தமவிதமாய் அங்கீகரிப்பதால் அந்தந்த அந்தஸ்திலும் வெகு பேறுபலன் உண்டாம்.

தாரித்திரத்தின் இரண்டாம் பலன் என்னவென்றால், இந்தத் தாரித்திரமானது மெய்யாகவே எளிமையான தாரித்திரமாயிருக்கிறது. மகிமைத் தோத்திரத்துக்குங் கீர்த்திப் பெருமைக்கும் நாலுபேர் நமக்கு வருந்தி ஓத்தாசை செய்வதற்கும் இடமாயிருக்குந் தாரித்திரம் மெய்யாகவே தாரித்திரமாயிராமல் மகராசத்தனமாய்விடும். ஆனால் நிந்தை அவமானத்துக்கும் பகிடிப் பரியாசத்துக்கும் ஒருவராலும் ஆறுதல் உதவியில்லாமலிருப்பதற்கும் ஏதுவாயிருக்கும் எளிமைத்தனந்தான் மெய்யான தாரித்திரமெனத்தகும். உலகிலுள்ள ஏழைப் பரதேசிகளுடைய தாரித்திரம் வழக்கமாய் இப்படிப்பட்டதாம். ஏனென்றால் இவர்களே இந்தத் தாரித்திரத்தைத் தெரிந்துகொள்ளுகிறதில்லை. ஆனால் கட்டாயமாய் எளியவர்களாயிருப்பார்கள். இந்த எளிமைத்தனத்தைக் கனமாயெண்ணுகிறதில்லை. இதைக் கனமாயெண்ணுததால் சந்நியாசிகள் தங்கள் தங்கள் மனஇச்சாயமாய்க் கட்டாயமின்றிச் சுவாமியுடைய நேசத்தைப்பற்றிச் செய்யுந் தாரித்திர வார்த்தைப்பாடு எவ்வளவுதான் உத்தமமானதாயும் நாலுபேருக்கு ஆச்சரியத்துக்குரியதாயும் இருந்தபோதிலும் சந்நியாசிகள் தாரித்திரத்தை விட இந்த ஏழைகளின் தாரித்திரமானது அதிக எளிமைக்குரியதாயிருக்கின்றது. ஆதலால் பிரிய சகோதரமே, நீ தாரித்திரனயிருப்பதால் முறையிடாதே. ஏனென்றால் பிரியமிராத காரியத்தைக் குறித்துத் தான் முறைப்பாடிடுகிறது வழக்கம். எளிமைத்தனம் உனக்குப் பிரியப்

படாமற்போமே? நீ மனதாரித்திரனும் இருக்கிறதில்லை, ஆனால் மன இச்சையால் மகாராசனுகவேயிருக்கிருய்.

உன் அவசரத்துக்குத் தக்கபடி உனக்கு உதவி ஒத்தாசை கிடையாத பக்ஷத்தில் பிரலாபித்து வருத்தப்படாதே. ஏனெனில் தாரித்திரத்தினது மகத்துவம் இதில்தான் அடங்கியிருக்கிறது. எளிமையாயிருக்க மனதிருந்தும் இந்த எளிமைத்தனத்தில் வரக்கூடுமான சங்கடம் இடஞ்சல்களைவேண்டாமென்பது மிஞ்சின பேராசை என்னத்தகும். ஏனெனில் தாரித்திரத்தின் மகிமையோடு ஆஸ்திபாஸ்திகளின் சுக சௌக்கியமும் வேண்டுமென்றூற்போலாகும்.

வறுமையை முன்னிட்டென்கிலும் பிறருக்கு உபயோகமாகப் பிறசிநேகத்தை முன்னிட்டு ஆரிடத்திலாவது தானதர்மங் கேட்கவென்கிலும் வெட்கப்படாதே. உனக்குக் கொடுப்பதைத் தாழ்ச்சியோடு வாங்கிக்கொள். உனக்கு ஒன்றுங் கொடுக்காமல் உன்னைத் தள்ளிவிடும்போது மிகுந்த பொறுமையாயிரு. பரிசுத்தக் கன்னிமரியாயி தமது திவ்விய பாலனோடு எஜிப்துத் தேசத்துக்குப் பிரயாணபட்டு ஓடிப்போகும்போது எவ்வளவு நிந்தை துன்ப வருத்தங்களை அநுபவிக்க வேண்டியிருந்ததென்று அடிக்கடி ஞாபகம் வருத்திகொள். இப்படி நீ நடந்துகொள்ளுவாயானால் உன் எளிமைத்தனத்தில் வெகு மகாராசனயிருப்பாய்,

17-ம் அதிகாரம்.

சிநேகம்.

முதலாவது அபத்தமான கெட்ட சிநேகத்தைக் குறித்து.

ஆத்துமத்தின் எல்லாப் பற்றுதல் நாட்டங்களிலும் நேசம் முதன்மையானது. இருதயத்தில் உண்டாகும் எவ்வித முயற்சிகளுக்கும் இது அரசுபோல் இருக்கிறது. இந்த நேசம் மற்றெல்லாத்தையுந் தன்னிடத்தில் இழுத்துக்கொண்டு எதை நேசிக்குமோ நம்மையும் அதற்கொத்ததாக்கிவிடும். ஆதலால் பிரிய சகோதரமே, கெட்ட நேசம் உன்னிடத்தில் இராதபடிக்கு வெகு சாக்கிரதையாயிரு. அதேனெனில் கெட்ட நேசத்துக்கு இடங் கொடுத்தவுடனே முழுதுங் கெட்டுப்போவாய். சிநேகமோ எல்லா நேசத்திலும் மகா ஆபத்துள்ள நேசமாம். ஏனென்றால் மற்றமற்ற நேசம் இருதய சம்பந்த ஐக்கியமின்றி இருக்கக்கூடும். இதற்குப் பதிலாய்ச் சிநேகமானது இந்த இருதய அந்நியோந்நிய சம்பந்தத்தில் ஊன்றியிருக்கையில் சிநேகிதனுடைய குணங்களுக்குப் பங்காளியாகாமல் அவனுக்குச் சிநேகிதனாயிருப்பது கூடுங் காரியமல்லவென்கலாம்.

எல்லா நேசமுஞ் சிநேகமல்ல. ஏனென்றால் நம்மை நேசியாதவனை நாம் நேசிக்கலாம். இத்தருணத்தில் நேசமாத்திரம் உண்டு. ஆனால் சிநேகமிருக்கிறதில்லை. ஏனென்றால் சிநேகமானது அந்நியோந்நிய நேசமாம். இப்படி அந்நியோந்நியமாய் இராத நேசஞ் சிநேகமல்ல. இன்னம் இந்த நேசம் அந்நியோந்நியமுள்ளதாய் இருப்பது போதாது. ஆனால் சிநேகிதர் தங்களுக்குள் அந்நியோந்நிய பட்சம் உண்

டென்று அறிந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒருவர்பேரிலொருவர் பக்ஷமாயிருந்தாலும் இவர்களுக்குள் சிநேகங் கிடையாது கடைசியாய்ச் சிநேகத்தின் அஸ்திவாரமாக இவர்களுக்குள் யாதோர் சம்பந்தம் இருக்கவேண்டும்.

இவர்களுக்குள் இருக்கும் பலவித சம்பந்தங்களின் வித்தியாசத்துக்கொத்தபடி சிநேகமும் பலவிதமாம். ஒருவருக்கொருவரால் வரும் நன்மையின் வித்தியாசப்படி சம்பந்த ஐக்கியமும் வித்தியாசப்படும். இந்த நன்மைகள் அபத்தமும் வீணானவையுமாயிருந்தாலோ சிநேகமும் அபத்தமும் வீணனுமாயிருக்கும். இவைகள் மெய்யான நன்மைகளாயின் சிநேகமும் மெய்யானதாயிருக்கும். மேலும் இந்த நன்மைகள் எவ்வளவுக்கு அதிக உத்தமமானவைகளோ அவ்வளவுக்குஞ் சிநேகமும் அதிக உத்தமமானதாயிருக்கும். ஏனென்றால் மிகவும் நேத்தியான புஷ்பங்களில் எடுக்கப்படுந் தேனானது அதிக நல்லதாயிருக்கும். இத்தன்மையாகவே மகா உத்தமமான நன்மை ஐக்கியத்தால் உண்டாகுஞ் சிநேகமும் வெகு நல்ல சிநேகமாயிருக்கும். பலமுறை விஷப் பூண்டுகளில் எடுக்கப்படும் ஓர்விதத் தேனுண்டு, இதைக் குடிக்கிறவர்களுக்குப் பயித்தியம் உண்டாகும். இப்படியே பொய்யான தகாத நன்மை சம்பந்த ஐக்கியத்தில் ஊன்றியிருக்குஞ் சிநேகம் முழுதுங் கெட்டதும் அபத்தமானதுமாம்.

சரீர இன்ப சுக சம்பந்தமோ ஓர்வித அந்நியோந்நிய சார்பும் மிருகத்துக்கடுத்த நாட்டமுமென்பது மெய். ஆனால் கழுதை குதிரைகளுக்குள் உள்ள இவ்விதச் சம்பந்தத்துக்குச் சிநேகமென்னும் பெயர் எப்படி செல்லாதோ அப்படியே மனிதர்களுக்குள் இருக்கக்கூடுமான மேற்சொல்லிய சம்மந்தத்துக்குச் சிநேகமென்னும் பெயர் செல்லவே செல்லாது. மெய்

விவாகத்திலும் இப்படிப்பட்ட சம்பந்தமன்றி வேறே சம்பந்தம் இராவிட்டால் இதிலும் பரிச்சேதம் மெய்யான சிநேகங் கிடையாதெனவேண்டும். ஆனால் இதில் சரீர சம்பந்தமல்லாமல் இன்னம் இருதரத்தார் சீவன் தொழில் ஆஸ்தி நேசம் மறுக்கப்படா பிரமாணிக்கச் சம்பந்தம் அடங்கியிருப்பதால் மெய் விவாகச் சிநேகம் மெய்யான பரிசுத்த சிநேகமாம்.

பஞ்சேந்திரிய இன்ப சுக சம்பந்தத்தில் ஊன்றியிருக்குஞ் சிநேகம் மெய்யாகவே மகா இழிவுக்குரியதுஞ் சிநேகமென்னும் பெயருக்கு அபாத்திரமானதுமாயிருக்கிறது. இத்தன்மையாகவே பஞ்சேந்திரியத் திருத்தியைமாத்திரம் நாடியிருக்கும் பிரயோசனமற்ற வீணான சில இலக்ஷண குணங்களில் ஊன்றியிருக்குஞ் சிநேகமுஞ் சிநேகமென்னும் பெயருக்குப் பாத்திரமானதல்ல. பஞ்சேந்திரிய இன்ப சுகங்கள் யாதெனில் வெளிப் புலன்களுக்கு விசேஷமாய் நேராய்ச் சம்பந்தப்பட்ட பிரியங்கள்தான். இவ்வகையாய் ஒருவன் அழகு சொகுசைப் பார்ப்பதாலும் மேனியைத் தொடுவதாலும், நேத்தியான குரலைக் கேட்பதாலும் இது முதலிய காரணங்களால் உண்டாகும் பிரியமே பஞ்சேந்திரிய இன்பசுகமென்னப்படும். பிரயோசனமிராத வீணான இலக்ஷணம் யாதெனில் பேதைகளாகிய சிலர் சற்குணம் உச்சிதம் மேன்மையென்றழைக்கிற கவைக்குதவாத குணங்கள்தான்.

வாலிபர்களுக்குள் முக்கியமாய்ப் பெண்பிள்ளைகளில் அநேகர் பேசுகிறதைக் கேட்டுப்பார். அற்ப சங்கடமுமில்லாமல் பேசுவார்கள். இன்னார் வெகு திறமையுள்ளவர் எல்லாத்திலுந் தேர்ந்தவர். ஏனென்றால் எல்லோரும் அதிசயிக்கத்தக்க விசித்திர விநோதமாய்ப்பேசுவார். அவருக்குத் தேட்டையாய்த் தெரியாத ஆட்டமில்லை. எப்பொழும் அவர் வெகு பிரியமான விதமாய் உடுத்திக்கொண்டிருப்பார். வெகு

சொகுசாய்ப் பார்ப்பார். அவர்மாதிரி எல்லாம் யாவருக்கும் வெகு பிரியம் வருவிக்கத்தக்கதென்று இப்படி பலுக்கிப் பலுக்கிச் சளையாமல் பேசுவார்கள். ஆ பிரிய சகோதரமே, இவர்கள் தீர்மானம் எப்படிப் பட்டதென்று பார். பகிடி வேஷக்காரர் பகிடி பரியாசஞ்செய்வதில் மேலிட்டுபோகிறவனை வெகு கெட்டிக்காரனுக எண்ணித் தங்களுக்குள் இவ்விதமாகவே அல்லவா தீர்மானஞ்செய்வார்கள். ஆனால் இதுகளெல்லாம் வெளிப் புலன்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருப்பதால் இதனால் உண்டாகுஞ் சிநேகம் இன்பசுகத்தைச் சேர்ந்ததென்றுங் கவைக்குதவாத வீண் சிநேகமென்றுஞ் சொல்லப்படும். இதனைச் சிநேகமென்று அழைப்பதைப்பார்க்கிலும் சரச விளையாட்டென்கலாம. வழக்கமாய் வாலிபர்களுக்குள் சிநேகம் இப்படிப்பட்டதுதான். ஒருவனுடைய மீசை கூந்தல் உடுப்பு நடை குரல்முதலியவற்றைப்பற்றி அவர்பேரில் பிரியம்வைத்து அவனைச் சிநேகிப்பார்கள். இவ்விதச் சிநேகம் விமரிசையற்ற இவர்கள் பிராயத்துக்கு ஒத்ததே. ஏனெனில் இந்தப் பிராயத்தில் மெய்யான புண்ணியமுஞ் சரியான தீர்மானமுங் கிடையாது. இதைப்பற்றித் தான் இப்படிப்பட்ட சிநேகம் நீளித்திராததுமல்லாமல் சூரியனைக் கண்ட பனியைப்போல் இளகிப் போம்.

18-ம் அதிகாரம்.

மதியற்ற சிற்சில சிநேகத்தைக்குறித்து.

மதியற்ற வீண் சிலாக்கிய சிநேகங்கள் மெய்விவாகக் கருத்தொன்றுமின்றி ஸ்திரீ பூமான்களுக்குள் இருக்குமேயாகில் நிலையற்ற சிநேகத் தொடுப்பெனப்படும். இதில் கண்டுபிடிக்கவொண்ணா வீண் சிலாக்கிய பெருங் குறைகள் அடங்கியிருப்பதாலும் இவ்விதச் சினேகம் வீண்தோற்றமாய் மாத்திரம் இருப்பதாலும் இதற்குச் சிநேகமென்னும் பெயர் ஏலாது. இவ்விதச் சிநேகங்களுள்ள ஸ்திரீ பூமான்களுடைய புத்தி இருதயம் முன் நான் பேசிய வீண் இலக்ஷண பிரியங்களில் ஊன்றியிருப்பதால் மதியற்ற தகாத பற்றுதல்களால் ஒன்றோடொன்று சேர்த்து இறுக்கி விலங்கிடப்பட்டதுபோல் ஆகின்றன. ஆரம்பத்தில் இவர்கள் கருத்துச் சுத்தமற்றதாயிருந்திருக்குமேயாகில் இவர்களுடைய நேசஞ் சந்தேகமின்றி கன அசுத்த தோஷமாம். ஆனால் ஆரம்பத்தில் வீண் பக்ஷம் சம்பாஷணை இது முதலிய புத்தியில்லாத காரியங்களில் இவர்கள் மனத் திருப்தியைத் தேடுவதேயல்லாமல் உள்ளபடி இவர்களுக்குத் தூர்க்கருத்து தாற்பரியமில்லாமையால் இந்தப் பயித்தியங்கொண்டவர்கள் கற்புக்கு நேராய்ப் பொருந்தாத குற்றம் ஒன்றையும் வேண்டுமென்று செய்யாமல் சிலவிசை அநேகவருஷம் இருப்பார்கள். ஆகிலும் ஆரம்பத்தில் இது விஷயத்தில் ஒன்றும் நினையாததுபோல் இருந்தபோதிலும் வழக்கமாய் இப்படிப்பட்ட சிநேகங்கள் வழியாய் மகா நீச சரீர இன்ப சுகங்களும் அடாத காமமும் விளைகின்றன.

இது விஷயத்தில் சிலருக்குச் சிநேகிக்கவுஞ் சிநேகிக்கப்படவும் வேண்டுமென்கிற கருத்தன்றி வேறே

கருத்திராது. இதில் இவர்கள் தங்களுக்குள்ள நேசச் சார்வைப் பின்பற்றி நடப்பார்கள். தங்கள் சுய பிரிய நாட்டத்தை அல்லாமல் இவ்விதச் சிநேகங்களில் ஒன்றையும் இவர்கள் பகுத்துத் தெரிந்துகொள்ளார்கள். இவர்களுக்கு ஒருவிசை எது பிரியப்படுமோ உடனே அதின்மட்டில் தங்கள் பட்சமெல்லாம் வைப்பார்கள். அதின் குணுகுணம் எப்படிப்பட்டதென்று சற்றும் யோசியாமல் அதனோடு அந்நியோந்நிய சிநேக அடையாள சம்பந்த உறவாடுவார்கள். குருட்டுத்தனமாய் இவ்விதப் பட்சத்துக்கு இடங் கொடுத்தபின் எவ்வளவு பலமாய் அதில் அகப்பட்டுச் சிக்கிக்கொள்ளுகிறார்களென்றால் அதினின்று நீங்குவது இவர்களுக்குக் கஷ்டமாயிருக்கும்.

வேறு சிலர் இன்ன மனுஷாள் நேசபட்சத்தை வசப்படுத்துவது தங்களுக்கு மகிமை என்கிற வீண் சிலாக்கியப் பெருமையால் இவ்விதச் சிநேகத்துக்கு இடங் கொடுப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் முன் சொன்னவர்களைப்போல் ஆய்ந்தோய்ந்து பாராமல் கண்ணுக்குப் பிரியப்பட்டவர்களை நேசிக்கிறதில்லை. ஆனால் தங்களுக்கு ஆருடைய சிநேகம் அதிக மகிமைப் பெருமையை வருவிக்கக்கூடுமோ அவர்கள் நேசத்தைச் சம்பாதிக்க அதற்கான உயர்ந்த நேத்தியான சிறந்த இடங்களில் தங்கள் கண்ணி வலைகளை விரிப்பார்கள். அநேகரிடத்திலோ நேசச் சார்பும் வீண் சிலாக்கியமும் ஒருமிக்க இந்த மதியற்ற சிநேகத்துக்குக் காரணமாயிருக்கும். ஏனெனில் இவர்கள் யாரையாகிலுஞ் சிநேகிப்பார்களேயர்கில் அல்லது வேறே யாராகிலும் இவர்களைச் சிநேகிக்கிறதாகில் அவ்வழியாய் ஏதாகிலும் மகிமை பெருமை வருமென்கிற நம்பிக்கையிருந்தால் மாத்திரஞ் சிநேகிப்பார்கள்.

பிரிய சகோதரமே, இந்தச் சிநேகங்களெல்லாம் முழுதுங்கெட்டதும்மதியற்றதும் விழலானதுமாம். ஏனென்றால் வழக்கமாய் இவைகள் சரீரத்துக்கடுத்த பெரும்பாவங்களுக்கு வழியாம். மேலும் இப்படிப்பட்ட நேசங்கள் சுவாமியின்பேரில் நமக்கு இருக்கவேண்டிய சிநேகத்தைப் பறித்துக்கொள்வதுடன் புருஷன்மட்டில் பெண்சாதிக்கும் பெண்சாதிமட்டில் புருஷனுக்கும் இருக்கவேண்டிய நேச பக்ஷத்தையும் பறித்துக் களவுசெய்தாப்போல் மற்றவர்களுக்குக் கொடுத்துவிடும். மதியற்ற இச்சிநேகத்துக்கு அஸ்திவாரமுங் கிடையா. அதில் அற்ப விமரிசை ஞானமும் விளங்கா. மேலும் இச்சிநேகம் முழுதும் விழலானது. ஏனெனில் எவ்வளவு பிரயோசன மகிமை சந்தோஷமும் இதினால் வருகிறதில்லை. இதற்கு விரோதமாய் வீணாய் இதில் காலத்தைப்போக்கி வெகுவாய்த் தங்கள் மகிமையை இழந்து பேரைக் கெடுத்துக்கொள்ளுவார்கள். இதில் தங்கள் கோரிக்கை நம்பிக்கை என்னவென்று முதலாய் அறியாமல் என்னமோ தங்களுக்குக் கூடிவருகிறதுபோல் எண்ணுவார்கள். இவ்வித அற்ப புத்தியுள்ள மனிதர்கள் தங்களுக்குள் இவ்விதமாய்ச் சிநேகித்துவருவதில் என்னமோ மகத்துவமானகாரியமிருக்கிறதுபோல்வீண் எண்ணங்கொண்டு கடைசியாய் அது என்னவென்று முதலாய்ச் சொல்லவறியார்கள். இதுவிஷயத்தில் இவர்கள் எவ்வளவோ நிர்ப்பாக்கியவான்களாயிருக்கிறார்கள். இவர்கள் இருதயத்திலிருக்கும் இந்த வீண் ஆசை தணிகிறதற்குப் பதிலாய் ஓயாத சமுசய சந்தேக சஞ்சலத்தாலுங் காய்மகார பொறுமையாலும் எவ்வளவோ அத்தனை அலைக்கழித்துச் சங்கடப்படுத்துகிறது, நசியாஞ்சு பட்டணத்து அர்ச். கிறெகோரியார் இப்படிப்பட்ட வீண் சிநேகமுள்ள பெண்பிள்ளைகளுக்கு விரோதமாய் வெகு நேத்தியாய்ப் பேசியிருக்கிறார்.

அந்தப் பிரசங்கத்தின் இரண்டொரு தாற்பரியத்தை மாத்திரஞ் சொல்லிக்காட்டுகின்றேன். ஆண்பிள்ளைகளுக்கும் இது பிரயோசனமாயிருக்கக்கூடும். பெண்பிள்ளையைநோக்கி இவர் சொல்வதாவது: உன் புருஷன் கண்களுக்கு உன் சுபாவ அழகு சௌந்தரியம் பிரியப்பட்டாற் போதும். பல பக்ஷிகளைப்பிடிக்க விரித்தவலையைப்போல் உன் அழகு பல புருஷர்களுக்குப் பிரியப்பட நீ ஆசிப்பதால் என்ன நேரிடும். சந்தேகமற ஆருக்கு உன் அழகு பிரியப்படுமோ அவனும் உனக்குப் பிரியப்படுவான். அவன் உன்பேரில் கண்ணுயிருப்பான். நீயும் அவன்பேரில் கண்ணுயிருப்பாய். இப்படிப்பட்ட பார்வைக்குப்பின் உங்களுக்குள் புன்னகையுண்டாம். இதன் பின் உங்களுக்குள் மறைவிடமாய் இரகசியத்திற் பேசுவீர்கள். கொஞ்சத்துக்குள் சங்கடமின்றி வெளிப்படப் பேசுவீர்கள். பின்னும் காலத்துடன் சரசமுண்டாம், இதன் பின்னே என்ன நேரிடும். ஆனல் என் நாவே இனி இங்கே பேசாதே, போதும். ஆயினும் இன்னம் பொதுவான சத்தியம் ஒன்றைச் சொல்லுவேன். வாலிப ஸ்திரீ பூமான்களுக்குள் இருக்கப்பட்ட மதியற்ற இந்த நேசப் பிரியங்களிற் செய்கை விஷயத்திலென்கிலும் வார்த்தை விஷயத்திலென்கிலும் எதுவும் பலவாறு குற்றமற்றதாய்ப் பரிச்சேதமிருக்கிறதில்லை. இருதயத்துக்கும் புலன்களுக்கும் வெகு நஷ்டமாம். வினெனில் இருப்புச் சங்கிலியில் காந்தமானது ஒரு வளையத்தை இழுக்கையில் அத்துடன் மற்ற வளையங்களையும் இழுப்பதுபோல் இன்ப சுகச் சிநேகங்களுக்குச் சம்பந்தப்பட்ட யாவும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு ஓர்விதத் தொடர்ச்சிப் பந்தனத்தால் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நடந்தேறிவரும்.

மேற்றிராணியாராகிய இந்த மகாத்துமா அதுவிஷயத்தைக் குறித்து இன்னம் எவ்வளவு நேத்தியாய்ப்

பேசுகின்றார். கடைசியாய் என்ன செய்ய நினைக்கிறாய்? உன் மனசென்ன? பட்சத்தைக் காட்டமாத்திரமோ பார்க்கிறாய்? மோசம்போகிறாய். அதிற் பட்சத்துக்கு நம்பிக்கையிராதோ பரிச்சேதம் எவனும் மனப்பிரீதியாய்த் தன் பக்ஷத்தைக் காட்டவறியான். இந்தக் கெட்ட விளையாட்டு விளையாடுகிற எவனும் அதில் எப்பொழுதும் அகப்பட்டுக்கொள்ளுகிறான். தூரத்தினின்று நெருப்பைக் காட்டினவுடனே தீப் பற்றிக்கொள்ளும் ஓர்விதப் பூண்டுக்கொப்பாகவே மனிதன் இருதயம் இருக்கிறது. இந்த நேச அக்கினியை அதிகமாய் நான் அங்கீகரித்துக்கொள்வதில்லை, கொஞ்சமாத்திரம் அங்கீகரித்துக்கொள்ளுவேனென்று எவனாகிலுஞ் சொல்வானோ? ஐயையோ எவ்வளவு மோசம்போகிறாய்! நீ நினைப்பதைப்பார்க்கிலும் இந்த அக்கினி அதிக வேகமுள்ளதாயும் அதிக சுளுவாய்ப் பாய்ந்து சுட்டெரிக்கிறதாயும் இருக்கிறதே. அதில் ஒரு பொறிமாத்திரம் வாங்கிக்கொள்வதாக நீ நினைத்தபோதிலும் இதனால் திடுக்கென உன் இருதய முழுதும் பற்றியெரியக் கண்டு அதிசயிப்பாய். கடியுண்ட பாம்பாட்டியின்பேரில் இரக்கமாயிருப்பவன் ஆரொன்று ஞானியானவர் கேட்கின்றார். நானும் இவருக்குப் பின்னாற் கூவிச் சொல்லுகிறேன். கபோதிகளே, மதியீனரே, உங்கள் மன இச்சையின்படி நேசத்தை நடத்துகிறதற்கு அதனை மயக்கக் கருதுகிறீர்களோ ஒரு பாம்போடு விளையாடுகிற தன்மையாய் இதனோடு விளையாட உங்களுக்கு இஷ்டமோ? உங்களைக் கொடூரமாய்க் காயப்படுத்தி அந்தக் காயங்கள் வழியாகத் தன் விஷமெல்லாம உங்கள் இருதயத்தில் ஓடும்படி செய்யும். அப்போது உங்கள் பொருட்களையும் மகிமையையும் ஆத்துமத்தையும் இழக்கும்படி செய்த இந்தச் சண்டாள ஆசாபாசத்துக்கு உங்கள் பலத்தை அதிகமாய் நம்பி

உங்கள் இருதயத்தில் இடங் கொடுத்து அதனைப் போஷித்து வளர்த்ததின் மட்டில் சகலரும் உங்களை இகழ்வார்கள்.

ஆ சுவாமீ என்ன குருட்டாட்டம். எதார்த்தமாகவே பிரிய சகோதரமே, உன் ஆத்துமத்துக்கு இருக்கக்கூடுமான மிகவும் மேலான பாக்கியத்தை இவ்வளவு அற்ப அடைமானத்தை நம்பி சூதாடித் தோற்பதுபோல் தோற்று இழந்துபோகும் ஆபத்துக்குள்ளாகிறது எப்பேர்க்கொத்த மதிகேடு. ஏனெனில் சுவாமி மனிதனை இவ்வளவாய்த் தேடுவது அவன் ஆத்துமத்தைப்பற்றியே. இந்த ஆத்துமத்தையுந் தம்மை நேசிப்பதற்காகவே தேடுகிறார். ஐயையோ சுவாமியை வேண்டியபடி நாம் நேசிப்பதற்கு எவ்வளவோ தூலையிட்டிருக்கிறோம். அதேனெனில், சுவாமியை நேசிப்பதற்குப் போதுமானவரையில் நம்மிடத்தில் நேசமிருப்பதற்கு நமது நேசம் அளவற்றதாயிருக்கவேண்டுமே. இதிப்படியிருக்கினுஞ் சுவாமியை வேண்டியவரையில் நேசித்து இன்னம் மீதியிருப்பதுபோல் மூட்டாள்தனமாய்ப் பிரயோசனமற்ற வீணான காரியங்களில் நமது இருதய நேசபக்ஷ பற்றுதலை ஊதாரித்தனமாய்ச் செலவழிக்கின்றோம். ஒன்றுமில்லாமையினின்று நம்மைச் சிஷ்டித்துப் பராமரித்து இரட்சித்ததற்கு ஈடாய் நமது ஆத்துமநேசம் ஒன்றைமாத்திரந் தமக்காக நிறுத்தி வைத்துக்கொண்ட பரமதேவன் என்னமாய் அதனைப் பிரயோகித்துக்கொண்டோமென்றும் அவரை நேசிக்கவேண்டிய காலத்தை எப்படி உதவிக்கொண்டோமென்றும் மகா கண்டிப்பான கணக்கு கேட்பார். பிரயோசனமற்ற வார்த்தைகளுக்கு வெகு நுணுநுணுக்கமாய் இவர் கணக்கு கேட்கவேண்டியவராகில் வீணானதும் மடமைத்தனமானதும் பயித்தி

யக்காரத்தனமானதுந் தீங்கானதுமான சிநேகங்களுக்குக் கணக்கு கேளாமல் விடுவாரோ?

நாவல்மரம் பயிர் நிலங்களில் இருந்தால் இதனால் அந்த நிலங்களுக்கு வெகு நஷ்டமுண்டாம். ஏனெனில் இது பாரிமரமாதலால் பூமிச் சாரமெல்லாம் இழுத்துக்கொள்ளும். இதின் இலைகள் எப்பொழுதும் அடர்ந்து நெருங்கியிருப்பதால் நிலத்துக்கு அவசரமான ஆகாயமும் வெய்யிலும் அதில் படுவதற்கு விக்கினமாயிருக்கும். இன்னம் பாட்டைசாரிகள் கற்களையும் மண்ணுங்கட்டிகளையும் எறிந்து அதின் பழங்களைப் பறிக்கப்போவார்கள். அதினால் நிலத்துக்கு வெகு சேதமாம். இன்ப சுகத்தை நாடிய சிநேகங்களுக்கு இது அடையாளமாயிருக்கிறது. ஓர் ஆத்துமத்துக்கு இவ்வித நேசங்களால் எப்படிப்பட்ட கவலை சிந்தை உண்டாகி அதின் பலத்தைத் துற்பலமாக்கி விடுகிறதெனில் தேவப்பிரமாணப்படி நடக்க இனி அதற்குத் திராணியிராது. இலைகளுக்கொப்பாய் எத்தனையோ கவைக்குதவாத யோசனை உருபிகர தோற்றங்களாலுந் தகாத சம்பாஷணை பகிடி பரியாச விளையாட்டுகளாலும் புத்தி ஞானத்தை முழுதும் அந்தகாரமாக்கிவிடுகிறதெனில் தன் சுய அறிவின் படியென்கிலுந் தேவ அருளுக்குச் செவிகொடுத்து நடக்கவென்கிலுங் கவனிப்பதுமுதலாயில்லை. கடைசியாய் எவ்வளவு தந்திரசோதனைகளுஞ் சஞ்சல சமுசயங்களும் ஆத்துமத்தின் மெய்யான நன்மைக்கு ஒவ்வாத தோற்றங்களும் இப்படிப்பட்ட நேசங்களால் விளைகிறதெனில் இவைகளால் இருதயத்துக்குக் கன நஷ்டம் கன சேதந் தப்பாமல் நேரிடும். ஓரே வார்த்தையில் சொல்லவேண்டுமாகில் தேவ சிநேகத்தைத் துரத்திவிடுவதுமல்லாமல் தேவ பயத்தையும் அழித்துவிடும். புத்தியைப் பலவீனப்படுத்திக் கீர்த்தியைக் கெடுத்துவிடும். இன்பசுகப் பிரியத்தை

நாடிய இந்த மதியற்ற நேசங்கள் இருதயங்களைப் பசப்புகிறது மெய். ஆனாலோ இவைகள் எப்படிப்பட்ட இருதயங்களுக்கும் மெய்யான பெருவாரிக் காய்ச்சல் கொள்ளைநோயாம்.

19-ம் அதிகாரம்.

மெய்யான சிநேகம்.

பிரிய சகோதரமே, பிறசிநேகமென்னும் மேலான சிநேகத்தால் எல்லாரையும் நேசிப்பாய். ஆனால் புண்ணியத்துக்கடுத்த காரியங்களில் உன்னோடு சேரக்கூடுமானவர்களைமாத்திரம் விசேஷவிதமாய்ச் சிநேகிப்பாய். இப்படி ஒருமித்துப் பொதுவில் நீ செய்யும் புண்ணியங்கள் எவ்வளவுக்கு உயர்ந்தவையாயிருக்குமோ அவ்வளவுக்கும் உன் சிநேகமும் உயர்ந்ததாயிருக்கும். கலைக்கியான சாஸ்திரங்களை முன்னிட்டு ஒருவன்மீது பற்றுதலாயிருப்பாயோ மெய்யாகவே உன் சிநேகம் வெகு புகழ்ச்சிக்குரியதுதான். ஆனால் ஒருவனுடைய விமரிசை விவேகம் உறுதி அல்லது நீதியை முன்னிட்டு அவன்மீது பக்ஷமாயிருப்பாயோ உன் சிநேகம் இன்னம் அதிக மகத்தானதாம். ஆனால் உனக்கு இருக்கக்கூடுமான அந்நியோந்நிய சம்பாஷணை சிநேகத்துக்குப் பிறசிநேகம் பக்தி கிறீஸ்துவனுக்கடுத்த சங்கோபாங்க விருப்பம் அஸ்திவாரமாயிருக்குமேயாகில் ஆ சுவாமீ உன் சிநேகம் எவ்வளவோ விலைபெற்றதாம். இன்னம் எவ்வளவோ சிறந்ததாம். ஏனென்றால், சுவாமியிடத்தினின்றே இந்தச் சிநேகம் வரும், சுவாமியையே தாவிப்போம்.

சுவாமியே இதற்குப் பிணையாயிருப்பார். நித்தியமாய் இது சுவாமியிடத்தில் நீளித்திருக்கும். மோக்ஷத்தில் சிநேகிப்பதுபோல் பூமியில் சிநேகிப்பது எவ்வள வோ இன்பமாயிருக்கிறது. மறுவுலோகத்தில் நித்தி யமாய் நாம் ஒருவரொருவரைச் சிநேகித்துச் சம்பா ஷிப்பதுபோல் இவ்வுலோகத்திலேயே சிநேகித்துச் சம்பாஷிக்கக் கற்றுக்கொள்வது எவ்வளவோ மதுர மாம். தன்னைப்போல் எல்லாரையுஞ் சிநேகிக்கவே ண்டுமென்கிற சாதாரண சிநேகத்தைக்குறித்து நான் இவ்விடத்தில் பேசுவதில்லை. ஆனால் இரண்டு மூன்று பேர் இன்னம் அநேகர் தங்கள் பத்தி ஞானபற்றுதல் ஆசைகளால் ஓரே மனதாயிருக்கச் செய்யும் ஞான சிநேகத்தைக்குறித்துப் பேசுகின்றேன். சகோதரர் கள் ஒருமிக்கச் சீவித்து வாழ்வது எவ்வளவோ இன் பமாகவும் அழகாகவும் இருக்கிறதென்று இந்தப் புண்ணியாத்துமாக்கள் வெகு ஞாயத்தோடு பாட லாம். ஏனென்றால் பத்தியின் சுகந்த பரிமளமானது ஒவ்வொருவர் இருதயத்தினின்று மற்றவர்கள் இரு தயத்தில் ஓயாமல் சொரிந்தோடும். இவ்விதமாய்ச் சர்வேசுரன்தாமே இந்தச் சிநேகத்திற்குத் தமது ஆசீர்வாதத்தை ஏராளமாய் அளித்தாரென்றும் இந் தச் சிநேகஞ் சதாகாலம் நீளித்திருக்குமென்றுஞ் சொல்லலாம்.

வேறே மற்றச் சிநேகங்களெல்லாம் இந்த மெய் யான சிநேகத்துக்கு அருகாமையில் வெறும் நிழற் போல்தான். பத்தியின் இந்தப் பெரும் பந்தனமா னது முழுதும் பொன்தான். இதற்கு முன்பாக மற்றச் சிநேகப்பந்தனங்களெல்லாஞ் சுளுவில் உடை ந்துபோகுங் கண்ணாடிச் சங்கிலிகளுக்கு ஒத்ததாம். நீ சிநேகம்பண்ணவேண்டியிருந்தால் இப்படிப்பட்ட சிநேகம் ஒன்றே உனக்கிருக்கட்டும். ஆனால் இதைப் பற்றிச் சுபாவமுறையுங் கடமையும் உனக்குக் கற்பிக்

குஞ் சிநேகங்களை விட்டுவிடவும் நிந்திக்கவும் ஆகாது. இத்தன்மையாய்த் தாய்தகப்பன்மார் உறவின் முறையார் சுற்றத்தர் இன்னம் மற்றவர்களையுஞ் சிநேகித்துவரவேண்டும். நீயாய்த் தெரிந்துகொள்ளுஞ் சிநேகத்தைக்குறித்துப் பேசுகிறேன்.

தனிச்சிநேகம் இருக்கலாகாதென்று பலபேர் உனக்குச் சொல்லுவார்கள். ஏனென்றால் அதனால் மன ஏக்கமும் புத்திக்குத் தொந்தரையுங் காய்மகாரமும் உண்டாகிறதென்பார்கள், ஆனால் இவர்கள் தங்கள் ஆலோசனையில் கொஞ்சம் மோசம்போகிறார்கள். தனிச்சிநேகஞ் சந்நியாசிகளுக்குங் கன்னியாஸ்திரீகளுக்கும் வெகு கேடு வருவிக்கிறதென்று பல பரிசுத்த மகாத்துமாக்கள் எழுதிவைத்ததை வாசித்து எல்லா மனிதருக்கும் இப்படியே நேரிடுகிறதென்று நினைக்கிறார்கள். ஆனால் நியாத்தோடுதான் சந்நியாசிகளுக்குங் கன்னியாஸ்திரீகளுக்குந் தனிச்சிநேகங் கேடாயிருக்கிறது. ஏனெனில் கிரமமாய் நடத்தப்படுஞ் சந்நியாசமடத்தில் மெய்யான பத்தியை எல்லோரும் விரும்பி அதற்காகப் பிரயாசப்படுவதால் அவ்விடத்தில் தனிச்சிநேகம் செய்வதற்கு அவசரமில்லை. இதற்கு விரோதமாய்ப் பொதுவாய் மடத்திலிருக்கும் எல்லோரையுஞ் சிநேகிப்பதற்குப் பதிலாய்த் தனிச்சிநேகத்துக்கு இடங்கொடுத்தால் பாரபக்ஷமாய் நடப்பதற்கு வழியாயிருக்கும். ஆனால் உலகத்திற் சஞ்சரித்து மெய்யான புண்ணியத்தை அநுசரிக்க விருப்பமுள்ளவர்கள் தங்களுக்குள் பரிசுத்த சிநேகத்தால் ஒருமித்திருப்பது அவசியமாமே. இந்த ஒருமிப்பால் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருந்து புண்ணியத்தைச் செய்யக்கூடுமாயிருக்கும். சமபூமியில் நடக்கிறவர்கள் வேறே பேர் ஒத்தாசையின்றி நடக்கலாம். ஆனால் கரடு முரடானதுஞ் சுறுக்கலானதுமான கொடிவழிகளில்

நடக்கிறவர்கள் தப்பித்தவறி விழாத்படிக்கு ஒருவ ருக்கொருவர் துணையாயிருக்கவேண்டும். இத்தன் மையாய்ச் சந்நியாசமடங்களில் ஜீவிக்கிறவர்களுக் குத் தனிச்சிநேகம் அவசரமில்லை. ஆனால் உலகத் தில் ஜீவிப்பவர்களுக்கு நேரிடுங் கணக்கற்ற சஞ்சல இக்கட்டு தொந்தரவுகளில் ஒருவருக்கொருவர் ஒத் தாசையாயிருந்து தைரியமாய் நடப்பதற்குத் தனிச் சிநேகம் அவசரந்தான். உலகில் எல்லோரும் ஒரே கருத்தைத் தாவி நடவார்கள். எல்லோருக்கும் ஒரே மனதும் புத்தியும் இராது. ஆதலால் அவசியமாய் அவாளவாள் தங்கள் தங்கள் கருத்துக்கும் நாட்டத் துக்கும் ஒத்தவர்களோடு கலந்து சிநேகமாயிருக்க வேண்டும். இதினால் ஒருவிதப் பாரபக்ஷம் உண்டா குமென்பது உண்மை. ஆனால் இந்தப் பாரபக்ஷமா னது பரிசுத்தமுள்ளதாயிருக்கும். இதினால் அற்ப பிரிவினையும் விளையாது. ஆனால் தின்மையை விலகி நன்மை செய்யத் தீயோனைவிட்டகன்று நல்லவர்க ளோடுமாத்திரஞ் சேர்ந்திருக்கும்படி நேரிடும். இவர் களது பிரிவினையானது நன்மைக்குந் தின்மைக்குஞ் செம்மறிப்புருவைகளுக்கும் வெள்ளாடுகளுக்குந் தேனீக்களுக்குங் குளவிகளுக்கும் உள்ள பிரிவினைக் கொத்ததாயிருக்கும். இந்தப் பிரிவினையோ மிக அவசியமானது.

நமதாண்டவராகிய சேசுகிறீஸ்துநாதர் அர்ச். அரு ளப்பனையும் லசாரென்பவனையும் மார்த்தம்மா ளையும் மதலேனம்மாளையும் விசேஷ பக்ஷ உருக்கத் தோடு நேசித்துவந்தாரென்று வேதத்தில் திஷ்டாந் தமாய் எழுதியிருக்கக் காண்கிறோம். இவ்வண்ண மாய் அர்ச். இராயப்பர் அர்ச். மாற்கென்பவனையும் அர்ச். பேத்திறோனில் அம்மாளையும் உருக்கமாய் நே சித்துவந்தாரென்று நமக்குத் தெரியும். அர்ச். சின் னப்பரோவெனில் திமோத்தேயு என்பவனையும்

அர்ச். தேக்கிள் அம்மாளையுஞ் சிநேகித்துவந்தார். நசியான்சு அர்ச். கிறேகோரியென்பவர் அர்ச். பசீல் என்பவரோடு வெகு சிநேகமாயிருந்தார். இணையிடக்கூடாத அந்தச் சிநேகத்தைக்குறித்து இவரே பல தருணங்களில் வெகுவாய்ப் பேசியிருக்கின்றார். இவர் சொல்லிய வார்த்தைகளில் இரண்டொன்றைமாத்ரம் எடுத்துக்காட்டுகிறேன். எங்கள் இருவர் சரீரத்துக்கும் உயிர் கொடுப்பதற்கு ஓரே ஆத்துமமாத்திரம் எங்களிடத்தில் இருந்ததாகக் காணப்படும். அந்நியோந்நிய எங்கள் ஒருமிப்பு எப்படிப்பட்டதாயிருந்ததென்றால் நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிடத்தில் ஒருமிக்கவிருந்தோம். புண்ணியத்தை அநுசரிக்கவும் மோக்ஷத்தைச சம்பாதிப்பதற்கான விதமாய் நடக்கவும் வேண்டுமென்கிற ஏக கருத்தேயன்றி எங்கள் இருவருக்கும் வேறே ஆசை எண்ணமிருந்ததில்லை. இவ்விதமாய்ச் சாகிறதற்கு முந்தியே நாங்கள் இருவரும் இந்த அநித்திய பூமியை விட்டுவிட்டதுபோல் இருந்தோம் என்கிறார். அர்ச். மோனிக்கம்மாளிடத்தில் மகா அருமையான புண்ணியங்களைக் கண்டபடியால் அர்ச். அமிர்தநாதர் இந்தம்மாளை விசேஷவிதமாய் நேசித்துவந்தாரென்றும் இந்தம்மாளும் மிவ்னா ஒரு சம்மனசைப்போல் நேசித்துவந்தாளென்றும் அர்ச். அகுஸ்தீனுஸ் என்பவர் சொல்லுகிறார் ஆனால் இவ்வளவு தெளிவான காரியத்தைக்குறித்து நான் இம்மாத்திரம் பேசவேண்டியதேயில்லை. அர்ச். எரோனிமூஸ் அர்ச். அகுஸ்தீனுஸ் அர்ச். கிறெகோரியார் அர்ச். பெர்னார்தென்பவர் இன்னம் அநேக பெரிய அர்ச்சியசிஷ்டவர்களுந் தங்கள் அர்ச்சியசிஷ்டத்தனத்துக்கு அற்ப நஷ்டமுங் குறையும் வராமல் தனிச்சிநேகமுள்ளவர்களாயிருந்தார்கள். அர்ச். சின்னப்பர் அஞ்ஞானிகளைப் பார்த்து அவர்கள் குற்றங் குறைகள்மட்டில் முறைப்பாடிட்டு அவர்களைப் பக்ஷ

மற்ற சனங்களென்று குறைவாயழைக்கிறார். அர்ச். தோமாசென்பவர் மற்ற உத்தம ஞானசாஸ்திரிகளைப் போலவே சிநேகமானது ஓர் புண்ணியமென்று கற்பிக்கின்றார். ஆனால் இவர் தனிச்சிநேகத்தைக்குறித்துத்தான் பேசுகிறார். ஏனெனில் சிநேகமானது வெகுபேர்மீது பரம்பக்கூடாதென்கிறார். ஆதலால் சிநேகமிராமலிருப்பதில் புண்ணிய சாங்கோபாங்கம் அடங்கியிருக்கிறதில்லை. ஆனால் மெய்யான பரிசுத்த சிநேகமுள்ளவர்களாயிருப்பதில்தான் புண்ணிய சாங்கோபாங்கம் அடங்கியிருக்கிறது.

20-ம் அதிகாரம்.

மெய்யான சிநேகத்துக்கும் வீணான சிநேகத்துக்கும் உள்ள வித்தியாசத்தைக்குறித்து.

பிரிய சகோதரமே, நான் இப்போது சொல்லப்போகும் புத்திமதி மகா விசேஷமானது. விஷமான அக்கோனித்துப் பூத்தேனானது சவுக்கியத்துக்கு வெகு அநுகூலமாயிருக்கிற நல்ல தேனுக்கு ஒத்ததாகக் காணப்படும். ஆனால் இவ்விரண்டையுஞ் சோதித்துப்பாராமல் குடிப்பதாலும் அல்லது இவ்விரண்டையும் ஒருமிக்கக் கலந்து குடிப்பதாலும் வெகு ஆபத்துக்கிடமுண்டு. அதேனெனில் விஷமான அக்கோனித்துப் பூத்தேனோடு நல்ல தேனைக் கலப்பதால் விஷம் எடுபட்டுப்போகிறதில்லை. ஆதலால் சிநேக விஷயத்தில் மோசம்வராமல் சாக்கிரதையாயிருக்க

வேண்டும். ஏனென்றால் பலமுறை பசாசு தகாத சிநேகத்தை நல்லதுபோல் காண்பிக்கும். மெய்யான புண்ணியத்துக்கடுத்த சிநேகத்தை ஆரம்பத்தில் துவக்குவதும் வழக்கம். ஆனால் கிஞ்சித்து விமரிசைதப்பினால் கொஞ்சத்துக்குள் அந்தச் சிநேகத்துடன் வீண் சிநேகங் கலந்துகொள்ளும். இதன்பின் அபத்தமான சிநேகம் இதனோடு சேரும். பிற்பாடு தகாத பாவமான சிநேகம் உண்டாகும். மெய்யாகவே ஞான சிநேகத்திலும் வெகு எச்சரிக்கையாய் இராவிட்டால் ஆபத்துண்டு. ஆயினும் இதில் மோசம்போவது அவ்வளவு எளிதல்ல, ஏனெனில் இந்தச் சிநேகத்தில் விளங்குந் தூய பரிசுத்ததனத்தாற் பலமுறை பசாசு இதிற் கலக்கத் தேடுங் குற்றங்குறைகளை வெகு சுளுவாய் அறிந்துகொள்ளலாம். ஆதலால் இவ்வாறு பசாசானது கெடுக்கத் தேடுகையில் நேராய்த் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் வெகு சூதாய் நாமறியாமல் நமது சிநேகத்தில் விஷமிடப் பிரயாசப்படும்.

அக்கோனித்துப் பூத்தேனையும் நல்லதேனையும் பகுத்து அறிவதுபோலவே புண்ணியத்துக்கடுத்த பரிசுத்த சிநேகத்தையும் இலௌகீக சிநேகத்தையும் பகுத்தறிந்துகொள்ளுவாய். அக்கோனித்துப் பூத்தேனில் வசநாபி சேர்ந்திருப்பதால் நாம் உதவிக்கொள்ளும் நல்ல தேனைப் பார்க்கிலும் நாவுக்கு அதிக உருசியாயிருக்கும். இத்தன்மையாகவே இலௌகீக சிநேகமுள்ளவர்கள் வழக்கமாய் இச்சகமாய்ப் பேசிப் பிரயோசனமிராத வீண் வார்த்தைகளை வெகு சொகுசாய்ச் சொல்லுவார்கள். தங்கள் நேயர்களுடைய அழகு சௌந்திரியத்தைக்குறித்தும் இன்னம் இவ்வித வெளியரங்க வீண்காரியங்களைக்குறித்தும் வெகு ஆச்சரியம்போல் பேசுவார்கள். இதற்கு விரோதமாய்ப் பரிசுத்த சிநேகமுள்ளவர்களோவெனில் புண்ணி

யத்திலுந் தேவ அநுக்கிரகத்திலுமாத்திரம் நிலையாய் ஊன்றியிருப்பதால் புண்ணியத்தைப் புகழ்ந்து சுவாமிக்குத் தோத்திரமாகக் கபடற்றவிதமாய்ப் பேசுவார்கள். அக்கோனித்துப் பூத்தேனைக் குடிக்கிறவர்களுக்கு வெகு மயக்கமுண்டாம். அபத்த சிநேகமுள்ளவர்களுக்கும் ஓர்வித மயக்கமுண்டு. இவர்கள் புண்ணியநெறியில் தடுமாறினாற்போல் கற்புக்கடுத்த விஷயத்தில் தத்தளித்து மேரை மரியாதையற்ற பார்வைகளுக்கிடங்கொடுத்து இச்சகமாய்ச் சாடையாய்ப் பேசிச் சரச உபசரணை காட்டிவருவார்கள். பலமுறை வேண்டியபடி நேசிக்கிறதில்லை என்று தங்களுக்குள் முறையிட்டாற்போல் சொல்லிப் பட்சத்தின் அடையாளமாய் முத்தியிட்டுக் கொஞ்சிக் குலாவிக்கொள்ளுவார்கள். நாணயத்தை முதலாய்க் கொஞ்சத்துக்குள் போக்கடித்துக்கொள்வார்கள் என்பதற்கு இவைகள் நிச்சயமான அடையாளமாம். இவர்களுக்கும் பரிசுத்த சிநேகமுள்ளவர்களுக்கும் வெகு வித்தியாசமுண்டு. இவர்கள் கண்கள் மகா அடக்கவொடுக்கம் உள்ளதாயிருக்கும். இவர்கள் பேச்சுகிரியை எல்லாம் பரிசுத்தமாயுங் கபடற்றதாயுமிருக்கும். இவர்கள் ஆசை பரலோகத்தையே நாடியிருக்கும். இவர்களுக்கு வரக்கூடுமான வருத்தம் என்னவென்றால் வேண்டியபடி இவ்வுலகில் சுவாமியை நேசிக்கவில்லையே என்கிற கஸ்திதான். இவர்கள் நடத்தை எல்லாம் இவர்கள் சிநேகத்தின் உத்தம குணத்துக்குத் தப்பாத அத்தாட்சியாம். அக்கோனித்து விஷத்தேனானது பார்வைக்குக் கெடுதலாம். அப்படியே இல்லௌகீக சிநேகம் புத்தி ஞானத்தைப் பலமாய்க் கலக்கிவிடும். எப்படியென்றால் நன்மைதின்மையைப் பகுத்தறியக்கூடாமற் போவதுமன்றிக் கவைக்குதவாத வீண் ஞாயங்களை மெய்யான பலத்த ஞாயங்களாக எண்ணிக்கொண்டு பிரகாசத்தைப் பார்

க்க மனதிராமல் இருளேயே ஆசித்துத் தேடும்படி செய்யும். இதற்கு விரோதமாய்ப் பரிசுத்த சிநேகமுடையவர்கள் எதுகாரியத்தையும் ஞாயப்படி சீர் தூக்கித் தீர்மானித்து நாலுபேருக்குத் தங்களை ஒளித்துக்கொள்ளத் தேடாமல் நல்லவர்களோடு கலந்து கூடியிருக்கப் பிரியப்படுவார்கள். கடைசியாய் மேற்சொல்லிய விஷத்தேனை ஒருவிசை குடித்தபின் வாயில் வெகு கசப்புண்டாகும். இத்தன்மையாகவே அபத்த சிநேகத்தால் கேட்கவொண்ணாத காரியங்களைக் கேட்கநேரிடும். வழக்கமாய் அதினால் வெகு சண்டை சச்சரவு நிந்தை தூஷணங்களுங் காய்மகாரங்கஸ்தி சஞ்சலங்களும் விளையும். இன்னம் பலமுறை கடுங்கோபம் அவநம்பிக்கைவரையிற் போம். ஆனால் நல்ல சிநேகம் எப்பொழுதும் மதுரமுள்ளதாய் நாணய-மரியாதையுள்ளதாய் எல்லோருக்கும் பிரியமுள்ளதாய் இருக்கும், இப்படிப்பட்ட சிநேகம் மாறுகிறதில்லை. மோக்ஷத்தில் மோக்ஷவாசிகளுக்குள் இருக்குஞ் சிநேகத்துக்கொப்பாய் நாளுக்குநாள் அதிக பரிசுத்தமாய் அதிக உத்தமமானதாகும்.

21-ம் அதிகாரம்.

கெட்ட நேசங்களுக்கு அவுழ்தமான சில புத்திமதிகள்.

மேற்சொல்லிய மதியற்ற கெட்ட நேசங்களுக்கு விரோதமாய் என்ன அவுழ்தத்தை உதவிக்கொள்ளுகிறது. இப்படிப்பட்ட நேசங்கள் உன்னிடத்

தில் உண்டாகிறதை நீ அறிந்தவுடனே அவைகளை அருவருத்து உன் இருதயத்தினின்று தள்ளிவிடக் கடவாய் நமது இரக்ஷகருடைய திருச் சிலுவை யை அண்டிப்போய்க் குள்ள நரிகளுக்கொப்பான இந்தச் சிநேக அற்பப் பற்றுதல்களும் உன்னிருதயத் தில் பரிச்சேதம் நுழையாதபடிக்கு நமது இரக்ஷகர் சிரசில் இருக்கும் முண்முடியால் உன்னிருதயத் தைச் சுற்றிலும் ஒரு வேலிபோல் அடைத்துக் கொள். இந்தச் சத்துருவுக்கு அற்ப இளக்காரமுங் கொடாதபடி வெகு சாக்கிரதையாய் இரு. இந்தச் சத்துருவுக்குச் செவி கொடுப்பேன், ஆனால் இதின் சொற்படி நடவேன் என்று சொல்லாதே. இதற் குச் செவிகொடுத்தபோதிலும் இதற்குச் சம்மதி யேன் என்னாதே. ஆ பிரிய சகோதரமே, சுவாமி பெயரால் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட சம யங்களில் ஒன்றுக்கும் அசையாதே. இருதயத்துக் குஞ் செவிக்கும் வெகு சம்மந்தம் உண்டு. நெட்டி ட்ட மலைச் சார்பினின்று புரண்டோடும் வெள்ளத் தை நிறுத்துவது கூடாமலிருப்பதுபோல் செவியில் விழுந்த விஷமானது இருதயத்துக்குள்ளும் உடனே இறங்காமல் தடுப்பது வெகு கஷ்டம். வெள்ளாடுகள் நாசியால் சுவாசம் வாங்காமல் காதுகளால் சுவாசம் வாங்குகிறதென்று ஒரு சாஸ்திரி சொல்லுகிறார். ஆகி லும் இது சரியல்லவென்று அரிஸ்தோத்தென்னுஞ் சாஸ்திரி கூறுகிறார். ஆனால் எது எப்படியிருக்கினும் நான் சொல்வதென்னவெனில் நமது இருதயத்துக்கு இந்தக் குணமுண்டு. நமது இருதயந் தனக்குள்ள எண்ண நினைப்புகளை நாவால் காட்டுகிறதுபோல் மற்றவர்களது நினைப்புத் தோற்றங்களைக் காதால் நுகர்ந்துகொள்ளும். ஆதலால் வீண் வார்த்தைகளின் ஆகாயம் நமது செவிகளில் விழாதபடிக்குச் சாக்கிர தையாயிருக்கக்கடவோம். இல்லாவிட்டால் அத

ஞல் நமது இருதயங் கெட்டுப்போம், அந்த வர்த்தைகளைக் கேட்கிறதில் கொஞ்சம் பிரியங் கொள்ளுவோமேயாகில் நமது இருதயங் கொஞ்சத்துக்குள் கெட்டுப்போமென்று வெகுவாய்ப் பயப்படவேண்டியதில்லையோ?

தேவமாதாவிடத்தில் சம்மனசானவர் மங்கள வார்த்தை சொன்னபோது இந்தம்மாள் தனியாயிருந்தமையாலும் இந்த வானதூதர் தமக்குப் புகழ்ச்சிகளைச் சொன்னமையாலும் வெகு கலக்கங் கொண்டாள். ஆ சுவாமீ சகல பரிசுத்தத்தனம் நிறைந்த அந்தம்மாள் மனுஷரூபமாய்த் தோன்றிய சம்மனசைப் பார்த்துப் பயப்படுகின்ருள். பலவீனராகிய நாங்கள் மிதமிஞ்சின வீணுன புகழ்ச்சிகளை எங்களுக்குச் சொல்லும் மனிதர்களுடைய குரற் சத்தத்துக்குப் பயப்படாமலிருப்பதென்ன?

பிரிய சகோதரமே, இவ்வித வார்த்தைகளை எல்லாம் உடனே தயிரியமாய்த் தள்ளிவிடு, கொஞ்சமாயினுந் தத்தளியாதே. இந்தச் சமயத்தில் நாணயமற்றவனுகவுங் கொஞ்சம் முரடனுகவுங் காணப்படப்போகிருயென்று பயப்படாதே. சுவாமிக்கு உன் இருதயத்தை ஒப்புக்கொடுத்திருக்கிருயென்றும் உன் நேச பக்ஷமெல்லாம் அவருக்குச் சொந்தமென்றும் மறந்துபோகாதே. இதில் கொஞ்சமாயினும் பகிர்ந்து மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுவது தேவதுரோகமென்று எண்ணக்கடவாய். இதற்கு விரோதமாய் மறுபடியும் இன்னம் உறுதியான பிரதிக்கினை செய்து உன்னிருதயத்தை முழுதும் அவருக்கு உத்தமபலியாக ஒப்புக்கொடு. புதரில் பதுங்கி இருக்கும் மானைப்போல் நீயுஞ் சுவாமியுடைய இருதயத்தில் பதுங்கிக்கொண்டு அவர் உனக்கு ஒத்தாசைசெய்யும்படி மன்ருடு. அவர் உனக்கு உள்ளபடி ஒத்தாசையாயிருப்பார். அவர் உன்பேரில் வைத்தி

ருக்கும் பக்ஷத்தால் உன் நேச முழுமையுந் தமது அடைக்கலத்தில் வைத்துக் காப்பாற்றித் தமக்காகவே உன் நேசம் வளர்ந்து வியர்த்தியடையும்படி செய்வார்.

ஏற்கனவே இவ்விதக் கெட்ட சிநேக வலைகளில் நீ அகப்பட்டுக்கொண்டிருந்தால் ஆ பிரிய சகோதரமே, இதனைத் தள்ளிவிடுவது வெகு பிரயாசை கஷ்டம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினுந் தைரியமாயிரு. சுவாமியுடைய சமுகத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து அவர் சந்நிதியில் உன் மிதமிஞ்சின பலவீனத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் அறிந்துகொண்டு உன்னால் கூடிய மனவெறுப்போடு நீ துவக்கியிருக்கும் இந்த நேசங்களையெல்லாம் அருவருத்துத் தள்ளிவிடக்கடவாய். மேலும் நீ கொடுத்திருக்கக்கூடுமான சிநேக அடையாளங்களையெல்லாம் மறந்துவிட்டு உன் சிநேகிதர்களும் உனக்குக் கொடுத்த வார்த்தைப்பாடு வெகுமதி அடையாளங்களை நிந்தித்துத்தள்ளித் தைரியமாய் ஸ்திரமனதுடன் இனி ஒருக்காலும் இந்த நேசங்களுக்கு இடங்கொடுக்கிறதில்லை என்று உன்னிருதயத்தில் கெட்டியான பிரதிக்கினை செய்யவேண்டும்.

உனக்குச் சிநேகமாயிருப்பவர்களை விட்டு எட்டிப் போயிருக்கக்கூடுமானால் மகா உத்தமம். கஸ்திக்குரிய ஞாபகங்களை வருவிக்கும் இடங்களை விட்டு எட்டிப்போயிருப்பதால் கஸ்தி தணிவதுபோல் இவ்விதச் சிநேகத்துக்குட்பட்டவர்கள் மனதில் கிளம்பும் பலசஞ்சல ஏக்கங்களைத் தணிப்பதற்கு இடமாற்றம் வெகு பிரயோசனமாயிருக்கும். இது முகாந்தரத்தைப்பற்றித்தான் அர்ச். அகுஸ்தினுஸ் என்பவர் தன் சிநேகிதன் இறந்துபோன பட்டணத்தை விட்டுவிட்டுத் தனக்கிருந்த வருத்தஞ் சற்று குறைந்து

போகுமென்கிற எண்ணத்தில்வேறே பட்டணத்துக்குப் போனார்.

ஆனால் இப்படி எட்டிப்போகக் கூடாமலிருக்கிறவன் செய்யவேண்டியதென்ன தனிச் சம்பாஷணையையும் எவ்விதச் சவகாசத்தையும் எந்த வீண் அடையாளங்களையும் பொதுவில் இந்தத் தகாத சிநேகத்தை நிலைப்பூட்டக்கூடுமான எது காரியத்தையும் அவசியம் விட்டுவிடவேண்டும். இந்தப் படுகுழிப் பாதாளத்தில் விழுந்த எல்லோருக்குங் கூவி நான் சொல்லுகிறது யாதெனில் இவ்விதச் சிநேகப் பாசங்களைத் துண்டு துண்டாய் வெட்டி முறித்துத் தள்ளவேண்டும். இந்த மதியற்ற நேசங்களால் உண்டாகுங் கட்டுகளை ஒவ்வொன்றாய் அவிழ்க்கலாகாது. அவைகளை அறுத்தெறியவேண்டும். ஆதேனெனில் இந்தச் சிநேகபந்தனங்கள் ஏழைக் கிரீ உதவாது. தேவ சிநேகத்துக்கு இவ்வளவு விரோதமான சிநேகத்தோடு விளையாடப் போகக்கூடாது.

ஆனால் இவ்வகையாய் ஒருவிசை இந்தச் சிநேகத்தைத் தள்ளிய பிற்பாடு உன் புத்தியில் அதின் ஞாபகமும் நாட்டங்களும் எப்பொழுதும் பதிந்திராதோவென்று சிலவிசை நீ சொல்லுவாயாக்கும். ஆனால் பிரிய சகோதரமே, இதன்மட்டில் உனக்கு இருக்கவேண்டிய கஸ்தித் துக்கமெல்லாம் மெய்யாகவே இருந்தால் முழுதும் எடுபட்டுப்போம். ஏனென்றால் இந்த மெய்யான கஸ்தி உனக்கு இருக்குமேயாகில் இந்தப் பக்ஷப் பற்றுதல்மட்டில் உனக்கு அருவருப்புமாத்திரம் இனி உண்டாம். சுவாமிமட்டில் உனக்கு இருக்கவேண்டிய பரிசுத்த நேசமன்றி வேறே எவ்விதப் பற்றுதலும் உனக்கிராது.

ஆனால் உனக்கு வேண்டிய மனஸ்தாபம் இல்லாமையால் இன்னம் உனக்கு ஏதாகிலுங் கெட்ட பற்றுதல்கள் இருக்குமேயாகில் பின்னால் நான் சொல்

லப்போகும் வழிப்பாடுகளை அநுசரித்துவா. தியானத்தைக் குறித்துப் பேசும்போது உனக்கு கற்பிக்கப்பட்ட பிரகாரம் உன் ஆத்துமம் புத்திக்கடுத்த வனவாசமாயிருக்கும்படி பிரயாசப்படு. உன்னால் இயன்றவளாயில் அந்த வனவாசத்தில் அடிக்கடி போக வேண்டும். பலமுறை உன்னிருதயத்தில் பல ஞான முயற்சிகளைச் செய்து உன் கெட்ட இச்சைகளை முழுதும் உன் சத்துவ பலனெல்லாங் கொண்டு அருவருத்துத் தள்ளப் பார். வழக்கத்துக்கு அதிகமாய் நல்ல புஸ்தகங்களை வாசிப்பதுடன் இன்னம் வழக்கத்தைப் பார்க்கிலும் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து நன்மையும் வாங்கக்கடவாய். கடைசியாய்க் கூடுமாயிருந்தால் உன் ஆத்தும குருவானவருக்கு உன் தந்திரங்களையெல்லாந் தாழ்ச்சியோடு உண்மைப்படி சொல்லிக்காட்டு.

நான் சொன்ன வழிபாடுகளையெல்லாம் நிலைமையோடு பிரமாணிக்கமாய் அநுசரித்து வருவாயேயாகில் உன் துன்ப இக்கட்டுகளையெல்லாஞ் சுவாமி நீக்கிவிடுவார் என்பதற்கு அற்ப சமுசயமுமில்லை. ஆனால் நெடுங்காலம் ஒருவரோடு சிநேகமாய் இருந்தபின் இவ்வளவு கடுமையாய்த் திடுக்கெனச் சிநேகத்தை முறித்துவிடுவது நன்றிகெட்டதனமல்லவா என்பாயாக்கும். ஆனால் சுவாமிக்கு நீங்களிருவரும் பிரியமுள்ளவர்களாகும்படி செய்யும் நன்றிகெட்டதனம் எவ்வளவோ பாக்கியமானது.

மெய்யாகவே பிரிய சகோதரமே, இப்படி செய்வது நன்றிகெட்டதனமல்ல. இதனால் உன் சிநேகிதனுக்கு வெகு உபகார சகாயஞ் செய்கிறாய். ஏனென்றால் சிநேக பாசம் என்னும் விலங்கில் நீங்களிருவரும் ஒருமிக்க அகப்பட்டுக்கொண்டிருந்தபடியால் உன் விலங்கை நீ முறித்துவிடும்போது உன் சிநேகிதனுடைய விலங்கையும் முறித்துவிடுகிறாய். இப்

போது உன் சிநேகிதனுக்கு நீ செய்யும் நன்மையை அவன் கண்டுபிடியாவிட்டாலும் நாளுக்குநாள் கண்டு பிடித்து; ஆண்டவரே என் விலங்குகளை முறித்துவிட்டீர் ஸ்துதியின் பலியையும் உமக்கு ஒப்புக்கொடுத்து உமது பரிசுத்த நாமத்தைப் புகழ்ந்துகொண்டாடுவேன் என்கிற இந்த நேத்தியான நன்றியறிந்த பாடலை உன்னைப்போலப் பாடுவான்.

22-ம் அதிகாரம்.

நேசங்களைக்குறித்து வேறு சில புத்திமதிகள்.

இன்னம் இது விஷயத்தைக்குறித்து விசேஷமான ஓர் ஆலோசனை சொல்லவேண்டியிருக்கிறது. சிநேகிதர்களுக்குள் இணைபிரியாமல் ஒருவரொருவரைச் சிநேகிக்கவேண்டும். இல்லாவிட்டால் சிநேகம் உண்டாகவுமாட்டாது, நிலைத்திருக்கவுமாட்டாது. ஆதலால் இப்படி ஒவ்வொருவரை இணைபிரியாமல் சிநேகித்துவருவதில் பலமுறை நேரிடுவதென்னவென்னில் ஒருவனுக்குள்ள பற்றுதல் நாட்டம் பிரியமே அவன் சிநேகிதன் இருயத்திலுந் தோற்றமற்றவிதமாய் உண்டாகிப் பலப்பட்டுப்போம். ஆனால் நாம் சிநேகிப்பவர்கள்மட்டில் நமக்கு வெகு நல்ல எண்ணமிருக்கும்போது விசேஷமாய் இப்படி சம்பவிக்கிறது. ஏனெனில் இப்படிப்பட்ட சமயத்தில் அவர்களுடைய சிநேகத்தை அதிகமாய் விரும்புகிறபடியால் அவர்களிடத்தில் இருக்கக்கூடுமான நாட்டங்களுங் குணகுணங்களும் நல்லதாயினுஞ்சரி கெட்டதாயினுஞ்சரி எல்லாம் ஒருமிக்க வெகு சுளு

வாய் நமதிருதயத்தில் படிந்துபோகின்றன. உண்மையாகவே அக்கோனித்துப் பூவில் தேனீக்கள் தேனைமாத்திரந் தேடும்; ஆயினுந் தேனுடன் அந்தப் புஷ்பத்தில் இருக்கப்பட்ட விஷத்தையும் மெள்ள மெள்ளக் குடித்துவிடும்.

ஆ பிரிய சகோதரமே, நமது இரக்ஷகர் வசனித்து வந்ததாக முன்னோர் சொல்லும் வார்த்தையை இத் தருணத்தில்தான் சரியாய் அநுசரிக்கவேண்டும். நல்ல காசுக்காரர்களாக இருக்கக்கடவீர்கள் என்று கற்பிக்கின்றார். அதென்னவெனில் நல்ல பணத்துக்குப் பதிலாய்ச் செல்லாத பணத்தையுந் தங்கத்துக்குப் பதிலாய் மட்டப் பொன்னையும் வாங்காதே என்பதேயாம். தாழ்ந்ததையும் உயர்ந்ததையுங் கலவாமல் பிரித்துவிட வேண்டுமென்றும் அர்த்தமாம். ஞாயத்தோடே இவ்வாறு கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஏதாகிலுங் குறை இராதவன் ஒருவனுமில்லை என்கலாம்.

இப்படியிருக்க ஒருவனைச் சிநேகிப்பதால் அவனுடைய குறைகளையும் நாம் அங்கீகரித்துக்கொள்ள வேண்டியதென்ன? குறைகளைக் பாராமல் தன் சிநேகிதனைச் சிநேகிக்க வேண்டுமென்பது மெய்யே. ஆனால் அவனுடைய குறைகளை நாம் நேசிக்கவும் ஆகாது அங்கீகரிக்கவும் ஆகாது. ஏனெனில் நன்மையான விஷயத்தில் சிநேகிதர்கள் இணைபிரியாமலிருக்கவேண்டுமேயல்லாது தின்மையான விஷயத்தில் அப்படியிருக்கலாகாது. ஆறுகளில் பொன் சன்னங்களை வாருகிறவர்கள் கல்லாயில் மணல்களைத் தள்ளிவிட்டுப் பொன்னை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவதுபோல் நல்ல சிநேகிதருள்ளவர்கள் சற்குணங்களை மாத்திரம் நேசித்துத் தெரிந்துகொள்ளவேண்டுமேயன்றி அவர்களிடத்தில் இருக்கக்கூடுமான குறைகளை விரும்பவும் அங்கீகரிக்கவும் ஒண்ணாது.

அர்ச். பசில் என்பவருடைய சிநேகிதர்களில் அநேகர் இவரை எவ்வளவு நேசித்துவந்தார்கள் என்றால் இவரைப்போல் மெதுவாய்ப் பேசவும் இன்னம் இவர் நடையிலுந் தாடியிலுந்தானே இவரைக் கண்டு பாவிக்கவும் பார்ப்பார்களென்று நசியான்சு பட்டணத்தின் அர்ச். கிறெகோரியார் சொல்லுகிறார். இத் தன்மையாய் இன்னம் புருஷன் தன் பெண்சாதியையும் பெண்சாதி தன் புருஷனையும் பிள்ளைகள் தங்கள் தந்தை தாய்களையுஞ் சிநேகிதர்கள் தங்கள் சிநேகிதர்களையும் வெகுவாய் எண்ணி நேசித்து வருவதால் அந்நியோந்நிய சிநேகப் பழக்கத்தினாலுஞ் சரி மூகதாட்சணியத்தினாலுஞ் சரி அல்லது கண்டுபாவிக்கவேண்டுமென்கிற ஆசையினாலுஞ் சரி அநேகாநேகங் குறைக்குள்ளாகிறார்கள். ஆனால் பரிச்சேதம் இப்படி செய்யக்கூடாது.

ஒவ்வொருவனுக்கும் உள்ள குறைகளே மெத்த. இன்னம் பிறர் குறைகளையுந் தன்பேரில் போட்டுக் கொள்ள வேண்டியதென்னே. இவ்வகையாய் நமது சிநேகிதர்கள் குறைகளைக் கண்டுபாவிக்கமெய்யான சிநேகங் கற்பியாது ஆனால் அவரவர் தங்கள் தங்கள் குறைகளை நிவர்த்திசெய்ய ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருக்கவேண்டும். இவ்வண்ணமாய் அவரவர் குறைகள் நிலைகொண்டு நீளித்திருக்க இடங்கொடாமல் இருப்பதுமல்லாமல் தானும் அதைக் கண்டுபாவிக்கலாகாது.

பிரிய சகோதரமே, பாவமாயிராத குறைகளைக் குறித்தே நான் இவ்விடம் பேசுகிறேன். ஏனெனில் பாவமானதைத் தான் ஒப்புக்கொள்ளவுஞ் சிநேகிதனிடத்தில் இருக்கும்படி சகிக்கவுங் கூடாது. தன் சிநேகிதன் பாவமென்னுஞ் சீழ்க்கட்டியால் சாக இருக்கையில் அவனைக் காப்பாற்ற நற்புத்தி சொல்லுத

லாகிய சலாக்கால் சற்றுக் குத்திச் சீழை எடுக்கத் துணியாமல் அவன் சாகப் பார்த்துக்கொண்டிருப்பது மெய்யான சிநேகமல்ல. அற்ப சிநேகம் அல்லது கெட்ட சிநேகம் என்கலாம். மெய்யான சத்தியுள்ள நேசம் பாவநிழலில் இருக்கவறியாது. ஓர்விதப் பல்லி நெருப்பில் படுத்தால் அதை அவித்துவிடுமாம்.

இத்தன்மையாகவே பாவமானது சிநேகத்தில் கலந்தால் அதை அவித்துவிடும். சடுதிப்போராய் மாத்திரம் ஏதாகிலும் ஓர் பாவஞ் சம்பவிக்குமேயாகில் வேண்டிய புத்திமதிசொல்லி உடனே அதைத் தள்ளிவிடும்படி மெய்யான சிநேகம் பிரயாசப்படும். ஆனல் இந்தப் பாவங் குடிகொண்டு நிலைத்திருக்குமோ உடனே சிநேகம் அழிந்துபோம். ஏனெனில் புண்ணியத்தால்மாத்திரமே சிநேகம் நிலைநிற்கக்கூடும்.

இது காரியம் இப்படியிருக்கச் சிநேகத்தால் பாவம் விளைகிறதானல் என்னென்று சொல்லுகிறது. சிநேகிதன் வழியாய் நமக்குப் பாவம் வருமோ அவன் நமது சத்துராதியாகிறுன். நமது சிநேகிதன் நம்மைக் கெடுத்து நாம் நித்திய ஆக்கினைக்குள்ளாகக் காரணமாயிருப்பானே தாமதமின்றி அவன் நேசத்தைமுறித்துத் தள்ளவேண்டும். இப்படிப்பட்டவன் நமது சிநேகத்துக்கு வெகு அபாத்திரவான். ஆனல் பல துர்க்குணமுள்ள எவன்பேரிலாகிலும் நாம் பற்றுதலாயிருப்போமோ நமது சிநேகம் அபத்தமான சிநேகம் என்பதற்குத் திஷ்டாந்தமான அடையாளமாம். நாம் நேசிப்பவன் கெட்டவனே உண்மையாகவே நமது நேசமுங் கெட்டதாயிருக்கும். ஏனெனில் இத்தன்மையான சிநேகம் மெய்யான புண்ணியத்தை நாடி இராததால் வீணன அற்ப காரியத்தை அல்லது இன்பசுகத்தைச் சார்ந்த குணகுணத்தைத் தாவியிருக்க வேண்டியிருக்கும்.

வியாபார லாபத்தை முன்னிட்டுச் சிநேக பக்ஷமாய்க் கூடியிருப்பவர்களுக்குள் மெய்யான சிநேகம் இருப்பதில்லை. மெய்யான சிநேகத்தின் சாயல் மாத்திரம் உண்டு. ஏனெனில் இலாபத்தின்பேரில் பிரியமாய் இருக்கிறார்களேயல்லாமல் ஒருவர் ஒருவரை நேசிக்கிறதில்லை.

கடைசியாய்க் கிறீஸ்துவனது சீவியத்தின் இரண்டு பெரும் ஸ்தம்பங்கள்போல் இருக்கும் இவ்விரு தேவ வாக்கியங்களையும் ஞாபகம் வருத்திக்கொள். முதலாவது.—தேவபயமுள்ளவனுக்கு மெய்யான நல்ல சிநேகம் இருக்கும் என்று ஞானியானவர் வசனித்திருக்கிறார். இரண்டாவது.— இலௌகீக சிநேகஞ்சர்வேசுரனுக்குச் சத்துரு என்று அர்ச். யாகப்பர் வசனித்திருக்கிறார்.

23-ம் அதிகாரம்.

வெளியரங்க ஒறுத்தலை அநுசரிப்பதைக் குறித்து.

சராசர நூலாசிரியர்கள் கற்பிப்பதாவது: உடையாத வாதுமைப் பருப்பின்மீது ஏதாகிலும் ஓர் வார்த்தை எழுதி அந்த வாதுமைக் கொட்டையில் தானே உடனே அதை வைத்துத் தகுந்தபடி மூடி நட்டால் அது முளைத்து விளைவிக்கும் எல்லா வாதுமைக் கொட்டைகளிலும் மேற்சொல்லிய எழுத்து பதிந்திருக்குமாம். பிரிய சகோதரமே, ஒருவனைச் சீர்திருத்துவதற்கு ஆரம்பத்திலேயே அவனுடைய உள்ளத்தைத் திருத்தாமல் வெளிக் காரியங்களைச் சீர்படுத்

தப் பிரயாசப்படுவார்கள். ஆனால் இது ஒருபோதும் எனக்குத் தகுதியாய்த் தோன்றவில்லை.

இதற்கு விரோதமாய் உள்ளாந்தரிக்க ஒறுத்தலால் துவக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. சர்வேசுரன்றாமே சொல்லுவதைக் கேள்: என் மகனே, உன் முழு இருதயத்தோடு என்னிடத்தில் திரும்பிவா, உன் இருதயத்தை எனக்குக் கொடுவென்கிறார். அதேனெனில் நமது எல்லாக் கிருத்தியங்களுக்கும் இருதயமே ஊறணிபோல் இருப்பதால் நமது இருதயம் எப்படியோ அப்படியே நமது செய்கைகளும் இருக்கும். உந்த கவியின் மணவாளன் ஆத்துமத்தை வருந்தி அழைத்து உன் இருதயத்தின்மீது ஓர் முத்திரையாகவும் உன் கையின்பேரில் ஓர் முத்திரையாகவும் என்னைப் பதித்துக்கொள் என்கிறான்.

வாஸ்தவமாகவே எவன் இருதயத்தில் சேசுநாதர் வீற்றிருப்பாரோ அவனுடைய எல்லா வெளிக்கிரியைகளிலுஞ் சேசுநாதசுவாமி காணப்படுவார். ஆனதால் பிரிய சகோதரமே, சேசுநாதசுவாமி வாழ்க என்னும் இப்பரம பூசித வசனத்தை எல்லாத்துக்கு முந்தி உன் இருதயத்தின்மீது பதிக்க விருப்பமாயிக்கிறேன். ஒருவிசை இப்படி பதித்தபின் வாதுமைக் கொட்டையினின்று வாதுமை மரம் முளைக்கிறது போல உன் இருதயத்தை ஆதாரமாகக் கொண்டு அதினின்று உண்டாகும் ஞான விருக்ஷமாகிய உன் சீவியம் அதின் சுகிர்த கனிகளையெல்லாம் விளைவிக்கும்.

உன் இருதயத்தினின்று புறப்படும் எல்லாக் கிருத்தியங்களிலும் முன் சொல்லிய வாதுமைப் பருப்பைப்போலவே இவ்விரக்ஷணியத்தின் அக்ஷரம் பதிந்திருக்கும். சேசுநாதசுவாமியே உன் இருதயத்தில் வீற்றிருப்பதால் அவரே உன் நேத்திரங்களிலும் நா

விலும் கரங்களிலும் இன்னமுங் கூந்தல்களிலுந்தானே கடைசியாய் உன் நடக்கை எல்லாத்திலுங் காணப்படுவோர். அப்போதுதான் அர்ச். சின்னப்பனைப் போல நான் ஜீவிக்கிறேன். ஆயினும் நானல்ல சீவிப்பது, சேசுகிறீஸ்துநாதரே என்னிடத்தில் சீவிக்கிறாரென்று சொல்லலாம். ஓரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் ஒரு மனிதனுடைய இருதயத்தைச் சம்பாதித்துக்கொண்டவன் அந்த மனிதனை முழுதுங் கைவசஞ் செய்துகொள்ளுகிறான்.

ஆனால் இப்படி மனிதனைச் சீர்திருத்த இருதயத்தால் துவக்கவேண்டியிருப்பதால் எல்லா வெளிக்கிருத்தியங்களிலும் பத்தியுமல்லாமல் இன்னம் விவேகம் விமரிசையும் விளங்கும்படி நடந்துகொள்ளக் கற்பிக்கவேண்டும். இதற்காகச் சுருக்கமாய்ச்சில புத்திமதிகளைச் சொல்லிக்காட்டப்போகிறேன்.

ஒருபொழுதிருக்க உன்னால் கூடுமாகில் திருச்சபையால் கற்பிக்கப்பட்டிருக்கும் ஒருபொழுதல்லாமல் இன்னமுஞ் சில நாட்களில் ஒருபொழுதிருப்பது நன்மையாயிருக்கும், ஏனெனில் ஒருபொழுது உபவசமானது புத்தியை மேன்மைப்படுத்திச் சரீரத்தை அடக்கிப் புண்ணியத்தைச் சுளுவாய்ச் செய்கிறதற்கும் மோக்ஷத்தில் திரண்ட சம்பாவனை அடைகிறதற்கும் உபயோகமாயிருப்பதுமன்றி நமது மிஞ்சின ஆசையை மட்டுக்கட்டிப் பஞ்சேந்திரியங்களும் புத்தியின் முறைமைக்கு அமைவதற்குச் சத்தியையும் வருவிக்கும். நாம் வெகுவாய் உபவாசம் பிடிக்காவிடினும் உபவாசம் பிடிக்க நமக்குத் தெரியும் என்று பசாசு அறியும்போது வெகுவாய் நமக்குப் பயப்படும். பூர்வீகக் கிறீஸ்துவர்கள் புதன் வெள்ளி சனி விசேஷமாய்ச் சுத்தபோசனஞ் செய்வார்கள். உன் பத்திக்கு ஒத்தபடி உன் ஆத்தும குருவானவர் ஆலோசனை

கேட்டு இந்நாட்களில் எத்தினத்திலாகிலும் ஒருபொழுது உபவாசமாயிருப்பாய்.

லேத்தாவென்னும் புண்ணியவதிக்கு அர்ச். ஏரோனிமுசென்பவர் சொன்னதை நானுஞ் சொல்லுகிறேன். இளவயதில் இருப்பவர்கள் விசேஷமாய் மட்டுத்திட்டமின்றி உபவாசமாயிருப்பது எனக்குப் பிரியமேயில்லை. பரீக்ஷையால் அறிந்திருக்குமாப்போல் சுமை சுமந்துபோகுங் குட்டிக் கழுதைகள் ஒருவிசை வழியில் களைத்துப்போனால் வழியை விட்டு அப்பால் ஓடிப்போகப் பார்க்கும்.

இவ்வண்ணமே வாலிபர்கள் மிஞ்சின ஒருபொழுது உபவாசத்தால் பலவீனராகித் தாங்கள் அதுவரையில் பிடித்த ஒருபொழுது உபவாசத்தை முழுதும் மறந்தாற்போல் வெகு சுளுவாய் அரிய பதார்த்தங்களைத் தேடிப்போவார்கள். மான்கள் மிஞ்சி கொழுத்திருந்தாலும் அல்லது மெத்த இளைத்திருந்தாலும் செவ்வையாய் ஓடமாட்டாது. இவ்வாறே நமது சரீரம் மிஞ்சின விதமாய்ப் போஷிக்கப்பட்டும் அல்லது மிஞ்சின விதமாய் பலவீனப்பட்டும் இருக்கும்போது தந்திர சோதனைகளுக்கு வெகுவாய் உள்ளாகிறோம். ஏனெனில் முதல் அந்தஸ்தில் நமது சரீரங் கர்வங்கொண்டு அடங்காமற்போம். இரண்டாம் அந்தஸ்திலோ கோழைத்தனமுள்ளதாய் அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கும்.

சரீரம் மிஞ்சின விதமாய்க் கொழுத்துப்போகும்போது அதைச் சுமப்பது நமக்கே கஷ்டமாயிருப்பதுபோல் அது மிஞ்சின பலவீனமாயிருக்கும்போது நம்மைத்தாமே சுமப்பதற்குத் திராணியற்றதாகிவிடும். ஒருபொழுது உபவாச முதலிய தவக்கிருத்தியங்களில் மட்டுத்திட்டம் அநுசரியாததால் பிறருக்கு வெகு உபயோகமாயிருக்கக்கூடுமான பலபேர் பலனற்று உபயோகமற்றவர்களாகிறார்கள்.

இவ்வாறே அர்ச். பெர்நார்தென்பவர் மிஞ்சின ஒருத்தல் உபவாசம் பிடித்ததால் பின்னால் விதனப் படும்படி நேரிட்டதாம். இத்தன்மையாய்க் கிரமந் தப்பி ஒருபொழுது உபவாசம் பிடிப்பவர்கள் ஆரம் பத்தில் தங்கள் சரீரத்தை ஒடுக்கியபின் பிறகு அதை வெகுவாய்ப் போஷிக்கும்படி உடன்படுகிறார்கள். ஆரம்பத்திலேயே ஒவ்வொருவருந் தங்கள் அந்தஸ் துக் கடமை அலுவல்களைச் சரியாய் நிறைவேற்று கிறதற்குத் தக்க விதமாய் மட்டுத்திட்டத்தோடு உப வாச ஒறுத்தல் செய்வது இவர்களுக்கு வெகு நல மாயிருக்குமல்லோ.

ஒருபொழுதும் வேலையுஞ் சரீரத்தை அடக்கி ஒடு க்கும். நீ செய்யும் வேலை உனக்கு அவசியமாய் அல்லது தேவதோத்திரத்துக்கு வெகு உபயோக மாய் இருந்தால் உபவாச ஒறுத்தல் செய்வதைப் பார்க்கிலும் இந்த வேலையால் உனக்கு வரும் பிரயா சையைப் பொறுமையாய்ச் சகித்து வருவது அதிக உத்தமம். திருச்சபையின் கருத்து இதுவே. இதைப் பற்றித்தான் தேவ தோத்திரத்தைக் கோரி பிறர் நல த்துக்காக உழைத்துப் பிரயாசப்படுகிறவர்கள் திருச் சபையால் கற்பிக்கப்பட்டிருக்கும உபவாசத்தை முதலாய் அநுசரிக்கக் கடமையில்லையென்று தீர்மா னித்திருக்கிறது.

ஒருவனுக்கு உபவாசம் பிடிப்பது வெகு பிரயா சையாயிருக்கும். வேறொருவன் வியாதிக்காரரைப் பராமரித்து அடிமைப்பட்டவர்களைத் சந்தித்துப் பாவசங்கீர்த்தனங் கொடுத்துப் பிரசங்கம் செய்து ஏழைகளை ஆதரித்து வருவான். இவனுக்கு இது வெகு பிரயாசையாயிருக்கக்கூடும். உபவாசம் பிடிப் பவனுக்கு வரும் நன்மையைப்பார்க்க இவன் பிரயா சத்துக்கு அதிக பேறுபலன் உண்டு. ஏனெனில் உபவாசத்தைப்போலவே இப்படிப்பட்ட வேலையால்

சரீரம் ஒடுங்குவதுமன்றி இதனால் வரும் பிரயோசனம் வெகுவாய் ஆசிக்கத் தக்கதாமே.

இவ்வகையாய்ப் பொதுவாய்ப் பேசவேண்டுமானால் சரீர பலனை மிஞ்சினவிதமாய் ஒடுக்குவதைப் பார்க்கிலும் வேண்டியவளவில் அதைக் காப்பது உத்தமம். ஏனெனில் இவ்விதமாய் இஷ்டமானபோதெல்லாஞ் சரீரத்தை எப்பொழுதும் ஒடுக்கி ஒறுக்கலாம். ஆனால் ஒருவிசை சரீரம் பலவீனப்பட்ட பின் அவசரமாயிருக்கும்போது வேண்டியபடி அதைப் பலப்படுத்துகிறது எப்போதும் நமது சத்துவத்தில் இல்லை.

நமது இரக்ஷகர் சேசுகிறீஸ்துநாதசுவாமி தமது அப்போஸ்தலர்களை நோக்கி உங்களுக்குப் பரிமாறுவதைப் பொசியுங்களென்றார். இவ்வாக்கியத்தை வெகு கவனமாய் உற்றேசித்துவர வேண்டியிருக்கிறது. எப்பொழுதும் உதவாத சாப்பாட்டை நீயாய்த் தெரிந்துகொள்வதைப் பார்க்கிலும் உனக்குப் பரிமாறுவதை நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வித்தியாசமின்றிச் சாப்படுவதே பெரும் புண்ணியமெனத்தகும். ஏனெனில் நாவுக்குப் பிரியப்படாத பதார்த்தத்தைப் பொசிப்பது அதிக பிரயாசையாயிருந்த போதிலுந் தானாய் ஒன்றையும் விரும்பாமல் கொடுப்பதைப் பிரியமாய்ச் சாப்பாடுவதில் அதிக மனவொறுத்தல் உண்டு. ஏனென்றால் இப்படி செய்வதால் தன் சொந்த பிரியத்தைத் தேடாததுமன்றி இன்னந் தன் மனதையும் ஒறுக்கிறதற்கு இடமுண்டு.

மெய்யாகவே பிறருடைய இஷ்டத்துக்குத் தன் பிரியம் நாலாவிதத்திலும் ஒத்துப்போகும்படி செய்வது அற்ப ஒறுத்தலல்ல. இன்னம் இப்படிப்பட்ட ஒறுத்தலானது வெளிக்குத் தோன்றுததுமல்லாமல் எவனுக்கும் இடஞ்சலாயும் இருக்காது. உலக நடைக்கு முழுதும் ஒத்ததாயிருக்கும். ஒரு பதார்த்தம் வே

ண்டாம் என்று வேறே பதார்த்தத்தைத் தேடி ஓயாமல் அதை உற்றுப்பார்த்து ஒன்றும் வகையாயில்லை என்றும் வேண்டியபடி சமைத்திருக்கிறதில்லை என்றும் முறையிடுகிறவன் தன் இருதயந் திராணியற்றதென்றும் வாய்க்கு அடிமைப்பட்டதென்றுங் காண்பிக்கிறான்.

அர்ச். பெர்னார்தென்பவர் தெரியாமல் தண்ணீருக்குப் பதிலாய் எண்ணெயைக் குடித்தாராம். வேண்டுமென்று இவர் கசப்பான தண்ணீரையே குடித்திருப்பாரேயாகில் அதை இவ்வளவு கனமாய் எண்ணமாட்டேன். உங்களுக்குப் பரிமாறுவதைப் பொசியுங்கள் என்னும் வார்த்தையில் அடங்கிய சாங்கோபாங்கம் உள்ளபடி எதில் அடங்கியிருப்பதெனில் சாப்படுகிறதிலும் பானம் பண்ணுகிறதிலுந் தன் மனதைத் தேடாமலும் ஒன்றுங் கவனிக்காமலும் இருக்கிறதிலேயே அடங்கியிருக்கிறது. ஆயினுஞ் சவுக்கியத்துக்குக் கேடானதும் இன்னம் புத்தி உழைப்புக்கு அவ்வளவு உதவாததுமான பதார்த்தங்களைத் தள்ளிவிடவேண்டும். மேலுந் தேவ தோத்திரத்துக்காகத் துவக்கிய வேலையை முடிப்பதற்குப் பல தருணங்களில் நமது சரீரத்தை விசேஷ விதமாய்ப் போஷித்துவர வேண்டியிருப்பது உண்மை.

கடூசியாய் மகா கடுமையாய் ஒருபொழுது உபவாசம் பிடித்துப் பல சமயங்களில் அதை விட்டுவிட்டுச் சிலகாலம் இன்பமான சுக பதார்த்தங்களைத் தேடித்திரிதைப் பார்க்கிலும் எப்பொழுதும் ஒரே சீராய் மட்டசனத்தை அநுசரிப்பது உத்தமம்.

மட்டுகிட்டமாய்ச் சரீரத்தைத் தெண்டிப்பதால் வெகு நேத்தியாய்ப் பத்தி வர்த்திப்பதற்கு இடமாகும். ஒட்டியாணத்தால் சரீரத்துக்கு வெகு அடக்க ஒறுத்தல் உண்டாம். ஆனால் இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுக்கும் பலவீனமானவர்களுக்குங் கடி

ணமான அலுவல் ஆத்திரமுள்ளவர்களுக்கும் வழக்கமாய் இது அவ்வளவு உபயோகமாயிராது. ஆயினுந் திறமையுள்ள ஆத்துமகுருவானவர் ஆலோசனையின் பேரில் தபசுக்காக விசேஷமாய்க் குறிக்கப்பட்ட நாட்களில் இவைகளை உதவிக்கொள்ளலாம்.

பகற்காலத்தில் அசமந்தத்தனத்துக்கு இடங்கொடாமல் சுறுசுறுப்பாய் வேலை செய்யும்படி ஒவ்வொருவனுந் தன்தன் சரீர சத்துவத்துக்குத் தக்காப்போல் வேண்டியவளாயில் இரவில் நித்திரைசெய்ய வேண்டும். காலைப்பொழுது விசேஷ பிரயோசனமாயிருக்கிறதென்று வேத புஸ்தகத்தாலும் அர்ச்சியசிஷ்டவர்கள் மாதிரிகையாலும் நமது சுயபுத்திப் பரிக்ஷையினாலும் அறிந்திருக்கிறோம். நமது ஆண்டவர்தாமே உதிக்குஞ் சூரியன் என்றும் அவர் திருத்தாயார் விடியற்கால நக்ஷத்திரம் என்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அதிகாலமே எழுந்திருக்கக் கூடுமாயிருக்கும்படி சாயுங்காலங் கொஞ்சம் முன்னேரத்தில்தானே படுத்துக்கொள்ளுவது நல்ல வாடிக்கை. காலைநேரம் விசேஷமாய்ச் சிறந்ததும் பிரியமுள்ளதுமாயிருப்பதுடன் அவ்வளவு வேலைத்தொந்தரவுள்ளதாயிராது. பறவைகள் முதலாய் அந்நேரத்தில் நாம் சுவாமியைப் புகழ்ந்து தோத்திரிக்கும்படி நம்மை அழைப்பதாகத் தோன்றுகிறது. ஆதலால் விடியற்காலம் எழுந்திருப்பது நமது சரீர சவுக்கியத்துக்குஞ் சாங்கோபாங்கத்துக்கும் வெகு உபயோகமாயிருக்கும்.

பாலாமென்னுந் தீர்க்கதரிசி கழுதையின்பேரில் ஏறிக்கொண்டு பாலாக்கு அரசனைக் காணப்போனான். ஆனால் அவன் கருத்து செவ்வையாயிராததால் வழியில் அவனைக் கொல்லுகிறதற்கு ஓங்கிய கத்தியோடு ஒரு சம்மனசானவர் காத்துக்கொண்டிருந்தார். கழுதையானது சம்மனசானவரைப்பார்த்து மும்முறை

நின்று, போகாமல் முரட்டுத்தனம்பண்ணிற்று. ஒவ்வொருவிசையுங் கழுதை நடக்கும்படி பாலாமென்பவன் கோலால் அதைக் கொடுமையாய் அடித்தான். கடைசியாய் நடவாமல் படுத்துக்கொண்டு அற்புதமாய் வாய்த்திறந்து என்ன நான் உனக்குச் செய்தேன். இப்போதென்னை ஏன் மும்முறை அடித்தாய் என்றது.

உடனே பாலாமென்பவனுக்குக் கண் திறக்கச் சம்மனசைக் கண்டான். இவர் அவனை நோக்கி மூன்றுதரமாய் ஏன் உன் கழுதையை அடிக்கிறாய்? என்னைப் பார்த்து இடைந்து நில்லாமல் அது நடந்திருந்தால் உன்னை நான் கொன்றேயிருப்பேன். அதையோ கொல்லாமல் விட்டிருப்பேன் என்றார். அப்போது பாலாமென்பவன் சம்மனசைப் பார்த்து ஆண்டவரே நான் பாவஞ்செய்தேன். நீர் எனக்கு விரோதமாய் நின்றது எனக்குத் தெரியாமற்போயிற்று என்றான்.

பிரிய சகோதரமே, இதைச் சற்று யோசித்துப் பார். பாலாமென்பவனே தின்மைக்குக் காரணம். ஆயினும் இதற்கு அற்பமுஞ் சம்பந்தப்படாத கழுதையை அடிக்கிறான். இத்தன்மையாகத்தான் பலமுறை நம்து விஷயத்தில் நேரிடுகிறது. ஒரு மனுஷி தன் புருஷன் பிள்ளை வியாதியாயிருப்பதைக் கண்டு உடனே இவர்களுக்கு வியாதி தீரும்படி தாவீதென்பவர் செய்ததுபோல ஒருபொழுது உபவாசம் பிடித்து ஒட்டியாணம் அணிந்து தவக்கிருத்தியங்களைச் செய்வாள். ஆ பிரிய சகோதரியே, மேற்சொல்லிய கழுதையிட்மாய் வீணாய் உன் சரீரத்தை அடித்துக் கஸ்திப்படுத்துகிறாய். ஆயினும் உன் சரீரம் உன் புருஷன் பிள்ளையினது வியாதிக்குக் காரணமாயிருப்பதுமில்லை, இதைப்பற்றி உன்பேரில் சர்வேசுரன் கத்தியை எடுக்கவுமில்லை.

ஆனல் உன் புருஷனைத் தெய்வம்போல் பார்த்து உன் பிள்ளையை மிதமிஞ்சி நேசித்து அவன் துர்க்குணங்களைப் பார்த்தும் பாராததுபோல் பேராசை அகங்காரமான பல வீண் எண்ணங்கொண்டு அவனை உயர்த்தத் தேடுகிருயே. இந்த ஆசைப் பற்றுதலை உன் இருதயத்தினின்று தள்ளிவிடு. உன் இருதயமே மேற்சொல்லிய தின்மைக்கு மெய்யான காரணம். இத்தன்மையாகவே ஒருவனுக்குப் பலமுறை பெரும் பாவத்தில் விழும்படி நேரிடும்." உடனே இவன் மனச்சாட்சி இவன் இருதயத்தைக் குத்தி வெகு முறையிடும். இதற்கு இவன் பயந்து தன்பேரிலேயே சினந்து தன் சரீரத்தைச் சபித்து ஆ நன்றிகெட்ட சரீரமே இப்படியோ எனக்குச் சதிமானஞ் செய்கிறதென்று கோபித்துத் தன் சரீரத்தை வெகுவாய்த் தண்டித்து மட்டுத்திட்டமின்றி ஒருபொழுது உபவாசம் பிடித்துப் பொறுக்கக்கூடாத முள் ஒட்டியாணங்களை அணிந்து முடியாத தவக்கிருத்தியங்களைச் செய்வான்.

ஆ இரக்கத்துக்குரிய பேதையான ஆத்துமமே, பாலாமென்பவனுடைய கழுதையைப்போல் உன் சரீரம் பேசுமேயாகில் ஆ சண்டாள ஆத்துமமே, ஏன் என்னை அடிக்கிருய், என்பேரில் அல்லவே, உன்பேரிலல்லோ சுவாமி தமது கத்தியை உருவிப் பழிசெலுத்துகிருர். நீயே குற்றவாளி. நீயே என்னைப் பலவாறு அங்குமிங்குந் தகாத விளையாட்டு வேடிக்கைகளுக்குங் கூட்டங்களுக்குங் கூட்டிக்கொண்டு போய்க் கேட்கவொண்ணுச் சம்பாஷணைகளைக் கேட்கும்படி செய்கிருய். ஏன் என் கண் கை உதடுகளை அதப்பியமாய் உதவிக்கொள்ளுகிருய்? கெட்ட தோற்ற உரூபிகரங்களால் ஏன் என்னை அலைக்கழித்துக் கலக்குகிருய்? இப்படிப்பட்ட கடின தந்திரங்களுக்கு என்னை உள்ளாக்குவதென்ன? நீயே உன் சிந்தை

யோசனைகளில் மட்டுத்திட்டமாயிரு. நானும் என் பஞ்சேந்திரியங்களில் அடக்கவொடுக்கமாய் இருப்பேன். நாணயவான்கள் கூட்டத்தில் வசிப்பேனாகில் இப்பேர்ப்பட்ட பாவக் கொடுமைகளை அறியேன். ஐயையோ நீயே என்னை நெருப்பில் தள்ளி அதில் விழுந்தபின் எரியக்கூடாதென்கிறாய், நீயே என் கண்களில் நெருப்புப் பொறிகளைக் கொட்டியபின் அதினால் என் கண்கள் பற்றியெரியக் கூடாதென்கிறாய் என்று இவ்வாறு உன்பேரில் உன் சரீரம் முறையிட்டுப் பேசும்.

ஆனால் அப்படிப்பட்ட சமயத்தில் சர்வேசுரன் தானே உனக்குச் சொல்வதைக் கேள். உன் சரீரத்தையல்ல உன் இருதயத்தை விசேஷமாய்த் தண்டித்து அடித்துப் பிளந்து நொறுக்கக்கடவாய். ஏனென்றால் அதன்பேரில்தான் என் கோபம் பொங்கியெழும்புகிறது. மெய்யாகவே உடம்பில் உண்டாகும் வியாதி நோக்காட்டை அமர்த்துவதற்கு அடிக்கடி ஸ்நானஞ்செய்வது அவ்வளவு அவசியமல்ல. ஆனால் சரீரத்திலிருக்கும் இரத்தத்தைச் சுத்தஞ் செய்து பித்தத்தைத் தணிப்பது அவசியம். இவ்வகையாய் நமது துர்க்குணங்களை நிவாரணஞ்செய்ய நமது சரீரத்தைத் தண்டிப்பது நன்மையாயினும் விசேஷமாய் நமது இச்சை ஆசைகளை நன்றாய்ச் சுத்திசெய்து நமது இருதயங்களைப் புதுப்பித்து அமர்த்த வேண்டியது. மேலும் எதுகாரியத்திலும் எவ்விடத்திலும் உன் ஆத்தும குருவானவர் ஆலோசனையின் பேரில்மாத்திரம் சரீர ஒறுத்தல் செய்யத் துடங்க வேண்டுமென்று மறந்துபோகாதே.

24-ம் அதிகாரம்.

கூட்டங்களையுந் தனிவாசத்தையுங் குறித்து.

கூட்டங்களை அதாவது மனிதர் சம்பாஷணை பழக்கங்களை வருந்தித் தேடுவதும் அவைகள் ஜவ்வாதென்று முழுதும் எட்டி நிற்பதும் உலக மனுஷர் பத்திக்குச் சரிப்படாத இரண்டு குறைகளாம்; ஏனென்றால் புறத்தியாருடைய கூட்டங்களில் பரிச்சேதஞ் சேராதிருப்பதால் பிறர்மட்டில் வெறுப்பு நிந்தை காண்பிக்கிறோம். அதை வேண்டுமென்று வருந்தித் தேடுவதால் சோம்பலுக்கு இடங்கொடுத்து வீணாய்க் காலத்தைப் போக்குகிறோம். புறத்தியானைத் தன்னைப் போற் சிநேகிக்கவேண்டும். அந்தப்படி அவனைச் சிநேகிக்கிறோமென்பதற்கு அவனோடு சேராமல் எப்பொழுதும் எட்டி நிற்கலாகாது.

நமது மட்டில் நாம் சிநேகமாயிருக்கிறோம் என்பதற்குத் தனிவாசத்தின் பேரில் பிரியமாயிருப்பது அடையாளம். முந்தி உன்னை நினைத்துப் பிறகு மற்றவர்களை நினையென்று அர்ச். பெர்நார்தென்பவர் சொல்லுகிறார். ஆதலால் மற்றவர்களை நீ சந்திக்கவும் மற்றவர்கள் உன்னை வந்து சந்திக்கவும் வேண்டி இராவிட்டால் உன் வீட்டிலேயே அமரிக்கையாய் உன் இருதயத்தோடு சம்பாஷிப்பாய். ஆனால் பிரிய சகோதரமே உன்னை யாராகிலும் பார்க்கவந்தாலும் அல்லது நீ போய்ப் பார்ப்பதற்கு விசேஷ நியாயங்கள் இருந்தாலுஞ் சுவாமி பேரால் போய்ப் பிறனை வாஞ்சனை பக்ஷத்தோடு பார்க்கக்கடவாய்.

தகாத கெட்ட கூட்டங்கள் உண்டு. அவை யாவையெனில் அவைகளில் கூடியிருக்கிறவர்களுக்கு ஏதா

கிலும் கெட்ட கருத்திருக்கும்போதும் அல்லது அதில் சேர்ந்திருப்பவர்கள் துர்க்குண துர் நடத்தையுள்ளவர்களாயிருக்கும்போதுங் கெட்ட கூட்டங்கள் எனப்படும். தேனீக்கள் குளவிகளையுங் குருட்டீக்களையும் விட்டு அகன்று நிற்பதுபோல் இவ்விதக் கூட்டங்களை முழுதும் நாம் விட்டு எட்டி நிற்கவேண்டும். ஏனென்றால் வெறி நாய் கடித்தவர்கள் வேர்வையும் ஆவியும் உமிழ் நீரும் விஷமானவை. விசேஷமாய்ப் பிள்ளைகளுக்கும் நொய்மையான சரீரமுடையவர்களுக்கும் ஆபத்தாம். இத்தன்மையாகவே துர்க்குணரும் பேச்சிற் கிரமமில்லாதவர்களுமான மனிதர்களோடு கூடுவதால் கன ஆபத்து நேரிடும். விசேஷமாய்ப் பத்தியில் இன்னமும் ஸ்திரப்படாதவர்களுக்கு வெகு ஆபத்தாம்.

கடினவேலை செய்தபின் கொஞ்சம் ஓய்வு இளைப்பாற்றியாகப் போகக்கூடுமான கூட்டங்கள் உண்டு. இதில் சரீரத்துக்கு வருஞ் சொற்ப இளைப்பாற்றி ஆறுதலன்றி வேறு பிரயோசனங் கிடையாது. இப்படிப்பட்ட கூட்டங்களில் ஓய்வுநேரம் போக்கக்கூடுமல்லாமல் அவைகளில் பற்றுதல் வைக்கலாகாது.

உபசார சாங்கியத்துக்காகக் கூடுங் கூட்டங்களும் உண்டு. இவைகள் ஒருவரொருவரை அந்நியோந்நியமாய்ச் சந்தித்துக்கொள்வதற்கு உதவும். இன்னம் பிறருக்கு மகிமையாகக் கூடுங் கூட்டங்களும் உண்டு. இவ்விதக் கூட்டங்களை வெகு கனமாய் எண்ணவொண்ணுதாயினும் ஆசார மரியாதைக் குறைச்சலாய் அவைகளை நிந்திக்கவும் போகாது. ஆனல் அனுசார அவிவேகிகளாய் நாம் காணப்படாதபடிக்கும் அடக்க விமரிசையோடு இந்தக் கூட்டங்களுக்கு போகவேண்டும்.

பத்தியுள்ள புண்ணியவான்கள் சேர்ந்த உபயோகமான கூட்டங்களும் உண்டு. ஆ பிரிய சகோதரமே,

இவ்விதக் கூட்டங்களில் பலமுறை சேருவதால் உனக்கு வெகு நன்மையுண்டாம். ஒலிவ் தோப்பில் நாட்டப்பட்ட திராக்ஷசெடியானது ஒலிவ்மரத்தின் உருசியுள்ள நேத்தியான கனிகளைத் தரும். இத்தன்மையாகவே நல்லவர்கள் சகவாசமுள்ளவன் அவர்கள் புண்ணியங்களுக்கும் பங்காளியாவான். வண்டுகள் தேனை உண்டாக்குகிறதில்லை. ஆனால் தேனை உண்டாக்கிறதற்குத் தேனீக்களுக்கு இவைகள் ஒத்தாசையாயிருக்கும். ஆதலால் புண்ணியவான்களோடு பலமுறை சம்பாஷித்துப் புழங்குவது மெய்யான பத்தியைச் சம்பாதிப்பதற்கு வெகு உத்தமமான மார்க்கம்.

எவ்விதக் கூட்டத்திலுஞ் சம்பாஷணையிலும் உண்மை கபடற்றதனஞ் சாந்தகுணம் அடக்க மரியாதை விசேஷமாய் விளங்கவேண்டும். பலமுறை பலபேர் தங்கள் வார்த்தையில் வெகு சூட்ச உபாயமுள்ளவர்களாயிருப்பதால் யாவரும் இதனால் சலிப்படைவார்கள். அடிமேல் அடிவைத்து நடப்பவனையும் பேசும்போதெல்லாந் தனை சீர்ப்பார்த்துப் பேசுகிறவனையும் ஒருவருஞ் சகிக்கமாட்டாததுபோல் வேண்டுமென்று ஒய்யார மேட்டிமையாயிருப்பவர்கள் சகலருக்கும் வெகு அரிகண்டமாவார்கள். இப்படிப் பட்டவர்களிடத்தில் எப்போதுங் கொஞ்சம் வீணெண்ணம் அகங்காரம் உண்டெனத்தகும். வழக்கமாய் நாம் பிறரோடு சம்பாஷிக்கும்போது மலர்ந்த முகத்தோடுங் குளிர்ந்த மனதோடும் பேசவேண்டும்.

இதைப்பற்றியே, அர்ச். உரோமுவால்தென்பவரும் அர்ச். அந்தோனியாரும் வெகு தபோதனர்களாயிருந்தபோதிலும் புறத்தியாரோடு வழக்கமாய்ச் சந்தோஷ அகமகிழ்ச்சி மேனா மரியாதையோடு பேசிவந்ததால் யாவரும் இவர்களை வெகுவாய்ப் புகழ்வார்கள். ஆதலால் சிரிக்கிறவர்களோடு சிரித்துச்

சந்தோஷமாயிருக்கிறவர்களோடு சந்தோஷமாயிரு. இன்னம் ஒருவிசை அப்போஸ்தலரோடு நான் உனக்குச் சொல்லுவதென்னவெனில் எப்பொழுதுஞ் சந்தோஷமாயிரு: ஆனால் சர்வேசுரனிடத்திற் சந்தோஷமாயிருந்து உன்னுடைய அடக்க மரியாதை எல்லோர் கண்களுக்குந் தோன்றக்கடவது. நமதாண்டவரிடத்தில் நீ மனமகிழ்ச்சியாயிருக்க உன் சந்தோஷத்துக்குக் காரணமான விஷயங் குற்றமற்றதாயிருப்பது போதாது. இன்னம் உனக்கு ஏற்றதாயுமிருக்க வேண்டும்.

நான் இவ்வாறு பேசுவதற்கு நியாயமென்னவெனில் பாவமற்ற உத்தரவான காரியங்கள் பலவுண்டு. ஆனால் உத்தரவானவைகளெல்லாந் தகுதியானவையல்ல. உன்னுடைய அடக்கவொடுக்கம் வெளியில் தோன்றவேண்டுமோ மதியற்ற பகடி பரியாசம் ஒன்றையுஞ் செய்யாதே. இவ்வகையாய் விளையாட்டாக ஒருவன் காலைத் தட்டி விழும்படி செய்வதும், பக்கத்தில் இருக்கிறவனைக் கிள்ளுகிறதும், பயித்தியக்காரனைக் கண்டால் அவனோடு ஏதாகிலும் வேடிக்கை செய்வதும் மெய்யாகவே மதியற்ற கெட்ட வேடிக்கை சந்தோஷமாம். இவைகள் உள்ளபடி கண்டனைக்கு உரியவைகளாம்.

ஆனால் இரண்டாம் பாகத்தில் பனிரெண்டாம் அதிகாரத்தில் சொல்லியதுபோலப் பலபேரிடத்தில் சம்பாஷித்துப் பேசும்போதுமுதலாய் நீ செய்யக்கூடுமான உள்ளாந்தர ஏகாந்தமுமன்றி வெளியரங்கமெய்யான ஏகாந்தத்தின்பேரிலும் உனக்கு வெகு விருப்பமிருக்கவேண்டும். அர்ச். எஜிப்த்து மரியம்மாள் அர்ச். வனத்துச்சின்னப்பர் அர்ச். அந்தோனியார் இன்னம் பல பரிசுத்த வனவாசிகளைப் போல் வனாந்தரத்தில் நீ வனவாசஞ் செய்யப் போகவேண்டுமென்று சொல்லுகிறதில்லை. ஆனால்

உன் அறையிலென்கிலுந் தோட்டத்திலென்கிலும் வேறே எந்த இடத்திலென்கிலுஞ் சற்றுத் தனியாயிருந்து உன்னில்தானே உன் புத்திச் சிந்தையை அடக்கி நல்லுணர்ச்சித் தியானங்களாலுங் கொஞ்ச நல்ல வாசகத்தாலும் உன் ஆத்துமத்துக்குச் சற்றே சந்தோஷ இளைப்பாற்றியை வருவிக்கப் பார். மேற்றிராணியாராகிய அர்ச். நசியான்சு கிறெகோரியார் இவ்விதமாகவே செய்துவந்தாரென்று அவர் எழுதிய புஸ்தகங்களில் காண்கிறோம்.

சூரியன் அஸ்தமாகும்போது என்னோடுதானே தனியாய்க் கடற்கரையில் காலப்போக்காய் உலாத்துவேன். ஏனெனில் சீஷிய நாட்களில் வழக்கமாய் உண்டாகுஞ் சலிப்பைத் தள்ளவும் புத்திக்குக் கொஞ்சம் ஓய்வு இளைப்பாற்றி தரவுஞ் சற்றுநேரம் இவ்விதமாய்ப் போக்குவது எனக்கு வழக்கமென்கிறார். இதினால் தமக்கு வந்த நல்லுணர்ச்சி தோற்றம் என்னவென்றுஞ் சொல்லியிருக்கிறார். அர்ச். அமிர்தநாதருக்கும் இந்த வழக்கம் இருந்ததாம். இவரைக் குறித்து அர்ச். அகுஸ்தினுஸ் என்பவர் சொல்லியிருக்கிறதாவது. இவர் அறையில் விக்கினமின்றி எல்லோரும் போவார்கள். தாமும் இவர் அறையில் நுழைந்து இவர் வாசிக்கிறதைப் பிரியமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பராம். இப்படி சிலநேரம் இருந்தபின் இவருக்கு அற்ப இடைஞ்சலும்வராதபடிக்குப் பேசாமல்புறப்பட்டுப்போவாராம். ஏனெனில் இவர் பிரயாசையான பல அலுவல்களைப் பார்த்தபின் புத்திக்கு இளைப்பாற்றியாக வாசித்துக்கொண்டு இளைப்பாறுஞ் சமையத்திலும் இவருக்குத் தொந்தரை செயலாகாதென்று இவரை விட்டுப் போவாராம். இத்தன்மையாகவே ஒருநாள் அப்போஸ்தலர்கள் வேதம்போதிப்பதில் அடைந்த பிரயோசனங்களை நமது இரக்ஷகருக்குச் சொல்லிக்காட்டியபோது

வர் அவர்களை நோக்கி நீங்கள் பிரத்தியேகமாய் ஓர் வனாந்தர இடத்திற்கு வந்து சற்றிளைப்பாறுங்கள் என்றார்.

25-ம் அதிகாரம்.

உடுபாவனைகளில் இருக்கவேண்டிய யோக்கியதையைக் குறித்து.

கிறீஸ்தவ பெண்பிள்ளைகள் தங்கள் அந்தஸ்துக் கேற்ற மேரை மரியாதைக்குரிய ஆடைகளைத் தரித்துக்கொள்ள வேண்டுமென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகின்றார். ஆண்பிள்ளைகளைக் குறித்தும் இவ்வாறே சொல்லவேண்டும். ஆனால் உடுபாவனை ஆபரணங்களில் இருக்கவேண்டிய மேரை மரியாதை அவைகளை அணிந்துகொள்ளும் வகையிலும் அவைகள் செய்யப்பட்டிருக்கும் விதத்திலும் இருக்கவேண்டிய சுத்தத்திலும் அடங்கியிருக்கிறது.

உடுபாவனைகள் இருக்கவேண்டிய சுத்தத்தைக் குறித்துச் சொல்லவேண்டியதென்னவெனில் நமது உடுபாவனைகள் ஏறக்குறைய எப்போதும் எத்தருணங்களிலுஞ் சுத்தமாயிருக்கவேண்டும். கூடியவரையில் அதில் எவ்விதக் கறையும் அழுக்கும் இருக்கலாகாது. வெளியில் துலங்குஞ் சுத்தமானது உள்ளாந்தரப் பரிசுத்தத்தனத்தை ஒருவிதமாய்க் காட்டுகிறது எனத்தகும். இதனால்தான் சர்வேசுரன் தமது பீடங்களை அண்டிச் சேவிப்பவர்களும் விசேஷமாய்த் தமது ஊழியத்துக்கு வசீகிருதம் செய்யப்பட்

டவர்களும் வெகு சரீர சுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று கற்பிக்கின்றார்.

உடுபாவனைகள் செய்திருக்கும் விதத்தைக்குறித்தும் பட்டோ துணியோ உயர்ந்ததோ தாழ்ந்ததோ இதுமுதலிய விஷயங்களைக் குறித்தும் எல்லோருக்கும் எச்சமயத்திலும் ஓரே விதமாய்ச் சொல்லக்கூடாது. காலத்துக்கும் பிராயத்துக்கும் அவரவர் அந்தஸ்துக்கும் போகவேண்டிய கூட்டங்களுக்குஞ் சமயங்களுக்குந் தக்கபடி இருக்கவேண்டும். வழக்கமாய்த் திருவிழா நாட்களில் திருவிழாவுக்கு ஏற்றபடி சோடித்துக்கொள்ளுவார்கள். தபசுகாலங்களில் அவ்வளவு நேத்தியான உடுப்புகளைத் தேடமாட்டார்கள். கலியாணத்திலோ அதற்கேற்றபடி உடுத்திக்கொள்ளுவார்கள். துக்கத்துக்குப் போகும்போது அதற்கானபடி போவார்கள். மன்னவான் பிரபுகளைச் சந்திக்கவேண்டுமாகில் அதற்கான மேனையாய் மேன்பட்டாய் உடுத்திக்கொள்ளுவார்கள்.

ஆனால் வீட்டுக்குள் இருக்கையில் இவைகளை மறந்தாற்போல் நடந்துகொள்ளவேண்டும். இல்லற வாழ்க்கையிலிருக்கும் பெண்ணானவள் தன் புருஷனோடு இருக்கையில் வேண்டியபடி சோடித்துக்கொள்ளலாம். மேலும் சோடித்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லவேண்டியிருக்கிறது. விசேஷமாய் இப்படி அலங்கரித்துக்கொள்ளுவது தன் புருஷனுக்குப் பிரியமாயிருக்கிறதென்று காணும்போது இந்தப்படி நடந்துகொள்ளவேண்டும். ஆனால் தன் புருஷன் தூரயிட்டிருக்கையில் இவ்விதமாய்ச் சோடித்துக்கொண்டால் இவ்வளவு சொகுசுஞ் சோடிப்பும் ஆரைப்பற்றியோ என்பார்கள். இன்னங் கலியாணமாகாத பெண்கள் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றபடி மேனா மரியாதையோடே கொஞ்சம் அதிகமாய்ச் சோடித்துக்கொள்ளுவதில் விக்கினமில்லை. ஆனால்

மெய்யான விதவைகளுக்குப் பத்தி சிரவணம் அடக்கவொடுக்கத்தைப் பார்க்கிலும் நேத்தியான ஆபரணங் கிடையா. அவர்கள் கலியாணம் பண்ணப் பார்க்கிறார்களோ, பார்க்காவிட்டால் தங்களைச் சோடிப்பானேன். பிராயஞ் சென்றவள் தன்னை அலங்கரிப்பது எப்பொழுதும் பரியாசத்துக்கு இடமாயிருக்கும்.

பிரிய சகோதரமே, எப்பொழுதுஞ் சுத்தமாயிருக்கப் பார். உன் உடைகளை அலங்கோலையாய் விட்டு விடாதே. வேண்டியபடி உடுத்திக்கொள்ளாமல் ஆரையாகிலுஞ் சந்திக்கப் போகும்போது நமக்கு அவர்கள்மட்டில் அவ்வளவு எண்ணமில்லையென்று காண்பிக்கிறோம். ஆனால் விசேஷமாய் வீண் சிலாக்கியத்துக்கு இடங்கொடாமலும் ஒருபோதும் நூதனத்தை விரும்பாமலும் இருப்பதுடன் ஒய்யார சிலாக்கியமுள்ளவர்களாயும் இருக்கவேண்டாது. உன்னால் ஆனவரையில் ஒருபோதும் நூதனத்தைத் தேடாமல் நாலுபேரைப்போல் மேரை மரியாதையோடு நடந்துகொள். இந்த அடக்க மேரை மரியாதையே எப்படிப்பட்ட அழகுந் தோர்வைப்படச் செய்யும் ஆபரணமாகவும் நம்மிடத்தில் இருக்கக் கூடுமான அந்தப் பழுதுகளை மூடும் நேத்தியான ஆடையாகவும் இருக்கும்.

வீண்காலம்போக்கிப் பலவித வாசனைத் தயிலங்களைப் பூசி ஓயாமல் தங்கள் தலைமயிரின் பேரில் சிந்தையாயிருப்பது வாலிபப் பெண்களுக்கு விசேஷமாய்த் தகாதென்று அர்ச். இராயப்பர் அறிவிக்கின்றார். இவர்களுக்கு இப்படியானால் இவ்வித முட்டாள் காரியங்களிற் காலம்போக்கும் ஆண்பிள்ளைகளைக் குறித்து என்ன சொல்லவேண்டும். வழக்கமாய் இவ்வளவு அற்ப புத்தியுள்ள மனிதர்கள் நாலுபேர் கண்ணுக்குஞ் சின்னத்தனமாவார்கள். இவர்கள் ஆண்

பிள்ளைகளல்ல பெண் பிள்ளைகளிலுந் தாழ்ந்தவர்கள் எனவேண்டும். இன்னம் வீண் சிலாக்கிய பெருமையை நாடும் பெண்பிள்ளைகள் புண்ணியத்தில் ஸ்திரமாயிரார்கள். சிலவிசை இவர்களிடத்தில் ஏதாகிலுஞ் சொற்ப புண்ணியம் இருந்தபோதிலும் இந்த வீண் சிலாக்கிய சந்தடியில் அற்பமும் அது வெளிக்குக் காணப்படா. ஒருவேளை இது விஷயங்களை குறித்து எவருந் தகாதவிதமாய் நினையார்கள் என்பார்க்களாக்கும்.

ஆனால் முன் வேறோரிடத்தில் நான் சொல்லியது போல இப்போதுஞ் சொல்லுகிறதென்னவெனில், பசாசு இதுவிஷயங்களில் எப்பொழுதும் வெகு சிந்தையாயிருக்குது. ஆதலால் பத்தியுள்ளவன் எவனும் பத்தியுள்ளவள் எவளும் எல்லோரிலும் அதிக சுத்தமாய் உடுத்திக்கொள்ளட்டும். ஆனால் அவ்வளவு ஒய்யார வீண்சிலாக்கியம் வேண்டாம். உவமைச் சொல்லாகமத்தில் சொல்லியிருப்பதுபோல் தேவ வரங்களாலும் நாணய மரியாதையாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கக்கடவார்கள்.

அர்ச் பிரகாச இராசா ஒவ்வொருவனுந் தன் தன் அந்தஸ்துப்படி உடுத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகின்றார். இதினால் ஞானிகளாகிய மூத்தோர் ஒருவனைப் பார்த்து நீ வேண்டியதுக்குமேல் அதிகமாய்ச் சோடித்துக்கொள்ளுகிறாயென்றும் வாலிபர்களோ வேண்டியபடி நீ உடுத்திக்கொள்ளுகிறதில்லை என்றுஞ் சொல்ல இடமிராது. மேனா மரியாதையோடு உடுத்திக்கொள்வது வாலிபர்களுக்கு அவ்வளவு பிரியமிராமல் போமோ, ஞானிகள் ஆலோசனைக்கென்கிலும் அமைந்துபோகவேண்டும்.

26-ம் அதிகாரம்.

பேசுதல்.

1-வது. சர்வேசுரனைக் குறித்து எவ்விதமாய்ப் பேசவேண்டுமென்பதின்பேரில்.

வியாதிக்காரர்களுடைய நாக்கைப்பார்த்து அவர்கள் வியாதி என்னவென்று வயித்தியர்கள் கண்டுபிடித்துக்கொள்ளுவார்கள். நமது வார்த்தைகளும் நமது ஆத்தும இலக்ஷணத்தைக் காட்டும் மெய்யான குறிப்பாம். உன் வார்த்தைகளைக்கொண்டு நீ நீதிமானென்று ஒப்பிக்கப்படுவாய், உன் வார்த்தைகளைக்கொண்டே குற்றவாளியென்று தீர்வையிடப்படுவாயென்று நமது இரக்ஷகர் வசனித்திருக்கிறார். நமக்கு எதாகிலும் நோக்காடு உண்டாகுமேயாகில் இடுக்கென்று நினையாமல் நமது கையை நோவுள்ள இடத்தில் கொண்டுபோவோம். நமது நாவோ நாம் நேசிப்பவர்களைக் குறித்துப் பேசும். ஆதலால் பிரிய சகோதரமே, உனக்கு மெய்யான தேவசிநேகம் இருக்குமேயாகில் உறவின்முறையார் சிநேகிதர்களோடு பேசும் பல சமயங்களிலும் எப்பொழுதுஞ் சுவாமியைக் குறித்துப் பேசுவாய். ஏனெனில் நீதிமானுடைய வாயானது ஞானத்தைச் சிந்திக்குமென்றும் அவன் நாவானது தீர்மானத்தைப் பேசுமென்றுஞ் சொல்லியிருக்கின்றது.

தேனீக்களுடைய தும்பிக்கையில் எப்போதுங் கொஞ்சந் தேனிருக்கும், அங்குமிங்கும் பல தருணத்தில் துளித்துளியாய்ச் சிந்தும். அத்தன்மையாகவே உன் நாவுக்குஞ் சர்வேசுரன் இனிய தேனாயிருப்பார். இவர் ஸ்துதி தோத்திரங்களைப் புகழ்ந்துகொண்டாடு

வதே இதற்குச் சொல்லவொண்ணு மதுரமாகும். அர்ச். பிராஞ்சீஸ்கென்பவர் நமது இரட்சகருடைய திருநாமத்தை உச்சரிக்கும்போதெல்லாம், உதட்டைச் சப்பிச் சப்பி ஏதோ வெகு ஊருசி இனிப்புண்டாகிறதுபோல் சுவையார்ப்பார்.

ஆனால் சர்வேசுரனைக்குறித்து எப்பொழுதும் அவருக்கேற்றபடி பத்தி சங்கையோடு பேசுவாய். பிரசங்கிப்பதுபோல் பெருமை சிலாக்கியமாய்ப் பேசவொண்ணுது. ஆனால் பத்தி நேசத்தோடும் பிறசிநேக தாழ்மையோடும் பேசவேண்டும். இவ்வகையாய் உன்நதக் கவியில் சொல்லப்பட்டிருக்கும் மனவாளியைப்போலப் பத்தியின் இனிய தேனை நீ ஆரோடு பேசுவாயோ அவர்கள் செவியில் துளிதுளியாய் விடுவாய். மேலும் உனக்குச் செவிகொடுப்பவர்கள் இருதயத்திலும் இந்தப் பத்தியின் பரிசுத்த பனியானது இறங்கும்படி கிருபைசெய்யச் சுவாமியைப் பார்த்து வேண்டிக்கொள்.

ஆனால் எல்லாத்துக்கு மூந்தி சம்மனசுகளுக்கடுத்த இவ்வலுவலே அதிகாரஞ் செலுத்துவதுபோல் செய்யாமல் புத்தி சொல்லுகிறதுபோல் சாந்தகுணத்தோடுங் குளிர்ந்த மூகத்தோடுஞ் சொல்ல வேண்டும். ஏனெனில் மதுரகுணத்தோடு சொல்வதால் வரும் பிரயோசனம் வெகு அதிசயத்துக்குரியதாயிருப்பதுமன்றி எல்லோர் மனதையுஞ் சம்பாதித்துக் கொள்ளுவதற்கும் பலமான உபாயமாம்.

ஆதலால் சுவாமியைக் குறித்தென்கிலும் பத்தியைக் குறித்தென்கிலும் வழக்கத்தாலுஞ் சம்பாஷணைபோலும் பேசாமல் எப்பொழுதுங் கவனமாய்ப் பத்தியோடு பேசவேண்டும். இதில் நீ அறிய வேண்டியதாவது: பத்தியாயிருக்கப் பிரயாசப்படும் பலபேர் இது விஷயத்தில் ஓர்வித ஆபத்தான வீண் சிலாக்கியத்துக்குள்ளாயிருப்பார்கள். இவர்கள் பே

கும்போதெல்லாம், எச்சமயத்திலும் எவ்விடத்திலும் நினையாமலுங் கவனமற்றவிதமாய்ப் பத்திக்குரிய பல வாக்கியங்களைச் சொல்லுவார்கள். இப்படி சொல்லி வருவதால் இவர்கள் வார்த்தைகளுக்கு ஒத்தாற் போல தங்கள் நடத்தையும் இருக்குதென்று எண்ணிக்கொள்ளுதவார்கள். ஆனால் மெய்யாகவே எப்பொழுதும் இவர்கள் நடத்தை இவர்கள் வார்த்தைக்கு ஒத்ததாயிருக்கிறதில்லை.

27-ம் அதிகாரம்.

நமது வார்த்தையில் இருக்கவேண்டிய உபசார நாணத்தைக்குறித்தும், பிறருக்குச் செய்யவேண்டிய சங்கை மரியாதையைக் குறித்தும்.

வார்த்தையில் பாவங் கட்டிக்கொள்ளாதவன் பரிசுத்தவானென்று இயாகப்பனென்னும் அப்போஸ்தலர் வசனிக்கிறார். எவ்விதத் தகாத வார்த்தைகளையும் வெகு கவனத்தோடு விலக்கவேண்டும். ஏனெனில் கெட்ட கருத்தோடு அவைகளை நீ சொல்லாவிட்டாலும் அவைகளைக் கேட்கிறவர்கள் கெட்ட கருத்தில் அர்த்தஞ் செய்யக்கூடுமென்பது உண்மை. வஸ்திரத்தின்மீது விழுந்த எண்ணெய்த்துளியானது பரம்பிப் போவதுபோல் புண்ணியத்தில் பலவீனமான இருதயத்தில் தகாத வார்த்தையானது பரம்பிப் படிந்து போம்.

பலமுறை இந்த வார்த்தை இருதயத்தில் வெகு ஆழமாய்ப் படிந்துபோவதினால் அதில் பல கெட்ட

சிந்தைகளுங் குற்றமான தந்திர சோதனைகளும் உண்டாம். ஏனெனில் விஷமானது வாயால் சரீரத்தில் நுழைவதுபோல் செவியால் இருதயத்தில், விஷம் எளிதாய் நுழையும். இந்த விஷத்தை ஊட்டும் நாவானது மெய்யாகவே கொலைப்பாதகத்துக்குரியதென த்தகும். சிலவிசை நாவால் வந்த விஷம் ஒரு சத்தியுஞ் செய்யாததுபோலத் தோன்றும்; அதெப்படியெனில் புறத்தியான் இருதயம் இதற்கு ஒத்தபடி இராததால் இந்த விஷத்தை முறித்துவிடக்கூடும். இதனால் இவனிருதயத்துக்கு ஞான சாவு வராவிட்டால், நாவினால் உண்டான விஷத்தின் பலவீனத்தினால் என்கலாமோ.

எப்பொழுதும் இந்த விஷத்தால் சாவு வருவதென்பது மெய். ஒரு சமயத்தில் மெய்யாகவே சாவு வராவிட்டால் விஷத்தின் சத்திக்குறைச்சலாலல்ல. ஆனால் பிறருடைய இருதயம் புண்ணியத்தில் ஊன்றி நின்றமையால் இவ்விஷஞ் சத்திசெய்யாமல் போய்விட்டது. சில தருணத்தில் இப்படிப்பட்டவார்த்தைகளை நினையாமல் சொன்னேம் என்கலாகாது. ஏனெனில் எல்லோர் நினைவுகளையும் அறியுஞ் சர்வேசுரன் இருதயத்தில் உள்ளதையே வாயும் பேசுகிறதாகச் சொல்லியிருக்கின்றார். இவ்விதத் தகாத வார்த்தைகளைச் சொல்லும்போது நமக்கு அற்ப கெட்ட கருத்தும் இராமற்போயினும் பசாசு இவைகளை வெகுவாய்க் கெட்ட அர்த்தமாய் மாற்றி இரகசியமாய் இவைகளை வேறே பேர் இருதயத்திற் பதிப்பிக்கப் பிரயாசப்படாமல் இருக்கிறதில்லை.

ஆண்ஜெலிக்கு சம்மனசுக்குரிய தென்று சொல்லும் ஓர் புல்லைச் சாப்படுகிறவர்களது ஆவி நல்ல வாசம் வீசுமோம். அப்படியே சம்மனசுகளுக்கு அடுத்த பரிசுத்த புண்ணியமாகிய கற்பு நாணயமுள்ளவர்

கள் நாவில் எப்பொழுதும் பரிசுத்தமும் மேனா மரியாதையுமான வார்த்தைகள் இருக்கும். அசுத்தகாரியங்களுக்கு அடுத்த பேச்சுகளைக் குறித்து இவ்விடத்தில் பேசுவதில்லை. ஏனெனில் அப்பேர்ப்பட்ட காரியங்களின் பேர்முதலாய் உச்சரிக்கப்படாதென்று அப்போஸ்தலர் சொல்லுகின்றார். கெட்டசம்பாஷணைகளைப் பார்க்கிலும் நல்லொழுக்கத்தைக் கெடுப்பது வேறொன்றுமில்லையென்று இவரே சொல்லுகிறார்.

இவ்விதத் தகாத வார்த்தைகளைத் திறமை சூக்ஷத்தோடு மறைவாய்ச் சொல்லும்போது விசேஷமாய் வெகு ஆபத்துக்குரியதாகும், ஏனெனில் அம்பானது கூர்மையாயிருப்பதவ்வளவுக்கும் அதிக எளிதாய்ச் சரீரத்தில் பாய்ந்து ஊடுருவுகிறதுபோல் அதிகக் கூர்ந்த புத்தியோடு சொல்லப்படுந் தகாத வார்த்தை அதிகமாய் இருதயத்தைக் குத்திப் பாயும். ஓர் கூட்டத்தில் இத்தன்மையான வார்த்தைகளைச் சொல்வதால் அவ்விடத்தில் இருப்பவர்கள் எல்லோருக்கும் வெகு பிரியம் வருவிப்பதாக எண்ணிக்கொள்ளுகிறவர்கள் எதுக்குக் கூட்டங் கூடுகிறதென்று அறியார். ஏனெனில் தேனீக் கூட்டத்துக்கு ஒப்பாய் புண்ணியத்தின் இனிய சம்பாஷணை என்னுந் தேனைச் செய்வதற்கே கூட்டங்கள் கூடவேண்டியதொழிய புழுத்துத் துர்க்கந்தம் வீசும் பண்டங்களில் மொய்த்துக்கொண்டிருக்குங் குளவிக் கூட்டத்துக்கு ஒப்பாய்க் கூடலாகாது. ஆதலால் புத்தியில்லாத எவனுகிலுந் தகாத வார்த்தைகளை உன்னிடத்தில் சொல்லுவானேயாகில் சற்று முகத்தைத் திருப்பிக்கொண்டாகிலும் வேறே எந்த விதத்திலாகிலும் இப்படிப்பட்டவார்த்தைகளைக் கேட்பது உனக்குப் பிரியமில்லையென்று விவேகமாய்க் காண்பிக்கக்கடவாய்.

எப்பொழுதுங் கேலி பரியாசஞ்செய்யுங் குணம் வெகு கெட்டதென்பதற்குச் சமுசயமில்லை. சர்வேசுரன் இந்தத் துர்க்குணத்தை வெகுவாய் அருவருத்துப் பயங்கரத்துக்குரிய விதமாய் முற்காலத்தில் தண்டித்தார். பிறர்மட்டில் உள்ள நிந்தையானது பிறசிநேகத்தோடு பொருந்தாததல்லாமல் விசேஷமாய் மெய்யான பத்திக்குப் பரிச்சேதம் ஒவ்வாது. எவ்விதப் பகிடி பரியாசங்களுக்கும் புறத்தியார்பேரில் உள்ள நிந்தையே காரணம். இது கனமான பாவம் என்பதற்குச் சமுசயமில்லை, வார்த்தையால் பிறருக்குச் செய்யக்கூடுமான நிந்தைகளில் பகிடி பரியாசத்தால் வரும் நிந்தை வெகு கனமானதென்று சர்வ நியாயத்தோடு வேதபாரகர்கள் உரைக்கின்றனர். ஏனெனில் ஒருவனுக்குச் செய்யப்படும் மற்றமற்றக் குற்றங்களால் அவன் நல்லெண்ணத்துக்கு எப்போதுங் குறைச்சல் வருகிறதில்லை. ஆனால் இந்தக் குற்றத்தாற் பிறர்பேரில் எப்போதும் நிந்தை வெறுப்புக் காண்பிக்கின்றோம்.

நாணயவான்களுக்குள்ளே அடக்க ஒடுக்கமாய் மனக்களிப்புடன் சொல்லப்படும் விளையாட்டான வார்த்தைகளில் குற்றமில்லை. இளைப்பாற்றிக்கான விளையாட்டாகும். இவ்வித விளையாட்டால் துவக்கிப் பகிடி பரியாசத்தால் முடிக்கலாகாது. ஏனெனில் பரியாசஞ் செய்யும்போது வரும் நகைப்பானது பிறர்மட்டில் உள்ள நிந்தையால் உண்டாகிறது. இதற்குப் பதிலாய் விளையாட்டாய்ப் பேசுவதினாலும் நகைப்புண்டாகக் கூடும். ஆனால் இந்த நகைப்பானது மனச் சந்தோஷத்தையுங் கபடற்றதனத்தையுஞ் சொல்லப்படும் வார்த்தைகளின் அழகையுங் காட்டும்.

இவ்விதமாகவே அர்ச். பிரகாச ராசாவிடத்தில் அவர் அரண்மனையில் இருந்த சந்நியாசிகள் பகல்

போசனத்துக்குப் பின் இளைப்பாறுஞ் சமயத்தில் ஏதாகிலுங் கனமான காரியங்களைக் குறித்துப் பேசினால் இவ்விதச் சம்பஷணைக்கு இது சமயமல்ல. ஏதாகிலும் பிரியமான நல்ல வார்த்தைகளைச் சொல்லி இளைப்பாறவேண்டும். ஆதலால் அவரவர் சங்கடமின்றி நாணயமாய்த் தங்களுக்கு இஷ்டமானதைச் சொல்லட்டும் என்பாராம். இவ்வழியாய்த் தம்மோடிருந்த மன்னவான் பிரபுகளுக்குத் தமது தயாளபக்ஷத்தைக் காட்டுவார். ஆனால் பிரிய சகோதரமே, நமது பத்தியால் நித்திய இளைப்பாற்றியைச் சம்பாதிக்கத் தக்கவிதமாய் இளைப்பாற்றி நேரத்தைப் போக்குவோம்.

---(*)---

21-ம் அதிகாரம்.

வீண் தீர்மானத்தைக் குறித்து.

நீங்கள் குற்றவாளிகளாக எண்ணப்படாதபடிக்கு மற்றவர்களையுங் குற்றவாளிகளாக எண்ணுதிருங்கள், மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று எண்ணுதிருங்கள், நீங்களுங் குற்றவாளிகள் என்று எண்ணப்படாதிருப்பீர்கள் என்று நமது ஆத்துமவிரக்ஷகர் வசனித்திருக்கின்றார். மேலும் இருளில் மறைந்திருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்தி இருதயங்களில் உள்ள நினைவு ஆலோசனைகளை வெளியாக்குகிறதற்கு நமது ஆண்டவர் வருங்காலத்துக்கு முந்தி நீ தீர்மானம்பண்ணுதே என்று அப்போஸ்தலர் வசனித்திருக்கிறார்.

வீண் தீர்மானங்கள் சர்வேசுரனுக்குப் பொருந்தாது என்பதற்குச் சந்தேகமில்லை. மனுமக்களுடைய

தீர்மானங்கள் வீண் தீர்மானங்கள் என்று சொல்ல வேண்டும். ஏனெனில் ஒருவர்பேரில் ஒருவர் தீர்வை விதிக்க இவர்களுக்கு அதிகாரமில்லாததுமல்லாமல் இப்படி தீர்வையிடும்போது நமது ஆண்டவருடைய அலுவலைத் தங்கள் அலுவலர்க் ஞாயமின்றி எடுத்துக்கொள்ளுகிறார்கள். இவர்கள் தீர்மானங்கள் வீணானதுகளே. அதேனெனில் பாவத்தின் விசேஷ கொடுமை அவரவர் கருத்து மனதால் உண்டாகிறது. இந்த மனதோ நமக்கு இருளில் மறைந்த இரகசியந்தானே.

இன்னம் இவர்கள் தீர்மானங்கள் வீணானதுகளே. ஏனென்றால் ஒவ்வொருவனுந் தன்னைத்தானே தீர்மானஞ் செய்வதே அவனனுக்குப் போதுமான அலுவலாயிருக்கப் புறத்தியாரையுந் தீர்மானிக்கும் வேலையைத் தன்பேரில் போட்டுக்கொள்ள 'அவசரமில்லை. தனக்கு ஒருவன் தீர்வை விதிக்காதபடிக்கு மற்றவர்கள்பேரில் தான் தீர்வை விதிக்காமல் தன்பேரில்தானே தீர்வை விதித்துக்கொள்ளுவது அவசியம். ஏனெனில் நாம் பிறனைத் தீர்வையிடலாகாதென்று நமது இரட்சகர் சொல்லுந் தன்மையாகவே நமதுபேரிலேயே நாம் தீர்வையிட்டுக்கொண்டால் நாம் தீர்வையிடப்படமாட்டோமென்று அபபோஸ்தலர் கற்பிக்கின்றார். நமது நடக்கையோ இதற்கு முழு விரோதமாம். ஏனெனில் வேண்டாமென்பதைச் செய்து எச்சமயத்திலும் பிறர்பேரில் தீர்மானம் பண்ணிவருகின்றோம். நமக்குக் கற்பிக்கப்பட்டதையோ ஒருநாளும் அநுசரியநமல் நம்மையே நாம் தீர்யையிட்டுக்கொள்வது நமக்கு வெகு கசப்பாகவேயிருக்கிறது.

நாம் வீண் தீர்மானஞ்செய்ய எதெது காரணமோ அததுக்கு ஒத்தபடி பலவித மருந்துகளை உதவிக் கொள்ளவேண்டும். சிலர் சுபாவமாய்ப் பெருமை

யற்றவர்களாய் முறுமுறுப்புள்ளவர்களாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தீர்க்கதரிசியானவர் சொல்வதுபோல் எப்பொழுதும் புறத்தியாரை வெகு கண்டிப்பாய்த் தீர்மானிப்பதால் இவர்கள் தீர்மானம் கசப்பாக மாறும்படி செய்கிறார்கள். இவர்களுக்குத் திறமையுள்ள நல்லதோர் ஞான வயித்தியர் அவசியம். அதேதெனில் இவர்கள் மனது சுபாவமாய்க் கசப்பாயிருப்பதால் அதை வெல்லுவது கடினம். இந்தச் சுபாவகுணம் பாவமாயிராமல் புண்ணியக் குறைவாயிருந்தபோதிலும் வெகு ஆபத்துக்குரியது. ஏனெனில் இதின்வழியாய் வீண் தீர்மானமுங் கோள்குண்டணியும் ஆத்துமத்தில் வேரூன்றிப்போகக் காரணமாகும்.

சிலருக்கு இவ்விதப் பொறுமையற்றதனம் இராதாயினும் ஆங்காரத்தால் பிறருடைய மகிமையை எவ்வளவுக்குத் தாழ்த்துவார்களோ அவ்வளவுக்குத் தங்களுக்குக் கீர்த்தி உண்டாகுமென்று புறத்தியார்பேரில் இல்லாத வீண் தீர்மானஞ் செய்வார்கள். அகங்கார வீண் எண்ணமுள்ளவர்களாயிருப்பதால் தங்களைத்தானே கண்டு அதிசயித்தாற்போல் தங்களை வெகு கனமாய் எண்ணிக்கொள்வதால் இவர்களுடைய கண்ணுக்கு எல்லாம் அற்பமாய் நிகிதமாய்த் தோன்றும், மற்ற மனிதர்களைப் போல் தான் இருப்பதில்லை என்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கும் விவேகமற்ற பரிசேயனென்பவன் சொன்னான். வேறே பேருக்கு இப்படிப்பட்ட வெளியரங்கமான அகங்காரம் இராது.

ஆனால் இவர்களுக்குத் தங்கள்மட்டிலேயே கொஞ்சம் நல்ல எண்ணம் இருப்பதால் புறத்தியாரிடத்தில் இருக்கக்கூடுமான குற்றங்குறைகளை எல்லாம் உற்றுப்பார்த்து இவைகள் தங்களிடத்தில் கிடையாதென்றும் இவைகளிடமாய் இன்னின்ன புண்ணி

யங்கள் உண்டென்றும் அபத்தமாய் எண்ணித் தங்களைக்குறித்துச் சற்றுக் கனமாய்ப் பேசித் தங்கள்பேரிலேயே வெகு பிரீதிகொள்ளுவார்கள். பல்முறை இவ்விதக் குருட்டாட்டமான வீணெண்ணம் வெகு இரகசியமாய்க் கண்ணுக்குத் தோன்றுமையாயிருப்பதினால் நன்றாய்க் கவனித்துப் பார்க்காவிட்டால், இதனைப் பகுத்தறிவது பிரயாசை.

இந்தத் துர்க்குணம் உள்ளவர்களுக்கு இதனை எடுத்துக் காண்பியாவிட்டால் இதனைக் கண்டுபிடியார்கள். வேறுசிலர் தங்கள் மனதில் உண்டாகும் முறைப்பாடு வருத்தங்களைத் தணிக்கவானாலுந் தங்களைத் தானே குற்றமற்றவர்களென்று காட்டவானாலும் அல்லது தங்கள்மட்டிலேயே தாங்கள் பிரியமாயிருக்கும்படியாகிலுந் தங்களிடத்தில் உள்ள குற்றங்குறைகள் மற்றப் பேருக்கும் உண்டென்றும் இன்னஞ் சிலவிசை தாங்கள் எவ்வளவு கனமான குற்றவாளிகளாயிருக்கிறார்களோ மற்றவர்களும் அப்படியே இருக்கிறார்களென்றும் உலகிலுள்ள இத்தனை ஆயிரம் அக்கிரம பாதகர்களுக்கு முன்பாகத் தங்கள் பாவம் அவ்வளவு கனமானதல்ல என்றும் எண்ணிக்கொண்டு எல்லோரையும் வெகு சுளுவாய்த் தீர்மானஞ்செய்வார்கள். புறத்தியாருடைய நடத்தையையுங் குணத்தையும் ஒழுக்கங்களையுங் குறித்துத் தங்கள் புத்திக் கூர்மையைக் காட்ட வெகு ஞானிகளைப்போலப் பேசி எல்லாத்திலும் பிழை பிடிக்க வேண்டுமென்கிற வீண் பிரியத்துக்காகப் பலபேர் பலவிதமாய் வீண் தீர்மானஞ்செய்வார்கள்.

ஆனால் இவர்கள் தீர்மானம் எப்போதாகிலும் உண்மைக்கொத்ததாயிருந்துவிட்டால் அப்போது பிறர்பேரில் வீண் தீர்மானஞ் செய்ய இவர்களுக்கு வெகு துணிகரம் உண்டாகிறதினால் வெறிபிடித்தாப்போல் தாங்கள் சொல்வது சரியோ சரியல்லவோ

என்று சற்றுஞ் சிந்தியார்கள். இப்படிப்பட்டவர்களைச் தீர்ப்படுத்தி அடக்குவது வெகு பிரயாசை. பலபேர் அற்ப நியாயமின்றி ஆசாபாசத்தால் வீண் தீர்மானஞ் செய்வார்கள். இவர்கள் ஆசிப்பதைக் குறித்து எப்பொழுதுஞ் சனுவாய்த் தீர்மானஞ் செய்வார்கள். பகைப்பதைக்குறித்தோ எப்பொழுதுந் தீங்காய்த் தீர்மானிப்பார்கள்.

சிலவிசை அவர்கள் தங்களுக்குப் பிரியமானவர்களைக்குறித்துந் தீங்காய்த் தீர்மானஞ்செய்ய நேரிடும். ஆசாபாசமிகுதியே அதுக்குக் காரணம். மெய்யான சிநேக பக்ஷத்தோடு பொருந்தாத சிநேகமுள்ளவர்களுக்கு இப்படிப்பட்ட குருட்டாட்டம் மிகுதியாயிருக்கும். எல்லோரும் அறிந்திருப்பதுபோல் இதனால் சகிக்கக்கூடாத காய்மகார பொருமையால் ஒன்றுமில்லாத ஒருகண் பார்வை புன்சிறிப்பு அற்ப விஷயத்தை மலையாக்கி இரண்டக வஞ்சனை என்று தீர்மானித்து முடிவுகட்டுவார்கள். கடைசியாய் அச்சம் பயம் பேராசை இத்தியாதி துர்க்குணங்களே இந்த வீண் தீர்மானங்களுக்குப் பலமுறை காரணம்.

ஆனால் இத்தொகைப்பட்ட தீங்குகளை நிவர்த்தி செய்யவதற்கான அவுழ்தங்களென்ன? எத்தியோபித் தேசத்திலுள்ள ஓர்வித பூண்டின் சாற்றைக் குடிக்கிறவர்களுக்கு எப்பக்கத்திலும் பாம்பு முதலிய பயங்கரத்துக்குரிய உருவங்களைப் பார்க்கிறதுபோல் தோன்றுமாம். இந்த மயக்கந் தெளிகிறதற்குப் பதநீரைக் குடிக்கவேண்டுமாம். இத்தன்மையாகவே ஆங்காரம், பகை, பொருமை, பேராசையுள்ளவர்கள் கண்ணுக்கு எல்லாங் கெட்டதாய் நிந்தைக்குரியதாய்த் தோன்றும். இவர்கள் சொஸ்தப்படுவதற்குப் பிறசிநேகத்தின் பரிசுத்த ரசத்தை அதிகமதிகமாய்க் குடிக்கவேண்டும், அப்போது புறத்தியார்பேரில் விபரீதமாய்த் தீர்மானஞ்செய்கிற கெட்டகுணம் மெள்ள

மெள்ள இவர்களை விட்டுவிடும். பிறசிநேகமுள்ளவன் தன் கண்ணுக்கு எந்தக் குற்றங்குறையும் எதிர்ப்படாதபடிக்கு வெகு சாக்கிரதையாய் எட்டி நிற்பான். புறத்தியார் குற்றத்தைத் தானாய் வலிய ஆராய்ந்து தேடவே தேடான்.

ஆனால் இவனையுமல்லாமல் பிறருடைய குற்றம் இவன் கண்ணுக்கு அகப்படுமோ வெகு சாக்கிரதையாய் அதைத் தள்ளிவிட்டு ஒன்றும் அறியாததுபோல் நடந்துகொள்வான். இவ்வகையாய் இன்னான் இன்ன குற்றத்தைச் செய்தானென்கிற சேதி இவன் செவியில் விழுந்தமாத்திரத்தில் இதைக் கேளாதடிக்குச் செவியை அடைத்துக்கொள்வான். பார்த்தும் பாராததுபோலிருப்பான். மேலும் தான் கண்டதைக் காணாததுபோல் என்னமோ மயக்கத்தால் தன் புத்திக்கு இத்தன்மையாய்த் தோன்றிற்றென்று மகா கபடற்றதனமாய் நினைப்பான். ஆனால் பிறர் குற்றம் பட்டப்பகலினும் நிச்சயமாய் இவன் கண்ணுக்கு அகப்படுமேயாகில் உடனே அதைக்குறித்து ஒன்றும் நினையாமல் பராக்குப் பார்த்தாப்போல் அதை மறந்துவிடப் பிரயாசப்படுவான்.

எவ்விதத் தீங்குகளுக்கும் பிறசிநேகம் பரம ஔஷதமென்பது உண்மை. ஆனால் பிரதானமாய் இந்தத் துர்க்குணத்துக்கு இது வெகு உபயோகமாம். மஞ்சட்காமாலையுள்ளவர்களுக்கு எதுவும் மஞ்சளாய்த் தோன்றும். இந்த வியாதி நீங்குவதற்கு இவர்கள் பாதத்தில் கசகசா பூண்டு இலைகளைக் கட்டிவைக்கவேண்டுமாம். மஞ்சட்காமாலை என்னும் வியாதிக்கு ஒப்பாகிய வீண் தீர்மானஞ்செய்கிற துர்க்குணமுள்ளவர்களுடைய கண்களுக்கு உள்ளபடி எல்லாங் கின்மையாகப்படும். ஆகையால் இவ்விதவியாதி நீங்கவேண்டுமென்று ஆசிப்பவர்கள் தங்கள் கண்களுக்கு, அல்ல, தங்கள் ஆத்துமத்துக்குள் மருந்துபோட வேண்

டும். புத்தியையல்ல; ஆனால் தங்கள் இச்சை நாட்டங்களை அடக்கவேண்டும். ஆதலால் உன்னிருதயம் பிறசிநேக மதுரகுணமுள்ளதாகில் நீ செய்யுந் தீர்மானங்களுங் கடினமாயிராமல் பிறசிநேக ஒழுங்குக்கு ஒத்தவையாயிருக்கும். இதற்கான அதிசயத்துக்குரிய மூன்று நன்மாதிரிகைகளை உனக்கு இப்போது சொல்லிக்காட்டப் போகிறேன்.

ஈசாக்கென்பவர் ரெபேக்கா என்பவளைத் தமது சகோதரி என்று சொன்னார். ஆனால் இவர்கள் இருவரும் வெகு பக்ஷமாய்ச் சம்பாஷித்து அந்நியொந்நியமாயிருப்பதை அபிமெலேக்கென்பவன் கண்டு ரெபேக்கா என்பவள் ஈசாக்கென்பவர் மனைவி என்று தீர்மானித்தான். இவனிடமாக வேறொரு கெட்ட மனிதன் இப்படி பார்த்திருந்தால் ரெபேக்கா என்பவள் ஈசாக்கென்பவர் வைப்பாட்டியென்றும் அல்லது இவர்களிருவருஞ் சகோதரரானால் சுபாவத்துக்கடாத குற்றத்துக்கு உள்ளானவர்கள் என்றுந் தீர்மானித்திருப்பான். ஆனால் அபிமெலேக்கென்பவன் இவர்கள் இருவர் நடத்தையைக் கண்டு தகாத விதமாய்த் தீர்மானியாமல் பிறசிநேகத்துக்கு ஒத்தவிதமாய்த் தீர்மானித்தான். இத்தன்மையாகவே அவனவனுந் தன்னால் இயன்றவரையில் பிறர்பேரில் சனுவாய்த் தீர்மானிக்கவேண்டும்.

ஒரு கிருத்தியத்தைப் பலவிதமாய் அர்த்தஞ்செய்யக் கூடுமாயிருக்கையில் எல்லாத்தையுந் தள்ளிவிட்டு எவ்வளவுக்குச் சனுவாய் அர்த்தஞ்செய்யக் கூடுமோ அவ்வளவுக்கும் நல்ல அர்த்தஞ் செய்யப் பார்க்கவேண்டும். பரிசுத்த கன்னிமரியாயி கர்ப்பிணியானதின் மட்டில் அர்ச். சூசையப்பருக்குச் சந்தேகத்துக்கு இடமிருந்தது. ஆனால் இந்த அம்மாளுடைய மேலான பரிசுத்தத் தனத்தையுஞ் சம்மனசுகளுக்கு அடுத்த இவள் உத்தம நடத்தை

யையும் இவர் அறிந்திருந்தபடியால் இவருக்கு இது விஷயத்தில் எப்படிப்பட்ட கலக்கவெக்கங்கள் உண்டாயினும் இந்த அம்மாளுக்கு விரோதமாய் அற்ப சமுசயத்துக்கும் இடங்கொடுத்தவரல்ல. இவ்விதமாய்ச் சுவாமியுடைய கையில் எல்லாத்தையும் ஒப்பித்து இந்த அம்மாளை விட்டு அப்புறம்போகத் தீர்மானித்தார்.

இவர் நீதிமானாயிருந்தமையால் இத்தன்மையாய் நடந்துகொண்டார் என்று சுவிசேஷத்தில் இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் சொல்லுகின்றார். நீதிமானானவன் ஒருவனுடைய நாணயத்தை அறிந்தபின் இந்த நாணயஸ்தன் ஏதாயினுந் தப்பறையாய்ச் செய்யும்படி நேரிட்டால் இவன் நடத்தையையுங் கருத்தையும் உத்தமமானவிதமாய்த் தீர்மானஞ்செய்யக்கூடாத பக்ஷத்தில் இதைக்குறித்துத் தான் ஒன்றுந் தீர்மானியாமல் சர்வேசுரனுடைய தீர்மானத்தில் விட்டுவிட்டு இதைக்குறித்து நினைக்கமுதலாய் மாட்டான். நமது இரக்ஷகர் சிலுவையில் அறையுண்டிருக்கையில் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுடைய பாவதோஷத்தை மறைக்கக்கூடாதாயினும் அறியாமற் செய்தார்களென்று இவர்கள் அவ்வளவு குற்றவாளிகளல்லவென்றாற்போல் காட்டினார். இத்தன்மையாய் ஒருவன் குற்றத்தில் விழுவதை நாம் காணும்போது முழுதும் அவன் வசத்தில் சனுவாய் பேசக்கூடாத பக்ஷத்தில் அவன் குற்றத்தைத் தணிக்கக் கூடுமானமட்டுந் தணிவாக்கிப் பலவீனத்தாலோ அறியாமையாலோ என்று பிறசிநேகத்தோடு பேசவேண்டும்.

ஆனால் எத்தருணத்திலும் புறத்தியான்பேரில் தீர்மானஞ் செய்யலாகாதா என்று கேட்கக்கூடும். உள்ளபடி புறத்தியான்பேரிற் பரிச்சேதந் தீர்மானஞ் செய்யலாகாது. பிரிய சகோதரமே, உலகில் நீதிக்கா

த்தாக்கள் தாங்களாய் எந்தத் தீர்மானமுஞ் செய்கி றதில்லை. இவர்கள் மூலமாய்ச் சர்வேசுரன்தாமே குற்றவாளிகளுக்குத் தீர்வை விதிக்கின்றார். நியாயாதிபதிகள் சர்வேசுரனுடைய தீர்மானத்தை இன்னதென்று பகுத்துச் சொல்லவேண்டியவர்களேயன்றி இவ்வுடைய தீர்மானத்துக்கு ஒவ்வாததொன்றையும் பரிச்சேதம் விதிக்கலாகாது. இவர்கள் இவ்விதஞ் செய்யாவிட்டால் இவர்கள் தங்கள் சுய நாட்டத்தைப் பின்செல்லுகிறபடியால் இவர்களே வாஸ்தவமாகத் தீர்வை விதிக்கிறார்கள். ஆனதால் இவர்களே தீர்வையிடப்படுவார்கள். ஏனெனில் மனிதர்கள் வெறும் மனிதர்கள் என்ற முறையில் பிறர்பேரில் தீர்வை விதிக்கலாகாதென்று சர்வேசுரன் கற்பித்திருக்கின்றார்.

ஒரு காரியத்தைப் பார்ப்பதினாலும் அல்லது அறிகிறதினாலும் அதைக்குறித்துத் தீர்மானஞ் செய்கிறோம் என்கலாகாது. ஏனெனில் எந்தத் தீர்மானத்தைச் செய்வதற்கு முந்தியும் அதைப் பகுத்தறிந்து உண்மையைக் கண்டு விதிப்பதற்கு எப்பொழுதுங் கொஞ்சம் பிரயாசையுண்டு. இதைப்பற்றியே விசுவாசமில்லாதவர்கள் ஏற்கனவே தீர்வையிடப்பட்டிருக்கிறார்கள் என்று வேதபுத்தகத்தில் சொல்லியிருக்கிறது. ஏனெனில் இவர்கள் தீர்வையிடப்படுவார்கள் என்கிறதின்மட்டில் அற்ப சமுசயமுமில்லை. ஆதலால் பிறர்பேரில் சந்தேகப்படுவதால் தின்மையாயிற்றோ, இல்லை. ஏனெனில் சந்தேகப்பட வேண்டாமென்கிற கற்பனையில்லை. ஆனால் ஒருவனையுந் தீர்மானஞ் செய்யாதே என்கிற கட்டளையுண்டு. ஆயினும் பலத்த நியாயங்களில்லாமல் எவன்மீதுஞ் சமுசயப்படவுஞ் சந்தேகப்படவும் போகாது. இல்லாவிட்டால் நமது சந்தேக சமுசயங்கள் வீணானதாய்க் குற்றமுள்ளதாகிவிடும்.

இயாக்கோபென்பவர் இராக்கேல் என்பவளைக் கிணற்றுக்கு அருகாமையில் கண்டு கட்டி முத்தமிட்டதையும் ரெபேக்கா என்பவள் அதுவரையில் அந்தத் தேசத்தில் ஒருவரும் அறியாத எலியெசெர் என்பவரிடத்திலிருந்து பொன் காப்பு சிமிக்கி முதலிய நகைகளை வாங்கினதையும் எவனாகிலுங் கண்டிருந்தால் இவன் உள்ளங் கெட்டதாகில் இவர்கள் இருவர்பேரிலும் அற்ப சந்தேகமுமின்றி விரோதமாய் நினைத்திருப்பான். ஆயினும் இவர்கள் இருவர் புண்ணியங்களும் மகத்தானவையாமே. இவனோ இவர்கள் பேரில் தப்பாறையாகவே தீர்மானித்திருப்பான். ஏனெனில் தன்னிலே ஒரு காரியங் குற்றமற்றதாயிருக்கையில் அற்ப நியாயமுமின்றி அதனைத் தகாதவிதமாய் அர்த்தம் பண்ணி சமுசயத்துக்கு இடங்கொடுப்பது தப்பறை. ஒரு காரியத்தை ஒருவன் செய்ததை முன்னிட்டு அவனை நிந்தித்துப் பேசுகிறதுங் குற்றமான வீண் தீர்மானந்தான். இதைக்குறித்துப் பின்னால் விரிவாய்ச் சொல்லப்படும்.

கடைசியாய்த் தங்கள் ஆத்தும காரியங்கள் மீது கவனமுள்ளவர்கள் இப்படி வீண் தீர்மானஞ் செய்யுங் கெட்ட அப்பியாசத்துக்கு உள்ளாயிரார்கள். அதேனெனில் பனி பெய்து மேகம் அடர்ந்திருக்குங் காலத்தில் தேனீக்கள் தங்கள் கூண்டில் அடைந்து அதில் தேனை உண்டுபண்ணுமாம். இத்தன்மையாகவே நல்ல இருதயம் உடையோர் புறத்தியாரைச் சேர்ந்த கண்டுபிடிக்கக்கூடாத விஷயங்களிலும் சமுசயத்துக்குரிய காரியங்களிலுந் தங்கள் சிந்தையை விட்டுத் திரியார். ஆனால் இப்படிப்பட்ட காரியங்களைப் பாராதபடிக்குத் தங்களுக்குள் தானே சிந்தையாயிருந்து தங்களைத்தானே திருத்திக்கொள்வதற்கான நல்ல பிரதிக்கினை செய்வார்கள்.

பிறருடைய நடத்தையை ஆராய்ந்து பார்ப்பது வீணருடைய சுபாவம். ஆனால் குடும்பத்திலென்கிலும் ஒரு இராச்சியத்திலென்கிலும் மற்றவர்களை நடப்பிக்கக் கடமைப்பட்டவர்களைக் குறித்து இவ்விதஞ் சொல்லலாகாது. அதேனெனில் இவர்கள் மனச்சாக்ஷிப்படி பிறர் நடத்தையின்பேரில் கண்ணாயிருக்கவேண்டியவர்களாதலால் பிரியமாய்த் தங்கள் கடமையைச் செய்யவேண்டும். இந்தச் சமயம் நீங்கலாக அமரிக்கையாயிருந்து தங்கள் பேரிலேயே சிந்தையாயிருக்கக்கடவார்கள்.

29-ம் அதிகாரம்.

புறணி கோள் குண்டணியைக் குறித்து.

வீண் தீர்மானத்தால் மனதில் கலக்கமும் பிறர் பேரில் நிந்தையும் ஆங்கார சுயபக்ஷமும் இன்னம் பல தீங்குகளும் விளைகின்றன. இவற்றுள் முக்கியமானது புறணி கோள் குண்டணி. இது சம்பாஷணை அனைத்துங் கெடுக்கும் மெய்யான கொள்ளை நோயாம். முன்னால் இசாயாசென்னுந் தீர்க்கதரிசியின் உதடுகளை ஓர் சம்மனசானவர் பலி பீடத்தினின்று எடுத்த நெருப்பைக் கொண்டு சுத்தம் பண்ணினது போல் எல்லோருடைய உதடுகளையும் மேற்படி நெருப்பைக்கொண்டே துடைத்துச் சுத்திகரித்து எல்லோர் பாவங்களையுஞ் சுத்தம்பண்ணக் கூடுமானால் எவ்வளவோ நலமாகும், உலகில் அநுதினமுங் கட்டிக்கொள்ளப்படும் புறணி கோள் குண்டணியை நிவாரணம் பண்ணினால் உலகில் விளையும் பாவங்களுக்

குக் காரணமானவைகளில் பிரதானமான காரணத்தை ஒழித்தாற்போல் ஆகும்.

ஒருவன் அநியாயமாய்ப் புறத்தியான் கீர்த்தியைக் கெடுப்பானேயாகில் இதனால் இவனுக்குப் பாவமாகிறதுமன்றி இவன் சொன்ன புறணியால் வந்த தின்மைக்கு ஒத்தபடி பரிகாரம் பண்ணவேண்டியவனாயிருக்கிறான். ஏனெனில் அநியாயமாய் அபகரித்த பிறர் பொருளோடு எவனும் மோக்ஷத்தில் பிரவேசியான். மனிதர்களுக்கு இருக்கக்கூடுமான எல்லா ஆஸ்தித் திரவியங்களிலுங் கீர்த்தி அதிக விலைபெற்றது. புறணித்தனம் ஓர்விதக் கொலை பாதகம் என்கலாம். அதேனெனில் நம்மிடத்தில் மூன்று விதச் சீவியமுண்டு. முதலாவது, ஞான சீவியம். இந்தச் சீவியந் தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருப்பதில் அடங்கி யிருக்கிறது. இரண்டாவது, சரீர சீவியம். இதற்கு ஆதாரம் ஆத்துமம். மூன்றுவது, உலக ஆசாரத்தால் உண்டாகுஞ் சீவியம். இதற்கு நல்ல எண்ணங் கீர்த்தி உயிர் நிலையாயிருக்கிறது.

பாவத்தால் ஞான சீவியத்தை நாம் இழந்துபோகிறோம். மரணமோ, சரீர சீவியத்தை அழித்துவிடுகிறது. புறணியால் நமது இலௌகீக சீவியம் சிதைந்துபோம். ஆனால் புறணி சொல்வதால் வரும் விசேஷ தின்மை ஒன்றுண்டு. புறணி பேசுகிறவன் ஓரோ வார்த்தையால் வழக்கமாய் மேற்சொல்லிய மூன்று கொலைப்பாதகத்தைக்கட்டிக்கொள்ளுகிறான். இதனால் முதல் தன் ஆத்தும ஞான சீவியத்தையும் இவனுக்குச் செவி கொடுப்பவனது ஞான சீவியத்தையுங் கொலை செய்வதுடன் இவன் ஆர்பேரில் புறணி பேசுகிறானே அவன் இலௌகீக சீவியத்தையுங் கொலை செய்கிறான். ஏனெனில் அர்ச். பெர்நார் தென்பர் சொல்லுவதுபோலப் புறணி பேசுகிறவன்

பேரிலும் புறணிக்குச் செவி கொடுப்பவன்பேரிலும் பசாசு ஏறிக்கொண்டிருக்கிறது.

ஆனால் இதில் இவ்விருவருக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் ஒருவனுக்கு நாக்கிலும் மற்றொருவனுக்குக் காதிலும் பசாசு ஏறி உட்கார்ந்துகொண்டிருக்கும், சர்ப்பத்தின் நாக்கைப்போல் புறணி கோள் குண்டணி சொல்லுகிறவர்கள் தங்கள் நாக்கைத் தீட்டிவைத்திருக்கிறார்கள் என்று தாவீதென்பவர் சொல்லுகிறார். ஆனால் அரிஸ்தோத்தென்னுஞ் சாஸ்திரி சொல்லுமாப்போலப் பாம்பின் நாக்கானது கயிற்றைப்போலப் பின்னலுள்ள கூர்மையான இரட்டை நாக்காம். மெய்யாகவே புறணி சொல்பவன் நாக்கு இதற்கு ஒத்ததாம். ஏனென்றால் ஓரே வார்த்தையால் இவனுக்குச் செவி கொடுப்பவன் செவியில் விஷம் ஊட்டுவதுடன் இவன் ஆர்பேரில் புறணி பேசுகிறானோ அவன் கீர்த்தியையுங் கெடுத்து நஷ்டப்படுத்திவிடுகிறான்.

ஆனதால் பிரிய சகோதரமே, புறத்தியாரைக் குறித்து நேராயென்கிலும் மறைவாயென்கிலும் அபத்தூறு சொல்லாதே. புறத்தியான் செய்யாத குற்றங்களை அபாண்டமாய் அவன்பேரில் சாட்டாதே. மேலும் இரகசியமாய் இருக்குங் குற்றங்களை ஒருக்காலும் வெளிப்படுத்தாதே. நாலுபேர் அறிந்த குற்றங்களை மூதலாய் அதிகப்படுத்தாதே. புறத்தியான் செய்யக்கூடுமான நற்கிருத்தியங்களைக் குறித்து விபரீதமாய்ப் பேசாதே. அவனிடத்தில் இருக்கக்கூடுமான நன்மையை நீ அறிந்தும் அதற்கு விரோதமாய்ச் சொல்லாதே. இன்னம் பிறரிடத்தில் இருக்கக்கூடுமான நன்மையை வேண்டுமென்று மறைக்கவென்கிலுங் குறைக்கவென்கிலும் பார்க்காதே. ஏனெனில் இதுவிஷயங்களில் எல்லாஞ் சுவாமிக்கு ஏற்காத கானமான குற்றங்களை கட்டிக்கொள்ளக்

கூடும்; விசேஷமாய்ப் புறத்தியான்பேரில் அபாண்டமாய்க் குற்றஞ் சாட்டி அவனுக்கு நஷ்டம் வரும்படி உண்மைக்கு விரோதமாய்ப் பேசுவாயேயாகில் சுவாமிக்கு முன்பாக வெகு குற்றவாளியாவாய்; ஏனெனில் இச்சமயத்தில் நீ சொல்லும் பொய்யால் ஒரு பாவத்தையும் புறத்தியானுக்கு அநியாயமாய் வருவிக்கும் நஷ்டத்தால் வேறொரு பாவத்தையுங் கட்டிக்கொள்ளுவாய்.

மரியாதையான வார்த்தைகளால் தாங்கள் சொல்லும் புறணியை மறைத்து அல்லது சூக்ஷமாய் வேடிக்கையான பகடிச்சொற்களோடு கலந்து புறணி பேசுகிறவர்களிடத்தில் வெகு சூது கிரியாவரம் அடங்கியிருப்பதால் இவர்களால் வெகு ஆபத்துக் கிடமுண்டு. இவர்கள் பேசும் நடை உள்ளபடி வெகு விநோதமாம்.

ஒருவனைப் பார்த்துத் தாங்கள் அவனை வெகுவாய் நேசிப்பதாகவும் மெத்தப் பிரியமான மனுஷனென்றும் ஆனாலோ என்ன செய்கிறது, எதார்த்தப்படி பேசவேண்டியிருக்கிறது அத்தருணத்தில் அந்தச் சதிமானத்தை அவன் செய்யப்போகாதென்பார்கள். இன்னம் ஒரு ஸ்திரீயைக்குறித்துமெய்யாகவே அந்த மனுஷி வெகு புண்ணியவதி. ஆனால் மோசம்போய்த் தப்பிப்போனளென்று இவ்வாறு பலவிதமாய்ப் பேசுவார்கள். இதில் எப்படிப்பட்ட கபடு மோசம் அடங்கியிருக்கிறதென்று தெளிவாய் விளங்குகிறது.

அம்பெய்கிறவன் தன்னால் ஆனவளையில் வில்லைப் பிருக்கிறதவ்வளவுக்கும் வேகமாய் அதனை எய்வான். இத்தன்மையாகவே புறணி பேசுகிறவர்கள் தாங்கள் சொல்லும் அபதூறை எவ்வளவுக்கு மறைப்பது போலக் காட்டுகிறார்களோ அவ்வளவுக்கும் அது அதிக ஆழமாய்த் தங்களைச் சுற்றிலும் உள்ளவர்கள் மனதில் பாயும்படிசெய்கிறார்கள். பரியாசமாய்ச்சொ

ல்லப்படும் அபதூருனது மற்ற எவ்விதக் கோள் குண்டணியிலும் அதிக கடுமையானது. ஏனெனில் சிலஎன்னும் விஷப்பூண்டு தன்னிலே கடின விஷமுள்ளதல்ல, வெகு மெதுவாய் விஷமேறும். ஆதலால் சுளுவாய் இதனைத் தணித்துவிடலாம். ஆனால் இதனோடு கொஞ்சந் திராட்சரசத்தைக் கலந்து குடித்துவிட்டால் இனி அதைத் தணிப்பதற்கு அவுழ்தங் கிடையாதாம்.

இத்தன்மையாகவே ஒருவன் காதில் கோள் குண்டணி விழுந்தால் தன்னிலே இது அவ்வளவு விஷமுள்ளதாயிராததால் உடனே அது மறந்துபோகக்கூடும். ஆனால் வேடிக்கையாய்ப் புத்திச் சூட்சத்தோடு சொல்லப்படும் அபதூருனது இதனைக் கேட்பவர்கள் எல்லோர் சிந்தையிலும் பலமாய்ப் படிந்துபோம். இப்படி அபதூறு பேசுகிறவர்கள் இதழ்களுக்குள் பாம்பின் விஷம் உண்டென்று தாவீதென்பவர் சொல்லியபடி சொல்லலாம். உள்ளபடியே ஊதுவிரியன் கடி மகா தோற்றமற்றதாம். ஆனால் இதின் விஷத்தால் உடம்பெல்லாம் பிரியமான அரிப்புண்டாகி இதனால் இருதயமுங் குடல்களும் உப்பிப் போகவே விஷஞ் சுளுவாய்ப் பாய்ந்து போவதால் எவ்வித மருந்துஞ் சத்திசெய்யாமல் போகிறதாம்.

ஒருவன் குடி மிகுதியால் மயக்கங்கொண்டிருப்பதை நீ ஒருநாள் பார்த்ததை முன்னிட்டு அவனைக் குடியன் என்காதே. ஒருவிசை ஒருவன் திருடும்போது உன் கண்ணுக்கு அகப்பட்டபடியால் அவனைத் திருடன் என்காதே. ஏனென்றால் ஒரு விசை ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வதால் வழக்கமாய் அதனைச் செய்கிறான் என்கலாகாது. சோசுவன் என்பவர் வெற்றியடையும்படி ஒருவிசை சூரியன் நின்றது, வேறொருவிசை நமது இரக்ஷகர் மரணநேரத்தில் சூரியன் மங்கிப்போனது. ஆனால் இதைப்பற்

றிச் சூரியன் அசைகிறதுமில்லை பிரகாசிக்கிறதுமில்லை என்று ஒருவனுஞ் சொல்லான். நோயே என்பவர் ஒரு சமயத்திலும் லோத்தென்பவர் வேறொரு சமயத்திலும் இரசத்தால் மயங்கியிருந்தார்கள். ஆயினும் இவர்கள் இருவருங் குடியர்களல்ல.

அர்ச். இராயப்பர் சேசுநாதரைப் பிடிக்க வந்த சேவகன் காதை ஒருவிசை அறுத்தமையால் கொலைக்காரரானதில்லை. ஒருவனைத் துஷ்டன் அல்லது புண்ணியவான் என்று சொல்லும்போது வழக்கமாய் அவன் துஷ்டனாய் அல்லது புண்ணியவானாயிருக்கிறான் என்று அர்த்தமாகும். ஆதலால் ஒருவன் ஒருவிசை கோபித்தமையாலும் ஒருவிசை திருடினதாலும் அவனைக் கோபியென்றுந் திருடனென்றுஞ் சொல்லுவது தப்பறை. ஒருவன் நெடுங்காலந் துஷ்டத்தனமாய் நடந்திருந்தபோதிலும் அவனைத் துஷ்டனென்று சொல்லும்போதும் அபத்தமாய்ப் பேச இடமுண்டு. மதலெமரியம்மாள் முன்னே பாவியாயிருந்ததைப்பற்றி இந்தம்மாள் சேசுநாதரைக் காணவந்தபோது சிமோன் என்பவன் இவளைப் பாவியென்று சொன்னான். ஆயினும் இவன் சொன்னது உண்மையல்ல. ஏனெனில் அப்போது அவள் பாவியாயிராததுமன்றி வெகு தவமுள்ளவளாயிருந்தாள். இதைப்பற்றியே நமதாண்டவர் அவளைத் தமது அடைக்கலத்தில் வைத்துக்கொண்டார்.

தேவாலயத்தில் வேண்டிக்கொள்ளவந்த பரிசேயன் ஆயக்காரனைப்பார்த்து இவன் பாவியென்றுஞ் சிலவிசை வெகு அக்கிரம பெரும்பாவியென்றும் நினைத்தான். ஆனல் இதில் அவன் வெகுவாய் மோசம்போனான். ஏனெனில் நீதியுள்ள சர்வேசுரன் அக்ஷணத்தில்தானே ஆயக்காரனைக் குற்றமற்ற நீதிமானென்று தீர்மானித்தார். சர்வேசுரனுடைய கிருபை மகத்தானதாலும் ஓரக்ஷணத்தில் பாவியாயிருக்கிற

வன் அவரோடு சமாதானமாகக் கூடுமானதாலும் நேற்று பாவியாயிருந்தவன் இன்று இன்னம் பாவியாயிருக்கிறான் என்று நிச்சயமாய் எப்படி சொல்லலாம். கடந்த முந்தினநாள் இப்போது நடக்கும் இன்றையத்தினத்தைத் தீர்வையிடவும் நடக்கும் நாள் கடந்த நாளைத் தீர்வையிடவும் ஒண்ணாதென்று சொல்லியிருக்கிறது. கடைசி நாள் ஒன்றே மற்ற எல்லா நாளையுந் தீர்வையிடவேண்டிய நாள்.

ஆதாலால் ஒருவனைக் கெட்டவன் என்கிறபோது உண்மைக்கு ஒவ்வாமையாய்ப் பேச இடமிருப்பதால் பரிச்சேதம் அப்படி சொல்லலாகாது. ஒருவன் செய்த கிரிகையைக்குறித்து நாம் பேச அவசரம் இருக்கையில் சொல்லக்கூடுமானது என்னவெனில் இன்னான் இன்ன கெட்ட காரியத்தைச் செய்தான். இன்ன சயத்தில் தகாதவிதமாய் நடந்தான் அல்லது இப்போது தகாதவிதமாய் நடக்கிறானென்று சொல்லலாமொழிய நேற்றுத் தகாதவிதமாய் நடந்தமையால் இன்றும் அப்படியே நடக்கிறானென்றும் அல்லது இன்றையதினந் தகாதவிதமாய் நடப்பதால் நேற்றும் அப்படி நடந்தானென்றும் நாளையதினமும் அப்படி நடப்பானென்றும் ஒருவித முடிவுங் கட்டக்கூடாது.

புறத்தியார்பேரில் அபதூறு சொல்லாதபடிக்கு மகா எச்சரிக்கையாயிருக்கவேண்டியதே. ஆயினும் பலபேர் பிறர்பேரில் அபதூறு சொல்லலாகாதென்று பிறர் செய்யுந் தப்பிதத்தைப் புகழ்ந்து பேசுவார்கள். இப்படி ஒருவன் மெய்யாகவே புறணிக்காரனாயிருக்கையில் அவனைக் குற்றமற்றவனாய்க் காட்ட அவன் வெகு கபடற்றவன், மனதில் ஒன்றையும் ஒளிக்கிறதில்லை என்காதே. ஒருத்தி நாலுபேர் அறிய சிஞ்சிலாக்கியமாய் நடப்பாள். இதை மறைக்க இவளுக்குப் புகழ்ச்சியாய் இவள் வெகு உதாரத்துவம்

மேன்மையான புத்தியுள்ளவளென்று சொல்லாதே. ஆனாலும் ஆபத்தான சிநேக பழக்கமுள்ளவர்களாகில் இவர்கள் சம்பாஷணை ஊடாட்டத்தைக் கபடற்றதனம் என்காதே. ஒருவன் கீழ்ப்படியாததனத்தைக் கண்டு பத்தி சுறுசுறுப்பால் இப்படி செய்தான் என்றும் ஆங்காரமாய்ப் பேசும்போது மனதில் உள்ளதைக் கபடற்றதனமாய்ச் சொல்லுகிறான் என்றுந் தகாத கெட்ட பழக்கத்திலிருக்கையில் சிநேகமாயிருக்கிறான் என்றும் மறைத்துப் பேசாதே.

உள்ளபடியே பிரிய சகோதரமே, புறணித்தனத்தை விலக்கவேண்டி மற்றக் குற்றங்களுக்குச் சனுவாய்ப் பேசி அவைகள் வளர விடலாகாது. ஆனால் உண்மைப்படி கபடற்றதனமாய்த் தின்மையைத் தின்மையென்றுங் கண்டனைக்குரியவைகளைக் கண்டனைக்குரியவைகள் என்றுஞ் சொல்லவேண்டும். பின்னால் சொல்லப்படும் வழிப்பாடுகளை விவேகத்தோடு பிரயோகித்துக்கொண்டு உண்மைப்படி பேசுவோமேயாகில் நாம் சொல்வதெல்லாந் தேவ தோத்திரத்துக்காகவே சொல்லுவோம்.

முந்தமுந்தப் புறத்தியார் துர்க்குணங்களைக்குறித்துக் குறைவாய்ப் பேசுவதற்கு ஆளைக்குறித்துப் பேசுவோமோ அவனுக்கு அதினால் பிரயோசனமிருக்கவேண்டும் அல்லது ஆரோடு பேசுகிறோமோ அவனுக்கென்கிலும் பிரயோசனம் உண்டாகவேண்டும். இப்படி சிலவிசை வாலிபர்களுக்கு முன்பாக நிச்சயமாய் ஆபத்துக்குரிய தனிச் சிநேக பழக்கமுள்ள இன்னான் இன்னாள் நடத்தையைக்குறித்துப் பேசுவார்கள். வார்த்தையிலோ நடையிலோ இன்னான் இன்னாளுக்குள்ள வெளியரங்க அசுசியரான நாட்டங்களைக் குறித்துப் பேசுவார்கள். இச்சமயத்தில் இவர்கள் நடத்தை தகாதென்று வெளிப்படச் சொல்லாமல் என்னமோ அறியாமல் இப்படி நடந்தார்கள் என்று

அவர்களுக்குச் சனுவாய்ப் பேசினல் இதைக் கேட்கும் ஆலர் தாங்களும் இவ்விதமாய் நடப்பதில் அவ்வளவு தப்பிதம் இல்லையென்று சிலவிசை நினைப்பார்கள், ஆதலால் இவர்கள் நன்மையைக் கோரி உண்மைக்கு ஒத்தபடி இவ்வித நடத்தை தகாதென்று உடனே கண்டித்துப் பேசவேண்டும். ஆனல் எவர்கள் நடத்தையைக் கண்டித்துப் பேசுகிருேமோ அவர்கள் கீர்த்திக்கு அவ்வளவு நஷ்டம் வராதபடிக்கு வேறே தகுந்த சமயத்தில் பேசுவதால் அதிக பிரயோசனம் வருவதாகில் தகுந்தபடி தகுந்த சமயத்தில் பேசுவது கிரமம்.

௨-வது. இவர்கள் நடத்தையைக்குறித்துப் பேச நமக்கு ஏதாகிலுங் கடமையிருக்க வேண்டும். இவ்வகையாய்ப் பத்துப் பேர் கூடியிருக்கும்போது அதில் பெரியவனாய் இருப்பவன் இப்படிப்பட்ட நடக்கையைக் குறித்துப் பொது நன்மையை முன்னிட்டுக் கண்டித்துப் பேசாவிட்டால் தன் மவுனத்தால் இவ்வித நடத்தையை ஏற்றுக்கொள்ளுவதாகக் காணும். ஆனல் சபையிலுள்ளவர்களில் அதிக சிறியவனானவன் ஒன்றையுந் தன் மனதுபடி குற்றஞ்சாட்டிப் பேசவொண்ணுது. எவனும் உண்மைக்கு விரோதமாய் ஒருவார்த்தையையும் மிஞ்சிச்சொல்லாதபடிக்கு வெகு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனென்றால் நாம் புறத்தியாரைக்குறித்துப் பேசும்போது நமது நாவானது இரணவயித்தியன் கையிலிருக்குங் கத்திக்கு ஒத்ததாயிருக்கிறது. எப்படி இரண வயித்தியன் இரணங்களை அறுக்கவேண்டியிருக்கிறபோது நரம்புகளை அறுத்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பானே அப்படியே நாமும் பிறர் குற்றத்தைக்குறித்துப் பேசும்போது வெகு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஒருவன் நடத்தையைக்குறித்துப் பொதுநன்மைக்காகப் பேசவேண்டியிருக்கை

யில் இருக்கிறதை அதிகப்படுத்தாமலுங் குறைக்காமலும் வெகு எச்சரிக்கையோடு பேசவேண்டும்.

கடைசியாய்ப் பிறத்தியார் குற்றத்தைக் கண்டிக்க வேண்டியிருக்கையில் அநுசரிக்கவேண்டிய சில ஒழுங்குகளுண்டு. நம்மால் ஆனவரையில் குற்றமுள்ளவன் கீர்த்திக்கு நஷ்டம்வராதபடி பார்க்கவேண்டும். ஆகிலும் பிரசித்தமான துர்நடத்தையுள்ள பாவிகளைக்குறித்துச் சங்கடமின்றிப் பேசலாம். ஆனால் பிறசிநேக இரக்கத்தோடு பேசவேண்டுமே அல்லாது ஆங்காரமாய்ப் பிறர்பேரில் விரோதமாய்ப் பேசவேண்டும் என்று பேசப்போகாது. ஏனெனில் இத்தன்மையாய்ப் பேசுவது நீசத்தனமொழிய வேறல்ல. சுவாமிக்குந் திருச்சபைக்கும் பொருந்தாத சத்துராதிகள்மட்டில் நடந்துகொள்ளவேண்டிய விதம் வேறே. ஏனெனில் பதித மதங்களுக்கும் பிரிவினைகளுக்குந் தலைமையான பாவிகளைக்குறித்து நம்மால் இயன்றவரையில் விரோதமாய்ப் பேசவேண்டும். ஏனெனில் ஆட்டுக்கிடையில் புகுந்த ஓநாயை அதட்டிக் கூவித் துரத்துவது அவசியமே. மன்னவான்களைக் குறித்தும் அந்தந்தத் தேசத்துச் சனங்களைக் குறித்தும் அவனவன் தன் தன் தோற்றப்படி தீர்மானித்து அவதூறாய்ப் பேசுவான். பிரிய சகோதரமே, இப்படிப்பட்ட குற்றத்துக்கு இடங்கொடாதே. ஏனெனில் இதனால் சர்வேசுரனுக்குப் பிரியப்படாமல் போவதுடன் வீணான வெகு கஸ்தி வருத்தங்களுக்கு உள்ளாவாய்.

பிறரைக் குறித்துத் தின்மையாய்ப் பேச நீ கேள்விப்படும்போது நியாயத்துக்கு ஒத்தபடி அதில் சமுசயமிருந்தால் பிறர்பேரில் சொல்லப்படுங் குற்றம் வெகு சந்தேகத்துக்குரியதென்று எண்ணிக்கொள். ஆனால் இதற்கு இடமிராவிட்டால் குற்றவாளியின் கருத்தையென்கிலுங் குற்றமற்றதாய் எண்

ணிக்கொள். இப்படியுஞ் செய்யக்கூடாத பக்ஷத்தில் அவன்மீது துக்கித்து இரக்கங் காட்டி அவனைப் போல நீயுங் குற்றத்தில் விழாதது உன் சுய பலத்தினால் அல்ல ஆனால் சர்வேசுரனுடைய தயையால் என்று எண்ணி மற்றவர்களுக்குஞ் சொல்லிக்காட்டுவாய். புறத்தியாரைக் குறித்து எவனாகிலும் அவதூறாய்ப் பேசும்போது இவ்விதம் பேசுவது சரியல்லவென்று தகுந்த விதமாய்ச் சொல்லிக் காட்டி எவன் பேரில் அவதூறு சொல்லப்படுகிறதோ அவனிடத்தில் இருக்கக்கூடுமான உனக்குத் தெரிந்த சற்குணங்களைக் குறித்து நன்மையாய்ப் பேசுவாய்.

30-ம் அதிகாரம்.

பேசுவதைக்குறித்து வேறு சில புத்திமதிகள்.

உன் வார்த்தைகள் கடுமையின்றி எப்பொழுதுஞ் சாந்தம் கபடற்றதனம் உண்மை பிரமாணிக்கமுள்ளவையாய் இருக்கட்டும். ஈரர்த்தமான கபடு சூதுள்ள வார்த்தைகள் உன் வாயில் நின்று புறப்படாதபடிக்கு வெகு எச்சரிக்கையாயிரு. ஏனெனில் உண்மையான எது காரியத்தையும் எப்பொழுதுஞ் சொல்லுவது நலமாய் இராவிட்டாலும் பரிச்சேதம் உண்மைக்கு விரோதமாய்ப் பேசவொண்ணாது. சர்வேசுரன் சத்திய சுரூபியானவரென்று நினைத்து உன்னைக் குற்றமற்றவனாகக் காட்டவாயினும் வேறே எந்த முகாந்தரத்தைப் பற்றியாயினும் வேண்டுமென்று அறிந்து பரிச்சேதம் பொய் சொல்லாதே.

உன்னையுமன்றித் தெரியாமல் உன் வாயில் அபத்தமான வார்த்தை வந்திருக்குமேயாகில் உடனே அந்தக் குற்றத்தைப் பரிகாரஞ்செய்யக் கூடுமாயிருந்தால் பரிகாரஞ்செய்யத் தப்பிப்போகாதே. இப்படி பொய் சொல்லி நம்மைக் குற்றமற்றவர்களாய்க் காட்டத் தேடுவதால் வரும் பிரயோசனத்தைப்பார்க்க உள்ளபடி பேசுவதில் வெகு நன்மையுண்டு.

சிலவிசை விமரிசையோடு திறமையான வார்த்தைகளால் உண்மையைக் காட்டாமல் மறைவிடமாய்ப் பேசக் கூடுமாய் இருந்தபோதிலுந் தேவதோத்திர மகிமைக்குத் திஷ்டாந்தமான அவசியம் இருக்கும்போது மாத்திரங் கனமான விஷயங்களில் இத்தன்மையாய் மறைவிடமாய்ப் பேசலாமொழிய வேறல்ல. இச்சமயமன்றிச் சூக்ஷமாய் மறைவிடமாய்ப் பேசுவதில் ஆபத்துண்டு. ஏனெனில் வேதாகமத்தில் சொல்லியிருப்பதுபோல் கபடு சூதுள்ள இருதயத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் வாசஞ்செய்யுவதில்லை. கபடற்றதனத்தைப் பார்க்கிலும் அதிக உத்தமமான சூக்ஷமில்லை. உலக விமரிசையுங் கபடு சூக்ஷங்களும் உலக மனிதர்களுக்கே சொந்தம். ஆனால் சர்வேசுரனுடைய பிள்ளைகள் நேராய் நடப்பதால் இவர்கள் இருதயத்தில் கபடு மறைவிடங் கிடையா. கபடற்றதனமாய் நடப்பவன் ஸ்திரமாய் நடக்கிறனென்று ஞானியானவர் சொல்லுகிறார். பொய், கபடு, சூதுள்ளவர்கள் எப்பொழுதும் மகா அற்ப புத்தியுள்ள நீசரொனத்தகும்.

அர்ச். அகுஸ்தினுசென்பவர் தமது ஆத்துமமுந் தமது சிநேகிதனுடைய ஆத்துமமும் இரண்டும் ஓரே ஆத்துமமாய் இருக்கிறதென்றுந் தமது சிநேகிதன் மரித்த பின் தாம் பாதி உயிரோடு மாத்திரஞ் சீவிப்பதுபோல் இருக்குமென்கிறதினல் தமது சீவியந் தமக்கே சகிக்கக்கூடாததாய் இருக்குமென்றுந்

தாம் மரித்தால் தமது சிநேகிதன் துக்கத்தினால் செத்துப்போவான் என்கிற பயத்தினால் தாம் சாக மனதில்லாதிருக்கிறதென்றும் புஸ்தகத்தில் எழுதிவைத்தார். பின்னால் இவ்விதமாய்த் தாம் எழுதியது உண்மைக்கு மேற்பட்டதாய் இவருக்குக் காணப்பட்டமையால் மூடத்தனமாய் இப்படி எழுதினேமென்று வேறே இடத்தில் இவரே எழுதிவைத்தார்.

பிரிய சகோதரமே, பொய்யான வார்த்தைகளைச் சொல்லாதபடிக்கு இவர் எவ்வளவு சாக்கிரதையாய் இருந்தாரென்று நீ கண்டுபிடிக்கிறாய். மெய்யாகவே வார்த்தையில் பிரமாணிக்கமுங் கபடற்றதனமும் உண்மையும் உள்ளவனாயிருப்பது கிறீஸ்துவனுக்கு மகா அலங்கார ஆபரணமாம். தாவீதென்பவர் சொல்வதைக் கேள். நாவால் எனக்குப் பாவம் வராதபடி என் வழிகளில் சாக்கிரதையாயிருக்கத் தீர்மானித்தேன். ஆ என் ஆண்டவரே சுவாமீ! என்னாவுக்கு ஓர் காவல் வைத்து என் இதழ்களுக்குப் பதலமான கதவு போடும் என்கிறார்.

அர்ச். பிரகாச இராசா சொல்லுகிறது என்னவென்னில் புறத்தியானுடைய ஆலோசனைக்கு ஒத்துப்போவதால் பாவமாயினும் பெரிய நஷ்டமாயினும் வராதபோது அவன் சொல்வதற்கு விரோதமாய்ப் பரிச்சேதஞ் சொல்லலாகாது, இதனால் பலவீண் தர்க்கங்களுக்கும் இடமிராது. ஆனால் பிறருடைய தோற்றங் கருத்துக்கு விரோதமாய்த் தன் எண்ணத்தைக் காட்டவேண்டி இருக்கும்போது புறத்தியார் புத்தியை எள்ளளவுந் தூண்டி அவர்களுக்கு வருத்தம் வருவிக்கத் தேடாமல் மகா சாந்தமாய் எச்சரிக்கையோடு பேசவேண்டும்.

வார்த்தையில் மட்டாய்க் கொஞ்சமாய்ப் பேசவேண்டும் என்பது பூர்வீக ஞானிகளது கற்பனையாம். ஆனால் இதனால் கொஞ்சம் வார்த்தை சொல்ல

வேண்டுமென்று அர்த்தங்கொள்ளா. பிரயோசனமற்ற வீண் வார்த்தைகளை மெத்தச் சொல்ல வொண்ணாது என்பதேயாம். ஏனெனில் ஒருவன் எத்தனை வார்த்தை சொல்லுகிறானென்று கவனிப்பாரில்லை. ஆனால் அவன் சொல்லும் வார்த்தை எப்படிப்பட்டதென்று எல்லோருங் கவனமாய்க் கவனிப்பார்கள். இது விஷயத்தில் இரண்டு குறைகளைத் தள்ளவேண்டும். முதலாவது—நம்மைச் சேர்ந்தவர்களோடு கலந்து சம்பாஷிக்கையில் வரக்கூடுமான வழக்கமான பல பேச்சுகளை ஏற்றுக்கொள்ளாதது போல் கொஞ்சங் கண்டிப்பாய் எட்டி நிற்கக்கூடாது ஏனெனில் இவ்விதமாய் நடந்துகொள்வதில் பிறர் மட்டில் ஒருவித நம்பிக்கையற்ற தனத்தையும் நிந்தையையுங் காட்டுகிறதுபோல் காண்கிறது. இரண்டாவது—மற்றவர்கள் சொல்ல ஆசிப்பதைச் சொல்வதற்கு அவர்களுக்குச் சற்றும் இடங்கொடாமல் தானே எப்பொழுதும் வாயாடலாகாது. இப்படி வாயாடுவது யோக்கியக் குறைச்சல்.

கூட்டமாய்க் கூடியிருக்கும்போது இரகசியமாய்த் தனியாய்ப் பேசுவது அர்ச். பிரகாச இராசப்புவுக்குப் பிரியமாய் இருந்ததில்லையாம். ஏனெனில் இப்படி பேசுவதால் பிறருக்கு விரோதமாய் என்னமோ பேசுவதாக சமுசயப்படுவதற்கு இடமுண்டு. இது விஷயத்தைக் குறித்து இவர் சொல்லிவந்தது என்னவெனில், நாலு பேர் சேர்ந்து ஒருமிக்கச் சாப்பிடுகையில் சந்தோஷத்துக்குரிய வார்த்தைகளைச் சொல்ல விருப்பமுள்ளவன் எல்லாருக்குங் கேட்கும்படி சொல்லவேண்டும். ஆனால் பிரசித்தமாய்ச் சொல்லக்கூடாத காரியமாய் இருந்தால் அதைக் குறித்துப் பேசவேகூடாது.

31-ம் அதிகாரம்.

விளையாட்டுமுதலிய காலப்போக்கான விஷயங்களைக்குறித்து.

மூந்த மூந்தக் துற்றமற்ற நல்ல விளையாட்டுகளைக்குறித்து.

நமது புத்தியும் இன்னம் நமது சரீரமுஞ் சற்றிளைப்பாறுவது பலமுறை அவசியம். அர்ச். சுவிசேஷ அருளப்பர் ஒரு நாள் ஒரு சவுதாரியைக் கையில் வைத்துக்கொண்டு அதனோடு பிரியமாய் விளையாடிக்கொண்டிருக்க ஓர் வேடன் கண்டதாக கசியேனென்பவர் சொல்லுகிறார். இந்தவேடன் இவரைப் பார்த்து இவ்வளவு பெருந்தன்மையுள்ள நீர் இவ்வளவு அற்பகாரியத்தில் காலம்போக்குவது ஏது காரணம் என்று இவரைக் கேட்க இவர் இவனுக்கு மாறுத்தரமாக ஏன் நீ உன் வில்லை எப்பொழுதும் வளைத்து வைத்துக்கொண்டிருக்கிறதில்லை என்றார். வேடன் மறுமொழியாக எப்பொழுதும் வில்லை வளைத்துவைத்திருந்தால் அவசரமானபோது வேண்டிய பலத்தோடு வளையாது என்பதைப்பற்றியே என்றான். ஆதலால் என் புத்திக்குங் கொஞ்சம் இளைப்பாற்றி வருவிக்க நான் இவ்விதஞ் செய்வதால் நீ அதிசயப்படாதே. ஏனென்றால் பின்னால் வேண்டியபடி நான் தியானஞ் செய்வதற்கு இது நல்ல வழியென்று அர்ச். அருளப்பர் சொன்னார். இத்தன்மையாய் ஒருவன் தானென்கிலும் இன்னம் மற்றவர்களாயினும் எவ்வித இளைப்பாற்றிக்கும் இடங்கொடாமல் கண்டிப்பாயிருக்கவேண்டுமென்பது மெய்யாகவே வெகு விபரீத குணமாம்.

வெளியில் உலாவிக் காற்றுப்பிடிக்கிறதும் வயல்களில் உலாத்தப்போகிறதுஞ் சந்தோஷமான காரியங்களைக் குறித்துச் சம்பாஷிப்பதும் வீணை முதலிய வாத்தியங்களை வாசிக்கிறதுஞ் சங்கீத பாட்டுகளைப் பாடுகிறதும் வேட்டையாடுகிறதுங் குற்றமற்ற இளைப்பாற்றியாம். ஆனால் இவைகளைக் காலமும் இடமும் அந்தஸ்தும் அறிந்து மரியாதையாய் விவேகத்தோடு உபயோகித்துக்கொள்ளவேண்டும். பந்தயம் வைத்து விளையாடும் விளையாட்டுகள் சில உண்டு. இந்தப் பந்தயஞ் சரீர பலத்துக்காகவாயினும் புத்தி சாமார்த்தியத்துக்காகவாயினும் சம்பாவனையாக நியமிக்கப்படும். இப்படி பந்து, சதுரங்கம் முதலிய விளையாட்டுகள் இளைப்பாற்றிக்குரிய விளையாட்டாகவுந் தம்மிலே நல்லதாகவும் இருக்கின்றன. ஆனால் இதில் வைக்கும் பந்தயத்திலென்கிலும் விளையாடும் நேரத்திலென்கிலும் மிஞ்சிப்போகலாகாது. ஏனெனில் இதில் வெகு நேரஞ் செலவழிப்பதாயிருந்தால் இளைப்பாற்றிக்குப் பதிலாய்ப் பிரயாசையாகும். இப்படி விளையாடுவதால் புத்திக்குஞ்சரி சரீரத்துக்குஞ் சரி அற்ப இளைப்பாற்றியும் வருகிறதில்லை. இதற்கு விரோதமாய்ச் சரீரத்துக்கும் புத்திக்கும் வெகு கஷ்டமுண்டாம்.

இப்படியே ஐந்தாறு மணிநேரம் வெகு கவனத்தோடு சதுரங்கம் ஆடியபின் தலையெல்லாம் வெகு பளுவாய்ப்போம். வெகுநேரம் பந்துவிளையாடுவதால் மெத்தவும் இளைப்பும் ஆயாசமுமுண்டாம். பந்தயத்திலும் மட்டுத் திட்டமின்றிப் பெருந்தொகையானால் விளையாடுகிறவர்கள் விளையாட்டுக்காக விளையாடாமல் வீண ஆசையால் விளையாடுவார்கள். மேலும் இப்படிப்பட்ட சொற்பமான விளையாட்டு முகாந்திரமாகப் பெரும் பந்தயம் வைத்து விளையாடுவது ஒருவிதத்தில் அநியாயம் எனத்தகும். ஆனால் பிரிய சகோ

தரமே, இத்தன்மையான விளையாட்டுகளில் உனக்கு மிஞ்சின பற்றுதல் உண்டாகாதபடிக்கு வெகு சாக்கிரதையாயிருக்க வேண்டும். அதேனெனில் இளைப்பாற்றியாக விளையாடுவது எவ்வளவு காரணமானதாயிருந்தபோதிலும் அதிகப்பற்றுதல்வைத்துப் பிரியங்கொள்வது எப்பொழுதுந் துர்க்குணமாம். விளையாடும்போது பிரியமாய் விளையாடக்கூடாதென்று சொல்லுகிறதில்லை. ஏனெனில் பிரியமாய் விளையாடாவிட்டால் அதினால் இளைப்பாற்றி வராது. ஆனால் இப்படிப்பட்ட விளையாட்டுகளில் மிஞ்சின ஆசை பற்றுதல் வைக்கக்கூடாது என்பதேயன்றி வேறல்ல.

32-ம் அதிகாரம்.

விலக்கப்பட்ட விளையாட்டுகளைக் குறித்து.

சொக்கட்டான் கடுதாசி முதலிய விளையாட்டுகளில் விசேஷமாய்த் தற்செயலாய் இலாபங் கிடைப்பதால் கூத்துமுதலிய விளையாட்டுகளைப்போலவே இவ்வித விளையாட்டுகள் ஆபத்துக்குரிய இளைப்பாற்றியாயிருப்பதுமல்லாமல் இன்னந் தம்மிலே கெட்டவைகளாய்க் கண்டனைக்குரியவைகளாயிருக்கின்றன. இதைப்பற்றித்தான் உலக முறைமைகளுந் திருச்சபை முறைமைகளும் இவைகளை விலக்குகின்றன. ஆனால் இதில் அப்படிப்பட்ட கன தின்மை என்னவென்பார்களாக்கும். இவ்வித விளையாட்டுகளில் நியாயமாய் அவனவன் திறமை சாமர்த்தியத்துக்குத் தக்கபடி இலாபம் வராமல் தற்செயலாக வருகிறதி

ஞல் புத்திக்கு ஒவ்வாமையாயிருக்கிறது. ஆனல் இதற்குச் சம்மதித்தே விளையாடுகிறோம் என்பார்களாக்கும். ஆயினும் இவ்விதச் சம்மதியால் கெலிக்கிறவன் மற்றவர்களுக்கு நஷ்டம் வருவிப்பதில்லையென்று விளங்குகிறதேயல்லாது இந்தச் சம்மதியும் விளையாட்டும் ந்யாயத்துக்கு ஒத்தவை என்று விளங்கா. ஏனெனில் திறமைச் சாமர்த்தியத்துக்குச் சம்பாவனையாக வரவேண்டிய இலாபமானது அற்ப பேறுபலனில்லாத தற்செயலின் சம்பாவனையாகிவிடுகிறது. ஏனென்றால் இப்பேர்க்கொத்த விளையாட்டுகளில் நமது சாமர்த்தியத்தால் வருவதொன்றுமில்லை.

மேலும் இவ்வித விளையாட்டுகளை இளைப்பாற்றி ஓய்வுக்காக விளையாடுகிறதென்று பரிச்சேதஞ் சொல்ல வழியில்லை. இதற்கு விரோதமாய்ப் புத்திக்குஞ் சரீரத்துக்கும் வெகு பிரயாசையாம். ஏனெனில் இந்த விளையாட்டுகளில் ஓயாமல் கவனித்துக் கெலிப்போமோ கெலிக்கமாட்டோமோ என்கிற ஏக்கத்தால் நாலாவிதத்திலும் புத்தி கவனித்திருப்பது அதற்கு மெய்யாகவே பிரயாசையல்லவா? இப்படி விளையாடுகிறவர்களுக்குள்ள கவனத்தைப்பார்க்கிலும் அதிக கஸ்தி ஏக்கத்துக்குரிய கவலை உலகில் உண்டா? இப்படி விளையாடுகிறவர்களுக்குள்ள நிபந்தனை எவ்வளவோ கடினம். விளையாட்டைக்குறித்துப் பேசவும் கூடாது, கனைக்கவுஞ் சிரிக்கவும் கூடாது. இதில் அற்ப பிசகு நேரிடுமோ வெகு கோப சச்சரவுக்கு இடமாகும்.

கடைசியாய் இந்த விளையாட்டில் கெலிக்கும்போதுமாத்திரமே கெலிப்பவனுக்குச் சந்தோஷமுண்டு. ஆனல் இந்தச் சந்தோஷங் கிரமமானதோ? பிறர் நஷ்டப்பட்டு மனவிதனப்படுவதாலல்லோ இந்தச் சந்தோஷம் உண்டாகிறது. இந்தச் சந்தோஷம் மெய்யான சந்தோஷமல்ல. சந்தோஷம் என்னும் பேர்

இதற்கு ஏற்காது. இது நியாயங்களைப்பற்றித்தான் கெட்ட விளையாட்டுகள் விலக்கப்படுகிறது. ஒரு நாள் அர்ச். பிரகாசராசா தன் சகோதரன் ஆங்மூ என்னும் மன்னவான் வேறொரு பிரபோடு விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து வியாதியாய் இவர் படுத்துக்கொண்டிருந்தும் எழுந்திருந்து தடுமாறிக்கொண்டே அவர்கள் அறையில் போய் மேசையின்மீது இருந்த சொக்கட்டானையும் பந்தயமாக வைத்திருந்த பணத்தையும் எடுத்துக் கடலில் போட்டு இவர்களை மெத்தவுங் கோபித்துக்கொண்டாராம். புண்ணியவதியான சார்ாவென்னுங் கற்புடையாள் தன் மாசற்ற தனத்துக்கு அத்தாட்சியாய்ச் சுவாமியைப் பார்த்து என் கர்த்தாவே சுவாமீ சூதுவிளையாடுகிறவர்களோடு நான் ஒரு நாளும் இருந்ததில்லையென்று நீர் அறிவீர் என்றாள்.

—⁕—

33-ம் அதிகாரம்.

விலக்கப்படாததும் ஆனல் ஆபத்துக்குரியதுமான கூத்து முதலிய காலப்போக்கைக் குறித்து.

நடன நாட்டியங்கள் தம்மிலே குற்றமற்றவையாயினும். இவைகளால் வழக்கமாய் விளையுந் தின்மைகளைக் கணக்கிடலாகாது. இப்படி ஆடுகிறவர்களுக்கு இதனுல் எவ்வளவு ஆபத்துண்டோ அதனைப் பார்ப்பவர்களுக்கும் அவ்வளவு ஆபத்துண்டு. ஆனல் பிரியசகோதரமே, இதுவிஷயத்தைக் குறித்து இரண்டொரு

வார்த்தைமாத்திரஞ் சொல்லுவது போதும். வெகு நேத்தியான காளான் ஒன்றுக்கும் உதவாதென்று வயித்தியர் சொல்லுவார்கள். இத்தன்மையாகவே கூத்து வேடிக்கைகளைக்குறித்துஞ் சொல்லலாம். காளானைச் சாப்படவேண்டுமாகில் வேண்டிய பரிகத்துடன் சமைத்துச் சாப்படவேண்டும். இப்படி எது மூகாந்தரத்தைப்பற்றியென்கிலுங் கூத்து முதலிய வேடிக்கைகளை அவசியம் பார்க்கும்படி நேரிட்டால் அதற்கான முஸ்திப்பு ஆயத்தமாகிய அடக்கவொடுக்கத்தோடும் மேரை மரியாதை சுத்த கருத்தோடும் பார்க்கவேண்டும். காளானை மகா அபூர்வமாய்ச் சீராய்ச் சாப்படவேண்டும் என்று வைத்தியர் சொல்லுவார்கள். ஏனெனில் இதனை எவ்வளவுதான் நேத்தியான பக்குவத்துடன் சமைத்திருந்தபோதிலும் அதிகமாய்ச் சாப்படுவதால் பல தருணத்தில் பிராணசேதமே உண்டாம். இத்தன்மையாகவே இவ்வித நடன நாட்டியங்களை மகா அபூர்வமாய்ச் சற்றுநேரமாத்திரம பார்க்கலாம் இல்லாவிட்டால் அதில் உனக்குப் பற்றுதல் உண்டாகி ஞான சீவியத்தை இழப்பதற்கான ஆபத்து நேரிடக் கூடும்.

மேற்சொல்லிய காளான் கடற் பாசியைப் போல் சிறுசிறு துவாரமுள்ளதாயிருப்பதால் இதனைச் சுற்றிலும் எந்தெந்த வாசனை அடிக்குமோ அதனை வெகு சுளுவாய் இழுத்துக்கொள்ளுகிறதாகப் பிளின் என்னுஞ் சராசர நூலாசிரியன் சொல்லுகிறான். இத்தன்மையாய் இதனருகில் பாம்புகள் இருக்குமாகில் இந்தப் பாம்புகளுக்குள்ள விஷத்தையும் இழுத்துக்கொள்ளுகிறதாம். கூத்து நாட்டியமுதலிய கூட்டங்களில் சேருகிறவர்களும் அவ்விடத்தில் இருக்கக்கூடுமான எவ்விதத் துர்க்குண பாவங்களையுஞ் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள் எனத்தகும். இதில் வெகு எச்சரிக்கை வேண்டும். ஏனெனில் ஞானசீவியத்தை

இழந்து சேதமாய்ப்போகப் பலமுறை ஓரோ பார்வை ஓரோ வார்த்தை போதும்.

ஆ பிரிய சகோதரமே, இவ்வித இளைப்பாற்றி காலப்போக்கு வழக்கமாய் எவ்வளவோ ஆபத்துக்குரியதாயிருக்கிறது. இதனால் பத்தி குறைந்து ஆத்துமம் மெலிந்து தேவசிநேகம் வரண்டுபோக இருதயத்தில் நாலாவிதக் கெட்ட இச்சைகள் உண்டாகின்றமையால் இது விஷயத்தில் மகா விமரிசையோடு நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

காளானைச் சாப்பட்ட பிற்பாடுதான் விசேஷமாய் நல்ல திராட்சரசத்தைக் குடிப்பது தகுதியென்பார்கள். அப்படியே கூத்து வேடிக்கைகளைப் பார்த்த பின் அவைகளால் நமது இருதயத்தில் கிளம்பக் கூடுமான ஆபத்துக்குரிய வீண் தோற்றப் பிரியத்தை விலக்குவதற்குச் சில நல்ல யோசனைகளைச் செய்வது அவசியம். இப்படி நீ செய்யத்தக்க ஆலோசனைகளாவன.

முந்தமுந்த நீ வேடிக்கை பார்க்கும்போது இவ்வித வேடிக்கையைப்பற்றியாயினும் அல்லது அதில் கட்டிக்கொண்ட பாவங்களைப்பற்றியாயினும் அநேகம் பேர் நரக பாதாளத்தில் விழுந்து வேகிறார்களென்று நினைத்துக்கொள்.

இரண்டாவது.—இன்னம் நீ வேடிக்கை பார்க்கும் நேரத்திலேயே அநேகஞ் சந்நியாசிகளுங் கன்னியாஸ்திரீகளும் இன்னம் பல புண்ணியவான்களுந் தேவஸ்துதிகளைப் புகழ்ந்து கொண்டாடித் தியான மனோகாரத்தை அநுபவிக்கிறார்களென்றும் உன்னைப்பார்க்கிலும் இவர்கள் அதிக உபயோகமாய்த் தங்கள் காலத்தைப் பிரயோகித்துக்கொள்ளுகிறார்கள் என்றும் நினைத்துக்கொள்.

மூன்றாவது.—நீ வேடிக்கை பார்த்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும்போதே அநந்தம் பேர் மகா அவ

ஸ்தையாயிருந்து மரிக்கிறார்கள் என்றும் இன்னம் எண்ணிறந்தபேர் கடின வியாதியாய் உபத்திரவுப்பட்டுப் பிணியாளி மடங்களிலும் வீதிகள் திண்ணைகளிலுஞ் சொல்லக்கூடாத நோக்காடு வருத்தங்களை அநுபவிக்கிறார்கள் என்றும் மறந்துபோகாதே. இவர்கள் அற்ப இளைப்பாற்றி ஆறுதலில்லாமலிருக்கையில் இவர்கள்மட்டில் இரக்கங்கொள்ளாமலிருப்பயோ. வேறேபேர் உன்னைப்போலவே வேடிக்கை விளையாட்டுகளைப் பிரியமாய்ப் பார்த்துக்கொண்டிருக்க நீயும் ஒருநாள் கஸ்தித் துன்பப்படுவாயென்று நினைத்துக்கொள்.

நான்காவது. — நீ விளையாட்டு வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு இவ்வளவு நிசிதமான அற்பகாரியங்களில் கவனித்துப் பிரியப்படுவதை நமது ஆண்டவரும் பரிசுத்த கன்னிமரியாயுஞ் சம்மனசுகளும் அர்ச்சியசிஷ்டவர்களும் பார்க்கும்போது உன்பேரில் அவர்களுக்கு எவ்வளவு பரிதாபம் இரக்கம் உண்டாகுமென்று நினைத்துக்கொள்.

ஐந்தாவது.—பிரிய சகோதரமே, இப்படி நீ கூத்துப் பார்த்துக்கொண்டிருக்கையிலோ காலங் கடந்துபோயிற்று, மரணங் கிட்டி வந்துவிட்டது. இதோ கனவேகமாய் உன்னருகில் வந்து உன்னை அழைக்கிறது. சற்றுக்குள் நித்தியத்தின் கதவு உனக்குத் திறக்கப்படும். ஆனல் நித்திய பாக்கியத்தை அநுபவிப்பதற்கோ அல்லது நித்திய ஆக்கினையை அநுபவிப்பதற்கோ உன் நடத்தைக்கு ஒத்தபடி சதாகாலத்துக்குந் தீர்வையிடப்படுவாய். இவ்விதப் பல நல்ல யோசனைகளைச் செய்யலாம். அல்லாமலும் நீ சுவாமிக்குப் பயந்து நடந்தால் அவர்தாமே வேறே பல சுகிர்த யோசனைகளை உனக்கு வருவிப்பார்.

34-ம் அதிகாரம்.

எப்போது விளையாடலாம் என்பதின்பேரில்.

கிரமமாய்க் குற்றமன்றி விளையாடுவதற்கு விளையாட்டில் பற்றுதல் வையாமல் இளைப்பாற்றிக்காகவுங் களைத்துப் சலித்துப்போம்வனாயில் விளையாடாமல் மட்டுத்திட்டமாய் அபூர்வமாகவும் விளையாடவேண்டும். ஏனெனில் விளையாட்டையே பழக்கமாக்கிக்கொள்பவன் இளைப்பற்றிக்குப் பதிலாய் மிகுந்த புத்திக் கவலைக்கு உள்ளாவான்.

ஆனால் எச்சயத்தில் விளையாடலாம்? பாவமும் புண்ணியமுமாயிராத விளையாட்டுகளுக்குச் கிரமமான சமையம் பலவுண்டு. விலக்கப்பட்ட விளையாட்டுக்கான சமயங்களோ மெத்த அருமையாம். இச்சமயங்களும் அந்தந்த விளையாட்டுக்கானபடி அதிக ஆபத்தானவையுங் குற்றமானவையுமாய் ஆகிவிடும். ஆனால் முன்னால் நான் உனக்குச் சொல்லிக்காட்டிய ஒழுங்குகள்படி இப்போது இரண்டொரு வார்த்தையில் சொல்வதென்னவெனில் நாகரீக மரியாதையைப்பற்றியும் நம்மோடு சேர்ந்திருப்போரை நாம் மதிக்கிறோமென்று காட்டவும் நாணய மரியாதைக்குப் பழுதின்றி அவர்கள் இஷ்டத்துக்கு ஒத்து விளையாட வேண்டியிருக்கையில் விளையாடுவது கிரமமே. ஏனெனில் பிறசிநேகத்தைப்பற்றிக் காட்டுந் தயை தாட்சணியங் குற்றமற்றவைகளை நல்லதாகவும் ஆபத்துக்குரியவைகளை உத்தரவுள்ளவைகளாகவும் ஆக்கிவிடுகிறது.

இவ்வகையாய்க் கடுதாசி முதலிய ஆட்டங்கள் தகாதவையாயினும் நியாயமான தாக்ஷணிய முகப்

பிரீதியைப்பற்றி விளையாடும்போது குற்றமில்லை. அர்ச். ஷார்ல் பொரோமே என்பவர் பல சமயங்களில் தயை தாட்சணியத்தால் பல காரியங்களை உத்தரவு கொடுப்பார். அவ்விஷயங்களிலேயே வேறு சமயங்களில் வெகு கண்டிப்பாய் இருப்பார். சேசு சபையை எற்படுத்திய அர்ச். இஞ்ஞாசியாரும் ஒரு நாள் புறத்தியார் இடத்துக்கு இணங்கி அவர்களோடு கபடற்ற விதமாய் விளையாடினர். ஓங்கிறி தோசத்து அர்ச். எலிசபெத்தம்மாள் மன்னவான் மன்னவதிகளோடு இருக்கையில் சில சயயங்களில் அவர்களோடு விளையாடுவாள். இதனால் இவளுடைய பத்திக்கு அற்ப நஷ்டமும் வந்ததில்லை. ஏனெனில் இவள் இருதயத்தில் தெய்வ பத்தி வெகு ஆழமாய் வேரூன்றி இருந்தமையால் ரீயேத்தி வரியின் அலைகள் மத்தியில் வளருங் கற்பாறைகளுக்கு ஒப்பாய் இவள் அந்தஸ்தை முன்னிட்டு இவள் சகிக்க வேண்டியிருந்த வீண் சிலாக்கிய ஆடம்பரங்களிலும் இவள் பத்தி வளர்ந்துகொண்டே இருந்தது. காற்று முகத்துப் பெருந் தீதான் வேகமாய்ப் பற்றி எரியுமொழிய சொற்ப தீ காற்றுக்கு மறைக்காவிட்டால் அவிந்துபோம்.

35-ம் அதிகாரம்.

பெரிய காரியங்களில் எப்படியோ அப்படியே சின்ன காரியங்களிலும் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்பதின்பேரில்.

உந்நத கவியின் மணவாளன் தன் பத்தினியைக் குறித்து இவள் தன் நேத்திரங்களில் ஒன்றினாலுந் தன் கூந்தலில் ஒன்றினாலுந் தன் மனம் ஆநந்தக் களிப்பூறச் செய்தனளென்று சொல்லுகின்றான். ஆனாலோ மனுஷ சரீர அவயவ உறுப்புகளுக்குள் அழகு சௌந்தரியத்தினால் என்கிலுஞ் சுறுக்கினால் என்கிலுங் கண் விழியைப் பார்க்கிலுஞ் அதிக அதிசயத்துக்குரித்து ஒன்றுமில்லை. இத்தன்மையாகவே மனிதனுக்குத் தன் மயிரைப் பார்க்கிலும் இழிவானது ஒன்றுமில்லை. இதைப்பற்றித்தான் நமது ஆத்தும பத்தாவாகிய பரம கர்த்தர் பத்தியுள்ளவர்களது மேலான கிரிகைகளை மாத்திரமல்ல, இன்னம் அவர்கள் செய்யக்கூடுமான மகா சொற்ப காரியங்களையும் பிரியமாக ஏற்றுக்கொள்ளுகிறாரென்றும் இன்னம் இவர் பிரியப்படி இவரை நாம் சேவிப்பதற்கு மகத்தான விசேஷ காரியங்களில் எப்படியோ அப்படியே நிசிதமான அற்ப காரியங்களிலுங் கவனமாயிருக்க வேண்டுமென்றும் நமக்குக் கற்பிக்கத் திருவுளமானார். அதேதெனில் நாம் செய்யும் மேலான காரியங்களாலும் சொற்ப காரியங்களாலும் இவர் திருநேச இருதயம் பூரித்து மகிழும்படி செய்யலாம்.

ஆதலால் பிரிய சகோதரமே, நமதாண்டவரைப் பற்றி மகா கடின வருத்தங்களையும் இன்னம் வேத சாட்சிகளது வாதைகளையுந்தானே அநுபவிக்க பூஸ்

திப்பாயிருக்கக்கடவாய். இவருக்கு விருப்பமான தெல்லாஞ் சந்துஷ்டியாய் உன்னிடத்தில் எடுத்துக் கொள்ளும்படி உனக்குள்ள அருமையான விலையுயர்ந்த எல்லாவற்றையும் இவருக்குக் கொடுத்துவிட்டு எப்பொழுதும் பூரண மனப் பிரீதியாயிரு. தாய்தகப்பன் சகோதரன் புருஷன் பெண்சாதி பிள்ளைகள் தன் சீவியத்தையுந்தானே இவருக்கு ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிரு. ஏனெனில் இவ்விதப் பலிகளையெல்லாம் நல்ல மனதோடு பலியிட உன்னிருயம் எப்பொழுதும் முஸ்திப்பாயிருக்கவேண்டும். ஆனால் சர்வேசுரன் இப்பேர்க்கொத்த கடின சஞ்சல வருத்தங்களை அனுப்பி உனக்குக் கண்போலிருக்கும் பிரிமான காரியங்களை உன்னிடத்தில் கேட்காவிட்டாலும் உன் கூந்தலையென்கிலும் அதாவது, நாள்தோறும் உனக்கு வரக்கூடுமான நிந்தைகளையுஞ் சஞ்சல இடர்களையுஞ் சொற்ப நஷ்டங்களையும் மகா பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு இவைகளை அவருக்கு ஒப்புக்கொடுத்துவா. இப்படிக்கொத்த லேசான சமயங்களில் அவருக்கு நீ மிகுந்த சிநேக பட்சத்தைக் காட்டிவருவதால் அவர் பட்சமுழுதும் உன்பேரிலிருக்கும். இவ்வழியாய் அவர் இருதயமும் உன்னிருதயமும் ஒன்றாயிருக்கும்படி செய்வாய்.

நாள்தோறும் நாம் செய்யவேண்டிய சொற்ப கடமைகளையுந் தலை நோய் பல்நோய் சொற்ப காய்ச்சல் புருஷன் அல்லது பெண்சாதியின் விபரீதகுணம் புறத்தியாரால் வருஞ் சொற்ப வருத்த நஷ்டங்களையுங் காலை வேண்டிக்கொள்ளவென்கிலும் பூசை கண்டு நன்மை வாங்கவென்கிலுஞ் சற்று முந்தி எழுந்திருக்க வேண்டி இருக்கும்போது வரும் சொற்ப பிரயாசங்களையும் பத்திக்கடுத்த ஏதாகிலுஞ் சொற்ப முயற்சிகளை நாலுபேர் அறியச் செய்வதற்கு வரும் வெட்கத்தையும் இத்தன்மையயான பலவிதச் சொற்ப

துன்பங்களையுஞ் சுவாமியுடைய சிநேகத்தைப் பற்றி நல்ல மனதோடு அங்கிகரித்துக்கொள்ளுவோமேயாகில் இவைகள் அற்ப காரியங்களாயினுஞ் சுவாமிக்கு வெகு பிரியமாயிருக்கும். ஏனெனில் இவர் பேரால் கொடுத்த கொஞ்சந் தண்ணீருக்குஞ் சம்பாவனையாக மட்டற்ற செல்வ பாக்கியங்களைக் கொடுப்போமென்று வார்த்தைப்பாடு கொடுத்திருக்கின்றாரே. எச்சமயத்திலும் இவ்வித அற்ப இடையூறு இக்கட்டு வேண்டும் வேண்டாம் என்றாலும் வரத் தப்பாததால் இவைகளைத் தகுந்த விதமாய்ப் பிரயோகித்துக்கொள்ள நமக்குத் தெரியுமேயாகில் எவ்வளவோ ஞான நன்மைகளைச் சம்பாதித்துக்கொள்ளுவோம்.

அர்ச். சியேன் கத்தரீனம்மாள் சரித்திரத்தை வாசிக்கையில் இந்தம்மாள் அநுபவித்த சந்தோஷ பரவச ஞான மனோகரத்தையும் இவள் அருளிய மேலான ஞான வாக்கிய தீர்க்கதரிசனங்களையும் பார்க்கும்போது இந்தம்மாள் செபத்தியான ஏகாந்தத்தால் தனது பரலோக பத்தாவுக்கு வெகு பிரியமுள்ளவளாயிருந்தாளோவென்று சந்தேகப்பட இடமில்லை. ஆனால் இவள் தனது தகப்பனார் வீட்டில் சமையல் கூடத்தில் அடுப்புப் பற்றவைத்துக்கொண்டு தாழ்மையாய்ப் பல வேலைகளையும் நல்ல மனதுடன் சுவாமியுடைய நேச பட்சத்தைப்பற்றிப் பிரியமாய்ப் பார்த்துக்கொண்டே இவள் செய்துவந்த சொற்ப தியான முயற்சிகள் ஞான ஏகாந்தத்தில் இவள் அநுபவித்த ஞான சந்தோஷ பேரின்பங்களைப்பார்க்கிலும் அதிக பேறுள்ளவை எனத்தகும். இந்த அம்மளுக்கு இருந்த சிரவண தாழ்ச்சிக்குச் சம்பாவனையாகவே இப்பேர்க்கொத்த மேலான வரங்களைச் சர்வேசுரன் இவளுக்கு அளிக்கச் சித்தமானார். இவள் வீட்டிலுள்ள அற்பமான பல வேலைகளைச் செய்துகொ

ண்டே தியானம் பண்ணுவாள். தன் தகப்பனுருக்குச் சாப்பாடு முஸ்திப்புபண்ணும்போது மார்த்தம்மாளைப்போலே நமது இரக்ஷகருக்கிாகவே முஸ்திப்பு பண்ணுவதாக நினைத்துத் தன் தாயாரைப் பரிசுத்த கன்னிமரியாயைப்போலவுந் தன் சகோதரர்களை அப்போஸ்தலர்களைப் போலவும் பாவித்துக்கொள்வாள். இத்தன்மையாய் இவர்களுக்கு ஏதாகிலும் ஊழியம் பண்ணும்போதெல்லாம் மோக்ஷவாசிகளுக்கு ஊழியம் பண்ணுவதாக நினைத்துக்கொண்டிப்படிப்பட்ட சொற்ப வேலைகளைச் செய்வதுஞ் சுவாமி சித்தமானதால் மகா பிரியத்தோடு இவைகளைச் செய்துவருவாள். பிரிய சகோதரமே, நாம் செய்யுங் கிருத்தியங்கள் எவ்வளவு அற்பமாயினும் இதினுல் நாம் சர்வேசுரனைச் சேவித்துச் சங்கிக்கவேண்டுமென்கிற கருத்தோடு நமது கிருத்தியங்களையெல்லாஞ் செய்வது எவ்வளவு விசேஷமென்று அறியும்படியாகவே இதனைச் சொல்லிக் காட்டினேன்.

இதற்காக சலொமோனென்பவர் வெகுவாய்ப் புகழ்ந்த பராக்கிரமசாலியான ஸ்திரீயைக் கூடியவரையில் கண்டுபாவிக்கும்படி உனக்கு ஆலோசனை கொடுக்கிறேன். இவள் உதாரத்துவமாய் மகத்தான பெருங் காரியங்களைச் செய்துகொண்டே இராட்டினத்தைச் சுற்றிக்கொண்டு நூல் நூற்றுக்கொண்டிருப்பாள். இத்தன்மையாகவே நீயுஞ் செபத்தியானங்களில் கவனித்துத் தேவத்திரவிய அநுமானங்களைப் பத்தியோடு வென்று பிறருக்குத் தேவசிநேகத்தை மூட்டி எல்லோர் இருதயத்திலும் நல்லுணர்ச்சி ஏவுதல்களை வருவித்துக் கடைசியாய் உன்னந்தஸ்துப் பிரகாரம் மகத்தான பெருங்காரியங்களைச் செய்துவருவாய். ஆனுல் அதனேடு உன் நூல் இராட்டினத்தை மறந்துவிடாதே. சிலுவையினடியில் வளரும் விலைபெறுப் புஷ்பங்கள்போலிருக்கப்பட்ட தாழ்மை

யான சொற்ப புண்ணியங்களை அநுசரிக்க மறந்து போகாமல் ஏழைபரதேசிகளுக்கு உபகாரஞ் செய்து வியாதிஸ்தர்களைச் சந்தித்து வீட்டு அலுவல்களையெல்லாங் கவனமாய்ப் பாரமரித்து எச்சமயத்திலும் பத்திசுறுசுறுப்போடு வேலைசெய்துவருவாயேயாகில் வீண்காலம்போக்க இடமிராது. இந்த வேலைகளையெல்லாஞ் செய்துகொண்டே நான் இப்போது உனக்குச் சொல்லியதுபோல அர்ச். சியேன் கத்தரீனம்மாள் பாவனையாக அடுத்தடுத்து நல்லுணர்ச்சி நல்ல ஆலோசனைகளைச் செய்துவருவாய்.

சர்வேசுரனை உந்நத விதமாய்ச் சேவிப்பதற்கான தருணம் எப்பொழுதுங் கிடைப்பதில்லை. ஆனால் சொற்ப காரியங்களைக் கொண்டு நாள்தோறும் அவரைச் சேவிக்கலாம், சொற்ப காரியங்களில் பிரமாணிக்கமாய் இருப்பவனைப் பெரிய காரியங்களுக்குத் தலைவனாக வைப்பார்கள் என்று நமது இரட்சகர்தாமே சொல்லியிருக்கின்றார். ஆதலால் எது காரியத்தையுஞ் சர்வேசுரன் பேரால் செய்துவா. அப்போது நீ சாப்பட்டாலுங் குடித்தாலுந் தூங்கினாலும் விளையாடினாலுஞ் சமையல் செய்தாலும் எல்லாம் நேத்தியாய்ச் செய்வாய். இவ்விதக் காரியங்களையெல்லாம் நீ செய்து வருவது தேவ சித்தமாதலால் எது காரியத்தையும் அவரைப்பற்றிச் செய்வாயேயாகில் இந்தச் சொற்ப காரியங்களைச் செய்துகொண்டே சுவாமிக்கு முன்பாக வெகு பேறுபலனை அடைவாய்.

36-ம் அதிகாரம்.

நீதி நியாயத்துக்கொத்த புத்தியுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதின்பேரில்.

ஞானத்தால் மாத்திரமே நாம் மனிதர்களாய் இருக்கிறோம். ஆயினும் நியாயத்தைப் பின்பற்றி ஒழுகும் மெய்ஞ்ஞானமுள்ள மனிதர்களைக் காண்பது எவ்வளவோ அரிது. சுய பட்சத்தால் ஏறக்குறைய எப்பொழுதும் நமது புத்தி கலங்கிப்போகிறது. இதனால்தான் உக்தக் கவியில் சொல்லியிருக்குமாப்போல் குள்ள நரிகளுக்கு வெகுவாய் ஒத்திருக்கப்பட்ட கன ஆபத்துக்குரிய அற்ப அநியாயங்களைப் பலவிதமாய்க் கட்டிக்கொள்ளும்படி நேரிடுகிறது; ஏனெனில் இந்தக் குள்ள நரிகள் சிறியவையானதால் அவைகள்மட்டில் அவ்வளவு எச்சரிக்கையாயிருப்பதில்லை. ஆனால் இவைகள் கூட்டம் பலமானதால் திராக்ஷ தோட்டங்களையெல்லாம் பாழாக்கி வெகு தின்மை வருவிக்கும்.

பிரிய சகோதரமே, இப்போது நான் உனக்குச் சொல்லிக்காட்டப்போகும் விஷயங்களெல்லாம் அவ்வளவுக்கும் புத்திக்கொவ்வாத அநியாயமாக இருக்கிறதோ இல்லையோவென்று நீயே நிதானித்துத் தீர்மானித்துக்கொள்ளுவாய். புறத்தியார் செய்யும் இலேசான சொற்பகாரியங்களில் பிழைபிடித்து அவர்கள்பேரில் குற்றஞ்சாட்டிப் பேசுகிறோம். ஆனால் நம்மிடத்திலிருக்கும் மகா பெரிய குற்றங் குறைகளைப் பார்க்கிறதுமில்லை, பார்த்தாலும் அதைக்குறித்துக் குற்றமற்றவிதமாய்ப் பேசத் தேடுகிறோம். நம

க்குச் சொந்தமான பொருளை உயர்ந்த விலைக்கு விற்
றுப் பிறர் பொருளைச் சொற்ப விலைக்கு வாங்க ஆசிக்
கிறோம். புறத்தியார் ஏதாகிலுங் குற்றஞ் செய்வார்
களோ அவர்களை வேண்டியபடி தெண்டிக்கவேண்டு
மென்கிறோம். நமதுமட்டிலேயோ எல்லோரும்
வெகு தயை தாட்சணியமாயிருக்க விரும்புகி
றோம். நாம் சொல்லும் வார்த்தைகளையெல்லாம்
எப்பொழுதும் நல்ல கருத்தில் அர்த்தம் பண்ண
வேண்டுமென்கிறோம். பிறருடைய வார்த்தைகள்
நமது செவிக்கு என்னமோ வெகு கடினமாய்த் தோ
ன்றுவதால் நமது காது கூச்சுகிறது. புறத்தியான்
தனக்குள்ள பொருளை விலைக்குக் கொடுத்துவிட்
டால் நல்லதென்கிறோம். ஆனால் ஒருவனுக்குச்
சொந்தமானதை அவனே வைத்துக்கொண்டு நமது
பணம் நம்மிடத்திலேயே இருப்பது நீதியல்லவா.
புறத்தியான் நமக்கு ஒத்துப்போகாவிட்டால் அவன்
பேரில் வருத்தப்படுகிறோம். ஆனால் நாமே அவ
னுக்கு இடஞ்சலாயிருக்கிறோம் என்று அவன்
முறையிட நியாயமில்லையோ?

நமக்கு ஒரு காரியம் பிரியப்படுமோ மற்றதெல்
லாம் இழிவாய்ப் பார்த்து நமது பியத்துக்கு ஒத்து
வராததெல்லாவற்றையுங் குறித்து விகற்பமாய்ப்
பேசுகிறோம். நமக்குச் சிறியவர்களானவர்களில் ஒரு
வன் நமக்குப் பிரியப்படாவிட்டால் அல்லது அவன்
பேரில் ஒருவிசை ஏதாவது அருவருப்புக்கு இடங்
கொடுத்துவிட்டால் அவன் என்னென்ன செய்வானோ
அதெல்லாம் நமக்குத் தின்மையாகக் காணப்படுவதால்
அவனுக்கு எதுவிஷயத்திலும் வருத்தம் வருவித்து
எப்பொழுதும் அவனோடு சடுத்தமாயிருக்கிறோம்.
இதற்கு விரோதமாய் வேறொருவன் எதுமுகாந்தரத்
தை முன்னிட்டாகிலும் நமக்குப் பிரியப்படுவானே

யாகில் அவன் செய்வதெல்லாங் குற்றமற்றவித மாய்ப் பார்த்துப் பேசுவாம்.

சிறுபிள்ளைகளில் சிலர் மெத்த நல்ல குணமுள்ளவர்களாயிருப்பார்கள். ஆனால் இவர்கள் கொஞ்சம் அங்கப்பழுதுள்ளவர்களாயிருப்பதால் இவர்கள் தந்தை தாய்களே இவர்களைப் பிரியமாய்ப் பார்க்கமாட்டார்கள். ஆனால் வேறே பிள்ளைகள் எவ்வளவு துர்க்குணமுள்ளவர்களாயினும் இவர்கள் முகங் கொஞ்ச நேத்தியாயிருப்பதால் வெகு செல்லப்பிள்ளைகளாயிருப்பார்கள். ஆஸ்திக்காரர் அவ்வளவு வங்கிஷபதிகளாகவும் புண்ணியவான்களாகவும் இராவிட்டாலும் எத்துகாரியத்திலும் இவர்களை எளியவர்களுக்கு மேலாய்த் தெரிந்துகொள்ளுகிறோம். இன்னம் பலமுறை ஒருவன் நன்றாய் உடுத்திக்கொண்டிருந்தால் போதும். இவனை மற்றவர்களுக்கு மேலாய் வைக்கிறோம். நமக்கு வரவேண்டிய சுதந்தரப்படி எல்லாம் நடக்கும்படி வெகு கண்டிப்பாயிருக்கிறோம். ஆனால் புறத்தியார் தங்கள் சுதந்தரப்படி கேட்பார்களோ நமக்கு இலவலேசமும் பிரியமிரா. நமது மகிமை சுதந்தரத்தை விட்டுவிடாதபடிக்கு வெகு வீண்தர்க்கமாடுகிறோம். ஆயினும் மற்றவர்களெல்லோருந் தாழ்ச்சியாய் இணங்கிப்போக வேண்டுமென்கிறோம். பிறனைக்குறித்து மனதுக்கு வந்தபடி முறைப்பாடுகிறோம். ஆனால் நமதுபேரில் எவனும் முறையிட நமக்கு எவ்வளவும் பிரியமில்லை. நாம் புறத்தியாருக்காக எதாகிலுஞ் செய்வோமானால் அதனை வெகு கனமா யெண்ணுகிறோம். ஆனால் நமக்குப் பிறர் செய்யும் உபகார சகாயமெல்லாவற்றையும் ஒன்றுமில்லையென்கிறோம்.

கடைசியாய்ச் சின்ன ஆசியாவில் ஓர் தேசத்திலிருக்கும் கவுதாரிகளுக்கு ஒத்தவர்களாயிருக்கிறோம். இவைகளுக்கு இரண்டு இருதயமுண்டாம். இத்தன்

மையாகவே நமக்கும் இரண்டு இருதயம் உண்டென த்தகும். ஒன்று நமதுமீது வெகு பொறுமை தயை தாக்ஷிண்ணியமுள்ளதாம். மற்றொன்று பிறர்பேரில் வெகு கொடுமை கண்டிப்புள்ளதாம். நம்மிடத்தில் இரண்டுவித அளவு நிறையுண்டு. ஒன்றைக்கொண்டு நமக்குச் சம்மந்தமான காரியங்களையெல்லாம் எவ்வளவுக்கு அநுகூலமாய் நிறுக்கக்கூடுமோ அவ்வளவுக்கு அநுகூலமாய் நிறுக்கிறோம். ஆனால் வேறோர் அளவைக்கொண்டு எவ்வளவு நஷ்டமாய் நிறுக்கக் கூடுமோ அவ்வளவு நஷ்டமாய்ப் பிறருக்குச் சம்மந்தமான காரியங்களை நிறுக்கிறோம். ஆனால் வேதப் புத்தகத்தில் சொல்லியிருக்குமாப்போல் இப்படி வித்தியாசமான இரண்டு இருதயங்களையும் இரண்டு இடைகளையுங் கொண்டிருப்பது சர்வேசுரனுக்கு ஏற்காது.

பிரிய சகோதரமே, நீ செய்வதெல்லாம் நீதியோடும் பாரபக்ஷம் பாராமலுஞ் செய்யக்கடவாய். எப்பொழுதும் உன் புறத்தியானிடமாக நீ இருப்பதாகவும் உன்னிடமாகப் புறத்தியான் இருப்பதாகவும் நினைத்து எதுகாரியத்தையுஞ் செய்வாயேயாகில் உன் தீர்மானஞ் சரியானதாயிருக்கும். நீ ஏதாகிலும் ஒரு காரியத்தை வாங்கும்போது நீயே விற்கிறதாக நினைத்துக்கொள். நீ விற்கும்போதோ வாங்குகிறாயென்று நினைத்துக்கொள். இத்தன்மையாய் நீதிப்பிரகாரம் விற்பாய், நீதிப்பிரகாரம் வாங்குவாய்.

இவ்வித அநியாயங்கள் சொற்பமாயிருப்பதாலும் நமக்குச் சனுவான விஷயங்களில் நீதியை அநுசரித்துக்கொண்டே பிறர் விஷயத்தில் கண்டிப்பாயிருக்கிறோமென்கிற உத்தேசத்தில் இப்படிப்பட்ட அற்ப அநியாயங்களுக்குப் பரிகாரம் பண்ண எப்பொழுதுங் கட்னில்லை. ஆயினும் இவ்விதமாய்ச் செய்வது ஞானத்துக்கும் பிறசிநேகத்துக்கும் ஒவ்வாத பெருங்

குறையாதலாலும் இப்படி செய்வதில் ஏறக்குறைய எப்பொழுதும் மோசம் அடங்கியிருப்பதாலும் இப் பேர்க்கொத்த அநியாயங்களைக் கட்டிக்கொள்ளும் வழக்கத்தை விட்டுவிடவென்கிலும் ஓர்விதக் கடமையுண்டு. இதன்றியும் உதாரத்துவமாய் மேன்பாடாய் நாலுபேருக்கும் நாணயமாய் நீதி நியாயத்தோடுங் கபடற்ற மனதோடும் நடப்பதால் நமக்கு ஏதிலும் நஷ்டம் வரா. ஆதலால் பிரிய சகோதரமே, புறத்தியாரிடமாய் நீ இருக்கும்போது இவர்கள் உன்மட்டில் எப்படி நடந்துகொள்ள வேணுமென்று நீ ஆசிப்பாயோ அப்படியே நீயும் பிறர்மட்டில் இருக்கிறாயோவென்று அடிக்கடி ஆராய்ந்து பார்க்க மறந்துபோகாதே. ஏனெனில் இதில்தான் கிரமமான மெய்ஞ்ஞானம் அடங்கியிருக்கிறது. திராழான் என்னும் அரசனை ஒரு நாள் இவனிஷ்டர்கள் பார்த்து இவன் தன் பிரசைகளை நாடினவனாயிருப்பது இராசமேட்டிமைக்கு ஏற்காத குற்றமாக இவனுக்குச் சொல்லிக்காட்டியபோது இவன் இவர்களுக்கு மறு உத்தாரமாக என் பிரசைகளுக்காக நான் அரசனாயிருக்க வேண்டியவனல்லோ. நானே ஒரு குடியானவனாயிருந்தால் அரசன் என்மட்டில் எவ்விதம் நடந்துகொள்ள ஆசிப்பேனோ அவ்விதமே நானும் என் பிரசைகளின் மட்டில் நடந்துகொள்ள வேண்டியதல்லவோ என்றான்.

37-ம் அதிகாரம்.

பலவித ஆசைகளைக் குறித்து.

தகாத காரியங்களை இச்சிக்கக் கூடாதென்பது எவனும் அறிந்த விஷயம். ஏனெனில் தகாத இச்சை கொள்ளுவதே தப்பிதம். ஆனால் பிரிய சகோதரமே, நான் உனக்கு அதிகமாய்ச் சொல்வதென்னவெனில் உன் ஆத்துமத்துக்கு ஆபத்தாய் இருக்கக்கூடுமான கூத்து விளையாட்டு முதலிய வீண் சந்தோஷங்களையும் மகிமை பெருமை முதலிய மேலான பட்டங்களையும் பரவச காட்சிகளையும் ஆசியாதே. ஏனெனில் இது காரியங்களிலெல்லாம் வெகு ஆபத்து வீண்சிலாக்கியம் மோசமுண்டு. இப்போது சம்பவியாத தூலயிட்ட காரியங்களையும் ஆசியாதே. ஏனெனில் இதனால் பலபேருக்கு வருவதுபோல் உன்னிருதயத்தில் வீண் பராக்குப் பெருங் கவலை சஞ்சலங்கள் மாத்திரம் வருவதற்கு வழியாம். ஒருவாலன் வேண்டியபிராயத்துக்கு முந்திப் பெரிய அலுவலிலிருக்க ஆசித்தால் இவன் ஆசை என்னத்துக்குதவும். மணம்புரிந்துகொண்டிருக்கும் பெண்பிள்ளை கன்னியாஸ்திரீயாயிருக்க ஆசிப்பதால் என்ன லாபம்.

புறத்தியானுக்குத் தன் தோட்டத்தையென்கிலும் வீட்டையென்கிலும் விற்கவேணுமென்கிற கருத்து வருவதற்குமுந்தி இவைகளை நான் வாங்க ஆசித்தால் என் காலத்தை வீணான ஆசையிலல்லோ கழிக்க வேண்டும். நான் வியாதியாயிருந்துகொண்டு பிரசங்கம்பண்ணவும் பூசைசெய்யவும் வியாதிக்காரர்களைச் சந்திக்கவுங் கடைசியாய்ச் சவுக்கியமாயிருப்பவர்கள் என்னென்ன செய்வார்களோ அவைகளையெல்லாம்

நான் செய்ய ஆசித்தால் இவைகளில் ஒன்றையுஞ் செய்ய எனக்குத் திராணியில்லாமலிருக்க என் ஆசைகளெல்லாம் விழலானவைகளாயல்லோ இருக்கும். ஆயினும் இந்த வீணை ஆசைகளுக்கு இடங்கொடுப்பதற்குப் பதிலாய் வியாதியில் சுவாமி சித்தத்துக்கு அமைந்து கீழ்ப்படிதலாயிருக்கவும் வியாதியைப் பொறுமையாய்ச் சகிக்கவும் சோக்காடு விருத்தங்களில் அமரிக்கையாயிருக்கவுங் கடைசியாய் நானிருக்கும் அந்தஸ்தில் ஏதேது செய்யச் சுவாமிக்குச் சித்தமோ அவைகளையெல்லாஞ் செய்ய வேண்டுமென்கிற ஆசை விருப்பட்டென்மேலும் வளரப்பார்ப்பதும் எவ்வளவோ உபயோகமாயிருக்கும். பலமுறை நமது ஆசைகள் கெர்ப்பஸ்திரீகள் ஆசைக்கு ஒத்தவை. இவர்கள் மாரிகாலத்தில் கிடையாத கனிகளை மாரிகாலத்திலுங் கோடைகாலத்தில் கிடையாத கனிகளைக் கோடைகாலத்திலுங் கேட்பார்கள்.

ஒரு அந்தஸ்தில் உட்பட்டவன் தன் அந்தஸ்துக்குச் சம்பந்தப்படாத வேறேவிதச் சீவியத்தையென்கிலுந் தற்காலந் தானிருக்கும் அந்தஸ்தோடு பரிச்சேதம்பொருந்தாத கிருத்தியங்களையாகிலுஞ் செய்ய ஆசிப்பது எவ்வளவும் அங்கீகரிக்கத்தக்கதல்ல. ஏனெனில் இதனால் இருதயத்தில் வீண் பராக்கு உண்டாவதால் கடமையாய்ச் செய்யவேண்டியவைகளை வேண்டியபடி செய்யாதபடிக்கு நேரிடும். கார்த்தூசியன் சந்நியாசிகளைப்போல் நான் வனவாசியாயிருக்க ஆசித்தால் என் காலம் வீண் ஆசையிற்போம். ஏனெனில் என் அந்தஸ்துக்கடுத்த அலுவலைப் பிரியமாய்ப் பார்ப்பதற்குப்பதிலாய்ப் பிரயோசனமற்ற வீணாசையால் அலைக்கழிக்கப்படுவேன். இன்னமும் எனக்கிருக்கும் புத்தி விவேகக் கூர்மையைப்பார்க்கிலும் அதிக நேத்தியான புத்தியையும் ஆசிக்கமாட்டேன். ஏனெனில் இந்த ஆசைகளெல்

லாம் விழலானவை. அவனவனுக்குமுள்ள புத்தியைப் பயிற்சிபண்ண வேண்டுமென்று அவனவனுக்கும் இருக்கவேண்டிய ஆசைக்குப் பதிலாய் வீணாசைக்கு இடங்கொடுக்க வேண்டியிருக்கிறது. கடைசியாய் நமது சத்துவத்தில் அடங்கியபடி ப்ரமாணிக்கமாய்ச் சர்வேசுரனைச் சேவிப்பதற்குப் பதிலாய் நமது வல்லமையிலடங்காத வேறே இன்னின்ன விதமாய்ச் சுவாமியைச் சேவித்துத் தொழ ஆசிப்பது தகாது. இவ்வாறு இருதயத்தை அலைக்கழித்துத் தொந்தரவுபடுத்தும் வீணாசைகளைக்குறித்தே இவ்விடத்தில் சொல்லப்படுகிறதன்றி வேறல்ல. ஏனெனில் ஓரோர் சமயத்தில் ஏதாகிலும் வெறும் ஆசைக்கு இடங்கொடுப்பதால் வரும் நஷ்டம் ஒன்றுமில்லை.

நாடோறும் உனக்கு வரும் சொற்ப சிலுவைகளை வேண்டியபடி பொறுமையாய்ச் சுமக்க நீ கற்றுக்கொள்ளும்வரையில் வேறே பெரிய சிலுவைகளை ஆசியாதே. ஏனெனில் அற்ப நிந்தனையைச் சகிக்கச் சத்துவமிராதபோது வேதசாக்ஷியாய்ப் பிராணனைக் கொடுக்கவேண்டுமென்று ஆசிப்பது பெருந் தப்பறையல்லோ. நமது அந்தஸ்துக்குச் சம்பந்தப்பட்ட கடமைகள் எவ்வளவு சொற்பமாயினும் இவைகளை நிறைவேற்றுவதால் நாம் வெகு பேறுபலன்களை அடையக் கூடுமாயிருப்பதால் நமது சொந்தக் கடமைகளின்மட்டில் நாம் பிரியம் வைக்காதபடிக்கு ஒரு நாளும் நமக்குக் கிடைக்கக்கூடாத பல காரியங்களின்பேரில் வீண பலத்த ஆசையைப் பலமுறை நமக்கு பசாசு வருவிக்கிறதுண்டு. பல சமயத்தில் உத்தேசத்தால் பெரும் பூதங்களை முதலாய்ச் செயித்துவெல்லுகிறோம். ஆனால் கவனக்குறைச்சலால் நாம் நடக்கும் வழியிலிருக்குஞ் சிறு பாம்புகளைப் பாராததால் இவைகள் நம்மைக் கடித்துப் பிராணச் சேதப்படுத்துகின்றன.

தந்திர சோதனைகளையும் ஆசியாதே. இப்படி ஆசிப்பது அவிவேகமாம். ஆனால் தைரியமாய் அவைகளுக்குக் காத்துக்கொண்டிருந்து மெய்யாகவே அவைகள் வரும்போது அவைகளை வெல்லுவதற்கு உன்னிருதயத்தை வேண்டியபடி பழக்கிவைத்துக் கொள்.

பலவித இறைச்சியை விசேஷமாய்க் கொஞ்சம் மிஞ்சிச் சாப்பட்டால் சுளுவாய்ச் சீரணமாகாதது மன்றிப் பலவீனமானவர்களுக்குத் தின்மையாயிருக்கும். பல இச்சைகளால் உன்னாத்துமதீனை நிரப்பாதே, இலௌகீக ஆசைகள் முழுதும் உன்னைக் கெடுத்துவிடும். பல ஞான ஆசைகளுக்கு இடங்கொடுப்பாயேயாகில் உனக்கு வெகு தொந்தரை சங்கடமுண்டாம். நமது ஆத்துமம் ஒருவிசை சுத்தமாய்ப் பாவத்தை விட்டு நீங்கியிருக்கையில் அதில் முன் இருந்திருக்கக்கூடுமான தகாத நாட்டங்களெல்லாம் அகன்றுபோயிருப்பதால் ஆத்துமமானது ஞானகாரியங்களை வெகுவாய் ஆசித்து வெகு பசிகொண்டாற்போல் பலவித தவ ஒறுத்தல் தாழ்ச்சி பிறசிநேகஞ் செபத்தியானம் முதலிய பத்திக்கடுத்த கிருத்தியங்களைச் செய்ய அதற்கு வெகு ஆசையுண்டாகும். இவ்வித ஆசை வருவது நல்ல அடையாளந்தான். ஆனால் நீ பொசிக்க ஆசிக்கும் பண்டமெல்லாம் உனக்குச் சுளுவாய்ச் சீரணமாகத் தக்கதோ அல்லவோ வென்று பார்க்கவேண்டும். ஆதலால் உனக்கு வரும் பல ஆசைகளில் உன் அந்தஸ்துக்கு ஏற்றபடி நீ உடனே அநுசரிக்கக்கூடுமானவை எவையென்று பார்த்து உன்னாத்தும குருவானவர் ஆலோசனையின்படி அவைகளை அனுசரிக்கப் பிரயாசப்படுவாய். ஒருவிசை இந்த ஆசைகளுக்கொப்ப நீ நடந்தபின் இன்னம் வேறே ஆசைகளைச் சர்வேசுரன் உனக்கு அனுப்புவார். காலத்தோடு அவைகளையும் நீ நிறைவேற்

றலாம். இத்தன்மையாய் விழலான ஆசைகளில் உன் காலத்தை வீணுய்ப் போக்கமாட்டாய். ஆனல் பல நல்ல ஆசைகள் நமக்கு வரும்போது அவைகளை உடனே தள்ளிவிட வேண்டுமென்று சொல்வதில்லை. இதுவிஷயத்தில் கிரமத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதேயாம். தற்காலம் நாம் நிறைவேற்றக் கூடாத ஆசை நாட்டங்களை அதற்கான காலம் வருமவரையில் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு தற்காலம் நமக்கு ஏற்றதுஞ் சமயத்துக்கு உதவுகிறதுமான ஆசைகளை முடிக்கத் தேடவேண்டும். இப்போது சொல்லிய கிரம ஒழுங்கெல்லாம் ஞான ஆசைகளைக் குறித்துமாத்திரமல்ல இன்னம் இலௌகீக ஆசைகளைக்குறித்துஞ் சொல்லப்பட்டது. இவ்வாறு நடவாவிட்டால் கலக்க ஏக்கத்தோடுமாத்திரஞ் சீவிப்போம்,

38-ம் அதிகாரம்.

இல்லறத்தோருக்கான புத்திமதிகள்

மெய்விவாகம் பெரிய தேவதிரவிய அநுமானமாம். சேசுகிறீஸ்துநாதரைப்பற்றியுந் திருச்சபையைப்பற்றியும் அது முக்கியமானது. எல்லோருக்கும் எல்லோரிடத்திலும் எல்லாத்திலும் அது சங்கைக்குரியது. எல்லோருக்குஞ் சங்கைக்குரியதென்றேன். ஏனெனில் கன்னியர்களும் இதனைத் தாழ்ச்சியோடு சங்கிக்கவேண்டியிருக்கிறது. எல்லோரிடத்திலும் அது சங்கைக்குரியதென்றேன், ஏனெனில் திரவிய சம்பன்னரிடத்திலும்எளியவர்களிடத்திலும் இது சரி

யாய் அர்ச்சிக்கப்பட்டதாம். எல்லாத்திலுஞ் சங்கைக்குரியதென்றேன். ஏனெனில் இதன் ஆதியும் அந்தமும் நலமும் சகலமும் அர்ச்சிக்கப்பட்டவை. இது கிறீஸ்துவேதத்திற்கு வித்தெனத்தகும். இதனால்தான் உலகெங்கும் விசுவாசிகள் பரம்புகிறார்கள். இவர்களோ சர்வேசுரனால் மோட்சத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கணக்கைச் சம்பூரணமாக்கவேண்டியவர்கள். எத்தேசமும் எவ்விராச்சியமும் நீளித்தோங்கி வாழக் கிரமமான மெய்விவாக நலமானது மிகவும் அவசரம்.

கானா நகரில் நடந்த கலியாணத்துக்குச் சேசுகிறீஸ்துநாதர் வரவழைக்கப்பட்டு அதை ஆசீர்வதித்ததுபோல் இக்காலத்தில் நடக்குங் கலியாணங்களிலும் இவரிருந்து இவைகளை ஆசீர்வதிப்பாரோயாகில் இந்தக் கலியாணங்களில் தேவ ஆசீர்வாத சமாதான ஆறுதலென்னும் இரசம் ஒரு நாளுங் குறைவுபடா. பலமுறை இக்கலியாண ஆரம்பத்தில் தேவ ஆசீர்வாதமென்னும் இரசங் குறைவுபடுகிறதற்கு மூகாந்தரம் என்னவெனில் இக்கலியாணங்களில் சேசுகிறீஸ்துநாதரையும் அவர் திருத்தாயாரையும் முந்தி அழைப்பதற்குப் பதிலாய் நல்லநாள் கெட்டநாள் கேட்டு அஞ்ஞான தேவர்களை வருந்தி அழைப்பதுபோல் இவர்களுக்குரிய வீண் சிலாக்கிய ஆடம்பரங்களைத் தேடுவதினால்தான். இயாக்கோப்பு என்பவர் பலவித நிறமுள்ள கிளைகளைத் தண்ணீர் குடிக்கவரும் ஆட்டுக்குட்டிகளுக்குக் காண்பித்து அழகான பலவித நிறமுள்ள செம்மறிப்புருவைகள் உண்டாகும்படி செய்ததுபோலத் தங்கள் கலியாணத்தின்மீது தேவ ஆசீர்வாதம் இறங்கி நல்ல அநுகூல புத்திர சந்தானம் வேண்டுமென்று ஆசிப்பவர்கள் மெய்விவாகதேவத்திரவிய அநுமானத்தின் மேன்மைப் பரிசுத்தத்தனத்தைத் தங்கள் கண்முன்னே கலியாண

த்தில் வைத்திருக்கக்கடவார்கள். ஆனால் இக்கால த்தில் இதை நினைப்போரில்லை. இதற்கு விரோதமாய்க் கலியாணங்களில் அநேகம் அலங்கோலை சரச பரியாசை விளையாட்டு வீண் காலப்போக்கு விருந்துகளுமாயிருப்பதால் கலியாணத்தினால் வரவேண்டிய மெய்யான நன்மை அநுகூலம் வராமல் இந்தக் கலியாணங்கள் பிரதிகூலமாவது அதிசயமல்ல.

புருஷன் பெண்சாதிகள் மூந்த மூந்த வேதாகமத்தில் வெகுவாய் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் கற்பிக்கும் அந்நியோந்நிய நேசமாயிருக்கக் கற்றுக்கொள்ளக்கடவார்கள். புருஷன் பெண்சாதிகள் ஒருவரொருவரைச் சுபாவமான நேசங் கொண்டு நேசிக்க வேண்டுமென்று சொல்லுவது போதாது. ஏனெனில் புருக்களுக்கும் இப்படிப்பட்ட நேசம் உண்டு. இன்னும் மனுஷீக நேசம்வைத்து ஒருவரொருவரை நேசியுங்களென்பதும் போதாது. ஏனெனில் இவ்வித நேசம் அஞ்ஞானிகளுக்குள்ளும் உண்டு. ஆனால் அப்போஸ்தலர் அர்ச். சின்னப்பர் சொல்வதென்னவென்றால் புருஷர்களே சேசுகிறீஸ்துநாதர் தமது திருச்சபையை நேசிக்கிறதுபோல் உங்கள் பெண்சாதிகளை நேசியுங்கள். பெண்சாதிகளே திருச்சபை தன் இரட்சகரை நேசிக்கிறதுபோல் உங்கள் புருஷரை நேசியுங்கள் என்கிறார். சுவாமிதான் ஏவாளை தமது ஆதித்தகப்பனிடத்தில் கூட்டி வந்து அவனுக்கு இவளை மனைவியாகக் கொடுத்தார். புருஷன் பெண்சாதிகளே சர்வேசுரன்றாமே உங்கள் கலியாணத்தின் பரிசுத்த விலங்கைத் தமது திருக்கரத்தால் பூட்டினார். அவர்தான் உங்களை ஒருவரொருவருக்குத் தத்தஞ்செய்தார், ஆதலால் முழுதும் பூசிதமும் பரிசுத்தமுந் திவ்வியமுமான நேசங்கொண்டு ஒருவரொருவரைச் சிநேகியாமலிருப்பதென்னே?

இந்தநேசத்தின் முதற் சத்தி என்னவெனில் இவ் வித சிநேகமுள்ள புருஷன் பெண்சாதிகள் இணை பிரியா மன ஒருமிப்புள்ளவர்களாயிருப்பார்கள். சில சாதி மரத்துண்டுகளை முதற்றரமான வச்சிரத் தால் இணைத்தபின் அவைகளை மறுபடியும் பெயர்க்க வேண்டுமாகில் வேறுபக்கத்தில் பிளந்தாலும் பிளந்துபோகுமேயல்லாமல் இணைத்தவிடத்தில் பிளவாது. ஆனால் சர்வேசுரன் எவ்வளவு பலமாய்ப் புருஷன் பெண்சாதிகளைச் சேர்த்திருக்கிறாரென்றால் இவர்கள் ஒருவரொருவரது சரீரத்தினின்று ஆத்துமம் பிரிந்தாலும் பிரியாமேயல்லாமல் பெண்சாதியைவிட்டுப் புருஷன் பிரிவது கூடுமானதல்ல. இந்த ஒருமிப்பு சரீரத்தினால் மாத்திரம் விசேஷமாய் ஆகாமல் இருதய நேச பட்ச சம்பந்தத்தினாலும் உண்டாகிறது.

இந்த நேசத்தின் இரண்டாஞ் சத்தி புருஷன் பெண்சாதிகளது மறுக்கப்படாப் பிரமாணிக்கமாம். திருச்சபை சாட்சியாயிருக்கப் புருஷன் பெண்சாதிகள் ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளும் வார்த்தைப்பாடு சடங்கு இந்தச் சத்தியத்தையே கற்பிக்கிறது. இதினால் புருஷன் தான் சுவாமிபேரால் தெரிந்துகொண்ட பெண்சாதி சீவிக்குமளவும் இவனிருதயத்தில் வேறே பெண்பிள்ளை பேரும் பட்சமும் பிரவேசிக்கக்கூடாதென்றும் பெண்சாதியுந் தனக்குச் சுவாமியால் கொடுக்கப்பட்ட புருஷன் சீவிக்குந்தனையும் வேறு புருஷர்மட்டில் பிரியம் வைக்கப்போகாதென்றுங் கற்பிக்கிறது.

மெய்விவாகத்தின் மூன்றும் பலன், கிரமமான புத்திரசந்தானமும் இவர்கள் சுவரட்சணைப் பராமரிப்புமாம். இது புருஷன் பெண்சாதிகளுக்கு வெகு மகிமையென வேண்டும். ஏனெனில் நித்தியமாய்ச் சர்வேசுரன் தம்மை எப்போதும் ஸ்துதித்துக் கொண

டாடச் சிஷ்டிக்கும் ஆத்துமங்களின் இருப்பிடமான சரீர உற்பத்திக்கு இவர்களையும் பங்காளிகளாய்ச் சுவாமி வைத்துக்கொள்ளுவது இவர்களுக்குக் கனமகிமையல்லவோ.

ஆதலால் புருஷரோ உங்கள் பெண்சாதிகளின்மட்டில் உங்களுக்கு எப்பொழுதும் உருக்கமான நேசபட்சமிருக்கட்டும். இதைப்பற்றியே புருஷன் தன் பெண்சாதியை உருக்கமான நேசங்கொண்டு சிநேகிக்கவேண்டுமென்கிற அடையாளமாக ஆதிமனிதனது இருதயத்துக்கு அருகிலிருந்த விலாப்பக்கத்திநின்று ஸ்திரீயானவள் சிஷ்டிக்கப்பட்டாள். உங்கள் பெண்சாதிகள் சரீரத்துக்காகிலும் புத்திக்காகிலும் இருக்கக்கூடுமான பலவீன குற்றங் குறைகளைப்பற்றி அவர்கள்மீது அற்ப வெறுப்பும் உங்களுக்கு வரலாகாது. இதற்கு விரோதமாய் இவர்கள் மட்டில் நீங்கள் மிகுந்த சிநேக தயை தாட்சணியபட்சமாயிருக்கவேண்டும். ஏனெனில் சுவாமி இவர்களை எவ்விதமாகச் சிஷ்டித்திருக்கின்றாரெனில் உங்கள்மட்டில் இவர்கள் அதிக மேரை மரியாதையுள்ளவர்களாயிருக்கும்படி முழுதும் உங்களுக்கு இவர்கள் உட்பட்டவர்களாகவும் இவ்வகையாய் இவர்களுக்கு நீங்கள் தலைவர்களாயிருந்தபோதிலும் இவர்கள் உங்களுக்கு இணைபிரியாக் கூட்டாளிகளாயிருக்கும்படியாகவும் இவர்களைச் சிஷ்டித்திருக்கின்றார். நீங்களும் பெண்சாதிகளே, சுவாமி உங்களுக்குக் கொடுத்த புருஷரை உருக்க நேசமாய்ச் சிநேகித்து அவர்கள்மட்டில் சங்கை மரியாதையுள்ளவர்களாயிருங்கள், ஏனெனில் சுவாமி இதற்காகவே இவர்களைத் தைரியசாலிகளாகவும் மேன்பாடுள்ளவர்களாகவும் படைத்து ஸ்திரீயானவள் மனிதனுக்கு ஐக்கியப்பட்டவளாகவும் அவனுடைய எலும்புக

ளில் ஒன்ருகவும் அவனுடைய சதையின் சதையா கவும் இருக்கும்படி சித்தமானுர்.

பெண்சாதி தன் புருஷனது ஆளுகை அதிகாரத் துக்குள் இருக்கவேண்டுமென்று அவள் அறியும் படி இவனுடைய விலாப்பக்கத்தின் எலும்புகளில் ஒன்ருல் உண்டுபண்ணப்பட்டாள். வேதாகமமெல் லாம் விசேஷமாய் இந்தக் கீழ்ப்படிதலே உங்களுக் குக் கற்பிக்கிறது. இப்படி நீங்கள் உங்கள் புருஷர்க ளுக்குக் கட்டாயத்தாலல்ல ஆனுல் நேச பற்றுத லால் அமைந்திருக்க வேண்டுமென்றும் உங்கள் புரு ஷர்களும் உங்களை வெகு நேச உருக்கத்தோடு நடப் பிக்கவேண்டுமென்றும் இவர்களுக்கு மேற்சொல் லிய வேதாகமமே கட்டளையிடுவதால் உங்கள் புருஷர் களுக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருப்பது உங்களுக்குப் பிரயாசையாயிராமல் மதுரமாயிருக்கவேண்டியதல் லவோ. புருஷர்களே உங்கள் பெண்சாதிகளை வெகு மேரை மரியாதையோடு நுட்பமான பண்டம் போ லப் பாவித்து அவர்களை மரியாதையாய் நடத்துங்க ளென்று அர்ச். இராயப்பர் சொல்லுகின்ருர்.

ஆனுல் உங்களுக்குள் இருக்கவேண்டிய இந்த அந் நியோந்நிய நேசத்தை மேன்மேலும் பயிற்சி செய் வதுடன் இது எவ்விதப் பொருமை மனம் பிடிக் காத தன்மையாய் மாறிப்போகாமல் வெகு எச்சரிக் கையாய் இருங்கள். ஏனெனில் பலமுறை கனிந்த மகா நேர்த்தியான பழத்திலும் புழுவுண்டாகிறது போலப் புருஷன் பெண்சாதிகளது மகா உருக்க நேசபக்ஷத்திலும் மனம் பொருத காய்மகாரப் புழு உண்டாகிறதுண்டு. இதனுல் இந்தச் சிநேக முழு துங் கெட்டழிந்துபோம். அதெப்படியெனில் கொ ஞ்சங் கொஞ்சமாய் இதனுல் சண்டை சச்சரவு மன வெறுப்புண்டாகி ஒருவரொருவரை விட்டுப் பிரி ந்து அடியோடு இச்சிநேகம் எடுபடும்படி நேரிடும்

உள்ளபடி இவர்கள் இருவரிடத்திலும் மெய்யான புண்ணியமிருந்து இவர்கள் சிநேக பட்சத்துக்கு உள்ளபடியே இந்தப் புண்ணியம் விசேஷ ஆதாரமாகில் இலவலேசமும் இச்சிநேகத்தில் காய்மகாரம் வராததுமன்றி ஒருவரொருவர் நடத்தையை மனங்கொள்ளாமல் பொறுமையாய்ப் பார்த்துச் சமுசய சந்தேகப்பட இடமிராது. ஆதலால் புருஷன் பெண்சாதிகளது அந்நியோந்நிய சிநேகபட்சத்தில் இவ்விதப் பொறுமை கலந்தால் இவர்கள் நேசமெல்லாஞ் சரீரத்தை நாடியதென்றும் மெய்யான சிநேகம் என்னும் பேருக்கு அபாத்திரமானதென்றும் இவர்களிடத்திலுள்ள புண்ணியம் நம்பிக்கைக் குறைவான நிலையற்ற அற்ப புண்ணியமென்றும் நாலுபேருந் திஷ்டாந்தமாய் அறிந்துகொள்ளத்தக்க அடையாளமாம். ஆதலால் புருஷன் பெண்சாதிகள் தங்களுக்குள் நம்பிக்கையற்றவிதமாய் ஒருவரொருவரது நடத்தையை வெகு நுணுக்கமாய் ஆராய்ந்துபார்த்து இவ்விதப் பொறுமையோடு நடந்துகொள்வது மெய்யான சிநேகமல்ல, ஆனால் மதியற்ற ஓர்வித விருப்பான சிநேகம் என வேண்டும். ஏனெனில் இவ்வித விருப்பு பொறுமையுள்ளவர்களது சிநேகம் மட்டித்தனமான பெரும்படியான சிநேகமேயல்லாமல் பரிசுத்த உத்தம சிநேகமல்ல. ஏனெனில் சிநேகத்தின் உத்தமகுணம் எதில் அடங்கியிருக்கிறதென்றால் தான் சிநேகிக்கும் வஸ்துவினிடம் மெய்யான புண்ணியம் உண்டென்று நிச்சயமாய் அறிந்திருப்பதில் அடங்கியிருக்கிறது. காய்மகாரமுண்டாகும்போது சிநேகிக்கப்பட்ட வஸ்துவினிடம் புண்ணியம் உண்டோ, இல்லையோவென்கிற நிச்சயமற்றதனங் காணும்.

புருஷன்மார்களே உங்கள் மனைவிகள் உங்களுக்குப் பிரமாணிக்கமாயிருக்க வேண்டுமேயாகில் உங்

கள் நடக்கையால் இவர்களுக்கு மாதிரிகையாயிருங்கள். நீங்களே கிரமமாய் நடவாவிட்டால் இவர்கள் கற்புடையோராயிருக்கவேண்டுமென்று எந்த முகத்தோடு சொல்வீர்களென நசியான்சு பட்டணத்து அர்ச். கிறெகோரியார் சொல்லுகிறார். அவர்களுக்கு நீங்கள் கொடாததை அவர்களிடம் என்னமாய்க் கேட்பீர்கள். அவர்கள் கற்புள்ளவர்களாயிருக்க உங்களுக்கு மனதாகில் நீங்களும் என்றும் பிரமாணிக்கமாய் அவர்கள்மட்டில் கற்புள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்கிறார். அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதுபோல் அவனவன் தன் தன் உடலாகிய பாத்திரத்தைப் பரிசுத்தத்தனத்தில் காப்பாற்றக் கற்றுக்கொள்ளக்கடவான். இதற்கு விரோதமாய் நீங்களே இவர்களுக்கு அநசாரத்தைக் கற்றுக்கொடுப்பீர்களேயாகில், இவர்கள் நஷ்டத்தில் நீங்களும் அவகீர்த்திப்படுவது அதிசயமல்ல. ஆனால் நீங்களும் பெண்சாதிகளே உங்கள் மகிமை பெருமை எல்லாங் கற்பு நாணயத்தில் அடங்கியிருப்பதால் வெகு சாக்கிரதையோடு உங்கள் மகிமையைக் காப்பாற்றி உங்கள் கீர்த்தியின் காந்தியை எவ்வித தீப்பறையான நடக்கையாலும் மங்கடிக்காதபடிக்கு, எச்சரிகையாயிருங்கள்.

எவ்வித அற்ப நாணயக் குறைச்சலுக்கும் பயப்படுங்கள். ஒருகாலும் அருகில், மரியாதைக் குறைச்சலான சிநேக நாட்டங்களுக்கு இடங்கொடாதேயுங்கள். எவனொருவன் உங்கள் அழகு சௌந்தரியத்தைக் குறித்துப் புகழ்வானோ அவன் உங்களுக்கு ஜீயுறவாயிருக்கட்டும். ஏனெனில் ஒருவன் தான் வாங்கச் சத்தியில்லாத சரக்கைக்குறித்துப் புகழும்போது வழக்கமாய் அதை அவன் மறைவிடமாய் அபகரித்துக்கொள்வதற்கான ஒரு தந்திரத்துக்குள்ளாயிருக்கிறான். ஆனால் உங்களைப் புகழ்ந்து

உங்கள் புருஷனை நிந்திப்பானேயாகில் உங்களுக்கே வெகு நிந்தை வருவிக்கிறுன் என்பது உண்மை. ஏனெனில் இவன் உங்களைக் கெடுக்கத் தேடுவதுமல்லாமல் ஏற்கனவே நீங்கள் இவனுக்கு ஐக்கியப்பட்டவர்கள்போல் எண்ணிக்கொள்ளுகிறுன். அதெப்படியெனில் ஒருவன் முந்தின வியாபாரியிடம் பிரியம் அற்றுப்போய்விட்டால் இரண்டாம் வியாபாரியிடத்தில் ஏறக்குறைய முடிவுகட்டியாயிற்றெனத்தகும். எக்காலத்திலும் பெண்பிள்ளைகள் காதில் சிமிக்கி முதலிய நகைகள் போட்டுக்கொள்வது வழக்கமென்றும் இந்த நகைகளிலுள்ள முத்துகள் ஒன்றேடொன்று மோதும்போது இவர்களுக்குப் பிரியமாய் இருக்கிறதென்றும் பிளீன் என்கிற சாஸ்திரி சொல்லுகின்றுன். சுவாமிக்குப் பிரிய தாசரான ஈசாக்கென்டவர் இரெபெக்கா என்பவளுக்கு நடக்கவேண்டிய விவாகத்தின் அடையாளமாக இவளுக்குப் பலசோடு காது நகைகளை அனுப்பினுர். இதில் ஞான அர்த்தம் ஒன்றுண்டு. அதாவது: புருஷனுக்குத் தன் பெண்சாதியின்பேரில் முதல் சுதந்திரம் அவள் காதென்றும் இவளுந் தன் காதை அவனுக்குப் பிரமாணிக்கமாய்க் காப்பாற்றிச் சுவிசேஷ முத்தென்று சொல்லப்படுந் தீர்ப்புள்ள வார்த்தைகளுக்கன்றி வேறே எவ்வித வார்த்தைக்குஞ் சத்தத்துக்குங் காது கொடுக்கக்கூடாதென்றும் அர்த்தமாம். ஏனென்றுல் வாயால் சரீரத்துக்கு விஷம் வருகிறதுபோல் செவியால் ஆத்துமத்தில் விஷம் ஏறுகிறதென்று ஒருநாளும் மறக்கலாகாது.

பட்ச பிரமாணிக்கமுள்ளவர்களிடம் எப்போதுந் தனிச் சிநேக நம்பிக்கை உண்டாகும். இதனுல் இல்லறத்தோராகிய பல அர்ச்சியசிஷ்ட ஸ்திரீ பூமான்கள் அந்நியோந்நிய பட்ச சிநேகத்தால் ஒருவருக்கொருவர் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்ததாக

இவர்கள் சரித்திரத்தில் காண்கிறோம். ஆனால் இவர்கள் நேச பழக்கமெல்லாங் கற்புள்ளதாயும் எதார்த்தமானதாயுமிருந்தது. இவ்வகையாய்ப் புருஷன் பெண்சாதிகளுக்கு உத்தம மாதிரிகையான ஈசாக்கென்பவரும் இரெபெக்கா என்பவளும் எவ்வளவு பட்சமாய் இருந்தார்களென்றால் இவர்கள் அற்ப காணையப் பழகின்றிக் கொஞ்சிக்குலாவ சன்னல் வழியாய்ப் பார்த்த அபிமெலேக்கு என்பவன் இவர்கள் இருவரும் புருஷன் பெண்சாதியாய் இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். இத்தன்மையாக்வே வெகு தவவொழுக்கலுள்ள அர்ச். பிரகாச இராசா தன் பெண்சாதிக்கு வெகு உருக்கமான பட்சங் காட்டுவார். இவர் மேட்டிமைக்கு இது ஏற்காததுபோல் சிலருக்குக் காணப்பட்டது. ஆனால் உள்ளபடி இவர் வீரசூரத்துவமுள்ளவராய் இருந்துகொண்டே இல்லற நேச பட்சமுள்ளவராய்த் தன் மனைவியின் மட்டில் நடந்துகொண்டதைப் புகழ வேண்டுமொழிய இகழலாகாது. ஏனெனில் உண்மையான பரிசுத்த சிநேகத்தின் இந்தச் சொற்ப அடையாளங்களால் இருதய சம்பந்தமாகாவிட்டாலும் இவை மனவொருமிப்பு அந்நியோந்நிய சம்பாஷணைக்கு ஏற்றவழியாம்.

அர்ச். மோனிக்கம்மாள் அர்ச். அகுஸ்தினுஸ் என்பவரைக் கர்ப்பந் தரித்திருக்கையில் பல காணிக்கை வைத்துக் கிறீஸ்துவேதத்துக்கும் தேவ தோத்திர ஊழியத்திற்கும் இவரை ஒப்புக்கொடுத்தாள். அர்ச். அகுஸ்தினுஸ் என்பவரே இதை எழுதிவைத்துத் தமது தாயார் வயிற்றிலேயே சுவாமியினுடைய உப்பை உருசிபார்த்ததாகச் சொல்லியிருக்கிறார். கிறீஸ்துவ பெண்பிள்ளைகளுக்கு இது நல்ல பாடமாம். பிள்ளைகளைப் பெற்றெடுக்கு முந்தியே இவர்களைச் சுவாமிக்கு ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொள்ளக்கட

வார்கள். ஏனெனில் மனவுச்சாயமாய்த் தாழ்மையான இருதயத்தோடு ஒப்புக்கொடுக்குங் காணிக்கைகளைப் பிரியமாய் ஏற்றுக்கொள்ளுஞ் சர்வேசுரன் கர்ப்பிணியாயிருக்குங் தாய்மார்களின் நல்ல ஆசைகளையும் வழக்கமாய் ஆசீர்வதிக்கிறார். சமூவேல் என்பவர் அர்ச். அக்கினோத் தோமையார் அர்ச். கோர்சினி பெலேக்கிரர் இன்னும் பலபேரையும் இப்படித்தான் இவர்கள் தாய்மார்கள் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

அர்ச். பெர்நார்தென்பவருடைய பத்தியுள்ள தாயானவள் பிள்ளைகளைப் பெற்றெடுத்தமாத்திரத்தில் அவர்களைக் கையில் ஏந்திக்கொண்டு சேசுநாதசுவாமிக்கு ஒப்புக்கொடுத்துச் சுவாமி தன்னிடம் நம்பி ஒப்பித்து பூசிக்கப்பட்ட வஸ்துவைப்போல் இவர்களைச் சங்கையாய்ப் பார்த்து வருவாள். இதனால் இவள் குடும்பத்திற்கு எவ்வளவு பரிபூரண தேவாசீர்வாதங் கிடைத்தென்றால் இவள் ஏழு பிள்ளைகளும் பெரிய அர்ச்சியசிஷ்டவர்களானார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெற்றபின் இவர்களுக்குப் புத்தி அறிவு உண்டாகும்போது இவர்கள் இருதயத்தில் தெய்வ பயம் உண்டாகும்படி தந்தை தாய்கள் வெகு கவனமாயிருக்கவேண்டும். பிரகாச இராசாவின் தாய் இது கடமையை வெகு நுணுக்கமா யநுசரித்துவந்தாள். அடிக்கடி தன் குமாரனைப்பார்த்து என் பிரிய குமாரனே நீ ஒரு சாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதை நான் பார்ப்பதைப்பார்க்கிலும் என் கண்முன் நீ மரிப்பதை அதிக பிரியமாய்ப் பார்ப்பேன் என்பாள். இந்தப் படிப்பினை இவர் இருதயத்தில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருந்ததென்றால் இவரே சொல்லுவதுபோல் இந்த ஞாபகம் இவர் புத்தியில் வராத நாளில்லாததால் தம்மால் ஆனவரையில் இந்தக்

திவ்விய படிப்பினையை நுணுக்கமாய் அநுசரித்து வரப் பிசகினதில்லையாம்.

இவ்விதமாய் எல்லாக் குடும்பங்களிலுந் தாய் தந்தைகள் தங்கள் பிள்ளைகள்மட்டில் கவனம் வைப்பார்களேயாகில் அந்தக் குடும்பத்துக்கு எவ்வளவோ நலமாம். அழிந்துபோகும் ஆஸ்திகளை இவர்களுக்குத் தேடிவைக்க அவ்வளவு பிரயாசப்படுவதைப் பார்க்கிலுந் தெய்வ பயபத்தியிலும் புண்ணிய நெறியிலுந் தங்கள் பிள்ளைகளை நடப்பிக்கப் பிரயாசப்படுவார்களேயாகில் இவர்கள் பிரயாசம் வீண்போகாது. பிள்ளைகள் தாய் தந்தைக்கு முடிபோலிருப்பதால் இவர்களைக் கிரமமாய் வளர்ப்பதற்கு எவ்விதப் பிரயாசை வருத்தத்திற்கும் பின்வாங்கலாகாது.

இவ்வகையாய் அர்ச் மோனிக்கம்மாள் தமது குமாரன் அர்ச். அகுஸ்தினுஸ் என்பவருடைய துர்க்குண கெட்ட நாட்டங்களை எவ்வளவு சுறுசுறுப்பு நிலைமையோடு சீர்திருத்தப் பிரயாசப்பட்டாளென்றால் இவரை ஒருநாளும் விடாமல் கடல் யாத்திரையிலுஞ் சரி வழிப் பயணத்திலுஞ் சரி இவர் போகும் இடமெல்லாம் போய்த் தமது செப தப கண்ணீர்களால் இவர் மனந்திரும்பும்படி செய்ததைப்பற்றி இரத்த சம்பந்தத்தால் இவள் இவர் சரீரத்தைப் பெற்றெடுத்ததுபோலத் தம்முடைய கண்ணீர்களால் இவர் ஆத்துமத்தைப் பெற்றெடுத்தாள் என்கவேண்டும்.

வீட்டில் குடித்தனத்தை நடப்பிப்பது பெண்பிள்ளைகள் அலுவலென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். புருஷாள் வீட்டில் எப்பொழுதுமிருந்து குடும்பத்தைத் தக்கபடி பத்தியொழுக்கத்தில் நடப்பிக்கக் கூடாமையால் இவர்கள் பத்தியாய் இருப்பதால் குடும்பத்துக்கு வரும் நன்மையைப் பார்க்கிலும் இவர்கள் பெண்சாதிகள் பத்தியுள்ளவர்களாய்

இருப்பதால் விசேஷ நன்மை உண்டென்று பல பேர் நியாயத்தோடு நினைக்கிறார்கள். சலோமோன் என்பவர் வருணித்துப் பேசும் பாராக்கிரமசாலியான பெண்பிள்ளையின் திறமைசாக்கிரதையால் குடும்பத்துக்கு எல்லா நன்மையும் வருகிறதென்று இவர் தமது உவமை ஆகமத்தில் சொல்லியிருக்கின்றார்.

ஈசாக்கென்பவர் மலடியாயிருந்த தமது பெண்சாதி இரெபெக்கா என்பவளுக்காகச் சுவாமியைப் பார்த்து வேண்டிக்கொண்டார் என்றும் இன்னுஞ் செபக்கூடத்தில் இவர் ஓர் பக்கத்திலும் வேறோர் பக்கத்தில் இவர் பெண்சாதியும் இருந்து வேண்டிக்கொண்டதால் இவளுக்கு எதிராயிருந்து ஆண்டவனை வேண்டிக்கொண்டாரென்றும் ஆதியாகமத்தில் சொல்லியிருக்கிறது. இவ்விதமாய் இவர் மன்றாட்டைச் சுவாமி தயவாய்க் கேட்டருளினார். புருஷன் பெண்சாதிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டதுபோல் மெய்யான பத்தியினால் ஒருமித்திருப்பதைப் பார்க்கிலும் மெத்த உபயோகமான ஒருமிப்பு சம்பந்தம் இவர்களுக்குள் கிடையாது. சில வித்த கனிகளைச் சர்க்கரையின்றி சாப்பட்டால் உருசிப்படாது. வேறு சில உருசிகரமுள்ள பழங்களை வெகுநாள் காப்பாற்றவேண்டுமாகில் அவைகளையுஞ் சர்க்கரையில் போட்டுவைக்கவேண்டும். ஆதலால் புருஷர்கள் பத்தி என்னுஞ் சர்க்கரையுள்ளவர்களாயிருக்கும்படி பெண்சாதிகள் ஆசிக்கவேண்டும். ஏனென்னில் புத்தியில்லாத மனிதன் அடங்காத முரட்டு மிருகமென்கலாம். இவ்வாறே புருஷர்களுந் தங்கள் பெண்சாதிகள் பத்தியுள்ளவர்களாயிருக்க ஆசிக்கவேண்டும். ஏனென்னில் பத்தியில்லாப் பெண்பிள்ளை வெகு சுளுவாய் உடைந்துபோகும் பாண்டத்துக்கு ஒத்தவளாய்ப் புண்ணியத்தில் வெகு சேதப்படுவதற்கான ஆபத்துக்கு உள்ளாயிருக்கிறாள்.

அஞ்ஞானியான மனிதன் விசுவாசமுள்ள ஸ்திரீயால் அர்ச்சிக்கப்படுகிறானென்றும் அஞ்ஞான பெண்பிள்ளை விசுவாசமுள்ள மனிதனால் அர்ச்சிக்கப்படுகிறாளென்றும் அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். ஏனெனில் மெய்விவாக அந்நியோந்நிய சம்பந்தத்தால் புண்ணிய வழியில் நடக்க ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருப்பது வெகு எளிதாம். ஆனால் புருஷனும் பெண்சாதியும் விசுவாசமுள்ளவர்களாயிருந்து மெய்யான தெய்வ பயபத்தியில் நடந்து வருகையில் இவ்விருவருக்கும் எவ்வளவோ தேவ ஆசீர்வாதங் கிடைக்கும். மேலும் இவர்களுக்குள் ஒருநாளுஞ் சண்டை சச்சரவு வராதபடிக்கு ஒருவருக்கொருவர் கோபத்துக்கு இடங்கொடாமல் தங்கள் குற்றங்குறைகளை வெகு பொறுமையாய்ச் சகித்துவரவேண்டும். எதிரொலிச் சத்தஞ் சந்தடியுள்ள இடத்தில் தேனீக்கள் இருக்கிறதில்லை. இவ்விதமாகவே சண்டை சச்சரவு கூக்குரல் தர்க்கமுள்ள வீட்டில் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் மெய்யாகவே வசிக்கிறதில்லை.

நசியான்ஸ் பட்டணத்து அர்ச். கிறெகோரியார் தமது காலத்தில் மணவாளர் தங்கள் விவாக வருஷாந்தர நாளைச் சிறப்பாய்க் கொண்டாடுவது வழக்கமென்று சொல்லுகிறார். உள்ளபடியே இலௌகீக இச்சைத் தோற்றங்களுக்கும் வீண் செலவுக்கும் இடமின்றி இக்காலத்திலும் இவ்விதமாய் நடந்தேறிவரக்கூடுமாகில் இது மெத்த நல்ல வழக்கந்தான். இதற்காக அந்நாளில் புருஷன் பெண்சாதிகள் பாவசங்கீர்த்தனஞ்செய்து நன்மைவாங்கித் தங்கள்பேரில் தேவ ஆசீர்வாதம் வரும்படி வழக்கத்தைப்பார்க்கிலும் அதிக பத்தியாய் வேண்டிக்கொண்டு தங்கள் அந்நியோந்நிய சிநேகப் பிரமாணிக்கத்தில் நாளுக்குநாள் அர்ச்சிக்கப்படும்படி தங்கள் நல்ல பிரதிக்கி

னைகளைப் புதுப்பித்துத் தங்கள் அந்தஸ்துக் கடமைகளைப் பொறுமையாய் நிறைவேற்றத் தேவ ஒத்தாசையைக் கேட்டுக் கர்த்தருடைய அடைக்கல நிழலில் ஆறுதல் இளைப்பாறி அடையக்கூடவார்கள்.

—(*)—

39-ம் அதிகாரம்.

சமுசார வாழ்க்கையில் அநுசரிக்க வேண்டிய பரிசுத்த நாணயம் அல்லது மெய்விவாகப் பிரயோக நாணயம்.

சமுசார வாழ்க்கை அல்லது மெய்விவாகப் பிரயோகம் மாசற்றதாயிருக்கவேண்டுமென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். அதாவது: அற்ப மோகமும் வேறே எவ்வித அநாசார அசுத்தங்களும் அணுகாமல் இருக்கவேண்டும். உள்ளபடி பூலோக மோட்சமென்னப்படுஞ் சிங்காரத்தோப்பில் எவ்வித ஆசாபாச இச்சைக்கும் அலங்கோலக்கும் இடமிராத காலத்தில் மூக்தமுக்த மெய்விவாகம் பரிசுத்தமாய் ஏற்படுத்தப்பட்டது.

நீச வெட்கத்துக்குரிய பிரியங்களுக்குஞ் சாப்பிடுவதால் வரும் பிரியங்களுக்கும் ஓர்வித பொருத்தமுண்டு. ஏனெனில் இவ்விருவிதப் பிரியங்களுஞ் சரீரத்துக்குச் சம்பந்தப்பட்டவை. ஆயினும் முதல்விதப் பிரியத்தில் விசேஷமாய் மிருகத்தன்மை அதிகமாய் விளங்குவதால் இவை சரீர இச்சை எனப்படும். ஆதலால் இவைகளைக்குறித்துத் தெளிவுற கோரா

ய்ச் சொல்லக் கூடாததை வேறே விஷயங்களைக் கொண்டு தெளிவிக்கலாம்.

மூந்தமூந்த மனிதர் சரீரம் பிழைத்து வாழச் சாப்படுவது அவசியம். ஆதலால் சரீரத்தை வளர்த்துக் காப்பாற்ற மாத்திரமே சாப்படுவது நல்லதும் பரிசுத்தமுமாயிருப்பதுமல்லாமல் இவ்விதம் போஷிக்கக் கடமையுமுண்டு. இவ்வாறே பிள்ளைகளைப் பெறவும் இதனால் மனுஷ சந்ததி பலுகவும் அவசரமாயிருக்கிற மெய்விவாகமும் நல்லதும் மெத்தப் பரிசுத்தமுமாயிருக்கிறது. ஏனெனில் மெய்விவாக விசேஷ கருத்து மனுக்குலப் பரிபாலன வர்த்திப்பாம்.

இரண்டாவது. — உயிரைக் காப்பாற்றமாத்திரம் புசியாமல் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருந்து பொது நன்மையைக் கோரி எல்லோருஞ் சீவிக்க வேண்டும் என்பதைப்பற்றிச் சாப்படுவது மகா நீதிகாரணமுள்ள இருத்தியம். இவ்வகையாய் இல்லறத்தோர் பரிசுத்த மெய்விவாகத்தில் ஒருவருக்கொருவர் கிரமமாய்த் திருப்தி வருவிப்ப[illegible] கடமையென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். ஆனால், இது கடமை எவ்வளவு முக்கியமானதெனில் புருஷன் பெண்சா[illegible]திகள் ஒருவரொருவரது மனவுச்சாய சம்பந்தமில்லாமல் இது கடமையை விட்டுவிடக்கூடாதென்கிறார். பத்திக் கிருத்[illegible]ய முகாந்திரங்களும் இக்கடமையை நிறைவேற்றும்லிருக்க நியாயமாயிராது. இதைப்பற்றியே நன்மை வாங்குவதைக் குறித்துப் பேசப்படும் அதிகாரத்தில் இரண்டொரு வார்த்தை சொல்லியிருக்கிறது. இது இப்படியாகில் தன் மனதுக்காணபடி ஞாயமற்ற பத்திமுகாந்திரத்தைப் பற்றியாகிலுங் கோப வெறுப்பைப் பற்றியாகிலும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டியதில்லை என்றாற்போல் நினைப்பது வெகு தப்பறையல்லவோ.

மூன்றாவது.— மற்றவர்களுடைய சந்தோஷத்தைக் கோரிச் சப்படுகிறவர்கள் மன இஷ்டமாய்ச் சாப்பட வேண்டுமல்லாமல் கட்டாயத்தால் சாப்படலாகாது. மேலுஞ் சாப்பாட்டின்பேரில் விருப்பமிருப்பதாகக் காட்டப் பிரயாசப்படவும் வேண்டும். இவ்வகையாய்ச் சமுசாரக் கடமையை எப்போதும் பிரமாணிக்கமாய்க் கபடற்ற மனதோடு நிறைவேற்றிவர வேண்டும். பிள்ளைகளைப் பெறுதற்கு நம்பிக்கை இருக்கும்போதுஞ் சரி எது காரணத்தைப் பற்றி என்கிலும் இந்த நம்பிக்கைக்கு இடமிராதிருக்கும்போதுஞ் சரி இந்தக் கடமை எப்போதும் பிரமாணிக்கமாய்ச் செலுத்தவேண்டும்.

நான்காவது.— மேற்சொல்லிய இரு முகாந்திரங்களைப்பற்றிச் சாப்படாமல் பசியைத் தீர்ப்பதற்குமாத்திரஞ் சாப்படுவது குற்றமற்றதாயும் விலக்கப்படாததுமாய் இருக்கிறது. ஆயினும் புகழ்ச்சிக்குரியதல்ல. ஓர் காரியத்தால் வருந் திருப்தியானது அதைப் புகழ்ச்சிக்குரியதாய் ஆக்குவதற்குப் போதுமானதல்ல. குற்றமற்றதாய்ச் சகித்துக்கொள்ளக் கூடுமாயிருந்தாலே போதும்.

ஐந்தாவது.— பசியைப்பற்றிச் சாப்படாமல் மிஞ்சின விதமாய்க் கிரமமின்றிச் சாப்படுவது தன்னிலே தப்பறையானது. இப்படி மிகுதியாய் அல்லது கொஞ்சமாய் மிஞ்சிப்போவதற்கு ஒத்தபடி இது இருத்தியம் அதிகம் அல்லது கொஞ்சம் இழிவானதாம்.

ஆறாவது.— மிதமிஞ்சின தனம் மிகுதியாய்ச் சாப்படுவதில் மாத்திரமல்ல ஆனல் சாப்படும் விதத்திலும் அடங்கியது. பிரிய சகோதரமே, தேனீக்களுக்கு வெகு சௌக்கியத்துக்குரிய தேனும் இவைகளுக்குத் தீங்காய்ப் போவது உள்ளபடி அதிசயந்தான். வசந்தகாலத்தில் தேனீக்கள் மிகுதியாய் அதைக் குடிப்பதால் வியாதிப்பட்டு வயிறு உப்பிப் போவது

மல்லாமல் விசேஷமாய் இதன் தும்பிக்கையிலுஞ் சிறசிலுந் தேன் ஓட்டிக்கொண்டால் தப்பாமல் செத்துப்போம். உள்ளபடி சமுசார வாழ்க்கை தன்னிலே வெகு பரிசுத்தமுங் கிரமமுஞ் சங்கையும் மனுக்குலத்துக்கு வெகு பிரயோசனமுமா யிருந்தபோதிலும் இதை அநுபவம்பண்ணுகிறவர்களுக்குச் சில தருணங்களில் இது ஆபத்துக்குரியதாகும். ஏனெனில் சிலவிசை இதில் கொஞ்சம் மிஞ்சிப்போவது அற்ப பாவமானதால் இதனால் இவர்கள் ஆத்துமங்கள் மெலிந்து வியாதிப்படும்.

பிள்ளைகளைப் பெறுவதற்கு ஏற்படுத்தப்பட்ட கிரமந் தப்பிப்போகும்போது எப்போதுஞ் சாவான பாவமாம். இதனால் இவர்கள் ஆத்துமம் முழுதுஞ் செத்துப்போம். இச்சமயத்தில் வேண்டிய கிரமந் தவறி அதிகமாய் அல்லது கொஞ்சமாய்ப் பிசகிப் போவதற்கு ஒத்தபடி இவ்விதப் பாவங்கள் அதிகமாய் அல்லது கொஞ்சமாய் அரோசிக அருவருப்புள்ளவையாய் இருப்பதுமல்லாமல் எப்போதுஞ் சாவான பாவங்கள் தான். ஏனெனில் பிள்ளைகளைப் பெறுவது மெய்விவாகத்தின் விசேஷ முதற் கருத்தாதலால் பெண்சாதி மலடியாயிருப்பதாலும் அல்லது ஏற்கனவே கர்ப்பந் தரித்திருப்பதாலும் பிள்ளைகள் சன்மித்துப் பிறக்கக் கூடாத சிற்சில சமயத்தில் வர வேண்டிய பலன் அப்போதைக்கு வராவிட்டாலும் மெய்விவாகப் பிரயோகக் கிரமத்தை விட்டுப் பிசகப் பரிச்சேதம் உத்தரவில்லை. ஏனெனில் இச்சமயங்களில் பிறப்பு ஒழுங்குகளுக்கு விருத்தமின்றி நடந்து கொள்ளுகையில் மெய்விவாகப் பிரயோகம் ஞானமுள்ளதாயும் பரிசுத்தமாயும் இருக்க விக்கினமில்லை.

உள்ளபடியே ஆதியாகமத்தின் 38-ம் அதிகாரத்தில் சொல்லியிருப்பதுபோல் ஓனான் என்பவன் தன் விவாகத்தில் செய்துவந்த அடாத நீசக் கிருத்தியமா

னது சுவாமிக்கு முன் வெகு அருவருப்பு அரோசிக முள்ளதாய் இருந்தது. அர்ச். சின்னப்பர் எப்பேசியர்களுக்கு எழுதிய நிருபத்தை அர்ச். எரோணிமுஸ் என்பவர் வியாக்கியானஞ் செய்யும்போது பேசும் காணயமற்ற துர்ச்சனர்களைப்பார்க்கிலும் அதிக இழிவுக்குரிய நமது காலத்துச் சில பதிதர்கள் மேற்சொல்லிய துஷ்டனுடைய கெட்ட கருத்துமாத்திரஞ் சுவாமிக்கு ஏற்காமற் போனதென்று சொல்லத் துணிந்தபோதிலும் இவன் செய்து வந்த காரியமே சுவாமிக்கு அரோசிகமான அடாத காரியமாய் இருந்ததென்று வேதாகமத்தினால் தெளிவாய் விளங்குகிறது.

ஏழாவது.—சாப்பிடும் நேரத்துக்கு முந்தியே போசன பதார்த்தங்கள்பேரில் சிந்தையாய் இருப்பவன் வெகு இழிவுக்குரிய சோம்பேறியும் நீசப் புத்தியுமுள்ளவனென்று விளங்கும். இன்னும் ஒருவிசை சாப்பிட்டபின் அதினால் வந்த பிரியத்தை விடாமல் அதைக் குறித்தே யோசித்துக்கொண்டு ஒவ்வொரு பதார்த்தத்தையும் விழுங்கும்போது வந்த உருசியை ஞாபகஞ் செய்துகொண்டு அதிலேயே புத்தி சிந்தை எல்லாம் வைத்து அசைபோட்டுக்கொண்டிருப்பவர்கள் இன்னும் வெகு நீசர் எனவேண்டும். வேறு சிலர் சாப்பிடுவதற்கு முந்தியே பதார்த்தத்திலுஞ் சாப்பிட்டபின் உண்கலக் கிண்ணியிலுந் தங்கள் புத்தியை வைத்திருப்பார்கள். இவர்களைச் சமையல் அறைச் சுயம்பாகிகளெனவும் அர்ச். சின்னப்பர் சொல்லுவதுபோல் வயிறே இவர்களுக்குத் தெய்வமெனவுஞ் சொல்லவேண்டும். காணயஸ்தர் சாப்பாட உட்காரும்போது மாத்திரஞ் சாப்பாட்டை நினைப்பார்கள். சாப்பிட்ட பின் இவர்கள் உண்ட பதார்த்தங்களின் உருசி வாசனை முதலானது தோன்றாதபடிக்குக் கை வாய் கழுவிக்கொள்ளுவார்கள்.

யானையானது மிகவும் பருத்த மிருகந்தான், ஆனால் மற்ற எல்லா மிருகங்களிலும் இது மெத்தப் புத்தியுள்ளது. இதன் நாணய மரியாதையைக் குறித்து இரண்டொரு வார்த்தை சொல்வது வீணாயிராது. இது ஒரு விசை தெரிந்துகொண்ட பெண் யானையைப் பரிச்சேதம் மாறாமல் வெகு உருக்கமாய் நேசித்துவரும். ஆகிலும் இதனோடு மூன்று வருஷத்துக்கு ஒரு விசை ஐங்[illegible]னைக்கு மாத்திரஞ் சேர்ந்திருக்கும். இதுவும் ஒருத்தருக்குந் தெரியாமல் மறைவிடமாய் நடக்கும். ஆனால் ஆறுநாள் எல்லாத்துக் [illegible]ற்றுக்குப்போய்ச் சரீரத்தை முழுதும் நன்றாய்க் கழுவும். இப்படி கவுகிறதற்கு முந்தி மற்ற யானைகள் கூட்டத்தில் போகிறதேயில்லை. ஆதலால் இந்த மிருகம் எவ்வளவு நாணயமுள்ளதென்று தெரியவருகிறது. இதைக் கொண்டு புருஷன் பெண்சாதிகள் தங்கள் அந்தஸ்துப் பிரகாரம் உதவிக்கொள்ளுகிற இன்ப சுகங்களில் முழுதுந் தங்கள் ஆசைப் பற்றுதலை வைக்காமல் இருக்கக் கற்றுக்கொள்ளக்கடவார்கள். ஆனால் இதற்குப் பின் உத்தம பரிசுத்த கிருத்தியங்களைப் புத்தித் தெளிவு விருப்பத்தோடு செய்யும்பொருட்டுக் கூடியவிரைவில் அவர்கள் தங்கள் இருதயத்தையும் ஆசைப்பற்றுதலையும் நன்றாய்க் கழுவிச் சுத்தஞ் செய்யக்கடவார்கள்.

இதில்தான் அர்ச். சின்னப்பர் கொறிந்தியேருக்குக் கற்பிக்கும் மேலான போதனையின் உத்தம அநுசாரம் அடங்கியிருக்கிறது காலஞ் சொற்பமாதலால் பெண்சாதியுள்ளவர்கள் பெண்சாதிகள் இல்லாதவர்களைப்போல் நடந்துகொள்ளட்டும் என்கிறார். ஏனெனில் அர்ச். கிறெகோரியார் சொல்லுகிறது போலப் பெண்சாதி இருந்தும் இல்லாதவன்போல் இருப்பவன் ஆனால் தன் பெண்சாதியோடு

சரீர ஆறுதல்களை அநுபவித்தும் இதனால் ஞான கிருத்தியங்களை விட்டுவிடாத தன்மையாய் நடந்துகொள்பவன் தான். இப்படியாய்ப் புருஷனைக் குறித்துச் சொல்லப்பட்டதைப் பெண்சாதியைக் குறித்துஞ் சொல்லலாம்.

இவ்வுலகத்தை உதவிக்கொள்ளுகிறவர்கள் இதை உதவிக்கொள்ளாததுபோல் இருக்கமட்டும் என்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார். ஆதலால் ஒவ்வொருவனுந் தன் அந்தஸ்துப் பிரகாரம் இவ்வுலகத்தை உதவிக்கொள்ளட்டும். ஆனால் இதை எவ்விதமாய் உதவிக்கொள்ள வேண்டுமெனில் இதில் பற்றுதல் வைக்காமலுஞ் சுவாமியைச் சேவிப்பதற்கு இதனால் இடைஞ்சல் வாராமல் தேவ ஊழியத்தில் சுறுசுறுப்பாய் இருக்கும்படியாகவும் உலகத்தை உதவிக்கொள்ளாததுபோலவும் ஒழுகக்கடவார்கள். இது விஷயத்தில் மனிதன் கனமாய்த் தப்பிப்போவது எப்படியென்று அர்ச். அகுஸ்தினுஸ் என்பவர் சொல்லுகின்றார். இவன் உதவிக்கொள்ள மாத்திரம் வேண்டிய காரியங்களைச் சுகித்து அநுபவிக்க மனதாய் இருக்கிறான் என்றும் இவன் சுகித்து அநுபவிக்க வேண்டிய காரியங்களை உதவிக்கொள்ள மாத்திரம் மனதாய் இருக்கிறானென்றுஞ் சொல்லுகின்றார். ஞானகாரியங்களைச் சந்தோஷமாய் நாம் சுகித்து அநுபவிக்க வேண்டும். சரீரத்துக்கடுத்தவைகளையோ உதவிக்கொள்ள மாத்திரம் வேண்டும். இவைகளைச் சந்தோஷத்துக்கு மாத்திரம் பிரயோகித்துக்கொள்ளும்போது ஞானமுள்ள நமது ஆத்துமம் நீச மிருகத் தன்மையாய் மாறிப்போகிறது. இது விஷயத்தைக் குறித்துச் சொல்லவேண்டியிருந்தது சொல்லப்பட்டது. சொல்லக்கூடாமையாய் இருந்தது சொன்னதைக்கொண்டே தெரியும்.

40-ம் அதிகாரம்.

விதவை ஸ்திரீகளுக்கான புத்திமதிகள்.

மெய்யாகவே விதவையாயிருக்கும் விதவைஸ்தி ரீகளைச் சங்கிக்கும்படி அர்ச். சின்னப்பர் தமது பிரிய சீஷர் திமோத்தே என்பவருக்கும் இவர் வழியாய் மற்ற மேற்றிராணிமார்களுக்குங் கற்பிக்கின்றார். ஒருத்தி மெய்யான விதவைஸ்திரீயாய் இருப்பதற்குப் பின்னால் சொல்லப்படுவதுபோல நடந்து கொள்வது அவசியம்.

முதலாவது.—விதவைஸ்திரீ சரீரத்தால் விதவையாய் இருப்பதல்லாமலும் இருதயத்தாலும் விதவையாயிருக்கவேண்டும் அதாவது: விதவைஸ்திரீயானவள் விதவையாய் இருந்துகொண்டு என்றுங் கற்புள்ளவளாயிருக்கவேண்டுமென்கிற கெட்டியான பிரதிக்கினை உள்ளவளாயிருக்கவேண்டும். ஏனெனில் மறுபடி கலியாணத்துக்கு வழியிராதோ என்று ஆசிக்கிற கைம்பெண்சாதிகள் கட்டாயத்தால் மாத்திரம் விதவைகளாயிருந்து சரீர சம்பந்த முறையில் மாத்திரம் ஆண்பிள்ளைகளை விட்டுப் பிரிந்திருக்கிறார்களேயல்லாமல் மனப் பிரீதியால் இவர்களோடு ஏற்கனவே சேர்ந்திருக்கிறார்கள் எனவேண்டும். விதவைத் தன்மையில் நிலைமையாய் இருப்பதற்காகத் தன் சரீரத்தையுங் கற்பையுஞ் சுவாமிக்கு வார்த்தைப்பாடாக ஒப்புக்கொடுக்க விருப்பமுள்ள மெய்யான விதவைஸ்திரீ இதனால் தன் விதவைத்தனத்தைக் கனப்படுத்தித் தன் நல்ல பிரதிக்கினையும் நீளித்து நிலையாயிருக்கும்படி செய்வாள்.

ஏனெனில் ஒருவிசை சுவாமிக்கு வார்த்தைப்பாடு கொடுத்துத் தன்னை ஒப்புக்கொடுத்த பின் இதில்

தவறிப்போவதால் மோட்சத்தையே இழக்க வேண்டும் என்று பார்க்கும்போது இவள் தன் பிரதிக்கினையில் எவ்வளவு பிரமாணிக்கமாய் இருக்கப் பிரயாசப்படுவாளென்றால் ஓர் நிமிஷமாகிலுந் தன் இருதயத்தில் கலியாண வெறும் நினைப்பு முதலாய் வரச் சம்மதியாள். மேலும் இந்தப் பரிசுத்த வார்த்தைப்பாடே இவள் நல்ல பிரதிக்கினைக்கு ஒவ்வாத எவ்விதக் கோரிக்கை எண்ணமும் இவள் ஆத்துமத்தில் நுழையாதபடிக்குப் பெருந் தடையாயிருக்கும். உள்ளபடியே கிறீஸ்துவ விதவைஸ்திரீ இவ்விதமாய்த் தன்னைச் சுவாமிக்கு ஒப்புக்கொடுக்கும்படி அர்ச். அகுஸ்தினுஸ் என்பவர் வெகுவாய்க் கற்பிக்கிறார். ஓரிசேழன் என்னுஞ் சாஸ்திரியும் இன்னும் அதிகமாய் இதைக் குறித்துச் சொல்வதாவது: கலியாண வாழ்க்கையில் இருக்கும் ஸ்திரீகள் தங்கள் புருஷர் தங்களுக்கு முந்தி இறந்துபோகச் சுவாமிக்குச் சித்தமாகில் சுவாமிக்குத் தங்களை முந்தியே ஒப்புக்கொடுத்து விதவை அந்தஸ்திலேயே கற்புள்ளவர்களாய் இருப்போமென்கிற வார்த்தைப்பாட்டைக் கொடுக்கும்படியாகவும் இப்படி முந்தியே சுவாமிக்குக் கொடுக்கும் வார்த்தைப்பாட்டால் இவர்கள் வாழ்நாளில் இன்பப் பிரியங்களை அநுபவித்துக்கொண்டே கற்புள்ள விதவைத் தன்மையையும் ஒருமிக்க அநுசரிக்கக் கூடுமென்றுஞ் சொல்லுகிறார்.

இப்படி வார்த்தைப்பாடு கொடுத்தபின் செய்யும் நற்கிருத்தியங்களெல்லாஞ் சுவாமிக்கு அதிக பிரியமாயிருப்பதோடு இவைகளைச் செய்ய அதிக தைரியமுமுண்டாம். இதனால் நமது நல்ல மனதின் கனிகள்போலிருக்கப்பட்ட கிருத்தியங்கள் சுவாமிக்கு ஒப்புக்கொடுக்கப்படுவதுமல்லாமல் நமது கிருத்தியங்களுக்கு விருக்ஷம்போலிராநின்ற நமது மனந்தானே அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும்.

வெறுங் கற்பென்னும் புண்ணியத்தாற் சுவாமிக்கு நமது சரீரத்தை ஒப்புக்கொடுத்தபோதிலும் இன்னமும் ஓரோர் சமயத்தில் இலௌகீக இன்பங்களை அநுபவிக்கக் கூடுமாயிருக்கும். ஆனால் சுவாமிக்குக் கொடுக்கப்படுங் கற்பு வார்த்தைப்பாடானது இவருக்கு நாம் தத்தஞ்செய்யும் மறுக்கப்படாத காணிக்கையாம். இந்தக் காணிக்கையை மறுபடியும் எடுத்துக்கொள்ள நமக்கு அற்ப சுதந்திரமுமிராத தன்மையாய்க் காணிக்கை செய்வதால் நாம் சுவாமிக்கு உகந்த அடிமைகளாவோம். இந்த அடிமைத்தனம் எல்லா விரா[illegible]ங்கத்திலுஞ் சிறந்ததெனவேண்டும். மேற்சொல்லிய இரண்டு மகாத்துமாக்களின் புத்திமதிகளை நான் வெகுவாய் அங்கீகரித்துக்கொள்வதுடன் இவைகளை அநுசரிக்க நல்ல மனமுள்ள புண்ணியாத்துமாக்கள் தங்கள் சத்துவத் திராணியை நன்றாய்ச் சீர்தூக்கிப்பார்த்து தேவ அருளை மன்றாடிப் பத்தி விமரிசையுள்ள ஆத்தும குருவானவர் ஆலோசனை கேட்டு ஸ்திரமாகவும் பத்தி விவேகத்தோடும் ஒழுகக்கடவார்கள். ஏனெனில் இவ்வாறு எல்லாம் அதிக பலனோடு செய்யப்படும்.

இரண்டாவது.—மேலுந் தன் நேசபட்சமெல்லாம் உத்தமமாய்ச் சுவாமியைத் தாவியிருக்கவும் அவர் திருவிருதயத்தோடு தன் இருதயமும் நாலாவிதத்திலும் ஐக்கியப்பட்டிருப்பதற்காகவும் மறு கலியாணத்தைக் கபடற்ற சுத்த மனதோடு வெறுக்கவேண்டும். ஏனெனில் தங்கள் பிள்ளைகள் மகராசர்களாயிருக்கவேண்டும் என்பதைப்பற்றியாகிலும் ஏதாவது பிரபஞ்ச வீண் கோரிக்கையைப் பற்றியாகிலும் இன்னும் உலக வழக்கத்தைப் பற்றியாகிலும் ஓர் கைம்பெண்சாதி விதவைத்தனத்திலேயே இருந்துவிட்டால் இதனால் இவளுக்குப் புகழ்ச்சியே, ஆனால் சர்வேசுரனைப்பற்றிமாத்திரஞ் செய்யப்படு

வரைந்துவிஞ் சுவாமிக்குமுன் மெய்யான புகழ்ச்சிக்குரியதானதால் உள்ளபடி இப்படிப்பட்டவள் சுவாமிக்குமுன் இகழ்ச்சிக்குரியவளாயிராள்.

மூன்றாவது.—இன்னும் விதவை ஸ்திரீயானவள் உள்ளபடி விதவையாயிருப்பதற்கு இலௌகீக சந்தோஷப் பிரியங்களை மன உச்சாயமாய் விட்டு நீங்கியிருக்கவேண்டும். இன்பங்களிற் சீவிக்கிற விதவை ஸ்திரீ உயிராயிருந்தும் மரித்தவளாயிருக்கிறாளென்று அர்ச். சின்னப்பர் வசனிக்கிறார். விதவையாயிருக்க மனதுடையவளாயினும் நாலுபேர் தன்னைத் தேடிக் கொஞ்சிக் குலாவவுங் கூத்து வேடிக்கை விருந்துகளுக்கு அழைக்கப்படவும் வாசனை பரிமளம் பூசிக்கொள்ளவும் விருப்பமுள்ளவள் சரீர முறையில் உயிருள்ளவளுமாய் ஆத்தும முறையில் மரித்தவளுமாயிருக்கிறாள். உள்ளபடி மெய்யாகவே விதவையாயிருப்பவளுக்கு வீண் சிலாக்கிய பெருமை என்னத்துக்கு? நாணயமான உயர்ந்த பலநிற ஆடைகள் என்னத்துக்கு? ஆண்பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளைகள் பிரியப்படுகிறதற்கு ஆனவழி என்னவென்று பரிட்சையால் விதவைஸ்திரீ அறிந்திருப்பதால் இவ்விதந் தன் அந்தஸ்துக்கு மேலாய் அணிந்துகொள்வதால் வெகு ஆபத்துக்குரிய தோற்றங்கள் ஆண்பிள்ளைகள் சிந்தையில் உண்டாக்கக் காரணமாயிருக்கிறாள். ஆதலால் இவ்வித வீண் சிலாக்கிய இன்பங்களிற் சீவிக்கிற விதவைஸ்திரீ உயிருள்ளவளாயினும் மரித்தவளாகவும் இன்னுஞ் சரியாய்ப் பேசவேண்டுமாகில் விதவைத்தனத்தின் ஓர் சிலையாகவும் இருக்கிறாளெனவேண்டும்.

கத்தரித்துக் கழிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. தவிட்டுப்புறாவின் குரற்சத்தம் நமது பூமியிற் கேட்கப்பட்டதென்று உந்நதகவியிற் சொல்லப்படுகிறது. பத்தியாய் ஒழுக மனதுள்ள எவளும் பிரப

ஞ்ச மிஞ்சின சுகங்களைத் தள்ள வேண்டும். ஆனால் தன் புருஷனை இழந்துவிட்டதின்பேரில் அழுது பிரலாபித்துத் துயராற்றுகிற மெய்யான விதவை ஸ்திரீ கற்புள்ள தவிட்டுப்புறாப்போல் விசேஷமாய் இவ்வித மிகுதியான இன்பங்களைத் தள்ளவேண்டும். மொ அப் தேசத்தினின்று நோயேமீ என்பவள் பெத்திலேம் நகருக்குத் திரும்பிவருகையில் இவள் கலியாண ஆரம்பநாளில் இவளை அறிந்திருந்த அந்தப் பட்டணத்தின் பெண்பிள்ளைகள் இவள்தானோ நோயேமீ என்பார்கள். அதற்கு இவள் மறுமொழியாக: போதும், என்னை நோயேமீ என்று அழையாதேயுங்கள். ([illegible]னில் நோயேமீ என்பது அழகு சௌந்தரியவதியென்று அர்த்தமாம்.) ஆனால் என்னை மாரா (கசப்பானவள்) என்று அழையுங்கள். ஏனெனில் ஆண்டவர் என் ஆத்துமத்தைக் கஸ்தித் துயரால் நிரப்பினார் என்பாள். இவள் தன் கணவனை இழந்துவிட்டால் இவ்விதம் பேசுவாள். இவ்வகையாய்ப் பத்தியுள்ள விதவைஸ்திரீ அழகு சௌந்தரவதியென்று நாலுபேரால் அழைக்கவும் எண்ணவும் படப் பரிச்சேதம் ஆசியாள். சுவாமிக்குச் சித்தமானபடி தன் கண்களுக்கே தாழ்ச்சி சிரவணமுள்ளவளாயிருக்க ஆசிப்பாள்.

வாசனை கலந்த எண்ணெய் வார்த்த விளக்கை அவிக்கும்போது மகா நேத்தியான வாசனை வீசும். இவ்வகையாய்த் தங்கள் கலியாண வாழ்க்கையில் சுத்தமான நேசமுள்ளவர்களாயிருந்த கைம்பெண்சாதிகள் தங்களுக்குப் பிரகாசம்போலிருந்த தங்கள் புருஷர் இறந்துபோனபின் கற்பென்னும் புண்ணிய சுகந்த வாசம் வீசுவார்கள். புருஷன் உயிரோடிருக்கையில் அவனை நேசிப்பது பெண்பிள்ளைகளுக்குள் பொதுவழக்கம். ஆனால் இவன் இறந்தபின் இவனை நேசித்து வேறே புருஷர் வேண்டாமென்றிருப்

பது மெய்யான விதவைகளுக்குமாத்திரம் உரித்தான சிநேகமாம். புருஷன் ஜீவதசையாய் இருக்கையில் சுவாமிபேரில் நம்பிக்கையாய் இருப்பது அவ்வளவு அருமையானதல்ல. ஆனால் புருஷன் உதவி அற்று இருக்கையில் சுவாமிபேரில் நம்பிக்கை வைத்திருப்பது வெகு புகழ்ச்சிக்குரியதாம். இதைப்பற்றித்தான் கலியாண வாழ்க்கையிலிருக்கையில் அநுசரித்த புண்ணியங்களின் மேன்மை விதவைத்தன்மையில் வெகு எளிதாய்க் காணப்படும்.

பிள்ளைகள் இருக்கிற விதவைஸ்திரீ இவர்களைப் பராமரித்து நடத்தவும் விசேஷமாய் இவர்கள் ஆத்தும காரியங்களிலும் இவர்கள் சம்ரட்சணை விஷயத்திலுங் கவனிக்கவேண்டியிருக்கையில் எவ்விதத்திலும் இவர்களைப் பரிச்சேதம் விட்டுவிடக் கூடாது. ஏனெனில் எவனாகிலுந் தன்னைச் சேர்ந்தவர்களையும் விசேஷமாய்த் தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையுங் கவனித்துப் பராமரிக்காவிட்டால் அவன் அஞ்ஞானியிலுங் கெட்டவனென்று அர்ச். சின்னப்பர் கற்பிப்பதால் விதவைஸ்திரீகளுக்கும் இது கடமை உண்டென்று வெகு தெளிவாய் விளங்குகிறது. ஆனால் பிள்ளைகள் வேண்டிய பிராயத்திலும் தாங்களாய்த் தங்களை நடத்திக்கொள்ளக் கூடுமான அந்தஸ்திலும் இருக்கும்போது விதவைஸ்திரீ தன் சிந்தை ஆசை நாட்டங்களை எல்லாம் அங்குமிங்கும் விடாமல் சுவாமியை உத்தம விதமாய்த் தாவி அவர் நேசத்தில் வளரும்படி பிரயாசப்படவேண்டும். குடித்தன விஷயமாய் வழக்கு முதலிய சங்கடங்களுக்குட்பட மனசாட்சிப்படி கடமை இராதபோது அதில் பிரவேசியாமலிருப்பது உத்தமம். இவ்விதமாய்ச் செய்வது அவ்வளவு பிரயோசனமாய் இராதென்று தோன்றியபோதிலும் அமரிக்கையாய்ச் சமாதானத்தோடு எது காரியத்தையும் நடத்தப் பார்ப்பது.

க்கவேண்டும். ஏனெனில் இவ்வித வீண் தொந்தரை களால் வரும் பிரயோசனங்கள் பரிசீத்த சமாதான நன்மைக்கு நிகராக இருக்க வெகு சிரேஷ்டமான வைகளாயிருக்க வேண்டும். வழக்கு முதலிய சண்டை சச்சரவுகளால் வெகு வீண் பராக்கு மனவருத்தம் உண்டாகிறதுமல்லாமல் பலமுறை கற்பென்னும் புண்ணியத்தின் சத்துருக்களுக்கு இடங் கொடுக்கும்படியாகவும் நேரிடும். இந்த வழக்குகளை முடிக்க நமக்குச் சனுவாயிருக்கவேண்டியவர்களுக் குப் பிரியப்படுவதற்காக இவர்களுக்கு ஆனபடி பத்திக் குறைவாயுஞ் சுவாமிக்குப் பிரியமிராத விதமாகவும் நடந்துகொள்ள வேண்டியிருக்கும்.

செபத்தியானம் விதவைக்கு ஓயாத பிரதான அலுவலாயிருக்கவேண்டும். ஏனெனில் சுவாமிபேரில் மாத்திரம் இவள் பட்சமெல்லாம் இருக்கவேண்டியதால் இவள் சம்பாஷணையும் விசேஷமாய்ச் சுவாமியோடு இருக்கவேண்டும். இரும்பானது காந்தத்தை நோக்கிப் போக வைரமணி தடையாயிருக்கும். ஆனால் இந்த வைரமணி எடுபட்டவுடனே இரும்பு வெகுவாய்க் காந்தத்தை நோக்கிப்போம். இவ்வகையாய்த் தன் புருஷன் வாழ்நாளில் சுவாமியை நோக்கி வேண்டியபடி பேசவும் அவர் திருநேச பாசங்களைப் பின்செல்லவுங் கூடாத ஸ்திரீயின் இருதயந் தன் கணவன் மரணத்துக்குப் பின் உடனே பரலோக சுகந்த வாசனையை நாடி ஆவலாய்ப் போக வேண்டும். அப்போதுதான் உந்நத கவியின் மணவாளியின் பாவனையாய் என் கர்த்தரே சுவாமீ இப்போது நான் எனக்கே சொந்தமாதலால் என்னை முழுதும் உமக்குச் சொந்தமாக்கி உமது அருகில் என்னை இழுத்தருளும். உமது பரிமள வாசனையில் ஓடி வருவேன் என்னலாம்.

பரிசுத்த விதவைக்கு உரித்தான புண்ணியங்கள் என்னவெனில் உத்தம அடக்கவொடுக்கம், மகிமை பெருமைகளின் வெறுப்பு, கூட்டமுதலிய சந்தடிகளைவிட்டு எட்டியிருத்தல், துன்பப்பட்டவர்களுக்கு ஆறுதலாயிருந்து ஏழை பரதேசிகளைப் பராமரித்தல், இளந்தையான பெண்களை மெய்யான புண்ணியமார்க்கத்தில் நடப்பித்தல், நல்ல பிராயமுள்ள பெண்களுக்கும் எவ்விதப் புண்ணியங்களின் நன்மாதிரிகையாயிருத்தலுமாம். மேலும் வேண்டியவரையிலும் பெருமை சிலாக்கியத்துக்கு இடமிராமலும் உடுத்திக்கொள்ளுவது இவர்கள் ஆடைகளுக்கு அலங்காரமான ஆபரணமாம். தாழ்ச்சியும் பிறசிநேகமும் இவர்கள் கிருத்தியங்களுக்கு இரு ஆபரணமாம். நாணயமுந் தயாளமும் இவர்கள் நாவுக்கு இரு ஆபரணமாம். அடக்கமுங் கற்பும் இவர்கள் கண்களுக்கு இரு ஆபரணமாம். சிலுவையில் அறையுண்ட சேசுகிறீஸ்துநாதரே இவர்கள் இருதய ஸ்நேசமாயிருப்பார்.

கடைசியாய் மெய்யான விதவைஸ்திரீ திருச்சபையில் தன் பத்திச் சுகந்தத்தால் இணையிடக்கூடாத மதுரமான வாசனை வீசும் வியொலெத் என்னும் புஷ்பம்போலிருக்கிறாள். ஏறக்குறைய எப்போதுந் தனது தாழ்மையென்னும் அகன்ற இலைகளுக்குள் ஒளிந்துகொண்டிருப்பாள்; சொகுசற்ற இவள் ஆடை தவ ஒறுத்தலைக் காட்டும். பயிற்சியின்றிக் குளிர்ந்த இடத்தில் இந்தப் புஷ்பம் வளருகிறதுபோல் மகிமை சம்பத்துகளாலும் நேசபட்சங்களாலுந் தன் இருதயம் வறண்டு காய்ந்துபோகாதபடிக்கு மனுஷ சஞ்சாரச் சம்பாஷணையை விட்டெட்டி நிற்பாள். இவ்விதமாய் இவள் என்றும் நிலைநிற்பாளேயாகில் வெகு பாக்கியவதியாயிருப்பாளென்று அப்போஸ்தலர் சொல்லுகிறார்.

இதுவிஷயத்தைக்குறித்து இன்னுஞ் சொல்லவேண்டியவை பலவுண்டு. ஆனால் தன் அந்தஸ்து மேன்மையின்மட்டில் மெய்யான பற்றுதலுள்ள விதவைஸ்திரீ அர்ச். எரோணிமூஸ் என்பவர் தமது ஞானகுமாரத்திகள்போலிருந்த விதவைஸ்திரீகளுக்கு எழுதிய நிருபங்களைக் கவனமாய் வாசிக்கும்படி சொல்லுகிறதே சொல்லவேண்டியதை எல்லாஞ் சொன்னதுபோலேயாம். ஏனெனில் இந்தப் புண்ணியவதிகளுக்கு இவர் கற்பித்ததைவிட அதிகமாய்ச் சேர்த்துச் சொல்லக்கூடுமானது ஒன்றுமில்லை. ஆயினும் இவர்கள் நன்றாய் அறியவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது: மெய்யான விதவைஸ்திரீயானவள் இரண்டாம் மூன்றும் இன்னும் நான்காமுறைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறவர்களை இழிவாய்ப் பார்க்கவும் பேசவுங்கூடாது. ஏனெனில் ஓரோர் சமயங்களில் சர்வேசுரன் தமது மேலான மகிமைக்காக இவ்விதம் நடத்துவதுண்டு. தாழ்ச்சியால் அவரவர் அந்தஸ்துக்குக் குறிக்கப்பட்ட இடமேயன்றி மோட்சத்தில் வேறே மேலானவிடம் விதவைத்தனத்துக்குங் கன்னிமைத்தனத்துக்குங் கிடையாதென்று முன்னோர் போதனையை மறக்கவொண்ணாது.

41-ம் அதிகாரம்.

கன்னியர்களுக்கு இரண்டொரு வார்த்தை.

கன்னியர்களே உங்களுக்கு இரண்டொரு வார்த்தை மாத்திரஞ் சொல்லவேண்டியிருக்கிறது.

ஏனெனில் மற்றவைகளை எல்லாம் வேறே இடங்களிற் கண்டறிந்துகொள்வீர்கள். உலகில் மணம்புரிந்து வாழ உங்களுக்கு இஷ்டமாகில் நீங்கள் ஒரு விசை மணம்புரிந்துகொண்ட புருஷனுக்கு உங்கள் முதற் சிநேகத்தை முழுதுங் கொடுத்து இது விஷயத்தில் வெகு பிரமாணிக்க எச்சரிக்கையாயிருங்கள். கபடற்ற முழு இருதய நேச பட்சத்துக்குப் பதிலாய் அந்நிய பல நேச பட்சங்களால் அலைக்கழிக்கவும் முழுதுஞ் சேதமுமாய்ப் போன இருதயத்தை அவனுக்குக் கொடுப்பது பெரு மோசம் என்னலாம். ஆனால் கற்புள்ள கன்னியர்களாய் ஞான மணம்புரிந்து என்றும் உங்கள் கன்னிமகிமையைக் காப்பாற்ற விரும்புவீர்களேயாகில் உங்கள் அதிஷ்ட பாக்கியம் வெகு மேலானதே. ஆனால் பரிசுத்தத்தனத்துக்கு நிகராய் வேறொன்றையும் நேசியாதவரும் பரிசுத்த சுரூபியுமாயிருக்கிற உங்கள் பரலோகப் பத்தாவுக்கு உங்களால் ஆன எச்சரிக்கையோடு உங்கள் நேசபட்சத்தைக் காப்பாற்றுங்கள். எல்லாத்திலும் முந்தின பலன் இவருக்குச் சொந்தமாதலால் விசேஷமாய் நமது நேசபட்சம் இவருக்கு முந்தின காணிக்கையாயிருக்கவேண்டும். உங்களுக்கு அவசரமான புத்திமதி ஆலோசனை எல்லாம் அர்ச். ஏரோனிமுஸ் என்பவர் எழுதிய நிருபங்களிற் காணலாம். உங்கள் அந்தஸ்துக்கு ஒப்பாய் நீங்கள் கீழ்ப்படிந்துபோக வேண்டியவர்களாயிருப்பதால் இதற்கு உதவியாக ஓர் ஆத்தும குருவானவரைத் தெரிந்துகொண்டு அவர் சொற்படி நடந்தால் உங்கள் பரலோகப் பத்தாவுக்கு உங்கள் ஆத்தும சரீரத்தை அதிக பரிசுத்தவிதமாய் வசீகரம்பண்ணக்கூடும்.

நான்காம் பாகம்.

வழக்கமாய் வரும் பல தந்திரங்களுக்கான புத்திமதிகள்.

1-ம் அதிகாரம்.

உலக மனிதர்கள் சொல்லும் வார்த்தைகளின்மட்டில் கவனங்கொள்ளலாகாதென்பதின்பேரில்.

மெய்யான பத்தி ஒழுக்கத்தில் நீ நடப்பதை உலக மனிதர்கள் கண்டவுடனே உன்னைக் கேலி பரிகாசம் பண்ணித் துவேஷிப்பார்கள். கெட்டவர்களோ நீ கள்ளப் பத்திக்காரனென்றும் வேஷம் போடுகிறாயென்றுஞ் சொல்லுவார்கள். உலகத்தில் உனக்கு நல்ல முகங் காட்டுவார் இல்லாததால், வேறே கெதியில்லை என்று சுவாமியை மெத்த அண்டிப்போனவனாகக் காட்டுகிறாய் என்பார்கள். உன் சிநேகிதர்களோ உன்மட்டில் வெகு பிறசிநேகம் உள்ளவர்களாகக் காட்டித் தேர்ந்தெடுத்த ஞானிகளைப்போல வெகு புத்திமதி உனக்குச் சொல்லித் தம்பீ இவ்விதமாய் நீ நடப்பதால் ஒருவருக்குஞ் சகிக்காதவனாவாய். உலகில் உன் எண்ணத்துக்கு வெகு பழுதுண்டாம். ஒருவரும் உன்னை நாடார்கள். காலத்துக்கு முந்தியே தள்ளாமையாய்ப் போவாய். உன் வீட்டுக்

காரியங்கள் எல்லாம் பாழாய்ப்போம். உலகில் சீவிக்க வேண்டியபடி சீவிக்கவேண்டும். இத்தனையாயிரம் நிசிதமான வீண் காரியங்களைச் செய்யாமல் அவனவன் இரக்ஷணியம் அடையலாமென்று பல விதமாய்ப் பேசுவார்கள்.

பிரிய சகோதரமே, இவைகளெல்லாம் பிரயோசனமற்ற அல்பமான வார்த்தைகளல்லாமல் வேறல்ல. இப்படி இவர்கள் பேசுவதால் தங்கள் மூட்டாள் தனத்தை நாலுபேருக்குங் காட்டுகிறார்கள். உண்மைப்படி பார்த்தால் இவர்கள் உன் சவுக்கியத்தையுந் தேடுகிறதில்லை, உன் நலத்தையுங் கோருகிறதில்லை. நமது இரக்ஷகர் சொல்லுவதைக் கேள்: நீ உலகத்துக்குச் சம்பந்தப்பட்டவனாகில் உலகத்துக்குச் சம்பந்தப்பட்டவனாக உன்னை உலகம் நேசிக்கும். ஆனால் நீ உலகத்துக்குச் சம்பந்தப்பட்டவனாக இராதபடியினால் இதைப்பற்றியே உலகம் உன்னைப் பகைக்கிறது என்றார். இராமுழுதும் இன்னம் பல முறை தொடர்ச்சியாய் அநேகம் இராத்திரி கடுதாசி சதுரங்கம் இது முதலிய விளையாட்டுகளை மேன்குலத்தாரான ஆணும் பெண்ணும் விளையாடப் பலமுறை பார்க்கிறோம். இதைப் பார்க்கிலும் அதிக இளைப்பு அலிப்பு வருவிக்கக்கூடுமான பிரயாசை தொழிலுண்டா. இதைப் பார்க்கிலுங் கஸ்தி சலிப்பு வருவிக்கத்தக்க கவலையுண்டா. ஆகிலும் இதனைக் குறித்து உலக மனிதர் ஒரு வார்த்தையுஞ் சொல்லார். இவர்கள் சிநேகிதர் இஷ்டாள் இது விஷயத்தில் அற்பவிக்கமுங் கொள்ளார். ஆனால் ஒரு நாழி நேரந் தியானஞ் செய்வோமோ நன்மை வாங்க ஆயத்தஞ் செய்கிறதற்காக வழக்கத்தைப் பார்க்கிலுஞ் சற்று அதிகாலமே எழுந்திருப்போமோ நமக்குப் பித்தம் மேலிட்டது மிகவும் பலவீனமாயிற்று என்று அலறிப் பதறி வயித்தியனிடத்தில் ஓடி நமக்கு ஏதாகி

லும் அவுழ்தங் கொடுக்கவேண்டுமென்பார்கள். முப்பது இராத்திரி முழுதும் ஆடிப் பாடிப் போக்குவார்கள். அதைக் குறித்து ஒருவரும் ஒன்றுஞ் சொல்லார். ஆனால் சுவாமி பிறந்த திருவிழாவில் கொஞ்சங் கண் விழிப்பதைப்பற்றி மறுநாள் ஒவ்வொருவரும் இருமிக்கொண்டு தலை பளுவாய் இருக்குதென்பார். இப்படி உலகம் அநியாயமாய்த் தீர்மானஞ்செய்கிறதைப் பாராதவனார்? உலகந் தனக்குச் சம்பந்தப்பட்ட மக்கள்பேரில் எவ்வளவு தயை தாக்ஷணியம் உள்ளதாயுஞ் சுவாமியுடைய பிள்ளைகள்மட்டில் எவ்வளவு கடுமை தண்டிப்புள்ளதாயும் இருக்கிறதென்று அறியாரில்லை.

உலகத்துக்குப் பிரியப்பட நடக்கவேண்டுமாகில் அதோடு நாமுஞ் சேதமாகவேண்டும். ஆனால் உலகம் எவ்வளவோ விபரீதமானது. அதற்குப் பிரியம் வருவிக்க வேண்டுமாகில் நம்மாலில்லை, நமது இரக்ஷகர் சொல்வதைப் பார். அர்ச். ஸ்நாபக அருளப்பர் சாப்பிடாமலுங் குடியாமலும் உலகில் சஞ்சரித்தார். உலகமோ அவரை ஆவேசங்கொண்டவன் என்றது. மனுமகனோ அன்னபானம் அருந்திக்கொண்டு உலகில் சஞ்சரித்தார். உலகம் அவரைச் சமாரியன் விருந்துண்ணுகிறவன் என்றது. மெய்யாகவே பிரிய சகோதரமே, முகத்தாக்ஷணியத்தைப்பற்றி உலக மனிதரோடு கொஞ்சம் அதிகமாய்ச் சிரித்து ஆடிப் பாடி வருவோமோ இப்படியும் நடக்கலாமா என்பார்கள். இவ்விதமாய் நடவாவிட்டால் நாம் கள்ளப் பத்திக்காரர், நமது குணம் விபரீதமானதென்பார்கள். நாம் வேண்டியபடி நம்மை அலங்கரித்துக் கொள்ளுவோமாகில் அதைக் கெட்ட விதமாய்த் திருப்பிப் பேசுவார்கள். நமது உடுபாவனைகளில் கொஞ்சந் தோற்றமற்றதனமாய் இருந்தால் அற்பப் புத்தியுள்ளவர்கள் என்றும் வேண்டியபடி நடந்து

கொள்ளத் தெரியாத நாகரீகமற்றவர்கள் என்றுஞ் சொல்லுவார்கள். நாம் கொஞ்சஞ் சந்தோஷமாய் இருப்போமோ நம்மிடத்தில் அடக்கவொடுக்கம் இல்லை என்பார்கள். நாம் தவ ஒறுத்தல் செய்வோமோ நம்மிடத்தில் மனக்களரியில்லை என்பார்கள்.

உலகம் நம்மை எப்பொழுதும் விரோதக் கண்ணாற் பார்ப்பதால் அதற்கு நாம் பிரியப்படவேண்டுமானால் நம்மாற் பரிச்சேதம் ஏலாது. நமது குற்றங் குறைகளை மலைபோற் பெரிதாக்கி ஒன்றுமில்லாத காரியங்களை எல்லாம் பாவமென்று நாலு பேருக்குஞ் சொல்லிக்காட்டும். நமது அற்ப பாவங்களை எல்லாஞ் சாவான பாவமாய் ஆக்கிவிடும். பலவீனத்தால் நாம் கட்டிக்கொள்ளக்கூடுமான பாவங்களை வேண்டுமென்று அறிந்து செய்ததாக விகற்பமாய்ப் பேசும். ஆனால் தீர்ச். சின்னப்பர் சொல்லுவதுபோல் பிறசிநேகந் தயை தாக்ஷணியமுள்ளது. உலகமோ வெகு கெட்டது, பிறசிநேகந் தின்மையை நினைக்கிறதில்லை. உலகமோ எப்பொழுதும் எல்லாத்தையுந் தின்மையாய் நினைக்கும். நமது கிருத்தியங்களிற் குற்றங் காணக்கூடாதபோது நமது கருத்தைக் குற்றஞ் சாட்டிப் பேசும். கடைசியாய் ஆடுகளுக்குக் கொம்புகள் இருந்தாலுஞ் சரி இல்லாவிட்டாலுஞ் சரி அவைகள் வெள்ளையாயினுங் கறுப்பாயினும் ஓநாய்களுக்குச் சமயங் கிடைக்கும்போது அவைகளைப் பிடித்துத் தின்னாமல் விட்டுவிடுகிறதில்லை.

இத்தன்மையாய் நாம் என்னென்ன செய்தபோதிலும் உலகம் ஓயாமல் நம்மோடு போர்செய்யும். நாம் பாவசங்கீர்த்தனஞ் செய்கிறதற்குக் கொஞ்சம் அதிக நேரம்பிடிக்குமோ அவ்வளவு நேரம் பாவசங்கீர்த்தனஞ் செய்வதற்கு அப்படிப்பட்ட குற்றம் என்னதானிருக்கும் என்பார்கள். ஆனால் கொஞ்ச நேரத்துக்குள் நாம் பாவசங்கீர்த்தனத்தை முடித்து

விடுவோமோ நமது பாவங்களை எல்லாஞ் சரியாய்ச் சங்கீர்த்தனம் பண்ணுகிறதில்லை என்பார்கள். இப்படி உலகமானது நமது நடத்தைகளையெல்லாம் நுட்பமாய் ஆராய்ந்து பார்க்கும். நம்மையுமன்றி ஒருதாகிலுங் கோபமான அற்ப வார்த்தை சொல்லிவிட்டால் மெய்யாகவே நமது கெட்ட குணத்தை ஒருவருஞ் சகிக்கக்கூடாதென்று சலஞ்சாதித்தாற்போல் பேசும். நமது வீட்டுக்காரியங்களைக் கவனமாய்ப் பராமரித்து வருவோமேயாகில் நம்மை வெகு லோபியென்றழைக்கும். நாம் சாந்தமாய் மதுரகுணத்தோடு நடந்துகொண்டால் நம்மிடத்தில் அற்ப புத்தியே அல்லாமல் வேறே பெருந்தன்மையான புத்தி இல்லையென்கும்.

ஆனல் உலக மனிதர்களைக்குறித்துப் பேசும்போது அவர்கள் கோப மூர்க்கத்தைப் பெருந்தன்மையுள்ள குணமென்கும். அவர்கள் லோபித்தனத்தைச் சீரான ஒழுங்கென்றும் அவர்கள் துர்மார்க்கத்தைச் சிறந்த மனச்சுதந்தரமென்றும் அழைக்கும். எட்டுக்காற் பூச்சிகளைப்போல் தேனீக்களின் வேலைகளைக் கெடுப்பதற்குத் தகுதியானது ஒன்றுமில்லை. பிரிய சகோதரமே, கண்கெட்ட இவ்வுலகத்தை விட்டுவிடக்கடவோம். பகலில் பறந்துலாவும் பக்ஷிகளுக்குப் பயமுறுத்தும் ஆந்தையைப்போல் உலகந் தனக்கு இஷ்டமானபடி கத்திக் கூவிப் பேசட்டும். நமது கருத்தில் ஸ்திரமாய் நமது பிரதிக்கினைகளில் மாறுமலிருக்கக்கடவோம். இப்படி நாம் நிலைமையாயிருந்தால் மெய்யாகவே வேண்டுமென்று சுவாமிபேரில் பற்றுதலுள்ளவர்களாய்ப் பத்திக்கடுத்த சீவியத்தில் உட்பட்டிருக்கிறோம் என்று கண்டுகொள்ளுவோம்.

வால்நட்சத்திரங்களுங் கிரகங்களும் ஏறக்குறைய ஒரேவிதமாய் வெளிக்குப் பிரகாசமுள்ளவைகளாய்த்

தோன்றும். ஆனால் வால் நட்சத்திரங்கள் நிலையில்லா ஓர்வித நெருப்பைப்போலிருப்பதால் கொஞ்ச காலத்தில் மறைந்துபோம். இதற்கு விரோதமாய்க் கிரகங்களோ எப்பொழுதும் பிரகாசித்துத் துலங்கும். இத்தன்மையாகக் கள்ளப் பத்திக்கும் மெய்யான பத்திக்கும் வெளிக்கு வெகு வித்தியாசமில்லாததுபோல் தோன்றும். ஆனால் இவ்விரண்டையும் வெகு சுளுவாய்க் கண்டுபிடித்துக்கொள்ளலாம். கள்ளப் பத்தி வெகுநாள் நிலைக்காமல் புகைபோல் மறைந்துபோம். இதற்கு விரோதமாய் மெய்யான பத்தி எப்பொழுதும் ஸ்திரமாய் நிலையாய் நிற்கும். இப்படியாய் நாம் மெய்யான பத்திக்கடுத்த ஜீவியத்தில் நடக்க ஆரம்பிக்கும்போது உலகம் நம்மைப் பழித்துப் பரியாசம் பண்ணுவதால் நமக்கு வெகு இலாபம் உண்டு. ஏனெனில் இவ்வழியாய் நமக்குச் சிலவிசை வரக்கூடுமான அகங்கார வீண் சிலாக்கியத்தில் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம். நாம் உலகத்துக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம். உலகம் நமக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும். உலகம் நம்மைப் பைத்தியக்காரராக எண்ணுகிறது. உலகமே பைத்தியங்கொண்டதாக நாம் எண்ணக்கடவோம்.

2-ம் அதிகாரம்.

நல்ல தயிரியமாயிருக்கவேண்டும் என்பதின்பேரில்.

பிரகாசம் அழகானதாயுங் கண்களுக்கு ஏற்றதாயும் இருந்தபோதிலும் வெகு நேரம் இருளில் இருந்தபின் அதனைப் பார்த்தால் கண் கூசும். இன்னம் முகமறியாத ஒரு தேசத்தின் குடிகளோடு பழக்கப்படுவதற்கு முந்தி அவர்கள் எவ்வளவு நாகரீக வாஞ்சையுள்ளவர்களாய் இருந்தபோதிலும் எப்பொழுதும் அவர்களுடன் வேண்டியபடி கலந்து சம்பாஷிக்கக் கொஞ்சஞ் சங்கடமிருக்கும். ஆதலால் பிரிய சகோதரமே, நீ பழைய நடக்கையை விட்டுப் பத்திக்கடுத்த புதுச் சீவியத்தில் சீவிக்கத் துவக்கும்போது உன் உள்ளாந்தரங்கத்தில் வெகு கலக்க ஏக்கங்கள் உண்டாம். இலௌகிக வீணான நிசித்த காரியங்கள் யாவையும் மனப்பூர்த்தியாய் விட்டுவிட்டபின் சில சமயத்தில் கொஞ்சங் கஸ்தி அவதைரியம் உனக்கு வரக்கூடும். இச்சமயத்தில் கொஞ்சம் பொறுமையாயிரு. இதெல்லாம் போய்விடும்; புதிதான வழியில் நடக்கும்போது இப்படி சம்பவிப்பது அதிசயமல்ல. கொஞ்சங் காத்திரு. சற்றைக்குள் தேவ ஆறுதல் உனக்கு வரும். உலக வீண் சிலாக்கியங்களை நீ விரும்பி நடந்தகாலையில் உன்னோடிருந்த விவேகமற்ற உன் கூட்டாளிகள் வழியாக உனக்கு வந்த தோத்திர மகிமையை நினைத்துச் சிலவிசை விசனப்படுவாய்.

ஆனால் பிரிய சகோதரமே, சர்வேசுரன் உனக்கு மெய்யாகவே கொடுக்கவிருக்கும் நித்திய மகிமையை இழந்துவிடச் சம்மதிப்பாயோ? நீ உன் சீவிய

நாட்களில் விளையாடிய வீண் விளையாட்டுகளும் வீணாய்ப் போக்கிய காலப்போக்கும் உன் நினைவில் வந்து உன் இருதயத்தைப் பசப்பி மறுபடியும் முன்போல் நடக்க ஆசை வருவிக்கும். ஆனால் நிலையற்ற இவ்வளவு நிசிதமான காரியங்களுக்காகப் பரலோக இன்பத்தைத் தட்டிவிட உனக்குத் தைரியமிருக்குமோ? நான் சொல்வதை நம்பு. நீ நிலைமையாய் நிற்பாயானால் உனக்கு எப்படிப்பட்ட மேலான ஞான ஆறுதல்கள் கொஞ்சத்துக்குள் வருமென்றால் உலகத்திலுள்ள இன்பசுகமெல்லாம் இந்தப் பரலோக அமிர்த பானத்துக்கு முன்பாகச் சகிக்கக்கூடாத பிச்சுக்கொத்ததென்றும் பத்திக்கடுத்த சீவியத்தில் ஒரே நாள் செலவழிப்பதில் வரும் இன்பமானது இலௌகீக வாழ்க்கையில் ஆயிரவருஷகாலஞ் செலவழிப்பதில் வரும் இன்பத்தைப் பார்க்கிலும் அதிக பெரிதென்றுங் கண்டுகொள்ளுவாய்.

ஆனால் கிறீஸ்துவனுக்கடுத்த சாங்கோபாங்கமென்னும் பர்வதம் மகா உயர்ந்ததென்று கண்டு ஆ சுவாமீ இதில் என்னமாய் ஏறுவேனென்பாயோ, பிரிய சகோதரமே, கொஞ்சந் தயிரியமாயிரு. தேனீக்குஞ்சுகள் தேனைச் சேர்ப்பதற்குப் புஷ்பங்கள்பேரிலென்கிலும் மலையின்மீதிலென்கிலும் அடுத்த குன்றுகளிலென்கிலும் பறந்துபோகாது. ஆனால் இவைகள் தாய்த் தேனீக்கள் முஸ்திப்பு பண்ணின தேனைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குடித்துவருவதால் இவைகளுக்குச் சிறகுகள் உண்டாகி நல்ல பலமுண்டாம். இப்படி காலத்தோடு இவைகள் வெகு உயரமாய்ப் பறந்துலாவும்.

இத்தன்மையாகவே நாமும் பத்தியில் இன்னந் தேனீக் குஞ்சுகளாயிருக்கிறோம். நமது ஆசைப்படி கிறீஸ்துவனுக்கடுத்த சாங்கோபாங்கமென்னுஞ் சிகரம்வரைக்கும் நம்மால் ஏறக் கூடாது. ஆனால் நம

தாசை பிரதிக்கினைகளால் நம்மைப் பலப்படுத்திக் கொள்ள ஆரம்பிப்போமேயாகில் கொஞ்சத்துக்குள் நமக்குச் சிறகுகள் முளைக்கும். இத்தன்மையாய் ஒரு நாள் நாம் மெய்யான ஞான தேனீக்களாகி நம திஷ்டப்படி பறந்தேறுவோம். அதுவரையில் அர்ச் சியசிஷ்டவர்கள் நமக்குக் காண்பித்த நல்ல படிப்பி னையென்னுந் தேனை உண்டு வளர்ந்து நமது சீவிய நாட்களில் மாத்திரமல்ல இன்னம் மறு சீவியத்தி லுஞ் சதாகாலத்துக்கும் பறந்தேறி இளைப்பாறும் படி மாடப்புறுவைப்போல் நமக்குஞ் சிறகுகளைக் கொடுக்கும்படி சுவாமியைப் பார்த்து வேண்டிக் கொள்வோம்.

—(*)—

3-ம் அதிகாரம்.

தந்திரங்களின் தன்மையைக்குறித்தும்
தந்திரத்தை அநுபவிப்பதற்தும்
அதற்குச் சம்மதிப்பதற்தும் உள்ள
வித்தியாசத்தைக்குறித்தும்.

பிரிய சகோதரமே, ஒரு வங்கிஷபதியாண ஸ்திரீயா னவள் தன் புருஷனால் வெகுவாய்ச் சிநேகிக்கப்படுகி றதாகவும் தன் புருஷன்மட்டில் இவளுக்குள்ள பக்ஷ பிரமாணிக்கத்தைக் கெடுப்பதற்குக் காமாதுரன் ஒரு வன் கருத்துக்கொண்டு தன் கெட்ட கருத்துக்கு இந்த மன்னவதியை இசையச் செய்வதற்குத் தன்னைப் போல் துற்சனனான ஒரு தூதனை இந்தம்மட்டிடத் தில் அனுப்புவதாகவும் உத்தேசித்துக்கொள். மூந்த

மூந்த இந்த் தூதன் தன் எசமான் கருத்தை இவளுக்குச் சொல்லிக்காண்பிக்கின்றான். இரண்டாவது.—இந்த முன்னவதியானவள் இவன் கருத்துக்கு ஒன்று பிரியங்கொள்ளுகிறாள் ஒன்று பிரியங்கொள்ளுகிற தில்லை. மூன்றாவது.—இதற்கு இவள் சம்மதிக்கிறாள் அல்லது சம்மதிக்காமல் தள்ளிவிடுகிறாள். இத்தன்மையாகவே பசாசு உலகஞ் சரீரம் ஒரு புண்ணியாத்துமஞ் சர்வேசுரனோடு ஒருமித்து ஐக்கியப்பட்டிருப்பதைக் கண்டு தந்திர சோதனைகளை அதற்கு அனுப்புகின்றன. இந்தத் தந்திரத்தால் மூந்தமுந்த இன்ன பாவத்தைச் செய்ய வேண்டுமென்று அந்த ஆத்துமத்துக்குக் காட்டுகின்றன. இரண்டாவது.—ஆத்துமம் ஒன்று இதில் பிரியங்கொள்ளுகிறது ஒன்று பிரியங்கொள்ளுகிறதில்லை. மூன்றாவது.—இதற்கு இந்த ஆத்துமம் ஒன்று சம்மதிக்கிறது ஒன்று சம்மதியாமல் தள்ளிவிடுகிறது. இப்படி பாவக்குழியில் இறங்குவதற்கு மூன்று படி உண்டு. முதற் படி தந்திரம், இரண்டாம்படி அதிற் கொள்ளும் பிரியம், மூன்றாம் படி அதற்குச் சம்மதி. இந்த மூன்று படிகளையும் எவ்விதக் குற்றங்களிலும் அவ்வளவு தெளிவாய் எப்பொழுதும் நாம் பார்க்கக் கூடாவிட்டாலுங் கனமான பாவங்களில் வெகு தெளிவாய்ப் பகுத்தறியலாம்.

எந்தப் பாவத்தின்பேரிலென்கிலும் நமது சீவிய காலமெல்லாம் நமக்குத் தந்திரம் வந்தபோதிலும் நாம் இதில் பிரியங்கொள்ளாமலும் இதற்குச் சம்மதியாமலும் இருந்தால் இதனால் சர்வேசுரனுக்கு நாம் ஏற்காதவர்களாய்ப் போகிறதில்லை. இதற்குக் காரணம் என்னவெனில் தந்திரத்தில் நாமாய் வேணுமென்று நிற்கிறதில்லை. தந்திரமே நம்மை அலைக்கழிக்கிறது. நாம் அதில் பிரியங்கொள்ளாதபடியால் அதினால் நமக்குத் தப்பிதமில்லை. அர்ச் சின்னப்பர்

நெடுங்காலம் பலத்த தந்திர சோதனைகளை அநுபவித்தார். இதைப்பற்றி இவர் சர்வேசுரனுக்குப் பிரியப்படாதவராய்ப் போகாததுமன்றி, இதனால் சர்வேசுரனுக்கு வெகு மகிமை வரும்படி நேரிட்டது. முத்திப்பேறுபெற்ற பொலீஞ் ஆன்ழெலென்னும் புண்ணியவதி எவ்வளவு கொடிய சிற்றின்ப தந்திரங்களை அநுபவித்தாளென்றால் அவைகளை இவள் சொல்லிக்காட்டும்போது எல்லோருக்கும் வெகு இரக்கப் பரிதாபமுண்டாகும். அர்ச். பிராஞ்சீஸ்கென்பவருக்கும் அர்ச். ஆசீர்வாதப்பருக்கும் வெகு கடின தந்திரங்கள் வந்தன. இவைகளை அமர்த்தித் தள்ள அர்ச். பிராஞ்சீஸ்கென்பவர் முட்செடிகளில் விழுந்து புரண்டுருண்டார். அர்ச். ஆசீர்வாதப்பர் பொறுக்கக்கூடாத குளிருள்ள உறைந்த பனியில் படுத்திருந்தார். ஆயினும் இதைப்பற்றி இவர்கள் சர்வேசுரனுடைய வரப்பிரசாத நன்மையை இலவலேசமும் இழந்துபோனதில்லை. ஆனால் தேவ அருள் ஏராளமாய் இவர்களுக்கு வர வழியாயிருந்தது.

ஆதலால் பிரிய சகோதரமே, தந்திரசோதனைகளில் தைரியமாயிருக்கவேண்டும். இவைகள் உனக்குப் பிரியப்படாமல் இருக்குந்தனையுந் தோர்வை அடைந்ததாக நினையாதே. ஏனெனில் நாம் தந்திரத்தை அநுபவிப்பதற்கும் அதற்குச் சம்மதிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கவேண்டும். நமக்கு வருந் தந்திரங்கள் நமக்குப் பிரியப்படாமலிருந்தும் அந்தத் தந்திரங்களை நாம் அநுபவிக்க நேரிடுகிறது. ஆனால் நமக்கு வருந் தந்திரங்கள் நமக்குப் பிரியப்படாமல் அவைகளுக்கு நாம் சம்மதிக்கிறது கூடுமானதல்ல. ஏனெனில் வழக்கமாய்ப் பிரியமானது நம்மைச் சம்மதிக்கச் செய்வதற்கு வழியாம். நமது இரக்ஷணியத்தின் சத்துருக்கள் தங்கள் மனதுக்கு வந்தபடி நயபயங்காட்டித் தங்கள்

வலையிற் பிடிக்கத் தேடும். எப்போது நமதிருதயத்தில் நுழையலாமோவென்று பசிகொண்ட சிங்கம்போல் நமதிருதய வாசற்படி அருகாமையில் நின்றுகொண்டு தங்களால் ஆனவளவில் நாலாவிதத்திலும் பிரயாசப்பட்டபோதிலும் அதில் பிரியங்கொள்ளக் கூடாதென்கிற தீர்மானம் நமக்கிருக்கும்வரையில் இதனால் சர்வேசுரனுக்கு வருத்தம் வருவது கூடாத காரியம்.

இப்படியே நான் முன் உத்தேசமாய்ச் சொல்லிக்காட்டிய மன்னவதி தன்னிடத்தில் வந்த தூதனுக்குச் செவிகொடாமல் அருவருத்துத் தள்ளிவிட்டதை இவள் புருஷன் அறிந்தால் இவள்பேரில் அதிக பக்ஷமாயிருப்பானேயல்லாமல் இதனால் தன் பெண்சாதியின்மட்டில் அற்ப வருத்தத்துக்கும் இடங்கொடான். ஆயினும் ஆத்துமத்துக்கும் இந்த மன்னவதிக்கும் ஒரு வித்தியாசமுண்டு. அதென்னவெனில் மன்னவதி தனக்குத் தூதன் சொல்லியதைக் கேட்டுத் தன்னிஷ்டப்படி அவனுக்குச் செவிகொடாமல் அவனைத் துரத்திவிடலாம். இதற்கு விரோதமாய் எப்பொழுதுந் தந்திரத்துக்குச் சம்மதியாமலிருக்க ஆத்துமத்துக்குச் சத்துவமிருந்தபோதிலும் அந்தத் தந்திரத்தை அநுபவியாமலிருப்பது ஆத்தும சத்துவத்தில் அடங்கியதல்ல. ஆதலால் நெடுங்காலந் தந்திரம் நீளித்திருந்தபோதிலும் நமக்கது பிரியப்படாமலிருக்குந்தனையும் நமக்கது தின்மை வருவிக்க அதனால் கூடாது.

ஆனால் தந்திரத்தை முன்னிட்டு வரும் பிரியத்தைக் குறித்து இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டும். நமது ஆத்துமத்தில் மேலாங்கிஷங் கீழாங்கிஷமென்னும் இரண்டு பங்குண்டு. கீழாங்கிஷமானது எப்பொழுதும் மேலாங்கிஷத்தைப் பின்பற்றி நடக்கிறதில்லை. இது தன் இஷ்டப்படி தானாய்

நடக்கும். இதனால் பலமுறை மேலாங்கிஷம் தந்திரத்துக்குச் சம்மதியாமலிருக்க இன்னம் இதின் மனதுக்கு விரோதமாகத்தானே பலமுறை கீழாங்கிஷம் தந்திரத்தில் பிரியங்கொள்ளுகிறதுண்டு. இந்தச் சண்டையைக்குறித்துத்தான் அர்ச். சின்னப்பர் தமது சரீரந் தமது புத்திக்கு விரோதமாய் எதிர்க்கிறதென்றும் அவையவங்களின் முறைமை ஒன்றுண்டென்றும் புத்தியின் முறைமை வேறொன்றுண்டென்றுஞ் சொல்லுகின்றார்.

பிரிய சகோதரமே, சாம்பல் படர்ந்த அடுப்பை நீ பார்த்திருப்பாயே. வெகுநேரத்துக்குப் பிற்பாடு அதில் நெருப்பெடுக்க வந்தால் நடுவில் இரண்டொரு பொறி அகப்படும். அதுவும் நன்றாய்க் கிண்டிப்பார்த்தால் மாத்திரம் அகப்படும். அதைக்கொண்டு அவிந்துபோன மற்றக் கரிகளை மறுபடியும் பற்றவைக்கலாம். மகா பலத்த தந்திரங்களுக்கு நடுவே நமக்கு ஞானசீவியமாயிருக்கிற தேவசிநேகமும் இதற்கு ஒத்ததாயிருக்கிறது. ஏனெனில் தந்திரம் கீழாங்கிஷத்தில் இன்பசுகத்தை வருவிக்கையில் ஆத்துமத்தை முழுமையுஞ் சாம்பலால் மூடிவிட்டு அதிலிருக்குந் தேவசிநேகத்தை ஏறக்குறைய ஒன்றுமில்லாமையாய் ஆக்கிவிடுகிறதுபோலத் தோன்றும். ஏனெனில் இந்தத் தேவசிநேகம் வெளியிற் காணப்படுகிறதில்லை. நமதிருதயத்துக்கு நடுவிலும் புத்திக்குள்ளும் இருக்கிறது. இன்னும் அது இருக்கிறதோ இல்லையோவென்று கண்டுபிடிப்பது எவ்வளவு பிரயாசையாயிருக்கிறதெனில் பலமுறை அதில் இல்லாததுபோலத் தோன்றும். ஆயினும் உண்மையாகவே அதிலிருக்கிறது. ஏனெனில் நமது ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் எல்லாம் அதலகுதலமாயிருந்தபோதிலும் பாவதந்திரத்துக்குச் சம்மதிக்கலாகாதென்கிற பிரதிக்கினை நம்மிடத்தில் இருப்பதுமன்

றிக் கீழ்ராங்கிஷத்துக்குப் பிரியமாயிருக்குந் தந்திரத்தால் உண்டாகும் இன்பசுகம் மேலாங்கிஷத்துக்குப் பிரியப்படாமலுமிருக்கிறது. இத்தன்மையாய்த் தந்திரசோதனை நம்து மனதைச் சுற்றிச் சூழ்ந்திருந்த போதிலும் நமது மனதிலிருக்கிறதில்லை. இதைக் கொண்டு, இப்படிப்பட்ட பிரியம் மனது பொருந்தினதல்லவென்றும் ஆதலால் பாவமாயிருக்கக் கூடாதென்றும் அறியவேண்டியது.

4-ம் அதிகாரம்.

இதுவிஷயத்தைச் சேர்ந்த இரண்டு சின்ன சரித்திரங்கள்.

பிரிய சகோதரமே, இதனை நீ நன்றாய்க் கண்டுபிடிப்பது, வெகு அவசியமானதாய் இருப்பதால் இதைக் குறித்துக் கொஞ்சம் விரிவாய்ப் பேசவேண்டும். அர்ச். எரோனிமுசென்பவர் சின்னதோர் சரித்திரஞ் சொல்லுகிறார். கொடிய அரசனொருவன் பலவித உபாதைகளால் புண்ணியாத்துமாவான வாலனொருவனைத் தன் மனதுக்குச் சம்மதிக்கச் செய்யத் திராணியற்றவனாய் வேறே விதமாய் அவனைக் கெடுக்கச் சொகுசான கட்டிலில் படுக்கவைத்துப் பட்டு நாடாக்களால் அவனை அதில் இறுகக் கட்டி இவன் மனதைத் திருப்புவதற்காக இவனண்டையில் ஒரு பெண்பிள்ளையை அனுப்பி நாலாவிதத்திலும் இவனைத் தந்திரம் பண்ணும்படி செய்தான். மெய்யாகவே அத்தருணத்தில் இவன் வெகு பலமான

தந்திரத்துக்கு ஆளாய் இருந்தானென்பதற்கு அற்ப சமுசயமுமில்லை. இவளுடைய பஞ்சேந்திரியங்களும் புத்தி சத்துவங்களும் அத்தருணத்தில் அநுபவித்ததை ஆர் கண்டுபிடிக்கக்கூடும்?

ஆனால் இப்படிப்பட்ட சுகபோகமான தந்திரங்களுக்குள்ளே தன் இருதயந் தளரவில்லையென்றும் இதுகளுக்கெல்லாம் எவ்விதத்திலுஞ் சம்மதிக்கிறதில்லையென்றும் எல்லோருந் திஷ்டாந்தமாய் அறியும்படி செய்தாள். அதெவ்வாறெனில் இவள் தன் சரீர முழுதுந் தனக்கு விரோதமாய் எதிர்த்துப் போர் செய்வதையுந் தன் நாவு தவிர வேறொரு அவையவங்களுந் தன் சத்துவத்தில் இராமலிருப்பதையுங் கண்டு பற்களால் தன் நாவை இரண்டாய்க் கடித்து மகா கொடிய கொலைப்பாதகர்களிலும் அதிக கொடிய சண்டாளியாகிய இந்தத் துர்ச்சனப் பெண்பிள்ளை முகத்தில் காறித் துப்பினாள். இத்தன்மையாய் இந்த வாலனை நானாவித உபத்திரவங்களால் வெல்லுகிறதற்குத் திராணியற்ற இந்தக் கொடிய இராயன் இன்பசுகங்களால் வெல்ல விழலாகவே பிரயாசப்பட்டான்.

அர்ச். சியேன் கத்தரீனம்மாள் இது விஷயத்தில் அநுபவித்த கடும்போரானது இதுபோலவே அதிசயத்துக்குரியதாய் இருக்கிறது. ஒருநாள் பசாசு இந்தம்மாளுடைய கன்னிமையைச் சோதிக்க இவளைத் தொடாமலே தன்னாலான தந்திரங்களையெல்லாம் இந்தம்மாளுக்குச் செய்யச் சுவாமியிடத்தில் உத்தாரம் பெற்றது. இந்த உத்தாரத்தின்படி நானாவிதக் கெட்ட நினைப்புகளையும் இந்தம்மாளுக்கு வருவித்தது. மேலும் இவளை அதிக நொந்தனை செய்வதற்காகத் தன்னோடு வேறநேகம் பசாசுகளைக் கூட்டிக்கொண்டு பல ரூபங்களை எடுத்து இந்தம்மாள் அண்டையில் வந்து அசங்கியமான பல கோரணிக

ளைச் செய்து மகா நிசிதமான வார்த்தைகளை எல்லாஞ் சொல்லிற்று. ஆனால் இவைகளெல்லாம் வெளியில், இந்தம்மாளைச் சுற்றிலும் நடந்தபோதிலும் பஞ்சேந்திரியங்கள் வழியாக இந்தம்மாளுடைய இருதயத்தில் இவைகள் நுழையாமலிருந்ததில்லை. இந்தம்மாளே சொல்லுகிறதுபோல இருதய முழுதும் இதனால் நிரம்பியிருக்க மேலாங்கிஷத்தைச் சேர்ந்த மனது மாத்திரம் இந்தக் கொடிய புசலால் அலைக்கழிக்கப்பட்டதில்லை. இந்தத் தந்திர சோதனைகளெல்லாம் நெடுநாள் நீளித்திருந்தது.

கடைசியாய் ஒருநாள் நமதாண்டவர் அந்தம்மாளுக்குத் தெரிசனமானார். அப்போது அந்தம்மாள் என் பிரிய தேவனே என்னிருதயம் இருளில் அமிழ்ந்தி இத்தனை அசுத்தங்களுக்குள் இருந்தபோது நீர் எங்கே இருந்தீரென, என் மகளே உன்னிருதயத்துக்குள் இருந்தோமென்றார். ஆனால் என்னிருதயத்தில் இவ்வளவு அசுத்தம் நிறைந்திருந்தபோது அதில் நீர் என்னமாயிருக்கக் கூடும். இவ்வருவருப்புக்குரிய நிசிதமான இடங்களிலும் வசிக்கின்றீரோ என்று கேட்க, அதற்கு ஆண்டவர் என் பிரிய குமாரத்தியே உன் இருதயத்திலிருந்த இந்த அசுத்த நினைப்புகள் உனக்குப் பிரியமாயிருந்ததோ அல்லது கஸ்திக்குரியவையாய் இருந்ததோவென்றார். ஆ சுவாமீ எனக்கு மகா கஸ்திவருத்தமாய் இருந்ததென்று கத்தரீனம்மாள் சொல்ல, உன் இருதயத்துக்குள்ளே மறைவாய் வாசமாயிருந்த நாமேயன்றி வேறே ஆர் உன் இருதயத்துக்குள் இந்தக் கஸ்தி வருத்தத்தை வருவித்ததென்று ஆண்டவர் கேட்டு என் குமாரத்தியே நானே உன் இருதயத்துக்குள் இருந்திராவிட்டால் உன் மனதைச் சுற்றிலுஞ் சுற்றிக்கொண்டு அதில் நுழையத் திராணி இல்லாமலிருந்த இந்தக் கெட்ட நினைப்புகளெல்லாம் வெகு எளிதாய் உன்

இருதயத்தில் நுழைந்திருக்கும் நீயும் அவைகளை மனப்பிரீதியாய் ஏற்றுக்கொண்டிருப்பாய். இதனால் உன் ஆத்துமத்துக்கு மரணம் வந்திருக்கும். நாமே உனக்குள்ளிருந்து வருவித்த தைரியங் கஸ்தியைக் கொண்டு உன்னாலான வரையில் தந்திரத்தைத் தள்ளினாய். மேலும் நீ ஆசித்தபடி தந்திரத்தை முழுதுந் தள்ள உன்னால் கூடாமற்போனதால் தந்திரத்தின்பேரிலும் உன்பேரிலுந்தானே மகா வெறுப்பு பகையை அநுபவித்தாய். இத்தன்மையாய், இந்தத் தந்திரங்களால் உனக்கு வெகு லாபமும் பேறுபலனும் வந்ததுமன்றி உன் புண்ணியத்துக்கு அதிக பலனும் உண்டாயிற்றென்றார்.

பிரிய சகோதரமே, தேவசிநேக அக்கினி வீற்றிருந்த இந்தம்மாளுடைய இருதயத்தைச் சாம்பல் எப்படி மூடிக்கொண்டதென்று பார்த்தாயல்லோ. இன்னந் தந்திரமும் அதினாலுண்டாகும் பிரியமுந்தானே இவளிருதயத்தில் நுழைந்து மனதைச் சூழ்ந்துகொண்டதே. ஆயினுந் தேவ ஒத்தாசையால் மாத்திரம் இவள் மனதைச் சுற்றிலுஞ் சூழ்ந்து நெருங்கியிருந்த பாவத்துக்குச் சம்மதி கொடாமல் ஓயாமல் இதனை அருவருத்துப் பகைத்து வெறுத்துத் தள்ளும்படி நேரிட்டது. மெய்யாகவே சுவாமியை ஓர் ஆத்துமஞ் சிநேகிக்கும்போது தனக்குள் சுவாமி இருக்கிறாரோ இல்லையோவென்றும் அவருடைய நேசபட்சத்தை இழக்காதபடிக்குத் தந்திர சோதனைகளில் இவ்வளவாய்ப் போராடியுந் தேவசிநேக அக்கினி தன்னிடத்தில் இருக்கிறதோ அவிந்துபோயிற்றோ என்று முதலாய் அறியாமலும் இருப்பது அந்த ஆத்துமத்துக்கு எவ்வளவோ சஞ்சல வருத்தத்துக்குரியதாயிருக்கவேண்டும். ஆனால் கர்வேசுரன்பேரில் பக்ஷமுள்ளவன் தேவசிநேகத்தைப் பற்றியுந் தேவசிநேகத்தைக் கொண்டும் போராடினு

லும், அந்தச் சிநேகந் தன்னிடத்தில் இருக்கிறதோ இல்லையோவென்று அறியாமல் அந்தச் சிநேகத்துக் காகத்தானே துன்பப்பட்டு யுத்தஞ்செய்யும்படி செய்வது தேவசிநேகத்தின் சாங்கோபாங்க உச்சித மேன்மையாம்.

5-ம் அதிகாரம்.

தந்திரத்திலிருக்கும் ஆத்துமத்துக்குத் தேற்றரவு.

பிரிய சகோதரமே, மேற்சொல்லிய பெருந் தந்திர சோதனைகள் சுவாமி தமது உந்நத சிநேக பரிசுத்த பருவதத்தில் உயர்த்த மனதாயிருக்கும் ஆத்துமங்களுக்கு மாத்திரம் வரும்படி சம்மதிக்கிறார். ஆனால் இதைப்பற்றி இந்த ஆத்துமங்கள் சர்வேசுர னுடைய சிநேக பருவதத்தில் நிச்சயமாய் வந்து சேருமென்று சொல்லக் கூடாது. ஏனெனில் இவ் விதப் பலமான தந்திரங்களில் நிலைமையாய்த் தயிரியமாய் இருந்தவர்கள் பிற்பாடு தேவ அருளுக்கு எப்பொழுதும் பிரமாணிக்கமாய் அமைந்துபோகாத தால் பலமுறை மகா சொற்ப தந்திரங்களில் தோர்வை அடையும்படி நேரிட்டது. ஆதலால் நான் உனக்குச் சொல்வது என்னவெனில், இந்தப் பெரிய தந்திர சோதனைகள் எப்போதாகிலும் உனக்கு வந்து அவைகளால் அலைக்கழிக்கப்பட்டு வருத்தப்படுவாயேயாகில் சர்வேசுரன் உனக்கு விசேஷ அநுக்கிரகஞ் செய்கிறாரென்றும் இதனால் உன்னைத் தமது

கண்களுக்கு முன்பாக மேன்மைப்படுத்த இஷ்டமாய் இருக்கிறதென்றும் ஆயினும் பெரிய தந்திர சோதனைகளை எல்லாஞ் செயித்த பிற்பாடு தேவ உவுதலுக்கு எப்பொழுதும் பிரமாணிக்கமாய் இருந்தால் மாத்திரஞ் சொற்ப தந்திரங்களை நீ செயிக்கலாமென்றும் அறிந்து எப்பொழுதும் பயபக்தி தாழ்ச்சியோ டிருக்கவேண்டும்.

இதிப்படியிருப்பதால் உனக்கு என்னென்ன தந்திரங்கள் வந்தபோதிலும் இன்னும் அவைகளால் உனக்கு எப்படிப்பட்ட பிரியம் வந்தபோதிலும் இந்தத் தந்திரங்களுக்கும் அதனால் வரக்கூடுமான பிரியத்துக்கும் உன் மனஞ் சம்மதியாதபரியந்தம் அற்ப கலக்கத்துக்கும் இடங் கொடாதே. ஏனெனில் இதனால் சர்வேசுரனுக்கு நிந்தனை வருகிறதில்லை. ஒருவன் மூச்சடைத்து செத்தவனைப்போலிருக்கும்போது இவனுக்கு இன்னம் உயிரிருக்கிறதோ இல்லையோவென்று அறிய இவன் மார்பின் மீது கைவைத்துப் பார்ப்பார்கள். இலேசாய்க் கொஞ்சம் மார்பு அடிக்குமேயாகில் இன்னம் உயிர் போகவில்லை என்று தீர்மானிப்பார்கள். மேலுந் தங்க மருந்து மூக்கில் முகரக் கொடுப்பதால் மறுபடியும் நினைவு வரும்படி செய்யலாம். இத்தன்மையாய்த் தந்திரங்களின் பலத்தால் நமது ஆத்துமத்துக்கு முழுதுஞ் சத்துவம் போய்ச் சோர்ந்து விழுந்து ஞான சீவியம் போய்விட்டதாகப் பலமுறை தோன்றுகிறதுண்டு. ஆனால் இதற்கு மெய்யாகவே ஞானவுயிர் போய்விட்டதோ இல்லையோவென்று அறிவதற்கு இருதயத்தின்மீது கைவைத்துப் பார்க்கக்கடவோம்.

நமது இருதயமும் மனசுந் தந்திரத்துக்கும் அதின் பிரியத்துக்குஞ் சற்றுஞ் சம்மதியாமல் சாக்கிரதையாய் ஞான சீவனைக் காப்பாற்றுகிறதோ இல்லை

யோவென்று பார்க்கக்கடவோம். ஏனெனில் நம திருதயத்தில் எந்தத் தந்திரத்துக்கும் அதின் பிரியத்துக்குஞ் சம்மதிக்கக்கூடாதென்கிற மனமிருக்குந்தனையும் நமது ஆத்துமத்தின் மெய்யான சீவியமாகிய தேவசிநேகம் நம்மிடத்தில் உண்டென்றும் நமது இரக்ஷகர் சேசுகிறீஸ்துநாதர் நமது இருதயத்தில் மெய்யாகவே இருக்கிறாரென்றும் ஆனால் ஒளிந்துகொண்டாற்போல் மறைவிடமாயிருக்கிறாரென்றும் நிச்சயமாய் அறிந்துகொள்வோம். இவ்வகையாய் அநுதினம் நாம் செய்யுந் தியானத்தாலும் அடிக்கடி நாம் பெறுந் தேவத்திரவிய அநுமானங்களாலுஞ் சர்வேசுரன்பேரில் நாம் வைக்கும் நம்பிக்கையாலும் நமக்கு வேண்டிய பலமுண்டாகி மகா இன்பமான உத்தம சீவியத்திற் சீவிப்போம்.

6-ம் அதிகாரம்.

தந்திரமும் அதினால் உண்டாகும் பிரியமும் எப்படி பாவமாயிருக்கக்கூடும் என்பதின்பேரில்.

நாம் முன் உதாரணமாகச் சொல்லிக் காட்டிய மன்னவதிபிடத்தில் தூதன் வந்து சொல்லிய விஷயத்தைக் குறித்து இவளை இகழக் கூடாது. ஏனெனில் நமது உத்தேசப்படி இவள் மனதுக்கு விரோதமாய் இப்படி நேரிட்டது. ஆனால் இதற்கு விரோதமாய் இவளே இதற்குக் காரணமாயிருந்திருப்பாளேயாகில், அதெப்படியெனில் இவளைத் தேடி வந்த

பத். 37

வனுக்குப் பிரியப்பட வேண்டுமென்று இவள் நடந்துகொண்டவிதத்தால் இவனுக்கு இந்தக் கெட்ட கிருத்து வந்திருக்குமேயாகில் இப்படி இவனைத் தேடிவந்ததற்கு இவளே காரணமாயிருப்பதால், இவளே குற்றவாளி என்பதற்குச் சமுசயமில்லை. இவள் இதுவிஷயத்தில் ஒன்றும் அறியாதவளைப்போலவும் இதற்குச் சம்மதியாதவளைப்போலவுங் காட்டிக்கொண்டபோதிலும் இவள் கண்டனைக்கும் இகழ்ச்சிக்கும் உரியவளாயிருக்கிறுள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இத்தன்மையாய்ச் சிலவிசை நமக்கு வருந் தந்திரமே நமக்குப் பாவமாகும், ஏனெனில் நாமே இதற்குக் காரணமாயிருப்பதால்தான். இவ்வகையாய் மிஞ்சின ஆசையோடு விளையாடுவதால் ஒருவனுக்குக் கோபந் தேவதூஷணம் வருகிறதாயிருந்தால் இப்படிப்பட்ட தந்திரம் அவனுக்கு வருவதற்கு இன்னின்ன விளையாட்டுக் காரணமாயிருக்குமாகில் எத்தனை விசை அந்த விளையாட்டுகளை விளையாடுவானே அத்தனை விசையும் அவன் பாவங் கட்டிக்கொள்வான். இப்படி விளையாட்டில் இவனுக்கு வருந் தந்திரங்களுக்கெல்லாம் இவனே குற்றவாளியாவான். இதே பிரகாரம் ஒருவன் இன்ன மனுஷர்கள் கூட்டத்திற் போவதால் தந்திரத்துக்கும் பாவத்துக்கும் இடமாயிருக்கிறதை அறிந்தும் அதில் அவன் வேணுமென்று போவானேயாகில் அந்தக் கூட்டத்தில் அவனுக்கு வரக்கூடுமான தந்திரமெல்லாத்துக்கும் அவனே குற்றவாளியாவன்.

தந்திரத்தால் வரும் பிரியத்தைத் தள்ளக் கூடுமாயிருக்கும்போது தள்ளாமல் அதை ஏற்றுக்கொள்ளுவது எப்பொழுதும் பாவம். இதில் வைக்கிற பிரியமுஞ் சம்மதியும் எவ்வளவுக்குப் பூரணமானவையுமாய் நீளித்தவையுமாயிருக்குமோ அவ்வளவுக்கும்

பாவம் கனமாயிருக்கும். மேற்சொல்லிய மன்னவதி தூதன் சொல்லிய துஷ்ட காரியத்தைக்கேட்டுக்கொள்ளுவதுடன் இதிற் பிரியம் வைத்துச் சந்தோஷமாய் இதிற் சிந்தையாயிருப்பாளேயாகில் மெய்யாகவே வெகு குற்றவாளியாயிருப்பாள். ஏனெனில் இவள் தூதன் சொல்லுங் காரியத்துக்கு முழுதுஞ் சம்மதிக்க மனதில்லாதவளாயினும் வேண்டுமென்று மனது பொருந்தி இதின்பேரில் வைக்குஞ் சிந்தையால் வரும் பிரியத்துக்குச் சம்மதிக்கிறாள். இப்படி வேணுமென்று தகாத காரியத்தின் மேல் தன் இருதயப் பற்றுதலை வைப்பது எப்பொழுதுங் குற்றம், இந்த இருதயப் பற்றுதலில் நான் தப்பிதம் அடங்கியிருக்கிறது. இதன்றிப் பஞ்சேந்திரியங்களால் உண்டாகுந் தோற்றம் பாவமாகாது.

ஆதலால் எந்தப் பாவத்தின்பேரிலாவது உனக்குத் தந்திரம் வரும்போது அந்தத் தந்திரம் வருவதற்கு மனதுபொருந்தி இடங்கொடுத்தாயோவென்று யோசித்துப்பார். ஏனெனில் நீயாய் வலியத் தேடிப்போன ஆபத்தை முன்னிட்டுத் தந்திரமே உன்னைப் பாவ அந்தஸ்தில் வைக்கிறது. தந்திரத்துக்கான சமயத்தை எளிதாய்த் தள்ளக் கூடுமாயிருந்து இதனால் வருந் தந்திரத்தை முன்னுதாய் நீ பார்த்தாயினும் அல்லது முந்திப் பார்க்க வேண்டியவனாயிருந் திருப்பாயேயாகில் அப்போதுதான் மனது பொருந்தித் தந்திரத்துக்கு இடங்கொடுத்தாயென்று சொல்லவேண்டும். ஆனால் தந்திரத்துக்கு நீ இலவலேசமும் இடங்கொடுத்திராவிட்டால் எவ்விதத்திலும் நீ குற்றவாளியாகமாட்டாய்.

தந்திரத்துக்குப்பின் வரும் பிரியத்தைத் தள்ளக்கூடுமாயிருந்தும் அதனைத் தள்ளாதபோது வேணுமென்று அதனை எவ்வளவு நேரந் தள்ளாமலிருந்தோமோ அந்த நேரத்துக்கும் அதிற் கொண்ட

பிரியத்தின் காரணத்துக்கும் ஒத்தபடி எப்பொழுதும் பாவமும் இருக்கும். ஒரு ஸ்திரீ இச்சகமான ஒருவன் பேச்சுக்கு அற்பமும் காரணமாயிராவிட்டாலும் அதிற் பிரியம் வைப்பாளேயாகில் இவள் பிரியத்துக்கு அந்த இச்சகமான வார்த்தையேயல்லாமல் வேறே ஒரு முகாந்தரமுமிராவிட்டாலும் எப்பொழுதுங் குற்றவாளியாயிருப்பாள். ஆனால் ஒருவன் தன் மட்டில் இவளுக்குப் பக்ஷம் உண்டாகும்படி மகா நேத்தியாய் வீணை முதலிய வாத்தியங்களை வாசிப்பானேயாகில் இவனுடைய தகாத எண்ணத்தின்மட்டில் இவள் பிரியம் வையாமல் இவன் வாசிக்கும் வீணையின் இனிய இராகத்தின்மட்டிற் பிரியப்படுவாளேயாகில் இவளுக்கு பாவமாயிராது. ஆகிலும் தன்னைத் தேடி விரும்பவேணுமென்கிற ஆசை இவளுக்கு வராதபடிக்கு மேற்சொல்லிய பிரியத்துக்கு இவள் நெடுநேரம் இடங்கொடுக்கப்போகாது.

இத்தன்மையாகவே என் சத்துராதியை நான் பழிவாங்குவதற்கான உபாய தந்திரங்களை வெகு திறமை சூக்ஷத்துடன் எனக்கு ஒருவன் சொல்லிக்காட்டும்போது பழிவாங்க வேணுமென்கிற கருத்தில் அற்ப பிரியமும் வையாமலும் இதற்குச் சம்மதியாமலும். இவன் சொல்லுஞ் சூக்ஷ நூதனத்தின்பேரில் மாத்திரம் பிரியங்கொள்வேனேயாகில் எனக்குப் பாவமாயிராதென்பது உண்மை. ஆனால் கொஞ்சங் கொஞ்சமாய் இந்தப் பிரியத்தால் எனக்குப் பழிவாங்கவேணுமென்கிற ஆசையும் இன்னம் பழிவாங்க வேணுமென்கிற மனதுந்தானே வராதபடிக்கு மேற்சொல்லிய பிரியத்தை உடனே தள்ளிவிடுவது எனக்கு நன்மையாகும்.

சிலசமயங்களில் தந்திரத்தில் நம்மையுமன்றி நாம் பிரியங்கொள்ளுவதாகத் திடுக்கென அறிகிறோம். இது விஷயத்தில் ஏதாவது குற்றமிருக்குமாகில்

மகா சொற்ப குற்றமாயிருக்கும். இதனால் இலேசான அற்ப பாவமாத்திரம் வரக்கூடும். ஆனால் இப்படி நம்மையு மறந்தாற்போல் பிரியங்கொண்டோமென்று அறிந்தபின் இதனைத் தள்ளிவிடுவோமா இல்லையாவென்று இந்தப் பிரியத்தில் அசட்டையாய்ச் சற்றுநேரமிருந்தால் பாவமதிகமாம். இப்படி பிரியங்கொள்ளுகிறேமென்று ஒருவிசை அறிந்தபின் இதனைத் தள்ளிவிட அற்ப பிரதிக்கினையுஞ் செய்யாமல் மெய்யாகவே அசட்டைத்தனமாய்ச் சிலநேரம் அந்தப் பிரியத்திலேயே இருப்போமாகில் அந்தப் பாவம் இன்னம் பெரிதாகும். ஆனால் வேண்டுமென்று மனதுவிபொருந்தி இன்னின்ன இன்பத்திற் பிரியங்கொள்ள நமக்கு மனதிருக்குமாகில் நாம் பிரியங்கொள்ளும் விஷயம் மிகவுங் கெட்டதானால் இந்த மனதே தன்னிலே பெரும் பாவமாயிருக்கும். ஒரு பெண்பிள்ளைக்குத் தகாத நேசபக்ஷ பழக்கத்துக்கு இடங்கொடுக்கும் வழக்கமிருந்தால் இதற்குத் தன்னை முழுதுங் கையளித்துவிடப் பரிச்சேதம் இவளுக்கு மனதிராவிட்டாலும் இது மகா கனமான துர்க்குணமாம்.

7-ம் அதிகாரம்.

பெரிய தந்திரங்களுக்கு அவுழ்தம்.

மைதான வெளிகளில் கரடி அல்லது ஓநாயைச் சிறுபிள்ளைகள் பார்த்தமாத்திரத்தில் சத்தமிட்டு எல்லோரையுங் கூவி அழைத்துத் தங்கள் தாய்தந்தை

கள் அருகில் ஓடிவருவதுபோல உனக்குத் தந்திரம் வந்தமாத்திரத்தில் நீயும் அப்படியே நடந்துகொள்ள வேண்டும். சர்வேசுரனுடைய கிருபை, ஒத்தாசையை மன்றாடிச் சீக்கிரமாய் அவனை துண்டிப்போ. நமதாண்டவரே இந்தப் பரம அவுழ்தத்தை நமக்குக் காண்பித்துத் தந்திரத்தில் நீங்கள் பிரவேசியாதபடி வேண்டிக்கொள்ளுங்களென்று கற்பிக்கின்றார்.

இப்படி நீ வேண்டிக்கொண்டுந் தந்திரம் போகாமல் அதிகப்படுகிறதென்று கண்டால் உனக்கெதிராகச் சிலுவையில் சேசுகிறீஸ்துநாதர் அறையுண்டிருப்பதாக நினைத்துக்கொண்டு அவர் திருச்சிலுவையைக் கட்டி முத்தமிட்டுத் தந்திரத்துக்கு நீ பரிச்சேதஞ் சம்மதிக்கிறதில்லை என்று அவரை பார்த்துத் திடமனதோடு சொல்லி அவர் திருவுதவியை இரந்து மன்றாடக்கடவாய். இவ்விதமாய்த் தந்திரம் நீளித்திருக்குந்தனையும் உனக்குள் வரக்கூடுமான பலவிதத் தோற்றப் பிரியங்களுக்குச் சம்மதிக்கிறதில்லையென்று உறுதியாயிரு. ஆனால் இப்படி தந்திரத்துக்குச் சம்மதிக்கிறதில்லை என்று பிரதிக்கினை செய்துகொண்டிருக்கையில் தந்திரத்தை மறுபடியுந் திரும்பிப் பாராதே. நமதிரட்சகனைமாத்திரம் உற்றுப்பார். ஏனெனில் தந்திரம் விசேஷமாய் பலமாயிருக்கும்போது அது எப்படிப்பட்டதென்று பார்ப்பாயேயாகில் நீ எவ்வளவு தயிரியசாலியாயிருந்தபோதிலும் அதனால் ஆபத்து வரக்கூடும்.

இந்தத் தந்திர நேரத்தில் ஏதாகிலும் நல்ல காரியத்தில் கவனித்து உன் புத்திக்குப் பராக்கு வருவிப்பது நன்மையாயிருக்கும். ஏனெனில் இப்படி ஒரு காரியத்தில் கவனமாயிருக்கும்போது இதின் சிந்தனை நமது இருதயத்தில் நுழைந்து தந்திரத்தால்

உண்டாகுந் தோற்றத்தை மெள்ளமெள்ள அமர்த்திவிடும்.

ஆனால் எவ்விதத் தந்திரங்களுக்கும் பெரிதாயினுஞ் சிறிதாயினுஞ் சரி பரம அவுழ்தம் தனது ஆத்துமகுருவானவருக்குத் தன்னிருதயத்தைத் திறந்து காட்டிப் பிசாசின் தந்திர சோதனைகளையும் அவற்றால் உண்டாகுந் தோற்றங்களையுஞ் சொல்லிக்காட்டுவதேயாம். ஏனெனில் பசாசு ஒருவனைக் கெடுக்கத் தேடும்போது உதவிக்கொள்ளும் உபாயமென்னவெனில் இவன் தன் தந்திரத்தை ஒருவருக்குஞ் சொல்லிக்காட்டாதபடி செய்யும். ஆனால் சர்வேசுரன் தமது ஞான ஏவுதல்களை அனுப்பும்போது எல்லாத்துக்கு மூந்தி நம்மை நடப்பிக்கும் ஆத்துமகுருக்களுக்கு அவைகளைச் சொல்லிக் காட்டி அவர்கள் ஆலோசனையின்படி நடக்கக் கற்பிக்கின்றார். பசாசு இப்படி செய்கிறதில்லை. எல்லாத்துக்கு மூந்தித் தந்திரம் அநுபவிக்கிறவன் வாயை அடைத்துவிடும்.

இப்படிப்பட்ட அவுழ்தங்களையெல்லாம் உதவிக்கொண்ட பின் தந்திரம் நம்மை விட்டு அகலாமல் சலஞ்சாதித்தாற்போல நம்மைத் தொந்தரைபடுத்தி உபாதிக்குமேயாகில் இதற்குச் சம்மதிக்க நமக்கு மனதில்லையென்று திடனாய் நாமுஞ் சலஞ்சாதித்தாற்போல் சொல்வதைப்பார்க்கிலும் வேறொன்றும் நாம் செய்யவேண்டியிருக்கிறதில்லை, ஏனெனில் கலியாணம் செய்துகொள்ள மனதில்லை என்று கலியாணத்துக்காகக் குறிக்கப்பட்ட பெண்கள் சொல்லும்போது அவர்கள் கலியாணம் நிறைவேறாதது போல் தந்திரத்தால் ஆத்துமத்துக்கு எவ்வளவு கலக்கச் சங்கடங்கள் வந்தபோதிலும் அதற்குச் சம்மதிக்கிறதில்லையென்றிருக்கையில் பரிச்சேதம் அந்த ஆத்துமத்துக்கு ஒரு குறைவும் வரவறியாது.

உன் சத்துருவாகிய பசாசோடு வீண் தர்க்கமாடாதே. இது சொல்வதற்கெல்லாம் ஒரு மறுமொழியுஞ் சொல்லாதே. இதின் ஆங்காரத்தை அடக்க நமதாண்டவர் சொன்ன மறுமொழியை நீயுஞ் சொல்வோம். பசாசே இடைந்துபோ. உன் தேவனாகிய ஆண்டவரை நீ ஆராதித்து அவருக்கு மாத்திரம் ஊழியஞ்செய்யக்கடவாயென்று எழுதப்பட்டிருக்கிறது. இத்தன்மையாகவே மெய்யான பத்தினியானவள் தன்னை மோசஞ்செய்ய வருகிறவனுக்கு ஒரு வார்த்தையுஞ் சொல்லாதிருப்பதுமன்றிக் கண்ணை யெறெடுத்துமுதலாய் அவனைப் பாரரள். ஆனால் உடனே அவனை விட்டுத் தன்னிருதய நேசபக்ஷத்தையெல்லாந் தன் மெய்யான பத்தாவின்மீது வைத்துத் தான் அவனுக்குக் கொடுத்த பிரமாணிக்க வார்த்தைப்பாட்டைத் தன் மனதுக்குள்ளே புதுப்பிப்பாள். இத்தன்மையாகப் புண்ணிய ஆத்துமத்துக்கு ஏதாகிலுந் தந்திரசோதனை வந்து அடரும்போது அதனோடு தர்க்கித்து அதற்குப் பரிச்சேதம் மறுமொழி சொல்லப்போகாது. ஆனால் பரலோக பத்தாவாகிய சேசுநாதர் பக்கமாய்த் திரும்பிக்கொண்டு இவருக்கு எப்போதும் பிரமாணிக்கமாயிருந்து இவர் ஒருவருக்கு மாத்திரமே சொந்தமாயிருக்க மனதேயன்றி வேறில்லையென்று நமது வார்த்தைப்பாட்டைப் புதுப்பிக்கவேண்டும்.

8-ம் அதிகாரம்.

சொற்ப தந்திரங்களை எதிர்த்து வெல்ல வேண்டுமென்பதின்பேரில்.

கனமான தந்திரங்களுக்கு எதிர்த்துத் தளாத தயிரியத்தோடு சண்டை செய்ய வேண்டியிருந்த போதிலும் இதில் நாம் அடையும் வெற்றி நமக்கு [illegible]கு பிரயோசனமாயினுஞ் சொற்ப தந்திரங்களை வேண்டியபடி வெல்வதில் சிலவிசை நமக்கின்னம் அதிக நன்மையாகும். ஏனெனில் பெரிய தந்திரங்கள் கொடுமையில் மேலிட்டிருக்கினுஞ் சொற்ப தந்திரங்கள் மட்டற்ற விதமாய்க் கணக்கில் மேலிட்டுப் போகிறதினால் இவைகளைச் செயித்து வெல்வது மகா பெரிய தந்திரங்களை வெல்லுவதற்கு ஒத்ததாகும். ஈக்களைப்பார்க்கிலும் ஓநாய்களுங் கரடிகளும் மெய்யாகவே அதிக ஆபத்துக்குரியவை. ஆனால் ஈக்களைப்போல் அவைகள் நம்மை அவ்வளவு தொந்தரை செய்து சலிப்பு வருவிக்கிறதில்லை, நமது பொறுமையை அவ்வளவு சோதிக்கிறதுமில்லை. கொலைசெய்யாமல் விலகி நிற்பது மகா எளிதுதான். ஆனால் சொற்ப கோபத்தைத் தள்ளுவது வெகு பிரயாசை. க்ஷணத்துக்குக்ஷணம் இப்படிப்பட்ட கோபம் நமக்கு வராமலிருக்கிறதில்லை. விபசாரஞ் செய்யாமலிருப்பது அவ்வளவு பிரயாசமல்ல. ஆனால் கண்களைப் பரிசுத்தமாய்க் காப்பாற்றுவதும் இச்சகமான வார்த்தை ஒன்றுஞ் சொல்லாமலிருப்பதும் இவ்வித வார்த்தைகளைப் பிரியமாய்க் கேளாமலிருப்பதும் வீண் சிநேகத்தைத் தேடாமலிருப்பதுஞ் சிநேகவுடையாளமாக

வதாகிலுஞ் சொற்ப பண்டங்களை வாங்காமலுங் கொடாமலுமிருப்பதும் அவ்வளவு சுளுவான காரியமல்ல.

ஓர் ஸ்திரீயானவள் தன் புருஷனிடமாய் வேறொருவனையும் புருஷன் தன் மனைவியிடமாய் வேறொருத்தியையும் வெளியரங்கமாய் நாலுபேர் அறியச் சிநேகியாமலிருப்பது அவ்வளவு பிரயாசமான விஷயமல்ல. ஆனால் இவர்கள் தங்கள் இருதயத்தில் இத்தன்மையாய்ச் சிநேகியாமலிருப்பது அவ்வளவு எளிதல்ல. பிறர் பொருளை அபகரியாமலிருப்பது சுளுவு. ஆனால் பிறர்பொருளை ஆசியாமலிருப்பது அபூருவம். நீதிஸ்தலத்தில் போய்ப் பொய்ச்சாக்ஷிசொல்லாமலிருப்பது சுளுவு. ஆனால் சம்பாஷணையில் பொய் சொல்லாமலிருப்பது அவ்வளவு எளிதல்ல. மயக்கம் வரும்படியாய்க் குடியாமலிருப்பது சுளுவு. ஆனால் எப்பொழுதும் மட்டசனமாயிருப்பது அவ்வளவு சுளுவல்ல. புறத்தியான் சாகவேண்டுமென்று ஆசியாமலிருப்பது பிரயாசமானதல்ல. அனால் அவனுக்கேதாகிலுந்தொந்தரை அசவுக்கியம் வரவேண்டுமென்று ஆசியாமலிருப்பது பிரயாசை. புறத்தியார்பேரில் அவதூறாய்ப் பேசாமலிருப்பது அவ்வளவு கஷ்டமல்ல. ஆனால் அவனை நிந்தியாமலிருப்பதோ வெகு பிரயாசை.

கடைசியாய்க் கோபம், சமூசயம், காய்மகாரம், பொறாமை, சரசவிளையாட்டு, ஓய்யார வீண் சிலாக்கியம், கபடம், தகாத நினைப்புகள் முதலிய சொற்ப தந்திரங்கள் சுவாமிக்காகவே ஜீவிக்க வேண்டுமென்று கெட்டியாய்த் தீர்மானித்திருக்கும் மகா பக்தியுள்ளவர்களுக்கு முதலாய் ஓயாத போராயிருக்கிறது. ஆகலால் பிரிய சகோதரமே, இந்தச் சண்டைக்கு வெகு சாக்கிரதையோடு நம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும். இத்தன்மையாய் இந்தச் சொற்ப

தந்திரங்கள்பேரில் நாம் எத்தனை செயமடைவோமோ அத்தனை நவரத்தினங்களைச் சர்வேசுரன் நமக்கு மோட்சராச்சியத்தில் மூஸ்திப்பு செய்யும் மகிமையின் கிரீடத்தில் பதிப்பிக்கிறாரென்று நிச்சயமாய் இருக்கக்கடவோம். ஆதலால் பலத்த தந்திரங்கள் நமக்கு வரும்போது அவைகளை மகா தயிரியமாய் வேண்டிய சாக்கிரதையோடு வெல்லுகிறதற்கு நம்மைப் பலவான்களாக்கிக்கொள்வதுடன் அற்ப தந்திரங்களில் தோர்வையடையாதபடிக்கு இவைகளையும் வெகு சாக்கிரதையோடு வெல்லப் பிரயாசப்படவேண்டும்.

9-ம் அதிகாரம்.

அற்ப தந்திரங்களை வெல்ல வழிப்பாடு.

நமது கண்களுக்கெதிரே வந்து சிலவிசை கன்னத்திலென்கிலுஞ் சிலவிசை மூக்கிலென்கிலுங் கடிக்கும் ஈக்களுக்கொப்பான வீண் சிலாக்கியங் காய்மகாரம் பொறுமை வீண் சந்தேகங் கஸ்தி முதலிய பலவிதத் தந்திரங்களின் தொந்தரவு அனுப்புக்குத் தப்பித்துக்கொள்வது நமது சத்துவத்தில் அடங்கியிராததால் இவைகளால் வீணாய் நாம் தொந்தரைபடாமலிருப்பதே உத்தம வழியாம். ஏனெனில் இவைகளால் நமக்கு எவ்வளவு சலிப்பு வந்தபோதிலும் எப்பொழுதுஞ் சர்வேசுரனைச் சேவிக்கவேண்டுமென்கிற நல்ல மனதிருக்குமேயாகில் இந்தத் தந்திர சோதனைகளால் நமக்கு ஒரு தின்மையும் வராது.

ஆதலால் இந்தச் சொற்ப தந்திரங்களையெல்லாம் ஒருபொருட்டாய் எண்ணாமல் நிந்தையாய்ப் பார்த்து இவைகள் உனக்குச் சொல்லும் விஷயங்களைக் குறித்து முதலாய் நினையாதே. இந்தத் தந்திரங்கள் தங்களால் ஆனமட்டும் ஈக்களைப்போல் உன் செவிகளைச் சுற்றிலும் பறந்து உனக்கருகில் சத்தமிட்டுக்கொண்டிருக்கட்டும். ஆனால் இவைகள் உன்னை வந்து கடித்து உன் இருதயத்தில் நுழையப் பார்க்கும்போது தட்டித் தூரத்திவிட்டு அமரிக்கையாயிரு. இவைகளுக்கு விரோதமாய் எதிர்த்துச் சண்டை செய்யாதே. இவைகளுக்கு மறு உத்தாரஞ் சொல்லாதே. ஆனால் பத்திக்கடுத்த எது காரியத்தின் பேரிலென்கிலும் விசேஷமாய்ச் சுவாமியுடைய நேசத்தின்பேரில் நினைப்பாயிரு. ஏனெனில் நான் உனக்குக் கற்பிப்பதுபோல் உனக்கு வருந் தந்திரத்துக்கு விரோதமான புண்ணியத்தைக்கொண்டு எப்போதும் அதனை வெல்லத் தேடாதே. இப்படி செய்வது இந்தத் தந்திரத்தோடு தர்க்கிக்கிறதுபோல் ஆகும்.

ஆனால் தந்திரத்தின் தன்மை இன்னதென்று அறிவாயேயாகில் அதற்கு முழுதும் விரோதமான புண்ணியக் கிருத்தியத்தைச் செய்த பின் சிலுவையில் அறையுண்டிருக்குஞ் சேசுகிறீஸ்துநாதர்பேரில் உன் கண்களைத் திருப்பி உன் புத்தியால் அவர் திருப்பாதங்களைக் கட்டிக்கொண்டு உன்னால் இயன்றவனாயில் நேச பக்ஷத்தோடு அவைகளை முத்தியிடக்கடவாய். சொற்ப தந்திரங்களிலுஞ் சரி பலமான தந்திரங்களிலுஞ் சரி நமது சத்துருவை வெல்லுவதற்கு இது மகா உத்தம வழியாம். ஏனெனில் தேவ சிநேகம் மற்றெல்லாப் புண்ணியங்களில் இருக்கக் கூடுமான பரிசுத்தத்தனத்தையும் இன்னம் மற்றெல்லாப் புண்ணியங்களிலும் அதிக உத்தமமான விதமாய்ச் சாங்கோபாங்க மகத்துவத்தையுந் தன்னிலே

சம்பூரணமாய் அடக்கிக்கொண்டிருப்பதால் எல்லா துர்க்குணங்களுக்கும் இது பரம அவுழ்தம் என்பதற்குச் சந்தேகமில்லை. தந்திரம் வரும்போதெல்லாம் இந்தப் பரம அவுழ்தத்தை உதவிக்கொள்ளும் வழக்கம் உனக்கிருந்தால் அவைகள் எப்படிப்பட்டவைகளென்று ஆராய்ந்துபார்க்கவேண்டியிராது. ஆனால் இந்தத் தந்திரங்களால் மனதில் கலக்கம் உண்டாகவே இந்தப் பரம அவுழ்தத்தைக்கொண்டு சமாதானத்தை அடைவோம். அப்போது நமது சத்துருவாகிய பசாசு நமக்கு அனுப்புந் தந்திரங்கள் நம்மைத் தேவசிநேகத்தில் வளரும்படி செய்வதற்கே உதவுகிறதென்று பார்த்து நம்மைத் தந்திரம்பண்ணாமல் விட்டுவிடும்.

பிரிய சகோதரமே, அற்ப தந்திரங்கள் விஷயத்தில் நீ இவ்விதமாகவே நடந்துகொள்ள வேண்டும். இதற்கு விரோதமாய் இந்தத் தந்திரங்களை ஒவ்வொன்றாய் வெல்லவேண்டுமானால் வீண் பிரயாசை தொந்தரைக்கு இடமேயல்லாமல் பிரயோசனமிராது.

10-ம் அதிகாரம்.

தந்திரங்களுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தை எப்படி பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதின்பேரில்.

உன் இருதயத்தில் அதிக பலமாயிருக்கிற கெட்ட நாட்டங்கள் எவையென்று அடிக்கடி யோசித்துப்

பார். அவைகளைக் கண்டுபிடித்தபின் உன் சிந்தை வார்த்தை கிரியைகளில் இந்த நாட்டங்களுக்கு முழுதும் விரோதமான விதமாய் நடந்துகொள்ளுவாய். இத்தன்மையாய் உன்னிடத்தில் வீண் சிலாக்கிய பெருமை பலமாயிருக்குமேயாகில் நமது வாழ்நாட்களிலுள்ள துன்ப வருத்தங்களை அடிக்கடி நினைத்து இந்த வீண் சிலாக்கியங்களெல்லாம் மரண நாளில் உன் மனதுக்கு எவ்வளவு வருத்தமாகவுஞ் சுவாமிபேரில் மெய்யான பத்தியுள்ளவர்களுக்கு எவ்வளவு நிசிதமானவைகளாகவுங் கடைசியாய் இவைகள் யாவுஞ் சிறுபிள்ளைகள் விளையாட்டுக்கொத்த பகடி வேடிக்கைகளாயும் இருக்கிறதென்று யோசித்துக்கொள். வீண் சிலாக்கியத்துக்கு விரோதமாய் அடிக்கடி பேசிவருவாய். ஆனால் இப்படி பேசுவது உன் நாட்டத்துக்கும் மனதுக்கும் விரோதமாக உனக்குத் தோன்றியபோதிலும் அதை நிந்தித்துத் தள்ளிவிடு. ஏனென்றால் இதற்கு விரோதமாய் நீயே பேசிவருவதால் கொஞ்சங் கொஞ்சமாய் வீண் சிலாக்கியத்தை முழுதும் வெல்லுகிறதற்கான திராணி உனக்கு உண்டாகும்.

இப்படி ஒரு காரியத்தைக் குறித்துத் தின்மையாய்ப் பேசப்பேச அதில் நமக்கு முந்திப் பிறநுதல் இருந்தபோதிலும் பிற்பாடு அதை வேண்டியபடி பகைத்துத் தள்ள நமக்குச் சத்துவம் வரும். தாழ்ச்சி சிரவணத்துக்கடுத்த கிருத்தியங்களைச் செய்வது உன் மனதுக்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தபோதிலும் உன்னால் கூடியவரையில் அவைகளைச் செய்துவா. ஏனெனில் இவ்வழியாய்த் தாழ்ச்சியாயிருக்க வழக்கப்படுத்திக்கொள்ளுவாய். மேலும் இதனால் உன்னிடத்திலிருக்கும் வீண் சிலாக்கியமென்னுங் கெட்ட நாட்டத்தை பலவீனப்படுத்திவிடுவதால் இதற்கான தந்திரம் வரும்போது உன் சுபாவ நாட்

டம் முன்போல் அவ்வளவு இதற்குச் சனுவாயிராமலிருப்பதுடன் இதனை எதிர்த்துச் சண்டைசெய்வதற்கும் உனக்கு அதிக பலமுண்டாம்.

உலோபித்தனமென்னுந் துர்க்குணம் உன்னிடத்தில் இருக்குமேயாகில் இந்தப் பாவத்தில் காணும் மதியற்றதனத்தைக் குறித்து அடிக்கடி நினைத்துக்கொள். இந்தத் துர்க்குணத்தால் நமக்கு உபயோகமாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் வஸ்துகளுக்கு நாமே அடிமையாய்ப் போகிறோம். இன்னம் நாம் அவ்வளவு ஆவலோடு ஆசிக்குந் திரவியங்களையெல்லாம் மரணம் வரும்போது விட்டுவிடவேண்டும். அப்போது நம்மிடத்திலிருக்கும் ஆஸ்திபாஸ்தி எல்லாம் வேறேபேர் கையிற் போய்விடும். இதுகளை இவர்கள் சிலவிசை வீணாய்ச் செலவழிப்பார்கள். சிலவிசை இந்தப் பணமே இவர்கள் கேட்டுக்கும் நித்திய மரணத்துக்குங் காரணமாயிருக்கும். இது முதலிய சுகிர்த யோசனைகளை நீ செய்வதுமல்லாமல் இந்த உலோபித்தனத்துக்கு விரோதமாய்ப் பேசி உலக வாழ்வை நிந்தித்து நடப்பதிலுள்ள பெருமையைக்குறித்துப் புகழ்ச்சியாய்ச் சம்பாஷித்து அடுத்தடுத்துப் பிச்சைக்காரர்களுக்கு ஏதாகிலுந் தர்மஞ்செய்துவா. மேலும் உன் பேராசையை அடக்க நியாயமாய் நீ சம்பாதிப்பதற்கான சமயங்களில் அவ்வளவு ஆவலோடு வருந்திப் பிரயாசப்படாமல் கொஞ்சம் மேவிழந்தவாரியாயிரு.

நீ யாரையாகிலும் மிஞ்சினவிதமாய் நேசிக்கிறதற்கென்கிலும் அல்லது மற்றவர்கள் உன்னை நேசிக்கவேண்டுமென்றென்கிலும் உனக்கு விசேஷ விருப்பமிருக்குமாகில் உனக்கும் இன்னம் மற்றவர்களுக்கும் இது எவ்வளவு ஆபத்துக்குரியதென்று அடிக்கடி யோசித்துப்பார். மேலும் நமதாத்துமத்தின் மேலான பங்காயிருக்கப்பட்ட இருதய பக்ஷத்தை இவ்

வாறு வீணில் செலவழித்துவிடுவது எவ்வளவு நஷ்டமென்றும் இதனுல் அற்ப புத்தியுள்ளவர்களென்கிற எவ்வளவு நிசிதமான பேர் நமது கீர்த்திக்கு வருகிறதென்றும் பார். இருதயப் பரிசுத்தத்தனத்தைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசிவா. எவ்வித ஐய்யார வீண் வார்த்தைகளையுந் தள்ளிவிட்டு உன்னுலானமட்டும் இருதயப் பரிசுத்தத்தனத்துக்கடுத்த கிருத்தியங்களைச் செய்துவா. கடைசியாய்ச் சமாதானகாலத்தில் அதாவது உனக்கு வழக்கமாய் வருந் தந்திர சோதனைகள் அவ்வளவு உன்னை அலைக்கழிக்காமல் அமரிக்கையாய் விடும்போது உனக்குள் விசேஷமாயிருக்குந் துர்க்குணத்துக்கு விரோதமான புண்ணியக் கிருத்தியங்களை மேன்மேலுஞ் செய்யக்கடவாய். மேலும் இவ்வித புண்ணிய கிருத்தியங்களைச் செய்வதற்கான சமயம் உனக்கு நேரிடா விட்டாலும் அதனைத் தேடிப்போய் நான் சொல்வதுபோலப் புண்ணிய கிருத்தியங்களைச் செய்துவா. இவ்வழியாய் உனக்கு வரக் கூடுமான தந்திரங்களுக்கு விரோதமாய் உன் இருதயத்தைப் பலப்படுத்திக் கொள்ளுவாய்.

11-ம் அதிகாரம்.

மனக்கிலேசக் கவலையைக் குறித்து.

மனக்கிலேச கலக்கமானது வெறுந் தந்திரமாத்திரமல்ல, இன்னம் வேறு பல தந்திரங்கள் வருவதற்குக் காரணமாம். ஆதலால் இதைக் குறித்து இரண்

டொரு வார்த்தை சொல்வது வீணாயிராது. புறத்துத் தின்மை அகத்துத் தின்மையென இருவகைத் தின்மை நம்மிடத்திலுண்டு. தரித்திரம் வியாதி நிந்தை புறத்துத் தின்மைக்குச் சம்பந்தப்பட்டவை. அறிவின்மை மனச்சஞ்சலம் நன்மை செய்வதற்கு நமக்குள்ள வெறுப்பு தந்திர சோதனை இவை முதலியவை உள்ளத்துத் தின்மைகளாம். நம்மையுமன்றி நம்மிடத்திலிருக்குந் தின்மையைப்பற்றி நமக்கு உண்டாகும் மனவருத்தமே கஸ்தியெனப்படும். ஆதலால் எதாகிலுந் தின்மை நேரிடுகிறதைப் பார்க்கும்போது அந்தத் தின்மையை அருவருப்போடு பார்க்கிறதினால் கஸ்தி உண்டாகிறது. இதனால் இந்தத் தின்மையை விட்டு நீங்கியிருக்கவுங் கூடியவரையில் இதனைத் தள்ளிவிடுவதற்கான வழிப்பாடு தேடவுஞ் சுபாவமாய் ஆசை உண்டாகிறது. இவ்வித ஆசை நமக்கு வருவது நியாயமே. ஏனெனில் ஒவ்வொருவனும் நன்மையை விரும்பித் தேடித் தின்மையென்று நினைப்பதைவிட்டு இடைந்திருக்க ஆசிப்பது இயல்பாம்.

சுவாமியுடைய நேசத்தை முன்னிட்டு இந்தத் தின்மையை விலக்குவதற்கான வழிப்பாடுகளை ஓர் ஆத்துமந் தேடுமேயாகில் தன் திறமை சாமர்த்தியத்திலுந் தான் படும் பிரயாசையிலுந் தன் நம்பிக்கையை வையாமல் சர்வேசுரனுடைய கிருபை தயாளத்தின்மட்டில் நம்பிக்கை வைத்துத் தாழ்ச்சி பொறுமையோடு ஆன வழிப்பாடுகளைத் தேடிச் சர்வேசுரனுக்குச் சித்தமானபோது தன் இடையூறு இடைஞ்சலை நீங்கட்டுமென்று அமரிக்கையாயிருக்கும். ஆனால் தன் மனத்திருத்திப் பிரியத்துக்காகவே இந்தத் தின்மையை விட்டு நீங்கியிருக்க ஆத்துமந் தேடுமேயாகில் தேவ அநுக்கிரகத்தாலல்ல, தன் சுய பலத்தால் இந்த நன்மையை அடையலாமென்றுற்

போல் நானுவித வழிப்பாடுகளையும் வெகு ஆவலோடு தேடி வீணாய் வருந்திப் பிரயாசப்படும்.

இவ்வாறு இந்த ஆத்துமம் ஆவலாய்த் தேடும் வழிப்பாடுகளை உடனே காணுதபோது மகா கஸ்திச் சஞ்சலப்பட்டுப் பொறுமையற்றதாவதால் தின்மை விலகுவதற்குப் பதிலாய் அதிகமாய்ப் பலப்பட்டுப் போக மாத்திரம் இடமாயிருக்கும். அப்போது ஆத்துமம் மட்டுத்திட்டமின்றி கஸ்திச் சஞ்சலத்துக்கு உள்ளாக இதற்கெவ்வளவு அவதைரியமும் பலக்குறைவும் உண்டாகிறதெனில் இனித் தனக்கு நேரிட்டிருக்குந் தன்மைக்கு அவுழ்தங் கிடையாதென்றாற் போல் இதற்குத் தோன்றும். இவ்வகையாய்ப் பிரிய சகோதரமே, ஆரம்பத்தில் கிரமமாகக் காணப்பட்ட கஸ்தியால் மூந்தமூந்த மனக்கவலை உண்டாம். இதன் பின் மனக்கவலையானது மகா ஆபத்துக்குரிய மிதந்தப்பின கஸ்தியை வருவிக்கும்.

பாவத்துக்குப் பிற்பாடு ஆத்துமத்துக்கு வரக்கூடுமான கனமான தின்மையென்னவெனில் மனக்கலக்கந்தான். ஏனெனில் ஒரு தேசத்துக்குள் வருங் கலாபனை குழப்பத்தால் அத்தேச முழுதும் பாழாய்ப் போவதுமன்றித் தன் சத்துராதிகளை எதிர்த்து வெல்லுவதற்கு விக்கினமாயிருக்கும். இத்தன்மையாகவே நமதிருதயந் தனக்குள் வெகுவாய்க் கலங்கி ஏக்கங்கொண்டிருக்கையில் நெடுநாளாய்ச் 'சம்பாதித்த புண்ணியங்களைக் காப்பாற்றவுமியலுஞ் சத்துருவின் தந்திரச் சோதனைகளை வெல்லவென்கிலுந் திராணியற்றதாகும். இப்படி கலங்கித் தேங்கி இருக்கையில்தான் கலங்கின சலத்தில் மச்சங்களைச் சுலுவாய்ப் பிடிப்பதுபோல் பசாசானது தூண்டிற் போட நானுவிதப் பிரயாசையும்படும்.

நாம் அநுபவிக்குந் தின்மையை விலக்கவும் நாம் ஆசிக்கும் நன்மையை அடையவும் நமக்குண்டாகுந்

கிரமமற்ற ஆசைதான் மனக்கிலேசத்துக்குக் காரணம். ஆயினும் நாம் தள்ள ஆசிக்கிற தின்மையை அதிகப்படுத்தி நாம் அடைய விரும்புகிற நன்மையை நாம் அடையாதபடிக்குத் தாமதப்படுத்துவது இந்த மனக்கலக்கமும் மிஞ்சின ஆசையுமேயன்றி வேறல்ல. பறவைகள் ஒருவிசை வலைகளில் அகப்பட்ட பின் தப்பித்துக்கொண்டு போகா. அதினின்று தப்பித்துக்கொண்டு போவதற்குச் சிறகுகளை அடித்துக்கொண்டு நாலாபக்கத்திலும் பறந்து ஓடிப் போகப் பார்க்கும். ஆனால் இப்படி இவைகள் செய்வதால் வலைகளில் அதிகமாய்ச் சிக்கிக்கொள்ளுமேயல்லாது வேறல்ல. ஆனதால் ஏதாகிலுந் தின்மை உன்னை விட்டு நீங்கிப்போகவாகிலும் அல்லது ஏதாகிலும் நன்மையை அடையவென்கிலும் வெகுவாய் நீ ஆசிக்கும்போது எல்லாத்துக்கு முந்தி உன் புத்தியை அடக்கி உன் தீர்மானத்தையும் மனதையுஞ் சீர்ப்படுத்தப்பார். இதன்பின் இதற்கான தகுந்த வழிப்பாடுகளைக் கிரமத்தோடு பிரயோகித்துக்கொண்டு மகா சாதுவாய் அமரிக்கையுடன் உன் ஆசையை நிறைவேற்றப் பார்ப்பாய். இப்படி அமரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லும்போது அசட்டைத்தனமாய் நமதாசையை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுகிறதில்லை. ஆனால் மிஞ்சின படபடப்புக் கலக்க ஏக்கமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் உன் ஆசைப்படி எல்லாம் நிறைவேறுவதற்குப் பதிலாய் எல்லாத்தையுங் கெடுத்துவிடுவாய். இன்னம் இதனால் மெத்தச் சங்கடத்துக்கு உள்ளாவாய்.

என்னாண்டவரே என் ஆத்துமம் எப்பொழுதும் எனது கரங்களிலிருக்கிறது. உமது முறைமையை நான் மறக்கிறதில்லையென்று தாவீதென்பவர் சொல்லுகிறார். பிரிய சகோதரமே, உன் ஆத்துமத்தை,

உன் கரங்களில் வைத்துக்கொண்டிருக்கிருயோ அல்லது ஏதாகிலும் ஆசாபாசம் மனக்கலக்கம் உன்னிடத்தினின்று அதனைப் பறித்துக்கொண்டதோ வென்று அநுதினம் பலமுறை காலமே சாயரட்சையாகிலுஞ் சோதித்துப்பார். உன்னிருதயம் உன் மனதுக்கு அமைந்து நடக்கிறதோ அல்லது உன் கையினின்று தப்பித்துக்கொண்டு சிநேகம், பகை, காய்மகாரம், பேராசை, வீண் அச்சம், கஸ்தி சஞ்சலம் அல்லது மிஞ்சின சந்தோஷம் முதலிய தகாத நாட்டத்துக்குள்ளாயிருக்கிறதோவென்று யோசித்துப்பார். இப்படி உன் கையினின்று இது அப்புறம் போயிருந்தால் எல்லாத்துக்கு முந்தி அதைத் தேடிப் பிடித்து மெதுவாய்ச் சர்வேசுரனுடைய சந்நிதானத்திற் கொண்டுவந்து நிறுத்தி உன்னுசை பற்றுதல்களெல்லாம் அவர் திருச்சித்தத்துக்கு அமைந்துபோகப் பார். ஏனெனில் ஏதாயினும் விலையுயர்ந்த பொருளை எங்கே இழந்துபோகிறேமோவென்று பயப்படுகிறவர்கள் அதனைத் தங்கள் கையில் வெகு பத்திரமாய் வைத்துக்கொண்டிருப்பதுபோல, தாவீதென்பவரோடு என் சர்வேசுரா சுவாமீ என் ஆத்துமஞ் சேதமாய்ப்போகும் ஆபத்திலிருக்கிறது. ஆனதால் அதனை எப்பொழுதும் என் கரங்களில் வைத்துக்கொண்டிருக்கிறேன். இதனுல் நான் உமது முறைமையை மறந்துபோகவில்லையென்று சுவாமியைப் பார்த்து எப்பொழுதுஞ் சொல்லவேண்டும்.

உன் ஆசைகள் எவ்வளவு சொற்பமானவையாயிருந்தபோதிலும் இவைகளால் உனக்குப் பரிச்சேதம் ஏதாகிலும் மனக்கலக்கம் வரும்படியாய் விட்டுவிடாதே. ஏனெனில் இப்படி சொற்ப ஆசையை முன்னிட்டு ஏதாகிலும் மனக்கலக்கம் உனக்கு வந்ததேயாகில் கனமான விஷயங்களில் உன்னிருதயத்தில் எவ்வளவு கலக்கம் அலங்கோலை உண்டாமெ

ன்றுபார்: உனக்கு ஏதாயினுஞ் சஞ்சல கலக்கம் வரும்போது சுவாமியைப்பார்த்து வேண்டிக்கொள்: உன் மனக்கலக்கம் முழுதும் உன்னை விட்டுப்போவதற்கு மூர்த்தி உன் ஆசைப்படி எதையும் பரிச்சேதஞ் செய்யக்கூடாதென்று நல்ல பிரதிக்கினை செய்துகொள். அச்சமயத்தில் உன்னுடைய மிகுதியை உன்னால் இயன்றவரையில் அமரிக்கையாய் மெதுவாய் அடக்கப் பிரயாசப்படு. இதன்பின் உன்னுடைய படி ஒன்றையுஞ் செய்யாமல் புத்தி நியாயத்துக்கு ஒத்தபடி நடந்துகொள்.

உன் ஆத்தும குருவானவருக்காகிலும் விவேக நிலைமையுள்ள சிநேகிதனுக்கென்கிலும் உன் மனக் கலகத்தைத் திறந்து காட்டக்கூடுமானால் உடனே உனக்கு வெகு ஆறுதல் உண்டாகும் என்பதற்குச் சமுசயமில்லை. ஏனெனில் விடாமல் காய்ச்சலடிக்கும் போது இரத்தங் குத்தி வாங்குவதால் சரீரத்துக்கு வெகு நன்மை வருகிறதுபோல் நமது மனக்கஸ்திச் சஞ்சலங்களை வேறே பேருக்குச் சொல்லிக் காட்டும் போது நமது ஆத்துமத்துக்குச் சமாதான அமரிக்கை உண்டாம். மனச் சஞ்சலமென்னும் வியாதியுள்ளவர்களுக்கு இதுதான் பரம அவுழ்தம். அர்ச். லூயீ இராசா இந்த ஆலோசனையைத்தான் தமது குமாரனுக்குக் கற்பித்து உன் மனதுக்கு ஏதாகிலும் விருத்தமான காரியம் வரும்போது உடனே அதை உன் ஆத்தும குருவானவருக்காகிலும் நம்பிக்கைக்குரிய வேறே ஆருக்காகிலுஞ் சொல்லிக்காட்டு, இவ்வழியாய் ஆறுதலடைந்து உன் கஸ்தியைச் சுளுவாய்ச் சகித்துக்கொள்ளுவாயென்றார்.

12-ம் அதிகாரம்.

கஸ்தியைக் குறித்து.

தேவ சித்தத்தின்படி வரும் கஸ்தியானது இரக்ஷணியம் அடைவதற்கான பச்சாத்தாபத்தை வருவிக்கிறதென்றும் உலக கஸ்தி மரணத்தை வருவிக்கிறதென்றும் அர்ச். சின்னப்பர் வசனிக்கின்றார். ஆதலால் கஸ்தியால் நம்மிடத்தில் விளையும் பலவிதச் சித்திக்குத் தக்கபடி கஸ்தி நன்மையானதாய் அல்லது தின்மையானதாயிருக்கும், கஸ்தியால் வரும் நன்மையைப் பார்க்கிலுந் தின்மை அதிகமென்பது நிச்சயம். தவம் இரக்கமென்னும் இவ்விரண்டு நன்மைகள் மாத்திரங் கஸ்தியால் வந்தால் வரலாம். இதற்குப் பதிலாய் வீண் கவலை, சோம்பல், கோப எரிச்சல், பொறுமையற்றதனம், காய்மகாரம், பொறுமைப்படல் இவ்வாறு விசேஷ தின்மைகள் இதனால் விளைகின்றன. இதைப்பற்றித்தான் கஸ்தியானது வெகு பேரைக் கொல்லுகிறதென்றும் இதில் அற்ப பிரயோசனங் கிடையாதென்றும் ஞானியானவர் கூறுகின்றார். ஏனெனில் மேற்கண்டவாறு கஸ்தியென்னும் அருவியிலிருந்து உண்டாகும் நல்ல ஓடை இரண்டேயாம், கெட்டதோ ஆறும்.

நல்லவர்கள் நிலைமையைக் கெடுப்பதற்காக அவர்களுக்குப் பசாசு கஸ்தி சலிப்பை அனுப்புவது வழக்கம். ஏனெனில் தீயோர் தங்கள் பாவத்தில் சந்தோஷங் கொண்டு நிற்கும்படி பிரயாசப்படுவதுபோல நல்லவர்கள் தங்கள் நற்கிருத்தியங்களில் கஸ்தி சலிப்பு அடையும்படி பிரயாசப்படுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. தின்மையை நேத்தியானதாகக் காட்டித் தீயோரை அதிலிழுப்பதுபோல் நன்மையைக்

கஸ்தி சலிப்புக்குரியதாய்க் காட்டியே நல்லோர் நற் கிருத்தியத்தை விட்டுவிடச் செய்கின்றது. பசாசு எப்பொழுதுங் கஸ்தி சஞ்சலம் பிடித்ததாய் இருப் பதினாலும் என்றென்றைக்கும் இப்படி கிலேசம் பிடித்திருக்கவேண்டியதாலும் எல்லோருந் தன்னைப் போலிருக்க வேண்டுமென்றாற்போல் நானாவிதத்தி லும் கஸ்தி சஞ்சலத்தை வருவிக்கத் தேடுது.

தகாத கஸ்தியால் ஆத்துமத்தில் கலக்க விக்கங்க ளும் வீண் அச்சங்களும் உண்டாவதும் அல்லாமல் தியானத்தின் பேரிலும் அருவருப்பு உண்டாம். இத னால் தலைக்கு வெகு பளுவும் உடம்புக்கு வெகு அச தியுமாம். ஆத்துமத்துக்கு வரக்கூடுமான நல்ல ஆலோசனைகளும் பிரதிக்கினைகளும் நல்ல தீர்மானங் களும் போய் அவதயிரியம் உண்டாவதால் முழு தும் அதின் சத்துவ பலன்களெல்லாம் ஒடுங்கிப் போம். கடைசியாய் இந்தக் கஸ்தியானது பூமியின் அழகு செழிப்பை அடியோடே அழித்துச் சீவசெந் துக்களுக்கெல்லாம் நடுநடுக்கம் வருவிக்கும் கடு மையான குளிர்காலத்துக்கொத்ததாமே. ஏனெனில் இதனால் ஆத்துமத்துக்கு எவ்விதச் சந்தோஷ ஆறு தலும் அற்றுப்போகிறதுமன்றி அதின் தத்துவங்க ளெல்லாம் வெகுவாய் மெலிந்து சத்தியற்றதாய்ப் போய்விடுகின்றன.

பிரிய சகோதரமே, இப்படிப்பட்ட கெட்ட கஸ்தி உனக்கு எப்போதாகிலும் நேரிட்டால் பின்னால் சொல்லப்போகிற அவுழ்தத்தை உதவிக்கொள். எவ னும் கஸ்தியாயிருந்தால் வேண்டிக்கொள்ளட்டு மென்று அர்ச்சியசிஷ்ட இயாகப்பர் கற்பிக்கின்றார். செபம் பரம அவுழ்தம். ஏனெனில் நமதேக சந் தோஷமும் ஆறுதலுமாகிய சர்வேசுரனை நோக்கி இதனால் நமது புத்தி தாவிப்போகும். ஆனால் வேண் டிக்கொள்ளும்போது சர்வேசுரன்மட்டில் நேச நம்

பிக்கைக்குரிய முயற்சிகளையும் வார்த்தைகளையும் மனதுக்குள்ளாயினும் வாயினாலாகிலுஞ் சொல்லக்கடவாய்: இப்படி கருணை தயாபம் நிறைந்த என் கர்த்தரே சுவாமீ என் சீவியமுஞ் சந்தோஷமும் என் நம்பிக்கையுமான என் மதுர இரக்ஷகரே, என்னாத்தும நேச பத்தாவாகிய பிரிய சேசுவே என்னும் இது முதலிய பல மனவல்லயச் செபங்களைச் செபிப்பாய்.

கஸ்தியினால் உனக்கு வருஞ் சலிப்பு முதலிய தோற்றங்களை உன் பலமெல்லாங் கொண்டு வெல்லுகிறதற்குப் பிரயாசப்படு. நீ கஸ்தியாயிருக்குஞ் சமயத்தில் நீ செய்வதெல்லாம் வெகு அசட்டைத்தனமாய் வெறுப்பாய்க் கஸ்தியுடன் செய்வதாக உனக்குத் தோன்றியபோதிலும் இதைப்பற்றி நீ செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்டுவிடாதே. ஏனெனில் நாம் செய்யும் நற்கிருத்தியங்களை நாம் விட்டுவிடும்படி கஸ்தித் தந்திரத்தைக்கொண்டு பிரயாசப்படும் பசாசு நாம் கஸ்தியாய் இருந்தபோதிலும் நாம் செய்யத் தொடங்கிய நற்கிருத்தியங்களை விடுகிறதில்லை என்றும் இன்னும் நமது மனதுக்கு விரோதமாய் நமக்குத்தானே நாம் பலவந்தஞ்செய்தாற்போல் நாம் நற்கிருத்தியங்களை விடாமல் செய்யும்போது இதனால் இவைகள் அதிக பேறுள்ளவையாய்ப் போகிறதென்றுங் கண்டு நம்மைக் கஸ்திப்படுத்தாமல் விட்டுவிடும்.

கஸ்திநேரத்தில் ஞானசங்கீதங்களைப் பாடிக்கொண்டுவா. ஏனெனில் பலபேர் பலமுறை இவ்வழியாய்ப் பசாசைத் துரத்தினார்கள். இவ்வாறே சவுல் அரசனைப் பசாசு அலைக்கழித்துத் தொந்தரைசெய்யும்போதெல்லாம் தாவீதென்பவர் இசைத்துக் கொண்டுவருங் கீதவாத்தியத்தின் இனிய தொனி

யால் பசாசினுடைய தொந்தரை வெகுவாய் அமர்ந்துபோம்.

ஆத்துமத்துக்கு வருங் கஸ்தியின் காரணத்தைத் தள்ளி அதற்குப் பராக்கு வருவிப்பதற்காக ஏதாகிலும் வேலைகளைச் செய்வது நல்லது. இன்னங் கூடுமானவரையில் எப்பொழுதும் ஓரேவிதமான வேலைகளைச் செய்யாமல் பலவிதக் கிருத்தியங்களில் கவனித்திருப்பது உத்தமம்.

பத்திக்கடுத்த வெளிக்கிருத்தியங்களைப் பிரியமில்லாமல் நீ செய்தபோதிலும் அவைகளை விட்டுவிடாமல் செய்துவா. அடிக்கடி சிலுவையை எடுத்து முத்தமிட்டுக் கட்டியரவணைத்து அதில் அறையுண்டிருக்குஞ் சேசுநாதரது கரங்களையுங் கால்களையும் முத்தமிட்டு வானத்தைநோக்கி உன் கைகளையுங் கண்களையும் உயர்த்திப் பின்னால் வருஞ் சிநேக நம்பிக்கைக்குரிய வார்த்தைகளைச் சர்வேசுரனை நோக்கி உருக்க நேசத்தோடு சொல்லக்கடவாய். என் அன்பர் என்னிடத்திலிருக்கிறார். நான் அவரிடத்திலிருக்கிறேன். என் ஆத்தும நேசர் என்னிருதயத்தின் மீது மீலறச்செண்டுபோலிருக்கிறார். என் பரம கர்த்தரே சுவாமீ என் கண்கள் உம்மையே தேடுகின்றன. எனக்கு நீர் உமது ஞான ஆறுதலை எப்போது தருவீரோவென்று என் ஆத்துமம் உம்மை நோக்கி ஓயாமல் அபய சத்தமிடுகிறது. என் நேச சேசுவே மெய்யாகவே என்னிரக்ஷகரான சேசுவாய் நீர் எனக்கு என்றுமிரும். என் மதுர சேசுவே என்னிடத்தில் நீர் வீற்றிரும். என் ஆத்துமம் உயிர்பெற்று வாழும். என் கர்த்தரான சர்வேசுரனுடைய சிநேகத்தினின்று என்னை ஆர் பிரிக்கக்கூடும். இவ்வித அன்பு நேசத்துக்குரிய பல அமிர்த வாக்கியங்களைச் சொல்லலாம்.

மட்டுத்திட்டமாய் ஐந்துமணிக்கயிறு முதலிய தவ எத்தனங்களைச் சீராய் விதவிக்கொள்ளுவதால் மனக் கஸ்தியைத் தள்ளலாம். அதெப்படியெனில் மனஞூச் சாயமாய் நாம் வருவித்துக்கொள்ளுஞ் சரீர வருத்தத்தால் உள்ளத்தில் மன ஆறுதல் உண்டாகும். இப்படி சரீர நோக்காடுகளை ஆத்துமம் உணரும் போது மனதிலிருக்கும் உள்ளாந்தரக் கஸ்தி வருத்தத்தை நினைக்கிறதில்லை. அடிக்கடி நன்மை வாங்குவதும் மனக் கஸ்தியைத் தள்ளுவதற்கு மகா நேத்தியான உத்தம வழி. ஏனெனில் இந்தப் பரலோக அப்பந்தான் இருதயத்துக்குப் பலத்தையும் புத்திக்குச் சந்தோஷத்தையும் வருவிக்கும்.

கஸ்தியினால் உனக்கு வரும் மன வருத்தங்களையும் பலவிதச் சிந்தனை நினைப்புகளையுந் தாழ்ச்சியாய்ப் பிரமாணிக்கத்துடன் உன் ஆத்துமகுருவானவருக்குச் சொல்லிக்காட்டு. நீ கஸ்தியாயிருக்கும் போது பத்தி சந்தோஷ மனக்களிப்புள்ள மனுஷர்களிடத்தில் உன்னால் கூடுமானவரையில் அடிக்கடி போய்க் கலந்து பேசிக்கொண்டிரு. கடைசியாய் நீ படுங் கஸ்தி முன்னால் நீ அநுபவித்த வீண் சந்தோஷங்களுக்கு வரவேண்டிய நியாயமான தண்டனை என்று பொறுமையாய் இதனைச் சகிக்க நல்ல பிரதிக்கினை செய்து உன்னை முழுதுஞ் சர்வேசுரனுடைய திருக்கரங்களில் ஒப்புக்கொடுத்துவிடு. இப்படி சில காலஞ் சர்வேசுரன் உன்னைச் சோதித்தபின் நீ படுங் கஸ்திச் சஞ்சலத்தில் நின்று உன்னை மீட்பாரென்பதின்மட்டில் அற்ப சந்தேகமும்படாதே.

13-ம் அதிகாரம்.

பஞ்சேந்திரியங்களுக்கு தோன்றுகிற ஞான ஆறுதல்களைக்குறித்தும் எப்படி அவைகளை உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்பதின்பேரிலும்.

இவ்வுலக முழுதும் ஓயாத மாற்றத்துக்குள்ளாகச் சுவாமி சித்தம். முறைமுறையாய்ப் பொழுதுக்குப்பின் இரவும் வசந்தகாலத்துக்குப்பின் கோடைகாலமுங் கோடைகாலத்துக்குப்பின் பனிகாலமும் பனிகாலத்துக்குப்பின் குளிர்காலமுங் குளிர்காலத்துக்குப்பின் வசந்தகாலமும் மாறிமாறிவருகிறது. ஒருநாள் வேறொரு நாளுக்கு எல்லாத்திலும் பரிச்சேதம் ஒத்திருப்பதில்லை. ஒருநாள் மந்தாரமாயிருக்கும். வேறொருநாள் மழைபெய்யும். மற்றொருநாள் உஷ்ணமாயிருக்கும். அதற்கடுத்த நாளிற் புசல் பெருங்காற்றடிக்கும் இப்படி உலகத்தில் உண்டாகும் பலவித மாற்றமே உலகத்துக்கு வெகு அழகாம்.

மனிதனைக்குறித்தும் இத்தன்மையாய்ச் சொல்லலாம். அதேதென்னில் ஒரு நாளும் அவன் ஓரே நிலையில் இருக்கிறதில்லை. ஓர் நதியின் சலம்போல் இப்புவியின்மீது இவன் சீவியநாள் நடக்கிறது. ஓயாத பலவித ஆசாபாசங்களால் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டுச் சிலவிசை நம்பிக்கையால் உயர்ந்துஞ் சிலவிசை பயத்தால் தாழ்ந்துஞ் சிலவிசை ஆறுதல் சந்தோஷத்தால் ஒருபக்கத்திலுஞ் சிலவிசை கஸ்திதுயரால் வேறுபக்கத்திலுந் தள்ளப்படுகிறான். இவன் சீவிய நாட்களில் ஒருநாளும் இன்னஞ் சரியாய்ச் சொல்லவேண்டுமானால் ஒரு மணிநேரமுதலாய்

வேறொரு மணிநேரத்துக்கு முழுதும் ஒத்தாயிருக்கிறதில்லை.

இவ்வகையாய் ஒன்றுக்கொன்று ஒவ்வாத பலவிதச் சம்பவங்களுக்குள்ளே மாறாத மன ஒருமிப்பை எப்பொழுதுங் காப்பாற்றுவது விசேஷம். ஏதேது நம்மைச் சுற்றிலும் பலவாறு மாறிமாறி நடந்தபோதிலுங் எப்பொழுதும் நமது கண்கள் பரலோகத்தை நோக்கி இருக்கவேண்டியதுமல்லாமல் சர்வேசுரனைத் தாவிப்போய் மாறாத நிலைமையாய் இருக்கக்கடவோம். ஓர் கப்பல் மேற்கே கிழக்கே வடக்கே தெற்கே எந்தப் பக்கமாய்ப் போனபோதிலும் அதிலிருக்கப்பட்ட காந்த ஊசி வடதுருவ நக்ஷத்திரத்தை நோக்கிக்கொண்டேயிருக்கும். இத்தன்மையாகவே நம்மைச் சுற்றிலுமாத்திரமல்ல இன்னம் நமக்குள்ளவையெல்லாம் கீழதுமேலதாய்ப் புரண்டுபுரண்டு போகட்டும். நமது ஆத்துமங் கஸ்தியாகவென்கிலுங் சந்தோஷமாகவென்கிலும், இன்பத்திலாகிலுங் கசப்பிலாகிலுஞ் சமாதானத்திலென்கிலுங், கலக்கத்திலென்கிலும், வெளிச்சத்திலாகிலும், இருளிலாகிலுங், தந்திரத்திலென்கிலும், அமரிக்கையிலென்கிலும், பிரியத்திலாகிலும், வெறுப்பிலாகிலும், ஞான வறட்சியிலென்கிலும், ஞான சந்தோஷத்திலென்கிலும் இருக்கட்டும். சூரியன் இதனைக் கொளுத்தினாலுஞ்சரி குளிர்ந்த பனி இதனைக் குளிர்ப்பித்தாலுஞ்சரி நமதிருதயமும் புத்தியுங்காந்த ஊசிபோலிருக்கப்பட்ட நமது மேலான மனதும் எப்பொழுதும் மாறாமல் தன் சிஷ்டகரும் இரக்ஷகருந் தன் ஏக நன்மையுமாகிய சர்வேசுரனுடைய நேசத்தில் இடைவிடாமல் தாவியிருக்கட்டும்.

நாம் ஜீவித்தாலுஞ் சரி மரித்தாலுஞ் சரி சர்வேசுரனிடத்தில் இருப்பதால் சுவாமியுடைய சிநேகத்தில் நின்று நம்மை ஆர் பிரிக்கக்கூடுமென்று அப்

போஸ்தலர் சொல்லுகின்றார். கஸ்தி சஞ்சலமுமல்ல, சீவியமும் மரணமுமல்ல, நிகழ்காலத் தின்மையு மல்ல வருங்காலத் தின்மையின் பயமுமல்ல, மிகுந்த ஞான மனோன ஆறுதலுமல்ல, மிகுந்த கஸ்தி துயர்களுமல்ல, மனப்பிரிய இன்பமுமல்ல மனவருட்சி வருத்தமுமல்ல, உள்ளபடியே எதுவுஞ் சேசுகிறீஸ்துநாதருடைய சிநேகத்தினின்று நம்மைப் பிரிக்க அறியா. இந்த அநித்திய சீவியகாலத்தில் அவசியம் நமக்கு நேரிடும் எவ்வித மாற்றங்களிலும் வித்தியாசங்களிலும் நமதாத்துமம் பரிசுத்த உத்தம ஒருமிப்பில் நிலையாய் நிற்கிறதற்குச் சர்வேசுரனையும் அவர் திருச்சிநேகத்தையும் பரிச்சேதம் விட்டுவிடுகிறதில்லையென்கிற கெட்டியான பிரதிக்கினை வெகு உதவியாயிருக்கும். ஏனெனில் வெட்டவெளியில்பலமான காற்றில் அகப்பட்டுக்கொள்ளுந் தேனீக்கள் ஆகாயத்தில் தங்களைக் காற்று அடித்துக்கொண்டு போகாதபடிக்குப் பொடி கற்களைத் தங்கள் கால்களில் எடுத்துவைத்துக்கொள்ளும். இத்தன்மையாகவே நமது ஆத்துமந் தன் ஆண்டவராகிய சர்வேசுரனை எப்பொழுதுஞ் சிநேகிக்க வேண்டுமென்கிற பிரதிக்கினையில் பலமாய் ஊன்றியபின் சரீரத்துக்கடுத்தாயினுஞ் சரி ஆத்துமத்துக்கடுத்ததாயினுஞ் சரி எவ்விதச் சந்தோஷ ஆறுதல்களிலுங் கஸ்தி வருத்தங்களிலும் எப்படிப்பட்ட மாற்றங்களிலும் நிலைமையாய்த் திடனாய் நிற்கும்.

ஆனால் இதுவிஷயத்தைக்குறித்து இந்தப் பொதுவான ஒழுங்கோடு இன்னஞ் சில விசேஷ ஒழுங்குகளை அறிய வேண்டியிருக்கிறது. முதலாவது.— கண்ணீர் சொரிந்து பெருமூச்சுவிட்டு அழுகிறதிலும் இன்னம் பக்திக்கடுத்த கிருத்தியங்களில் நமக்குப் பிரியமான ஓர்வித மனத் திருத்தியை வருவிக்கும மனப்பிரிய முதலிய சந்தோஷ ஆறுதல்களி

லும் மெய்யான பத்தி அடங்கியிருக்கிறதில்லே. இதை நன்றாய்க் கண்டுபிடிக்கவேண்டும்.

பிரிய சகோதரமே, ஞான ஆறுதல்களை அநுபவிப்பதற்கும் மெய்யான பத்தியாய் இருப்பதற்கும் வித்தியாச மெத்த. ஏனெனில் அநேகர் வெகு ஞான ஆறுதல்களை அநுபவித்தபோதிலுந் துர்க்குணம் உள்ளவர்களாய் இருப்பார்கள். இதைக்கொண்டு இவர்களிடத்தில் மெய்யான தேவசிநேகமில்லை, இன்னம் மெய்யான பத்தியும் இலவலேசமுங் கிடையாதெனத்தகும். சாலூல் என்பவர் எங்காதியென்னப்படும் வனாந்தரத்தில் தாவீதென்பவரைக் கொல்லச் சுற்றித் திரிந்து தேடுகையில் தாவீதென்பவரும் இவரைச் சேர்ந்தவர்களும் ஒளிந்துகொண்டிருந்த ஒரு குகையில் சாலூல் என்பவர் தனியாய் நுழையும்படி நேரிட்டது. அத்தருணத்தில் இவரை வெகு சுளுவாய்க் கொல்லுகிறதற்குத் தாவீதென்பவருக்குச் சமயங் கிடைத்தபோதிலும் இவரைக் கொல்லாமல் விட்டுவிட்டதுமன்றி இவரைக் கொஞ்சமும் பயமுறுத்தவென்கிலும் அவருக்கு மனதுவந்ததில்லை. ஆனால் சாலூலென்பவர் குகையைவிட்டு வெளியிற் போகும் வரையில் அமரிக்கையாய்ப் பார்த்திருந்து இவர் சற்று எட்டிப்போனபின் தாவீதென்பவர் தமது மாசற்றதனத்தைக் காட்டவுந் தமக்கு இஷ்டமாகில் இவரை வெகு லேசாய்க் கொன்றிருக்கலாமென்றுங் காட்டும்படி இவரைக் கூப்பிட்டழைத்தார். இதைக் கண்டு சாலூலென்பவர் வெகுவாய் மனதிளகி நாலாவிதத்திலுந் தன் பக்ஷத்தை அவருக்குக் காட்டும்படியாக அவரைத் தன் நேச புத்திரனென்றழைத்துக் கூக்குரலிட்டழுது அவரைப் புகழ்ந்து அவர் தயாளத்தைக் குறித்துப் பெருமையாய்ப் பேசி அவருக்காகச் சர்வேசுரனை வேண்டிக்கொண்டு அவருக்கு வரவிருக்கும் மகிமைப் பிரதாபத்தை முன் அறிந்தாற்

போல் தன் சொந்த குடும்பத்தின்மட்டில் அவர் தயவாய் இருக்கும்படியாகவுங் கேட்டுக்கொண்டார்.

இதைப்பார்க்கிலும் இவர் தாவீதென்பவர்பேரில் தனக்குள்ள பக்ஷபற்றுதலை என்னமாய்க் காட்டக்கூடும். ஆயினும் இது மூகாந்தரமாக இவர் இருதயம் மாறினதில்லை. முன்போலவே கொரோமாய்த் தாவீதென்பவரை உபாதிக்கப் பிரயாசப்பட்டுவந்தார். இத்தன்மையாகவே அநேகர் சர்வேசுரனுடைய தயையின் மாட்சிமையையும் நமது ரக்ஷகருடைய கஸ்திக்குரிய பாடுகளையுங் கேட்டு மகா உருக்கத்தோடு கஸ்தி விதனப்பட்டுப் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் சொரிந்து மகா உருக்கமான செபங்களையும் நன்றியறிந்த மூயற்சிகளையுஞ் செய்வதால் பத்தியில் வெகுவாய் மேலிட்டதுபோலக் காணப்படுவார்கள். ஆனால் இவர்களைக் கொஞ்சஞ் சோதித்துப்பார்த்தால் சிற்று நேரத்தில் பெய்ந்து விட்டுவிடுங் கோடை மழை பெருந் துளியாய் நிலத்தில் விழுந்து அதில் ஊறாமல் ஓடிப்போய் அற்ப பிரயோசனமுமின்றிக் காளான் மாத்திரம் விளைவதற்கு உபயோகமாயிருப்பதுபோல் மேற்சொல்லிய மனிதர்கள் சிந்தும் உருக்க பக்ஷமுள்ள கண்ணீர் துர்க்குணம் நிறைந்த அவர்கள் இருதயத்தின் மீது விழுந்தும் அதிலிறங்காமல் ஓடிப்போவதால் இவர்களுக்கு இதனால் எள்ளளவும் பிரயோசனமில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட மனிதர்கள், கண்ணீர் சொரிந்தழுது பத்தியுள்ளவர்களாய்த் தோன்றியபோதிலும் அநியாயமாய் இவர்கள் சம்பாதித்த பொருளில் ஒரு காசும் உத்தரிக்கச் சம்மதியார்கள். தங்கள் கெட்ட நாட்டங்களில் ஒன்றையும் வெறுத்து விடார்கள். இவர்கள் இவ்வளவாய்ப் பிரலாபித்தழுத நமது இரக்ஷகனைப்பற்றி அற்ப வருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளச் சம்மதியார்கள்.

இத்தன்மையாய் இவர்கள் இருதயத்திலுள்ள நல்ல முயற்சிகள் பெருங் காளானுக்கு ஒப்பாயிருப்பதல்லாதே மெய்யான பத்தியின் அடையாளமாயிரா: மேலும் இவைகள் பலமுறை இவர்களை மோசம்பண்ணுவதற்குப் பசாசு தெரிந்துகொள்ளும் உபாய தந்திரமாம். இந்தச் சொற்ப ஆறுதல்களை அநுபவிப்பதால் இவர்கள் தங்களை வெகு புண்ணியவான்களாய் நினைத்துக்கொள்ளும்படி செய்யும். இதனால் இவர்கள் தங்கள்மட்டிலே திருத்தி சந்தோஷங்கொண்டு ஸ்திரமான மெய்யான பத்தியை விட்டுவிடச் செய்யும். இப்படி முன் சொல்லியதுபோல் சர்வேசுரனுக்குப் பிரியமாயிருப்பதெதையுஞ் செய்யத் தீர்மானித்திருக்கிற ஸ்திரமுஞ் சுறுசுறுப்புமுள்ள புண்ணியவான்களிடத்திலுள்ள மெய்யான பத்தியை இவர்கள் அநுசரிக்க அறியார்கள்.

ஒரு சிறுபிள்ளை வயித்தியன் சத்திரக் கத்தியால் தன் தாயைச் சத்திரம்பண்ணுவதைப் பார்த்தால் வெகு உருக்கமாய் அழும். ஆனால் இப்படி பக்ஷம் வைத்தழுதும் அந்நேரத்திலேயே அந்தத் தாய் தன் பிள்ளை கையிலிருக்கும் பழத்தையாகிலும் வேறே ஏதாவது தின்னும் பண்டத்தையென்கிலும் கேட்டால் கொடுக்காது. நாம் அநுசரிக்கும் உருக்க நேசமுள்ள பத்திக்கடுத்த கிருத்தியங்கள் பெரும்பாலும் இதற்கொத்தவை என்கலாம். சிலுவையில் அறையுண்டிருக்குஞ் சேசுகிறீஸ்துநாதரது இருதயத்தை ஈட்டியால் குத்துவதைப் பார்க்கும்போது வெகு துயருற்று அழுகிறோம். பிரிய சகோதரமே; நமது உத்தம தந்தையும் இரக்ஷகருமாகிய சேசுகிறீஸ்துநாதரது கஸ்திக்குரிய பாடுகள் மீதும் அவர் திருமரணத்தின் பேரிலும் அழுகிறது நல்ல காரியந்தான். ஆனால் நம்மிடத்திலிருக்கும் பழத்தை அவர் வெகுவாய்

வருந்திக்கேட்டும் ஏன் விருப்பத்தோடு அவருக்குக் கொடாமலிருக்கிறோம்.

சிநேகமென்னும் ஏக கனியாகிய நமது இருதயத்தையல்லோ நமதன்புக்குரிய இரக்ஷகர் நம்மிடத்தில் வருந்திக் கேட்கின்றார். நமது இருதயத்தில் நின்று பிடுங்கி எறிந்துவிட அவர் ஆசிக்கும் நமது இருதயத்திலுள்ள இத்தனையாயிரம் அற்பப் பற்றுதல்களையும் மனத் திருத்தியையும் முகத்தாக்ஷணையையும் ஏன் அவருக்குப் பலியாக வசீகரம் பண்ணாமலிருக்கிறோம். அவர் திரு வரப்பிரசாத நன்மையைப் பார்க்கிலும் இவைகளை அதிக பிரியமாய்த் தின்னும் பண்டம்போல் நாம் பார்ப்பதாலல்லவோ ஒருநாளும் அவைகளை நமது இருதயத்தினின்று தள்ளிவிடத் திராணியற்றவர்களாய் இருக்கிறோம். இதெல்லாஞ் சிறுபிள்ளைகளது சிநேகத்துக்கு ஒப்பாம். இதெல்லாம் உருக்கமான பக்ஷந்தான், ஆனால் பலஹீனமானதும் அற்ப பிரயோசனமற்றது. மெய்யான பக்தி வெறும் பிரியம் வருவிக்கும் இந்தப் பற்றுதல்களில் அடங்கியிருப்பதில்லை. சிலவிசை இவ்விதப் பக்ஷபற்றுதல் அவரவர் சரீரக் கூறுக்குங் குணத்துக்கும் ஏற்றபடி சுளுவாய் வரும். இன்னஞ் சில விசை பசாசு நம்மைச் சுளுவாய் மோசம் பண்ணுவதற்கு நமது புத்தியில் இவ்வித உருக்கத்தை வருவிக்கிறதுண்டு.

இரண்டாவது — பிரியமான இந்த உருக்கமுள்ள இன்பமானது சிலவிசை வெகு பிரயோசனமாயிருக்கும். ஏனென்றால் ஆத்துமத்துக்கு இதனால் சுறுசுறுப்பும் புத்திக்குப் பலனும் வருகிறதல்லாதே மெய்யான பத்திக்கு ஒருவித பரிசுத்த சந்தோஷ அக்களிப்பை வருவிப்பதால் நமது கிருத்தியங்களெல்லாம் வெளிக்கு முதலாய் மகா அழகு சொகுசுள்ளதாகும். இதில் தாவீதென்பவர் நன்றாய்ப் பழக்கப்

பட்டிருந்தபடியால் என் ஆண்டவரே, சுவாமீ உமது வார்த்தைகள் என் வாய்க்கு எவ்வளவோ இன்பமாய் இருக்கின்றன. தேனானது என் நாவுக்கு உருசியாயிருப்பதைப் பார்க்கிலும் உமது வாக்கியங்கள் என் இருதயத்துக்கு அதிக மதுரமாய் இருக்கிறதென்றார்.

மெய்யாகவே உலகில் அனுபவிக்கக்கூடிய குற்றமற்ற மகா நேத்தியான ஓய்வு இளைப்பாற்றி சந்தோஷத்தைப் பார்க்கிலும் மெய்யான பத்தியால் நமக்கு உண்டாகும் மகா சொற்பமான ஆறுதல் முதலாய் எந்த விதத்திலும் மேற்படாதென்பதற்குச் சமுசயமில்லை. இந்த அமுதைக் குறித்துதான் வேதாகமத்தில் பல இடங்களில் பேசப்பட்டிருக்கிறது. இந்த அமுதானது மகா நேத்தியான திராக்ஷரசத்தைப் பார்க்கிலும் உச்சிதமானது. இதைச் சற்று உருசி பார்த்தவனுக்கு இலௌகீக சந்தோஷ ஆறுதல்களெல்லாம் பிச்சுப்போல் கசப்பாய்த் தோன்றும். சித்திக்கென்னும் புல்லை வாயில் போட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு உண்டாகும் மிஞ்சின. இனிப்பால் பசிதாகந் தோற்றுதாம். இத்தன்மையாகவே உள்ளாந்தர ஆறுதல் சந்தோஷம் என்னும் பரலோக மன்னாவைச் சுவாமியிடத்தில் அடைகிறவர்கள் இவ்வுலக சந்தோஷ ஆறுதல்களைத் தேடவும் ஆசிக்கவுமாட்டார்கள். இப்பிரபஞ்ச ஆறுதல்கள் இவர்களுக்கு வந்தபோதிலும் வேணுமென்று பிரியங்கொண்டு இதே சிந்தையாயிரார்கள். இந்தச் சந்தோஷ ஆறுதல்களெல்லாஞ் சர்வேசுரன் தம்மைத் தேடுகிற புண்ணியாத்துமங்களுக்குக் கொடுக்க இருக்கும் பரலோக நித்திய இன்பத்தின் முந்தின பிரியமாம். புண்ணியத்திற் சிறுபிள்ளைகளைப்போல் இருப்பவர்களைத் தமது வசம் பண்ண அவர்களுக்குக் கொடுக்குஞ் சர்க்கரை மிட்டாய்ப்போல் இருக்கிறது.

இந்த ஞான சந்தோஷங்களெல்லாம் இவர்களைப் பலப்படுத்துவதற்குச் சத்தியுள்ள சலம்போலவும் இன்னுஞ் சிலவிசை இந்தப் புண்ணியாத்துமங்களுக்கு நியமித்திருக்கும் நித்திய சம்பாவனை அடங்கிய பேழைபோலவும் இருக்கின்றன.

பெரிய அலேக்சாந்தரென்பவன் கடல் யாத்திரை செய்கையில் ஆகாய முழுதும் மகா மதுரமான வாசனை வீசக் கண்டு செழிப்பான அராப்தேசத்துக்கு அருகாமையில் இருப்பதாகத் தீர்மானித்தான். இதனால் இவன் கப்பற் கூட்டமானது தயிரியமாய்ப் பாய் விரித்துப்போக உதவியாயிருந்தது. இப்படிதான் இந்த அநித்திய சீவியத்தில் பெரும் புசல் போல் நமக்கு வருஞ் சோதனைகளில் தேவ அநுக்கிரகத்தால் நமக்கு வரும் ஞான இன்பமானது நாம் ஆசித்துக்கொண்டிருக்கிற மோக்ஷ இராச்சிய சொல்லிலடங்காப் பேரின்ப பாக்கியங்களை முந்தி நமக்குக் காட்டுகிறது.

மூன்றாவது.—ஆனால் சுவாமியிடத்தில் நின்றுவருகிற உத்தமமான சந்தோஷ ஆறுதல்களும் சுபாவத்தினாலென்கிலும் பசாசினாலாகிலும் வருகிற பிரயோசனமற்றதும் ஆபத்துக்குரியதும் இன்னந் தீங்கானதுமான சந்தோஷ ஆறுதல்களும் இருப்பதால் நல்லதெவை கெட்டதெவையென்று பகுத்தறிவது எப்படியென்று கேட்பாயாக்கும். பிரிய சகோதரமே, நமது ஆத்தும நாட்டம் பற்றுதல்கள் இன்னவையென்று அறிவதற்கு அவைகளால் விளையும் பிரயோசனத்தைக் கொண்டு அறிந்துகொள்ளலாம் என்பது பொதுவொழுங்காம். நமது இருதயம் ஓர் விருக்ஷம்போலவும், நமது ஆசைப் பற்றுதல் நாட்டங்களெல்லாம் அதின் கிளைகள்போலவும் நமது கிருத்தியங்களெல்லாம் அதின் கனிகள்போலவும் இருக்கின்றன. இருதயத்தில் நல்ல ஆசை நாட்டங்கள்

இருந்தால் நமது இருதயமும் நல்லதாயிருக்கும். நமது ஆசைப் பிரியங்கள் எப்படி உத்தமமானவை யென்று அறியலாமெனில் நம்மிடத்தில் பரிசுத்த கிருத்தியங்களையும் உத்தம அநுகூலங்களையும் விளைவித்தால் சுலுவாய் இவைகளை அறிந்துகொள்ளலாம்.

நமக்கு வருஞ் சந்தோஷ ஆறுதல்களால் நாம் அதிக தாழ்ச்சி பொறுமை உள்ளவர்களாகவும் அதிக பிறசிநேகம் உள்ளவர்களாகவும் பிறர்மட்டில் அதிக தயாளம் உள்ளவர்களாகவும் நமது ஆசாபாசங்களை அடக்க அதிக சுறுசுறுப்புள்ளவர்களாகவும் நமது கடமைகளை நிறைவேற்ற அதிக கவனமுள்ளவர்களாகவும் நமது பெரியோர்கள்மட்டில் அதிக கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் அதிக கபடற்றவர்களாகவும் ஆவோமேயாகில் சந்தேகமற இந்த ஞான சந்தோஷங்கள் சுவாமியினிடத்தில் நின்று வருகிறதெனத் தகும். ஆனால் இந்த இன்பங்களெல்லாம் நமக்கு மாத்திரம் மதுரமாயிருந்து நாம் கோபிகளாய்ப் பொறுமையற்றவர்களாய் ஓட்டாரமுள்ளவர்களாய்ச் செருக்குள்ளவர்களாய்ப் பிறர்மட்டில் ஈவிரக்கமற்றவர்களாயிருந்து எற்கனவே நம்மைத்தாமே நாம் அர்ச்சியசிஷ்டவர்களாய்ப் பாவித்து நமது பெரியோர் சொல்லும் புத்திமதிகளைக் கேட்கப் பிரியமிராமல் இருப்போமேயாகில் சந்தேகமற இந்தச் சந்தோஷ ஆறுதல்களெல்லாம் அபத்தமானவை தீங்குக் குரியவையெனவேண்டும். நல்ல விருக்ஷம் நற்கனியையே கொடுக்கும்.

நாலாவது.—நமக்குச் சந்தோஷ ஆறுதல் வரும்போது முந்தமுந்தச் சுவாமிக்கு முன்பாக நம்மைத் தானே வெகுவாய்த் தாழ்த்திக்கொள்ளுவதல்லாதே இவைகளைப்பற்றி நாம் வெகு உத்தமவான்களாய் இருக்கிறோமென்று சொல்லாமலிருக்கக்கடவோம். மெய்யாகவே பிரிய சகோதரமே, இந்த நன்மைக

ளெல்லாம் நம்மை உத்தமவான்களாக்குகிறதில்லை. ஏனெனில் முன் சொல்லியதுபோல் மெய்யான பத்தி இதிலடங்கினதல்ல, ஆனால் சுவாமியிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்து அவரை மெய்யாகவே தேடுகிறவர்களுக்குச் சுவாமி எவ்வளவோ நல்லவராய் இருக்கிறாரென்று சொல்லக்கடவோம். வாயில் சர்க்கரையை வைத்துக்கொண்டிருக்கிறவன் தன் வாய் உருசியாய் இருக்கிறதென்று சொல்லாமல் சர்க்கரை உருசியாய் இருக்கிறதாகச் சொல்லவேண்டும். இத்தன்மையாகவே ஞான இன்பம் மகா உசிதமானது. அதனை அனுப்புஞ் சர்வேசுரன் மகா நல்லவராயிருந்தபோதிலும் அதனை அநுபவிப்பவன் உத்தமவானென்று சொல்லக்கூடாது.

நாம் இன்னம் பால குடிக்குங் குழந்தைகளாய் இருக்கிறோமென்றும் நமது புத்தி இன்னும் பலப்படாமல் இருப்பதைப்பற்றித்தான் இந்த உருசிகரமான பண்டங் கொடுக்கப்படுகிறதென்றும் நாம் சுவாமியைச் சிநேகிக்கத் துவக்குகிறதற்கு இப்படிப்பட்ட இன்ப ஆறுதல்கள் நமக்கு வேண்டியிருக்கிறதென்றும் அறிந்துகொள்ளுவோம். ஆனால் இதன் பின் பொதுவாய் இந்த வரப்பிரசாத நன்மைகளை மிகுந்த தாழ்ச்சியோடு அங்கீகரித்துக்கொண்டு சுவாமிதானே நமது இருதயத்தில் இந்தப் பிரியத்தை வருவிப்பதால் இதனை மகா கனமாய் எண்ணக்கடவோம். இவ்விஷயத்தில் ஓர் தாயானவள் தன் சிறு குழந்தைக்குப் பிரியம் வருவிக்கப் பொடிமிட்டாய்களை ஒவ்வொன்றாய் வாயிற்போடுகிறதுபோல் சுவாமி செய்கின்றார். ஏனெனில் இந்தப் பிள்ளைக்கு வேண்டிய புத்தி அறிவிருந்தால் இந்த மிட்டாயைப் பார்க்கிலுந் தன் தாயினது குலாவுதலை அதிகப் பிரியத்தோடு வருந்தித் தேடும்.

இத்தன்மையாய்ப் பிரிய சகோதரமே, ஞான இன்பங்களை அநுபவிப்பது பெருங் காரியந்தான்; ஆனால் சர்வேசுரன் தானே நமது இருதயத்திலும் புத்தியிலும் ஆத்துமத்திலும் இந்தச் சந்தோஷ ஆறுதல்களை மகா அந்நியோந்நிய பக்ஷத்தோடு வருவிக்கிறார் என்று உணர்வது எல்லா இன்பங்களிலும் மகத்தான இன்பமாம். இந்த ஆறுதல்களைத் தாழ்ச்சியோடு அடைந்தபின் அதுகளை நமக்குக் கொடுக்குஞ் சுவாமியுடைய கருத்தின்படி சாக்கிரதையாய் அதுகளை உபயோகித்துக்கொள்ளவேண்டும்: தமது மட்டில் நமது பக்ஷத்தை மூட்டவும் பிறர்மட்டில் அதிக வாஞ்சையுள்ளவர்களாக நம்மை ஆக்கவுந்தான் சுவாமி இந்த இன்பங்களை நமக்கு வருவிக்கிறார். தாயானவள் தன் பிள்ளை தன்னிடத்தில் கொஞ்சிவரும்படி அதற்கேதாகிலும் உருசிகரமான பண்டங்களைக் கொடுப்பாள். இத்தன்மையாகத்தான் சுவாமி நமக்கு அனுப்புஞ் சந்தோஷ ஆறுதல்களுக்கீடாக நமது நன்றியறிந்த சிநேக அத்தாட்சியைத் தமக்குக் காட்டவேண்டுமென்று விரும்புகிறார்.

இப்படியாய் நமது பக்ஷத்தையும் நன்றியறிந்தனத்தையும் அவருக்குக் காட்டுவதற்கு அவர் சந்நிதிக்குமுன் நம்மைத்தானே தாழ்த்தி அவர் திருக்கற்பனைகளை அநுசரித்து அவர் ஆசையைப் பின்செல்லுவதைப்பார்க்கிலும் உத்தம மார்க்கம் கிடையாது. இந்தச் சந்தோஷ ஆறுதல்களை எல்லாந் தாழ்ச்சியோடு அங்கீகரித்துக்கொண்டு அவைகளைச் சுவாமி நமக்குக் கொடுப்பதாலுஞ் சுவாமியை நேசிப்பதற்கு அவைகள் உதவியாயிருப்பதாலும் அவைகளை நாம் விரும்பி ஆசித்தபோதிலும் அவைகளில் நமது இருதயப்பற்றுதலை முழுதும் வையாமல் அடிக்கடி அவைகளைப் பரித்தியாகம் பண்ணி அந்த ஆறுதல்களையல்ல ஆனால் சர்வேசுரனையும் அவர் பரிசுத்த

நேசத்தையும் மாத்திரந் தேடுகிறோமென்று காட்ட வேண்டும்.

இப்படி ஆறுதலையல்ல சமஸ்தருக்கும் ஆறுதல் வருவிக்கும் ஆண்டவரையே தேடுகிறோமென்றும் வீண் பிரியத்தையல்ல ஆனால் நமது பிரிய இரக்ஷகரையே தேடுகிறோமென்றும் நமக்கின்பமாயிருக்கும் பிரியத்தையல்ல ஆனால் பரலோக பூலோக மெய்யான பேரின்பமாகிய சர்வேசுரனையே தேடுகிறோமென்றுங் காட்டவேண்டும். நமதிருதய இவ்வாயத்தமானது எப்படிப்பட்டதாயிருக்க வேண்டுமென்றால் நமது சீவியநாளில் ஒருவித ஆறுதலையும் அடையக்கூடாமல் இருந்தபோதிலுஞ் சர்வேசுரனுடைய நேசத்தில் ஸ்திரமாய் நிற்கக் கெட்டியான பிரதிக்கினை உள்ளவர்களாயிருக்கவேண்டும். இவ்வகையாய் என்னாண்டவரே சுவாமீ நீர் சிலுவையிலிருந்தாலுஞ்சரி மகிமையிலிருந்தாலுஞ்சரி உம்மோடிருப்பது எனக்குப் பிரியமென்று சொல்லவேண்டும். கடைசியாய் நீ அறியவேண்டியதென்னவெனில் இவ்விதச் சந்தோஷ ஆறுதல்களை ஏராளமாய் நீ அடைந்தாலுஞ்சரி அல்லது அவைகளில் நூதனமானது எதையாகிலும் அநுபவித்தாலுஞ்சரி உன் ஆத்தும குருவானவருக்கு உண்மைப்படி சொல்லிக்காட்டவேண்டும். இவர் மூலமாகத்தான் இந்த ஞான சந்தோஷங்களை எவ்வளவு மட்டுத்திட்டம் விமரிசையோடு உதவிக்கொள்ள வேண்டுமென்று கற்றுக்கொள்வாய்; ஏனெனில் உனக்குத் தேன் அகப்பட்டதோ அதில் உனக்குப் போதுமாயிருப்பதைப் பொசி என்றெழுதியிருக்கிறது.

14-ம் அதிகாரம்.

மன வறட்சி ஞானவறட்டலைக் குறித்து.

பிரிய சகோதரமே, உனக்கு ஞான ஆறுதல்கள் வரும்போது முன் சொல்லியபிரகாரம் நடந்துகொள். ஆனால் இவ்வளவு பிரியமான இந்த ஆறுதல் சந்தோஷகாலம் எப்பொழுதும் நீளிக்காது. சிலவிசை உன்னிருதயத்தில் அற்ப பத்தி ஆறுதல் ஒன்றுந் தோன்றாது. உன்னிருதயம் ஒன்றும் விளையாத காய்ந்து வறண்ட நிலத்துக்கு ஒத்ததாயுஞ் சுவாமியிடத்தில் அண்டிப்போக இடுமுடுக்கான சின்ன வழிமுதலாய் இதற்குக் கிடையாததுபோலவும் இதனைக் கொளுத்தும் வறட்சியைத் தணிக்கத் தேவ அநுக்கிரகத்தின் ஒரு துளித் தண்ணீரும் இதன்பேரில் விழாததுபோலவுந் தோன்றும். இந்த அந்தஸ்திலிருக்கும் ஆத்துமம் விசேஷமாய் இப்படி கடுமையான சோதனையால் தொந்தரவுபடும்போது மெய்யாகவே எவ்வளவோ பரிதாபத்துக்குரியதாயிருக்கும். ஏனென்றால் அப்போது தாவீதென்பவனைப்போல் இரவும் பகலும் இவ்வாத்துமத்துக்குக் கண்ணீரே போசனமாகும். பசாசோவெனில் இதற்கு அவநம்பிக்கை வருவிக்க நாலாவிதக் கலக்கமான சிந்தைகளை வருவித்து இதனைப் பார்த்துப் பரியாசம்பண்ணி உன் சுவாமி போன விதமென்ன. எந்த வழியாய்ப் போய் மறுபடியும் அவரைக் காண்பா. அவர் வரப்பிரசாத சந்தோஷத்தை உனக்கு ஆர் மறுபடி கொடுக்கக்கூடுமென்று பிகற்பமாய்ப் பேசும்.

பிரிய சகோதரமே, இச்சமயத்தில் என்ன நீ செய்வாய். இந்தத் தின்மைக்குக் காரணமென்னவென்று

ஆராய்ந்துபார். நமக்கு வரும் மனவறட்சி ஆறுதலற்றதனத்துக்குப் பலமுறை நாமேயல்லாமல் வேறு காரணமில்லை.

1-வது. சீரிப்பூச்சியால் சங்கடப்படும் பிள்ளைக்குத் தாயானவள் சர்க்கரையைக் கொடுக்காதது போல் தேவ ஆறுதல்களால் நமக்கு ஏதாகிலும் வீண் சிலாக்கியம் மனப்பிரியம் வராதபடிக்குச் சுவாமி இவைகளை நமக்குக் கொடுக்காமல் விட்டுவிடுகிறார். என் சர்வேசுரா சுவாமீ! என்னை நீர் தாழ்த்தினது எனக்கு நலமாயிருக்கிறது. ஏனெனில் இப்படி நான் தாழ்த்தப்படுகிறதற்கு முந்தி உமக்குத் துரோகஞ் செய்தேன் என்று தாவீதரசன் சொல்லுவார்.

2-வது. சுவாமியால் குறிக்கப்பட்ட காலத்தில் அவருடைய நேசத்தின் மனோகர இன்பங்களை வேண்டியபடி கைக்கொள்ள நாம் கொஞ்சம் அசட்டையாயிருக்கும்போது நமது சோம்பலுக்குத் தண்டனையாக இவைகளை நம்மிடத்தினின்று எடுத்துக்கொள்ளுகிறார். இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் யாத்திரை செய்கையில் விடியற்காலமே எழுந்திருந்து மன்னு என்னும் போசனத்தை வேண்டியவளாயில் வாரிக்கொள்ளுவார்கள். சூரியன் உதித்தபின் இவைகளை வாரக்கூடாது. ஏனெனில் சூரியன் கிளம்பி வரவே இவைகள் தண்ணீராய்க் கரைந்து போம்.

3-வது. பலமுறை இல்லௌகீக அநித்திய சந்தோஷ ஆறுதல்களையுஞ் சுகத்தையுஞ் சற்றுப் பிரியமாய்ச் சிந்தித்துப் பிரியங்கொள்ளுகிறோம். நமது ஆத்தும பத்தாவானவர் நமது இருதயத்தின் கதவைத் தட்டி நமது ஞானக்கிருத்தியங்களைச் சரியாய்ச் செய்யவேண்டுமென்று நமக்கு நல்ல ஏவுதல்களை வருவிக்கின்றார். ஆனால் நாம் பிரியம் வைத்திருக்கும் வீண் விளையாட்டு வீண் காரியங்களை விட்டுவிடுவது

நமக்கு வருத்தமாய் இருப்பதால் இல்லாதி, சாக்குப் போக்குகளைச் சொல்லி அவரிஷ்டப்படி செய்வோமோ இல்லையோவென்று தத்தளிக்கிறோம். இதைப் பற்றியே நம்மைவிட்டு இவர் அப்புறால் போயவிடுவதால் சுறுசுறுப்பின்றி அசமந்தத் தனமாயிருக்கிறோம். பிற்பாடு இவரை நாம் தேடிவரும்போது இவரைக் காண்பதே நமக்கு வெகு பிரயாசையாம். இவர் நேசத்தை இலட்சியம் பண்ணாததுபோல் அதை ஆசித்து விரும்பிப் போகாமல் உலக காரியங்களை விரும்பிப் பின்பற்றிப் போனபடியால் இத்தன்மையாய்ச் சுவாமி நம்மை நடத்துவது மகா நீதியான தண்டனையல்லோ. ஆ பேதையான ஆத்துமமே, எசிப்து நாட்டின் கோதும்பை மாவை ஆகாரமாகப் பத்திரமாய் வைத்துக்கொண்டிருந்தமையால் பரலோக மன்னா என்னும் அப்பம் உனக்குக் கிடையாது. மனிதர்கள் கல்வித் திறமையால் பல வர்க்கங்களைக்கொண்டு உண்டு பண்ணும் வாசனைகளைத் தேனீக்கள் வெறுத்துத் தள்ளும். உலக மாய்கையால் வரும் இன்ப சுகங்களோடு இஸ்பிரீத்துசாந்து வாகிய சர்வேசுரனுடைய ஞான மனோகர இன்பங்கள் பொருந்தாது.

4-வது. பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போது இன்னந் தன் ஆத்தும குருவானவரோடு தன் ஆத்தும காரியத்தைக் குறித்துக் கலந்து பேசுகையிலும் உண்மைப்படி பேசாமல் மறைவிடமாய்ப் பேசுவதால் பலமுறை இவ்வித மனவறட்சி உண்டாகிறதுண்டு. ஏனென்றால் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுக்கே மறைத்தாப்போல் நீ பொய் சொல்லுவதால் அவர் உனக்குத் தமது வரப்பிரசாதங்களைக் கொடாமலிருப்பது அதிசயமல்ல. ஒரு சிறுபிள்ளையைப்போல் கபடற்றவிதமாய் உண்மையைச் சொல்ல உனக்கு மனதில்லாததால் சிறுபிள்ளைகளு

களுக்குக் கொடுக்கப்படும் மிட்டாயும் உனக்குக் கொடுக்கப்படாது.

5-வது. நமது இருதயம் உலக இன்பங்களைத் திருத்தியாய் அநுபவித்தபின் ஞான இன்பங்களின் பேரில் அதற்கு அருவருப்பு வருவதால் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை. நன்றாய்த் தீனியுண்ட மாடப்புருக்களுக்கு ருசிகரமான பழமுங் கசப்பாய்த் தோன்றுமென பழமொழி உண்டு. பசித்திருக்கிறவர்களைத் தம்முடைய நன்மையினாலே நிரப்பித் தனமுள்ள பேர்களை வெறுமை உள்ளவர்களாக்கினாரென்று பரிசுத்தக் கன்னிமரியாயி சொல்லுகின்றாள். உலக இன்பங்களில் குறைவின்றித் திரவிய சம்பன்னராய் இருப்பவர்கள் இஸ்பிரீத்துசாந்துவின் ஞான சந்தோஷங்களை அநுபவிக்கத் திராணியுள்ளவர்களல்ல.

6-வது. உனக்குச் சுவாமி அனுப்பிய ஞான ஆறுதல்களின் கனியை நன்றாய்ப் பத்திரமாய்க் காப்பாற்றினயோ பார். இப்படி செய்திருந்தால் இன்னம் உனக்குப் புதிதான ஞானசந்தோஷங்கள் கிடைக்கும். அதேதெனனில், உள்ளவனுக்கு அதிகமாய்க் கொடுக்கப்படும். ஆனால் கொடுக்கப்பட்டதைக் காப்பாற்றாமல் தன் தப்பிதத்தால் இழந்துவிட்டவனுக்கு அவனுக்கு உண்டாயிராததையுந்தானே பறித்துக்கொள்ளுவார்கள். அதாவது அவனுக்குக் கொடுக்க மூஸ்திப்பாயிருந்த நன்மைகளைக் கொடுக்காமல் விட்டுவிடுவார்கள். பச்சையாயிருக்கும் பூண்டுகளை மழையானது துளிரிட்டு முளையும்படிச் செய்யும். பச்சையாயிராத பூண்டுகளுக்கு முழுதும் இந்த மழை நஷ்டமாக்கி அவைகளை அழித்துவிடும். இந்த நியாயங்களையும் இதற்கொத்த இன்னம் பல காரணங்களையும் பற்றித்தான் தேவ ஆறுதல்களை நாம் இழந்துபோய் மகா மனவறட்சிக்குள்ளாகிறோம். ஆதலால் இவ்வித் குற்றங்குறைகள் நம்மிடத்தில் எதா

கிலும் உண்டோ இல்லையோ வென்று ஆராய்ந்து பார்க்கக்கடவோம். ஆனால் பிரிய சகோதரமே, மனக் கலக்கம் வீணாசையை விட்டு இந்தப் பரீட்சை செய்யவேண்டும். நமது ஆத்தும நிலையைத் தகுந்த படி ஆராய்ந்து பார்த்தபின் நமது மனவறட்சிக்குக் காரணம் நம்மிடத்திலேயே இருக்கிறதென்று காண் போமாகில் அதற்காகச் சுவாமிக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்யவேண்டும். ஏனெனில் ஓர் தின்மைக்குக் காரணம் இன்னதென்று அறிந்துவிட்டால் அந்தத் தின்மை ஏறக்குறையப் பாதி பரிகாரமானது என்னத்தகும். இதற்கு விரோதமாய் இந்த வறட்சியை வருவித்ததற்குக் காரணம் இன்னதென்று உனக்குத் தெரியாதபோது இதைக் குறித்து அதிகமாய் ஆழ்ந்து ஆராயாமல் கபடற்றதனமாய் நான் சொல்வதைச் செய்,

முதலாவது.—உன் நிர்ப்பாக்கியத்தையும் ஒன்றும் இல்லாமையையுங் கண்டு சுவாமிக்கு முன்பாக உன்னை வெகுவாய்த் தாழ்த்திச் சொல்லுவாய். ஐயோ நாதர், சுவாமீ எனக்குச் சகாயமாய் நீர் இராவிட்டால் என்னமாய்ப் போவேன். மெய்யாகவே என் கர்த்தரே சுவாமீ ஒன்றுமில்லாமையாய்ப் போவேனல்லோ. நாலுபக்கத்திலுந் திறக்கப்பட்டுக் காய்ந்து வறண்ட பூமிக்கொப்பாய் இருக்கிறேன். கொஞ்சமாயினும் மழை பெய்யாவிட்டால் சொற்பக் காற்றில் தூசியாய்ப் பறந்துவிடுவேன்.

இரண்டாவது.—சர்வேசுரனை மன்றாடி அவர் அநுக்கிரக பேரின்பத்தைக் கேள். என் ஆண்டவரே சுவாமீ! உமது ஞானத்தின் இரக்ஷணியச் சந்தோஷத்தை எனக்குக் கொடுத்தருளும். என் உத்தம பிதாவே கூடுமானால் இந்தப் பாத்திரத்தை என்னிடத்தில் நின்று விலக்கிவிடும், என் இரக்ஷகராகிய சேசுவே, என் இருதயத்தை வறட்டிவிடுகிற இந்த

அக்கினிக் காற்றை அமர்த்தி உமது தேவ ஆறுதல்களின் விலைமதிக்கப்படாத குளுநங் காற்றை என்மீது வீசியருளும். அப்போது என் இருதய நந்தவனத்திலுள்ள பூண்டுகள் மதுரமான இனிய சுகந்தம் வீசும்.

மூன்றாவது.—உன் ஆத்தும குருவானவரிடத்தில் போய் அவருக்கு உன் ஆத்துமத்தைத் திறந்து அதின் இடுமுடுக்கிலிருக்கும் இரகசியமான எல்லாக் காரியங்களையும் நன்றாய்ச் சொல்லிக்காட்டு. அவர் உனக்குச் சொல்லும் புத்திமதிகளை எல்லாம் மகா தாழ்ச்சி சிரவுணத்தோடு ஏற்றுக்கொள். ஏனெனில் இப்படித்தலை மட்டற்ற விதமாய் நேசிக்குஞ் சுவாமி பிறர் சொல்லும் புத்திமதிகளை நாம் தாழ்ச்சியாய் ஏற்றுக்கொள்ளும்போது அவைகள் நமக்கு எப்போதும் பிரயோசனமாய் இருக்கும்படி செய்கின்றார். விசேஷமாய்த் தம்மைச் சேவிக்கவிரும்பும் ஆத்துமங்களை நடப்பிக்க அவரே ஏற்படுத்திய ஞான மேய்ப்பர்களுடைய புத்திமதிகள் சிலவிசை வெளிக்கு அவ்வளவு பிரயோசனம் வருவிப்பதாகக் காணாவிட்டாலும் அவைகளை வெகு சத்தியுள்ளவைகளாக்கி விடுகின்றார். இத்தன்மையாகத்தான் எலிசை என்பவர் நக்காமான் என்பவனைப் பார்த்து இவன் குஷ்டரோகம் நீங்க யோர்தானதியில் ஸ்நானம் பண்ணும்படி சொன்னார். ஆனால் இது மனுஷர் புத்திக்கு அவ்வளவு சத்தியை வருவிக்கத்தக்கதாகக் காணப்படாதபோதிலும் இந்தத் தீர்க்கதரிசி சொன்னபடி நக்காமான் என்பவன் செய்தபடியால் இவனுடைய கீழ்ப்படிதலை முன்னிட்டு அந்த நதியின் சலம் இவனுக்குப் பிரயோசனமுள்ளதாய் இருக்கச் சுவாமிக்குச் சித்தமாயிற்று.

நாலாவது.—ஆனால் இந்த வழிப்பாடுகளை எல்லாம் உதவிக்கொண்டபின் நமது மனவறட்சி வருத்த சஞ்

சலங்கள் துரிதமாய் நம்மைவிட்டுப் போகவேண்டு மென்று மிஞ்சினவிதமாய் ஆசியாமலிருப்பதைப் பார்க்கிலும் நமக்கு உதவியானது ஒன்றுமில்லை. ஆகிலும் இப்படி சொல்லும்போது நமது இருதயத்திலுள்ள மனவறட்சி நீங்கிப்போகவேண்டுமென்று ஆசிக்கத் தகாததென்று சொல்லுகிறதில்லை, ஆனால் மிஞ்சின ஏக்கங்களுக்கு இடங்கொடுக்க ஒண்ணாதது. சுவாமி சித்தம். அவருக்கு இஷ்டமானபோது நமது வருத்தத்தை நீக்குவாரென்று அமரிக்கையாயிருக்க வேண்டும். ஆதலால் இந்தச் சஞ்சல காலத்திற் பொறுமையாயிருந்து சுவாமிக்கு இஷ்டமானால் அவைகளை நீக்கும்படி நமது ஆசையை அவருக்குத் தாழ்ச்சி சிரவணத்தோடு சொல்லிக்காட்டுவோம்.

என் பிதாவே கூடுமானால் இந்தத் துன்பப் பாத்திரம் என்னை விட்டு அகலும்படி செய்யும். ஆயினும் என் சர்வேசுரா சுவாமீ! என் மனதல்ல உமதிஷ்டப்படி ஆகட்டுமென்று மிகுந்த தயிரியத்தோடு சொல்லுவோம். நம்மாலான அமரிக்கை சமாதானத்தோடு நமது மனது தேவசித்தத்துக்கு அமைந்திருக்கப் பிரயாசப்படுவோம். ஆதேனெனில் நாம் சுவாமி சித்தத்துக்குக் கபடற்றதனமாய் அமைந்து போவதைச் சுவாமி பார்க்கையில் நமக்கு அநேகம் ஆறுதல் வரப்பிரசாதங்களைக் கட்டளையிடுவார். இத்தன்மையாகத்தான் அபிரகாமென்பவர் தமது ஏக குமாரனைத் தமக்குப் பலியிடத் தீர்மானித்திருப்பதைக் கண்டபோது இவரது உத்தம கீழ்ப்படிதல், நல்ல மனதைப் பார்த்துப் பிரியப்பட்டு இவருக்கும் மகா நேத்திரமான காட்சிகொடுத்து இவரையும் இவர் சந்ததியையுஞ் சதாகாலத்துக்கும் ஆசீர்வதித்தார். ஆதலால் சரீரத்துக்கடுத்த வியாதி இக்கட்டுகளிலுஞ்சரி புத்திக்கடுத்த சஞ்சல ஏக்கங்களிலுஞ்சரி ஞான சீவியத்தில் வரும் மனவறட்சி ஆறுதலின்மையிலுஞ்

சரி அதீதியந்த தாழ்ச்சியோடு மனப் பூரணமாய்
ஆண்டவர் எனக்கு ஆறுதல் தந்தார். அவரோ அதை
என்னிடத்திலிருந்து எடுத்துக்கொண்டார். அவர்
திருநாமம் அர்ச்சிக்கப்படுகவெனச் சொல்லுவோம்.
இந்தத் தாழ்ச்சியில் நாம் நிலைத்திருக்கையில் யோ
பென்பருக்குச் சுவாமி செய்ததுபோல் நமக்குந்
தமது சந்தோஷ இன்ப ஆறுதல்களைக் கொடுப்பார்.
யோபென்பவர் தமக்கு நேரிட்ட நானாவிதத் துன்ப
ங்களிலுஞ் சலியாமல் அல்லும்பகலும் மேற்சொல்
லிய உத்தம வாக்கியங்களையே உச்சரித்துவருவார்.

ஐந்தாவது.—கடைசியாய்ப் பிரிய சகோதரமே,
நமக்கு நேரிடக்கூடுமான மனவறட்சி கஸ்திகளில்
தயிரியத்தை விடாமலிருக்கக்கடவோம். ஆனால் சர்
வேசுரனுக்கு இஷ்டமானபோது மன ஆறுதல் சந்
தோஷம் வரட்டுமென்று பொறுமையாய்க் காத்துக்
கொண்டு வழக்கப்பிரகாரம் நமது கடமைகளைச்
செய்துவருவோம். நாம் செய்துவந்த ஞானக் கிரு
த்தியங்களில் ஒன்றையும் இந்த மனவறட்சியைப்
பற்றி அசட்டையாய் விட்டுவிடாமல் இருப்பது
மன்றிக் கூடுமானால் இன்னம் அதிகமாய்ச் செய்யக்
கடவோம். இவ்வாறு இனியசாரஞ் சதையுள்ள பழு
த்த பழங்களை நமது ஆத்தும பத்தாவுக்குக் கொடுக்
க்கூடாமையாய் இருப்பதால் வதங்கிக் காய்ந்து
போன பழங்களையாகிலும் ஒப்புக்கொடுப்போம்.
ஏனெனில் ஏக்காலுஞ் சுவாமியை நேசிக்கவேண்டு
மென்கிற உறுதியான மனது நமக்கிருக்குமாகில்
இவருக்கு எல்லாஞ் சரியே. வசந்தகாலம் வேண்டிய
படி அழகாயிருக்கையில் தேனீக்கள் மிகுந்த தேனை
உண்டுபண்ணும். இவைகள் சென்மிப்போ குறை
ந்துபோம். ஏனெனில் இந்த நேத்தியான கால
த்தில் புஷ்பங்களில் போய் ஓடித் திரிந்து அவைக
ளின் நுட்பமான சாரத்தைச் சேர்க்க வெகுவாய்க்

கவனித்திருப்பதால் தங்கள் சந்ததி பலுக மறந்தாற்போலிருக்கும். ஆனால் வசந்தகாலங் கொஞ்சங் கடுமையாய் மந்தாரமாய் இருந்தால் தேனைப்பார்க்கிலும் அதிகமாய்த் தங்கள் சந்ததியை உற்பத்திசெய்யும். ஏனெனில் புஷ்பங்களில் தேனைத் தேடுவதற்குத் தங்கள் கூட்டினின்று புறப்படக் கூடாமையாய் இருப்பதால் தங்கள் சந்ததி விருத்தியாக அதிகமாய்க் கவனித்திருக்கும்.

இப்படித்தான் பிரிய சகோதரமே, நமது ஆத்துமம் ஞான சந்தோஷ ஆறுதல்களுக்கு ஏற்பான நல்ல வசந்தகாலத்தில் உல்லாசமாய் இருக்கையில் இந்த் ஞான ஆறுதல்களை நுகர்ந்து உண்ண எவ்வளவு கவனித்திருக்குமென்றால் இந்த ஞான இன்ப ஏராளத்தால் செருக்கெடுத்தாற்போல் பத்திக்கடுத்த நற்கிருத்தியங்களைச் சொற்பமாய்ச் செய்யும்படி பலமுறை நேரிடுகிறது. இதற்கு விரோதமாய் ஆத்துமத்தில் ஞான ஆறுதலின்றி வறட்சியாய் இருக்கையில் மெய்யான பத்தியால் வரும் ஞான இன்பங்கள் எவ்வளவுக்குத் தன்னிடத்தில் குறைந்திருக்கக் காண்கிறதோ அவ்வளவுக்கும் அந்த ஆத்துமம் நிலையான பத்திக் கிருத்தியங்களை அதிகமாய்ச் செய்வதுமல்லாமல் பொறுமை தாழ்ச்சி தன்னைத்தானே வெறுக்கும் பரித்தியாகம் மெய்யான கீழ்ப்படிதல் உலக வெறுப்பு முதலிய உள்ளாந்தர மெய்யான புண்ணியங்களை மேன்மேலும் விளைவிக்க வெகு சாக்கிரதை கவனமாயிருக்கும்.

அநேகர் விசேஷமாய்ப் பெண்பிள்ளைகளுக்குள் ஞான சந்தோஷவின்பத்தை அநுபவியாமல் சுவாமியைச் சேவிப்பது அவருக்கு அவ்வளவு பிரியமாயிராதென்று அபத்தமாய் நினைப்பார்கள். இதற்கு விரோதமாய் நமது கிருத்தியங்களெல்லாம் உரோசா புஷ்பங்களுக்கு ஒத்தவை என்கலாம். இவைகள்

மலரும்போது வாடாமல் குளிர்ச்சியாயிருப்பதால் அதிக சொகுசாயிருக்கும். ஆனால் இவை காய்ந்து போகும்போது அதிக பலமுள்ளவையாயிருப்பது மன்றி அதிக வாசனையும் வீசும். ஏனெனில் நாம் நமது சொந்த ஆறுதலைமாத்திரந் தேடுகிறதால் ஞான இன்பத்தோடு நாம் செய்யும் நற்கிருத்தியங்கள் நமக்கு அதிக பிரியமாயிருந்தாலும் மனவறட்சியோடும், பிரியமில்லாமலும் இவைகளை நாம் செய்யும்போது சுவாமிக்கு முன்பாக அதிக சுகந்தமும் பேறுமுள்ளவையாயிருக்கும். மெய்யாகவே பிரிய சகோதரமே, நமது ஆத்துமம் ஆறுதலின்றிருக்கையில் சர்வேசுரனைச் சேவிப்பதற்கு நமது மனசு பலுவந்தஞ் செய்தாற்போல் நம்மைத் தூண்டுகிறது. ஆதலால் ஆறுதல் சந்தோஷகாலத்தில் இருப்பதைப் பார்க்கிலும் இத்தருணத்தில் நமது ஆத்துமம் அதிக சத்துவ நிலைமையுள்ளதாயிருக்கிறதென்று சொல்லத்தகும்.

சமாதான அமரிக்கைக்காலங்களில் அரண்மனையில் செல்வமாய் வளர்ந்துகொண்டு ஓர் அரசனைச் சேவிப்பது பெரிய காரியமல்ல. ஆனால் சண்டைக்காலத்தில் கலாபனை குழப்பத்தில் பலவிதச் சங்கட தொந்தரவுகளில் அவனைச் சேவிப்பதே மெய்யான தைரியப் பிரமாணிக்கத்தின் அடையாளமாம். சுவாமிக்கு மிகவும் பிரியமான செபத்தியானம் என்னவென்றால் ஒருவிதக் கஷ்டாப வருத்தத்தோடு நாம் செய்யுந் தியானந்தானென்று முத்திப்பேறுபெற்ற பொலிஞ்ஞி ஆஞ்ஜேலம்மாள் சொல்லுகின்றாள். இதில் அறிய வேண்டியது: மனவுச்சாயமாய்ப் பிரியத்தோடு செய்யுஞ்செபத்தியானமல்ல, ஆனால் நமக்கு வரும் அருவருப்புச் சலிப்புகளைச் சகித்துக்கொண்டு சுவாமிக்குப் பிரியப்படவேண்டுமென்பதைப்பற்றியே நம்மை நாமே வலுவந்தஞ் செய்து நமது சார்புக்கு

விரோதமாய் நாம் செய்யுந் தியானந்தான் சுவாமிக்கு அதிக பிரியமாயிருக்கிறது. இதுவிஷயத்தில் சொல்லியவாறே மற்றமற்ற நற்கிருத்தியங்களைக்குறித்துஞ் சொல்லலாம். ஏனெனில் நாம் செய்யும் நற்கிருத்தியங்களில் எவ்வளவுக்கு அதிகமாய்ச் சரீர விஷயத்திலுஞ்சரி ஆத்தும விஷயத்திலுஞ்சரி இடையூறிடைஞ்சல் அநுபவிப்போமோ அவ்வளவுக்குப் அவை கனமாக எண்ணப்பட்டுஞ் சுவாமிக்குப் பிரியமாயும் இருக்கின்றன. நாம் புண்ணிய நற்கிருத்தியங்களைச் செய்கையில் எவ்வளவுக்குக் கொஞ்சமாய் நமது சொந்த நன்மையை நாடிச் செய்வோமோ அவ்வளவுக்கும் அதிகக் காந்தியோடு அவைகளில் தேவசிநேகந் துலங்கும். தாயானவள் தன் பிள்ளைக்குச் சர்க்கரை முதலிய உருசிகரமான பண்டங்களைக் கொடுக்கும்போது அது வெகு பட்சமாய்த் தன் தாயைக் கட்டி முத்தமிடும். ஆனால் கசப்பான பண்டங்களைக் கொடுத்தபின் அந்தப் பிள்ளை அவளைக் கட்டி முத்தமிட்டால் தன் தாயின்பேரில் இந்தப் பிள்ளைக்கு வெகு பட்சம் உண்டென்று அடையாளமாம்.

15-ம் அதிகாரம்.

முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டவைகளை விசேஷ ஓர் சரித்திரத்தால் விளக்குதல்.

முந்தின அதிகாரத்தில் சொல்லிய ஆலோசனை புத்திமதிகளையெல்லாம் வெகு தெளிவாய்க் காண்பிக்க அர்ச். பெர்னார்து சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் நல்லதோர் விஷயமாவது: இதனை வெகு திறமையுள்ள கல்விமான் ஒருவன் எழுதிவைத்தான். புதிதாய்ச் சர்வேசுரனைச் சேவிக்க ஆரம்பிப்பவர்களுக்குஞ் சர்வேசுரன் தமது அநுக்கிரக வரப்பிரசாதங்களை அவ்வளவு பொழியாமல் மனவறட்சியில் விட்டுவிடும்போது ஞான சீவியத்தில் நேரிடும் பலவித மாற்றங்களில் இன்னம் பழகாதவர்களுக்கும் வழக்கமாய்ச் சம்பவிக்கிறதென்னவெனில், பத்தியினால் வரக்கூடுமான ஞானவின்பம் பிரியங் குறைந்துபோய்ச் சர்வேசுரனுடைய ஞானப் பாதையில் சுறுசுறுப்பாய் நடக்க இவர்களை ஏவிவந்த இவ்வளவு பிரியமான ஞான ஒளியும் மங்கிப் போகையில் இவர்கள் சோர்வடைந்து திராணியற்றவர்களாய் மிஞ்சின சக்தி மனக் கோழைத்தனத்துக்குள்ளாவார்கள். இதில் பழகிய மகாத்துமாக்கள் இதற்குக் காரணம் என்னவென்று கற்பிக்கின்றார்கள்.

அறிவுள்ள சுபாவமானது பரலோக இன்பத்தையென்கிலும் இலௌகீக இன்பத்தையென்கிலும் அற்பமும் அநுபவியாமல் வெறும் பசிகொண்டதுபோல் நெடுங்காலம் இருக்கக்கூடாதாம். பரலோக இன்பத்தின் நாட்டத்தால் தங்களுக்கு மேலாகத்தானே

உயர்த்தப்பட்டிருக்குந் தேவதாசர்கள் இப்பிரபஞ்ச பொருட்களைத் தேடாமல் வெகு சுளுவாய் விட்டு விடுவார்கள். ஆனால் தெய்வச்சித்தத்தால் இந்த ஞான சந்தோஷம் இவர்களைவிட்டுப் போகும்போது சரீர இன்ப ஆறுதல்களும் இவர்களுக்குக் கிடையாததால் இவர்களுக்கு எவ்வளவு கலக்க வருத்தம் உண்டாகிறதெனில் இவர்கள் மோட்சத்திலென்கிலுஞ்சரி பூமியிலென்கிலுஞ்சரி இராததுபோல் இவர்களுக்குத் தோன்றுவதுமன்றி மெய்யான ஞான சூரியன் உதித்து இவர்கள்பேரில் தன் கதிரை வீசும் வரையில் பொறுமையாகக் காத்துக்கொண்டிருக்க இவர்களுக்கு வழக்கமிராததால் என்னமோ ஜோதியில்லா இருளுக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறதாக எண்ணிக்கொள்ளுவார்கள். இத்தன்மையாய்ப் பால் மறக்கடிக்கச்செய்யும் சிறுபிள்ளைகளுக்கொத்தவர்களாய் இந்தப் பிள்ளைகளைப்போலவே எப்போது பால் அகப்படுமோவென்று ஏங்கித் தேங்கியிருப்பதுமல்லாமல் ஒருவருக்குஞ் சகிக்கக்கூடாதவர்களாய்த் தங்களுக்குத்தானே விசேஷமாய்ச் சகியாதவர்களாகிறார்கள்.

அர்ச். பெர்நார்தென்பவர் ஒருவிசை யாத்திரை செய்கையில் இவர் சந்நியாசிகளிலொருவர் ஜோபுருவா தெ பேரோன் என்பவருக்கு இப்படித்தான் சம்பவித்ததாம். புதிதாய்த் தேவ ஊழியத்தில் உட்பட்ட இந்த உத்தம சந்நியாசியார் திடுக்கென ஞான ஆறுதல்களை இழந்து மனக்கலக்கங்கொண்டு மகா அந்தரங்க இருளில் அகப்பட்டிருக்கையில் உலகிலுள்ள தன் பழைய சிநேகிதர் உறவின்முறையார்களையும் இவர் விட்டுவிட்ட ஆஸ்திபாஸ்திகளையும் நினைக்கத் துவக்கினார். இந்த ஞாபகத்தால் இவருக்கு எவ்வளவு பலமான தந்திரசோதனை உண்டானதெனில், மடத்துச் சந்நியாசிகளிலொருவர் இவர் முகத்தில்

இதைக் கண்டுபிடித்து ஜோபுருவா என்பவரைப் பார்த்து வழக்கத்துக்கு விரோதமாய் இப்படி கஸ்தி மிக்கவாயிருப்பதென்ன என, ஜோபுருவா என்பவர் மறுமொழியாக என் பிரிய சகோதரரே ஆ! எல்லாம் முடிந்துபோயிற்று. என் சீவியநாளில் ஒருநாளும் இனிச் சந்தோஷமாயிரேனென்றார். இந்த உத்தம சந்நியாசியார் இவ்வார்த்தைகளைக் கேட்டு மனதிளகி அர்ச். பெர்நார்தென்பவரிடத்தில் வந்து இது சங்கதிகளைச் சொல்லப் பெர்நார்தென்பவர் தமது சந்நியாசியார் இருக்கும் ஆபத்தைக் கண்டு சீக்கிரங் கோவிலுக்குப்போய் இவருக்காகச் சுவாமியைப் பார்த்து வேண்டிக்கொள்ள ஆரம்பித்தார். அந்நேரத்தில் ஜோபுருவா என்பவர் கஸ்தி மிகுதியால் சோர்ந்து ஓர் கல்லின்மீது அசந்து படுத்துக்கொண்டிருந்தார். கொஞ்சத்துக்குள் சுவாமி இவர் மன்றாட்டைக் கேட்டபடியால் ஜோபுருவா என்பவர் குளிர்ந்த முகத்தோடு எழுந்தார். சற்றுக்குமுன் இவர் வெகு கஸ்தியாயிருக்கப் பார்த்த சந்நியாசியார் இவ்வளவு சீக்கிரத்தில் இவருக்கு வந்த மாற்றத்தைக் கண்டுபிடியாமல் ஜோபுருவா என்பவர் கொஞ்சத்துக்குமுன் தனக்குச் சொல்லிய மறுமொழியைக் குறித்துக் கொஞ்சம் முறையிட்டாற்போல் இவரிடத்தில் பேசினார். ஜோபுருவா என்பவர் இவருக்கு மாறுத்தரமாகச் சற்றுக்குமுன் என் சீவியநாளில் ஒருநாளுஞ் சந்தோஷமாயிரேன் என்றேன். இப்போது ஒரு நாளுங் கஸ்தியாயிருக்கமாட்டேனென்று உமக்கு நிச்சயமாய்ச் சொல்லுகிறேனென்றார். இத்தன்மையாய் இந்தப் புண்ணியவானுடைய தந்திரம் போய்விட்டது. ஆனால் பிரிய சகோதரமே, இதுவிஷயத்தில் நீ அறியவேண்டியதாவது:

I-வது.— பாலுண்ண வெறுப்புள்ள பிள்ளைகளுக்கு உருசியான பண்டங்களைக் காட்டித் தாய்மார்கள்

அதுகளுக்குப் பால் கொடுப்பதுபோலச் சர்வேசுரன் தம்மை மெய்யாகவே சேவிக்க ஆரம்பிப்பவர்கள் இலௌகீக இன்பங்களை விட்டுத் தேவசிநேகத்தில் வர்த்திக்க இவர்களைத் தூண்டுவதற்காகப் பரலோக இன்பத்தின் சொற்பப் பங்கை அவர்களுக்குச் சுவாமி கொடுப்பது வழக்கம்.

2-வது.—இப்படியாயினும் இந்தப் பரம தகப்பன் நமது புத்திக்கெட்டாத ஞானத்தால் பலமுறை தேவ ஆறுதலாகிய அமுதை நமக்குக் கொடாமல் நிறுத்திவிடுகிறார். இத்தன்மையாய்ப் பால் மறக்கடிக்கச் செய்யும் பிள்ளைகளுக்கு ஒப்பாய்த் தந்திரசோதனைகளிலும் ஞானக்காரியங்களில் நமக்குண்டாகும் வெறுப்பிலுந் தயிரியமாயிருந்து திடனான மெய்யான பத்தி வருவிக்கத்தக்க பலமான போசனத்தை நாம் அருந்தக் கற்றுக்கொள்ளும்படி செய்கின்றார்.

3-வது.—பலமுறை நமக்கு நேரிடும் மனவறட்சி ஆறுதலின்மையில் பலத்த தந்திரங்கள் நேரிடும். அப்போது திடனாய் இந்தத் தந்திரங்களுக்கு எதிர்த்துப் போராடவேண்டும். ஏனெனில் இவைகள் சர்வேசுரனால் நமக்கு வருகிறதில்லை. ஆனால் நமது ஞான நன்மைக்காக இந்தத் தந்திரங்கள் நமக்கு வரத் தேவ சித்தமானதால் இப்படிப்பட்ட மனவறட்சிகளைப் பொறுமையாய்ச் சகிக்கவேண்டும்.

4-வது.—இவ்வித மனவருத்தங்களில் நல் தயிரியத்தைப் பரிச்சேதம் விடலாகாததுமன்றி மேற்சொல்லிய சந்நியாசியாரைப்போல் ஒருகாலும் நான் சந்தோஷமாயிரேன் என்று சொல்லவுமாகாது. ஏனெனில் இருளாயிருக்கையில் வெளிச்சத்துக்குக் காத்துக்கொண்டு இருக்கவேண்டும். இவ்வாறே நமக்கு வரக்கூடுமான ஞான சந்தோஷ இன்ப ஆறுதல் காலத்தில் நான் ஒரு காலுங் கஸ்தியாயிரேனென்று சொல்லவொண்ணாது. ஏனெனில் ஞானியானவர்

சொல்லுமாப்போல நமது சுக நாட்களில் நமக்கு வரக்கூடுமான நிர்ப்பாக்கியத்தைக்குறித்துச் சிந்திக்கவேண்டும். இக்கட்டுகளில் நம்பிக்கையை விடாமல் சுககாலத்தில் அச்சத்தோடிருந்து இவ்விரு அந்தஸ்திலும் எப்பொழுதுந் தன்னைத்தானே தாழ்த்திப் பரித்தியாகஞ் செய்யவேண்டும்.

5-வது.—நமக்குத் தகுந்த ஆலோசனை கொடுக்கக் கூடுமான விவேக திறமையுள்ள சிநேகிதனிடத்தில் நமக்குள்ள தின்மையைத் திறந்து காட்டுவதே இதற்குப் பரம அவுழ்தம்.

கடைசியாய் எல்லோருக்கும் வெகு அவசரமாகிய இந்தப் படிப்பினையை முடிப்பதற்கு முந்தி இரண்டொரு காரியம் அறியவேண்டியது. நமக்கு மனவருத்த சஞ்சலங்கள் நேரிடும்போது நமது உத்தம தந்தையாகிய சர்வேசுரனுக்கு நமதுமீதுள்ள கருத்து வேறே, நமது சத்துருவாகிய பசாசின் கருத்து வேறே. ஏனெனில் இந்தத் தந்திர சோதனைகள் வழியாய் நாம் மிகுந்த பரிசுத்தவான்களாகித் தேவ ஊழியத்தில் நமது சொந்த நன்மையை இலவலேசமுந் தேடாமல் நம்மை நாமே பரித்தியாகம் பண்ணவேண்டுமென்கிறதே சுவாமி கருத்து. இதற்கு விரோதமாய்ப் பசாசுக்குள்ள கருத்தென்னவெனில், இவ்வித வருத்தங்களால் தைரியமிழந்து லௌகீக இன்பங்களை மறுபடியும் நாம் விரும்பித் தேடும்படி செய்யப் பிரயாசப்படுவதுமன்றி இதனால் மெய்யான பக்தியைக்குறித்து எல்லோரும் விகற்பமாய்ப் பிரகாசம் பண்ணும்படியாகவும் பிறருக்கும் இன்னம் நமக்குந்தானே நம்மைச் சகிக்கவொட்டாதவர்களாக்கவுந் தேடும்.

ஆனால் நான் உனக்குச் சொல்லிக்காட்டிய படிப்பினைகளை அநுசரித்துவந்தால் இவ்வித மனச்சஞ்சல கஸ்திகள் வழியாய்ச் சாங்கோபாங்கத்தில் பெ

குவாய் வளருவதற்கு இடமாயிருக்கும். இதனைக்குறித்துச் சொல்வதை முடிப்பதற்குமுன் இன்னும் ஒரு வார்த்தை சொல்லவேண்டும். சிலவிசை ஞானக் காரியங்களில் வெறுப்பு மனவறட்சி முதலிய வருத்தங்கள் நமது சரீர அசவுக்கியத்தால் உண்டாகிறதுண்டு. இத்தன்மையாகவே இராக்கண் விழிப்பதாலும் மிஞ்சின ஒருபொழுது உபவாசம் பிடிப்பதாலுஞ் சலியாமல் வேலை செய்வதாலும் நமது சரீரங்களைத்து அயர்ந்துபோவதுமன்றித் தலைநோய் முதலிய பல அசவுக்கியமும் வரும். இவைகள் சரீரத்துக்குச் சம்பந்தப்பட்டவைகளாயினுஞ் சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் உள்ள சம்பந்த ஐக்கியத்தைப்பற்றிப் புத்திக்குச் சங்கடம் வருவிக்கும். ஆனால் இந்த அந்தஸ்திலும் நமது புத்தி மனச்சத்துவத்தைக்கொண்டு பல புண்ணியக் கிருத்தியங்களை எப்பொழுதும் வெகு சாக்கிரதைக் கவனத்துடன் செய்யவேண்டும். ஏனெனில், நமது ஆத்துமங் களைத்து அயர்ந்து நித்திரை போவதுபோலத் தோன்றியபோதிலும் நமது புத்தியைக்கொண்டு நாம் செய்யும் நற்கிருத்தியங்கள் சுவாமிக்கு வெகு பிரியமாகவே இருக்கும். இத்தருணத்தில் விசேஷமாய், உந்நதகவியின் மணவாளியைப்போல் நான் நித்திரை செய்கிறேன்; என்னிருதயமோ விழித்திருக்கிறதென்று சொல்லலாம்.

கடைசியாய் முன் சொல்லியதுபோல் இவ்விதமாய்ப் பிரயாசப்படுவதில் நமக்குப் பிரியங் குறைந்தாலும் அதிக பேறுபலனாகும். இச்சமயத்தில் நாம் பிரயோகித்துக்கொள்ளவேண்டிய அவுழ்தம் என்னவெனில் நமது தவக்கிருத்தியங்களைக் கொஞ்சம் மட்டுக்கட்டிக் குற்றமற்ற இளைப்பாற்றிக்கு இடங்கொடுத்து நமது சரீரத்தைப் பலப்படுத்துவதேயாம். அர்ச். பிராஞ்சீஸ்கென்பவர் தமது சந்நியாசிகளுக்கு இதுவிஷ

யத்தில் கற்பிப்பதாவது: இவர்கள் தங்கள் அலுவல் வேலைகளை எவ்வித மட்டுத்திட்டத்தோடு செய்யவேண்டுமென்றால் இதனால் இவர்கள் புத்திச் சத்துவ சுறுசுறுப்புப் பலவீனப்படாமல் இருக்கவேண்டுமென்கிறார். இந்த மகாத்துமாவுக்கு ஒரு தருணத்தில் சம்பவித்ததாவது: இவர் ஒருவிசை வெகு மனச்சஞ்சல வக்கத்தால் அலைக்கழிக்கப்பட்டிருந்ததால் இது வெளியில் தோன்றாமலிருக்கச் செய்யக்கூடுமாயிருந்ததில்லையாம். இவர் தமது சந்நியாசிகளோடு சம்பாஷிக்கவேண்டுமென்றால் அப்படி சம்பாஷிக்கக் கூடாமையாயிருக்கும், இவர்களை விட்டுச் சற்று இடைந்துபோனால் இன்னும் இவருக்கு அதிக வருத்தமாகும். ஒருபொழுது உபவாசங்களுந் தவவொறுத்தல்களும் இவனைப் பலவீனப்படுத்தித் தலையெடுக்கவொட்டாமல் செய்யும். செபத்தியானமோ இவருக்கு அற்ப ஆறுதலையும் வருவியாது, இவ்வந்தஸ்தில் இவர் இரண்டு வருஷமிருந்தார். இவ்விரண்டு வருஷமும் இவருக்கு எப்படிப்பட்ட மனவறட்சி ஆறுதலின்மை உண்டாயிருந்ததென்றால் சர்வேசுரன் இவனை முழுதுங் கைவிட்டதுபோல் இவருக்குத் தோன்றும். ஆனால் கடைசியாய் இந்தக் கொடிய புசலைத் தாழ்ச்சியோடு சகித்தபின் நமது இரக்ஷகர் ஒரு நிமிஷத்தில் பரிபூரண அமரிக்கை சமாதானத்தை இவருக்குக் கொடுத்தார், சர்வேசுரனது மகா பெரிய தாசர்கள் இப்படியாய் அலைக்கழிக்கப்பட்டுத் தொந்தரவுபட்டால் மற்றவர்கள் தங்களுக்கு ஏதாகிலும் இப்படிப்பட்ட சோதனைகள் வரும்போது திடுக்கிட்டு அதிசயப்படவொண்ணாதென்று அறியும்பொருட்டே இதை இங்கே சொல்லிக்காட்டினேன்.

ஐந்தாம் பாகம்.

ஆத்துமத்தைப் புதுப்பித்து மெய்யான பத்தியில் அதனை நிலைநிறுத்துவதற்கான புத்திமதிகளும் ஞானக் கிருத்தியங்களும்.

1-ம் அதிகாரம்.

பின்னால் வரும் பத்திக் கிருத்தியங்களைக்கொண்டு நமது நல்ல பிரதிக்கினைகளை வருஷாந்தரம் புதுப்பிக்க வேண்டுமென்பதின்பேரில்.

இந்த ஞானக் கிருத்தியங்களின் முக்கிய விஷயம் இவைகளின் அவசியத்தை நன்றாய்க் கண்டுபிடிப்பதில் அடங்கியிருக்கிறது. மனுஷ பலவீனத்தால் நமது நல்ல பிரதிக்கினைகளையும் நல்ல ஆசைகளையும் வெகு சுளுவாய் விட்டுவிடுகிறோம். பக்ஷிகள் நன்றாய்ப் பறக்கவேண்டுமானால் சிறகுகளை அடித்துக் கிளம்பவேண்டும். சிறகுகளை மூடிக்கொண்டால் உடனே பூமியில் விழுந்துவிடும். இத்தன்மையாகவே நமது சரீர பலவீனத்தையுங் கெட்ட நாட்டத்தையும் முன்னிட்டு நமதாத்துமம் அசமந்தமாய்ப் போவதுமன்றி எப்பொழுதும் இலௌகீக காரியங்களையே நாடிப்போகிறோம். ஆகலால் பிரிய சகோதர

மே, சுவாமியைச் சேவிக்க நீ செய்த நல்ல பிரதிக்கினைகளை மறந்துபோகாதபடிக்கும் உன் பழைய அந்தஸ்தில் மறுபடியும் விழாதபடிக்கும் சிலவிசை முன்னிருந்த அந்தஸ்தைப் பார்க்கிலும் இன்னம் அதிகக் கேடான அந்தஸ்துக்கு உள்ளாகாதபடிக்கும் அடிக்கடி அந்தப் பிரதிக்கினைகளைப் புதுப்பிப்பது அவசியம். ஏனெனில் இதில் ஒருகாரியம் அறியவேண்டியது. ஞானக் காரியங்களில நமக்கு நேரிடும் அசட்டை குற்றங் குறைகளால் வருவதென்னவெனில் நாம் மெய்யான பத்தியை அறிந்து நடப்பதற்கு முந்தி நாமிருந்த அந்தஸ்தைப் பார்க்கிலும் அதிகக் கெடுதலான அந்தஸ்துக்கு உள்ளாகும்படி நேரிடுகிறது.

ஒரு கடியாரம் எவ்வளவுதான் நேர்த்தியானதாய் இருந்தபோதிலும் அதற்கு அடிக்கடி சாவி கொடுக்கவேண்டும். மேலும் வருஷத்துக்கு ஒருவிசையாகிலும் அதின் சக்கர முதலிய சூத்திரங்களைக் கழற்றி அதில் இருக்கக்கூடுமான துருவைத் துடைத்து வளைந்துபோன எத்தனங்களை நிமிர்த்தி உதவாததைத் தள்ளி வேறே எத்தனங்களைப் போடவேண்டும். இதே பிரகாரந் தன் ஆத்துமத்தின்பேரில் மெய்யான கவனமுள்ளவன் மேற்சொல்லிய பத்திக் கிருத்தியங்களால் தன்னாத்துமத்தை அந்தி சந்தி விசாரிக்கவேண்டும். இன்னந் தன் ஆத்தும அந்தஸ்து என்னவென்று அடிக்கடி ஆராய்ந்து பார்த்து அதனைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்தவேண்டும். கடைசியாய் வருஷத்துக்கு ஒருவிசையாகிலும் அதனை நன்றாய்ப் பகுத்தாராய்ந்து அதில் இருக்கக்கூடுமான சகல ஆசாபாசங்களையும் ஆசைப் பற்றுதல்யாவையுந் தனித்தனியாய் ஆராய்ந்து பார்த்து அதில் காணக்கூடுமான குற்றங் குறைகளைப் பரிகாரஞ் செய்யத் தேடவேண்டும்.

கடியாரக்காரன் கடியாரம் கிரமமாய் நடக்கும்படியாகவும் அதில் துருப் பிடிக்காதபடிக்குஞ் சக்கரங்களுக்கும் இன்னம் மற்ற எத்தனங்களுக்கும் இலேசான எண்ணெயைப் போடுவதுபோல் மெய்யான பத்தியுள்ளவனுந் தன் இருதயத்தை நன்றாய்ப் புதுப்பிக்க அதை வேண்டியபடி ஆராய்ந்து பார்த்த பின் பச்சாத்தாபந் திவ்வியநற்கருணை என்னுந் தேவதிரவிய அநுமானங்களால் அதனைப் பலப்படுத்துவான். பிரிய சகோதரமே, காலத்தோடு நீ இழந்து போன சத்துவத்தை இந்தப் பத்திக் கிருத்தியமானது புதுப்பித்து உன் இருதயத்தில் அவிந்தாற் போலிருக்கிற தேவ சிநேகதீபத்தை மறுபடியும் மூட்டி உன் நல்ல பிரதிக்கினைகளையெல்லாம் பலப்படுத்தி உன்னாத்துமத்தின் புண்ணியங்கள் யாவும் விருத்தியாகும்படிச் செய்யும்.

நமது ஆண்டவர் சேசுகிறீஸ்துநாதர் ஞானஸ்நானம் பெற்ற வருஷாந்தரநாளில் பூர்வ கிறீஸ்துவர்கள் வருஷந்தோறுந் தங்கள் ஞானஸ்நான வார்த்தைப்பாட்டைப் பிரமாணிக்கமாய்ப் புதுப்பித்து வருவார்களாம். அந்நாளில் கிறீஸ்துவர்கள் ஆடம்பரமாய்த் தங்கள் விசுவாசப் பிரமாணிக்கத்தையும் ஞானஸ்நான வார்த்தைப்பாடுகளையும் புதுப்பித்து வருவார்களென நசியான்சு பட்டணத்து அர்ச். கிறெகோரியார் சொல்லுகிறார். பிரிய சகோதரமே, நாமும் இத்தன்மையாகவே செய்வோம், ஆனால் நல்ல மனதோடும் வேண்டிய கவனத்தோடுஞ் செய்வோம்.

ஆதலால் உன் ஆத்தும குருவானவர் ஆலோசனைப்படி தகுந்த காலத்தைத் தெரிந்துகொண்டு மெய்யான ஞானவாசத்தில் கொஞ்சம் வழக்கத்துக்கதிகமாய் எட்டிப்போய் இரண்டாம் பாகத்தில் சொல்லிக் காட்டிய தியான மாதிரிகைப்படி பின்னால் சொல்லிப்

படும் விஷயங்களின்பேரில் இரண்டு அல்லது மூன்று தியானங்களைச் செய்வாய்.

2-ம் அதிகாரம்.

முதற்பாகத்திற் காட்டிய பிரதிக்கினைக் கோத்தாற்போலச் சுவாமி நம்மைத் தமது ஊழியத்துக்கழைத்ததால் அவர் நமக்குச் செய்த வரப்பிரசாத நன்மையின்பேரில் ஆலோசனை.

முதலாவது.— நீ முன்னால் செய்த பிரசித்தப் பிரதிக்கினைகளின்பேரில் யோசித்துப்பார். எந்தச் சாவான பாவத்தையும் என்றென்றைக்கும் விட்டு அருவருத்துத் தள்ளிவிட்டாய். 2-வது. உன் ஆத்துமத்தையும் இருதயத்தையுஞ் சரீரத்தையும் அதில் அடங்கிய சகலத்தையுஞ் சர்வேசுரனுடைய ஊழியத்துக்கும் அவர் திருச்சிநேகத்துக்கும் முழுதும் வசீகரம் பண்ணி ஒப்புக்கொடுத்துவிட்டாய். 3-வது. ஏதாகிலுந் தப்பிதத்தில் நீ விழும்படி நேரிட்டால் தேவ உதவியைக்கொண்டு அதைவிட்டு உடனே எழுந்திருப்பாயென்று தீர்மானம்பண்ணினாய். இந்தப் பிரதிக்கினைகளெல்லாம் வெகு நேத்தியானதாகவும் நியாயமானதாகவும் மாட்சிமை உதாரகுணமுள்ளதாகவும் இருக்கிறதல்லோ. ஆதலால் முன் நீ செய்த பிரசித்தப் பிரதிக்கினை எவ்வளவு புத்திக்கொத்ததாகவும் பரிசுத்தமானதாகவும் ஆசிக்கத்தக்கதாகவும் இருக்கிறதென்று உனக்குள் நன்றாய் நினைத்துப்பார்.

2—வது.— இந்தப் பிரசித்தப் பிரதிக்கினையை ஆருக்குச் செய்துகொடுத்தாய் என்று யோசித்துப்பார். சர்வேசுரனுக்கல்லவோ? மனுஷர்களுக்குக் கொடுத்த நியாயமான வார்த்தைப்பாட்டுக்குப் பரிச்சேதந் தப்பிப்போகக் கூடாதாயின் சுவாமிக்கு நாம் கொடுத்த வார்த்தைப்பாட்டுக்கு அவ்வளவு இலேசாய்த் தப்பிப்போகக்கூடுமோ. தாவீதென்பவர் சர்வேசுரனை நோக்கி என் ஆண்டவரோ சுவாமீ உமக்கல்லோ என்னிருதயம் வார்த்தைப்பாடு சொன்னது. உமக்கே என்னிருதயம் இந்த நல்ல பிரதிக்கினையைச் செய்தது, என்றும் அதை மறவேன் என்கிறார்.

3—வது.— ஆருக்கு முன்பாக இந்த வார்த்தைப்பாட்டைச் செய்தாயென்று யோசித்துப்பார். சகல மோக்ஷவாசிகளும் பார்த்துக்கொண்டிருக்க அல்லவோ செய்தாய். நீ சுவாமி பாதத்தில் சாஷ்டாங்க தண்டனிட்டு உன்னிருதயத்தை அவருக்கு வசீகாரஞ் செய்யும்போது அர்ச்சியசிஷ்ட தேவமாதாவுஞ் சூசையப்பரும் உன் காவலான சம்மனசானவரும் அர்ச். பிரகாசியாரும் மோக்ஷத்தில் வீற்று வாழும் ஸ்திரீ பூமான் சகல அர்ச்சியசிஷ்டவர்களும் உன் வார்த்தைகளையெல்லாம் வெகு கவனமாய்க் கேட்டுச் சொல்லிலடங்காச் சந்தோஷ ஆர்ப்பரிப்புடனே உன்னைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் உனக்காக மோட்ச எருசலேம் பட்டணத்தில் சந்தோஷக் கொண்டாட்டங் கொண்டாடினார்கள். இப்பொழுது மெய்யாகவே உன் பிரதிக்கினைகளை எல்லாம் புதுப்பிப்பாயேயாகில் அந்தக் கொண்டாட்டத்தை மறுபடியும் இன்று கொண்டாடுவார்கள்.

4—வது.— எந்த விதமாய் இப்பிரதிக்கினை செய்தாயென்று யோசித்துப்பார். அத்தருணத்தில் சுவாமி உன்பேரில் எவ்வளவோ கிருபைதாக்ஷணியத்தோடு

நடந்துகொண்டார். ஆ, பிரிய சகோதரமே, உண்மைப்படி சொல். இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் தமது சிநேக பிரவாகத்தையெல்லாம் உன்னிருதயத்தில் ஏராளமாய் வரவிட்டாரல்லோ. இவ்வுலகப் பெருங்காற்றுப் புசல்களுக்குத் தப்பித்து இரட்சணியத்தின் இந்தத் துறைமுகத்தில் உன்னைச் சேர்க்கத் தமது நேச பாசத்தால் உன்னை வருந்தி அழைத்ததில்லையோ. நீ தேவதிரவிய அநுமானங்களைப் பெறும்போதுந் தியானஞ் செய்யும்போதும் ஞான வாசகம் வாசிக்கும்போதுந் தமது கருணைப்பிரசாத அநுக்கிரகத்தின் ஞான மனோகரங்களை எவ்வளவோ நீ அநுபவிக்கச்செய்தார். ஆ பிரிய சகோதரமே, நீ நித்திரை செய்துகொண்டிருந்தாய், சர்வேசுரன் உன்பேரிலேயே கண்ணாயிருந்தார். உன் இருதயத்தின்மீது சமாதான சிந்தைகளைச் சிந்தித்துக்கொண்டு உன்மீது சிநேக தியானங்களைத் தியானித்துக்கொண்டிருந்தார்.

5-வது.—எந்தக் காலத்தில் சுவாமி இந்த மேலான பிரதிக்கினைகளெல்லாம் உனக்கு வருவித்தாரென்று யோசித்துப்பார். உன் இளம்பிராயத்திற்றானல்லோ. வெகுகாலத்துக்குப் பிந்தி மாத்திரம் அறியக்கூடுமானதை முன்னதாகவே அறிவது பெரும் அதிஷ்டமல்லோ. அர்ச். அகுஸ்தினுஸ் என்பவர் தன் புத்தியில் அடர்ந்திருந்த அந்தகாரவிருளை முப்பதாம் பிராயத்தில் மாத்திரந் தான் நிவர்த்தி செய்ததை முன்னிட்டுப் பெருமூச்செறிந்து சொல்வதைக் கேள்: ஓ பூர்வீக சோபன சௌந்தரியமே, இவ்வளவு நாள் சென்று உன்னை அறிந்ததெப்படி? ஐயோ நீ எப்போதும் என் கண்முன்னிருந்தாய், நானோ உன்னை நோக்கிப் பாராமல் இருந்தேன் என்கிறார். நீயும் இவரைப்போலவே ஓ பழைய இன்பமே; ஏன் உன்னைச் சற்று முன்னதாகவே சுவைபார்த்துணர்

ந்து அறியாமற்போனேன் என்னலாம். ஆ பிரிய சகோதரமே, அதுவல்லாயில் நீ அதற்கு அபாத்திரமாயிருந்தமையாலல்லோ. ஆதலால் உன் இளம்பிராயத்திலேயே தம்மைச் சேவிக்கச் சர்வேசுரன் உன்னை அழைத்த இந்த மேலான வரப்பிரசாதம் எப்பேர்க்கொத்ததென்று அறிந்து தாவீதென்பவரோடு என் கர்த்தாவே சுவாமீ என் இளம்பிராயத்தில் தானே உமது ஞானத்தால் என் புத்திக்கு ஒளிதந்து உமது வரப்பிரசாதத்தால் என் இருதயத்தைத் தூண்டினீர். இது உபகாரத்தை முன்னிட்டு உமது கருணைகடாக்ஷத்தை என்றென்றும் புகழ்ந்து கொண்டாடுவேன் என்பாய். இந்த மேலான வரத்தைச் சர்வேசுரன் உன் தள்ளாதகாலத்தில் உனக்குச் செய்திருந்தால் இதுவும் பிரிய சகோதரமே, எப்படிப்பட்ட மகத்தான வரப்பிரசாதமாயிருக்கும். இத்தனை வருஷம் வீணாய்ப் போக்கியபின் உன் மரணத்துக்குமுந்திச் சர்வேசுரன் உன்னைத் தயவாய் அழைத்தது கன நன்மையல்லோ. நீ சிக்கிக்கொண்டு அகப்பட்டிருந்த நிர்ப்பாக்கிய அந்தஸ்தில் உனக்குக் கைகொடாமல் அதிலேயே விட்டிருந்தால் நித்தியத்துக்கும் நிர்ப்பாக்கியனா யிருக்கவேண்டியிருக்குமல்லோ.

5-வது.— சுவாமி உன்னைத் தமது ஊழியத்தில் அழைத்ததால் உனக்குச் சித்தித்த அநுகூலங்களை யோசித்துப்பார். நீ சர்வேசுரனை மெய்யாகவே சேவிக்கத் துவக்குவதற்கு முந்தி நீ இருந்த நிலையையும் இப்போது நீ இருக்கும் நிலையையும் இணையிட்டுப் பார்த்தால் நான் நினைக்கிறதுபோல் உன்னிடத்தில் வெகு உத்தம மாற்றங்களைக் காண்பாய். தியானத்தால் சர்வேசுரனிடத்தில் சம்பாஷிக்கக் கற்றுக்கொண்டிருப்பதும், அவரை மெய்யாகவே நேசிக்க உனக்குப் பூரண மனது வந்திருப்பதும், உன்னை

அலைக்கழித்து அலட்டிவந்த பல ஆசாபாசங்களை அடக்கி அமர்த்தியிருப்பதும், அநேகம் பாவங்களையும் உன் மனதில் ஆணிபோல் தைத்திருந்த பல கலக்கசங்கடங்களையுந் தள்ளிவிட்டிருப்பதும், கடைசியாய் உன் மனவுச்சாயமாய் நீ நடந்திருந்தால் மெய்யாகவே நீ அடைந்திருக்கக்கூடாத நன்மையை அடிக்கடி நீ உட்கொண்ட சற்பிரசாதத்தால் அடைந்து எல்லா தேவ அநுக்கிரகங்களுக்கும் ஊற்றாயிருக்கும் பரம தேவனோடு நீ ஐக்கியப்பட்டிருப்பதும் மதிக்கப்படாத பாக்கியமென்று உனக்குத் தோன்றுகிறதில்லையோ. இந்த வரப்பிரசாதங்களெல்லாம் எவ்வளவோ மகத்தானவை. பிரிய சகோதரமே, இவைகளையெல்லாம் பரலோக அளவால் அளந்து நிறுத்துப் பார்க்கவேண்டும். சர்வேசுரனது கரந்தான் இவையெல்லாம் நிறைவேற்றினது. தாவீதென்பவர் சொல்வதைக் கேள். சர்வேசுரனுடைய கரமே இவ்வதிசயத்தைச் செய்து முடித்தது. அவருடைய வலது கை என்னைத் தூக்கி இரட்சித்தது. ஆ நான் மரிப்பேனில்லை. ஆனால் உயிர் வாழ்வேன். மேலும் என் இருதயத்தாலும் நாவாலும் நற்கிருத்தியங்களாலும் அவர் கருணையின் அற்புதங்களைப் புகழ்ந்து கொண்டாடுவேன் என்கிறார்.

நீயே பார்ப்பதுபோல் இந்த யோசனைகளெல்லாம் வெகு கேத்தியான பல நல்லாசை முயற்சிகளை வருவிக்கின்றன. இதன்பின் சர்வேசுரனிடத்தில் நீ அடைந்த வரப்பிரசாத நன்மைகளுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி அவைகளைத் தகுந்த விதமாய் உபயோகித்துக்கொள்ள அவரைப் பார்த்து மன்றாடி இந்த யோசனையை முடித்துப் பின்வரும் அதிகாரத்தில் சொல்லப்படும் இரண்டாம் விஷயத்தை யோசித்துப் பார்த்தபின் உறுதியான பிரதிக்கினை செய்யவேண்டுமென்கிற

கருத்துடன் தாழ்ச்சி நம்பிக்கையோடு உன் அலுவலைப் பார்க்கப் போவாய்.

3-ம் அதிகாரம்.

மெய்யான பத்திக்கடுத்த சீவியத்தில் நமது ஆத்துமம் எவ்வளவு விருத்தி அடைந்திருக்கிறதென்று ஆராய்தல்.

இவ்விரண்டாங் கிருத்தியமுஞ் சற்று நீண்டதாய் இருப்பதால் இதனை முழுதும் ஒருமிக்கச் செய்ய அவசியமில்லை. பல பங்காய்ப் பிரித்து யோசித்துப் பார்க்கலாம். முந்தமுந்தச், சர்வேசுரன்மட்டில் நீ என்னமாய் நடந்துகொள்ளுகிறாயென்றும், 2-வது பிறர்மட்டில் என்னமாய் நடந்துகொள்ளுகிறாயென்றும், 3-வது. உன்மட்டிலேயே என்னமாய் நடந்துகொள்ளுகிறாயென்றுங் கடைசியாய் உன் ஆசாபாசங்கள் இச்சை நாட்டங்கள் என்னமாய் இருக்கிறதென்றும் யோசித்துப் பார்க்கலாம். இந்த ஞானக் கிருத்தியத்தைச் செய்வதற்கு முந்தி நீ சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் இருப்பதாக யோசிக்கையில் ஓயாமல் முழங்காலிலிருப்பது அவசியமல்ல. இக்கிருத்திய ஆரம்பத்திலும் முடிவிலும் இருந்தாற் போதும். ஏனெனில் அச்சமயத்தில்தான் சர்வேசுரனை நோக்கிச் சிலநேக பத்தி முயற்சிகளைச் செய்யவேண்டியிருக்கிறது, நீ உலாத்திக்கொண்டென்கிலும் உட்கார்ந்துகொண்டென்கிலும் உனக்கு எப்படி நலமாய்த் தோன்றுமோ அப்படி மேற்சொல்லிய விஷ

யங்களைக் குறித்து யோசித்து ஆராயலாம். ஆனால் இத்தனைச் சுளுவாய்ச் செய்வதற்கு முன்னதாய் இதனை நன்றாய் வாசித்திருக்கவேண்டும்.

மேற்சொல்லியபடி ஒவ்வொன்றாய்ப் பிரித்து ஒவ்வொரு விஷயத்தைக் குறித்து இரண்டு மூன்று நாளைக்குள் யோசித்து ஆராய்ந்து பார்க்கவேண்டும். இதற்காக உனக்குக் கூடுமான சமயம்பார்த்து ஒரு நேரத்தைக் குறித்துக்கொள். ஏனெனில் இந்த ஆலோசனைகளை விடாமல் தொடர்ச்சியாய்ச் செய்யாவிட்டால் இதனால் அவ்வளவு பிரயோசனமிராமற் போவதுமன்றி உன் பத்தியில் அவ்வளவு ஆழமாய்ப் பதியாது. இப்படி ஒவ்வொரு விஷயத்தைக் குறித்தும் ஆராய்ந்து பார்த்தபின் எதில் நீ தப்பிப் போனாயென்றும் இந்தத் தப்பிதங்களுக்கெல்லாங் காரணமென்னவென்றும் அறிந்து இவைகளைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லி இனி இப்படிப்பட்ட தப்பிதம் நேரிடாதபடிக்கு நீ செய்யவேண்டியது இன்னதென்று உன் ஆத்தும குருவானவரிடத்தில் ஆலோசனை கேட்டு நல்ல பிரதிக்கினைகளைச் செய்து உன் புத்தி மனதை ஸ்திரப்படுத்தப் பார். இந்த ஞானக் கிருத்தியத்தையும் இன்னம் வேறே ஞானக் கிருத்தியங்களையுஞ் செய்வதற்காகக் குறிக்கப்பட்ட நாட்களில் உலகத்தை முழுதும் விட்டு எட்டி நிற்பது அவசியமில்லாவிட்டாலும் வழக்கத்தைப் பார்க்கிலுஞ் சிம்பாஷணையை மட்டுக்கட்டிச் சாயங்கட்சையில் விசேஷமாய் அடக்கமாயிருந்து மறுநாள் வேண்டியபடி தியானஞ் செய்வதற்கு உன் சரீரத்துக்கும் புத்திக்கும் அவசரமான இளைப்பாற்றி வருவதற்குக் கொஞ்சம் முந்தியே படுத்துக்கொள்ளப் பார். பகலிற் சுவாமியை நோக்கியுந் தேவமாதா சம்மனசுகள் மோட்சவாசிகளைப் பார்த்தும் அடுத்தடுத்துப் பல மனவல்லயச் செபங்களைச் செபிக்கவே

ண்டும். ஆனால் இவைகளை எல்லாஞ் சாங்கோபாங் கத்தில் வர்த்திக்கவேண்டுமென்கிற ஆசையோடுந் தேவசிநேகத்தோடுஞ் செய்யவேண்டும்.

ஆதலால் இந்தப் பரிசைஷயை உத்தமவிதமாய் ஆரம்பிப்பதற்கு முந்த முந்தச் சர்வேசுரனுடைய சந்நிதியில் உன்னை நிறுத்தி இஸ்பிரீத்துசாந்துவானவரைப் பார்த்து உன்னைத்தானே நீ நன்றாய் அறியும்படியாக அவர் தமது திவ்விய வரப்பிரசாதத்தின் கதிர்களை உன்மீது வரவிடும்படி மன்றாடி அர்ச். அகுஸ்திநுஸ் என்பவரோடு மிகுந்த தாழ்ச்சியுடன் என்னுண்டவரே நான் உம்மை அறியும்படியாகவும் என்னைத்தானே அறியும்படியாகவுஞ் செய்யுமென்றும், இன்னம் அர்ச். பிராஞ்சீஸ்கென்பவரைப் போல் என் தேவனே நீரார் நானொன்றுஞ் சொல்லலாம். இப்படி நீ புண்ணியத்தில் வர்த்திக்கிறாயோ, இல்லையோவென்று பார்ப்பது உன்மட்டிலேயே வீண் பிரியங்கொள்ளுவதற்காக அல்ல ஆனால் சர்வேசுரனிடத்திலேயே நீ சந்தோஷ அகமகிழ்ச்சி அடையும்படியாகவும் இன்னம் உன்னையே நீ மகிமைப் பாராட்டிக்கொள்ள அல்ல ஆனால் சர்வேசுரனுக்கு இதனால் மகிமை உண்டாகவும். இதற்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்வதற்காகவுமே என்று ஸ்திரமாய்ச் சொல்லக்கடவாய். இன்னஞ் சிலவிசை வரக்கூடுமானதுபோல் நீ அவ்வளவு அநுகூலப்படவில்லையென்றும் பின்னிடைந்து விட்டாயென்றுங் கண்டால் இதைப்பற்றிப் பரிச்சேதம் அவதைரியப்பட்டு எவ்விதக் கலக்கத்துக்கும் இடங்கொடுத்து அசமந்தமாய்ப் போக எவ்வளவேனும் உனக்கு மனதில்லையென்று ஸ்திரமாய்ச் சொல்லுவாய். ஆனால் இதற்கு விரோதமாய் இன்னம் அதிக சுறுசுறுப்புத் தைரியத்தோடு பிரயாசப்படுவாயென்றும் முன்னையைப் பார்க்கிலும் அதிக

மாய் உன்னைத் தாழ்த்திச் சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தின் ஒத்தாசையைக் கொண்டு உனக்கு நேரிட்ட குறை தின்மையைப் பரிகரிக்க உனக்கு நல்ல மனதுதான் என்றுஞ் சொல்லு.

இப்படிச் சொல்லி முடிந்தபின் சுவாமியின்மட்டிலும் புறத்தியார்மட்டிலும் உன்மட்டிலுந்தானே அதுவரையில் என்னமாய் நடந்துகொண்டாயென்று மெதுவாய் அமரிக்கையாய் யோசித்துப்பார்.

4-ம் அதிகாரம்.

சர்வேசுரன் விஷயத்தில் நமது ஆத்துமம் இருக்கும் நிலையின்பேரில் ஆராய்தல்.

சாவான பாவத்தின்மட்டில் நீ என்னமாய் இருக்கிறாய், உனக்கு என்னென்ன நேரிட்டபோதிலும் இருக்காலும் பாவத்தைச் செய்யக்கூடாதென்கிற கெட்டியான பிரதிக்கினை உன்னிடத்திலுண்டோ? முன் நீ செய்த பிரசித்த வார்த்தைப்பாடு துவக்கி இதுவரையில் இந்தப் பிரதிக்கினை நிலைமையாய் நின்றதோ? ஞான ஜீவியத்தின் அஸ்திவாரமெல்லாம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

2-வது.—தேவ கற்பனைகளின்மட்டில் நீ என்னமாயிருக்கிறாய், உனக்கு இவைகள் நேத்தியாகவும் பிரியமாகவுமிருக்கிறதோ. ஆ பிரிய சகோதரமே, பசித்தீவனத்தோடு நல்ல சவுக்கியத்தில் இருக்கிற மனித

னுக்கு நல்ல இறைச்சிகள் பிரியமாயிருக்கும், உதவாத இறைச்சிகளோ அவனுக்கு அருவருப்பாயிருக்கும்.

3-வது.—அற்பப் பாவங்கள்மட்டில் என்னமாயிருக்கிறாய். எப்போதாகிலும் ஏதாகிலும் அற்பகுற்றம் நேரிடாமலிருப்பது கூடாத காரியந்தான். ஆனால் இப்படிப்பட்ட குற்றத்தை ஏதாகிலும் வழக்கமாய்ச் செய்துவருகிறதில்லையா. இந்த அற்ப குற்றங்களில் நீ பற்றுதல் வைத்துப் பிரியத்தோடு செய்யுங் குற்றம் ஏதாகிலுமில்லையா. இப்படி இருக்குமேயாகில் மெய்யாகவே உனக்கு வெகு நஷ்டமாயிருக்கும்.

4-வது.—ஞானக் கிருத்தியங்கள் உனக்கு என்னமாயிருக்கிறது. இவைகள் உனக்குப் பிரியமாயிருக்கிறதோ. இவைகளைக் கனமாய் எண்ணுகிறாயோ. இவைகள் உனக்குச் சலிப்பாயில்லையோ. இவைகளை விட்டுவிடத் தேடுகிறதில்லையோ. எந்த ஞானக் கிருத்தியத்தின்மட்டில் அதிக விருப்பமாய் அதிக நாட்டமாயிருக்கிறாய். தேவவாக்கியத்தைக் கேட்பதும், அதனை வாசிப்பதும், அதைக்குறித்துப் பேசுவதும், அதின்பேரில் தியானிப்பதும், மனவல்லயச் செபங்களைச் செபிப்பதும், பாவசங்கீர்த்தனஞ் செய்வதும், ஆத்துமகுருவானவரிடத்தில் ஆலோசனை கேட்பதும், சற்பிரசாதம் வாங்குவதற்கு ஆயத்தம் பண்ணுவதும், நன்மை வாங்குவதும், ஆசை இச்சைகளை அடக்கி ஒடுக்குவதும் இவைகளெல்லாம் உனக்கு என்னமாயிருக்கிறது? இவைகளில் உன் மனதுக்குச் சரிப்படாததென்ன? இந்த நற்கிருத்தியங்களில் எதின்மீதாகிலும் உனக்கு அவ்வளவு நாட்டம் இல்லையென்று கண்டால் இதன்மட்டில் இந்த அருவருப்பு ஏன் வருகிறதென்றும் இதற்கு என்ன காரணம் இருக்கக்கூடுமென்றும் ஆராய்ந்து பார்.

5-வது.—சர்வேசுரன்மட்டிலேயே நீ என்னமாயிருக்கிறாய். இவரைச் சந்திப்பது உனக்குப் பிரியமாயிருக்கிறதோ. இவர் ஞாபகம் உன் இருதயத்துக்கு ஆறுதலாய் மதுரமாயிருக்கிறதோ. சுவாமியைச் சிந்தித்தேன் இதனால் எனக்குப் பிரியம் உண்டாயிற்றென்று தாவீதென்பவர் சொல்லுகிறதுபோல் நீயும் நினைக்கிறாயோ. அவரை நேசிக்க உன்னிருதயந் தானாய்த் தேடிப்போகிறதோ. அவர் சிநேகத்தைச் சகித்து அநுபவிக்க அதற்கு விசேஷ பிரியந்தானோ. சர்வேசுரனுடைய மட்டற்றதனத்தையுந் தயாள சிநேகத்தையுஞ் சிந்திப்பதால் உன்னாத்துமத்துக்கு ஆறுதல் உண்டாகிறதோ. உலக காரியங்களிலும் இன்னம் ஏதாகிலும் அவ்வளவு பிரயோசனமிராத அலுவல்களிலும் நீ கவனித்திருக்கையிற் சுவாமி நினைப்பு வந்தால் உன்னிருதயம் அதனை ஆசையுடனே பிரியமாய் அங்கீகரித்துக்கொள்ளுகிறதோ. சர்வேசுரனை நோக்கி உன்னிருதயந் திரும்பிக்கொண்டிருக்கிறதாகவும் இன்னஞ் சரியாய்ச் சொல்லவேண்டுமானால் வலிய அவருக்கெதிரே உன்னிருதயம் போகிறதாகவுந் தோன்றுகிறதோ? இப்படிப்பட்ட ஆத்துமங்கள் பலவுண்டென்பது நிச்சயம். ஓர் புருஷன் தன் மனைவியை விட்டு நெடுங்காலந் தூரயிட்டுப் போயிருந்தபின் கடைசியாய்த் திரும்பிவருகிறானென்று பெண்சாதி அறியும்போது உடனே எல்லாத்தையும் விட்டு அவனைக் கட்டி முத்தமிடத் தீவிரித்து ஓட்டமாயோடிவருவாளல்லோ. சுவாமியை மெய்யாகவே நேசிக்கும் ஆத்துமமும் இத்தன்மையாகவே நடந்துகொள்ளும். இந்தப் புண்ணியாத்துமத்துக்கு என்னதான் அலுவல் ஆத்திரமிருந்தபோதிலுஞ் சுவாமியுடைய நினைப்புத் தன் புத்தியில் வரும்போது இதனால் தனக்கு உண்டாகுஞ் சந்தோஷத்தால் எல்லாத்தையும் முழுதும் மறந்ததுபோல்

இருப்பதாகச் சொல்லலாம். சுவாமியை இவ்வாத்து மந் சிநேகிப்பதென்பதற்கு இதுவே மெய்யான அடையாளமாம்.

6–வது.—தேவனும் மனிதனுமான சேசுநாதர்மட்டில் என்னமாயிருக்கிறாய். அவரருகிலிருப்பது உனக்குப் பிரியமோ. தேனீக்களுக்குத் தங்கள் தேனைச் சுற்றிக்கொண்டிருப்பதே பிரியம். குளவி வண்டுகள் எப்பொழுதும் அசுத்தத்தை மொய்த்துக்கொண்டிருக்கும். இவ்வகையாய்ப் புண்ணியவான்கள் சேசுகிறீஸ்துநாதரைச் சுற்றிக்கொண்டிருப்பதிற் பிரியங்கொள்ளுவார்கள். இவர்மட்டில் மகா உருக்கப்பட்சமாயிருப்பார்கள். ஆனால் கெட்டவர்கள் இவ்வுலகே வீண்சிலாக்கியங்களைத் தேடித்திரிவதில் தங்கள் பிரியமெல்லாம் வைப்பார்கள்.

7–வது.—அர்ச். கன்னிமரியாயி சகல அர்ச்சியசிஷ்டவர்கள் உன் காவலான சம்மனசானவர்மட்டில் என்னமாயிருக்கிறாய். இவர்களை மெத்த நேசிக்கிறாயோ? இவர்கள் அடைக்கலத்தில் உனக்கு விசேஷ நம்பிக்கையுண்டோ. இவர்களுடைய படங்களைப் பார்ப்பதும் இவர்கள் சரித்திரத்தை வாசிப்பதும் இவர்கள் புகழ்ச்சிகளைப் பாடுவதும் உனக்குப் பிரியமாயிருக்கிறதோ?

8–வது.—உன் நாவு விஷயத்தில் என்னமாயிருக்கிறாய். சுவாமியைக்குறித்து என்னமாய்ப் பேசுகிறாய். உன் அந்தஸ்துக்குந் திறமைக்கும் ஏற்றபடி அவரைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசுவது உனக்கு விருப்பமாயிருக்கிறதோ. அவருடைய தேவஸ்துதி சங்கீதங்களைப் பாட அபேட்சையாயிருக்கிறாயோ.

9–வது.—உன் கிருத்தியங்களெல்லாம் என்னமாய்ச் செய்துவருகிறாய். சர்வேசுரனுக்கு மகிமை வருவிப்பதே உன் ஏக தொழிலாயிருக்கிறதோ. அவருடைய மகிமைத் தோத்திரத்துக்காக ஏதாகிலுந்

செய்ய ஆசிக்கிறாயோ. ஏனெனில் சர்வேசுரனை நேசிப்பவர்கள் அவரை நேசிப்பதுடன் அவருடைய ஆலயத்தின் சோடிப்பு அலங்காரத்தையும் நேசிப்பார்கள்.

10-வது.—கடைசியாய் உன்னிடத்திலுள்ள ஏதாகிலும் ஆசைப்பற்றுதல்களை அறுத்துத் தள்ளிவிட்டாயோ. சுவாமியைப்பற்றி உனக்குப் பிரியமான எது காரியத்தை என்கிலும் விட்டுவிட்டாயோ யோசித்துப்பார். ஏனெனில் ஒருவனை நேசிக்கும்போது அவனைப்பற்றித் தனக்குப் பிரியமான தெதையாகிலும் விட்டுவிடுவது அவன்மட்டிலுள்ள சிநேகத்தின் நல்ல அடையாளமாம். ஆதலால் சுவாமியுடைய நேசத்தை முன்னிட்டு இதுவரையில் நீ என்ன விட்டுவிட்டாய்.

5-ம் அதிகாரம்.

நமதுமட்டிலேயே நமது ஆத்துமம் இருக்கும் நிலையை ஆராய்தல்.

உன்னைத்தானே நீ என்னமாய் நேசிக்கிறாய். இவ்வுலகத்தை முன்னிட்டு உன்னை நீ மிஞ்சின விதமாய் நேசிக்கவில்லையோ. இதனைக் கண்டுபிடிப்பது வெகு சுளுவு. இப்போர்ப்பட்ட பக்ஷம் உனக்கு இருக்குமாகில் இவ்வுலகிலேயே எப்பொழுதும் இருக்க ஆசிப்பாய். இவ்வுலகில் நீ வீடு வாசல்களைக் கட்டி அற்ப சங்கடமுமின்றி இருக்க வெகுவாய் பிரயாசப்படுவாய். ஆனால் பரலோகத்தை முன்னிட்டு

உன்னை நீ நேசித்தால் சுவாமிக்கு இஷ்டமானபோது இவ்வுலகத்தைவிட்டுப் போக ஆசிப்பாய். இப்படிச் சிலவிசை நீ ஆசியாவிட்டாலும் மனப்பிரீதியாய்ச் சுவாமியுடைய சித்தத்துக்கு அமைந்துபோவாய்.

2-வது.—உன்மட்டிலேயே உனக்குள்ள பக்ஷத்தை நன்றாய்க் கிரமப்படுத்துகின்றாயோ. எனெனில் நமதுபேரில் நமக்குள்ள கிரமந்தப்பின நேசத்தால் தான் நமக்கு எல்லா கேடும் நஷ்டமும் வருவது. ஆனால் சரீரத்தைப் பார்க்கிலும் ஆத்துமத்தை நாம் அதிகமாய் நேசித்து மற்றமற்றக் காரியத்தைப் பார்க்கிலும் புண்ணியங்களைச் சம்பாதிக்க நாம் அதிகக் கவலையுள்ளவர்களாகவும் இலௌகீக பெருமை சிலாக்கியத்தைப் பார்க்கிலும் பரலோக மகிமையின் மட்டில் அதிக விருப்பமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கிரமமான உத்தம நேசம் நமக்குக் கற்பிக்கிறது. நன்றாய்ச் சீர்திருத்தப்பட்ட ஒழுக்கமுள்ள இருதயம் இன்ன காரியத்தைக்குறித்துத் தான் சிந்தித்தால் சம்மனசுகள் என்ன சொல்லுவார்களென்று தனக்குள்ளே பலமுறை கேட்டுக்கொள்ளுமேயல்லாமல் மனிதர்கள் என்ன சொல்லுவார்களென்று கேட்டுக்கொள்ளாது.

3-வது.—உன் சொந்த இருதயத்தையே நீ.என்னமாய் நேசிக்கிறாய். அதற்கு நேரிடும் பலவித வியாதிகளில் அதற்கு வேண்டிய ஒத்தாசை செய்யாமல் அதின்பேரில் சலிப்பு கொள்ளுகிறதில்லையோ. பலவித ஆசாபாசங்கள் பெரும் புசல்போல் கிளம்பி அதனை உபாதிக்கையில் அதற்கு நீ ஒத்தாசை செய்வதுமன்றிப் பிறரைக்கொண்டும் அதற்கு ஒத்தாசை செய்வித்து அதைப்பற்றி எது காரியத்தையும் விட்டு அதைப் பராமரிக்கவேண்டியது.

4—வது.—சுவாமிக்கு முன்பாக உன்மட்டிலேயே என்ன எண்ணமாயிருக்கிறாய். உன்னை ஒன்றுமில்லாமையாக எண்ணுகிறாயல்லோ. இதனால் உனக்குத் தாழ்மை ஒன்றுமில்லை. ஓர் மலைக்கு முன்பாக ஓர் அயானது தன்னை ஒன்றுமில்லாமையாக எண்ணிக்கொள்ளுவதால் சமுத்திரத்துக்கு முன்பாக ஒரு துளி ஜலமானது தன்னை ஒரு பொருட்டாய் நினைத்துக்கொள்ளாததால், சூரியனுக்கு முன்பாக ஒரு பொறி நெருப்பானது தன்னை ஒன்றுமில்லாமையாக எண்ணிக்கொள்வதால் இவைகளிடத்தில் வெகு தாழ்ச்சி உண்டென்பார்களோ. ஆனால் மற்றவர்களைப் பார்க்கிலும் நம்மையே நாம் கனமாய் எண்ணாமலிருப்பதிலும் மற்றவர்களால் கனமாய் எண்ணப்படவேண்டுமென்று நாம் விரும்பாமலிருப்பதிலுந் தான் தாழ்ச்சி அடங்கியிருக்கிறது. இது விஷயத்தில் நீ எந்தப் படியிலிருக்கிறாய்.

5—வது.—உன் நாவிஷயத்தில் என்னமாயிருக்கிறாய். உன்பேரிலேயே பெருமையாய்ப் பேசிக்கொள்ளுகிறதில்லையோ. உனக்குச் சம்பந்தமான காரியங்களிலும் உன்னைக்குறித்துப் பேசுகையிலும் உன்பேரிலேயே இச்சகமாய்ப் பேசுகிறதில்லையோ.

6—வது.—உன் கிருத்தியங்களில் எப்படி இருக்கிறாய். உன் சவுக்கியத்துக்கு ஒவ்வாத பிரியத்தைத் தேடுகிறதில்லையோ. வீணான பிரயோசனமற்ற காரியங்களில் பிரீதியாய் முகாந்தரமின்றிக் கண்விழித்து நெடுநேரஞ் சம்பாஷிப்பதிலும் இன்னம் இதற்கொத்த வீண் பிரியங்களிலும் நேரஞ் செலவழிக்கிறதில்லையோ.

6-ம் அதிகாரம்.

பிறர்மட்டில் நமதாத்துமமிருக்கும் நிலையை ஆராய்தல்.

புருஷன் தன் பெண்சாதியையும் பெண்சாதி தன் புருஷனையும் உருக்கமாய் அமரிக்கையாய் நிலைமையோடு எப்பொழுதும் நேசிக்கவேண்டும். இந்தச் சிநேகம் எல்லாத்துக்கும் மூந்தினபடியில் இருக்கிறதாமே. அதேதென்னில் சுவாமிதானே இதனைக் கற்பிக்கின்றார். இத்தன்மையாகவே தாய்தந்தைகள் தங்கள் பிள்ளைகளை வெகுவாய் நேசிக்கவேண்டும். உறவின்முறையாருக்குள்ளும் விசேஷ நேசமிருக்கவேண்டும். இன்னம் அவனவனுந் தன்தன் அந்தஸ்துக் கிரமப்படி தன் சிநேகிதர்களை நேசிக்கவேண்டும். ஆனால் புறத்தியார்மட்டில் என்னமாய் நீ இருக்கிறாயென்று பொதுவாய் யோசித்துப்பார். சுவாமியைப்பற்றி மெய்யான உருக்கப் பக்ஷத்தோடு புறத்தியாரை நேசிக்கிறாயோ. இதனை நன்றாய்க் கண்டு பிடிப்பதற்கு நாலுபேருக்குந் தொந்தரைக்குரிய கோட்டிக்குணமுள்ள மனிதர்கள்மட்டில் என்னமாய் நடந்துகொள்ளுகிறாய். இப்படிப்பட்டவர்களிடத்தில்தான் சுவாமியுடைய நேசத்தைப்பற்றிப் பிறசிநேகத்தைக் காட்டவேண்டும். இன்னம் விசேஷமாய் வார்த்தைகளாலென்கிலுங் கிரியைகளினாலென்கிலும் நமக்குத் தின்மை செய்கிறவர்களுக்குத்தான் பிறசிநேகத்தைச் செலுத்தவேண்டும். இவர்களுக்கு விரோதமாயேதாகிலும் உன்னிருதயத்தில் உண்டோ நன்றாய் யோசித்துப்பார். இன்னம் இப்படிப்பட்டவர்களை நேசிப்பது உனக்கு மகா கஷ்டமாயிருக்கிறதோ பார்.

பிறத்தியாக்குவித்து விசேஷமாய் உன்னை நேசியாதவர்களைக்குறித்துத் தகாதவிதமாய்ப் பேசுவது உனக்கு வெகு எளிதாயிருக்கிறதில்லையோ. வேண்டுமென்று நோகவென்கிலும் மறைவிடமாயென்கிலும் ஒருத்தருக்கும் நீ தின்மை செய்கிறதில்லையோ. இதில் கொஞ்சம் பாரபக்ஷமுமின்றி யோசித்துப் பார்த்தால் வெகு சுளுவாய் இது விஷயத்தில் உன் குற்றங்களைக் கண்டுகொள்வாய்.

7-ம் அதிகாரம்.

நமது ஆத்தும ஆசைப் பற்றுதல்களை ஆராய்தல்.

ஞானசீவியத்தில் நாம் அடையும் அநுகூலங்களை ஆராய்ந்து பார்க்கும் விஷயங்களைக்குறித்துக் கொஞ்சம் விரிவாய்ப் பேச வேண்டியிருக்கிறது. ஏனெனில் பாவங்களைச் சோதித்துப் பார்க்கும் விஷயம் ஞானசீவியத்தில் வர்த்திக்கத் தேடாதவர்கள் அலுவலாம். இவர்கள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு விசேஷமாய்த் தங்கள் பாவங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஆயினும், இந்த விஷயங்களை ஒவ்வொன்றும் மிகுதின கவலையுடன் ஆராய்வது அவ்வளவு நன்மையாயிராது. இந்தகாரியத்தில் வெகு சாதுவாய் அமரிக்கையாய்ப் போகவேண்டும். நாம் செய்த பிரதிக்கினை முதற்கொண்டு பற்றுதல் விஷயங்களில் நமது இருதயம் எவ்விதமாய் நடந்துகொண்டதென்றும்

எந்த விசேஷ தப்பிதங்களில் நாம் விழுந்தோமென்றும் அமரிக்கையாய் யோசிக்கவேண்டும்.

இதைச் சுருக்கத்திற் பார்ப்பதற்காக நமது ஆசாபாசங்களை எவ்விதமாய் நடத்திவருகிறோமென்று பார்க்கவேண்டும். முன் சொன்னபடி நுணுநுணுக்கமாய்ப் பார்ப்பது நமக்குப் பிரியமாயிராமல் சலிப்பாயிருந்தால் நாம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்றும் எவ்விதமாய் நடந்துகொண்டோமென்று மாத்திரம் யோசித்துப் பார்ப்போம்.

சர்வேசுரன்பேரிலும் பிறர்பேரிலும் நமதுபேரிலுந்தானே நமது பட்சம் என்னமாயிருந்தது.

நம்மிடத்திலுள்ள பாவத்தின்பேரிலும் இன்னம் பிறரிடத்திலுள்ள பாவத்தின்பேரிலும் நமது பகை எப்படிப்பட்டது. ஏனெனில் நம்மிடத்திலுள்ள பாவத்தையும் பிறரிடத்திலுள்ள பாவத்தையும் அழிக்க நாம் ஆசிக்கவேண்டும்.

ஆஸ்தி திரவியம் வீண் பிரிய மகிமையின்மட்டில் நமதாசை இருந்த விதமென்ன.

பாவச் சமயங்களின்மட்டிலும் இலௌகீக நன்மைகளை இழந்துபோவதின்மட்டிலும் நமக்கு உண்டான அச்சம் என்னமாயிருந்தது. வழக்கமாய் இலௌகீக நன்மையை இழந்துபோக வெகுவாய்ப் பயப்படுவார்கள். பாவச் சமயத்துக்குச் சிலவிசை அற்பமும் பயப்படார்கள்.

நமது நம்பிக்கை என்னமாயிருந்தது. உலகத்தின் மட்டிலும் உலகச் சிஷ்டிகள்மட்டிலுஞ் சிலவிசை மிஞ்சின நம்பிக்கை வைத்துச் சர்வேசுரன்பேரிலும் பரலோகக் காரியங்கள்பேரிலும் அவ்வளவு நம்பிக்கை வையாமல் இருந்ததில்லையோ.

கஸ்திச் சஞ்சலத்தில் என்னமாய் நடந்துகொண்டோம். மிஞ்சினவிதமாய்க் கஸ்திப்பட்டதில்லையோ.

பலமுற்ற ஒன்றுமில்லாத அற்ப காரியங்களுக்காக விதனப்பட்டதில்லையோ.

நமது சந்தோஷம் சிலவிசை மிதமிஞ்சினதாகவும் உத்வாத முகாந்தரத்தை நாடினதாகவும் இருந்ததுண்டோ.

கடைசியாய் நமது இருதயத்தை அலைக்கழித்துச் சங்கடப்படுத்தும் ஆசை நாட்டங்கள் எவை. என்னென்ன ஆசாபாசம் அதனை ஆண்டுவருகின்றது. எதுவிஷயத்தில் விசேஷமாய் ஒழுங்கு தப்பி நடக்கின்றது.

இவ்வகையாய் ஆத்துமத்தின் ஆசாபாசங்களை ஆராய்ந்து சோதித்துப் பார்ப்பதால் தன் மெய்யான அந்தஸ்தை அறிந்துகொள்ளலாம். ஆனால் இப்படி அறிகிறதற்கு இதனை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனெனில் வீணை வாசிப்பவன் தன் வீணையின் தந்திகளை எல்லாந் தட்டிப் பார்த்து அவைகளைக் கொஞ்சம் முடுக்கியென்கிலுந் தளர்த்தியென்கிலுஞ் சத்தத்தை ஒழுங்குப்படுத்துவான். இத்தன்மையாகவே நமது ஆத்துமத்திலுள்ள சிநேகம், பகை, ஆசை, அச்சம், நம்பிக்கை, கஸ்தி, சந்தோஷத்தை ஒவ்வொன்றாய்த் தொட்டுப் பார்த்தபின் சுவாமிக்கு மகிமை வருவிக்கவேண்டுமென்று நமக்கிருக்கவேண்டிய கருத்தோடு அவைகள் ஒத்திருக்கிறதில்லையென்று கண்டால் அவருடைய வரப்பிரசாத ஒத்தாசையைக்கொண்டும் நமது ஆத்தும குருவின் புத்தி ஆலோசனையைக்கொண்டும் அவைகளைச் சீர்ப்படுத்தி ஒத்துப்போகும்படிச் செய்யலாம்.

8-ம் அதிகாரம்.

இந்தச் சோதனைக்குப்பின் செய்யவேண்டிய சிநேக முயற்சிகளைக்குறித்து.

அமரிக்கையாய் மேற்சொல்லிய விஷயங்களை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து யோசித்துப் பார்த்தபின் நீ இருக்கும் நிலையை அறிந்துகொண்டு பின்னால் வரும் பத்தி சிநேக முயற்சிகளைச் செய்வாய். நீ முன்னால் செய்த பிரசித்தப் பிரதிக்கினை முதற்கொண்டு உன் நடத்தையிலுண்டாயிருக்கக்கூடுமான கொஞ்சஞ் சீர்திருத்தலுக்காகச் சுவாமிக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி அவர் கருணை தயாளந்தான் இந்த நன்மையை உன்னிடத்திலும் உனக்காகவுஞ் செய்வித்ததென்று அறிந்துகொள்.

நீ நன்மையில் அவ்வளவு விருத்தியடையாமற் போனது செபத்தியானத்திலும் இன்னம் பல தருணங்களிலுஞ் சுவாமி உனக்கு வருவித்த நல்ல ஆசை ஏவுதல் ஞானவொளிகளுக்கு நீ பிரமாணிக்கமாய்த் தயிரியத்தோடு எப்போதும் அமைந்து போகாததால் உன் தப்பிதத்தினாலேயே இப்படி கெட்டதென்று சுவாமிக்குமுன்னே வெகுவாய்த் தாழ்ந்து போவாய். அவர் உனக்கு அளித்த வரப்பிரசாத நன்மைகளுக்காகவும் அதனால் நீ அடைந்த சொற்ப அநுகூலத்துக்காகவும் என்றும் அவரைப் புகழ்ந்து கொண்டாடுவாயென்று அவருக்கு வார்த்தைப்பாடு கொடுப்பாய்.

அவருடைய கருணை தயாளங்களை வேண்டியபடி அறிந்து நடவாமல் பிரமாணிக்கக் குறைவாய் நாணயக் கேடாய் நடந்துகொண்டபடியால் அவரிடத்தில் பொறுத்தல் கேட்பாய்.

உன் இருதயம் முழுதும் அவர் சொந்தப் பொருளாயிருக்க அவருக்கு அதனை ஒப்புக்கொடுத்து எப்பொழுதும் மகா பிரமாணிக்கமாயிருக்க அவரைப் பார்த்து மன்றாடு.

தேவமாதா, காவலான சம்மனசானவர், நீ பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவர், அர்ச். சூசையப்பர் இன்னம் மற்ற அர்ச்சியசிஷ்டவர்களையும் வேண்டிக்கொள்.

9-ம் அதிகாரம்.

நமது நல்ல பிரதிக்கினைகளைப் புதுப்பிப்பதற்கு ஏற்ற யோசனைகள்.

மேற்சொல்லியபடி சோதித்துப் பார்த்து விவேகியான ஆத்தும குருவானவரிடத்தில் உன் குறைகளை நன்றாய்ச் சொல்லிக்காட்டி அதற்கான அவுழ்தங்களை அறிந்துகொண்டு பின்னால் சொல்லப்படும் ஆலோசனைகளை ஒவ்வொன்றாய் நாள்தோறும் யோசித்துவருவாய். முதற் பாகத்திற் சொல்லியவண்ணம் தியானத்துக்குமுன் செய்யும் ஆயத்தங்களைச் செய்து வழக்கமாய் நீ தியானம் செய்யும் நேரத்திலேயே இதனைத் தியானமாக வைத்துக்கொண்டு தியானிக்கலாம். உனக்குத் தெரிந்ததுபோல எல்லாத்திற்கு முந்திச் சுவாமியுடைய சமூகத்தில் இருக்கிறாயென்று எண்ணி அவர் நேசத்திலுந் திரு ஊழியத்திலும் பலப்பட அவர் அநுக்கிரக வரத்தைக் கேட்டு மன்றாடுவாய்.

10-ம் அதிகாரம்.

நம்து ஆத்தும மேன்மை.

நமது ஆத்துமத்தின் சிரேஷ்ட மேன்மையை யோசித்துப்பார். இது தன் புத்தியால் கண்ணுக்குத் தோன்றும் இவ்வுலகத்தை ஆராய்ந்து அறிவதுமல்லாமல் மட்டற்ற கருணை தயாபரரும் உத்தமரும் மேலானவருமான ஓர் கடவுளும் எண்ணிறந்த சம்மனசுகளும் நித்திய மோட்சமும் நித்திய நாகமும் உண்டென்று அறியும். மேலும் இப்பிரபஞ்சத்தில் நன்ருய்ச் சீவித்தொழுகவும் பரலோகத்தில் சம்மனசுகளுடன் வீற்று வாழவுஞ் சதாகாலத்துக்குஞ் சர்வேசுரனை நேசித்துச் சுகித்து அநுபவிக்கவும் அவசரமானது என்னவென்று அதற்குத் தெரியும். இன்னமும் உன் ஆத்துமத்துக்கு மேலான சிறந்ததோர் மனதுமுண்டு. இந்த மனதால் அது சர்வேசுரனை நேசிக்கலாம். உன் இருதயம் எவ்வளவோ மேன்பாடுள்ளது. தேனீக்களுக்கொத்ததல்லவோ. அசுத்தமான்தொன்றும் இந்தத் தேனீக்களுக்குத் திருத்தி வருவியாது. ஆனுல் புஷ்பங்களின்பேரில் மாத்திரந் திருத்தியாய்த் தங்கியிருக்கும். இத்தன்மையாகவே சர்வேசுரனிடத்திலன்றி வேறெங்கும் இந்த இருதயம் அமரிக்கையாயிராது. எந்தச் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்தும் இதற்குத் திருத்தி வருவிக்க அறியா. முன்னல் உன் இருதயம் வெகு ஆவலாய் விரும்பிய விளையாட்டுகளையும் ஆசைகளையுஞ் சற்றே இப்போது ஞாபகம் வருத்திக்கொள். அந்த விளையாட்டுச் சந்தோஷத்தில் மகா கலக்க ஏக்கமுங் கஸ்திக்குரிய சிந்தைகளும் ஓயாத கவலைகளுங் கலந்திருந்ததில்லை

யோ. மெய்யாகவே அவைகள் உனக்கு ஓர் ஆக்கினை யாய் இருந்ததல்லோ.

ஐயோ சிஷ்டிக்கப்பட்ட வஸ்துகளை நமதிருதயம் நாடிப்போகையில் இதனால் தன் ஆசைகளை எல்லாம் அமர்த்தக்கூடுமென்று எண்ணி மகா ஆவலாய்த் தீவிரித்துப்போகிறது. ஆனால் இவைகளை ஒருவிசை கண்டுகொண்டதோ இவைகளில் பிரயோசனமில்லையென்றும் இப்படி சிஷ்டிக்கப்பட்ட வஸ்துதனை ஓயாமல் ஒன்றுக்குப்பின் ஒன்றாய்ப் பின்பற்றிப் போகவேண்டியிருக்கிறதேயல்லாமல் இதனால் தனக்குத் திருத்தி வருவிக்கத்தக்கது ஒன்றுமில்லை என்று கண்டுகொள்ளும். பெட்டகத்தினின்று புறப்பட்ட மாடப்புறாவுக்கு ஒப்பாய் நமதாத்துமம் தனக்கு ஆதியும் அந்தமுமாகிய சர்வேசுரனிடத்தில் திரும்பிப் போகும்படி எங்கும் அதற்கு அமரிக்கை இளைப்பாற்றி கிடையாதபடிக்குச் சுவாமி செய்கின்றார். ஆம், நமதிருதயம் எவ்வளவோ மாட்சிமை பொருந்தியது. வலிக்கட்டாயமாய்ச் சிஷ்டிக்கப்பட்ட வஸ்துகளை அது சேவிக்கும்படி ஏன் கட்டாயஞ் செய்கிறோம்.

என் ஆத்துமமே நீ சுவாமியை அறிந்து அவனை நேசிக்கக்கூடும். இப்படியிருக்க மகா கிசிதமான காரியங்களில் ஏன் கவனித்து வீண்காலம் போக்குகிறாய்? நித்தியத்தை நீ கைக்கொள்ளக்கூடுமாயிருக்க இந்தச் சொற்பகாலத்தில் ஏன் ஆடிப்பாடித் திரியத் தேடுகிறாய். இப்படித்தான் ஊதாரிப்பிள்ளை தன் தகப்பனோடு பந்தியில் அமர்ந்து இன்பமாய்ப் போஷித்திருக்கக்கூடுமாயினும் நீச மிருகங்களின் உணவுகளைத் தின்னும்படியாய் உடன்பட்டிருந்ததே இவனுக்கு லெகு கஸ்தி துப்பாயிருந்தது. என் ஆத்துமமே சுவாமியையே நீ நுகர்ந்தனுபவிக்கக்கூடுமாயிருக்கச் சுவாமியிடத்திலல்லாமல் வேறேவித

மாய் உனக்குத் திருத்தி சந்தோஷம் வருவிக்கப் பார்ப்பாயோ, உனக்குக் கேடாம். இந்த யோசனையால் உன் ஆத்துமத்தைக் கனப்படுத்தி நித்தியமாய்ச் சீவித்து வாழ அது உண்டாக்கப்பட்டதென்றும் நித்தியமேயன்றி வேறொன்றும் அதின் தாகந் தணிக்க ஆனதல்லவென்றும் உன்னாத்துமத்துக்குச் சொல்லிக்காட்டு. இதனால் உனக்கு மிகுந்த தைரியம் உண்டாம்.

11-ம் அதிகாரம்.

இரண்டாம் யோசனை

புண்ணியங்களின் மேன்மை.

புண்ணியங்களாலும் மெய்யான பத்தியினாலுமாத்திரம் இப்பூவுலகில் நமதாத்துமத்துக்கு மெய்யான பாக்கியம் உண்டாகுமென்று யோசித்துக்கொள். இப்புண்ணியங்கள் எவ்வளவு சௌந்தரியமுள்ளவை பார். புண்ணியங்களையும் அதற்கு விரோதமான துர்க்குணங்களையும் ஒருமிக்க ஒத்துப்பார். பழிவாங்க வேண்டுமென்ற கருத்தைவிடப் பொறுமையும்; கோபத்தைவிடச் சாந்தமும், ஆங்காரத்தைவிடத் தாழ்ச்சியும், உலோபித்தனத்தைவிட உதாரகுணமும், காய்மகாரத்தைவிடப் பிறசிநேகமும், போசனப்பிரிய வெறியைவிட மட்டாசன அடக்கமும் எவ்வளவோ மதுரமானவை. புண்ணியத்தை அநுசரித்தபின் நமதாத்துமத்துக்குச் சொல்லவொண்ணா இன்பம் உண்டாகிறதல்லவா; இதற்கு விரோதமாய்த் துர்க்குணத்தைப் பின்பற்றி நடந்தபின் கன்றிச் சஞ்சலம்

விளையும். ஆதலால் அந்தப் பேரின்பத்தை அடைய ஏன் பிரயாசப்படாமலிருப்போம்.

துர்க்குண விஷயத்தில் யோசித்துப்பார். ஒருவனுக்கு ஏதாகிலுங் கொஞ்சந் துர்க்குணம் உண்டோ அவன் சந்தோஷமாயிரான். ஒருவனுக்கு மிகுந்த துர்க்குணம் உண்டோ அவன் மிகுந்த கஸ்தியாய் இருப்பான். புண்ணிய விஷயத்திலேயோ ஒருவனுக்குக் கொஞ்சம் புண்ணியமாகிலும் இருந்தால் திருத்தியடையத் துவக்குவான், இதன்பின் இவனுக்கு எவ்வளவுக்கு அதிக புண்ணியம் உண்டாகுமோ அவ்வளவுக்கும் இவன் பாக்கியம் அதிகரிக்கும். மெய்யாகவே புத்திவுள்ள சீவியம் எவ்வளவோ அழகாயும் மதுரமாயும் பிரியமாயும் பாக்கியமுள்ளதாயும் இருக்கிறது. இதனால் கஸ்திச் சிஞ்சலங்கள் தணிந்து போம். சந்தோஷ ஆறுதலுக்கு இன்பமுண்டாம், இதை நீக்கிவிட்டால் நன்மை இன்மையாகும், பிரியங்கசப்பாகும், இளைப்பாற்றி சஞ்சலமாகும் இதனை நன்றாய்க் கண்டுபிடித்தபின் சமாரியத்தாளைப் போல் ஆண்டவரே அந்தச் சலத்தை எனக்குத் தாருமென்று வெகு ஆவலோடு சொல்லக்கூடும். அர்ச். தெரேசம்மாளும் அர்ச். ஜேன் கத்தரீனம்மாளும் மேற்சொல்லிய வாக்கியத்தையே மனவல்லையச் செபமாகச் சொல்லி வருவார்கள்.

12-ம் அதிகாரம்.

மூன்றம் யோசனை.

அர்சியசிஷ்டவர்கள் மாதிரிகை.

எவ்வித அந்தஸ்திலும் அர்ச்சியஷ்டவர்கள் காட்டிய மாதிரியை யோசித்துப்பார். சுவாமியை நேசிக்கவும் அவருக்குப் பிரமாணிக்கமாய் இருக்கவும் இவர்கள் புரியாத கருமமென்ன, படாதபாடென்ன, வேதசாக்ஷிகள் தங்கள் பிரதிக்கினைகளில் காட்டிய வெல்லவொண்ணுத் தயிரியத்தைப் பார். தங்கள் நிர்மானத்தை நிலைநிறுத்த இவர்கள் அநுபவியாத துன்பவாதைகளென்ன! ஸ்திரீ சாதிக்கு மெய்யான அலங்காரம்போல் இருக்கப்பட்ட மங்கையரைப்பார். பரிசுத்தத்தனத்தில் இவர்கள் லீலியபுஷ்பத்திலுந் தூய்மையானவர்கள். தேவசிநேகம் பிறசிநேகத்தில் தாமரைச் செவ்விதழ்களிலுஞ் சௌந்தரிய காந்தியுள்ளவர்கள். இவர்களிற் சிலர் பன்னிரண்டு பிராயத்திலும் வேறு சிலர் பதின்மூன்று பதினைந்து இருபது இருபத்தைந்து பிராயத்திலுந் தங்கள் பிரதிக்கினையை விட்டுவிடுவதைப் பார்க்கிலும் நாலாவிதக் கொடிய சித்திரவதைகளை அநுபவித்தார்கள். பலமுறை இவர்கள் விசுவாச சத்தியத்தை முன்னிட்டு மாத்திரமல்ல இன்னம் புண்ணியத்தையும் பத்திக்கடுத்த சீவியத்தை முன்னிட்டு இப்படிப்பட்ட கொடிய வாதைகளுக்குள்ளானார்கள். இந்த ஸ்திரீகளில் சிலர் தங்கள் கன்னிமையை விடாதபடிக்குத் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள். சிலர் ஏழைப் பிணியாளிகளுக்கு ஊழியம் செய்வதையுங் கஸ்தித் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்வதையும் மரித்தோரை அடக்கம் செய்வதையும் விட்டுவிடுவதைப்

போர்க்கிற்றுந் தங்கள் பிராணனைக் கொடுத்தார்கள். ஆ சுவாமி! இப்படிப்பட்ட பல சமயங்களில் பலவினமான பெண்பிள்ளைகளுங் காட்டிய மனத்திடனை ஒன்றொன்று சொல்லலாம்.

கணக்கற்ற பரிசுத்த ஸ்துதியர்களை நோக்கிப்பார். எவ்வளவு வீரமுடன் அவர்கள் உலகத்தை நிந்தித்தார்கள். தங்கள் பிரதிக்கினைகளில் எவ்வளவு ஸ்திரமாயிருந்தார்கள், ஒன்றும் அவர்களை அசைக்கக் கூடாமல் போயிற்று. சுவாமியுடைய நேசத்தைப் பற்றி எவ்விதப் பிரதிக்கினைகளையும் செய்தார்கள். அவரைப்பற்றியே தாங்கள் செய்த பிரதிக்கினைகளில் ஒன்றையும் மீறாமல் எல்லாத்திலும் ஸ்திரமாய் நின்றார்கள். ஆ சுவாமீ! அர்ச்சியசிஷ்ட அகுஸ்தீனு என்பவர் தமது பிரிய தாயைக்குறித்து எவ்வளவோ நேத்தியான காரியங்களைச் சொல்லுகிறார். இந்தம்மாள் இல்லற வாழ்க்கையிலும் விதவையான பின்னுஞ் சுவாமிக்கு நல்ல ஊழியஞ் செய்யவேண்டுமென்ற தனக்குண்டாயிருந்த கருத்தை ஒருநாளும் விட்டுவிடாமல் எவ்வளவு ஸ்திரமாய் நிலைமையாய் நிறைவேற்றினாள். போலென்னும் சின்னம்மாளுக்கு நேரிட்ட நானாவிதச் சங்கடத் துன்பதுரிதங்களில் இவள் நடந்துகொண்ட விதத்தை அர்ச். எரோனீமு என்பவர் எவ்வளவோ ஆச்சரியத்தோடு சொல்லிக் காட்டுகின்றார். இவ்வளவு உத்தம மாதிரிகைகளை நாம் பார்த்தபின் என்ன நாம் செய்யாமலிருப்போம், இவர்களெல்லோரும் நம்மைப்போலொத்தவர்களாகவே இருந்தார்கள். நாம் நேசிக்குஞ் சர்வேசுரனைப்பற்றியும் நாம் அடைய விரும்பும் புண்ணியங்களை அடைவதற்காகவும் இவர்கள் பிரயாசப்பட்டார்கள். இவர்களைப்போல் சர்வேசுரனை உத்தமவிதமாய்ச் சேவிப்போமென்று நாம் அவருக்குக் கொடுத்த பரிசுத்தவார்த்தைப்பாட்டைநமது சீவிய நாள்

பரியந்தஞ் செயமாய் முடிக்க நமது அந்தஸ்துக்குந் தேவ அழைப்புக்கும் ஒத்தவண்ணம் நாமும் என் கடவாமலிருப்போம்.

13-ம் அதிகாரம்.

நாலாம் யோசனை.

சேசுநாதருக்கு நமதுபேரிலுள்ள நேசம்.

சேசுநாதர் இவ்வுலகிலிருக்கையில் எவ்வளவு துன்ப நோக்காடுகளை அநுபவித்தாரென்றும் விசேஷமாய்ப் பூங்காவனத்திலுங் கல்வேரி மலையின்மீதும் எவ்வளவு நேசப் பெருக்கத்தோடு பாடுபட்டாரென்றும் யோசித்துப்பார். உன்பேரிலுள்ள நேசமே இதற்குக் காரணம். இந்தத் துன்பப் பிரயாசைகளால் நமது பிதாவாகிய சர்வேசுரனிடத்தினின்று உன்னிருதயத்துக்கு நல்ல பிரதிக்கினைகளை அடைந்து கொடுத்தார். இன்னம் இந்தப் பிரதிக்கினைகளை நிலைநிறுத்திப் போஷித்துப் பலப்படுத்தி முழுதும் நிறைவேறுவதற்கு அவசரமான வரப்பிரசாதங்களையெல்லாம் இந்தத் துன்பதுரிதங்களாலே அடையச் சித்தமானார். மெய்யாகவே பிரிய சகோதரரே, இந்தப் பிரதிக்கினைகளெல்லாம் நமது திவ்விய இரக்ஷகருடைய திருப்பாட்டின் கனிகளாயிருப்பதால் இவைகளைச் சீர்தூக்கி மதிப்பதெப்படி. இந்தப் பிரதிக்கினைகள் சேசுநாதருக்கு வெகு பிரியமாயிருப்பதால் அவைகளை எவ்வளவோ நாம் நேசிக்கவேண்டியது. ஆ என்னுத்தம இரக்ஷகரே இந்தப் பிரதிக்கினைக

ளெல்லாம் எனக்குண்டாகும்படி உமது பிராணனைக் கொடுத்தமையால் இவைகளை நான் விட்டுவிடுவதைப் பார்க்கிலுஞ் சாகும்படி எனக்கு அநுக்கிரகம் பண்ணியருளும்.

பிரிய சகோதரமே, நன்றாய் இதனை யோசித்துப் பார். நமது ஆண்டவராகிய சேசுகிறீஸ்துவின் திரு இருதயஞ் சிலுவை மரத்தினின்று உன் இருதயத்தின்மீது கண்ணாயிருந்து அதனை நேசித்துவந்ததென்பது உண்மை. இந்த நேசத்தால்தான் அவரிடத்தினின்று நீ பெற்ற எல்லா நன்மைகளையும் இன்னம் நீ பெறவிருக்கும் நன்மைகளையும் இவைகளுக்கும் விசேஷமாய் இன் பிரதிக்கினைகளையும் நீ அடையும்படியாயிற்று. ஆம், பிரிய சகோதரமே, ஜெரேமியாஸ் என்பவரைப்போல் என் ஆண்டவரே நான் பிறப்பதற்கு முந்தியே என்னை நீர் உற்றுப் பார்த்துக்கொண்டு என் பேர் சொல்லி என்னை அழைத்துவந்தீரென்று நாமெல்லோருஞ் சொல்லக்கூடும். இவ்வகையாய் நமது இரக்ஷகர்தான் தமது நேசத்திலுந் தமது கருணையிலும் நாம் இரக்ஷணியம் அடைவதற்கு வேண்டிய பொது நன்மைகளையும் விசேஷ நன்மைகளையும் நமது பிரிய பிரதிக்கினைகளையுந் தாராளமாய் நமக்கு முஸ்திப்பு செய்தார். உண்மையாகவே கர்ப்பிணியான ஸ்திரீ பிள்ளை பெறுவதற்கு முந்தியே கொஞ்சத்துக்குள் தான் பெறவிருக்கும் குழந்தைக்காகச் சின்ன தொட்டிலையும் பழந்துணிகளையும் பாற்காரியையு முதலாய் முஸ்திப்பு செய்துவைப்பதுபோல் நமது ஆண்டவருந் தமது தயாளத்தில் உன்னைச் சிநேகித்து இரட்சணியத்துக்கு உன்னைப் பெறக் கருதித் தமது பிள்ளையாக உன்னை ஆக்குவதற்கு உனக்கு அவசரமான ஞானத் தொட்டிலையுந் துணிகளையும் பாற்காரியையும் உன் கலத்துக்கு ஏற்றவைகளையுஞ் சிலுவை மரத்தின்

மீது முஸ்திப்பு செய்தார். இவைகளெல்லாஞ் சாங்கோபாங்கத்துக்கு உன் ஆத்துமத்தை இலகுவாய்க் கூட்டிக்கொண்டு போவதற்காக இவர் உனக்கு அளிக்கும் வரப்பிரசாதங்களும் ஞான இன்பங்களும் வழிபாடுகளுமேயன்றி வேறல்ல.

ஆ சுவாமீ! இதனை எங்கள் ஞாபகத்தில் எவ்வளவோ ஆழமாய்ப் பதிப்பிக்க வேண்டும். சுவாமி என்னை இவ்வளவு உருக்க சிநேகத்தோடு நேசித்து என் பேரில் விசேஷ சிந்தைவைத்து எனக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் என்னை நினைத்துத் தமது அருகில் என்னை அழைத்திருப்பீது கூடுமான காரியமோ. ஆதலால், இவை யாவற்றையும மிகு விருப்பமாய் நேசித்து நமது ஞான நன்மைக்காக உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டியதில்லையோ. சுவாமி என்னை நேசித்து என்பேரில் நினைப்பாய் இருந்தாரென்கிற இந்தச் சிந்தனையைப் பார்க்கிலும் அதிக மதுரமானதென்ன. ஆம், என் சர்வேசுரனுடைய நேசத்துக்குரிய இருதயம் என்னை நினைத்து உலகத்தில் என்னையன்றிச் சிந்திக்கத்தக்கது வேறொன்றுமில்லையென்றாற்போல் என்னை நினைத்து அத்தியந்தவிதமாய் நேசித்து நான் இரக்ஷணியம் அடைவதற்கு நாலாவித வழிப்பாடுகளையுங் காட்டிவைத்தது. சூரியன் பூமியின் ஓரேயிடத்தில் பிரகாசித்தாலுஞ் சரி உலகமெல்லாம் பிரகாசித்தாலுஞ் சரி ஓரேவிதமாய்ப் பிரகாசிக்கும். உலகமெல்லாம் பிரகாசிப்பதால் உலகத்தின் எவ்வளவு சின்ன இடத்துக்கும் பிரகாசங் குறைவுபடாது. ஓர் சின்ன இடத்தில் எப்படிப் பிரகாசிக்கிறதோ அப்படியே உலக முழுதும் பிரகாசிக்கும். இத்தன்மையாகவே நமது ஆண்டவர் தமது பிரிய மக்களனைவரையும் நினைத்து அவர்களுக்காகப் பிரயாசப்பட்டார். இவ்விதமாய் மற்றொன்றும் நினையாததுபோல இவர்களில் ஒவ்வொ

ருவனையுந் தனித்தனியாய் நினைத்து இவனுக்காகப் பிரயாசப்பட்டார். இதைப்பற்றித்தான், அர்ச். சின்னப்பர் சர்வேசுரன் என்னை நேசித்து எனக்காகத் தம்மைக் கையளித்தாரென்றார். இதனால் விளங்குகிறது என்னவெனில் மற்ற மனுஷர்களுக்காக இவர் ஒன்றுஞ் செய்யாமலிருந்தால் எப்படியோ அப்படியே தனக்காக மாத்திரமே சுவாமி செய்ததெல்லாஞ் செய்தாரென்றாற்போலாயிற்று. பிரிய சகோதரமே உன் இரக்ஷகரது இருதயத்துக்கு இவ்வளவு விலையுயர்ந்ததாயிருந்த உன் பிரதிக்கினையை நீ மெத்த நேசித்தும் பலப்படுத்த இது உன் புத்தியில் ஆழமாய்ப் பதிந்திருக்கட்டும்.

14-ம் அதிகாரம்.

ஐந்தாம் யோசனை.

நமதுமீது சுவாமிக்கு நித்தியமாயிருந்த சிநேகம்.

சுவாமிக்கு உன்பேரில் உண்டாயிருக்கிற நித்திய சிநேகத்தை யோசித்துப்பார். ஏனெனில் சேசுகிறீஸ்துநாதர் மனிதனாய்ப் பிறந்து உனக்காகச் சிலுவையில் மரிப்பதற்குக் காலாகாலத்துக்குமுந்தியே பரஞ்சோதி கடவுளானவர் உன்னை நினைத்து உனக்குஉயிரளிக்கச் சித்தமாகி மட்டற்றவிதமாய் உன்னை நேசித்தார். ஆனால் எப்போது உன்னை நேசிக்க ஆரம்பித்தார். இவர் சர்வேசுரனாயிருக்க ஆரம்பித்த போதே. ஆனால் இவர் சர்வேசுரனாயிருக்க ஆரம்பித்த

தெப்பே. ஒருநாளும் ஆரம்பித்ததில்லை. ஆதியும் அந்தமுமின்றி எப்பொழுதுமிருந்தார். இத்தன்மையாய் உன்னை எந்நாளுஞ் சதாகாலமாய் நேசித்தார். இவ்வாறு இவர் உனக்கு அளித்த வரப்பிரசாத நன்மைகள் எல்லாம் நித்தியமாய் இவர் நேசம் உனக்கு ரூஸ்திப்புசெய்து. தீர்க்கதரிசி வழியாய் இவர் சொல்லுவதைக் கேள். நித்திய நேசத்தால் உன்னை நேசித்தேன். கருணை தயாளத்தால் என்னண்டையில் உன்னைச் சேர்த்தேனென்கிறார். ஆதலால், இவர் உனக்குச் செய்த மற்றெல்லா நன்மைகளுமல்லாமல் தம்மை நீ நேசித்துச் சேவிக்கவேண்டுமென்கிற நல்ல பிரதிக்கினைகளையும் நீ அங்கீகரித்துக்கொள்ளச் செய்யவேண்டுமென்றும் நினைத்தார்.

ஆ சர்வ ஞானமுடைய சர்வேசுரன் தாமே சதாகாலமாய்ச் சிந்தித்து யோசித்துக் கருதிய இந்தப் பிரதிக்கினைகள் எப்பேர்க்கொத்தவையாய் நமக்கெவ்வளவு மேன்பாடு பிரியமுள்ளவையாயிருக்கவேண்டியது. இவைகளில் ஒன்றையும் விட்டுவிடுவதைப் பார்க்கிலும் என்னதான் பாடுபட்டாலுமென்ன, உள்ளபடி உலகமெல்லாம் அழியவேண்டுமெயின் இவை ஒன்றையும் விட்டுவிடலாகா. ஏனெனில் இவ்வுலகமெல்லாம் ஒருமிக்க ஓர் ஆத்துமத்துக்கு இணையாகா. ஆனால் நமது பிரதிக்கினைகளையெல்லாம் நீக்கிப் பார்ப்போமேயாகில் ஆத்துமமொன்றுக்கும் உதவவே உதவாது.

15-ம் அதிகாரம்.

மேற்சொல்லிய யோசனைகளின்பேரில்.

பொது ஆசை சிநேகமுயற்சிகளும் இந்தப் பத்திக்கிருத்தியத்தின் முடிவும்.

என் பிரதிக்கினைகள் யாவும் வெகு ஆசை விருப்பத்துக்குரியவையல்லோ. சர்வேசுரன்தானே தமது திருக்கரத்தால் இவைகளை என்னிருதயத்தில் அழகிய விருக்ஷம்போல் நாட்டிவைத்தார். இது புஷ்பித்துக் கனிகொடுக்கும்படி என் இரக்ஷகர்தானே தமது திருவிரத்தத்தை இதற்கு இறைக்கச் சித்தமாயினர். எந்தக் காற்றும் இதனை விழத்தாட்டச் சம்மதிப்பதைப்பார்க்கிலும் ஆயிரமுறை சாகிறது தாவிலையல்லோ. வீண்சிலாக்கியம் இன்பசுகம் ஆஸ்திபாஸ்தி துன்பதுரிதம் எதுவும் ஒருகாலும் என் கருத்தை மாற்றவறியா.

ஆ சுவாமி! நீரே இவ்வழகிய விருக்ஷத்தை நாட்டினீர். இத்தனைக் காலத்தோடு என்னிருதயமென்னுந் தோட்டத்தில் நாட்டுவதற்கு நித்தியமாய் உமது திருவுளத்தில் அதைக் காப்பாற்றிவைத்தீர். இப்பேர்க்கொத்த உபகார சகாயங்கள் எத்தனையோ ஆத்துமாக்களுக்குக் கிடைத்ததில்லை. ஆனால் உமது கிருபை தயாளத்தின் அடைக்கலத்தில் வேண்டியவரையில் எவ்விதமாய் என்னைத்தானே தாழ்த்திக்கொள்வேன்.

ஓ அழகிய பரிசுத்த பிரதிக்கினைகளே, உங்களை நான் விட்டுவிடாமற் காப்பாற்றிவருவேனேயாகில் என்னையும் நீங்கள் காப்பாற்றிவருவீர்கள். என்னைத்

துமத்தில் நீங்கள் சீவித்தால் என்னாத்துமமும் உங்களால் சீவிக்கும். என் சர்வேசுரனுடைய கருணைக் கடலில் நித்தியமாய் வீற்றிருந்த பிரதிக்கினைகளே, என்றென்றும் வீற்று வாழ்வீர். என்னிடத்தில் என்றென்றைக்குங் குடிகொண்டு இருக்கக்கடவீர். நானும் உங்களுக்கு என்றும் பிரமாணிக்கமாயிருக்கக் கடவேன்.

இத்தன்மையாய் இந்தச் சிநேகமுயற்சிகளைச் செய்த பின் உனக்கு இவ்வளவு பிரியமான இந்தப் பிரதிக்கினைகளில் நிலைமையாயிருப்பதற்கு விசேஷ வழிப்பாடுகளைத் தெரிந்துகொண்டு நிலைமையாய் இவைகளை அநுசரித்து வருவதற்கு உனக்குப் பூரண மனது உண்டென்று ஸ்திரமனதோடு சொல்லுவாய். இவ்வழிப்பாடுகள் என்னவெனில் தியானப் பழக்கம், தேவதிரவிய அநுமானங்களை அடிக்கடி பெறுதலும், தர்மக் கிருத்தியங்கள், மூன்றும் அதிகாரத்தில் சொல்லியிருக்குமாப்போல் பத்திக்கடுத்த சீவியத்தில் நீ என்னமாயிருக்கிறாயென்று ஆராய்ந்துபார்த்தபோது நீ கண்ட இன்னின்ன தப்பிதங்களைத் திருத்திக்கொள்ளுதல், கெட்ட சமயங்களினின்று விலகியிருத்தல், பெரியோர் உனக்குச் சொல்லும் புத்திமதிகளைப் பின்செல்லுவதில் பிரமாணிக்கம், இவைதான் உன் பிரதிக்கினைகளில் நீ நிலைநிற்பதற்கான விசேஷ வழிப்பாடுகளாம்.

இதன்பின் திடமான மனதுடன் சுவாமியை மெய்யாகவே நேசிக்கவேண்டுமென்று ஆசித்து உன் பிரதிக்கினைகளில் நிலைமையாய் இருப்பாயென்று வெகு உறுதியாய்ச் சொல்லக்கடவாய். மேலும் உன் கைகளில் உன் இருதயத்தையும் ஆத்துமத்தையும் மனதையும் நீ ஏந்திக்கொண்டிருப்பதுபோல் சுவாமிக்கு அவைகளை வசீகரம் செய்து ஒப்புக்கொடுத்து மனப் பூர்த்தியாய் அவைகளை அவரு

குத் தீகண பலியிடக்கடவாய். இனி ஒருநாளும் மறுபடியும் அவைகளைச் சுவாமியுடைய கையினின்று வாங்கிக்கொள்வதில்லை என்றும் எது காரியத்திலும் எங்கும் அவர் திருக் கட்டளைகளைப் பின்சென்று நடப்பதற்கு அவர் திருக்கரங்களில் அவைகளை ஒப்பித்து விடுவாயென்றும் உறுதியாய்ச் சொல்லுவாய், சர்வேசுரன் உன்னை முழுதும் புதுப்பித்து இந்தப் புதுப்பிப்பைத் தமது ஞானத்தின் சத்தியால் ஆசீர்வதித்து உனக்கு ஒத்தாசையாய் இருக்கும்படி வேண்டிக்கொள், பரிசுத்த கன்னிமரியாயையும் அர்ச்பிரகாசியாரையும் இன்னும் மற்ற அர்ச்சியசிஷ்டர்களையும்பார்த்து வேண்டிக்கொள்.

இவ்வாறு தேவ அருளால் இளகிய இருதய ஆயத்தத்துடன் உன் ஆத்துமம் குருவானவர் பாதத்தில் விழுந்து நீ முன்னால் செய்த பொதுப் பாவசங்கீர்த்தனக் துவக்கிக் கட்டிக்கொண்ட விசேஷ தப்பிதங்களைப் பாவசங்கீர்த்தனஞ்செய்து முதல்விசை நீ செய்ததுபோல் அவைகளுக்குப் பாவப்பொறுத்தல் அடைவாய், இதன்பின் அவரிடத்தில் உன் பிரதிக்கினை வார்த்தைப்பாட்டை வாசித்துக்காட்டி அதில் கையொப்பமிட்டுக் கடைசியாய் இவ்விதமாய்ப் புதுப்பிக்கப்பட்ட உன இருதயஞ் சற்பிரசாத தேவ திரவிய அநுமானத்தின் வழியாகத் தன் ஆதியும் அந்தமுமாகிய சர்வேசுரனிடத்தில் ஒருமித்து வாழும்படி செய்வாய்.

16-ம் அதிகாரம்.

இந்த ஞானக் கிருத்தியத்துக்குப் பிறகு காப்பாற்ற வேண்டிய சிந்தைகள்.

மேற்சொல்லியபடி உன் பிரதிக்கினைகளைப் புதுப்பிக்கும் அன்றையதினமும் மறுநாட்களிலும் அர்ச். சின்னப்பரும் அர்ச். அகுஸ்தீனுசென்பவரும் அர்ச். சேன் கத்தரீனம்மாளுஞ் சொன்ன பல நேசபட்சத்துக்குரிய வாக்கியங்களை வாக்கோடும் மனதோடும் பலமுறை சொல்லுவாய். மெய்யாகவே இனி நான் எனக்குச் சொந்தமல்லே, நான் சீவித்தாலுஞ் சரி மரித்தாலுஞ் சரி என் இரட்சகருக்கே சொந்தம். இனி நானென்கிறதுமில்லே, என்னுடையதென்கிறதுமில்லே, சேசுவையன்றி எனக்குச் சொந்தமானது ஒன்றுமில்லே. எனக்குள்ளதெல்லாம் அவருக்கே சொந்தம். ஓ உலகமே நீ எப்பொழுதும் உனக்கே சொந்தமாய் இருக்கிறாய். நானும் எப்போதும் எனக்கே சொந்தமாய் இருந்தேன். ஆனால் இனிமேலோ நானே எனக்குச் சொந்தமல்ல. இனி நாமென்கிறதிரா. ஏனெனில் இனி நமது இருதயம் மாறிப்போம். நம்மை இவ்வளவு மோசஞ்செய்த உலகமே நம்மிடத்தில் மோசஞ் செய்யப்படும். ஏனெனில் நமது மாற்றத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் இலேசாய் மாத்திரம் பார்த்து வருவதால் எப்பொழுதும் நம்மை ஏசாவு என்பவனுக்கு ஒத்தவர்களாக எண்ணிக்கொள்ளும். ஆனால் காலத்தோடு நாம் யாக்கோப் என்பவருக்கு ஒத்தவர்களாயிருப்போம்.

இந்த ஞானக் கிருத்தியங்களெல்லாம் நமது இருதயத்தில் நன்றாய்க் குடிகொண்டிருக்கவேண்டும்.

நமது தியானங்களையும் யோசனைகளையுஞ் செய்து முடித்த பின் விலையுயர்ந்த பரிமளத் தைலம்போல் இருக்கப்பட்ட நமது நல்ல பிரதிக்கினைகளெல்லாஞ் சிந்திச் சேதமாய்ப் போகாதபடிக்கு ஆத்திரமில்லாமல் நமது அலுவல்களைப் பார்க்கவேண்டும். ஏனெனில் இந்தப் பரிமளம் நமது இருதயத்தை முழுதும் நனைத்து நாலாபக்கத்திலும் ஊன்றியிருக்க வேண்டும். ஆயினும் இவைகளையெல்லாம் புத்திக்குஞ் சரீரத்துக்கும் பிரயாசமின்றிச் செய்யவேண்டும்.

17-ம் அதிகாரம்.

பக்திநெறிப்பிரவேசமென்னும் இப்புத்தகத்தைக் குறித்துச் செய்யக்கூடுமான இரண்டு ஆக்ஷேபனைகளுக்கு மாறுத்தரம்.

பிரிய சகோதரமே, இப்புத்தகத்தில் சொல்லப்பட்ட பத்திக் கிருத்தியங்களும் புத்திமதிகளும் அநந்தமாய் இருப்பதால் இவைகளைச் சரியாய் அநுசரிக்க மனதுள்ளவன் வேறெது காரியத்தையும் நினைக்கக் கூடாமையாய் இருக்கும் என்று உலகம் உனக்குச் சொல்லும். ஆ பிரிய சகோதரமே, நாம் வேறே எதுகாரியத்தையுஞ் செய்யாவிட்டாலும் நாம் இவ்வுலகத்தில் விசேஷமாய்ச் செய்யவேண்டியதை நாம் செய்கிறபடியால் வேண்டியவரையிற் செய்கிறோம் எனத்தகும். ஆனால் இதிலுள்ள கபடு மோசத்தைப் பார். இந்த ஞானக் கிருத்தியங்களையெல்லாம் நாடோறுஞ் செய்யவேண்டுமானால் நமக்கு இதுவே

ஓயாத கவலை அலுவலாய் இருக்குமென்பது உண்மை. ஆனால் காலத்துக்கும் இடத்துக்குந் தக்கபடி ஒவ்வொருவனுடைய சாவகாசத்துக்கு ஏற்றாற்போல் மாத்திரஞ் செய்யவேண்டியிருக்கிறது.

ஒரு இராசாங்கத்தில் குடிகள் பொதுநலத்துக்காக வெகு பிரமாணிக்கமாய் அநுசரிக்கவேண்டிய எத்தனையோ சட்டதிட்டங்கள் உண்டு. ஆனால் சமயத்துக்கு ஏற்றபடி இவைகளைப் பிரயோகித்துக் கொள்வார்கள். நாள்தோறும் இவைகள் எல்லாவற்றையும் அநுசரித்துவரவேண்டும் என்று ஒருவருஞ் சொல்லார். தாவீதரசன் மகா பெரிய அரசனாய் இருந்துந் தமது அலுவல்களையெல்லாம் பார்த்துக் கொண்டே நான் உனக்குச் சொல்லிக்காட்டிய பத்திக்கிருத்தியங்களைப் பார்க்கிலும் அதிக ஞான கிருத்தியங்களைத் தமது அரண்மனையில் செய்துவந்தார். சமாதான காலத்திலுஞ் சரி சண்டை காலத்திலுஞ் சரி எல்லோருக்கும் அதிசயத்துக்குரிய விதமாய் நீதி செலுத்துவதற்குந் தமது இராச்சியத்தை ஆளுவதற்கும் வெகு கவனமுள்ளவராய் இருந்தார்.

அர்ச். ஞானப்பிரகாச ராசா நாள்தோறும் இரண்டு பூசை காண்பார். தமது அரண்மனைக்கோவில் குருவானவரோடு மாலைத்தோத்திரஞ் செபிப்பார், தியானஞ்செய்வார். வெள்ளிக்கிழமைதோறும் நோயாளிமடங்களைச் சந்திப்பார். அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ்செய்வார். முள்ளொட்டியாணம் அணிந்துகொள்ளுவார். பிரசங்கங் கேட்பார், பல்முறை ஞான புத்திமதிகளைச் சொல்லுவார். இவையெல்லாஞ் செய்துகொண்டு தமது ராச்சியத்தின் பொதுநன்மைக்காக எதாகிலுஞ் சமயங் கிடைத்த உடனே அந்தச் சமயத்தை வேண்டியபடி உதவிக்கொண்டு அதினால் தமது இராச்சியத்துக்கு மேன்மை உண்டாகும்படி செய்வார். இவருக்கு முன்னிருந்த அரசர்

காலங்களில் இருந்ததைப்பார்க்கிலும் இவர் இராசாங்கம் அதிக சேத்தியானதாகவுஞ் சிறந்ததாகவுமிருந்தது.

ஆதலால் பிரிய சகோதரமே, நான் உனக்குச் சொல்லியபடி இந்தக் கிருத்தியங்களை எல்லாந் தைரியமாய்ச் செய்துவா, உன் மற்றக் காரியங்களை எல்லாந் தகுந்தபடி செய்யவேண்டிய காலத்தையும் பலத்தையுஞ் சுவாமி உனக்குத் தந்தருளுவார். மெய்யாகவே சூரியனை முதலாய் இதற்காக நிறுத்த வேண்டியிருந்தபோதிலும் யோசுவே என்பவருக்குச் செய்த மாதிரிகையாய் நமக்குஞ் செய்வார். சர்வேசுரன் நம்மோடு வேலைசெய்கையில் எப்பொழுதும் வேண்டியவளவில் செய்துவருகிறோம்.

தியானஞ் செய்யும் வரம் யாருக்கும் இருக்கிறாப்போல் இப்புத்தகத்தில் பேசிவருகிறேனென்றும் ஆயினும் ஒவ்வொருவனுக்குந் தியானஞ் செய்கிறவரமில்லை என்றும் உலகஞ் சொல்லும். இவ்விதமாய் இந்தப் பத்திநெறிப்பிரவேசம் எல்லோருக்கும் உதவக்கூடாதென்றுஞ் சொல்லும். என் புத்திமதி கேட்கிறவனுக்குத் தியானம் செய்யும் வரம் உண்டென்று நான் எண்ணி அதற்கானபடி பேசுவது உண்மைதான். இன்னம் ஒவ்வொருவனுக்குந் தியானஞ் செய்யும் வரமில்லை என்பதும் உண்மைதான். ஆனால் ஏறக்குறைய ஒவ்வொருவனும் இன்னம் மகா மூடாத்மாக்களான மனிதர்களுந் தியானஞ்செய்யும் வரத்தை அடையலாம் என்பதும் உண்மை. இவர்களுக்கு நல்ல உதவி மாத்திரம் வேண்டும். தியானத்தின் அவசியத்துக்கும் மேன்மைக்கும் ஒத்தபடி இதற்காகப் பிரயாசப்படுவதற்கு இவர்களுக்கு நல்ல மனதும் இருக்கவேண்டும். தியானஞ் செய்யும் வரம் கொஞ்சமும் இல்லாதவர்கள் மகா அபூருவமாய் மாத்திரம் கிடைக்கலாம். வெகு சுளுவாய் இந்தக்

குறைக்கு ஆத்துமகுருவானவர் வழிபண்ணலாம். தியான புஸ்தகங்களில் இருக்கும் யோசனைகளையே அவர்களுக்குச் சொல்லிக்காட்டி அவைகளை வாசிக்கும்படியாகவும் இன்னம் வாசிக்கிறதை மிகுந்த கவனத்துடன் கேட்கும்படியாகவும் சொல்லலாம்.

18-ம் அதிகாரம்.

இந்தப் பத்திநெறிப்பிரவேசத்தைக் குறித்து மூன்று விசேஷ கடைசீ ஆலோசனைகள்.

மாசத்தின் முதல் நாளில் உன் தியானத்துக்குப் பிற்பாடு முதல் பாகத்திற் சொல்லியிருக்கும் பிரசித்த பிரதிக்கினையை மறுபடியும் புதுப்பிப்பாய். அந்நாளில் அடுத்தடுத்துத் தாவீதென்பவர் பாவினையாய் என் கர்த்தரே சுவாமீ ஒரு நாளும் உமது கட்டளையை நான் மறப்பேனில்லை, ஏனெனில் இதனால் தான் நீர் எனக்கு மறுபடியுஞ் சீவியமளித்தீர் என்று சொல்லிவருவாய். உன் ஆத்துமத்தில் ஏதாகிலுங் குறை காணும்போது உன் பெரும் பிரதிக்கினையைக் கையில் எடுத்துக்கொண்டு மனத்தாழ்ச்சியாய்ச் சாஷ்டாங்கத்தெண்டனிட்டு உன் முழு இருதயத்தோடு அதினை உச்சரிப்பாய். இதனாலே உனக்கு வெகு ஆறுதலுண்டாம்.

மெய்யாகவே பத்தியுள்ளவனாயிருக்க உனக்கு நல்ல மனது உண்டென்று பிரசித்தமாய்க் காட்டு

வாய்? நான் சொல்லுவதை நன்றாய்க் கண்டுபிடி. பக்தியுள்ளவனாக இருக்கிறதென்றல்ல, பக்தியுள்ளவனாயிருக்க மனது உண்டென்றே காட்டும்படி சொல்லுகிறேன். தேவசிநேகத்தை அடைய உபயோகமாயிருக்குஞ் சாதாரண நாடோடியான கிருத்தியங்களைச் செய்ய வெட்கப்படாதே. தியானஞ் செய்யப் பிரயாசப்படுகிறாயென்றுஞ் சாவானபாவத்தைக் கட்டிக்கொள்ளுவதைப் பார்க்கிலுஞ் சாகிறதற்குத் துணிந்திருக்கிறாயென்றுந் தேவத்திரவிய அநுமானங்களை அடிக்கடி பெற ஆசையாயிருக்கிறாயென்றும் உன் ஆத்தும குருவின் ஆலோசனைகளைப் பின்சென்று நடக்கத் தீர்மானித்திருக்கிறாயென்றுந் தைரியமாய்த் திடனாய்ச் சொல்லக்கடவாய்.

இப்படி சர்வேசுரனைச் சேவிக்க மனதாய் இருக்கிறோமென்றும் விசேஷ விதமாய் அவருடைய நேசத்துக்கு நம்மை வசீகரஞ் செய்து இருக்கிறோமென்றுங் கபடற்ற விதமாய்க் காட்டுவது சுவாமிக்கு மகா பிரியமாயிருக்கும். ஏனெனில் சர்வேசுரன் தமது மட்டிலுந் தமது சிலுவையின் மட்டிலும் வெட்கப்படுகிறவர்களைச் சகிக்கிறதில்லை. மேலும் நாம் இத்தன்மையாய்ச் செய்வது உலக மனுஷர்களுடைய வாயை அடக்க உத்தம வழியாம். இதனால் நாம் துலக்கிய ஞான சீவியத்தைப் பின்சென்று நடக்க நமக்கு அதிக அக்கறை உண்டாம். ஞான சாஸ்திரிகள் ஞானத்தின்படி சீவிக்க விக்கினமிராதபடிக்குப் பிரசித்தமாய்த் தங்களைத்தானே ஞானிகளென்றார்கள் பத்தியாய் நாம் சீவிப்பதற்கு இடைஞ்சல் வராதபடிக்குப் பத்தியாயிருக்க ஆசையுள்ளவர்களாய் இருக்கிறோமென்று கபடற்ற விதமாய்க் காட்டிக்கொள்ளுவோம். இந்தப் புத்திமதிகளையும் நற்கிருத்தியங்களையும் அநுசரியாமல் பத்தியாய்ச் சீவிக்கலாம் என்று உனக்கு ஆராகிலுஞ் சொன்னால் அவர்

களை மறுத்துப் பேசாதே. ஆனால் அவர்களுக்கு மாறுத்தரமாக உன் பலவீனம் மகா பெரிதானதால் மற்றவர்களுக்கு வேண்டியதைப் பார்க்கிலும் உனக்கு அதிக உதவி ஒத்தாசை வேண்டியதென்று சொல்லலாம்.

கடைசியாய் என் அன்புக்குரிய சகோதரமே, பரலோகத்திலும் பூலோகத்திலும் இருக்கக் கூடுமான பரம பூசித வஸ்துவாலும் நீ பெற்ற ஞானஸ்நானத்தாலுஞ் சேசுகிறீஸ்துநாதரை ஈன்றெடுத்து வளர்த்த கன்னித்தாயாராலுஞ் சேசுநாதர் உன்னை நேசித்த அன்புக்குரிய இருதயத்தாலும் நீ நம்பிக்கை வைத்திருக்குஞ் சர்வேசுரனது கருணை தயாளத்தாலும் உன்னை நான் கேட்டுக்கொள்ளுகிறதென்னவெனில் நீ ஆரம்பித்த மெய்யான பத்திக்கடுத்த சீவியத்தை விட்டுவிடாமல் நிலைமையாய் என்றும் பிரமாணிக்கமாயிருக்கக்கடவாய். எது மோகாந்தரத்தைப் பற்றியுந் துவக்கினதை விட்டுவிடாதே. நமது நாட்கள் கடந்துபோகின்றன. மரணமோ நமது வீட்டு வாசற்படியில் நிற்கிறது. அர்ச். நசியான்சு கிறேகோரியார் சொல்லுமாப்போல எக்காளச்சத்தம் எல்லோருக்கும் அடையாளங் கொடுக்கிறது. அவனவனும் முஸ்திப்பாயிருக்கட்டும். ஏனென்னில் நடுத்தீர்வை நெருங்கிவருகிறதென்கிறார். அர்ச். சேன்போரியேன் என்பவருடைய தாயார் தன் மகனை வேதசாட்சியாய்க் கொல்லக் கூட்டிக்கொண்டுபோகிறதைக்கண்டு அவர் பின்னால் ஓடிக்கொண்டே என் மகனே என் பிரிய குமாரனே நித்திய சீவியத்தை நினைத்துக்கொள். வானத்தை அண்ணாந்து பார். அதிற் செங்கோல் செலுத்துகிற பரம கர்த்தரையும் உற்றுப்பார். இந்தச் சீவியத்தின் சொற்ப நிமிஷங்களைக் கொஞ்சத்துக்குள் மரணம் அழித்து

விடுமென்று உரத்த சத்தமாய் சொல்லிக்கொண்டு போனாள்.

பிரிய சகோதரமே, நானும் உனக்கு இந்தப்படி சொல்லுகிறேன். வானத்தை அண்ணாந்துபார். பூலோகத்தைப்பற்றி அதை விட்டுவிடாதே. நரகத்தை உற்றுப்பார். ஓர் நொடியில் ஒழிந்துபோகும் இன்பங்களுக்காக அதில் நீ விழாதே. சேசுகிறீஸ்துநாதரை நோக்கிப்பார். உலகத்தைப்பற்றி அவரை மறுதலிக்காதே. மெய்யான பத்திக்கடுத்த சீவியத்தின்படி நடப்பது உனக்குப் பிரயாசையாய்த் தோன்றும்போது அர்ச். பிராஞ்சீஸ்கென்பவர் சொல்லியவாறு நான் காத்திருக்கும் ஆநந்த சந்தோஷத்தை யோசிக்கையில் எந்தெந்தப் பிரயாசமும் எனக்கு இன்பமாகிறது என்பாய்.

சேசுநாதர் வாழ்த்தப்படக்கடவார். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் இப்பொழுதும் எப்பொழுதும் அநவரத சதாகாலமும் ஸ்துதியுந் தோத்திரமும் மேன்மேலும் அவருக்கு உண்டாகக்கடவது.—ஆமென்சேசு.

அர்ச். பிரான்சீஸ்கு சலேசியார்

பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களில் இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,— எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,— எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,— எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,— எங்களுக்குத் தயைசெய்து இரட்சியுஞ் சுவாமீ.

சென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே,— எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். பிரான்சீஸ்கு சலேசியாரே, எங்க...

அர்ச். தேவமாதாவை வெகு பத்தியோடே நேசித்து அவளுடைய திருச்சுரூபத்தின் பாதத்தில் மனச் சமாதானத்தையும் நம்பிக்கையையுந் திரும்ப அடைந்தவரே, எங்க...

இப்பரிசுத்த தேவமாதாவின் வணக்கத் தோத்திரத்துக்கு வெகு மனப்பற்றுதலாய் இருந்தவரே, எங்க...

பொறுமையில்லாத முன்கோபக்குணத்தை இனிய சாந்தத்தின் மதுரத்தால் அடக்கி மாற்றினவரே, எங்க...

முழுதுந் தேவசிநேகமயமாயிராத எந்த மனப்பற்றுதலையும் உமது இருதயத்தினின்று பிடுங்கி எறிய எப்போதுங் கருத்தாயிருந்தவரே, எங்க...

நிந்தை அவமானங்களுக்குள் எப்போதும் அமரிக்கையுஞ் சாந்தமுந் தணியும் நிறைந்தவராயிருந்தவரே, எங்க...

எவராலும் உமக்கு வந்த சஞ்சலங்களைச் சகித்து ஒருபோதும் எவனுக்கும் கஸ்திவருவிக்காதவரே, எங்க...

உமது உள்ளத்தில் அத்தியந்த அமரிக்கை அடக்கவொடுக்கமாய்ச் சர்வேசுரனோடே ஒருமிப்பாய் இருந்தவரே, எங்.

எல்லோருக்கும் உமது அத்தியந்த தயைதா[illegible] மரியாதையினால் சேசுநாதர் பாவனையாயிருந்தவரே, எங்க...

எப்பொழுதும் மலர்ந்தமுகமாய்ச் சந்தோஷத்திலும் தேவதோத்திரத்துக்காகச் சளையாமல் உழைப்பதிலும் உத்தம மாதிரியானவரே, எங்க...

சஞ்சல விரோதங்களில் தளராத மன ஊக்கமுள்ளவரோ, எங்க...

அசையாத பொறுமையாலும் மாறாத அமரிக்கையினாலுஞ் சிறந்தவரோ, எங்க...

ஒன்றும் விரும்பாமலுங் கேட்காமலும் மறுக்காமலுமிருக்க ஸ்திரமான தீர்மானஞ் செய்துகொண்டவரே, எங்க...

ஓர் பிள்ளை தன் தாய்மடியில் நம்பிக்கையாய் அமர்ந்திருக்கிறதைவிடச் சர்வேசுரனுடைய தேவாதீனத்தில் உம்மை முழு நம்பிக்கையாய்க் கையளித்து எல்லாத்திலும் அவருடைய சித்தத்தைப் பார்த்து அநுசரித்தவரோ, எங்க...

அத்தியந்த பத்தியினால் தேவசிநேக அக்கினிமயமாய் இருந்தவரோ, எங்க...

சர்வேசுரனைச் சிநேகிக்காத சீவியஞ் சாவிலுங் கசப்பாய் உமக்கிருந்தமையால் ஒன்று சிநேகிக்கிறது ஒன்று சாகிறதென்று சொல்லிக்கொண்டு வந்தவரோ, எங்க...

சுவாசம் வாங்குகிறதையும் விடுகிறதையும் விடத் தேவசிநேகமுயற்சி உமக்கு அதிக வழக்கமாய் இருக்கும்படி அபேட்சித்தவரோ, எங்க...

இடைவிடாத வெளி அலுவல்களுக்குள்ளே உள்ளத்திலே தேவ சந்நிதானத்தின்பேரில் எப்பொழுதுஞ் சிந்தையாய் நேச வணக்க நம்பிக்கையாய் இருந்தவரோ, எங்க...

பீடங்களில் வீற்றிருக்குந் திவ்விய நற்கருணையின்மேல் அத்தியந்த பத்தி நேசத்தால் விளங்கினவரோ, எங்க...

உச்சிதமான பத்தி அடக்கவொடுக்கத்தினால் கோவிலிலே சம்மனசாகத் தோன்றினவரோ, எங்க...

தேவநற்கருணை வீற்றிருக்கிற தேவாலயஞ் சிங்காரத் தோப்புபோலே அத்தியந்த பிரியமுள்ளதாக எண்ணினவரோ, எங்க...

உமது ஆயுளளவும் இடைவிடாத தியானமாய் இருந்தவரோ, எங்க...

பரிசுத்த ஆத்துமாக்கள் சந்தோஷத்துடனே [illegible] மதுரங்களை மொள்ளுகிற உத்தம புத்தகங்களை [illegible]

[illegible]டாக்கி [illegible]த்துக்களை ஞான பொக்கிஷங்களாகத் திருச்சபைக்கு ஒப்பித்துவிட்டவரே, எங்க...

புண்ணிய ஆத்துமாக்களுக்கு அத்தியந்த விவேகமுள்ள ஆத்தும குருவாய் இருந்தவரே, எங்க...

சீஷவாகிகளை மெய்யான பத்தி.நெறியில் அதிசயத்துக்குரிய ஞானத்தோடே நடத்தின ஆத்தும குருவே, எங்க...

சகல அர்த்தீஸ்துகளிலும் பரிசுத்தத் தனத்தின் மாதிரிகையானவரே, எங்க...

சற்குருக்களுக்கும் பரிசுத்த [illegible] உத்தம மாதிரிகையாய் இருந்தவரே, எங்க...

புறத்தியாரை உத்தம விதமாய்ச் சிநேகித்தவரே, எங்க...

எல்லா மனுஷர்களையுஞ் சர்வேசுரனிடத்தில் காண்பது போல் கண்டுகொண்டவரே, எங்க...

சிதறியிருந்த ஞான ஆடுகளைத் தேடிப் பிடிக்கக் குளிரென்றும் பனியென்றும் காடென்றும் மலையென்றும் பாராமல் எண்ணிறந்த கலக உபத்திரிய [மர?]ண ஆபத்துக்கு உள்ளானவரே, எங்க.

அவிசுவாசமான ஜெனவ் நகரத்தின்பேரில் அழுதவரே, எங்க.

உமது சாந்த குணத்தின் பலத்தால் எழுபதினாயிரத்துக்கு மேற்பட்ட பதிதர்களைத் திருச்சபையில் மறுபடி சேர்ப்பித்தவரே, எங்க...

முழுதுந் தேவ சிநேகமயமாயிருந்த சீவியத்துக்குப்பின் அந்த சிநேகத்தில் மரித்தவரே, எங்க...

எல்லா மனுஷர்களிலும் மதுர சாந்தமுள்ளவராயிருந்த அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியாரே, எங்க...

சகல அர்ச்சிஷ்டவர்களிலும் நேசத்துக்குரியவராகிய அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியரே, எங்க...

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

சேசுவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
சேசுவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

மு.—நாங்கள் உம்மைப்போலே சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவர்களாகத் தக்கதாக,

து.—அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியாரே எங்களுக்கா வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

எங்கள் ஆண்டவராகிய சர்வேசுரா சுவாமீ! ஆத்துமாக்களுக்குப் புண்ணிய படிப்பினையாகவும் இரட்சணியமாகவும் எல்லா அந்தஸ்துகளிலும் பரிசுத்தத்தனத்தின் உத்தம மாதிரிகையை அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியாரிடத்தில் காட்டியருளினீரே. அடியோர்கள் இனிமேல் பரலோகத்தில் அவருடைய மகிமைக்குப் பங்காளிகளாகி அவரோடு கூடத் தேவரீரை அநவரத சதாகாலமுஞ் சிநேகிக்கத் தக்கதாக அவருடைய சாந்தத்தின் மதுரத்தையும் அவரிடத்தில் விளங்கின தேவ சிநேக பிறசிநேக வேகத்தையும் அவர் அநுசரித்த ஆழ்ந்த தாழ்ச்சியையும் எங்கள் ஆத்துமங்களிலே பொழிந்தருளும் சுவாமீ.—ஆமென் சேசு.

பொருள் அட்டவணை.

அதிகாரம்.	பொருள்.	பக்கம்.

முதற் பாகம்.

பத்தி நெறியில் நடக்க ஆசிக்கத் துவக்கிய ஆத்துமம் அதனை ஸ்திரமான மனதோடு அங்கீகரிக்க உவுதற்கான யுத்திமதிகள்.

இரண்டாம பாகம்.

செபத்தியானத்தினாலுந் தேவத்திரவிய அநுமானங்களாலுஞ் சர்வேசுரனை நோக்கி ஆத்துமம் தாவி உயர்வதற்கான பல புத்திமதிகள்.

அதிகாரம்.	பொருள்.	பக்கம்.

அதிகாரம். பொருள். பக்கம்.

மூன்றும் பாகம்.

நாம் அநுசரிக்க வேண்டிய புண்ணியங்களைக் குறித்துப் பல ஆலோசனைகள்.

ஐந்தாம் பாகம்.

ஆத்துமத்தைப் புதுப்பித்து மெய்யான பத்தியில் நிலைநிறுத்துவதற்கான புத்திமதிகளும் ஞானக்கிருத்தியங்களும்.